# தமிழிலக்கியத்தில் அகப்பொருள் மரபுகள்

## ஒரு வரலாற்றுப் பார்வை

த. வசந்தாள்



சென்னைப் பல்கலைக்கழகம்

# AKAPPORUL - A HISTORICAL STUDY OF THE GENRE

T. VASANTHAL
Part-Time Lecturer
Ethiraj College
Madras-600 105

UNIVERSITY OF MADRAS
1990

# தமிழிலக்கியத்தில் அகப்பொருள் மரபுகள் - ஒரு வரலாற்றுப் பார்வை

த. வசந்தாள்
பகுதிநேர விரிவுரையாளர்
எத்திராஜ் மகளிர் கல்லூரி
சென்னை-600 105

சென்னைப் பல்கலைக்கழகம்
1990

முதற் பதிப்பு - 1990
உரிமம் : சென்னை பல்கலைக்கழகம்

விலை : ரூ. 70-00

அச்சிட்டோர் :
நாளந்தா ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை-5.

என் பெற்றோர்

திரு. ச. தங்கமணி திருமதி வள்ளியம்மை

அவர்களுக்கு

இந்நூலை

அன்புக் காணிக்கையாக்குகின்றேன்

முனைவர் அ. அ. மணவாளன்
தலைவர் (பொ), தமிழ் மொழித் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
21-3-90

## அணிந்துரை

''தமிழிலக்கியத்தில் அகப்பொருள் மரபுகள்-ஒரு வரலாற்றுப் பார்வை'' என்னும் தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு 1988 இல் அளிக்கப்பெற்ற முனைவர் பட்ட ஆய்வேடு இப்போது சென்னைப் பல்கலைக்கழக வெளியீடாக மலர்ந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி. தமிழ்ப் பண்பாட்டின் தலைநாட் பருவத்தில் முகிழ்த்த அகப்பொருள் என்னும் இலக்கிய வகை காலந்தோறும் பெற்று வந்த வரவேற்பை வரலாற்றாய்வடிப்படையில் ஆராய்வது இந்நூலின் தலையாய நோக்கம். தொல்காப்பியந்தொட்டுத் தொடர்ந்த தமிழிலக்கண நூல்களும், சங்கத்துச் சான்றோர் பாடல்கள் முதல் இக்காலம் வரை எழுந்துள்ள தமிழிலக்கியங்களும் இவ் ஆய்வுக்குரிய முதன்மைத் தரவாதாரங்களாகக் கொள்ளப் பட்டுள்ளன. அனுமானங்களை அடிப்படையாகக் கொள்ளாது தரவுகளின் அடிப்படையில் செயற்படும் ஒப்பியல் நோக்கு இவ் ஆய்வின் திறனாய்வுப் பார்வையாக அமைந்துள்ளது.

இந்நூலின் முதலியல் தொல்காப்பியம் முதல் அறுவகை இலக்கணம் வரையுள்ள பதின்மூன்று இலக்கண நூல்கள் கூறும் அகப்பொருள் கோட்பாடுகளை ஆராய்கிறது. பயனாக, தொல் காப்பியத்திற்குப் பின் தோன்றிய இலக்கண நூல்களுள் நம்பியகப் பொருள் தவிர்ந்த ஏனையவை அகப்பொருள் தொடர்பான விரிவான ஆய்வில் ஈடுபடவில்லை; நம்பியகப்பொருள் கைக்கிளை, பெருந்திணை என்னும் திணைகளின் பொருண்மையிலும், கூற்று, கேட்போர் ஆகிய பாடன் முறைமையிலும் தொல்காப்பியத்தி னின்றும் மாறுபட்டுப் புதிய மரபினைத் தோற்றுவித்தது என்னும் உண்மையைப் புலப்படுத்துகிறது. இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் எழுதல் இயல்பாதலின், இம் மரபு மாற்றங்களை இலக்கியங்களின் வழி உறுதி செய்யும் முயற்சி ஏனைய இயல்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

''திணை'' என்னும் அகப்பொருள் மரபை ஆராயும் இரண்டாம் இயல், தொல்காப்பியரின் திணைக்கோட்பாடு சங்க இலக்கியம், அற இலக்கியக்காலத்தே தோன்றிய ஆறு அகப் பொருள் நூல்கள் ஆகியவற்றோடு முற்றுப் பெறுவதைக் காட்டித் திருக்குறளில் அது மரபு மாற்றம் பெற்றதையும் விளக்குகிறது. அதாவது அகம், புறம் என்னும் இரு கூற்றிலக்கியங்களுக்கும் உரியதாகவும், முதல், கரு, உரி என்னும் முப்பொருளுக்கும் உரிய தாகவும் அமைந்திருந்த திணைக்கோட்பாடு அறஇலக்கியக் காலத்தே சில மரபு மாற்றங்களைப் பெற்றுத் தொடர, அதன் பின்னர் மரபுச் சிதறலாக வெறும் ஒழுக்கத்தைக் குறிப்பதாக மாறியமையை இவ்வியல் தெளிவாக்குகிறது.

மூன்றாம் இயல் ''துறை'' என்னும் அகப்பொருள் மரபின் வரலாற்றினை இலக்கியங்களின் வழி நின்று ஆராய்கிறது. பயனாக, தொல்காப்பியத்தில் கூறப்படும் காட்சி, ஐயம், தெளிவு, குறிப்பறிதல் போன்ற துறைகளுள் சங்க அக இலக்கியத்தில் பயன் படுத்தப் பெறவில்லை; பின்னர் வந்த முத்தொள்ளாயிரம், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் போன்றன பயன்படுத்தி உள்ளன; தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பெறாத நாணிக்கண் புதைத்தல், கையுறை, ஏறுதழுவுதல், கூடலிழைத்தல் போன்ற துறைகள் சங்கப் பாடல்களிலும் பிற்கால இலக்கியங்களிலும் போற்றப்பட்டுள்ளன; நாணிக்கண் புதைத்தல், தூது, மடல் போன்ற சில துறைகள் பிற்காலத்தே தனி இலக்கிய வகைகளாக வளர்ச்சி பெற்றுள்ளன. என்னும் உண்மைகளை இவ்வியல் நமக்குக் காட்டுகிறது.

நான்காவதாக அமைந்த இயல் ''கூற்று'' என்னும் அகப் பொருள் மரபைக் கூற்றுக்குரியோர், கேட்போர் என இருகூறாக்கி ஆராய்கிறது. பெரும்பாலான கூற்று மரபுகள் தொல்காப்பியம் முதல் இன்றுவரை தொடர்ந்து வரினும், சில மரபுகள் மாற்றம் பெற்று வீழ்ச்சியடைவதையும் இவ்வியல் காட்டுகிறது. காட்டாக, தலைவன் கூற்று முத்தொள்ளாயிரம், பக்தி இலக்கியம் ஆகிய வற்றில் காணப்பெறவில்லை. கலித்தொகையில் காணப்பெறும் கூற்று மரபு பிற எட்டுத் தொகை நூல்களினின்றும் வேறுபட்டு உரையாடல் பாங்கில், அதாவது ஒன்றுக்கு மேற்பட்டோர் கூற்று நிகழ்த்தும் மரபில் அமைந்திருக்கக் காண்கிறோம். சங்கப்பாடல்கள் தவிர்ந்த பிற பிற்கால இலக்கியங்களில் கேட்போர் பற்றிய மரபும் சங்க மரபினின்றும் தொல்காப்பியத்தினின்றும் விலகி நிற்கவும் காண்கின்றோம்.

இந்நூலின் இறுதிப்பகுதியாக அமைந்த இயல் அகப்பொருள் தமிழிலக்கியத்தின் தனிப்பெரும் இலக்கிய வகைகளுள் ஒன்று என்பதை நிறுவுகிறது. பாடுபொருள், வடிவம், பாடன்முறைமை என்னும் மூன்று கூறுகளுள் பாடன்முறைமைதான் இலக்கிய வகைமைக் கோட்பாட்டுக்கு அடிப்படையாய் அமைவது. அதன் அடிப்படையில் அகப்பொருள் இலக்கிய வகை காலந்தோறும் பெற்று வந்த வளர்ச்சி மாற்றங்களை விளக்கித் தெளிவுறுத்துவ தாக இவ்வியல் அமைந்துள்ளது.

உயிரினங்களைப் போலவே இலக்கியங்களும் வரலாற்றுப் போக்கில் வாழ்வு தாழ்வுகளைப் பெற்றுத் தொடர்தல் இயற்கை. இவ் அடிப்படையில் அகப்பொருள் என்னும் இலக்கிய வகை பெற்றுவந்துள்ள வளர்ச்சி மாற்றங்களை முழு அளவில் ஆய்வதாக அமைந்துள்ள இந்நூலைப் படைத்த ஆசிரியர் முனைவர் த. வசந்தாள் ஆய்வுலகின் பாராட்டுக்குரியவர். இதனை அழகுற வெளியிட்ட சென்னைப் பல்கலைக் கழகம் மற்றுமோர் அரிய பணி யினைச் செய்துள்ளது. காமம் செப்பாது கண்டது மொழியும் இயல்புடைய தமிழாராய்ச்சி உலகம் இதனை வரவேற்று மகிழும் என நம்புவோமாக.

# நன்றியுரை

சென்னைப் பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்ட ஆய்வு செய்வதற்குப் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவினது திட்டத்தின் அடிப்படையில் நிதியுதவி வழங்கிய தமிழக அரசுக்கும்

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித்துறையில் ஆய்வு நிகழ்த்த அனுமதி வழங்கிய தமிழ் மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும்

ஆய்வுத் தலைப்பைத் தெரிவு செய்து ஆய்வு நெறியாளராக இருந்து வழிகாட்டி ஆய்வில் எழுந்த ஐயங்களை நீக்கி ஆய்வைச் செழுமையுறச் செய்து நூலாக வெளிவரும் போது அணிந்துரை வழங்கிய டாக்டர் அ.அ. மணவாளன் அவர்களுக்கும்

ஆய்வுலகில் அடியெடுத்து வைக்க வாய்ப்பளித்த டாக்டர் மா. செல்வராசன் அவர்களுக்கும்

எங்கள் கல்லூரி முதல்வர் டாக்டர் திருமதி யசோதா சண்முக சுந்தரம் அவர்களுக்கும்

ஆய்விற்குத் தேவையான நூல்கள், ஆய்வேடுகள் ஆகியவற்றை வழங்கி உதவி புரிந்த டாக்டர் பொன். கோதண்டராமன், டாக்டர் இ. சுந்தரமூர்த்தி, டாக்டர் வ. ஜெயதேவன், டாக்டர் தமிழண்ணல் டாக்டர் வி. பி. தேவதத்தா, டாக்டர் சூ. இன்னாசி, டாக்டர் கு. மோகனராசு, டாக்டர் கி. நாச்சிமுத்து, டாக்டர் குளோறியா சுந்தரமதி, டாக்டர் சு. அழகேசன் ஆகியோருக்கும்

ஆய்வேடு செம்மை பெறத் துணைநின்று உதவிய சென்னைப் பல்கலைக்கழக மொழித்துறை ஆய்வாளர் திருமதி இரா. நிர்மலா அவர்களுக்கும்

ஆய்வுப் பணிக்குத் துணைசெய்த கேரளப் பல்கலைக்கழக ஆய்வாளர் செல்வி சி. இராசேசுவரி அவர்களுக்கும்

ஆய்வேடு நூலாக்கம் பெற உதவிய சென்னைப் பல்கலைக் கழகப் பதிப்புத் துறைக்கும், சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பாக இந்நூலை வெளியிட நிதியுதவி அளித்த சென்னைப் பல்கலைக்கழக நல்கைக் குழுவிற்கும்

ஆய்வுப் பணியின் போதும் அச்சாகும் காலத்திலும் உதவிக் கரமாக விளங்கிய கணவர் திரு ஆர். என். அமர்நாத், மகள் ஆர்த்தி அமர்நாத் ஆகியோருக்கும், மற்றும் உடன்பிறப்புகள் திரு. வேல்ராசு, திரு. பாலசுப்பிரமணியன், திருமதி சிவஜோதி, திரு. மோகன், திரு. ஆறுமுகசாமி, டாக்டர் சீனிவாசன் ஆகியோருக்கும்

நூலின் நூவல்பொருளைச் செவிமடுத்து அட்டைப்படம் வரைந்தளித்த சகோதரர் திரு. ஆறுமுகசாமி எம்.ஏ., பி.எல்.ஐ.எஸ். அவர்களுக்கும்

பல்லாற்றானும் துணைநின்ற அனைத்து உள்ளங்களுக்கும்

சென்னைப் பல்கலைக்கழக நூலகம், மறைமலையடிகள் நூலகம், உ.வே. சாமிநாதையர் நூலகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகம், மதுரைப் பல்கலைக்கழக நூலகம், கேரளப் பல்கலைக்கழக நூலகம், கன்னிமரா நூலகம் ஆகியவற்றுக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றியை இதன்வழிப் புலப்படுத்திக் கொள்கின்றேன்.

அச்சுப்படியைப் பன்முறை கூர்ந்து நோக்கிய பின்னரும் மலிந்து விட்ட பிழைகளுக்கு வருந்துகின்றேன்.

இந்நூலைக் குறுகிய காலத்திற்குள் அச்சிட்டுக் கொடுத்த நாளந்தா ஆர்ட் பிரிண்டர்ஸ்க்கும் என் நன்றி.

தி. வசந்தாள்

# பொருளடக்கம்


அணிந்துரை

நன்றியுரை

நூலின் சில அமைப்பு மரபுகள்

முதன்மை நூல்களின் கால நிரல் i

சுருக்க விளக்கம் Vii

**இயல்**

| | | |
|---|---|---|
| | முன்னுரை | 1 |
| ஒன்று | இலக்கண நூல்களில் அகப்பொருள் மரபுகள் | 5 |
| இரண்டு | திணை | 105 |
| மூன்று | துறை | 139 |
| நான்கு | கூற்று | 253 |
| | (அ) கூற்றுக்குரியர் | |
| | (ஆ) கேட்போர் | |
| ஐந்து | அகப்பொருள் இலக்கிய வகை ஆய்வில் சில சிக்கல்கள் | 341 |

முடிவுரை 363

துணை நூற் பட்டியல் 396

பொருட் குறிப்பு அகராதி 405

பிழைதிருத்தம் 413

## நூலின் சில அமைப்பு மரபுகள்

இவ் ஆய்வு வரலாற்று முறைமை அடிப்படையில் அமைந்திருக்கிறது. எனவே, குறிப்பு நோக்கீட்டிற்குப் பயன்படும் வகையில் இந்நூலில் பயன்படுத்தப்பட்டுள்ள முதன்மை நூல்களின் காலநிரல், இதன் முற்பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

பயன்பாட்டு எளிமை கருதி இணைப்புகள் அவ்வவ் இயலின் முடிவிலேயே இணைக்கப்பட்டுள்ளன.

சான்றெண் விளக்கத்தில் நூல்களுக்கு அருகில் உள்ள எண் இலக்கண நூல்களாயின் நூற்பாவைக் குறிக்கும்; இலக்கியமாயின் அடியினைக் குறிக்கும்; திறனாய்வு நூலெனின் பக்கத்தைக் குறிக்கும். இவற்றி லிருந்து மாறுபட்டு அமையும் இடங்களில் சான்றெண் குறிப்பு விரித்து எழுதப்பட்டுள்ளது.

துணை நூற் பட்டியலில் நூல்கள், கட்டுரைகள், இதழ் கள், ஆய்வேடுகள் ஆகியன தனித்தனியாகக் கொடுக்கப் படாமல் அகரவரிசையில் கொடுக்கப்பட்டுள்ளன.

# முதன்மை நூல்களின் காலநிரல்

நூல்களின் காலம் பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உண்டு. எனினும் இப்பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள காலம் மு. அருணாசலம் எழுதிய இலக்கிய வரலாறு, மு. வரதராசனார் எழுதிய தமிழ் இலக்கிய வரலாறு, ந. சி. கந்தையா பிள்ளையின் தமிழ் இலக்கிய அகராதி, தமிழ்ப்புலவர் அகராதி, ந. வீ. செய ராமனின் சிற்றிலக்கிய அகராதி, சிற்றிலக்கியப் புலவர் அகராதி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட தமிழ்ப் புலவர் வரலாற்றுக் களஞ்சியம் போன்ற பல நூல்களிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டவையாகும்.

| நூற்றாண்டு | | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|---|
| கி. மு. | 4 | தொல்காப்பியம் | தொல்காப்பியர் |
| கி. மு. | 1 முதல் | | |
| கி. பி. | 2 நூ. வரை | சங்க இலக்கியம் | |
| கி. பி. | 2 | சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் |
| | 4 | ஐந்திணை ஐம்பது | மாறன் பொறையனார் |
| | 4 | கார் நாற்பது | கண்ணங்கூத்தனார் |
| | 4 | திணைமொழி ஐம்பது | கண்ணன் சேந்தனார் |
| | 5 | ஐந்திணை எழுபது | மூவாதியார் |
| | 5 | திணைமாலை நூற்றைம்பது | கணிமேதாவியார் |
| | 5 | முத்தொள்ளாயிரம் | ? |
| | 7 | தேவாரம் | அப்பர் |
| | 7 | தேவாரம் | சம்பந்தர் |
| | 7 | பாண்டிக்கோவை | ? |

| நூற்றாண்டு | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 8 | தேவாரம் | சுந்தரர் |
| 8 | பெருங்கதை | கொங்குவேளிர் |
| 8 | திருவாரூர் மும்மணிக் கோவை, பொன் வண்ணத்தந்தாதி | சேரமான் பெருமாள் நாயனார் |
| 8 | இறையனாரகப்பொருள் | இறையனார் |
| 8 | பெரிய திருமொழி, சிறிய திருமடல், பெரிய திருமடல் | திருமங்கை யாழ்வார் |
| 8 | பெருமாள் திருமொழி | குலசேகராழ்வார் |
| 8 | பெரியாழ்வார் திருமொழி, திருப்பல்லாண்டு | பெரியாழ்வார் |
| 8 | நாச்சியார் திருமொழி | ஆண்டாள் |
| 8 | கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை | நக்கீரதேவ நாயனார் |
| 9 | சீவக சிந்தாமணி | திருத்தக்கதேவர் |
| 9 | கம்பராமாயணம் | கம்பர் |
| 9 | திருக்கோவையார் | மாணிக்கவாசகர் |
| 9 | திவாகரம் | திவாகர முனிவர் |
| 9 | நந்திக் கலம்பகம் | ? |
| 9 | திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி | நம்மாழ்வார் |
| 9 | தமிழ்நெறி விளக்கம் | ? |
| 10 | சூளாமணி | தோலாமொழித் தேவர் |
| 10 | நீலகேசி | ? |

| நூற்றாண்டு | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 10 | திருவேகம்பமுடையார் திருவந்தாதி | பட்டினத்தார் |
| 10 | பன்னிரு பாட்டியல் | ? |
| 10 | பிங்கலம் | பிங்கல முனிவர் |
| 10 | இறையனாரகப் பொருள் உரை | நக்கீரர் |
| 11 | ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருமும் மணிக் கோவை, ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் | நம்பியாண்டார் நம்பி |
| 11 | வீரசோழியம் | புத்தமித்திரனார் |
| 11 | இளம்பூரணம் | இளம்பூரணர் |
| 11 | கல்லாடம் | கல்லாடர் |
| 12 | தண்டியலங்காரம் | தண்டி |
| 12 | பெரியபுராணம் | சேக்கிழார் |
| 12 | அம்பிகாபதி கோவை | அம்பிகாபதி |
| 12 | வீரசோழிய உரை | பெருந்தேவனார் |
| 12 | பேராசிரியம் | பேராசிரியர் |
| 13 | இராமநுச நூற்றந்தாதி | திருவரங்கத் தமுதனார் |
| 13 | தஞ்சைவாணன் கோவை | பொய்யாமொழிப் புலவர் |
| 13 | திருவால வாயுடையார் திருவிளையாடற் புராணம் | பெரும்பற்றப் புலியூர் நம்பி |
| 13 | நம்பியகப்பொருள் | நாற்கவிராச நம்பி |
| 13 | நளவெண்பா | புகழேந்திப் புலவர் |
| 13 | பரிமேலழகருரை | பரிமேலழகர் |
| 14 | கந்த புராணம் | கச்சியப்ப சிவாச்சாரியர் |

| நூற்றாண்டு | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 14 | களவியற்காரிகை | ? |
| 15 | இருபத்தினாலாயிரம் | பெரியவாச்சான் பிள்ளை |
| 15 | சித்திரமடல் | காளமேகம் |
| 15 | வருணகுலாதித்தன்மடல் | அம்மைச்சி |
| 16 | அரிச்சந்திர புராணம் | வீரகவிராயர் |
| 16 | திருவாரூர்ப் பள்ளு | கமலை ஞானப் பிரகாசர் |
| 16 | திருவானைக்கா புராணம் | கமலை ஞானப் பிரகாசர் |
| 16 | நைடதம் | அதிவீரராம பாண்டியர் |
| 16 | பிரபந்த மரபியல் | ? |
| 16 | மாறனகப்பொருள் | திருக்குருகைப் பெருமாள் கவிராயர் |
| 17 | இலக்கண விளக்கம் | வைத்தியநாத தேசிகர் |
| 17 | ஒருதுறைக் கோவை | அமிர்த கவிராயர் |
| 17 | திருப்பூவண நாதருலா | கந்தசாமிப் புலவர் |
| 17 | தொன்னூல் விளக்கம் | வீரமா முனிவர் |
| 17 | மதுரைக் கலம்பகம் | குமரகுருபரர் |
| 17 | மதன வித்தாரமாலை | கடிகை முத்துப் புலவர் |
| 18 | ஓதாளர் குறவஞ்சி அல்லது அலகுமலைக் குறவஞ்சி | சின்னத்தம்பி நாவலர் |
| 18 | குற்றாலக் கோவை | அருணாசல சுவாமி |

| நூற்றாண்டு | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 18 | கல்வளையந்தாதி | சின்னத்தம்பிப் புலவர் |
| 18 | கன்னிவாடி நரசிங்கப்ப நாயக்கன் வளமடல் | பலபட்டடை சொக்கநாதப் புலவர் |
| 18 | கூளப்பநாயக்கன்விறலி விடுதூது, கூளப்பநாயக்கன் காதல் | சுப்பிரதீபக் கவிராயர் |
| 18 | கும்பசேர் குறவஞ்சி நாடகம் | பாபநாச முதலியார் |
| 18 | தண்டிகைக் கனகராயன் பள்ளு | சின்னக்குட்டிப் புலவர், மா.வை., |
| 18 | தணிகைப் புராணம் | கச்சியப்ப முனிவர் |
| 18 | திரு இலஞ்சி முருகன் உலா | பண்டாரக் கவிராயர் |
| 18 | திருக்குற்றாலக் குறவஞ்சி | திரிகூடராசப்பக் கவிராயர் |
| 18 | திருவானைக்கா புராணம் | கச்சியப்ப முனிவர் |
| 18 | பாம்பண்ணக் கவுண்டன் குறவஞ்சி | பாலபாரதி முத்துசாமி ஐயர் |
| 18 | பிரபந்த தீபிகை | முத்துவேங்கட சுப்பைய நாவலர் |
| 19 | அறுவகை இலக்கணம் | தண்டபாணி தேசிகர் |
| 19 | இரட்சணிய யாத்திரிகம் | எச்.ஏ. கிருஷ்ண பிள்ளை |
| 19 | கச்சிக் கலம்பகம் | பூண்டி அரங்க நாத முதலியார் |
| 19 | கோடீச்சுரக் கோவை | சிவக்கொழுந்து தேசிகர் |
| 19 | குசேலோபாக்கியானம் | வல்லூர் தேவராச பிள்ளை |

| நூற்றாண்டு | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 19 | சங்கர நாராயணசாமி கோயிற் புராணம் | முத்துவீரக் கவிராயர் |
| 19 | சரபேந்திர பூபாலக் குறவஞ்சி | சிவக்கொழுந்து தேசிகர் |
| 19 | தியாகராச லீலை | மீனாட்சிசுந்தரம் பிள்ளை |
| 19 | திருவருட்பா | இராமலிங்கர் |
| 19 | பிரபந்தத் திரட்டு | ? |
| 19 | முத்துசாமிப் பிள்ளை காதல் | அழகிய சொக்க நாத பிள்ளை |
| 19 | முத்துவீரியம் | முத்துவீர உபாத்தியாயர் |
| 19 | மூவரையன் விறலிவிடுதூது | மிதிலைப்பட்டி, சிற்றம்பலக் கவிராயர் |
| 20 | பாரதியார் கவிதைகள் | சுப்பிரமணிய பாரதியார் |
| 20 | பாரதிதாசன் கவிதைகள் | பாரதிதாசன் |
| 20 | இராவண காவியம் | புலவர் குழந்தை |
| 20 | கண்ணதாசன் கவிதைகள் | கண்ணதாசன் |
| 20 | அனிச்ச அடி | புலவர் அ. பழநி |
| 20 | அண்ணா கோவை | இரா. மணியன் |

## சுருக்க விளக்கம்

| | | |
|---|---|---|
| அகம். | .... | அகநானூறு |
| ஆ. கோ. | .... | ஆய்வுக்கோவை, அண்ணாமலை நகர்: இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம். |
| இ. அ. | .... | இறையனார் அகப்பொருள் |
| இ. வி. | .... | இலக்கண விளக்கம் |
| இளம். உரை. | .... | இளம்பூரணர் உரை |
| உ.த.ஆ.நி. | .... | உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் |
| ஐ.எ. | .... | ஐந்திணை எழுபது |
| ஐ. ஐ. | .... | ஐந்திணை ஐம்பது |
| ஐங். | .... | ஐங்குறுநூறு |
| கலி. | .... | கலித்தொகை |
| கழகம். | .... | திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் |
| கு. | .... | குறிஞ்சி |
| குறுந். | .... | குறுந்தொகை |
| த. நெ. வி. | .... | தமிழ்நெறி விளக்கம் |
| தி. ஐ. | .... | திணைமொழி ஐம்பது |
| தி. நூ. | .... | திணைமாலை நூற்றைம்பது |
| தொல். | .... | தொல்காப்பியம் |
| தொல். பொருள். | .... | தொல்காப்பியம்: பொருளதிகாரம் |
| ந. அ. | .... | நம்பியகப்பொருள் |
| நற். | .... | நற்றிணை |
| நூ. | .... | நூற்பா. |
| நூ-ள். | .... | நூற்பாக்கள் |
| நெ. | .... | நெய்தல் |

| | | |
|---|---|---|
| ப. ஆ. | .... | பதிப்பாசிரியர் |
| பா. | .... | பாலை |
| ம. | .... | மருதம் |
| மா. அ. | .... | மாறனகப்பொருள் |
| மு. | .... | முல்லை |
| மொ. ஆ. | .... | மொழிபெயர்ப்பு ஆசிரியர் |
| வீ. சோ. | .... | வீரசோழியம் |
| I. I. T. S. | .... | International Institute of Tamil Studies |

# முன்னுரை

தொல்காப்பியர் காட்டிய அகப்பொருள் மரபுகள் சங்க காலம் முதல் இன்றுவரை தோன்றியுள்ள இலக்கியங்களில் தொடர்ந்து காணப்படுகின்றன என்னும் கருத்துப்பட ஆய்வுரைகளும் நூல்களும் வெளிவந்தவண்ணம் இருக்கக் காண்கின்றோம். இம்முடிபினை ஏற்றுக் கொண்டால், ஓர் இலக்கிய வகை ஏறத்தாழ இரண்டாயிரத்து நானூறு ஆண்டுகள் வரை தொடர்ந்து வருகிறது என்றாகும். அங்ஙனமாயின் இந்த இலக்கிய வகையில் நெகிழ்ச்சி-திரிபு-வளர்ச்சி என்னும் படிநிலைகள் நிகழவில்லையா? இத்தன்மைத்தான இலக்கிய வரலாறு உலகில் வேறு பிற இலக்கியங்களிலும் உண்டா? என்பன போன்ற வினாக்கள் எழுகின்றன. வரலாற்று அடிப்படையில் இலக்கிய மரபுச் சான்றுகளோடு இவ்வினாக்களுக்கு விடை காண வேண்டும் என்ற நோக்கமே இவ் ஆய்வினை மேற்கொள்ளக் காரணமாக அமைந்தது.

இவ் ஆய்வினைச் செம்மையாகச் செய்வதற்கு இலக்கிய வகைகளின் அடிப்படையில் தொகுத்து எழுதப்பட்ட இலக்கிய வரலாறு இன்றியமையாததாகும். ஆனால் அத்தன்மைத்தான தமிழ் இலக்கிய வரலாறு தற்பொழுது இல்லை. எனவே இருக்கின்ற நூல்களை வரலாற்று அடிப்படையில் தொகுத்துக் கொண்டு இந்த ஆய்வு நிகழ்த்தப்பட்டுள்ளது.

இதற்கு முன் அகப்பொருள் தொடர்பாக எழுந்த ஆய்வேடுகள், நூல்கள், கட்டுரைகள் அனைத்தும் கூடுமான வரை துணைநூற் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே அவை குறித்து ஈண்டு விரிக்கவில்லை. எனினும் அவ்வாய்வுகளின் தன்மை ஈண்டுச் சுட்டத் தக்கது. அவை ஒரு குறிப்பிட்ட காலத்தில் தோன்றிய இலக்கியங்களை ஆராய்வன (**தமிழ்க்காதல்**); அல்லது ஓர் இலக்கிய வகைக்குரிய அனைத்து நூல்களையும் தொகுத்து ஆய்வன (''தமிழில் தூது இலக்கியங்கள்''); அல்லது ஒரு தனி நூலைப் பற்றியன (''நந்திக் கலம்பகம் - அகப்பொருள் ஆய்வு''); அல்லது இலக்கணம் பற்றியன (''இறையனார் அகப்பொருளின் அகத்திணை மரபுகள்''); அல்லது இலக்கணம் இலக்கியம் ஆகிய இரண்டையும் ஒப்பிட்டு ஆய்வன (''தொல்காப்பிய இலக்கியக் கொள்கைகளும் குறுந்தொகையும்'') என்னும் போக்கில் அமைந்தவை. இவ்வாய்வு அவ்வாறின்றி, தொல்காப்பியம் முதல் இக்காலம் வரை தோன்றியுள்ள இலக்கண இலக்கியங்களை உள்ளடக்கி வரலாற்று நோக்கில் மேற்கொள்ளப்

பட்டுள்ளது. இவ்வாய்வு தமிழ் இலக்கிய வரலாறு முழுவதினையும் உள்ளடக்கியதெனினும் இதுவரை தமிழில் தோன்றியுள்ள எல்லா நூல்களும் ஆய்வுக்குட்படுத்தப்படவில்லை. அகப்பொருள் தொடர்பான ஒவ்வோர் இலக்கிய வகையிலும் சிறந்தவனாகிய சிலவற்றை மட்டும் தேர்ந்தெடுத்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ் ஆய்வேடு முன்னுரை முடிவுரை நீங்கலாக ஐந்து இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவையாவன :

1. இலக்கண நூல்களில் அகப்பொருள் மரபுகள்
2. திணை
3. துறை
4. கூற்று
   (அ) கூற்றுக்குரியர்
   (ஆ) கேட்போர்
5. அகப்பொருள் இலக்கிய வகை ஆய்வில் சில சிக்கல்கள்

முதல் இயலில் தொல்காப்பியரின் அகத்திணைக் கோட்பாடுகள் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இது தவிர, **இறையனாரகப் பொருள், புறப்பொருள் வெண்பாமாலை, தமிழ்நெறி விளக்கம், வீரசோழியம், நம்பியகப்பொருள், களவியற்காரிகை, மாறனகப்பொருள், இலக்கணவிளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், அறுவகை இலக்கணம்** ஆகிய பன்னிரண்டு இலக்கண நூல்களிலும் காணப்படும் அகம் பற்றிய செய்திகள், அவற்றில் வரலாற்று நோக்கில் ஏற்பட்ட நெகிழ்ச்சி-திரிபு-மாற்றம்-வளர்ச்சி ஆகியவை ஆராயப்பட்டுள்ளன.

இரண்டாவது இயலில் 'திணை' என்றால் என்ன? அதற்குத் தொல்காப்பியர் கருதிய பொருள், காலந்தோறும் தோன்றிய இலக்கியங்கள் வழி அறியப்படும் பொருள்-ஏழு திணைகளுள் அன்பின் ஐந்திணை தவிர்ந்து ஏனைய கைக்கிளை பெருந்திணைகளில் ஏற்பட்ட மாற்றம்-அவை அகத்திணையிலும் புறத்திணையிலும் பயின்றுவருதல் போன்றவை சான்றுகளுடன் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

மூன்றாவது இயலில் காட்சி, ஐயம், தெளிவு, குறிப்பறிதல், நாணிக்கண் புதைத்தல், பாங்கன் கூட்டம், கையுறை, குறியிடங் கூறல், இற்செறித்தல், வெறிவிலக்கல், அறத்தொடு நிற்றல், உடன் போக்கு, ஏறு தழுவுதல், காமமிக்க கழிபடர்கிளவி, தூது, மாலை வேண்டல், கூடலிழைத்தல், மடல், பரத்தையிற் பிரிவு ஆகிய பத்தொன்பது துறைகள் காலந்தோறும் தோன்றிய இலக்கியங்களில் பயின்றுள்ள பாங்கு-அவற்றின் நோக்கம்-நெகிழ்ச்சி-திரிபு-மாற்றம்

ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் மாறாமல் வந்தவை, மாறி வந்தவை, இடையில் நின்றவை, புதியனவாகத் தோன்றியவை, புதிய இலக்கிய வகைகளைத் தோற்றுவித்தவை ஆகியன அடங்கும்.

மேலும் அகப்பொருள் துறைகள் காலம், கருத்து, ஆசிரியர், நோக்கம் போன்றவற்றிற்கு ஏற்பப் பயன்படுத்தப்பட்டமை-காலந் தோறும் தோன்றிய பல்வேறு இலக்கிய வகைகளில் அமைந்துள்ள துறைகள் அகப்பொருள் மரபுக்குப் பொருந்துவனவா? பொருந்தாதனவா? ; ஒட்டிச் செல்கின்றனவா? விலகிச் செல்கின்றனவா? ; ஏன் அவை அகப்பொருள் துறைகளுள் அடங்காதனவாகின்றன? போன்றவை இவ்வியலில் குறிப்பிடப்படுகின்றன.

நான்காவது இயல் கூற்றுக்குரியர் கேட்போர் என இரு பிரிவுகளை உடையது. அவற்றுள் 'கூற்றுக்குரியர்' என்னும் முதற் பிரிவில் சங்க அக இலக்கியங்கள் முதல் இன்று வரையில் உள்ள இலக்கியங்களில் காணப்படும் கூற்றுக்குரியர் மரபு இடம் பெற்றமை-அவ்வாறு இடம் பெற்றிருப்பினும் கூற்றுக்கான நோக்கம் அகப் பொருளுக்குரியதா? அல்லது அகப்பொருள் கூறுகளையாவது பெற்றிருக்கும் சூழலில் அமைந்தனவா? அல்லது பெயரளவில் மட்டுமே இடம் பெறுகின்றனவா? போன்றவை தெளிவுபடுத்தப் பட்டுள்ளன.

'கேட்போர்' என்னும் இரண்டாம் பிரிவில், கேட்போர் அகப் பொருளுக்கேற்றோராக இடம் பெற்றிருப்பினும் கேட்போர் பற்றிய சூழல் பயன் ஆகியவற்றில் ஏற்பட்ட, நெகிழ்ச்சி, மாற்றம் ஆகியன எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

ஐந்தாவது இயலில் அகப்பொருள் என்பது ஓர் இலக்கிய வகை என்பது தெளிவுபடுத்தப்பட்டது. மேலும், அகப்பொருள் ஆய்வில் நிகழ்ந்த சிக்கல்கள் சில, சான்றுகள் வழி சுட்டப்பட்டன. மற்றும் அகப்பொருள் இலக்கிய வகை பற்றிய விளக்கம், காலந்தோறும் தோன்றிய நூல்களுள் அகப்பொருளாகக் கொள்ளத்தக்கன; அகப்பொருளன்று என எண்ணத்தக்கன; புறத்தில் தொகுக்கப் பட்டனவாகக் கருதப்படும் அகப் பாடல்கள் சில; அவை பற்றிய முடிவு - அகப்பொருள் என்பது ஓர் இலக்கிய வகை - எல்லா இலக்கியங்களையும் அகப்பொருள் என்று கூறுவதன் பொருத்தமும் பொருத்தமின்மையும் ஆகியன எடுத்துக்காட்டுகளுடன் நிறுவப் பட்டுள்ளன.

முடிவுரையில் ஐந்து இயல்களிலும் இருந்து பெறப்பட்ட செய்திகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

ஆய்வு வரலாற்றுப் போக்கினது எனினும் சில இடங்களில் சொற்சுருக்கம் கருதி ஒரு சில இலக்கிய வகைக்குரிய நூல்கள் ஒரே இடத்தில் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு இயலின் இறுதியிலும் தொகுப்புரை உள்ளது. எனினும் தெளிவு கருதி இயல் நடுவிலும் தேவைப்படும் இடங்களில் தொகுப்புரை இடம் பெற்றுள்ளது.

1

# இலக்கண நூல்களில் அகப்பொருள் மரபுகள்

# இலக்கண நூல்களில் அகப்பொருள் மரபுகள்

'இலக்கண நூல்களில் அகப்பொருள் மரபுகள்' என்ற இவ் இயலில் **தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை, தமிழ்நெறி விளக்கம், வீரசோழியம், நம்பியகப் பொருள், களவியற்காரிகை, மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், அறுவகை இலக்கணம்** ஆகிய பதின்மூன்று நூல்களுள் காணப்படும் அகப் பொருள் மரபுகளில் நேர்ந்துள்ள நெகிழ்ச்சி, திரிபு, வீழ்ச்சி ஆகியன ஆராயப்படுகின்றன.

அவை சிறப்பு நிலையில் நூலுக்கேற்றாற்போல் தலைப்புக்கள் பெற்றுள்ளன; பொது நிலையில் அகப்பொருளுக்குரிய மரபு, உத்தி, திணை, கைகோள், துறை, கூற்று, அகமாந்தர்கள், தலைவனுக் குரியன, இல்லாதன, தலைவிக்குரியன, இல்லாதன, வாயில்களுக் குரியன, மெய்ப்பாடு ஆகிய தலைப்புக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

இனி நூல்கள் தோன்றிய கால முறைப்படி இவ் அகப்பொருள் மரபுகள் வரலாற்று நோக்கில் அமைந்துள்ள முறைமை ஆராயப் படும்.

## தொல்காப்பியம்

### நோக்கம்

தமிழுக்குக் கிடைத்துள்ள முதல் இலக்கண நூலான தொல் காப்பியத்தில் காணப்படும் இலக்கண மரபுகள் பற்றி அறியும் முன்பு அந்நூல் பற்றிய அறிஞர்களின் கருத்துக்களை ஆய்ந்து நூலின் நோக்கத்தைத் தெளிவுசெய்தல் பயனுடையது.

**தொல்காப்பியம்** வாழ்க்கைக்குரியது என்று ஒரு சாராரும்; இலக்கியத்திற்குரியது என்று மற்றொரு சாராரும் கூறி வரு கின்றனர்.

> பொருளதிதாரம் வெறும் மொழிக்கும் மொழியாலாகிய
> இலக்கியத்திற்கும் மட்டும் இலக்கணம் வகுக்கவில்லை.
> அம்மொழியைப் பேசும் மக்களுக்கும் அவர்கள்
> வாழ்க்கை முறைக்குங் கூட இலக்கணம் வகுத்தது[1]

என்பர். மேலும் இலக்கியம் வாழ்க்கையைப் பற்றியது என்பதால் இலக்கியத்தினின்றும் எடுபடும் இலக்கணத்தையும் வாழ்க்கைக் குரியது என்று குறிப்பிடுகின்றனர்:

> தமிழ் இலக்கணம் பொருளுக்கு விளக்கம் தருகின்றது.
> ஆம், வாழ்க்கைக்கு விளக்கம் தருகிறது. பொருள்
> எனினும் வாழ்க்கை எனினும் ஒக்கும். ...
> வாழ்க்கைக்குரிய இலக்கணத்தைச் சொல்லும் பகுதி
> தமிழில் பொருள் இலக்கணம் எனப்படும்[2]

எனக் கூறி முற்காட்டிய அறிஞரது கருத்தை ஒட்டிச் செல்கின்றார் மற்றொரு ஆய்வாளர்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அகத்திணை இயல், புறத்திணை இயல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப் பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல் என ஒன்பது இயல்கள் உள்ளன. அவை அகப்பொருளையும் புறப்பொருளையும் இலக்கியப்படுத்தும் முறைமையை விளக்குவன.

பொருளதிகாரம் தவிர ஏனைய எழுத்து, சொல் ஆகிய இரு அதிகாரங்களை நோக்கினும் **தொல்காப்பியம்** இலக்கியத்தை மனதில் கொண்டு எழுதப்பட்டது என்பது தெளிவாகின்றது.

> நீட வருதல் செய்யுளு ளுரித்தே[3]
> செய்யுண் மருங்கி னுரித்தென மொழிப[4]
> முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே[5]
> பலவயி னானும் எண்ணுத்திணை விரவுப்பெயர்
> அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே[6]

எனவும் பிறவாறும் வரும் நூற்பாக்களும்[7] தொல்காப்பியத்தின் நோக்கத்தைத் தெளிவுபடுத்துகின்றன.

வாழ்க்கையினின்று தோன்றுவது இலக்கியம்; இலக்கியத்தி னின்று எடுபடுவது இலக்கணம்; பாலும் அமுதும் இணைந்து தயிரும், தயிரிலிருந்து மோரும், மோரிலிருந்து வெண்ணெயும், வெண்ணெயி லிருந்து நெய்யும் பிறப்பது போல இது ஒரு தொடர்நிகழ்ச்சியே தவிரச் சுழல்நிகழ்ச்சி அல்ல.

சிவஞான முனிவர்,

> ஈண்டுப் பொருளென்பது அகம் புறமென்னும் இரு
> கூற்றுப் பதினாற்றிணைப் பகுதியவாய்ச் செய்யுளிற்
> பாடுதற்குரிய இன்ப முதலிய வுலகியற் பொருளை
> மொழித்திற முணர்தற் பொருட்டுச் செய்யுளா-

ராய்ச்சிக் கொருதலையான் வேண்டப்படுதல் பற்றி இயற்றமிமொழியாகக் கொண்டோதற்பாலன அவையேயாகலின். அற்றேல், இஃதெழுத்துஞ் சொல்லும் போலச் செந்தமிழியற்கை சிவணுதற்கேதுவாகாமையானும், வடமொழியார் வேறோதுவதல்லது சந்த நூலோதாமையானும், ஈண்டோதல் வேண்டாம் பிறவெனின், ஈண்டுக்கூறும் பொருட்பாகுபாடுகள் பொதுவாகாது தமிழிற்கே சிறந்து வேறொன்றாற் பெறப்படாமையின், இப்பொருள் பற்றி வரும் பரிபாடல், கலி, அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, நற்றிணை, குறுந்தொகை, ஆற்றுப்படை, பதிற்றுப்பத்து முதலிய செய்யுளாராயப் புகுந்தார்க்கு இப்பொருட்பாகுபாடுணராக்காற் குன்றுமுட்டிய குரீஇப்போல இடர்ப்பட்டுச் செய்யுண்மொழித்திற முணரமாட்டாமையிற் செய்யுண் மொழித்திறமுணர்ந்து செந்தமிழியற்கை சிவணுதற்கு ஒருதலையானோதல் வேண்டுமென்க[8]

எனப் பொருளதிகாரத்தின் இன்றியமையாமை எடுத்துக் கூறுவர். அதாவது பொருளதிகாரம் இலக்கிய ஆராய்சிக்குப் பயன்படும் என்கின்றார். எனவே அதில் இலக்கியக் கோட்பாடுகள் பயின் றுள்ளன என்பதும் பெறப்படுகின்றது.

பொருளதிகாரம் முழுமையும் இலக்கிய ஆய்வாகவே அமைந்துள்ளது......தொல்காப்பியப் பொருளதிகாரம் முழுவதும் அக்கால அறிஞர்களின் கருத்துப்படி அமைந்த இலக்கியக் கோட்பாடுகள் என்று சொன்னால் தவறில்லை[9]

என்பர் பொன். கோதண்டராமன். **தொல்காப்பியம்** சிறந்த இலக்கணக் கொள்கைகளைப் பெற்றுத் திகழ்வது[10] என்பர் ச. அகத்தியலிங்கம்.

பொருளதிகாரம் தமிழர் வாழ்க்கையைப் பற்றிக் கூறுவது எனக் கருதுவோர் உள்ளனர். இலக்கியம் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டது ஆதலின், தமிழ் இலக்கியம் பற்றிக் கூறும் பகுதியை வாழ்க்கையைப் பற்றிக் கூறுவ-

தாகக் கருதுகின்றனர். உண்மையாக நோக்கின்
தொல்காப்பியனாரின் நோக்கம் அக்காலத்
தமிழ் இலக்கியத்தின் பொருளையும் அமைப்பையும்
எடுத்துரைப்பதே என்பது நன்கு விளங்கும்[11]

என விளக்கிக் கூறும் மு. வ. வின் கருத்தும் தொல்காப்பியரின் பொருளதிகாரம் இலக்கியத்தைப் பற்றியது எனும் கொள்கையை வலியுறுத்துகிறது. மேலும் கைலாசபதி,

பழந்தமிழ்க் கவிதைகளிற் காணும் காதல்
பற்றிய கவிமரபு அகம் என்ற பிரிவில் அடங்கும்
என்பதும், அதுவும் அன்பினைந்திணை என்று
ஒரு கூறாகவும், கைக்கிளை பெருந்திணை
ஆகிய இரண்டு மடங்கும் பிறிதொரு கூறாகவும்
வகுக்கப்படும் என்பதும் நன்கு தெரிந்ததே.
தொல்காப்பியத்திற் காணப்படும் இப்பாகுபாடு
பின்னெழுந்த வழிநூல்களிற் பொன்னே போற்
போற்றப்பட்டுள்ளது[12]

எனப் பழந்தமிழ்க் கவிதைகளிற் காணப்படும் அகக் கோட்பாடு களையே கவிதைக்குரிய மரபு என்று விளக்குவர். ஆக, சங்க இலக்கியமே கவிதை மரபு எனில் தொல்காப்பியப் பொருளதி காரமும் கவிதை மரபு பற்றியது என்பது பெறப்படுகின்றன.

எனவே தொல்காப்பியப் பொருளதிகாரம் வாழ்க்கைக்குரிய இலக்கணம் என்பதை விட இலக்கியத்திற்குரிய இலக்கணம் எனக் கொள்வதே பொருத்தமானது.

### செய்யுளுறுப்புக்கள்

செய்யுளியலில் செய்யுளுறுப்புக்கள் முப்பத்து நான்கு என்று கூறுகின்றது **தொல்காப்பியம்**. அவற்றுள்

திணையே கைகோள் பொருள்வகை* எனாஅ
கேட்போர் களனே காலவகை எனாஅ
பயனே மெய்ப்பா டெச்சவகை எனாஅ
முன்னம் பொருளே துறைவகை எனாஅ[13]

என வரும் நான்கு அடிகளும் அகப்பொருள் புறப்பொருள் ஆகிய இரண்டுக்கும் பொதுவான பாடல் சான்ற புலனெறி வழக்கம் பற்றியன; அகம் அதனைச் சார்ந்து வரும் புறம் ஆகியவற்றிற் குரியன.

---

* கூற்றுவகை என்ற பாடம் உள்ளது. அதுவே பொருத்தமானது எனக் கொள்ளலாம்.

**வழக்கு**

நாடக வழக்கும் உலகியல் வழக்கும் இணைந்த புலன்நெறி வழக்கில் அகப்பொருள் பாடல்கள் பயின்றுவரும்.[14]

வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கட் டாக லான[15]

என்ற நூற்பா நூலின் நிகழ்ச்சி உயர்ந்தோரைப் பற்றியதாக இருக்கவேண்டுமெனச் சுட்டுகின்றது. நிகண்டுகளும்,

உலகமென்ப துயர்ந்தோர் மாட்டே[16]

என்றலின் வழக்கு என்பது உலகிலுள்ள உயர்ந்தோர் வழக்காதலைக் காணலாம்.

உயர்ந்தோர் கிளவி வழக்கொடு புணர்தலின்
வழக்குவழிப் படுதல் செய்யுட்குக் கடனே[17]

எனச் செவ்விய இலக்கிய மாந்தரையும், அவர்தம் மொழியையும் இலக்கியப்படுத்த வேண்டுமெனத் **தொல்காப்பியம்** வரையறுக்கின்றது.

நாடக வழக்கு, உலகியல் வழக்கு, பாடல் சான்ற புலனெறி வழக்கு ஆகிய மூன்றையும் முறையே ''சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல், உலகத்தார் ஒழுகலாற்றோடு ஒத்து வருவது, இவ்விருவகையானும் பாடல் சான்ற கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்க் கூறப்படுகின்றன அகப்பொருள்''[18] என இளம்பூரணர் பொருளுரைப்பது ஈண்டு ஒப்பவைத்து எண்ணத்தக்கது.

**அகத்திணைக்குரிய செய்யுள்**

தொல்காப்பியர் கலிப்பாவையும் பரிபாடலையும் அகப்பொருளுக்குரிய செய்யுளாகக் குறித்துள்ளார். அவற்றுள் உறழ்கலிப்பா கூற்றும் மாற்றமும் விரவி வந்து சுரிதகமின்றி முடியும்; பரிபாடல் தொகைநிலை வகையால் பா இது என்று சொல்லப்படும் இலக்கணம் இன்றி எல்லாப் பாவிற்கும் பொதுவாய் நிற்றற்கு உரியது.[19] மேலும் அது பொதுவாய் நிற்றலன்றிக் கொச்சகம், அராகம், சுரிதகம், எருத்து என்னும் நான்கையும் தனக்குறுப்புகளாகக் கொண்டு காமம் பொருளாக வரும். இதனைக்,

கொச்சகம் அராகம் சுரிதகம் எருத்தொடு
செப்பிய நான்கும் தனக்குறுப் பாகக்
காமங் கண்ணிய நிலைமைத் தாகும்[20]

என்னும் நூற்பாவால் அறிகிறோம். எனினும் சங்க இலக்கியத்தில் ஆசிரியப்பாவிலும் அகப்பொருள் பாடப்பெற்றிருக்கக் காண்கின்

றோம். எனவே அகப்பாடலுக்குரிய பாவடிவில் சங்க காலத்திலேயே நெகிழ்ச்சி ஏற்பட்டு விட்டது எனத் துணியலாம்.

## இயற்பெயர் சுட்டாமை

அகத்திணைக்கண் தலைமகனாகப் புலனெறி வழக்கம் செய்ய வேண்டின் நாடன், ஊரன், சேர்ப்பன் எனப் பொதுப்பெயரால் சுட்ட வேண்டும், ஒருவர்க்கே உரித்தாகிவரும் இயற்பெயர் சுட்டிக் கூறும் மரபு இல்லை. தொல்காப்பியரின் அகப்பொருள் பற்றிய இவ் இலக்கணக் கோட்பாட்டை,

> மக்கள் நுதலிய அகன்ஐந் திணையும்
> சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்[21]

என்ற நூற்பா விளக்கும். அகனைந்திணையை மட்டும் விதந்து கூறுவதனால், ஏனைய கைக்கிளை பெருந்திணை என்னவாயிற்று என்ற வினா எழுகின்றது. அதற்கு விடையாகப்,

> புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது
> அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே[22]

என்ற நூற்பா இடம்பெற்றுள்ளது. 'இதனாற் சொல்லியது ஒருவர்க்குரித்தாகி வரும்பெயர் அகத்திணை பற்றி வரும் கைக்கிளை பெருந்திணையினும் வரப்பெறாது என்பதூஉம், புறத்திணையுள் வரும் என்பதூஉம், ஆண்டுப் பாடாண் பாட்டுக் காமம் பொருளாக வரின் அவ்வழி வருஉம் என்பதூஉம் கூறியவாறு. இதனான் அகப் பொருள் ஒருவரைச் சாராது பொதுப்படவருமென்பது கொள்க' என விளக்கும் இளம்பூரணர் உரை பொருத்தமாக உள்ளது. எனவே அகத்திணை ஏழனுள்ளும் இயற்பெயர் வாராது என்பது தெளிவு.

அகப்பொருளில் மட்டுமின்றி, புறப்பொருளிலும் இயற்பெயர் சுட்டப்படவில்லை என ஆய்வு நிகழ்த்தப்பட்டுள்ளது.[23]

## வெளிப்பாட்டு உத்திகள்

கவிஞன் தன் ஆளுமையால் பொருள் புலப்பாட்டிற்காகப் பல உத்திகளைக் கையாளுகின்றான். அவற்றை இலக்கிய உத்திகள் என்று குறிப்பிடுகின்றோம். தொல்காப்பியர் அகப்பொருளுக்குரிய உத்திகளாகக் குறிப்புப் பொருண்மையில் அமைந்த உள்ளுறை, இறைச்சி என இரண்டினைச் சுட்டுகின்றார்.

### அ. உள்ளுறை

திணையை உணர்வதற்கு மிகுந்த துணை செய்வது உள்ளுறை உவமமாகும். இது கருப்பொருள்களுள் தெய்வம் நீங்கலாக ஏனையவற்றை இடமாகக் கொண்டு வரும்; பொருளுவமையாக வரும்.[24]

### ஆ. இறைச்சி

இறைச்சிப் பொருளென்பது உரிப்பொருளின் புறத்ததாகித் தோன்றும்; சொல் உணர்த்தும் பொருளுக்கு மேல் ஒரு பொருள் உணர்த்துவது; அன்பை நினைவூட்டத்தக்க நிகழ்ச்சியின் அடிப் படையில் வற்புறுத்தலாக வரும்.[25]

### திணை

**தொல்காப்பியம்** கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை என எழுதிணைகளைக் குறிப்பிடு கின்றது.

> கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
> முற்படக் கிளந்த எழுதிணை என்ப[26]

என்ற நூற்பாவில் உள்ள 'என்ப' எனும் சொல் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே அப்பாகுபாடு நிலவி வந்திருக்கின்றது என் பதைக் காட்டுகின்றது.

அகப்பாடல்கள் முதல், கரு, உரி, என்னும் மூன்று பொருண் மைகளை உடையன; முதற்பொருள் நிலம், பொழுது என்ற இரு பிரிவுகளை உடையது; கருப்பொருளில் தெய்வம், உணவு, மா, மரம், புள், பறை, செய்தி, யாழின் பகுதி போன்றவை அடங்கும்; உரிப் பொருள் ஒழுக்கம் பற்றியது.[27]

**தொல்காப்பியம்** அகத்திணை ஏழு புறத்திணை ஏழு என்ற கோட்பாட்டினை உடையது; எனவே அகத்தோடு புறத்தை இணைத்துக் காட்டுகின்றது.

> அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்
> புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்
> வெட்சி தானே குறிஞ்சியது புறனே
> உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே[28]

என அகத்திணையோடு சார்த்திப் புறத்திணைக்கு இலக்கணம் கூறுகின்றது; இத்தன்மையைப் புறத்திணை இயல் காட்டும்.

### திணையுணரும் முறை

முதல், கரு, உரி ஆகிய மூன்றும் இணைந்ததைத் திணை என்கின் றோம். எனினும் எல்லாப் பாடல்களிலும் முப்பொருளும் இணைந்து வாரா; சில பாடல்களில் முதல் கரு உரி ஆகிய மூன்று, சில பாடல்களில் முதலும் உரியும், சில பாடல்களில் கருவும் உரியும், சில பாடல்களில் உரிப்பொருள் மட்டும் அமைந்து வரும். உரிப்பொருள் பாவின் உயிர்ப்பொருள் என்பதால் உரிப்பொருளின்றிப் பாடல் அமைவது அகப்பொருள் மரபன்று. இவ்வண்ணம் அமையும் அகப் பாக்களில் திணையைக் கண்டறிவது எங்ஙனம்? இதற்கு,

முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங்காலை[28]

என்ற நூற்பா ஐயம் களையும் கருவியாக அமைகின்றது. இதற்கு உரை வகுத்த உரையாசிரியர் ''முறைமையாற் சிறத்தலாவது, யாதானும் ஒரு செய்யுட்கண் முதற்பொருளும் கருப்பொருளும் உரிப்பொருளும் வரின், முதற்பொருளால் திணையாகும் என்பதும் முதற்பொருள் ஒழிய ஏனைய இரண்டும் வரின் கருப்பொருளால் திணையாகும் என்பதூஉம், உரிப்பொருள் தானே வரின் அதனால் திணையாகும்'' என்று விளக்கம் செய்துள்ளார்;

| | | | |
|---|---|---|---|
| பாடல்[1] | முதல்* | கரு | உரி |
| பாடல்[2] | — | கரு* | உரி |
| பாடல்[3] | — | — | உரி* |

(* — திணையாகும் முறை)

இம்முறை பாடலுள் பயின்றுவரும் திணையை உணர்ந்து கொள்ளப் பெரும்பகுதி துணை நிற்கின்றது. சில பாடல்களில் திணையை அறிந்து கொள்வதில் மயக்கம் ஏற்படுகின்றது. எனினும் அது உரையாசிரியர்கள் தரும் பொருள் விளக்கத்தால் தீர்க்கப்படுகின்றது.

### திணை மயக்கம்

திணை மயங்குவதை யுணர்த்தும் தொல்காப்பியர்,

திணைமயக் குறுதலும் கடிநிலை இலவே
நிலனொருங்குமயங்குதல் இல்லென மொழிப்
புலன்நன் குணர்ந்த புலமை யோரே[30]

என்பர். இந்நூற்பாவுக்குரிய இளம்பூரணர் உரைக்கும், நச்சினார்க்கினியர் உரைக்கும் வேற்றுமை காணப்படுகிறது. 'நிலம் மயங்குதல் இல்லை. எனவே காலம் மயங்குவது உண்டு'[31] என்பர் முன்னவர். 'திணை என்பது முதல், கரு, உரி ஆகிய மூன்றையும் உள்ளடக்கியது ஆதலின் மூன்றும் மயங்கப் பெறும்'[32] என்பர் பின்னவர்.

அடுத்த நூற்பாவான 'உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே'[33] என்பதற்கு 'உரிப்பொருள் அல்லாத கருப்பொருளும் முதற்பொருளும் மற்றொரு திணையொடு சேர நிற்கவும் பெறும்' என்பர் இளம்பூரணர்.

### கைகோள்

தொல்காப்பியர் அகத்திணையைக் களவு கற்பு என இருவகைப் படுத்துவர்; மேலும் செய்யுளியலில் செய்யுறுப்புக்களுள் ஒன்றாகக்

கைகோளைக் குறிப்பிடுகின்றார்; இருப்பினும் அதற்குரிய விளக்கம் அகப்பொருளை மட்டும் சுட்டுவதாக அமைந்துள்ளது. இதற்குப் பேராசிரியர் தரும் விளக்கம் ஓரளவு பொருத்தமாக உள்ளது.

> கைகோள் என்பது ஒழுக்கங்கோடல்; எனவே
> அகத்திற்குப் புறனாயினும் புறத்திணைக்குக்
> கைகோள் அவ்வாறு வேறு வகைப்படக் கூறப்
> படா; பொதுவகையானே மறைந்த ஒழுக்கமும்
> வெளிப்பாடும் என இரண்டாகி அடங்கும்/அவையும்
> என்றவாறு; அவை வெட்சியுள்ளும் ஒழிந்த
> திணையுள்ளும் காட்டப்பட்டன.[84]

எனவே தொல்காப்பியர் காட்டும் கைகோள் அகத்திணை புறத்திணை ஆகிய இரண்டுக்குமுரியது என்பது பெறப்படுகின்றன; அவர் புறத்திணையியல் நீங்கலாக ஏனைய இயல்களில் அகத்திணை இலக்கியக் கோட்பாட்டை மிகுதியும் விரித்துரைப்பதால் அகமாந்தர்களையும் களவு, கற்பு அடிப்படையில் பிரித்துக் காட்டியிருப்பதும் ஈண்டு நினைவுகூரற்பாலது. அவர்,

> காமப் புணர்ச்சியும் இடந்தலைப் படலும்
> பாங்கொடு தழாஅலுந் தோழியிற் புணர்வுமென்
> றாங்கநால் வகையினும் அடைந்த சார்வொடு
> மறையென மொழிதல் மறையோர் ஆறே
>
> மறைவெளிப் படுதலுந் தமரிற் பெறுதலும்
> இவைமுத லாகிய இயனெறி திரியாது
> மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்
> பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படுமே[85]

எனக் களவு, கற்பு ஆகிய இருவகைக் கைகோளுக்கும் உரிய அகப்பொருள் நிகழ்ச்சிகளை வகுத்துரைக்கின்றார்.

**துறை**

தொல்காப்பியர் செய்யுளுறுப்புகளுள் ஒன்றாகத் துறையைக் காட்டுவர்; அகம் ஏழு புறம் ஏழு என்ற கொள்கையுடையவர் ஆதலானும் பொருளை அகம் புறம் எனப் பாகுபடுத்தியிருப்பதாலும் துறையை அகத்திற்கும் புறத்திற்குமுரிய ஓர் உறுப்பாகக் கூறுவர்.

அகம் புறம் ஆகிய இரண்டுக்குமுரிய மாந்தர், விலங்கு ஆகியவற்றோடு பிறவும் வந்தாலும் தத்தமக்கேற்ற மரபோடு முடியும்; அவ்வாறு முடியும் தன்மையது துறையென்று சொல்லப்படும் என்பது **தொல்காப்பியம்.** இதனை,

அவ்வவ் மாக்களும் விலங்கும் அன்றிப்
பிறவவண் வரினுந் திறவதின் நாடித்
தத்தம் இயலான் மரபொடு முடியின்
அத்திறந் தானே துறையெனப் படுமே[86]

என்ற நூற்பா சுட்டும். எனினும் அவர் துறையடிப்படையில் இலக்கணம் இயற்றவில்லை; அகத்திணை இயல், களவியல், கற்பியல் ஆகியவற்றில் அக மாந்தர்க்குரிய கூற்று நிகழிடங்களாகக் குறிப்பிடும் நிலையில் துறைகள் அல்லது அவற்றிற்குரிய தன்மைகள் பயின்று வருகின்றன.

### கூற்று

அகப்பாடல்கள் அகமாந்தர்கள் மொழிவதாக அமையும்; இக்கிளத்தல் முறை கூற்று எனப்படும். தொல்காப்பியர் அகத்திணை இயல், களவியல், கற்பியல் ஆகிய மூன்று இயல்களில் கிளவிக்குரியர்களாக வரும் மாந்தர்களுக்குரிய கிளவிகளைத் தொகுத்துரைக்கின்றார். பொருளியலிலும் கூற்றுக்குரிய மரபுகளை எடுத்துக் கூறுகின்றார்.

கூற்றுக்குரியர் அவர்களுக்குரிய கிளவி போன்றவற்றைத் தெளிவுபடுத்திய தொல்காப்பியர், கேட்போர் பற்றிய ஆய்வையும் நிகழ்த்தியுள்ளார்; அகமாந்தர் அல்லாத பிறவும் அகப்பாடலுள் பயின்று வரும் முறையையும், சூழலையும், நோக்கத்தையும் விரித்துள்ளார்.

### அகப்பொருள் மாந்தர்கள்

கூற்றுக்குரிய அகமாந்தர்களைக் கைகோள் அடிப்படையில் பின்வருமாறு பாகுபடுத்துவர் தொல்காப்பியர்:

| *களவினில் கிளவிக்குரியர்*[87] | *கற்பினில் கிளவிக்குரியர்*[88] |
|---|---|
| 1. பார்ப்பான் | 1. பாணன் |
| 2. பாங்கன் | 2. கூத்தன் |
| 3. தோழி | 3. விறலி |
| 4. செவிலி | 4. பரத்தை |
| 5. கிழவன் | 5. அறிவர் |
| 6. கிழத்தி | 6. கண்டோர் |
| | 7. பார்ப்பான் |
| | 8. பாங்கன் |
| | 9. தோழி |
| | 10. செவிலி |
| | 11. கிழவன் |
| | 12. கிழத்தி |

மேற்காணும் பகுப்பு பார்ப்பான் முதல் கிழத்தி ஈறாக உள்ள அறுவரும் களவு கற்பு ஆகிய இரண்டிலும் கூற்று நிகழ்த்துவதற்குரியர்; பாணன் முதல் கண்டோர் வரை உள்ள அறுவரும் கற்பில் மட்டும் கூற்று நிகழ்த்துதற்குரியர் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. மேலும் கண்டோர் கூற்று கற்பில் நிகழுமென்பதால் உடன்போக்கு கற்பு எனும் கைகோளுக்குரியது என்பதும் பெறப்படுகின்றது.

## கூற்றுக்குரிமையற்றோர்

கூற்றுக்குரியர் பற்றி விளக்கிய **தொல்காப்பியம்** ஊரார் அயலோர், சேரியோர், தந்தை போன்றோர் அகப்பாடலுள் கூற்றுக்குரியர் அல்லர்; அவர்கள் அகப்பாடலுள் பயின்று வருவோர் எனினும் அவர்கள் கொண்டெடுத்து மொழியப்படுவர்; கூற்று நிகழ்த்தும் மரபு இல்லை என்று குறிப்பிடுகின்றது.

ஊரும் அயலுஞ் சேரி யோரும்
நோய்மருங் கறிநருந் தந்தையுந் தன்ஐயும்
கொண்டெடுத்து மொழியப் படுத லல்லது
கூற்றவண் இன்மை யாப்புறத் தோன்றும்[39]

என்னும் நூற்பா அவர்கள் கேட்போராக மட்டும் அமைவதைக் காட்டும். இதனை,

தந்தையும் தன்னையும் முன்னத்தின் உணர்ப[40]

என்ற நூற்பாவால் அறியலாம். தந்தை தமையன் ஆகிய இருவரும் பிறர் கூற்றினால் அன்றிக் குறிப்பால் தாமே உணர்ந்து கொள்வர் என்பதாம்.

## கேட்போர்

தலைவன் தலைவி ஆகிய இருவரும் கூறக் கேட்போர் மேற் சொல்லப்பட்ட கூற்றுக்குரியர் பன்னிருவருள் தலைவன் தலைவி நீங்கலாக ஏனைய பதின்மர் ஆவார்; இப்பதின்மரும் இடமும் காலமும் அறிந்து கூறும்போது தலைவனும் தலைவியும் கேட்போராக அமைவர்; பார்ப்பார், அறிவர் ஆகிய இருவர் கூற்றையும் எல்லோரும் கேட்கப் பெறுவர்; ஒண்தொடி மாதர், தலைவன் தலைவி ஆகியவரோடு கண்டோர் கூறுதல் உண்டு; வாயில்கள் தம்மைத் தாமே உசாவிக் கொள்ளுதற்குரியர்.[41]

மேலே உயர்திணைப் பொருள்கள் கேட்போராக அமைந்த பாங்கு எடுத்துக் கூறப்பட்டது. இவை தவிர மக்கள் அல்லாத பொருட்கள் காமம் பெருகிய நிலையில் விரித்துப் பேசப்படுவதுண்டு. 'ஞாயிறு, திங்கள், அறிவு, நாண், கடல், கானல், விலங்கு, மரம், பொழுது, புள், நெஞ்சு போன்றவை சொல்லுந போலவும் கேட்குந போலவும் சொல்லியமையப் பெறும்'[42] எனக் கூறி, கேட்டற் பொருண்மைக்கண் மரபு வழு அமைக்கின்றார் தொல்காப்பியர்.

**வாயில்கள்**

தொல்காப்பியர் தலைவன் தலைவி ஆகிய இருவர் வாழ்விலும் ஏற்படும் இன்பம்—துன்பம், கூடல்—பிரிவு போன்ற அன்புச் சிக்கல்களைத் தீர்த்து வைக்க இருவரிடையே பாலமாக அமையும் வாயில்களாகப் பன்னிருவரைச் சுட்டுகின்றார்.

தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
பாணன் பாட்டி இளையர் விருந்தினர்
கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப[43]

என்பது அந்நூற்பா. இவற்றுள் கூற்றிற்குரியராகக் கூறப்பட்ட பன்னிருவருள் எண்மரும், புதியோராகத் தாய், பாடினி (பாட்டி), இளையர், விருந்தினர் ஆகிய நால்வரும் இடம் பெற்றுள்ளனர்.

**ஒப்பு**

அகப்பொருள் மாந்தரைப் பற்றியும் அவரது கூற்றின் தன்மை பற்றியும் கேட்போர் குறித்தும் விளக்கிய **தொல்காப்பியம்** சிறப்பு நிலையில் அகத்தலைவன் தலைவிக்குரிய ஒப்புக்களாகப் பத்தைச் சுட்டுகின்றது.

பிறப்பே குடிமை ஆண்மை யாண்டோ
டுருவு நிறுத்த காம வாயில்
நிறையே யருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே[44]

என்ற நூற்பா காமக்கூட்டத்தின்கண் எதிர்ப்படும் தலைவன் தலைவிக்குரிய தகுதிகளை வரையறுக்கின்றது; தலைமகன் இப் பண்புகளுள் மிக்கவனாயினும் கடியப்படாது.[45]

**தலைமக்கட்கு ஆகாதன**

அழுக்காறு, கொடுமை, வியப்பு, புறங்கூறுதல், கடுஞ்சொற் கூறல், பொச்சாப்பு, முயற்சின்மை, தன் குலத்தினானுந் தன்குடிப் பிறப்பினாலும் தம்மை மதித்து இன்புறல், ஏழைமை, மறப்பு, ஒப்புமை ஆகிய குணங்கள் தலைமக்கட்கு இல்லையாதல் வேண்டும்''[46] என்பது **தொல்காப்பியம்** காட்டும் தலைமக்கட்காகாத குணங்களாகும்.

**தலைவனுக்குரியன**

தலைவன் தலைவிக்குரிய பொதுப்பண்புகள் பற்றிக் கூறிய தொல்காப்பியர் அவர்களுக்குக் கூற்று நிலையில் காணும் சிறப்புக் கிளவிகளையும் எடுத்துரைக்கின்றார்.

**ஐயக்கிளவி**

தலைவியைக் கண்டு ஐயப்படுவதாக அமையும் கூற்று தலைவனுக்கு மட்டுமே உரியது.[47] 'தலைமகள் ஐயப்படாதது என்னையெனின் அவள் ஐயப்பாடுங்கால் 'தெய்வமோ' என்று ஐயுறல் வேண்டும். அவ்வாறு ஐயுற்றால் அச்சம் வரும். அஃது ஏதுவாகக் காமநிகழ்ச்சி யுண்டாகாது' என்பர் இளம்பூரணர்.

**தற்புகழ் கிளவி**

வினைவயிற் பிரியும் தலைவன் தன்னைத் தலைவி முன் புகழுங் கூற்று அமையும்.

கிழவி முன்னர்த் தற்புகழ் கிளவி
கிழ வோன் வினைவயின் உரிய என்ப[48]

என்பது நூற்பா.

**நலம் பாராட்டல்**

களவுக்காலத்து நலம்பாராட்டிய தலைவன் கற்புக்காலத்தும் வேட்கை மிகுதியால் தலைவியின் எழிலைப் பாராட்டுதலும் உண்டு.

நிகழ்தகை மருங்கின் வேட்கை மிகுதியிற்
புகழ்தகை வரையார் கற்பினுள்ளே[49]

என்பது நூற்பா.

**பணிந்த கிளவி**

காமம் மிக்க நிலையில் பணிந்து கூறும் கற்று தலைவனுக்குரியது.

காமக் கடப்பினுட் பணிந்த கிளவி
காணுங் காலைக் கிழவோர் குரித்தே
வழிபடு கிழமை அவட்கிய லான[50]

தவறு சிறிதாகிய இடத்துப் புலப்பதும், பெரிதாகிய இடத்துப் பணிவதும் நிகழும்[51] என்பர் நச்சினார்க்கினியர்.

மனைவி உயர்வுங் கிழவோன் பணிவும்
நினையுங் காலைப் புலவியுள் உரிய[52]

என்ற நூற்பா ஈண்டு நினைவுகூரத்தக்கது.

**துறந்த ஒழுக்கமின்மை**

களவொழுக்கத்தில் தலைவியைத் தலையளி செய்ய வேண்டியது தலைவன் கடமை; அந்நேரத்தில் முகுர்த்தமும் நாளும் பார்த்துத் தலைவியைத் துறந்து ஒழுகும் ஒழுக்கம் தலைவற்கில்லை.[53]

**பிரிவு**

தொல்காப்பியர் தலைவனுக்குரிய பிரிவுகளாக ஓதற்பிரிவு, பகைவயிற் பிரிவு, தூதிற் பிரிவு, பொருள்வயிற் பிரிவு, பரத்தையிற் பிரிவு ஆகிய ஐந்தைச் சுட்டுகின்றார்.

ஓதல் பகையே தூதிவை பிரிவே[54]
பொருள்வயின் பிரிதலும் அவர்வயின் உரித்தே[55]
பரத்தைவாயில் நால்வர்க்கும் உரித்தே
நிலத்திரி பின்றஃ தென்மனார் புலவர்[56]

இவற்றுள் ஓதற் பிரிவு மூன்றாண்டுக்கு மேல் மிகாது; பரத்தையிற் பிரிவு நீங்கலாக ஏனைய மூன்றும் ஓர் ஆண்டு ஆகும்.[57]

**வரையாது பிரிதல் இல்லை**

களவு வெளிப்படுதல் கற்பினோடு ஒப்பினும் ஓதல், பகை, தூது ஆகிய மூன்றின் காரணமாகப் பிரியும் தலைவன், தலைவியை வரையாது பிரிதல் இல்லை.[58]

**கடற்செலவு தலைவியுடன் இல்லை**

கலத்திற் பிரிவின் போது தலைவன் தலைவியை அழைத்துச் செல்வதாக அக இலக்கியம் இயற்றும் மரபு இல்லை. இதனை,

முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை[59]

என்ற நூற்பாவால் அறியலாம்.

**பாசறைப் பிரிவு**

மாற்றாரைப் வெல்லுங் கருத்துடையனவாய்ப் பாசறைக்கண் தலைமகன் வீற்றிருக்குங் காலத்து, அத்தலைவன் தலைமகளோடு புணர மாட்டான்; அங்ஙனம் செய்யுள் செய்தல் மரபு இல்லை.

எண்ணரும் பாசறைப் பெண்ணொடும் புணரார்[60]

இதற்குப் புறனடையாக,

புறத்தோ ராங்கண் புணர்வ தாகும்[61]

என்ற நூற்பா உள்ளது. இதற்கு இளம்பூரணர் பாசறைக்கண் புறப்பெண்டிர் புணர்ச்சி பொருந்தும் என்று உரையெழுதியுள்ளார்; நச்சினார்க்கினியர் 'புறத்தோராங்கன் புரைவதென்ப' எனப் பாடங்கொண்டு 'அவரைப் பெண்ணொடு புணர்த்துப் புலனெறி வழக்கம் செய்தல் பொருந்துவது' என்று கூறுவர்,

**பூப்பில் பிரியாமை**

தலைவன் பரத்தையர் சேரியானாயினும் பூத்தோன்றி மூன்று நாள் கழிந்த பின்பு பன்னிரண்டு நாளும் தலைவியை நீங்குதல் அறமன்று; அது தலைவற்குரிய மரபு இல்லை.

பூப்பின் புறப்பா டீராறு நாளும்
நீத்தகன் றுறையார் என்மனார் புலவர்
பரத்தையிற் பிரிந்த காலை யான[62]

'இதனாற் பயன் என்னையெனின் அது கருத்தோன்றும் காலம் என்க' என்பது இளம்பூரணம்.

**தலைவிக்குரியன**

தலைவிக்குரிய கிளவிகளின் மரபைக் கூறும் தொல்காப்பியம் தலைவிக்குரியவற்றையும், இல்லாதவற்றையும் ஆங்காங்கு எடுத்து மொழிகின்றது.

**அல்ல கூற்றுமொழி**

தலைவன் இயற்கைப் புணர்ச்சி கருதிக் கூறும் மொழிக்கு எதிராகத்தான் வேட்கைக் குறிப்பினளாயினும் அதற்கு உடம்பட்ட நெறியைக் கூறுதல் அருமையுடைத்து ஆதலான் உடம்பாடல்லாத கூற்றுமொழி தலைவிக்குரியது.

சொல்லெதிர் மொழிதல் அருமைத் தாகலின்
அல்ல கூற்று மொழி அவள்வயி னான[66]

என்னும் நூற்பா தலைவி புணர்ச்சிக்கு இசைவில்லாதாரைப் போலக் கூறும் மொழிக்குரிய சூழலை விளக்குகின்றது.

**களஞ்சுட்டுக் கிளவி**

இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்பு, தலைவி மீண்டும் தலைவனைக் காணவும் கூடவும் குறியிடம் கூறுவாள். அக்குறி இரவுக்குறி பகற்குறி என இருவகைப்படும்;[64] அவற்றுள் இரவுக்குறி இல்லகத்துள்ளும் பகற்குறி எயிற்புறத்திலும் நிகழும்.[65] அக்குறியிடம் தலைமகள் தான் சேறற்குரிய இடம் என்பதால் களஞ்சுட்டுக் கிளவி தலைவிக்குரியது.[66]

**அல்ல குறிப்படுதல்**

தலைவன் செய்த குறி மயங்கிய பொருத்தத்தொடு வரின் அல்ல குறிப்படுதல் தலைமகட்கு உரியதாகும்.[67]

**துணைச்சுட்டுக் கிளவி**

தலைவி கூறும் கருமம் துணையோராற் செய்யப்படுதலான் துணையைச் சுட்டிக்கூறும் கிளவியும் கிழவிக்குரியதாகும் இதனைப்,

பன்னூறு வகையினுந் தன்வயின் வருஉம்
நன்னய மருங்கின் நாட்டம் வேண்டலில்
துணைச்சுட்டுக் கிளவி கிழவிய தாகுந்
துணையோர் கரும மாத லான[68]

எனும் நூற்பாவால் அறியலாம்.

**வேற்றுமைக் கிளவி**

தலைவனது குறிப்பறிதல் வேண்டியும் தலைவி தன் அகமலிந்த ஊடல் நீங்கும் இடத்தும் வேற்றுமைக் கிளவி தோற்றவும் பெறும்.[69] இதன்வழி,

யாரிவன் என்கூந்தல் கொள்வான்[70]

என்பது போன்ற கூற்று நிகழும் சூழலைத் தொல்காப்பியர் விளக்குகின்றார்.

**பால்கெழு கிளவி**

கேட்பாரின்றித் தலைவி கூற்று நிகழ்த்தும் மரபு உண்டு; இதனை **'ஒரு கூற்றுச் சொல்'** என்பது இளம்பூரணம்.[71]

**தற்புகழ்கிளவி இன்மை**

தலைவன் பரத்தையிற் பிரிந்து வந்தவழி, தலைவியிடம் இரத்தலும் தெளித்தலும் செய்யும்;[72] அந்நேரத்தில் தலைவி தன்னை உயர்த்திக் கூறிப் புகழ்தலுண்டு. அவ்விரண்டு இடம் அல்லாதவழி தலைவி தலைவன் முன் தன்னைப் புகழ்தல் மரபன்று.

தற்புகழ் கிளவி கிழவன்முற் கிளத்தல்
எத்திறத் தானும் கிழத்திக் கில்லை
முற்பட வகுத்த இரண்டலங் கடையே[73]

என்பது அந்நூற்பா.

**கிழவோன் சேர்தல் இன்மை**

பிரிவால் மெலியும் தலைவி தலைவன் பிரிவைத் தன் உறுப்புக்கள் உணர்ந்தன போலப் பொருந்தும் வகையால் கூறவும் பெறும்:[74] எனினும் கிழவோன் இருக்குமிடம் நாடிச் செல்லுதல் இல்லை. இக்கருத்தை,

உடம்பும் உயிரும் வாடியக் கண்ணும்
என்னுற் றனகொல் இவையெனின் அல்லதைக்
கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை[75]

என்னும் நூற்பா உணர்த்துகின்றது. இம்மரபு, தனித்து நெஞ்சோடு உசாவுங்காலத்து மீறப்படுதலும் உண்டு என்பது தொல்காப்பியம்.[76] அதாவது, தலைவி நெஞ்சை விளித்துத் தலைவன் உறைவிடம் நோக்கிச் செல்வோம் எனக் கூறல் மரபாகும்; எனினும் செல்லும் மரபு இல்லை என்பதாம்.

### வேட்கை கிளத்தல் இன்மை

அச்சம், நாணம், மடம் ஆகியன நிரம்பப் பெற்ற தலைவி[77] தனது வேட்கையைத் தலைவன் முன் சொல்லுதல் இல்லை.

தன்னுறு வேட்கை கிழவன்முற் கிளத்தல்
எண்ணுங் காலைக் கிழத்திக் கில்லை
பிறநீர் மாக்களின் அறிய ஆயிடைப்
பெய்ந்நீர் போலும் உணர்விற் றென்ப[78]

என்பது அந்நூற்பா. அங்ஙனம் சொல்லாதவிடத்தும் புதுக்கலத்தின்கண் பெய்த நீர்போலப் புறம்பொசிந்து காட்டும் உணர்வினையுடையது தலைவி வேட்கை. அதாவது தலைவி தனது வேட்கையைக் கூற்றாலன்றிக் குறிப்பால் புலப்படுத்துவாள் என்பது உவமை வழிப் பெறப்படுகின்ற பொருளாகும்.

### வாயில்களுக்குரியன

தலைவன் தலைவிக்குரிய சிறப்புக் கிளவிகள் பற்றி விதந்தோதிய தொல்காப்பியம் வாயில்களுக்குரிய கிளவிகள் சிலவற்றையும் அவற்றிற்குரிய சூழலையும் சுட்டுகின்றது. அவை பின்வருமாறு:

### அன்புதலைப் பிரிந்த கிளவி

எல்லா வாயில்களும் தலைவன்தலைவி ஆகிய இருவர் மாட்டும் மகிழ்ச்சிப்பொருண்மை பற்றிக் கூற்று நிகழ்த்துவர்;[79] அவ்வாறின்றி அன்பு நீங்கிய கிளவி கூறுதலும் உண்டு; அந்நேரத்தில் தலைவன் சிறைப் புறத்தானாக அமைவான். இதனை,

அன்புதலைப் பிரிந்த கிளவி தோன்றின்
சிறைப்புறங் குறித்தன் றென்மனார் புலவர்[80]

என்ற நூற்பாவால் உணரலாம்.

### பயனிலாக் கிளவி

பரத்தை, வாயில் ஆகியோர் கூற்றுகள் தலைமகளைக் குறித்து அமையாவாயின் அவற்றால் பயனில்லை. இதனைப்

பரத்தை வாயில் எனவிரு கூற்றுங்
கிழத்தியைச் சுட்டாக் கிளப்புப் பயனிலவே[81]

என்ற நூற்பா எடுத்துரைக்கிறது; அதாவது தலைவியைச் சுட்டாத பரத்தை கூற்றும் வாயில் கூற்றும் பயனற்றனவாகக் கருதப்பட்டன.

## முன்னிலைப் புறமொழி

'முன்னிலையாக நிற்பாரைக் குறித்துப் பிறனைக் கூறுமாறு போலக் கூறுதல்' முன்னிலைப் புறமொழியாகும் என்பர் உரையாசிரியர். இம்மொழி எல்லா வாயில்கட்கும் உரியது.[82]

## கையறு கிளவி

தலைவி முன்னர்ச் செயலற்றுக் கூறுஞ்சொல் அவளுக்கு உறுதியுள்ள பொழுது வாயில் கட்குண்டு. இதனைப் பின்வரும் நூற்பா காட்டும்.

மினைவி முன்னர்க் கையறு கிளவி
மனைவிக் குறுதி உள்வழி உண்டே[83]

இதனால் தலைவியை ஆற்றுவிக்கும் வாயில்களும் ஆற்றாது இரங்கிக் கூறுதல் உண்டு என்பது புலனாகிறது.

## மெய்ப்பாடு

செய்யுள்ள செய்வார் மெய்ப்பாடு தோன்றச் செய்தல் வேண்டும்; 'யாதானுமொன்றைக் கூறியவழி யதன்கட் பொருண்மையை விசாரித்துணர்தலன்றி அவ்விடத்து வரும் பொருண்மையானே மெய்ப்பாடு தோன்ற முடிப்பது மெய்ப்பாடென்னும் உறுப்பாம்'.[84]

## வகை

செய்யுள் உறுப்புக்களுள் ஒன்றாக மெய்ப்பாட்டைக் கூறுகிறது **தொல்காப்பியம்**. அது, நகை முதலாக உவகை ஈறாக எட்டுவகை மெய்ப்பாட்டைக் குறிப்பிடுகின்றது.

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டாம் மெய்ப்பா டென்ப[85]

என வரையறுத்த **தொல்காப்பியம்** ஒவ்வொன்றிற்கும் உரிய நான்கு பொருண்மைகளைச் சுட்டுகின்றது. ஆக எண்வகை மெய்ப்பாட்டுக்கும் முப்பத்திரண்டு பொருண்மைகளை விரித்துரைக்கின்றது.[86]

> இவ் விலக்கணங் கூத்தினுட் பயன்படல் உண்டாதலின் ஈண்டு வேண்டாவெனின், ஈண்டுஞ் செய்யுட் செய்யுங்காற் சுவைபடச்செய்ய வேண்டுதலின் ஈண்டுங் கூறவேண்டும் என்க.[87]

என மெய்ப்பாட்டின் இன்றியமையாமையையும், அது தொல்காப்பியத்தில் ஓர் இயலாக இடம் பெற்றதற்கான காரணத்தையும் கூறுவர் இளம்பூரணர்.

**அகத்திற்குரிய மெய்ப்பாடு**

அகப்பொருள் இலக்கணக் கோட்பாடுகளை விரிவாகக் கூறுகின்ற தொல்காப்பியர் பெண்பாலார்க்குரிய ஆறு அவத்தைகளை ஆறு நூற்பாக்களில் விளக்குகின்றார். அவையாவன:

புகுமுகம் புரிதல், பொறிநுதல் வியர்த்தல், நகுநய மறைத்தல், சிதைவு பிறர்க்கின்மை—**முதல் அவத்தைக்குரியன;** கூழை விரித்தல், காதொன்று களைதல், ஊழணி தைவரல், உடைபெயர்த்து உடுத்தல்—**இரண்டாம் அவத்தைக்குரியன;** அல்குல் தைவரல், அணிந்தவை திருத்தல், இல்வலியுறுத்தல், இருகையும் எடுத்தல்—**மூன்றாம் அவத்தைக்குரியன;** பாராட்டெடுத்தல், மடந்தப உரைத்தல், ஈரமில் கூற்றம் ஏற்றலர் நாணல், கொடுப்பவை கோடல்—**நான்காம் அவத்தைக்குரியன;** தெரிந்துடம் படுதல், திளைப்பு வினை மறுத்தல், கரந்திடத் தொழில், கண்டவழி யுவத்தல்—**ஐந்தாம் அவத்தைக் குரியன;** புறஞ்செயச் சிதைத்தல், புலம்பித் தோன்றல், கலங்கி மொழிதல், கையற வுரைத்தல்—**ஆறாம் அவத்தைக்குரியன.**[88]

இவையனைத்தும் புணராத வழித்தோன்றுதல் பெரும்பான்மை என்பது இளம்பூரணர் கருத்து. அவர் ஏனைய மூன்று அவத்தைகளைத் தொல்காப்பியர் கூறாததற்கான காரணத்தைப் பின்வருமாறு மொழிவர்.

> ஏழாமவத்தை நாண் நீங்கிய காதலிற்றேறுத-
> லொழிந்த காமத்து மிகுதியாகிய பெருந்திணைப்
> பாற்படும்; ஒத்த காமத்து நிகழாது;
> எட்டாவது உன்மத்தம்; ஒன்பதாவது மயக்கம்;
> பத்தாவது சாக்காடு; ஆதலான்
> நடுவணைந்திணைக்கண்
> வருவன ஆறு எனக் கூறினார் என்று கொள்க'[89]

இவை தவிர இன்பத்தை வெறுத்தல் முதலாகக் கலக்கம் ஈறாக இருவகைக் கைகோளுக்குரிய சில மெய்ப்பாடுகளையும், முட்டுவயிற்

கழறல் முதலான வரைவுக்கு நிமித்தமான மெய்ப்பாடுகளையும் அழிவில் கூட்டத்திற்குரிய பொருண்மைகளையும் தொல்காப்பியம் கூறுகின்றது.[90]

தொல்காப்பியத்தின் நோக்கம் அதன்வழி அறியலாகும் செய்யுள் உறுப்புக்கள், அகப்பொருள் இலக்கிய மரபுகள், திணை, கைகோள், துறை, கூற்றுக்குரியர், கேட்போர், மெய்ப்பாடு ஆகியன பற்றிய அக இலக்கியக் கோட்பாடு என்பன போன்றவை இதுவரை விளக்கப்பட்டன. இவற்றின் வளர்ச்சி, திரிபு, நெகிழ்ச்சி, மாற்றம் போன்றவற்றை பின்வரும் அக இலக்கண நூல்களின் வழி இனி அறியலாம்.

## இறையனார் அகப்பொருள்

**இறையனாரகப்பொருள்** அல்லது **களவியல்** என்று அழைக்கப் படும் இந்நூல் களவு கற்பு ஆகிய இருவகைக் கைகோளுக்குமுரிய சில இலக்கண மரபுகளை அறுபது சூத்திரங்களில் கூறுகின்றது.

**தொல்கரப்பியம்** தோன்றி மிக நீண்ட கால இடைவெளிக்குப்பின் (ஏறக்குறைய 12 நூற்றாண்டுகள்) கிடைத்த **இறையனாரகப் பொருள்** அகத்திற்கு மட்டும் இலக்கணம் கூறுவதாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இந்நூல் தொல்காப்பியர் அகம் புறம் ஆகிய இரண்டுக்கும் பொதுவாகக் குறித்த செய்யுள் உறுப் பினை அகனைந்திணைக்கு மட்டும் உரியதாக்கிக் கைக்கிளை, பெருந் திணை ஆகிய இரண்டையும் விடுத்துள்ளது. இதனைத்,

திணையே கைகோள் கூற்றே கேட்போர்
இடனே கால எச்சம் மெய்ப்பாடு
பயனே கோளென் றாங்கப் பத்தே
அகனைந் திணையும் உரைத்தல் ஆறே[91]

என்ற நூற்பா நுவல்கின்றது. இவற்றுள் தொல்காப்பியர் குறித்த 'முன்னம்' என்பதற்குப் பதிலாகக் 'கோள்' இடம் பெற்றுள்ளது. இதன் வழி தொல்காப்பியர் விரித்த அகத்திணை புறத்திணை ஆகிய வற்றில் எழுதிணைகளுக்கும் உரிய செய்யுளுறுப்புக்களுள் சில, களவி யலார் காலத்தில் பொருள் சுருக்கம் பெற்று அன்பின் ஐந்திணையை மட்டும் குறிக்கத் தொடங்கிய நிலையை அறியலாம்.

### திணை

களவியலில் இடம் பெற்றுள்ள நூற்பாக்களில் அகனைந்திணைக் குரிய செய்திகள் மட்டும் உள்ளன. இந்நூல்,

அன்பின் ஐந்திணைக் களவெனப் படுவது
அந்தணர் அருமறை மன்றல் எட்டினுள்
கந்தருவ வழக்கம் என்மனார் புலவர்[92]

என அகனைந்திணையைக் கந்தருவ வழக்கோடு பொருத்திக் காட்டு கின்றது. தொல்காப்பியத்தைப் பின்பற்றி உரைப்பகுதி உள்ளது. கருப்பொருள் பற்றிய விரிவான செய்தி காணப்படுகின்றது.[93]

**கைகோள்**

இந்நூல், வரைதலைக் களவு வெளிப்படா முன் வரைதல், களவு வெளிப்பட்டபின் வரைதல் என இருவகைப்படுத்தும். இதற்கு 'அறத்தொடு நிலை நிகழா முன் வரைதல்........அறத்தொடு நிலை நிகழ்ந்த பின்றை வரைதல்'[94] என உரைவகுத்துள்ளார் நக்கீரர். அதன்வழி நோக்கின் அறத்தொடு நிற்றல் வரை நிகழ்வன களவிற் குரியன; அதன்பின் நிகழ்வன கற்பிற்குரியன என்பது பெறப்படும். மேலும் இந்நூல்,

> களவினுள் தவிர்ச்சி வரைவின் நீட்டம்
> திங்கள் இரண்டின் அகமென மொழிப[95]

எனச் சொல்லி, களவுக்குரிய காலம் இரண்டு மாதம் என்று வரை யறுக்கின்றது. அதாவது களவினுள் தங்கி ஒழுகும் வரைவை நீட்டிக்கும் காலமும் இரண்டு திங்கள் வரை ஆகும்.

**துறை**

காமப்புணர்ச்சி, பாங்கற் கூட்டம், இடந்தலைப்பாடு, இரந்து பின்னிற்றல், சேட்படை, ஒருவழித்தணத்தல், அறத்தொடு நிற்றல், வரைவு கடாதல் ஆகிய கிளவித் தொகைகளையும்,[96] சில இடங் களில் அவற்றிற்குரிய துறைகளையும்[97] சுருக்கமாகக் குறிப்பிடு கின்றது களவியல்.

**அகமாந்தர்கள்**

இறையனாரகப் பொருளில் அகமாந்தர்கள் பற்றிய விரிவான இலக்கணக் கோட்பாடு இல்லை. தொல்காப்பியத்தைப் போன்று இயல் பாகுபாடு, இலக்கணம் இயம்பும் முறைமை, மாந்தர் பற்றிய ஆய்வு, இலக்கிய மரபு பற்றிய வரையறை என்பன போன்ற செய்திகள் இந்நூலில் இல்லை. கிழவன், கிழத்தி, தோழி, தாய், தந்தை, பரத்தை, வாயில் ஆகியோர் மட்டும் துறைக்குரிய கிளவித் தொகைகளையும், அவர்களது கூற்றுக்குரிய மரபுகளையும் காட்டும் போது ஆங்காங்கு சுட்டப் பெறுகின்றனர்.[98]

தலைவன் தலைவி வாயில் ஆகியோருக்குரிய சில கூற்று மரபு களையும், கூற்றுக்குரிமை இல்லாதவரையும் தொல்காப்பியத்தை யொட்டி இந்நூல் விரித்துக் கூறுகிறது; கேட்போர் பற்றிய ஆராய்ச்சி ஓரிடத்தில் மட்டும் இடம் பெற்றுள்ளது.

**கிழவோர்க்குரியன**

**புகழும் கொடுமையும்**

தலைமகள் மாட்டு உறைந்தக்கால் தக்கான் எனப்படுதலும், பரத்தையர் மாட்டு உறைந்தக்கால் தகான் எனப்படுதலும் தலைமகன் கண்ணதாகும். இதனைப்,

புகழுங் கொடுமையும் கிழவோன் மேன [99]

என்ற நூற்பா உணர்த்தும்.

**புலத்தல்**

உணர்ப்புவயின் வாரா ஊடல் தோன்றிற்
புலத்தல் தானே கிழவற்கும் வரையார் [100]

என்ற நூற்பா தலைமகளுக்குரிய தன்மை சில நேரங்களில் தலைமகனிடம் காணப்படுவதற்கான சூழலைக் காட்டும். அதாவது உணர்த்துதற்கு இடம் வாரா ஊடல் தலைமகட்கு வெளிப்பட்டு நிற்பின் புலந்து சொல்லுதல் தலைமகனுக்கும் உண்டு என்பதாம்.

**பிரிவு**

**தொல்காப்பியம்** தலைவனுக்குரிய பிரிவுகளாக ஐந்தைச் சுட்ட, களவியல் அவற்றோடு காவற்பிரிவையும் கூட்டி ஆறு பிரிவுகளாகக் காட்டும். [101]

பிரிவு வகை
- ஓதற் பிரிவு
- காவற் பிரிவு
- பகைதணிவினைப் பிரிவு
- வேந்தர்க்குற்றுழிப் பிரிவு
- பொருட்பிணிப் பிரிவு
- பரத்தையிற் பிரிவு

மேலனவற்றுள் ஓதலும் காவலும் உயர்ந்தோர்க்கும், வேந்துவினை இயற்கை பார்ப்பார்க்கும் அரசர் அல்லாத ஏனையோர்க்கும், வேந்தர்க்கு உற்றுழிப் பிரிவும் பொருள்வயிற் பிரிவும் **இழிந்தோர்க்கும்** உரியன; பரத்தையிற் பிரிவு எல்லோர்க்கும் உரியது. [102]

தொல்காப்பியர் புலனெறி வழக்கம் செய்யப் பத்துவகை ஒப்புடைய தலைமக்களைக் காட்டும்; அவ்வாறிருக்க, களவியல் தோரைப் பிரிவுக்குரியராகக் காட்டுவது ஆராய்தற்குரியது.

மேற்காணும் பிரிவினுள் நிலம் பெயர்ந்து உறையும் பிரிவுக்கு ஆண்டு வரையறுத்துப் பிரிதல் உரியதாகும்;[103] பரத்தையிற் பிரிவு தவிர்ந்த ஏனைய பிரிவுகள் தலைமகளும் தோழியும் அறியவும் நிகழும்; அறியாமலும் நிகழும்.

நிலம்பெயர்ந் துறையும் எல்லாப் பிரிவும்
ஒழிந்தோர் அறியவும் அறியா மையும்
கழிந்துசேட் படூஉம் இயற்கைய என்ப[104]

என்னும் நூற்பா நிலம்பெயர்ந்துறையும் தலைவன் பிரியும் முறை பற்றி விளக்கும்.

### கிழவோர்க்கு இல்லாதன

புலவரால் படைத்துக் கொள்ளப்பட்ட தலைமகன் தலைவியைச் சந்திக்கச் செல்லும் வழி இடையூறுகள் நிறைந்தது; புலியானும் யானையானும் ஏதம் உண்டாகும் என அஞ்சுதல்; தன் கண் துன்பம் வந்தவிடத்து எனக்கு ஆகாதோர் ஒழுக்கம் எடுத்துக் கொண்டேன் எனக் கூறல் இல்லை. இதனை,

ஆறின் னாமையும் ஊறும் அச்சமும்
தன்னை அறிதலும் கிழவோற் கில்லை[105]

என்ற நூற்பா உணர்த்தும். 'கிழவோற்கில்லை எனவே கிழத்திக்கும் தோழிக்கும் அவையுள என்பது பெற்றாம்' என்பர் நக்கீரர்.

### கிழத்திக்கு இல்லாதன

தொல்காப்பியர் தலைவிக்குரிய கிளவிகளையும் இல்லாதவற்றையும் விரிவாகக் காட்டியுள்ளார்.

இரவுமனை இகந்த குறியிடத் தல்லது
கிழவோர் சேர்தல் கிழத்திக் கில்லை[106]

என்ற நூற்பா தலைவி தலைவனைச் சேரும் எல்லையை வரையறுக்கின்றது.

கொடுமை இல்லைக் கிழவி மேற்றே[107]

எனும் நூற்பா தக்காள் தகாள் எனச் சொல்லப்படாத தலைவியைக் காட்டுகின்றது.

### வாயில்கள்

எல்லா வாயில்களும் தலைமகன் பிரிவின்கண் தலைவியை ஆற்றுவித்தலை நோக்கமாக உடையன; அவை அன்புதலைப் பிரிந்த கிளவி கூறின் தலைவன் சிறைப்புறத்தானாக நிற்பான்.

எல்லா வாயிலும் கிழவோன் பிரிவயின்
பல்லாற் றானும் வன்புறை குறித்தன்று

வன்புறை குறித்த வாயில் எல்லாம்
அன்புதலைப் பிரிந்த கிளவி தோன்றிற்
சிறைப்புறங் குறித்தன் றென்மனார் புலவர்.[108]

ஆகிய நூற்பாக்கள் **தொல்காப்பியம்** *(176-177)* காட்டும் வாயில்கள் மரபைப் போற்றுகின்றன. எனவே வாயில்கள் பற்றிய மரபில் இரு நூல்களுக்கும் இடையே வேறுபாடு இல்லை.

**கேட்போர்**

தந்தை தன்னையர் ஆகியோர் தலைவியின் களவு வாழ்வைக் குறிப்பால் உணர்ந்து கொள்வர். இதனைத்,

தந்தை தன்னையர் ஆயிரு வீற்றும்
முன்னம் அல்லது கூற்றவண் இல்லை[109]

என்ற நூற்பா உணர்த்தும் தொல்காப்பியர் (நூற்: 40) கோட்பாட்டைக் களவியலும் பின்பற்றியுள்ளது என்பது ஈண்டு நினைவு கூரத்தக்கது.

இங்ஙனம் **இறையனாரகப்பொருள்** அகனைந்திணைக்குரிய செய்திகளைச் சுருங்கிய அளவில் கூறுகின்றது; கைக்கிளை பெருந்திணை ஆகிய இரண்டும் இடம் பெறாததால் அந்நூல் உரைக்கும் அகப்பாட்டுறுப்புகள் அனைத்தும் அன்பிணைந்துக்கு மட்டும் உரியதாகின்றன; கூற்று மரபு, துறை போன்றவற்றில் தொல்காப்பிய மரபைப் பின்பற்றியுள்ளது; களவுக்குரிய காலத்தையும், தலைவி சேறற்குரிய இட எல்லையையும் இந்நூல் இலக்கணப் படுத்தியுள்ளது.

இனி, இதனை அடுத்துத் தோன்றியதாகக் கிடைக்கும் **புறப்பொருள் வெண்பாமாலை,** புறப்பொருள் நூலெனினும் கைக்கிளை பெருந்திணை தொடர்பான செய்திகளைப் புற இலக்கணத்தில் இலக்கணப் படுத்தியிருப்பதால் அவை பற்றிக் காண்பது வரலாற்று நோக்கில் பயன் விளைவதாகும்.

## புறப்பொருள் வெண்பாமாலை

இந்நூலின் ஆசிரியர் ஐயனாரிதனார் புறப்பொருளுக்கு மட்டும் இலக்கணம் கூறுகின்றார்; அவர் புறப்பொருளைப் பன்னிரண்டு படலங்களாகப் பிரித்து, அவற்றை முறையே புறம், புறப்புறம், அகப்புறம் என்னும் மூன்றனுள் தொகைப்படுத்துகிறார்.

புறப்பொருள்

| புறம் | புறப்புறம் | அகப்புறம் |
|---|---|---|
| வெட்சி | வாகை | கைக்கிளை |
| கரந்தை | பாடாண் | பெருந்திணை |
| வஞ்சி | பொதுவியல் | |
| காஞ்சி | | |
| உழிஞை | | |
| நொச்சி | | |
| தும்பை | | |

மேலனவற்றுள் கைக்கிளை பெருந்திணை ஆகிய இரண்டும் தொல் காப்பியரால் அகப்பொருளில் குறிப்பிடப் பெற்றவை. களவியல் இவ்விரண்டையும் நீக்கி இலக்கணம் செய்ய, இந்நூல் அதனைப் புறத்திலேயே இணைத்து விட்டது. இவ்விரு நூல்களுக்கு இடைப் பட்ட காலத்தில் ஏற்பட்ட இலக்கண இலக்கிய வரலாறு அறியாமல் இம்மாற்றத்திற்கான காரணத்தையும் கண்டறிய முடியாது.

மேலும் இந்நூல் அகப்புறத்திணைகளையும் துறைகளையும் பின்வருமாறு வகைப்பாடு செய்கின்றது.

## கைக்கிளை

| ஆண்பாற் கூற்றுக் கைக்கிளை[110] | பெண்பாற் கூற்றுக் கைக்கிளை[111] |
|---|---|
| 1. காட்சி | 1. காண்டல் |
| 2. ஐயம் | 2. நயத்தல் |
| 3. துணிவு | 3. உட்கோள் |
| 4. உட்கோள் | 4. மெலிதல் |
| 5. பயந்தோர்ப் பழிச்சல் | 5. மெலிவொடு வைகல் |
| 6. நலம் பாராட்டல் | 6. காண்டல் வலித்தல் |
| 7. நயப்புற்றிரங்கல் | 7. பகல் முனிவுரைத்தல் |
| 8, புனரா இரக்கம் | 8. இரவு நீடு பருவரல் |
| 9. வெளிப்பட இரத்தல் | 9. கனவின் அரற்றல் |
| | 10. நெஞ்சொடு மெலிதல் |

தொல்காப்பியர் கைக்கிளையைத் தலைவனுக்கு உரியதாக்க ஐயனாரிதனார் பெண்ணுக்கும் கைக்கிளைப் பொருண்மையை உரியதாக்கித் தலைவியைக் கூற்றுக்குரியவளாக்கியுள்ளார். இது குறிப்பிடத்தக்க மாற்றமாகும்.

## பெருந்திணை

| பெண்பாற் கூற்றுப் பெருந்திணை[112] | இருபாற் பெருந்திணை[118] |
|---|---|
| 1. வேட்கை முந்துறுத்தல் | 1. செலவழுங்கல் |
| 2. பின்னிலை முயறல் | 2. மடலூர்தல் |
| 3. பிரிவிடை அரற்றல் | 3. தூதிடையாடல் |
| 4. வரவெதிர்ந்து இருத்தல் | 4. துயரவற் குரைத்தல் |
| 5. வாராமைக்கு அழிதல் | 5. கண்டுகை சோர்தல் |
| 6. இரவுத்தலைச் சேறல் | 6. பருவ மயங்கல் |
| 7. இல்லவை நகுதல் | 7. ஆண்பாற் கிளவி |
| 8. புலவியுட் புலம்பல் | 8. பெண்பாற் கிளவி |
| 9. பொழுது கண்டு இரங்கல் | 9. வெறியாட்டு |
| 10. பரத்தையை ஏசல் | 10. பாண் வரைவுரைத்தல் |
| 11. கண்டுகண் சிவத்தல் | 11. பரத்தை கூறல் |
| 12. காதலிற் களித்தல் | 12. விறலி கேட்பத் தோழி கூறல் |
| 13. கொண்டகம் புகுதல் | 13. விறலி தோழிக்கு விளம்பல் |
| 14. கூட்டத்துக் குழைதல் | 14. பரத்தை வாயில் பாங்கி கண்டுரைத்தல் |
| 15. ஊடலுள் நெகிழ்தல் | 15. பிறர்மனைத் துயின்றமை விறலி கூறல் |
| 16. உரைகேட்டு நயத்தல் | 16. குற்றிசை |
| 17. பாடகச்சீறடி பணிந்து இரங்கல் | 17. குறுங்கலி |
| 18. பள்ளிமிசைத் தொடர்தல் | |
| 19. செல்கென விடுத்தல் | |

பெருந்திணைத் துறைகளுள் 'வேட்கை, முந்துறுத்தல், தூதிடையாடல், குற்றிசை,* குறுங்கலி* ஆகியவை மரபிலிருந்து விலகியுள்ளன. இவை போன்ற துறைகள் மரபின் பிறழ்ச்சியைக் காட்டுகின்றன.

இந்த அகப்புறப் பெருந்திணை கைக்கிளை நீங்கலாகப் பாடாண் படலத்துள் கைக்கிளை பெருந்திணைக்குரிய குறிப்பும் கொளுவும் உள்ளன. அவை:

தண்டாக் காதல் தளரியல் தலைவன்
வண்தார் விரும்பிய வகையுரைத் தன்று[114]
பெய்கழற் பெருந்தகை பேணா முயக்கிவர்ந்து
மல்கிருட் செல்வோள் வகையுரைத் தன்று[115]

இங்ஙனம் அன்புடையாள் ஒருத்தி ஒரு தலைவனது மாலையை விரும்புதல் கைக்கிளை என்றும், தன்னை விரும்பாத தலைவன் ஒருவனைத் தான் தழுவ விரும்பி இருளிலே அவனிருக்குமிடம் நாடிச் செல்லுதல் பெருந்திணை என்றும் மொழிகின்றது.

மேலும் பொதுவியற் படலம் அகப்பொருள் காட்டும் முல்லையினின்றும் வேறுபட்டனவாக, கார்முல்லை, தேர்முல்லை, நாண் முல்லை, இல்லாள் முல்லை, பகட்டு முல்லை, பால் முல்லை, கற்பு முல்லை ஆகியனவற்றைச் சுட்டுகின்றன.[116]

புறப்புற வகையுள் அடங்கும் பாடாண் படலத்துள் கைக்கிளை பெருந்திணை பற்றி விளக்கம் செய்கின்றார். இவை தவிரப் பொதுவியற் படலத்துள் முல்லைத்திணையோடு தொடர்புடைய சில துறைகளை வகைப்படுத்தியுள்ளார்.

ஆக, கைக்கிளை, பெருந்திணைகளைப் பொறுத்தவரை இரண்டு வகை நிலைகள் காணப்படுகின்றன. அவற்றைப் பொருண்மை அடிப்படையில் நோக்கும் போது அகப்புறத்தில் உள்ள கைக்கிளை பெருந்திணைத் துறைகள் அகப்பொருளுக்குரியனவாக உள்ளன. பிறகு ஏன் அதைப் புறப்பொருள் இலக்கணத்துள் இயம்பினார் என்பது தெளிவான இலக்கண இலக்கிய வரலாறு இன்மையால் புலப்படவில்லை. பொதுவியற் படலத்தில் இடம் பெற்றுள்ள கைக்கிளை, பெருந்திணை புறத்தில் இணைத்துக் கூறத்தக்கனவாக உள்ளன.

---

* **குற்றிசை** : தலைவன் தலைவியோடு கடைபோக வாழாது இடையே கைவிட்டது

* **குறுங்கலி** : தலைவன் தலைவியை அறவே கைவிட்டுப் பிற மகளிரை விரும்புதற்கு அவன் நெஞ்சத்தே மாறு பட்டெழுந்த காமவேட்கை கெடும்படி கூறியது.

இந்நூலுக்கு முதல் நூலாகக் கருதப்படும் **பன்னிரு படலம்** முழுமையாகக் கிடைக்கவில்லை; இந்நூலின் பொருண்மையை அறிய இந்நூலுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய தொல்காப்பியப் புறத்திணையை உரையாசிரியர் நாடுகின்றனர். எனவே நூல் நுவல் பொருளுக்கான காலச்சூழலையும் மரபு நெகிழ்ச்சியையும் அறிய முடியவில்லை.

> இதற்கு முதனூலாகிய பன்னிரு படலச் சூத்திரங்களும் சில யாப்பெருங்கல விருத்தியுரை, இலக்கண விளக்கவுரை முதலிய பழையவுரைகளில் ஆங்காங்குக் காணப்படுகின்றனவேயன்றி, அந்நூல் முழுவதும் இக்காலத்து அகப்படாமையால் இதிலுள்ள சில திணைகளின் இலக்கணமும் துறைப்பெயர்கள் பலவற்றின் பொருட்காரணமும் புலப்படவில்லை; இந்நூலுரையாலும் அவை விளங்கவில்லை. ஆயினும் தொல்காப்பியம் புறத்திணையியற்குரிய உரைகளால் அவற்றுட் பெரும்பாலன நன்கு விளங்குகின்றன[117]

என்பர் உ. வே. சாமிநாதையர், நூலின் திணை, துறை, கூற்று நிலை போன்றவற்றை நோக்கும்போது அவரது கூற்று, பொருத்தமாக உள்ளதை உணரலாம்.

அக இலக்கண வரலாற்றில் புறப்பொருள் வெண்பாமாலை சமுதாய மாற்றம், இலக்கண மரபின் திரிபு, மாற்றம், வளர்ச்சி போன்றவற்றைப் புலப்படுத்துவதாகக் காணப்படுகின்றது.

தொல்காப்பியர் செய்யுளியலில் காட்டிய சில இலக்கிய வகைகள் (நூ. ள். 32, 83..) போன்று ஐயனாரிதனார் பல இலக்கிய வகைகள் (படலம். 9, 50, 51) பற்றி விரித்துக் கூறியுள்ளார். அவை வளர்ச்சி பெற்ற பல இலக்கியங்களின் மரபு நிலையைக் காட்டுகின்றன. இலக்கியங்கள் வகை பற்றிக் கூறும் பாட்டியல் போன்று புறப்பொருள் வெண்பாமாலையும் பல்வேறு இலக்கியச் செய்திகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அவை ஒவ்வொன்றும் நுணுகி வரலாற்றுப் பின்னணியோடு ஆராயத்தக்கவை.

## தமிழ்நெறி விளக்கம்

இந்நூல் முழுதும் கிடைக்கவில்லை; இருபத்தைந்து நூற்பாக்கள் மட்டும் கிடைத்துள்ளதால் நூலின் நுவல்பொருளை முழுமையாக உணர முடியவில்லை.

இந்நூல் பொருப்பு, வெம்பரல், புறவு, பழனம், வாரி என ஐந்திணைக்குரிய நிலத்தைக் காட்டுகிறது; முருகன், இரவி, மாயன், வேந்தன், வருணன் என அவற்றிற்குரிய கடவுளரைச் சுட்டுகிறது; கருப்பொருளில் மக்கட்பெயர் பற்றி மட்டும் குறிப்பிடுகிறது.[118] பொருளை அகம், புறம், அகப்புறம் என மூவகைப் படுத்துகிறது.[119] கிடைத்துள்ள நூலின் பகுதியை மட்டும் கொண்டு இந்நூல் ஐந்திணை பற்றியது என்று முடிவு செய்ய முடியாது; காரணம் அகப்புறப் பாகுபாட்டினுள் கைக்கிளை பெருந்திணை பற்றிய அகப்பொருள் தொடர்பான செய்திகள் இருக்க வாய்ப்புண்டு.

கைகோள் ஐந்திணைக்குரியதாக்கி அவற்றிற்குரிய கிளவித் தொகைகளைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்துகின்றது **தமிழ்நெறி விளக்கம்.**

## கைகோள்

| 1. *களவு*[120] | | 2. *கற்பு*[121] | |
|---|---|---|---|
| **துறைகள்** | | **துறைகள்** | |
| 1. இயற்கைப் புணர்ச்சி | (7) | 1. அறத்தொடு நிலை | (17) |
| 2. பாங்கற்கூட்டம் | (12) | 2. உடன்செலவு | (15) |
| 3. தோழியிற் கூட்டம் பகற்குறி | (32) | 3. சேயிடைப் பிரிவி | (14) |
| 4. தோழியிற் கூட்டம் இரவுக்குறி | (15) | 4. ஆயிடைப் பிரிவு (பரத்தையிற்பிரிவு | (8) |
| 5. வரைவு கடாதல் | (8) | | |
| 6 உடன்போக்கு வலித்தல் | (7) | | |

**தொல்காப்பியம்** பாங்கியிற் கூட்டத்தோடு களவை முடித்து, களவு வெளிப்பாடு முதல் நிகழ்வனவற்றைக் கற்பில் தொடங்குகின்றது; **இறையனார் அகப்பொருள்** அகனைந்திணை உறுப்பாகக் கைகோளைச் சுட்டுகிறது (சூ. 56). தவிர, சிறப்பாகக் கைகோளுக் குரிய துறைகளை வரையறை செய்யவில்லை. பொதுநிலையில் களவு வெளிப்படா முன் வரைதல், களவு வெளிப்பட்ட பின் விரைதல் (சூ. 24) எனப் பாகுபடுத்தி களவு வெளிப்பட்ட பின் தலைவன் வரையாது பிரியும் பொருள் வயிற் பிரிவும், ஒருவழித் தணத்தலும் கற்பிற்குரியது (சூ. 25) என்கின்றது; புறப்பொருள் வெண்பா மாலையில் கைக்கிளை, பெருந்திணை பற்றிய செய்தியிருப்பினும் கைகோள் பற்றியக் இலக்கணக் குறிப்பு ஏதும் இல்லை. **தமிழ்நெறி**

**விளக்கம்** தோழி தலைவியைத் தலைவனிடம் கையடைப்படுத்தலோடு களவினை முடித்து, அறத்தொடு நிலையைக் கற்பின் தொடக்கமாகக் கூறுகின்றது.

கிளவித்தொகை அல்லது துறைப் பெயர் அளவில் களவின் முடிவு, கற்பின் தொடக்கம் ஆகியவற்றில் மாற்றமிருப்பினும், பொருண்மை நிலையில் அடிப்படைக் கொள்கையில் மாற்றம் ஏதுமில்லை. துறையின் கிளவித் தொகைகளின் கீழ் வகைப்படுத்தப் பட்டுள்ளன; களவுக்கு 81 துறைகளும் கற்புக்கு 54 துறைகளும் உள்ளன.

இவை நீங்கலாக அகமாந்தர்கள், கூற்றுக்குரியர், கேட்போர், அகமரபுகள், உத்திகள் போன்றவை இந்நூலுள் கூறப்படவில்லை.

தொல்காப்பியர் துறைகளைப் பட்டியலிடவில்லை; அகமாந்தர் கூற்றுக்குரிய இடங்களில் அவை காணக் கிடக்கின்றன. **இறையனாரகப் பொருள்** கிளவித் தொகைகள் சிலவற்றையும் துறைப் பெயர்கள் பலவற்றையும் ஆங்காங்கே பெய்து வைத்துள்ளது. **புறப்பொருள் வெண்பாமாலை** திணை அடிப்படையில் துறைகளை எடுத்துக்காட்டுகின்றது. **தமிழ்நெறி விளக்கம்** முதன்முதலாகக் கிளவித்தொகை அடிப்படையில் துறைகளைப் பாகுபடுத்தி இலக்கணம் வடித்துள்ளது.

மேற்காட்டிய நூல்களுள் காணப்படும் இம்மாற்றம் கூற்றுக் குரியர் முதன்மை பெற்ற நிலையிலிருந்து சரிந்து, திணைக்கு மாற்றம் பெற்று, துறை முதன்மை பெற்ற நிலையை விளக்கி நிற்கின்றது. இடைவெளியற்ற தொடர்ச்சியான இலக்கண இலக்கிய வரலாறு நமக்குக் கிடைக்கவில்லையெனினும், கிடைத்துள்ள சில இலக்கண நூல்கள் இலக்கிய வரலாற்றில் நிகழ்ந்த மரபு மாற்றத்தினைப் புலப்படுத்தவல்லனவாக உள்ளன என்பதற்குத் **தமிழ்நெறி விளக்கம்** சிறந்த சான்றாகும்.

## வீரசோழியம்

**வீரசோழியம்** புத்தமித்திரனாரால் இயற்றப் பெற்றது; 184 நூற்பாக்களைக் கொண்டது; அவற்றுள் பொருளுக்கு 21 நூற்பாக்கள் உள்ளன; பொருளினினுள்ளும் அகம் பற்றியவை 12 நூற்பாக்கள் (84-95) ஆகும்.

இந்நூல் அகப்பொருள் உரை என இருபத்தேழைக் காட்டுகின்றது.[122] அவை :

1. சட்டகம் (யாப்பு)
2. திணை
3. கைகோள்
4. நடை

5. சுட்டு
6. இடம்
7. கிளவி
8. கேள்வி
9. மொழி
10. கோள்
11. உட்பெறுபொருள்
12. சொற்பொருள்
13. எச்சம்
14. இறைச்சி
15. பயன்
16. குறிப்பு
17. மெய்ப்பாடு
18. காரணம்
19. காலம்
20. கருத்து
21. இயல்பு
22. விளைவு
23. உவமம்
24. இலக்கணம்
25. புடையுரை
26. மொழிசேர் தன்மை
27. பொருளடைவு

மேலும் இவற்றை ஐந்திணைக்கு மட்டுமே இறையனாரகப் பொருளைப் போல உரிதாக்குகின்றது: இதனை,

*முல்லை குறிஞ்சி மருதத்தொடு பாலைநெய்தல் ஐந்தும்*
*சொல்லும் அகமாம் அதனுக்கு உரைதொகு சட்டகமோடு*
எல்லை நிகழும் இருபதொரு ஏழு உள ஏனையவற்று
ஒல்லை நிகழும் உரையும் அறிந்துகொள் ஒண்ணுதலே[123]

எனும் நூற்பா உணர்த்துகின்றது. **தொல்காப்பியம்** செய்யுளுறுப் பெனக் கூறியவற்றைக் களவியலார் அகனைந்திணைக்கு மட்டும் கூறுவர். புத்தமித்தரனார் 'அகம்' என ஐந்திணையை மட்டும் கொண்டு, அகப்பொருள் உறுப்பு எனச் சுட்டாமல் அகப்பொருள் உரை இருபத்தேழு என்று விரித்துள்ளார். மேலும் இவர் ஒவ்வொரு திணைக்குமுரிய முதல் கரு உரி ஆகிய மூன்றையும் ஒவ்வொரு நூற் பாவிலும் குறிப்பிடுகின்றார்.[124]

பொருளை அகம், புறம், அகப்புறம், புறப்புறம் என நால்வகை யாகப் பிரிக்கின்றது **வீரசோழியம்** அவற்றுள் புறம், புறப்புறத்தில் உள்ள திணைகள் புறப்பொருள் வெண்பாமாலையை ஒத்துள்ளன; அகத்தில் அன்பினைந்திணை மட்டும் உள்ளன; அகப்புறத்தில் உள்ள சில துறைகளும் திணைகளும் பின்வருமாறு.[125]

## அகப்புறம்

| | |
|---|---|
| முதுபாலை | குறுங்கலி |
| பாசறை முல்லை | தாபதம் |
| வள்ளி | குற்றிசை |
| சுரநடை | கைக்கிளை |
| இல்லவண் முல்லை | பெருந்திணை |
| காந்தள் | தபுதாரம் |

அக இலக்கண வரலாற்றில் **புறப்பொருள் வெண்பாமாலை** முதலான நூல்களில் காணப்படும் அகப்புறம் என்ற பாகுபாடு தெளிவான மரபை எடுத்துரைப்பதாக இல்லை. இதற்கு வீரசோழியமும் விதிவிலக்கல்ல.

மேற்காட்டியவை தவிரக் கைக்கோள், துறை, கூற்று போன்ற அகப்பொருள் பற்றிய செய்திகள் இந்நூலுள் இடம் பெறவில்லை; மரபு கருதியோ, ஐவகை இலக்கணம் கூற விழைந்ததன் காரணமாகவோ பொருள் பற்றிய செய்திகளை மிகச் சுருக்கமாகக் கூறுகின்றதேயொழிய, வரலாற்று நோக்கில் ஏற்பட்ட வளர்ச்சி நிலையைக் காண, பொருளைப் பொறுத்தமட்டில் விரிவான விளக்கத்தை அளிக்கவில்லை.

## நம்பியகப்பொருள்

தொல்காப்பியத்தைப் போலவே இந்நூலும் ஒரு முழுமையான இலக்கண நூலுக்குரிய அமைப்பினைப் பெற்றுள்ளது. எனினும் சில மாற்றங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

திணையே கைகோள் கூற்றே கேட்போர்
இடனே காலம் பயனே முன்னம்
மெய்ப்பா டெச்சம் பொருள்வகை துறையென்று
அப்பால் ஆறிரண் டகப்பாட் டுறுப்பே[126]

எனப் பன்னிரண்டு அகப்பாட்டுறுப்புக்களை ஏழு திணைகளுக்கும் கூறுகின்றது. தொல்காப்பியர் காட்டிய செய்யுளுறுப்புக்கள் சிலவற்றை எடுத்துக்கொண்டு புறப்பொருளை நீக்கி அகப்பொருளுக்கு மட்டும் உரிய உறுப்புக்களைக் கூறுகின்றது. இறையனாரகப் பொருளும், வீரசோழியமும் ஐந்திணைக்குரிய உறுப்புகளை மட்டும் (கைக்கிளை, பெருந்திணைகளை நீக்கி விட்டு) கூறுவதும் நினைவு கூரத் தக்கது.

### திணை

#### கைக்கிளை

காமஞ் சான்ற இளமை யோள்வயிற்
குறிப்பறி காறுங் குறுகாது நின்று
குறிப்படு நெஞ்சொடு கூற லாகும்[127]

என்று அகத்தில் வரும் கைக்கிளைக்கும்,

காமஞ் சாலா இளமை யோள்வயிற்
குறிப்பறி வுறாது குறுகியாங் கவளோ
டிறப்பக் கூறுவ தகப்புறக் கைக்கிளை[128]

என்று அகப்புறக் கைக்கிளைக்கும் இலக்கணம் வகுக்கின்றது. இவற்றுள் முன்னதற்குரிய விளக்கம் முதன் முதலாக இந்நூலில்தான் காணப்படுகின்றது; பின்னதற்குரிய விளக்கம் தொல்காப்பியர் அகப் பொருளில் கைக்கிளைக்குக் காட்டியதாகும்; எனினும் இப்பாகுபாடு இந்நூலில்தான் முதன்முதலாக அகப்பொருளில் காணப்படுகின்றது.

#### ஐந்திணை

இந்நூல் ஐந்திணையை 'அன்புடைக் காமம்' என்றும் அவற்றிற் குரிய முப்பொருள்கள் பற்றிய விளக்கத்தையும் தொல்காப்பியத் தைப்போலவே விரிந்துரைக்கின்றது;[129] அவற்றிற்குரிய துறைகள் பற்றிக் களவியல், வரைவியல், கற்பியல் ஆகியவற்றில் கூறு கின்றது.

#### பெருந்திணை

பெருந்திணையைப் 'பொருந்தாக் காமம்' என அகத்திணை இயலில் குறிக்கும் நாற்கவிராச நம்பி ஒழிபியலில் அதனை இரு வகைப்படுத்தி அவற்றிற்குரிய துறைகளையும் பின்வருமாறு விரிப்பர்.

## பெருந்திணை

| அகப்பொருட் பெருந்திணை[130] | அகப்புறப் பெருந்திணை[131] |
|---|---|
| அகன்றுழிக் கலங்கல் | மடலேறுதல் |
| மடற்கூற்று | விடைதழால் |
| குறியிடையீடு | குற்றிசை |
| தெளிவிடை விலங்கல் | குறுங்கலி |
| வெறிகோள் வகை | சுரநடை |
| உடன்போக்கு | முதுபாலை |

பூப்பியலுரைத்தல் தாபத நிலை
பொய்ச் சூளுரை தபுதார நிலை
தீர்ப்பில் ஊடல்
போக்கழுங்கியல்பு
பாசறைப் புலம்பல்
பருவ மாறுபடுதல்
வன்புறையெதிர்ந்து மொழிதல்
அன்புறு மனைவியும் தானும்
வனமடைந்து நோற்றல்
பிற

இவற்றுள் அகப்புறப் பெருந்திணையில் இடம் பெற்றவை இயற் பெயர் இன்றி வரின் அகப்புறப் பெருந்திணைக்கும் இயற்பெயர் கூடி வரின் புறப்பொருட் பெருந்திணைக்கும் உரியதாகும் என்பர்.

தொல்காப்பியர் காஞ்சித்திணையில் குறித்த முதுபாலை, தாபதநிலை, தபுதார நிலை ஆகியவை நம்பியகப்பொருளில் அகப் புறப் பெருந்திணையில் இடம் பெற்றுள்ளன. அதே போன்று **புறப் பொருள் வெண்பாமாலை** இருபாற் பெருந்திணையுள் (17) குறித்த குற்றிசை, குறுங்கலி ஆகியவை இந்நூலில் அகப்புறப் பெருந்திணை யில் அமைந்துள்ளன.

எனவே மேற் காண்பனவற்றுள் காணப்படும் துறைகள் சில ஏன் பெருந்திணையில் சேர்க்கப்பட்டன? பெருந்திணை என்பதன் பொருண்மையில் நிகழ்ந்த திரிபா? என்பன போன்ற ஐயங்கள் எழுகின்றன. மடற்கூற்று அகப்பொருட் பெருந்திணையிலும், மடலேறுதல் அகப்புறப் பெருந்திணையுள்ளும் உள்ளன. அதே போன்று குறியிடையீடு உடன்போக்கு ஆகிய துறைகள் அகப் பொருட் பெருந்திணையிலும், 'விடைதழாஅல்' என்ற துறை அகப் புறப்பெருந்திணையிலும் உள்ளன.

தொல்காப்பியர் அன்பின் ஐந்திணைக்குரியனவாகக் காட்டிய துறைகளை நம்பியாசிரியர் எங்ஙனம் அகப்பொருட் பெருந்திணை யுள்ளும், அகப்புறப் பெருந்திணையுள்ளும் கோத்தார் என்பது தெரியவில்லை. மேலும் முல்லைக்கலியுள் சிறப்பிடம் பெற்ற ஏறு தழுவுதல் துறை அகப்புறப் பெருந்திணைக்குள் அடக்கக் காரணம் என்ன? புறப்பொருள் வெண்பாமாலையின் செல்வாக்கா? அகத் திணையிலும் துறையிலும் ஏற்பட்ட மரபின் திரிபுகளா? **வீழ்ச்சியா?** என்பது புலனாகவில்லை.

இவை நம்பியாசிரியர் காட்டிய பெருந்திணைப் பாகுபாடு தெளிவாக இல்லை என்பதைக் காட்டுகின்றன. இப்பாகுபாட்டைப் 'பிழையான இலக்கண வரலாறு' [132] எனச் சுட்டும் வ. சுப. மாணிக் கத்தின் கருத்து ஈண்டுச் சிந்திக்கத் தக்கது.

**கைகோள்**

அன்பின் ஐந்திணைக்கு உரியதாகக் கைகோளைக் காட்டுவர்.

அளவில் இன்பத் தைந்திணை மருங்கிற்
களவுகற் பெனவிரு கைகோள் வழங்கும்[183]

என்பது அந்நூற்பா.

தொல்காப்பியத்தைப் போன்று (நூ. 487) இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம் ஆகிய நான்கையும் களவுப் புணர்ச்சியில் காட்டும்; கற்பிற் புணர்ச்சியில் மறைவெளிப்படுதல், தமரிற் பெறுதல் எனத் தொல்காப்பியர் சுட்ட (நூ. 488) இந்நூல் குரவரிற் புணர்ச்சி, வாயிலிற் கூட்டம் ஆகிய இரண்டையும் காட்டும்.[184] எனவே இவ்விரு நூல்களுக்கும் பொருளடிப்படையில் வேறுபாடு இல்லை என்பது பெறப்படும்.

மேலும், தலைவனுக்குரிய பிரிவைக் கூடக் கைகோள் அடிப்படையில் களவில் நிகழும் பிரிவு, கற்பில் நிகழும் பிரிவு எனப் பிரித்துக் காட்டுகின்றது. **களவுப் பிரிவில்** ஒருவழித்தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள் வயிற்பிரிதல் ஆகியவை அடங்கும். அவற்றுள் முன்னதற்குப் பருவ வரையறை இல்லை; பின்னது இரண்டு திங்கள் இகவாதது.[185] **கற்பிற் பிரிவில்** பரத்தையிற் பிரிதல், ஓதற்குப் படர்தல், காவற்பிரிவு, தூதிற் பிரிவு, உதவிக் கேகல், நிதியிற் கிகத்தல் என்னும் ஆறு வகைப்படும். அவற்றுள் பரத்தையிற் பிரிவு மட்டும் அயன்மனைப் பிரிவு, அயற்சேரிப் பிரிவு, புறநகர்ப் போக்கு என்ற மூன்று உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது.[186]

**துறை**

நம்பியகப்பொருளில் அகத்திணையியல், ஒழிபியல் தவிர்ந்த மூன்று இயல்களில் காணப்படும் கிளவித் தொகைகள் பின் வருமாறு:

**களவியல்**

இயற்கைப் புணர்ச்சி, வன்புறை, தெளிவு, பிரிவுழி மகிழ்ச்சி பிரிவுழிக் கலங்கல், இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கி மதி உடன்பாடு, பாங்கியிற் கூட்டம், பகற்குறி, பகற்குறி இடையீடு, இரவுக்குறி, இரவுக்குறி இடையீடு, வரைதல் வேட்கை, வரைவு கடாதல், ஒருவழித் தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவு.[187]

**வரைவியல்**

வரைவு மலிதல், அறத்தொடு நிலை, உடன்போக்கு, கற்பொடு புணர்ந்த கவ்வை, மீட்சி, தன் மனை வரைதல், உடன்போக்கிடையீடு, வரைதல்.[138]

**கற்பியல்**

இல்வாழ்க்கை, பரத்தையிற் பிரிவு, ஓதற்பிரிவு, காவற்பிரிவு, தூதிற் பிரிவு, துணைவயிற் பிரிவு, பொருள்வயிற் பிரிவு.[139]

**அகமாந்தர்கள்**

தொல்காப்பியத்தைப் போன்று (நூ. 490-491) கைகோள் நோக்கில் கூற்றிற்குரியோரை வகை தொகை செய்கின்றது. அவற்றுள் கற்பின்கண் நற்றாயைக் கூற்றிற்குரியராகச் சேர்த்துப் பதின்மூன்று பேரைக் காட்டுகின்றது. [140]

தொல்காப்பியர் வழிநின்று அகமாந்தர் மரபுகளை வழங்கும் **நம்பியகப்பொருள்**

பயந்தோன் றன்னை உயங்குநோ யறிவோர்
ஊரவர் அயலோர் சேரியோர் என்றிவர்
முகத்துரை நிகழா அகப்பொரு ளகத்தே[141]

எனத் தொல்காப்பியத்தைப் பின்பற்றி (நூ. 492) கூற்றுக்குரிமையில்லாதோரைப் புலப்படுத்தும்.

**கேட்போர்**

கிழவோன் கூற்றையும் கிழத்தி கூற்றையும் பார்ப்பான், பாங்கன், பாங்கி, செவிலி, கண்டோர், பாணன், கூத்தர், விறலி, பரத்தை, அறிவர் ஆகிய பதின்மரும் கேட்பர்.[142] தலைவன் தலைவியோடு நற்றாய் கூறாள். எனவே, நற்றாய் கூற்றைக் கேட்போராக அவ்விருவரும் அமைதல் இல்லை. உடன்போக்கின்கண் நற்றாய் கூற்றைக் கேட்போராக அந்தணர், தெய்வம், அயலோர், அறிவர், நோயறிவோர், செவிலி, பாங்கி ஆகியோர் அமைவர்.[143] செவிலி கூற்று நற்றாயோடும் பாங்கி முதலானாரோடும் நிகழும். கண்டோர் கூற்று தாயர், பாங்கியர், தலைவன், தலைவி முதலானோரோடு உடன்போக்கினுள்ளும் கற்பினுள்ளும் நிகழும். கூற்றுக்குரியருள் மேற்சொல்லப்படாதவர்கள் தலைமகனோடும் தலைமகளோடும் பொருந்தியவற்றைக் கூறுவர்[144].

**தொல்காப்பியம்** கேட்டற்பொருண்மைக்கண் அமையும் மரபு வழுவமைத்தது போல (நூ. 501) நம்பியகப்பொருளும் தலைவி கூற்றிற்குப் புறனடையாக மக்களல்லாத திணைப்பொருள்கள் அமையும் பாங்கைக் கீழ்வரும் நூற்பாவால் விளக்குகின்றது.

நெஞ்சு நாணு நிறைசேர் அறிவும்
செஞ்சுடர்ப் பகுதியும் திங்களும் மாலையும்
புள்ளும் மாவும் புணரியும் கானலும்
தன்சொற் கேட்குந போலவும் தனக்கவை
இன்சொற் சொல்லுந போலவும் ஏவல்
செய்குந போலவும் தேற்றுந போலவும்
மொய்குழற் கிழத்தி மொழிந்தாங் கமையும்[145]

இனிக் கேட்போர் யாருமின்றித் தனக்குத் தானே கூறுவதை,

இறையோன் முதலோர் யாரொடு மின்றித்
தம்மொடு தாமே சாற்றியும் அமைப[146]

என்ற நூற்பா சுட்டும்.

இவையன்றி, **தொல்காப்பியம்** முதல் **வீரசோழியம்** வரை உள்ள இலக்கண நூல்களில் காணப்படாது நம்பியகப்பொருளில் மட்டும் காணப்படும் சில இலக்கணக் கோட்பாடுகள் உள்ளன. அவை:

**துறை**

பொதுவாக அகப்பாடல் அகமாந்தரின் கூற்றில் அமையும்; எனவே அத்துறைகளில் கூற்றுக்குரியரும் கேட்போரும் இடம் பெறுவர். கூற்று நிகழிடம் துறை என வழங்கப்பட்டது. ஆனால் **நம்பியகப்பொருள்** உரைப்போர் கேட்போர் உண்டாகல் இன்றிக் கவி சொல்லும் புலவன்தானே கூறுவதைத் "துறை" என்னும் உறுப் பாகக் குறிப்பிடுகிறது.

சொல்லிய அல்ல ஒன்றினும் அவற்றோ
டொல்லும் வகைதேர்ந் துணர்த்தியல் வழாமல்
உரைப்போர் கேட்போர் உண்மை யின்றி
உரைக்கும் கவியே உரைப்பது துறையே[147]

என அகமரபிற்கல்லாத துறைத் தன்மையையும், கூற்றுக்குரியர் அல்லாமல் புதியதாக ஒருவர் கூறிய கூற்று இடம் பெறும் பாங்கை யும் இலக்கணப் படுத்தியுள்ளது. எனவே இவர் காலத்தில் 'துறை' யின் பொருண்மையில் திரிபு ஏற்பட்டுள்ளதை அறியலாம். அதாவது துறை என்பது கூற்று நிகழிடத்தைக் குறிக்கவில்லை.

**கைக்கிளைக்குரிய தலைமக்கள்**

கைக்கிளைக்குரிய தலைமக்கள் இவர் இவர் என விதந்தோது கிறது. மறையோர், மன்னர், வணிகர், சூத்திரர் ஆகிய நால்வகைத் தலைமக்கள் அகக் கைக்கிளைக்குரியர்; மேலும் ஐந்நிலத்தும்

உறையும் கீழ்நிலை மக்களுள் தலைமக்களும் உரியர். தலைமைப் பண்பில்லாதாரும் இழிந்த குலத்தாரும் அகப்புறக் கைக்கிளைக் குரியர்.[143] இங்ஙனம் எழுதிணையுள்ளும் கைக்கிளைக்குரிய தலை மக்களை முதன்முதலில் **நம்பியகப்பொருள்** எடுத்துக் கூறுகின்றது.

தொல்காப்பியத்தில் திணைக்குரிய தலைமக்கள் பற்றிய குறிப்பு இல்லை என்பதும் ஈண்டு நினைவு கூரத்தக்கது.

### இரண்டு தலைவன்

**அகப்பாட்டினுள் பாடப்படுவோர் பாட்டுடைத் தலைவன் கிளவித் தலைவன் என இருவர்;** அவருள் உயர்ந்தோன் பாட்டுடைத் தலைவன்; நிலப்பெயர், வினைப்பெயர், பண்புகொள்பெயர், குலப் பெயர், இயற்பெயர் ஆகிய ஐந்து வகைப் பெயர்களாலும் இரு தலைவர்களும் கூறப் பெறுவர்; அவற்றுள் கிளவித் தலைவனுக்கு இயற்பெயர் கூறப் பெறுவதில்லை; இரு தலை மக்களும் பாடலுள் வருதலும் தனித்து வருதலும் வாராதொழிதலும் உண்டு.[149] இவை யாவும் நம்பியகப் பொருளில் முதன்முதலில் காணப்படும் செய்திகளாகும்.

### ஊடலைத் தணிவிக்கும் வாயில்கள்

பார்ப்பனப் பாங்கர் சூத்திரப் பாங்கர் என இருவகைப் பாங்கர், காமக் கிழத்தி, காதற்புதல்வன், ஆற்றாமை ஆகியன தொல்காப் பியம் சுட்டாத வாயில்கள் ஆகும்.[150] தொல்காப்பியர் தாயை வாயில்களில் ஒன்றாகக் காட்டுவர் (நூ. 197). ஆனால் நம்பியார் தாயைச் சுட்டவில்லை. தொல்காப்பியர் கூற்றுக்குரிய சூழலில் புதல்வனைக் குறிப்பிடுவர் என்பதும் எண்ணத்தக்கது.

### பரத்தையிற் பிரிவின் வகை

பரத்தையிற் பிரிவை,

அயன்மனைப் பிரிவயற் சேரியின் அகற்சி
புறநகர்ப் போக்கிவை புரவலற் குரிய
பரத்தையிற் பிரியும் பருவத் தான[151]

என மூவகைப்படுத்திய நாற்கவிராச நம்பியார் அவ்வப் பிரிவுக்குரிய மகளிரையும் குறிப்பிடுகின்றார்.

கெழீஇய *காமக் கிழத்தியர்* பொருட்டாத்
தழீஇய அயல்மனைத் தலைவன் பிரியும்

*பின்னர் வரைந்த* பெதும்பையும் *பரத்தையும்*
இன்னியல் விழவும் ஏது வாக
அவனயற் சேரியின் அகலும் என்ப

விருந்தியற் பரத்தையைப் பெருந்தேர்மிசைக்கொண்
டிளமரக் காவின் விளையா டற்கும்
புனலா டற்கும் புறநகர்ப் போகும்[152]

என்ற நூற்பாக்கள் மூவகைப் பிரிவுக்குரிய மகளிராகக் காமக்கிழத்தியர், இரண்டாவது வரைந்து கொள்ளப்பட்ட பெதும்பைப் பருவக் கிழத்தி காதற்பரத்தை, புதியளாகிய பரத்தை ஆகியோரைக் காட்டுகின்றன.

இப்பாகுபாடு இந்நூலில்தான் முதன்முதலாக இலக்கணப் படுத்தப்பட்டுள்ளது.

**அந்தணர்க்கு இல்லாதன**

பிரிவு வகைகளைப் பொருத்தவரையில் பெரும்பாலும் தொல்காப்பியத்தை (நூ-ள். 37, 173, 185) ஒட்டியே செல்கின்றது.[153] எனினும் அந்தணர்க்குரிய சிறப்பு விதியாக வரும் நூற்பா,

புலத்திற் சிறந்த புரிநூன் முதல்வர்க்குக்
கலத்திற் சேறல் கடனன் றென்ப[154]

என மொழிகின்றது. கல்வியிற் சிறந்த அந்தணர்க்குக் கலத்தில் சேறலாகிய தொழில் இல்லை என்பதாம். இத்தன்மைத்தான வரையறை பிற இலக்கண நூல்களில் இல்லை.

**வாயில்கட்குரிய செயல்**

ஒவ்வொரு வாயிலுக்குமுரிய செயல்கள் காதற்புதல்வன், விருந்து நீங்கலாக தனித்தனி நூற்பாக்களில் தொடர்ச்சியாக உரைக்கப் படுகின்றன.[155]

கவிக்கூற்றில் பாடல் அமைதல், கைக்கிளைக்குரிய தலைமக்கள் சிறப்பு நிலையில் இவர் இவர் என இயம்புதல் பாடலுள் இரண்டு தலைவர்கள் இடம் பெறுதல் ஆகியன அக இலக்கண வரலாற்றில் ஏற்பட்ட மாற்றத்தைக் காட்டுகின்றன.

உள்ளுறை உவமம், இறைச்சி, குறியிடம் ஆகியன பற்றித் தொல்காப்பியரது கருத்தை எடுத்துரைக்கும் நாற்கவிராச நம்பி (238-240, 37-38) தேவையான இடங்களில் மேற்காட்டிய புதியனவற்றையும் இணைத்துள்ளார்; காரணம் இந்நூல் தோன்றிய காலத்திற்கு முன் வழங்கிய இலக்கியங்களில் காணப்படும் புதுமைகளை இலக்கணப்படுத்த எண்ணியமை ஆகலாம்.[156]

**தொல்காப்பியம்** கூற்று அடிப்படையில் இலக்கணமும், கூற்று நிகழிடமும், துறைச் சூழலும் எடுத்துரைத்த பாங்கைப் பின்வந்த இலக்கணங்கள் எதுவும் பின்பற்றவில்லை; நம்பியகப் பொருளும்

இதற்கு விதி விலக்கல்ல. முதல் இலக்கண நூலைப் பின்பற்றி இயல் பாகுபாடுகளும், சில இலக்கண மரபுகளைப் பற்றி எடுத்துக் கூறி யிருப்பினும், அடிப்படை நிலையில் ஏற்பட்ட மாற்றத்தை அழுத்த மாகப் புலப்படுத்துகின்றது.

தொல்காப்பியத்திற்குப் பின் (ஏறக்குறைய பதினேழு நூற் றாண்டுகள்) மிக நீண்ட இடைவெளிக்குப் பிறகு தோன்றிய **நம்பியகப் பொருள்** அதனைப் பின்பற்றி அகத்திணை இயல், கள வியல், கற்பியல் என மூன்று இயல்களுக்குப் பெயரிட்டு, அவற்றோடு வரைவியல், ஒழிபியல், என இரு இயல்களைச் சேர்த்து, கிளவித் தொகைகளை வரையறுத்து அவற்றுள் துறைகளை விரித்துக் கூறும் புது இலக்கண மரபைப் போற்றுகின்றது.

இந்நூல் இயல் பாகுபாட்டில் தொல்காப்பியத்தைப் போன் றுள்ளது; நுவல்பொருளில் **தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பா மாலை, தமிழ்நெறி விளக்கம்** ஆகியவற்றின் சாயல் பெற்றிருக் கின்றது; சுருங்கக் கூறின் **தொல்காப்பியம்** முதல் நம்பியாசிரியர் காலம் வரை தோன்றிய இலக்கியங்கள் அவற்றின் பிழிவாக அமைந்த இலக்கணங்களின் தாக்கம் நம்பியகப் பொருளின் அமைப் பிலும், நுவல் பொருளிலும் மாற்றத்தை ஏற்படுத்தி விட்டது எனலாம்.

எனவே பழைய மரபு, புதிய மரபு ஆகிய இரண்டும் கலந்த ஒரு தனி இலக்கணங் கொண்ட நூலாக இந்நூல் உள்ளது.

## களவியற்காரிகை

**களவியற்காரிகை** என்ற இந்நூலின் பெயர் பேராசிரியர் வையா புரிப்பிள்ளை இட்டதாகும். காரணம் நூலின் முற்பகுதியும் பிற்பகுதி யும் இடைப்பகுதி சிலவும் சிதைந்து போனதால் நூற்பெயரை அறிய இயலவில்லை; நூலின் சிதைந்த பகுதிகள் உரையின் துணை கொண்டு பொருளறியப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. இச்செய்தி நூலைப் பற்றிய ஆராய்ச்சி முன்னுரையால் அறியக் கிடக்கின்றது.

### திணை

**இறையனார் அகப்பொருள்** உரையையும் **களவியற்காரிகை** நூற் பாக்களையும் இணைத்து நோக்கும்போது, அவ்வுரையின் அடிப் படையில் இந்நூலில் உள்ள நூற்பாக்கள் இயற்றப்பட்டுள்ளன என்பது புலனாகின்றது. பாலைக்குரிய கருப்பொருள் பற்றிய கள வியற்காரிகையின் சிதைந்த பகுதி (நூ. 12) **இறையனார் அகப் பொருள்** காட்டும் பாலைக் கருப்பொருளின் படியெடுத்தல் போன்று அமைந்துள்ளது.

நூலின் முதற் பத்துக் காரிகைகள் கிடைக்கவில்லையாதலால் திணை பற்றிய செய்தியை அறியும் வாய்ப்பு இல்லை.

**கைகோள்**

ஒழுக்கத்தைக் களவு, கற்பு எனப் பிரித்து இலக்கணம் கூறுகின்றது. அவற்றுள் களவு கற்பிற்குரிய கிளவித்தொகைகள் அல்லது துறைகள் எடுத்துக் காட்டப்படுகின்றன.[157]

ஒழுக்கம்

| *களவு* | *கற்பு* |
|---|---|
| தெய்வப் புணர்ச்சி | வெளிப்படை நிலை |
| பாங்கற்கூட்டம் | வரைபொருட்கேகல் |
| தோழியிற் கூட்டம் | உடனிலைச் செலவு |
| இரவுக் குறி | கல்விப் பிரிவுணர்த்தல் |
| வரைவு கடாதல் | காவற் பிரிவுணர்த்தல் |
| உடன்போக்கு வலித்தல் | பகைதணிவினைப் பிரிவு |
| | வேந்தர்க்குற்றுழிப் பிரிவு |
| | பொருள் வயிற்பிரிவு |
| | பரத்தையிற் பிரிவு |

இவற்றுள் வழக்கம் போலக் களவின் முடிவு, கற்பின் தொடக்க நிலை, பொருண்மை நிலை, ஆகியவற்றுள் குறிப்பிடத்தக்க மாற்றமேதுமில்லை; **தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், தமிழ்நெறி விளக்கம்,** நம்பியகப் பொருளைப் போன்று இந்நூலும் கைகோள் வகைகளை நுவல்கின்றது.

**துறை**

இயற்கைப் புணர்ச்சி, பாங்கற் கூட்டம், வெளிப்படை நிலை, உடனிலைச் செலவு ஆகிய கிளவித் தொகைகளின் கீழுள்ள துறைகள் மட்டும் நூலுள் உள்ளன.[158]

இந்நூலும் தமிழ்நெறி விளக்கத்தைப்போல் முழுமையாகக் கிடைக்கவில்லை. எனவே இருபத்திமூன்று காரிகைகளை மட்டும் வைத்துக்கொண்டு திட்டவட்டமாக எதையும் கூறமுடியவில்லை;

எனவே இலக்கண வரலாற்றில் பெயரளவில் இடம் பெற்றிருக்கும் இந்நூலின் வழி திணை, துறை, அகப்பொருள் மாந்தர் பற்றிய இலக்கண மரபுகள் ஆகிய எவற்றையும் முழுமையாக அறிந்து கொள்ள இயலவில்லை.

## மாறனகப்பொருள்

திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்பவரால் இயற்றப் பட்டது இந்நூல்; இவர் சிறப்புப் பெயர் மாறன் என்பதால் அத்துடன் அகப்பொருளை இணைத்து **மாறனகப் பொருள்** எனப் பெயர் பெற்றது.

நம்பியகப் பொருளுக்குப் பின் முழுமையான கோவையிலக்கண நூலாகக் கிடைப்பது **மாறனகப்பொருள்**. இந்நூலாசிரியரே இந் நூலுக்கு இலக்கியமாகத் திருப்பதிக் கோவையை இயற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நூல் திணை, கூற்றுக்குரிய மாந்தர்கள் பற்றிய ஆய்வில் ஈடுபடவில்லை; **நம்பியகப்பொருள்** அகத்திணையியல் ஒழிபியல் ஆகிய இரு இயல்களிலும் காட்டிய இலக்கண மரபுச் செய்திகளை விடுத்து இடைப்பட்ட களவியல் வரைவியல் கற்பியல் ஆகிய மூன்று இயல் களில் காணப்படும் அமைப்பைப் பின்பற்றி, நேரடியாகக் கோவைக் குரிய கிளவித்தொகைகளையும் அவற்றிற்குரிய துறைகளையும் விளக்குவதாக அமைந்துள்ளது.

நூல் நுவல்பொருளை அறிந்துகொள்ள இரண்டு நூல்களும் ஒப்பிடப்பட்டுள்ளன.[159]

மாறனகப் பொருளில் கோவை இலக்கியத்திற்குரிய துறைச் செய்திகளைத் தவிர, பிற அக இலக்கண மரபுகள் உத்திகள்போன்ற செய்திகள் எதுவும் இல்லை. இவ் ஒப்பீட்டின்வழிப் பெறப்பட்ட செய்திகளை மட்டும் ஈண்டுச் சுருக்கமாகக் காணலாம்.

1. இரண்டு நூல்களிலும் சொல்லாட்சியில் வேறுபாடு இருப் பினும் பொருளளவில் வேறுபாடு இல்லை.

எ. கா. தாழேனென்றல் (62), இகுளையர் (95) - **மா. அ.**
நீடேனென்றல் (170), பாங்கியர் (198) - **ந. அ.**

2. நம்பியகப் பொருளில் ஒரு நூற்பாவின் கூறாக வரும் சொற் றொடர் மாறனகப் பொருளில் இரண்டு துறையாக விரிவு பெற் றுள்ளது.

எ. கா. 'வினவிய பாங்கியி னுணர்ந்த காலை' (184:1) என்பது செவிலி பாங்கியோடு காவல், பாங்கி செவிலிக்குணர்த்தல் என இரு துறைகளானமை (84).

3. கிளவித் தொகைகளின் வகையில் இரு நூல்களுக்கும் (**ந. அ.** 173, **மா. அ.** 69) வேறுபாடிருப்பினும் அவை புதிய செய்திகளை உள்ளடக்கியனவல்ல.

4. **நம்பியகப்பொருள்** (201) ஐவகைப் பிரிவுகளுள் ஒன்றான காவற்பிரிவைப் பரத்தையிற் பிரிவுக்கு அடுத்துச் சுட்ட, **மாறனகப் பொருள்** (98) பரத்தையிற் பிரிவுக்குப் பின் காவற்பிரிவைச் சுட்டி ஓதற்பிரிவை இறுதியில் வைக்கின்றது.

| நம்பியகப் பொருள் | மாறனகப் பொருள் |
|---|---|
| இல்வாழ்க்கை | இல்வாழ்க்கை |
| பரத்தையிற் பிரிவு | பரத்தையிற் பிரிவு |
| ஓதற் பிரிவு | காவற்பிரிவு |
| காவற்பிரிவு | தூது |
| தூது | துணைவயிற் பிரிவு |
| துணைவயிற் பிரிவு | பொருள்வயிற் பிரிவு |
| பொருள்வயிற் பிரிவு | ஓதற் பிரிவு |

இங்ஙனம் பிரிவு வகை முறை வைப்பில் இருநூல்களுக்கும் இடையே வேறுபாடு உள்ளது. மேலும் பரத்தையிற் பிரிவை **நம்பியகப் பொருள்** உணர்த்த உணரும் ஊடற்குரியவை (205), உணர்த்த உணரா ஊடற்குரியவை (206, 207) என இருவகைப்படுத்த **மாறன கப்பொருள்** அவற்றோடு உணர்வதோடு உணரா ஊடற்குரியவை யையும் (102-104) சேர்த்து மூவகைப்படுத்தியுள்ளது.

இரு நூல்களிலும் ஐவகைப் பிரிவுக்குரிய துறைகள் உரைகாரர் கள்வழி அறியப்படுகின்றன; மூல நூலில் காணப்படவில்லை. **நம்பியகப்பொருள்** உரையில் (209) பொருள்வயிற் பிரிவுக்கு ஆறு துறையும், துணைவயிற்பிரிவுக்கு மூன்று துறையும் காணப்பட, **மாறனகப்பொருள்** உரையில் (106) முன்னவற்றிற்கு மூன்றும், பின்ன வற்றுக்கு ஆறும் காணப்படுகின்றன.

## இலக்கண விளக்கம்

இந்நூல் **நம்பியகப் பொருள்** நூற்பாக்களை மிகச் சில இடங்கள் தவிர அப்படியே மறுபதிப்பு செய்துள்ளது; அகப்பொருளைப் பொறுத்தவரையில் புதிய செய்திகள் ஏதும் இல்லை. காரணம் இந் நூல் நம்பியகப் பொருளிலிருந்து 205 (90.7%) நூற்பாக்களையும் தொல்காப்பியத்திலிருந்து 15 (6.64%) நூற்பாக்களையும் எடுத் தாண்டுள்ளது. (எஞ்சியவை மூன்று 3, 4, 204 (2.65%) அவற்றி லும் புதியன இல்லை). இதனை இருநூல்களுக்குமுரிய ஒப்பீடு காட்டும்.[160]

இலக்கண விளக்கத்தில் அகத்திணை மட்டுமின்றி, பிற அதிகா ரங்களும் அத்தன்மையனவே என்பதைப் பின்வரும் பகுதியால் அறியலாம்.

> தொல்காப்பியம், யாப்பருங்கலம்,
> காரிகை, தண்டியலங்காரம், நன்னூல் ஆகிய
> நூல்களைப் பின்பற்றியும் திருத்தியும் மாற்றியும்
> ஏற்றுக் கொண்டு இயன்றுள்ளது[161]

என்பர் சோம. இளவரசு. எனவே இந்நூல் பெரும்பான்மையும் முன் தோன்றிய நூல்களின் படியெடுப்பு எனல் பொருந்தும்.

**நம்பியகப்பொருள்** என்ற தலைப்பில் விரித்த செய்திகள் அனைத்தும் இலக்கண விளக்கத்திற்கும் பொருந்தும் என்பதால் இந்நூல் பற்றிய செய்தி ஈண்டு விரித்துக் கூறப்படவில்லை.

## தொன்னூல் விளக்கம்

**தொன்னூல் விளக்கம்** அகப்பொருளில் தொல்காப்பியர் காட்டியதுபோல் ஏழு திணைகளை மட்டும் சுட்டுகின்றது. இந்நூல் முதற்பொருளில் பெரும்பொழுது சிறுபொழுது ஆகிய இரண்டுக்குமுரிய நிகழ்ச்சிகளை அகப்பொருள் மரபினின்று முற்றிலும் வேறுபட்டு விளக்கம் செய்கின்றது.[162] அவை பெயரளவில் அறுவகைப் பெரும்பொழுது சிறுபொழுதுக்குரிய நிகழ்ச்சிகளைச் சுட்டுகின்றனவே தவிரக் கருப்பொருளோடு இணைந்து உரிப்பொருளை விளக்கும் நோக்கில் பயன்படுத்தப்படவில்லை; தனித்து நிற்கின்றது.

எனவே இலக்கணம் இயற்றிய இலக்கணிகள் காலத்தின் தேவையை நிறைவு செய்வதோடு, மரபு கருதிச் சில பாகுபாடுகளைக் கையாண்டுள்ளனர்; அவற்றுள் அறிந்தோ அறியாமலோ அகப்பொருள் கூறுகள் பெயரளவிலாவது இடம் பெற்றுவிட்டன என்பது மட்டும் பொருந்தும்.

இத்தாலி நாட்டைச் சேர்ந்த வீரமாமுனிவர் தமிழில் இவ் இலக்கணம் இயற்றியது இலக்கண வரலாற்றில் ஏற்பட்ட ஒரு புதுமை எனலாம். அகப்பொருள் இலக்கண நூல்கள் இயற்றிய இலக்கண ஆசிரியர்களைப் பொறுத்தவரை இவர் மட்டுமே வேற்று நாட்டவர் என்பது தவிர, அகப்பொருள் மரபுகளில் புதுமை ஏதும் இந்நூலில் இல்லை.

## முத்து வீரியம்

அகவொழுக்க இயல், களவொழுக்கவியல், கற்பொழுக்கவியல் என மூன்று இயல்களைக் கொண்ட இந்நூல் முத்துவீர உபாத்தியாயரால் இயற்றப்பட்ட ஓர் ஐந்திலக்கண நூலாகும்.

**திணை**

திணைகளைக் களவிற்குரியன, கற்பிற்குரியன எனப் பகுத்து முன்னவற்றுள் குறிஞ்சியையும் நெய்தலையும், பின்னவற்றுள் மருதத்தையும் முல்லையையும் அடக்குகின்றது.[163] அவையாமாறு;




இங்ஙனம் திணையைக் கைகோள் அடிப்படையில் பகுக்கும் பாங்கு மரபு விலகலாகக் காணினும், முழுமையுடையதாக இல்லை; ஏனெனில் பாலைத் திணை விடுபட்டுள்ளது. இக்கோட்பாடு பொருத்தமானதாகவும் நிறைவுடையதாகவும் இல்லை.

முத்துவீரிய ஆசிரியரின் இத்தகைய பாகுபாட்டுக்குக் காரணம் வீரசோழிய உரையாகும்.[164]

அகவொழுக்கவியல் பெரும்பொழுது ஆறு, சிறுபொழுது ஐந்து ஆகியவற்றிற்குரிய இயற்கை நிகழ்ச்சிகளைக் கூறுவனவாக உள்ளன;[165] தொன்னூல் விளக்கம் இம்முறைக்கு முன்னோடி என்பது ஈண்டு நினைவு கூறத்தக்கது.

**துறை**

இந்நூல் கைக்கிளையை ஏழு வகைகளாகப் பிரித்துள்ளது.[166] அவை. 1. காட்சி 2. ஐயம் 3. தெளிதல் 4. நயப்பு 5. உட்கோள் 6. தெய்வத்தை மகிழ்தல் 7. புணர்ச்சி துணிதல். பின் இயற்கைப் புணர்ச்சி கலவியுரைத்ததிலிருந்து தொடங்குகின்றது. நம்பியகப் பொருள் இயற்கைப் புணர்ச்சியையடுத்து இடந்தலைப்பாட்டைச் சுட்ட, முத்துவீரியம் பாங்கற் கூட்டத்தைச் சுட்டுகின்றது. இறையனார் அகப்பொருளும் இயற்கைப் புணர்ச்சிக்குப் பின் இடந்தலைப் பாட்டை அமைத்துள்ளமை ஈண்டு நினைவு கூரற்பாலது.

**முத்துவீரியம், திருக்கோவையார்** துறைகளைத் தொகுத்து இலக்கணமாக்கியுள்ளது என்பது துறை ஒப்பீட்டால் அறிந்த முடிவாகும்.[167]

இவை தவிரக் குறிப்பிடத்தக்க அக மரபுகள், உத்திகள் மாற்றங்கள் பற்றிய குறிப்பு எதுவும் இந்நூலுள் இல்லை.

## சுவாமிநாதம்

சுவாமிநாதத்தின் ஆசிரியர் சாமி கவிராயர் பொருளதிகாரத்தை அகத்திணை மரபு, கைகோள் மரபு, புறத்திணை மரபு எனப் பெயரிட்டு இலக்கணம் இயம்புகின்றார்.

### திணை

கைக்கிளையைக் கருவில் ஒருதலைக் காமம் என்றும், ஐந்திணையை அன்புடைய காமம் என்றும், பெருந்திணையை இசையாக்காமம் என்றும் வரையறை செய்வதன் மூலம் எழுதிணைக் குறிப்புகளைக் கொண்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. மேலும் நம்பியாசிரியர் சுட்டும் கருப்பொருள் வகைகளை (நூ. 19) இந்நூலாசிரியரும் காட்டுகின்றார்.[168]

### துறை

பாங்கி மதியுடன்பாடு, ஒருவழித் தணத்தல், அறத்தொடு நிற்றல், உடன்போக்கு, வரைவியல் துறை, இல்வாழ்க்கையின் விரி போன்ற கிளவித் தொகைகளுக்கு **நம்பியகப்பொருள்** போன்று துறைகளை விரித்துள்ளது; நம்பியகப் பொருளில் உள்ள ஒரு துறையை ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று துறைகளாக **மாறனகப்பொருள்** பிரிக்கின்றது; சில இடங்களில் கூடுதலாக அமைந்த துறைகளுமுண்டு.[169]

இந்நூலில் ஒரு கிளவித்தொகை அல்லது ஒரு கருத்துக்கு ஒரு நூற்பா; ஒரு செய்திக்கு என்று ஒரு நூற்பா என்ற வரையறை இல்லை. எனவே ஒரு நூற்பா ஒன்றின் முடிவாகவும், மற்றொன்றின் தொடக்கமாகவும் அமைந்திருக்கின்றது.[170]

**மாறனகப்பொருள், தொன்னூல் விளக்கப், முத்துவீரியம்** போன்ற நூல்களைப் போலவே இந்நூலிலும் அகப்பொருளுக்குரிய மரபுகள், மாந்தர்கள், உத்திகள் ஆகியவற்றில் மாறுதல்கள் ஏதும் இல்லை.

## அறுவகை இலக்கணம்

அறுவகை இலக்கண ஆசிரியர் தண்டபாணி சுவாமிகள் பொருளதிகாரத்துள் புறப்பொருள் என்ற இயலில் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் ஆகிய ஐந்து திணைகளின் பெயர்களைப் பெயரளவில் குறித்துள்ளார்.

இன்ப வெள்ளத் (து) இசைவறும் ஒவ்வோர்
நிகழ்ச்சியுள் துறைக ளாமெனில் நெறியே[171]

எனத் துறையின் தன்மையைக் கூறுவர்.

தலைவனும் தலைவியும் தோழனும் தோழியும்
அன்னமும் கிளியும் அணிமலர்ப் பொதும்பரும்
எதிர்மதி முகில்வளி கடல்மலை பொருள்போர்
பார்த்தல் கவிழ்தல் ஆகிய பலவுங்
கருதிக் கூர்ப்புடைக் கவிஞர் வாய்திறக்கில்
திகழ்தரு துறைவகை செப்பிடற் கரிதே[172]

எனத் துறைகள் விரியும் பாங்கைப் புலப்படுத்துவர்.

இங்ஙனம் இந்நூல் காட்டும் நூற்பாக்கள் அகப்பொருளை விளக்குவதாகவோ, அகக்கூறுகளுடன் நேரடித் தொடர்புடைய தாகவோ இல்லை. இந்நூலுள் அன்பின் ஐந்திணைப் பெயர்கள் பெயரளவில் இடம்பெற்றதைத் தவிர, எந்த அகப்பொருட் கூறு களும் காணப்படவில்லை; அகப்பொருளுக்குப் பொருத்தமாகவும் இல்லை.

களவியற்காரிகையிலிருந்து இந்நூல் வரை தோன்றிய இலக்கண நூல்கள் எதுவும் அகப்பொருள் மாற்றங்களை விளக்குவனவாக இல்லை: பெரும்பாலும் ஒரே போக்கைப் பெற்றிருக்கின்றன.

**பிற**

**நிகண்டுகள்**

இக்கால அகராதி போன்று இடைக்காலத்தில் பணிபுரிந்த நிகண்டுகள் பழமையான இலக்கிய இலக்கணச் சொற்களைத் தொகுத்து வைத்துள்ளன. அவற்றுள் அகப்பொருள் தொடர்பான சொற்களும் அவற்றின் பொருளும் இடம் பெற்றுள்ளன.

காட்டாகத் திவாகரத்தைக் குறிப்பிடலாம். அந்நிகண்டில் ‘திணை’ என்பது,

குலமும் ஒழுக்கமும் ஒழுக்கம் நிகழ்ந்த
நிலமும் திணையென நிகழ்த்துங் கிளவி

என ‘ஒரு சொல் பல்பெயர்த் தொகுதி’யில் விளக்கப்படுகின்றது. மேலும், முதற்பொருளில், நிலத்தின் பெயர் இடப்பெயர்த் தொகுதி யிலும், கருப்பொருளில் உள்ள தலைமக்கள் பெயர் மக்கட்பெயர்த் தொகுதியிலும், யாழ் பற்றிய செய்தி ஒலிப்பெயர்த் தொகுதியிலும் இடம் பெற்றுள்ளன.

இதே போன்று பிற நிகண்டுகளும் அவ்வவற்றின் அமைப்பிற் கேற்ப அகப்பொருள் தொடர்பான செய்திகளை ஆங்காங்கு குறிப் பிடுகின்றன.

**பாட்டியல்கள்**

இலக்கிய வகை பற்றிய பாட்டியல்கள் அகப்பொருள் தொடர்பான இலக்கிய வகைகள் பற்றி இலக்கணம் செய்துள்ளன. அவற்றுள் **பிரபந்தத் திரட்டு** மட்டும் சற்று வேறுபட்டு அகத்திணைச் சொற்களைப் பொருள் விளக்கம் செய்துள்ளது. எனவே அந்நூல் பற்றி மட்டும் ஈண்டுக்காண்போம்.

பிரபந்தத் திரட்டின் 'குலநில வியப்புச் சார்வோரியல்' எனும் எட்டாவது இயல் ஐவகை நிலம், இருவகைப் பொழுது, கருப்பொருள், எண்வகை மணம், நாற்சாதிக்குரிய நிலம், ஐந்நிலத்திற்குரிய தொழில் போன்ற செய்திகளைப் பற்றிக் கூறுகின்றது.

இந்நூல் ஐவகை நிலத்தைத் தலை - இடை - கடை எனப் பகுத்து பதினைந்து வகைகளாக்கும் (316-320). அவ்வாறே ஐவகை நிலமும் பிற நான்கு நிலத்துடன் மயங்க அமையும் சார்பு நிலங்கள் இருபதாகுமெனப் புதிய வகைப்பாட்டைக் காட்டுகின்றது (321-325)

மேலும் எண்வகை மணத்தை ஐவகைத் திணையோடு பின்வருமாறு பொருத்திக் காட்டும் (357).

| | |
|---|---|
| குறிஞ்சி | காந்தருவம் |
| முல்லை | அசுரம், ஆரிடம் |
| நெய்தல் | பிரசாபத்தியம் |
| பாலை | இராக்கதம், பைசாசம் |
| மருதம் | பிரமம், தெய்வம் (காந்தருவம்) |

இம்முறை இந்நூலில் காணும் புதிய செய்தியாகும்.

நாற்சாதிக்குரிய நிலத்தை இந்நூல் (327) காட்டுவது அகமரபுக்குரியது அன்று.

மேற்காட்டிய நிகண்டுகளும், பாட்டியல்களும் அகமரபின் வளர்ச்சியை அறிந்து கொள்ள அவ்வளவாகப் பயன்படாதன எனினும் துறையின் வளர்ச்சி வரலாற்றை அறிய முயலும்போது, அகத்துறை பற்றிய இலக்கிய வகைகள் பாட்டியல்களில் இடம் பெற்றுள்ளதால் அத்தகையன மட்டும் ஆய்வுப் போக்கில் ஆங்காங்குச் சுட்டப்படுகின்றன.

**தொகுப்புரை**

தொல்காப்பியம் முதலாக அறுவகை இலக்கணம் ஈறாக ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பதின்மூன்று இலக்கண நூல்களிலும் அகப்பொருள் மரபுகள் அல்லது மரபுக் கூறுகள் அல்லது அகப் பொருள் கலைச்சொற்கள் காணப்படுகின்றன. எனினும் தொல்

காப்பியத்திற்குப் பின் தோன்றிய எந்த இலக்கண நூலும் தெளிவான — முழுமையான அகப்பொருள் கோட்பாடுகளை விரித்துரைக்கவில்லை.

**இறையனார் அகப்பொருள், நம்பியகப்பொருள், மாறனகப் பொருள்** ஆகியவற்றில் பெயரிலேயே 'அகப்பொருள்' என்ற சொல்லாட்சி உள்ளது. ஆரிய அரசனுக்குத் தமிழ் கற்பித்துக் கொடுக்க, கபிலர் குறிஞ்சிப் பாட்டைப் பாடினார் என்பதால் **தமிழ் என்றால் அகப்பொருள்** என்ற பொருளும் நிலவி வந்திருக்கின்றது என்பது தெளிவாகின்றது. இதற்குச் சான்றாகத் **தமிழ்நெறி விளக்கம்** என்ற நூல் பெயர் பெற்றிருப்பதை அறியலாம். சிவலபில் கூற்றும் இதனை உறுதிப்படுத்துகின்றது.[178]

இங்ஙனம் தமிழ் என்றால் அகப்பொருள்: அகப்பொருள் என்றால் தமிழ் என்ற எண்ணம் அறிஞர்களிடையே வேரூன்றி இருந்ததால்தான் அகப்பொருள் அல்லாத இலக்கிய வகைக்கு இலக்கணம் செய்த ஆசிரியர்களும் தமது நூலின் பெயரில் அகப்பொருளைப் பெய்து வைத்துச் சென்றனர் போலும்.

**திணை**

**தொல்காப்பியம்** அகம் ஏழு புறம் ஏழு என இரண்டையும் இயைபுபடுத்தி இலக்கணம் கூறுகின்றது. அவற்றுள் அகத்திணை என்பது முதல், கரு, உரி ஆகிய மூன்றையும் உள்ளடக்கியது.

தொல்காப்பியத்திற்குப் பின் தோன்றிய இலக்கண நூல்களுள் **நம்பியகப்பொருள்** தவிர்ந்த ஏனையவை அகப்பொருள் தொடர்பான விரிவான ஆய்வில் ஈடுபடவில்லை. **இறையனாரகப் பொருள்** அன்பின் ஐந்திணைக்கு மட்டும் இலக்கணம் இயம்புகின்றது; களவியற் காரிகையும் அத்தன்மைத்தே. **புறப்பொருள் வெண்பாமாலை** கைக்கிளை பெருந்திணை ஆகிய இரண்டையும் அகப்புறத்துள் காட்டுகின்றது. இது திணை வரலாற்றில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றமும் நெகிழ்ச்சியுமாகும். **வீரசோழியம், புறப்பொருள் வெண்பாமாலை** போன்று கைக்கிளை பெருந்திணை ஆகியவற்றை அகப்புறத்துள் சுட்டும்.

**தமிழ்நெறி விளக்கம்** பொருளை அகம், புறம், அகப்புறம் என மூவகைப்படுத்தியிருப்பினும் இருபத்தைந்து நூற்பாக்கள் மட்டும் கிடைத்திருப்பதால் அன்பின் ஐந்திணை பற்றி மட்டும் அறிய முடிகின்றது; அகப்புறம்பற்றி அறிய இயலவில்லை.

**நம்பியகப்பொருள்** கைக்கிளையை அகக் கைக்கிளை, அகப்புறக் கைக்கிளை என்றும், பெருந்திணையை அகப்பொருள் பெருந்திணை, அகப்புறப் பெருந்திணை என்றும் வகைப்படுத்தியுள்ளது. இவ்வகைப்

பாடும் அவற்றுள் இடம் பெற்றுள்ள துறைகளும் தெளிவான அகக் கோட்பாட்டைப் புலப்படுத்துவனவாக இல்லை.

கருப்பொருளைப் பொறுத்தவரை இலக்கண நூல்களில் காலந் தோறும் கருத்து வளர்ச்சி இருப்பதாகத் தெரியவில்லை'[174] தொல்காப்பியர் தெய்வம், உணா, மா, மரம், புள், பறை, செய்தி யாழின் பகுதி ஆகியவற்றைக் கருப்பொருள் என்பர். பின் வந்த இலக்கண நூல்கள் கருப்பொருளின் எண்ணிக்கையை விரிவுபடுத்தி யுள்ளன. **இறையனார் அகப்பொருள்,** தலைமகன், தலைமகள், மக்கள் பெயர் ஆகியவற்றையும், **நம்பியகப்பொருள்** உயர்ந்தோர் அல்லோர் ஆகிய பாகுபாடுகளையும் காட்டுகின்றன.

பாலைக்குரிய தெய்வத்தைத் **தொல்காப்பியம்** சுட்டவில்லை. இளம்பூரணம் கொற்றவை என்கின்றது; **வீரசோழியம், நம்பியகப் பொருள்** ஆகியன கன்னியைக் குறிக்கின்றன; **இறையனாரகப்பொருள்** பகவதி என்கின்றது. **தமிழ்நெறி விளக்கம்** இரவியைக் கூறுகின்றது. இவை தவிர, சிறப்பான வேறுபாடுகள் எதுவும் காணப்படவில்லை.

**மாறனகப்பொருள்** திணை பற்றிய இலக்கணச் செய்திகளில் ஈடு படாமல் நேரடியாகக் கிளவித் தொகையிலிருந்து தொடங்கு கின்றது. சுவாமிநாதமும் எழுதிணைகளையும் பெயரளவில் குறிப் பிட்டு விட்டுக் கிளவித்தொகை பற்றிக் கூறுகின்றது.

**இலக்கண விளக்கம்** நம்பியகப்பொருளின் படியெடுப்பாக உள்ளது; எனவே அகத்திணை இலக்கண வரலாற்று வளர்ச்சியை அறிய இந்நூல் துணை நிற்கவில்லை.

**தொன்னூல் விளக்கம்** அன்பின் ஐந்திணையை மட்டும் கூறி விட்டுப் பொழுதிற்குரிய நிகழ்ச்சிகளைப் பட்டியலிட்டுக் காட்டுகின் றது; இம்முறை அகப்பொருள் மரபின் நெகிழ்ச்சியைக் காட்டு கின்றது.

**முத்துவீரியம்** திணையைக் கைகோள் அடிப்படையில் பிரித்துள் ளது எனினும் பாலை பற்றிக் கூறாமல் விடுத்துள்ளது. ஆனால் வீர சோழிய உரை பாலைத் திணையை இரு கைகோளுக்கும் உரியதாக் கிக் காட்டுவது குறிப்பிடத்தக்கது.

பாட்டியல் நூலான **பிரபந்தத் திரட்டு** திணை பற்றிய செய்தி களைக் கூறுகின்றது எனினும் அவை மரபு வளர்ச்சியைக் காட்டுவன வாக இல்லை. அந்நூலுள் காணப்படும் நிலவகையும் பகுப்பும் மரபு சிதைந்த நிலையைப் புலப்படுத்தவல்லன.

அறுவகை இலக்கணம் அகப்பொருள் கலைச்சொற்களை எடுத் தாண்டுள்ளதே தவிர அந்நூல் நுவலும் இலக்கணத்திற்கும் அகத் திணைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

## கைகோள்

கைகோள் பற்றிய ஆய்வில் ஈடுபட்ட இலக்கண நூல்களுள்* குறிப்பிடத்தக்க வேறுபாடு எதுவும் இல்லை. களவின் முடிவும் கற்பின் தொடக்கமும் நூலுக்கு நூல் பெயரளவில் வேறுபட்டிருப்பினும் பொருண்மை நிலையில் குறிப்பிடத்தக்க வேறுபாட்டைப் பெற்றிருக்கவில்லை.

தொல்காப்பியத்திற்கு பின் வந்த **இறையனாரகப்பொருள், தமிழ் நெறி விளக்கம், நம்பியகப்பொருள், களவியற் காரிகை, மாறனகப் பொருள்** ஆகிய அகப்பொருள் பற்றிய இலக்கண நூல்கள் காட்டும் கைகோள் அகனைந்திணைக்கு மட்டும் உரியது; கைக்கிளை பெருந்திணைகளை உட்படுத்தவில்லை.

## துறை

**தொல்காப்பியம்** அகத்திணை மாந்தர்க்குரிய கூற்று பற்றி விரித்துரைக்கும்போது கூற்றிற்குரிய சூழலில் துறைத் தன்மைகள் இடம் பெற்றிருக்கின்றன.

பின் தோன்றிய அனைத்து இலக்கண நூல்களும் கிளவித் தொகைக்கும் அவற்றுள் காணக்கிடக்கும் துறைகளுக்கும் முதன்மை கொடுத்துள்ளன. கூற்று அடிப்படையில் இலக்கணம் இயற்றவில்லை.

**நம்பியகப்பொருள்** கவிக்கூற்றைத் துறை எனச் சுட்டுகின்றது. அகமாந்தர் அல்லாமல் புதியதாகக் கவியையும் இலக்கணப்படுத்திக் காட்டிய பாங்கை இந்நூலில் காணலாம் (பொருள் திரிபு/மயக்கம்).

## கூற்று

அகப்பொருள் மாந்தர்களைப் பற்றிய ஆய்வைத் **தொல் காப்பியம்** விரிவாக மேற்கொண்டுள்ளது. அதனையடுத்துத் தோன்றிய **இறையனார் அகப்பொருள்** அந்நூலைப் பின்பற்றி ஒருசில மரபுகளைச் சுட்டுகின்றது. அதற்குப் பின் நம்பியகப்பொருளைத் தவிர வேறு எந்த நூல்களும் அகப்பொருள் மாந்தர்கள் பற்றிய ஆய்வில் ஈடுபடவில்லை. ஆக, கிடைத்துள்ள பதின்மூன்று நூல்களுள் அகமாந்தர் பற்றிக் கூறும் இலக்கண நூல்கள் மூன்று என்பதை இலக்கண வரலாற்றால் அறிகின்றோம்.

அவற்றுள் **நம்பியகப்பொருள்** அகப்பாட்டினுள் பாட்டுடைத் தலைவன் கிளவித் தலைவன் என இரு தலைமக்கள் இடம் பெறுவர்

* **தொல். / த.நெ.வி. / ந.அ. / க.கா. / மா.அ. / மு.வீ.**

என்கிறது. இம்மாற்றம் அகப்பொருள் வரலாற்றில் குறிப்பிடத்தக்க மரபு மாற்றமாகும். இதனை இலக்கணம் வாயிலாக முதன்முதலில் எடுத்துக் காட்டுவது நம்பியகப் பொருளாகும். இந்நூல் கோவை என்ற ஓர் இலக்கிய வகைக்கு இலக்கணமாகத் தோன்றியது என்பதையும் உறுதி செய்வதாக உள்ளது.

அகத்திணையுள் கைக்கிளைக்குரிய தலைமக்கள் இவர் இவர் என நம்பியகப்பொருள் காட்டுகின்றது. இக்குறிப்பு பிற இலக்கண நூல்களில் இல்லை; மேலும் இந்நூல் பரத்தையிற் பிரிவின் வகையையும், அவ்வகைக்குரிய மகளிரையும் காட்டுகின்றது.

தொல்காப்பியர் காட்டும் அகப்பொருள் பாடல் சான்ற புலனெறி வழக்கம் பற்றியது.

> ஒத்த தலைவனும் தலைவியும் இடம் பெறுவது; பெயர் சுட்டாத மரபை உடையது; தனித்தனிப் பாடல்களாக அமைவது; அகமாந்தர் கூற்றில் அமைவது; உள்ளுறை இறைச்சி போன்ற உத்திகள் நிரம்பப் பெற்றது. முதல் கரு ஆகியவற்றின் பின்னணியில் உரிப்பொருள் இணைத்துப் பாடப் படுவது; கலிப்பா, பரிபாடல் ஆகிய பாவடிவத்தில் அமைவது.

இத்தகைய அகப்பொருள் இலக்கண மரபு அதனையடுத்த காலக் கட்டத்தில் தோன்றிய சங்க இலக்கியத்தில் நெகிழ்ச்சி பெறத் தொடங்கிவிட்டது. ஏனெனில் **ஐங்குறுநூறு, நற்றிணை, அகநானூறு, குறுந்தொகை** போன்ற அகப்பாடல்கள் ஆசிரியப்பாவால் ஆனவை. இது பாவடிவில் அரும்பிய மரபு மாற்றமாகும். எனவே பின்வந்த இலக்கணங்களில் மரபு மாற்றம், நெகிழ்ச்சி, திரிபு, வீழ்ச்சி காணப்படுதல் இயற்கை,

எனினும், தொல்காப்பியர் காட்டிய தெளிவான அகத்திணைக் கோட்பாட்டினைப் பின்வந்த நூல்கள் நெகிழ விட்டதோடு மட்டுமல்லாமல் திரித்தும் இலக்கணம் செய்துள்ளன. இதற்குச் சான்றாக அமைவது கைக்கிளை பெருந்திணை வரலாறும் அகப்புறப் பாகுபாடும் ஆகும்.

தொல்காப்பியத்திற்குப் பின் தோன்றிய நூல்கள் அகத்திணைக் கோட்பாட்டை முழுமையாக விளக்குவன அல்ல; **நம்பியகப்பொருள்** ஒரு சில மாற்றத்தோடு மரபு கருதிச் சுட்டியுள்ளதே தவிர அடிப்படை நோக்கில் வேறுபடுகின்றது; இது தவிர்ந்த பிற நூல்கள் கைக்கிளை பெருந்திணைச் செய்திகளைப் பெரும்பாலும் குறிப்பிடவில்லை என்றே கூறலாம்.

தொல்காப்பியத்திற்குப் பின் தோன்றிய அகப் பொருள் நூல்களும் பல. இந்நூற்றாண்டில் அகம் பற்றி எழுதி வரும் உரைநடை நூல்களும் பலப்பல. எந்நூல்களும் அகத்திணையின் அடிப்பண்புகளைத் துருவித் துளைத்துப் பன்மானும் காண முயன்றதில்லை. மேலும் மேலும் இலக்கிய விளக்கம் செய்ய முயன்றனவேயன்றி முதன்மையான இலக்கணத் தெளிவு செய்ய முயன்றதில்லை[175]

எனக் கூறும் அறிஞரின் கூற்று மிகப் பொருத்தமாக உள்ளது.

சுருங்கக் கூறின் அக இலக்கண நூல்களின் வழி அறியப்பட்ட அகப்பொருள் மரபுகளின் தன்மை (தரம்) அடிக்கரும்பிலிருந்து நுனிக்கரும்பு சுவைத்த நிலைக்கு ஒப்ப உள்ளது.

## சான்றெண் விளக்கம்

### இயல் ஒன்று

### இலக்கண நூல்களில் அகப்பொருள் மரபுகள்

1 அ.சா. ஞானசம்பந்தன், இலக்கியக்கலை, 293-294.

2 ஈ.கோ. பாஸ்கரதாஸ், அகப்பொருள் பாடல்களில் தலைவி, 1.

3 தொல்காப்பியம், எழுத்ததிகாரம், 208.

4 ,, ,, 258.

5 ,, சொல்லதிகாரம், 39.

6 ,, ,, 51.

7 ,, எழுத்ததிகாரம், 51, 213, 234, 237, 289, 307, 357, 483.
சொல்லதிகாரம். 109, 213.

8 சிவஞான சுவாமிகள், தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கண விளக்கச் சூறாவளி, 5.

9 பொன். கோதண்டராமன், 'தமிழிலக்கணக் கோட்பாடுகள்'. உயராய்வு-1, (1983), 96.

10 ச. அகத்தியலிங்கம், சங்கத்தமிழ்-1, 15.

11 மு. வரதராசனார், ''தமிழிலக்கியத் திறனாய்வு'', உலகத் தமிழ் மாநாடு, விழா மலர், இலக்கியப்பகுதி, (1968), 47.

12 க. கைலாசபதி, ஒப்பியல் இலக்கியம், 154-155.

13 செய்யுளுறுப்புகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | மாத்திரை | 18 | காலவகை |
| 2 | எழுத்தியல் | 19 | பயன் |
| 3 | அசைவகை | 20 | மெய்ப்பாடு |
| 4 | சீர் | 21 | எச்சவகை |
| 5 | அடி | 22 | முன்னம் |
| 6 | யாப்பு | 23 | பொருள் |
| 7 | மரபு | 24 | துறை வகை |
| 8 | தூக்கு | 25 | மாட்டு |
| 9 | தொடைவகை | 26 | வண்ணம் |
| 10 | நோக்கு | 27 | அம்மை |
| 11 | பா | 28 | அழகு |
| 12 | அளவியல் | 29 | தொன்மை |
| 13 | திணை | 30 | தோல். |
| 14 | கைகோள் | 31 | விருந்து |
| 15 | பொருள்வகை | 32 | இயைபு |
| 16 | கேட்போர் | 33 | புலன் |
| 17 | களன் | 34 | இழைபு |

தொல்காப்பியம், பொருளதிகாரம், 310:5-8

14 தொல். பொருள்., 56: 1-2

15 ,, 638

16 திவாகரம், 27: பிங்கலநிகண்டு, 134

17 தொல். பொருள்., 213

18 ,, இளம்பூரணம், 56

19 ,, 56, 458, 425

20 ,, 426

21 ,, 57

22 ,, 58

23 More than 85% of the Akam poems do not identify anybody by name. More than 55% of the Puram poems do not identify their 'talaivans' or 'talaivis' by name. (page VII:194)

**Stage I**

Nobody was identified by name in any type of poetry.

**Stage II**

The akam characters continued not to be identified by their names whereas only the talaivan in a puram was identified by his name.

**Stage III**

The poets also came to be identified by their names. (Page VII: 191)

Rajam Ramamurti, 'On the poetic convention of identify ing people by name in Cankam Literature' **Proceeding of the fifth international Conference-Seminar of Tamil Studies,** Madurai, 1981.

24 தொல். பொருள்., 49-51
25 ,, 225-227.
26 ,, 1.
27 ,, 3, 4, 16, 20 (இளம்பூரணம்), காண்க, இணைப்பு-1.
28 ,, 59.
29 ,, 3.
30 ,, 14.
31 ,, இளம்பூரணம், 14.
32 ,, நச்சினார்க்கினியம், 12.
33 ,, 15.
34 ,, பேராசிரியம், 500.
35 ,, 487, 488
36 ,, 510.
37 ,, 490.
38 ,, 491.
39 ,, 492.
40 ,, 135.
41 ,, 497, 496, 498, 494, 500.

42 தொல். பொருள்., 501.
43 ,, 191.
44 ,, 269.
45 ,, 90.
46 ,, 270
47 ,, 234.
48 ,, 179.
49 ,, 224.
50 ,, 158.
51 ,, நச்சினார்க்கினியம், 160.
52 ,, 223.
53 ,, 133.
54 ,, 27.
55 ,, 35.
56 ,, 220.
57 ,, 186-188,
58 ,, 139.
59 ,, 37.
60 ,, 173.
61 ,, 174.
62 ,, 185.
63 ,, 108.
64 ,, 128.
65 ,, 129-130.
66 ,, 118.
67 ,, 131.
68 ,, 121.
69 ,, 157.
70 கலித்தொகை 89:1.
71 தொல். பொருள்., 197.
72 ,, 44:23-24.
73 ,, 178:1-2.

74 தொல். பொருள் 199.
75 ,, 200.
76 ,, 201.
77 ,, 96.
78 ,, 116.
79 ,, 176.
80 ,, 177.
81 ,, 499.
82 ,, இளம்பூரணம், 165.
83 ,, 164.
84 ,, 505.
85 ,, 247.
86 ,, 248-255.
87 ,, இளம்பூரணம் 247.
88 ,, 257-262.
89 ,, இளம்பூரணம் 263.
90 ,, 266-268
91 இறையனாரகப்பொருள் 56.
92 ,, 1.
93 காண்க, இணைப்பு — 2.
94 இறையனாரகப்பொருள் 24.
95 ,, 32.
96 ,, 1,3,12,25,30.
97 ,, 30.
98 கிழவன், 3, 5, 12, 21. 25, 30, 31, 33.
கிழத்தி, 6, 8, 10, 13, 21, 46, 47.
தோழி, 5, 6, 7, 8, 11-14.
தாய், 26, 27, 29.
தந்தை, 26, 28.
பரத்தை 35, 40. 42.
வாயில், 53.

- இறையனாரகப்பொருள்.

99 இறையனாரகப் பொருள் 45.

100 ,, 5, 50.

101 ,, 35.

102 ,, 36-40.

103 ,, 41.

104 ,, 52.

105 ,, 31.

106 ,, 21.

107

தலைமகள் எக்காலத்தும் ஒருதன்மையள் என்றவாறு: தலைமகன் தன்மாட்டு வந்து உறைந்த காலத்தே தக்காளாய்ப் பரத்தையர் மாட்டுச் சென்று உறைந்த காலத்துத் தகாள் ஆங்கொல்லோ எனின் ஆகாள் என்றவாறு.

இறையனாரகப்பொருள், நக்கீரர் உரை, 46.

108 இறையனாரகப்பொருள், 53, 54.

109 ,, 28.

110 புறப்பொருள் வெண்பாமாலை, 14.

111 ,, 15.

112 ,, 16.

113 புறப்பொருள் வெண்பாமாலை, 17.

114 ,, 9, கொளு 45.

115 ,, 9, கொளு 46.

116 ,, 13.

117 உ.வே. சாமிநாதையர் ''முகவுரை'', புறப்பொருள் வெண்பாமாலை vii

118 தமிழ்நெறி விளக்கம் 3,7,8,

119 ,, 1.

120 ,, 14.

121 ,, 21.

122 வீரசோழியம் 88-89.

123 ,, 87.

124 காண்க, இணைப்பு -3

125 வீரசோழியம் 95.

126 நம்பியகப்பொருள் 211.

127 ,, 29.

128 ,, 241.

129 ,, 4, 6-25, காண்க இணைப்பு -4.

130 ,, 243.

131 ,, 244.

132 வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், 234.

133 நம்பியகப்பொருள் 26.

134 ,, 27, 56.

135 ,, 39-41.

136 ,, 62-63

137 ,, 123.

138 நம்பியகப்பொருள், 173.

139 ,, 201.

140

| | |
|---|---|
| தலைவன் | நற்றாய் |
| தலைவி | கண்டோர் |
| பார்ப்பான் | பாணன் |
| பாங்கன் | கூத்தர் |
| பாங்கி | விறலி |
| செவிலி | பரத்தை |
| | அறிவர் |

நம்பியகப்பொருள், 213-214.

141 'பயந்தோன் முதலாகச் சொல்லப்பட்டவர் முகத்துச் சொல் நிகழாது அகப்பொருளகத்து என்றவாறு எனவே, அவை பிறரால் எடுத்துப் பிறரால் ஒரு சொற்றந்து அடுத்துக் கூறப்படும் எனக் கொள்க. இதற்குச் செய்யுள்:

'........எந்தையு நிலனுறப் பொறான்நின்
சீறடி சிவப்ப வேயவல் குலவி
..........................................................
வெவனில குறுமக ளியங்குதி யென்னும்'

இத்தன்மையன தந்தை கூறினானாகத் தோழி எடுத்துக் கூறுதலாம்.

நம்பியகப்பொருள், 215.

142 நம்பியகப்பொருள், 225.
143 ,, 218, 219.
144 ,, 220-222.
145 ,, 223.
146 ,, 224.
147 ,, 234.
148 ,, 30, 31, 242.
149 ,, 245-249.
150 ,, 68.
151 நம்பியகப்பொருள் 63.
152 ,, 64-66.
153 ,, 80, 85-91.
154 ,, 84.
155 ,, 95-107.
156 கோவை நூல்களில் இரண்டு தலைவர்கள் பயின்று வருதல்: கவிக்கூற்று இடம் பெறல்
காட்டு: தஞ்சைவாணன் கோவை

| பாடல் எண் | துறை |
|---|---|
| 1 | காட்சி |
| 15 | வறிதுநகை தோற்றல் |
| 205 | காவலர் கடுகுதல் |

அவற்றுள் 'வறிது நகை தோற்றலு'க்கு உரையாசிரியர் விளக்கம் பின்வருமாறு :

இக்கவி யார் கூற்றெனின், உரைப் போருங்
கேட்போரு மின்மையான் கவிக்கூற்றென்று
கொள்க. அகப்பாட்டுறுப்புப் பன்னிரண்டிலும்

துறை* யென்னும் உறுப்பு இக்கவியெனக் கொள்க. தலைவன் கூற்றாய்க் கூறாது கவிக் கூற்றாய்க் கூற வேண்டுவ தென்னையெனில், இது தலைவன் கூற்றாயின் மேல் முறுவற்குறிப்புணர்தலென்னும் தலைவன் கூற்றுத் தோன்றாததால் இது கவிக்கூற்றாயிற்று.

---

*துறை என்பது கோவையில் கவிக்கூற்றைக் குறிக்கத் தொடங்கி விட்டது.

157 களவியற்காரிகை 23, 44-45.

158 ,, 25-54.

159 காண்க, இணைப்பு -5.

150 ,, -6.

161 சோம, இளவரசு, இலக்கண வரலாறு, 195.

162 தொன்னூல் விளக்கம், 199, 167-173 காண்க, இணைப்பு, 7.

163 முத்துவீரியம் 809-810.

164 குடவரைக் குறிஞ்சியும் குணகடல் நெய்தலும்
கடவ தாகும் களவிற் குரித்தே
நன்னில மருதமும் தொன்னில முல்லையும்
துன்னருங் கற்பொடு தோன்றும் தொடர்ந்தே
இடைநிலைப் பாலை இருபாற்கு முரித்தே
படர்கொடி முல்லையின் பாற்படு மியற்றே

வீரசோழியம், பெருந்தேவனார் உரை, 90-94.

165 முத்துவீரியம், 790-800, காண்க, இணைப்பு 8.

166 ,, 805.

167 காண்க, இணைப்பு 9.

168 சுவாமிநாதம், 1 73.

169 உடன்போக்கு இடையீடுற்று வரைதல் நூ.

| | | |
|---|---|---|
| சுவாமிநாதம் 9 | துறைகள் | (116) |
| நம்பியகப்பொருள் 6 | துறைகள் | (198) |

கூடுதலாக மூன்று துறைகள் சுவாமிநாதத்தில் உள்ளன. அவை:

1 தமர்க்கு அன்னையுணர்த்தல்
2 தமர் சேறல்
3 மணம் கண்டோர் மகிழ்தல்

பரத்தையிற் பிரிவு

| | | | |
|---|---|---|---|
| **சுவாமிநாதம்** | 6 | துறைகள் | (119) |
| **நம்பியகப்பொருள்** | 4 | துறைகள் | (204) |

கூடுதலாக இரண்டு துறைகள் சுவாமிநாதத்தில் உள்ளன. அவை:

1 மகிழ்தல்
2 விடுத்தல்.

170 இரவுக்குறி இடையீடு + வரைதல் வேட்கை (102).
வரைதல் வேட்கை + வரைவு கடாதல் (103).
வரைவு கடாதல் + ஒருவழித் தணத்தல் (105).
செவிலி அறத்தொடு நிற்றல் + உடன்போய் வரவு (110)

சுவாமிநாதம்.

171 அறுவகை இலக்கணம் 48.

172 ,, 50.

173 Taking into consideration all these data particularly within their context and structural relationships. I believe we cannot (as S. V. Subramanian or M. Sini Venkataswamy would have it) write a simple equation of Tamil = love (katal, anbu). but **Tamil = a Culture — Specific manner of Love relationship** (i.e. the spontaneous Love of Kalavu, particularly as reflected in Literature and as typical theme of classical Tamil Poetry).

Kamil V. Zevelebil 'The term' Tamil **International Journal of Dravidian Linguistics Volume XV No. I (1986)** 9.

170 காண்க, இணைப்பு 10.

175 வ. சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், 210.

# இணைப்பு—1

## தொல்காப்பியமும் இளம்பூரணமும்

| திணை | | (நூ. 3) முதற்பொருள் (நூ. 4) | கருப்பொருள் | உரிப்பொருள் |
|---|---|---|---|---|
| | நிலம் (நூ. 5) | பொழுது | | |
| 1 | 2 | 3 | 4 | 5 |
| முல்லை (நூ. 6) | காடுறை உலகம் | கார் (ஆவணி, புரட்டாசி)<br>மாலை (இராப்பொழுதின் முதற்கூறு) (நூ. 6) | தெய்வம்<br>உணா<br>மா<br>மரம்<br>புள்<br>பறை<br>செய்தி<br>யாழின் பகுதி<br>(நூ. 20)<br>திணை நிலைப் பெயர் (நூ. 22) | புணர்தல்<br>பிரிதல்<br>இருத்தல்<br>இரங்கல்<br>ஊடல்<br>இவற்றின் நிமித்தம் (நூ. 16) |
| குறிஞ்சி (நூ. 7) | மைவரை உலகம் | கூதிர் (ஐப்பசி, கார்த்திகை)<br>பனி எதிர் பருவம் (மார்கழி, தை) யாமம் (இராப்பொழுதின் நடுக்கூறு) (நூ. 7-8) | | |
| மருதம் (நூ. 9) | தீம்புனல் உலகம் | ——<br>வைகறை (இராப்பொழுதின் பிற்கூறு) விடியல் (பகற்பொழுதின் முற்கூறு) (நூ. 9) | | |
| நெய்தல் (நூ. 10) | பெருமணல் உலகம் | ——<br>ஏற்பாடு (பகற்பொழுதின் பிற்கூறு) (நூ. 10) | | |
| பாலை (நூ. 11) | நிலம் இல்லை (நூ. 2) | வேனில் இளவேனில் (சித்திரை, வைகாசி)<br>முதுவேனில் (ஆனி, ஆடி)<br>பின்பனி (மாசி, பங்குனி)<br>நண்பகல் (பகற்பொழுதின் நடுக்கூறு)<br>(நூ.ள் 11, 12) | | |

* (நூ. 9 இளம். உரை)
பருவம் வரைந்தோதாமையின், அறுவகைப் பருவமும் கொள்ளப்படும் இது நெய்தற்கும் ஒக்கும்.

* **தொல்.**

6 பெரும்பொழுது—ஓர் ஆண்டை நிறைவு செய்கிறது
6 சிறுபொழுது —ஒரு நாளை நிறைவு செய்கிறது

தொல்காப்பியம்—கருப்பொருள் (நூ. 5 + நூ. 20ம் இளம். உரையும்)

| கரு | முல்லை | குறிஞ்சி | பாலை | மருதம் | நெய்தல் |
|---|---|---|---|---|---|
| தெய்வம் (நூ. 5) | மாயோன் | சேயோன் | கொற்றவை (இளம். உரை) | வேந்தன் | வருணன் |
| உணா | வரகு, முதிரை | தினை, ஐவனம், வெதிர் நெல் | ஆறலைத்தலான் வரும் பொருள் | நெல் | உப்பு விலை, மீன் விலை |
| மா | மான், முயல் | யானை, புலி, பன்றி, கரடி | வலியழிந்த யானை, ,, புலி, ,, செந்நாய் | எருமை, நீர் நாய் | கரா சுறா |
| மரம் | கொன்றை, குருந்து, புதல் | வேங்கை, கோங்கு, | பாலை, இருப்பை, கள்ளி, சூரை | மருது, காஞ்சி, | புன்னை, கைதை, |
| புள் | கானாங்கோழி | மயில், கிளி | எருவை, பருந்து | அன்னம், அன்றில் | கடற்காக்கை |
| பறை | ஏறு கோட்பறை | வெறியாட்டுப் பறை, தொண்டகப் பறை | ஆறலைப் பறை, சூறை கொண்ட பறை | நெல்லரிப் பறை | நாவாய்ப்பறை |
| செய்தி | நிரை மேய்த்தல் | தேனழித்தல் | ஆறலைத்தல் | உழவு | மீன்பிடித்தல், உப்பு விளைத்தல் |
| யாழின் பகுதி (பண்) இளம். | சாதாரி | குறிஞ்சி | பாலை | மருதம் | செவ்வழி |
| (பிறவும்) பூ | முல்லை, பிடா, தளா, | வேங்கை, காந்தள் குறிஞ்சி, | மரா | தாமரை, கழுநீர் | நெய்தல் |
| நீர் | கான்யாறு | சுனைநீர், அருவிநீர் | அறுநீர்க்கூவல், அறுநீர்ச்சுனை | ஆற்றுநீர், பொய்கை நீர் | கேணி நீர், கடல் நீர் |

* குறிஞ்சி மைவரை யுலகமும் கூதிர்க்காலமும் நள்ளிருளும் கூறினமையான் அந்நிலத்தினும் காலத்தினும் நிகழ்பவை கொள்க.

* பாலை இந்நிலங்களில் வேனிற்காலத்து நிகழ்வன கருப்பொருளாகக் கொள்ளப்படும்

## இணைப்பு 2

### இறையனார் அகப்பொருள் (நூ. 1 உரையில்)

| கருப்பொருள் | குறிஞ்சி | நெய்தல் | பாலை | முல்லை | மருதம் |
|---|---|---|---|---|---|
| தெய்வம் | முருகவேள் | வருணன் | *(பிறர்)பகவதி, ஆதித்தன் | வாசுதேவன் | இந்திரன் |
| உணா | ஐவனநெல், தினை | மீன்விலைப் பொருள், உப்பு விலைப்பொருள் | ஆறலைந்தன, ஊரெறிந்தன | வரகு, சாமை | செந்நெல், வெண்ணெல் |
| மா | புலி, பன்றி, யானை | சுறா, முதலை | வலியழிந்த யானை, புலி, செந்நாய் | முயல், சிறுமான் | எருமை, நீர் நாய் |
| மரம் | அகில், ஆரம், திமிசு தேக்கு, வேங்கை | புன்னை, ஞாழல், கண்டல் | இருப்பை, ஓமை | கொன்றை, குருந்து | வஞ்சி, காஞ்சி, மருது |
| புள் | கிளி, மயில் | அன்னம், அன்றில் மகன்றில் | கழுகு, பருந்து புறா | கானங்கோழி, மயில், சிவல் | நீர்க்கோழி, தாரா |
| பறை | வெறியாட்டுப் பறை, தொண்டகப் பறை, குரவைப் பறை | மீன்கோட்பறை, நாவாய்ப்பறை | பூசற்பறை, ஊரெறி பறை, நிரைகோட் பறை | ஏறுகோட்பறை, முரசு | மணமுழவு, நெல்லரி கிணை |
| செய்தி | தேன் அழித்தல், கிழங்கு அகழ்தல், குன்றம் ஆடுதல், தினைக்கிளி கடிதல் | மீன் விற்றல், உப்பு விற்றல், அவை படுத்தலும் | நிரைகோடல், சாத்தெறிதல், சூறையாடல் | வரகுக்குக் களைகட்டல், அவை அறுத்தல், கடாவிடுதல், நிரை மேய்த்தல் | நெல்லரிதல், கடாவிடுதல், பயிர்க்குக் களை கட்டல் |

| கருப்பொருள் | குறிஞ்சி | நெய்தல் | பாலை | முல்லை | மருதம் |
|---|---|---|---|---|---|
| யாழ்/பண் (பிறவும்) | குறிஞ்சியாழ் | விளரியாழ் | பஞ்சுரம் (பண்) | முல்லை (பண்) | மருத யாழ் |
| தலைமகன் பெயர் | சிலம்பன், வெற்பன், பொருப்பன் | துறைவன், கொண்கன், சேர்ப்பன் | மீளி, விடலை, காளை | குறும்பொறை, நாடன் | ஊரன், மகிழ்நன் |
| தலைமகள் பெயர் | கொடிச்சி, குறத்தி | நுளைச்சி, பரத்தி | எயிற்றி, பேதை | கிழத்தி, மனைவி | கிழத்தி, மனைவி |
| நீர் | அருவி நீர், சுனைநீர் | உவர்க்கழி, மணற்கிணறு | அறுநீர்க் கூவல், அறுநீர்ச்சுனை | கான்யாறு | மனைக்கிணறு, பொய்கை |
| ஊர் | சிறுகுடி, குறிச்சி | கல்மேறு பட்டினமும், சிறுகுடியும் பாக்கமும் | கொல்குறும்பு | பாடி, சேரி | பேரூர் |
| பூ | குறிஞ்சி, காந்தள், வேங்கை, சுனைக்குவளை | வெள்ளிதழ், கைதை, நெய்தல் | மராம்பூ, குராம்பூ, பாதிரிப்பூ | முல்லை, தோன்றி | தாமரைப்பூ, செங்கழுநீர்ப்பூ |
| மக்கள் பெயர் | குறவர், இறவுளர், குன்றவர் | பரதர், பரத்தியர் நுளையர், நுளைச்சியர் | எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர் | இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர் | கடையர், கடைசியர், உழவர், உழத்தியர் |

* தொல்காப்பியர் பாலைக்கு நிலம் வேண்டிற்றிலர்; வேண்டாமையின் தெய்வமும் வேண்டிற்றிலர்; பிறர் பகவதியையும் ஆதித்தனையும் தெய்வம் என வேண்டுவர்.

## இணைப்பு 3

(ஒரே நூற்பாவில் ஒரு திணைக்குரிய முதல், கரு, உரி ஆகிய மூன்றும் உள்ளன)

**வீரசோழியம்**

| கருப்பொருள் | குறிஞ்சி (நூ. 90) | பாலை (நூ. 91) | முல்லை (நூ. 92) | மருதம் (நூ. 93) | நெய்தல் (நூ. 94) |
|---|---|---|---|---|---|
| நிலம் | மலை | வெம்பரல் | காடு | பழனம் | கடல் |
| பொழுது | இருள், முன்பனி, கூதிர் | வேனில், பின்பனி | கார், மாலை | வளர்பனி | பனி |
| தெய்வம் | முருகன் | கன்னி | நீடுமால் | இந்திரன் | வருணன் |
| உணா | தேன் | —— | —— | செந்நெல் | மீன் |
| மா | யானை | கலை, செந்நாய் | —— | எருமை, நீர்நாய் | திமிலம், சுறா முதலை |
| மரம் | மூங்கில் | அகில் | கொன்றை, குருந்தம் | —— | புன்னை, கண்டல் |
| புள் | மஞ்ஞை | பருந்து | —— | மகன்றில் | அன்னம் |
| செய்தி | தினை (எடுத்தல்) சுனை (ஆடல்) | —— | நிரைமேய்த்தல் | —— | —— |
| யாழ் | குறிஞ்சி | பாலை | முல்லை | —— | விளரி |
| தலைவன் | வெற்பன் | விடலை | —— | ஊரன் | கொண்கன் |
| பூ | வேங்கை, காந்தள், இலவம் | —— | தோன்றி | தாமரை, செங்கழுநீர் | கைதை |
| மக்கள் | குன்றவர் | வேடர், குறும்பர் | இடையர் | கடைசியர் | நுளையர் |
| உரிப்பொருள் | புணர்தல் | பிரிதல் | மனையிருத்தல் | ஊடல் | இரங்கல் |

## இணைப்பு 4

(அ)

நம்பியகப்பொருள் (நூள். 7-25)

| திணை (நூ. 6) | நிலம் (நூ. 9) | முதற்பொருள் (நூ. 8) பொழுது (நூ. 10) பெரும்பொழுது வகை (நூ. 11) | சிறுபொழுது வகை (நூ. 12) | கருப்பொருள் வகை (நூ. 19) | | உரிப்பொருள் (நூ. 25) |
|---|---|---|---|---|---|---|
| | | | ஐந்திணைக்கும் உரிய பொருள்கள் (நூ. 7) | | | |
| குறிஞ்சி | வரை | கூதிர், முன்பனி (நூ. 13) | யாமம் | ஆரணங்கு<br>உயர்ந்தோர்<br>அல்லோர்<br>புள்<br>விலங்கு<br>ஊர்<br>(நூ. 20) | நீர்<br>பூ<br>மரம்<br>உணா<br>பறை<br>யாழ்<br>பண், தொழில் | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| பாலை | சுரம் | வேனில், பின்பனி (நூ. 14) | நண்பகல் | ,, | (நூ. 21) | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |
| முல்லை | புறவு | கார் (நூ. 15) | மாலை | ,, | (நூ. 22) | இருத்தலும் இருத்தல் நிமித்தமும் |
| மருதம் | பழனம் | கார், கூதிர், முன்-பின், பின்பனி, இள-வேனில், முதுவேனில் (நூ.ள். 16, 18) | காலை | ,, | (நூ. 23) | ஊடலும் ஊடல் நிமித்தமும் |
| நெய்தல் | திரை | ,, (நூ.ள். 17, 18) | எற்பாடு | ,, | (நூ. 24) | இரங்கலும் இரங்கல் நிமித்தமும் |

(ஆ) நம்பியகப்பொருள்

| கருப்பொருள் | குறிஞ்சி (நூ. 20) | பாலை (நூ. 21) | முல்லை (நூ. 22) | மருதம் (நூ. 23) | நெய்தல் (நூ. 24) |
|---|---|---|---|---|---|
| ஆரணங்கு | சேய் (முருகன்) | கன்னி (துர்க்கை) | நெடுமால் | இந்திரன் | வருணன் |
| உயர்ந்தோர் | பொருப்பன், வெற்பன், சிலம்பன் குறத்தி, கொடிச்சி | விடலை, காளை, மீளி, எயிற்றி | குறும்பொறை, நாடன், தோன்றல் மனைவி, கிழத்தி கிழத்தி | ஊரன், மகிழ்நன் கிழத்தி, மனைவி | சேர்ப்பன், புலம்பன், பரத்தி, நுளைச்சி |
| அல்லோர் | குறவர், கானவர், குறத்தியர் | எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர் | இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர் | உழவர், உழத்தியர், கடையர், கடைச்சியர் | நுளையர், நுளைச்சியர், பரதர் பரத்தியர், அளவர், அளத்தியர் |
| புள் | கிளி, மயில் | புறா, பருந்து, எருமை, கழுகு | காட்டுக்கோழி | வண்டானம், மகன்றில், நாரை அன்னம், பெரு-நாரை, கம்புள், குருகு, தாரா | கடற்காகம், |
| விலங்கு | புலி, கரடி, யானை, சிங்கம் | செந்நாய் | மான், முயல் | எருமை, நீர்நாய் | சுறா மீன் |
| ஊர் | சிறுகுடி | குறும்பு | பாடி | பேரூர், மூதூர் | பாக்கம், பட்டினம் |
| நீர் | அருவிநீர், சுனைநீர் | நீரில்லாக் குழி, ,, கிணறு | குறுஞ்சுனை, கான்யாறு | யாற்றுநீர், கிணற்றுநீர், குளத்துநீர் | உவர்நீர்க்கேணி, கவர்நீர் |
| பூ | வேங்கை, குறிஞ்சி, காந்தள் | குராஅ, மராஅ | குல்லை, முல்லை தோன்றி, பிடவம் | தாமரை, கழுநீர் குவளை | நெய்தல், தாழை, முண்டகம், அடம்பம், |

| கருப்பொருள் | குறிஞ்சி (நூ. 20) | பாலை (நூ. 21) | முல்லை (நூ. 22) | மருதம் (நூ. 23) | நெய்தல் (நூ. 24) |
|---|---|---|---|---|---|
| மரம் | சந்தனம், தேக்கு, அகில், அசோகு, நாகம், மூங்கில் | உழிஞை, பாலை, ஓமை, இருப்பை | கொன்றை, காயா, குருந்தம் | காஞ்சி, வஞ்சி மருதம் | கண்டல், புன்னை ஞாழல் |
| உணா | மலைநெல், மூங்கிலரிசி, தினை | வழியிற் பறித்த பொருள், பதியிற் கவர்ந்த பொருள் | வரகு, சாமை, முதிரை | செந்நெல்லரிசி, வெண்ணெல்லரிசி | மீனும் உப்பும் விற்றுப் பெற்ற பொருள் |
| பறை | தொண்டகப்பறை | துடி | ஏற்றுப்பறை | நெல்லரிகிணை, மணமுழவு | மீன்கோட்பறை நாவாய்ப்பம்பை |
| யாழ் | குறிஞ்சி யாழ் | பாலை யாழ் | முல்லை யாழ் | மருத யாழ் | விளரியாழ் |
| பண் | குறிஞ்சிப் பண் | பஞ்சுரம் | சாதாரி | மருதப்பண் | செவ்வழிப்பண் |
| தொழில் (நூ. 29) | வெறியாடல், மலை நெல் விதைத்தல், தினை காத்தல். தேனழித் தெடுத்தல், கிழங்கு கிண்டி எடுத்தல், அருவி நீராடல், சுனை நீராடல் | போர் செய்தல், பகற் சூறை-யாடுதல் | சாமைவரகு விதைத்தல் அவற்றின் களை கட்டல், அரிதல், கடாவிடுதல், கொன்றைக் குழலூதல், மூவின மேய்த்தல், கொல் லேறு தழுவுதல், குரவைக் கூத்தாடல், கான்யாறாடல் | விழாச் செய்தல், வயற்களை கட்டல், நெல்லரிதல், கடாவிடுதல், குளம் குடைதல், புதுப் புனலாடல் | மீன்பிடித்தல், உப்புப்படுத்தல், அவை விற்றல், மீன் உணக்கல், அவற்றை உண்ண வரும் பறவை களை ஓட்டுதல், கடலாடல் |

## இணைப்பு 5

### மாறனகப்பொருள், நம்பியகப்பொருள்—இணைப் பார்வை

| | மா. அ. | நம்பி | |
|---|---|---|---|
| களவிற்குரிய கிளவித்தொகை | 6, 12-5 | 123 | |
| இயற்கைப்புணர்ச்சி வகை | 18 | 126 | |
| ,, விரி | 19 | 127.... | 1 |
| வன்புறை | 21 | 129.... | 2 |
| தெளிவு | 22 | 130 | |
| பிரிவுழி மகிழ்ச்சி | 23 | 131 | |
| பிரிவுழிக் கலங்கல் வகை | 24 | 132 | |
| ,, விரி | 25 | 133 | |
| இடந்தலைப்பாடு வகை | 26 | 134 | |
| ,, விரி | 27 | 135 | |
| பாங்கற்கூட்டம் வகை | 28 | 136 | |
| ,, விரி | 29 | 137.... | 3 |
| பாங்கிமதியுடன்பாடு வகை | 30 | 138 | |
| ,, விரி | 31-3 | 139-41 | |
| பாங்கியிற் கூட்டம் வகை | 35 | 143 | |
| இரந்து பின்னிற்றல் சேட்படை | 36 | 144 | |
| மடற்கூற்று மடல்விலக்கு | 37 | 145.... | 4 |
| உடன்படல் | 38 | 146 | |
| மெலிதாகக் குறைநயப்பித்தல் மறுத்தல் | 39 | 147 | |
| வலிதாகச் சொல்லி குறைநயப்பித்தல் மெலிதாகச் சொல்லி மேவல் | 40 | 148 | |
| கூடல் கூட்டல் ஆயங்கூட்டல் வேட்டல் | 41 | 149 | |
| பகற்குறி | 43 | 151 | |
| பகற்குறி விரி | 44 | 152 | |
| ஒருசார் பகற்குறி வகை | 45 | 153 | |
| ,, விரி | 46 | 154 | |
| பகற்குறி இடையீடு வகை | 47 | 155 | |
| ,, விரி | 48 | 156 | |

| | மா. அ. | நம்பி | |
|---|---|---|---|
| இரவுக்குறி வகை | 49 | 157 | |
| இரவுக்குறி விரி | 50 | 158 | |
| இரவுக்குறி இடையீடு வகை | 51 | 159 | |
| அல்லகுறி | 52 | 160.... | 5 |
| வருந்தொழிற்கருமை | 53 | 161 | |
| வரைதல் வேட்கை வகை | 55 | 163 | |
| ,, விரி | 56 | 164.... | 6 |
| வரைவு கடாதல் வகை | 57 | 165 | |
| ,, விரி | 58 | 166 | |
| ஒருவழித் தணத்தல் வகை | 59 | 167.... | 7 |
| ,, விரி | 60 | 168 | |
| வரைபொருட்பிரிவு வகை | 61 | 169 | |
| ,, விரி | 62 | 170.... | 8 |
| வரைவுக்குரிய கிளவித்தொகை | 68 | 172 | |
| வரைவு மலிதல் வகை | 69 | 173 | |
| ,, விரி | 70 | 174 | |
| அறத்தொடு நிலை வகை | 71 | 175 | |
| ,, விரி | 72 | 176 | |
| பாங்கி அறத்தொடு நிற்றல் | 73-4 | 177 | |
| செவிலி ,, | 75 | 178 | |
| நற்றாய் ,, | 76 | —— | |
| களவி வெளிப்பாட்டிற்குரிய கிளவித்தொகை | 78 | 180.... | 9 |
| உடன்போக்கு வகை | 79 | 181 | |
| ,, விரி | 80 | 182 | |
| வரைந்து கோடல் வகை | 81 | —— | |
| ,, விரி | 82 | —— | |
| கற்பொடு புணர்ந்த கவ்வை வகை | 83 | 183 | |
| செவிலி புலம்பல் | 84 | 184 | |
| நற்றாய் புலம்பல் | 85 | 185 | |
| நற்றாய் மருட்சி | 86 | 186 | |

| | மா.அ. | நம்பி |
|---|---|---|
| கண்டோரிரங்கல் | 87 | 187 |
| செவிலி பின்தேடிச்சேறல் | 88 | 188 |
| மீட்சி வகை | 90 | 190 |
| மீட்சி விரி | 91 | 191....10 |
| தன்மனை வரை வகை | — | 193 |
| ,, விரி | 92 | 194 |
| உடன் போக்கிடையீடு வகை | 94 | 197....11 |
| ,, விரி | 95 | 198 |
| கற்பிற்குரிய கிளவித்தொகை | 98 | 201 |
| இல்வாழ்க்கை வகை | 99 | 202 |
| ,, விரி | 100 | 203 |
| பரத்தையிற் பிரிவு வகை | 101 | 204 |
| உணர்த்த உணரும் ஊடற்குரிய கிளவிகள் | 102 | 205 |
| உணர்த்த உணரா ஊடற்குரியவை | 103 | 206....12 |
| உணர்வதோடு ஊடற்குரியையவை | 104 | 207....13 |
| ஐவகைப் பிரிவு வகை | 106 | 209 |

கூடுதலாக உள்ள துறைகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | மா. அ. | : | மொழிபெற விரும்பல் |
| 2 | ,, | : | இருபதமும் வேண்டல் |
| 3 | ,, | : | ஆண்டகை பாங்கனை அவனே கென்றல், காட்டிய கடவுளைக் கண்ணுற்றிறைஞ்சல், பாங்கன் தலைமகளைக் கண்டமை கூறல் |
| 4 | ,, | : | எழுது முன்னிரங்கல், இறைவனிறைவியைக் கிழியெழுதியிரங்கல் |
| 5 | ,, | : | நறுந்துணரலர்க்குறி நாட்டமுற்றிணையல் |
| 6 | ,, | : | பிற விலக்குவித்தல் |
| 7 | ந. அ. | : | பகலினும் இரவினும் அகலிவண் என்றல் |
| 8 | மா. அ. | : | வற்புறுத்தல், வன்பொறையெதிரழிதல் |
| 9 | ,, | : | வரைந்தவன் கோடல் |
| 10 | ,, | : | சுடரோடிரந்து கொண்டேத்தல் |
| 11 | ,, | : | கள்ளியம்புரவுட வள்ளியுநூலல் மீண்டவன் செல்வனும் செல்வியும் வியனக ராண்ட மைந்தனரென வாராய்ந்துரைத்தல் |
| 12 | ,, | : | களித்தவன் விருந்தொடுங் கடிமனை யகத்துற வொளித்தவூடல் வெளிப்படுகாலை மின்னிடை யமளியில் வென்னிட மெலிதல் |
| 13 | ,, | : | மதுப்பொழில் தாரோன்மனைவயிற் பொதுத்தலத் திருந்துழிப் புரைதீர் மனைவியர் நினைவறி கண்புதை நிகழ்தல் |

# இணைப்பு 6

## இலக்கண விளக்கம் (17 நூ.) நம்பியகப்பொருள் (12 நூ.)

## இணைநிலைப் பார்வை

| | நூற்பா எண் | |
|---|---|---|
| | இ.வி. | ந.அ. |
| கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை | 5 | 3,4,5 |
| அகப்பொருள் சொல்லப்படும் திறன் | 6 | 2 |
| ஐந்திணையின் பெயர் | 7 | 6 |
| ஐந்திணைக்குரிய பொருள் | 8 | 7 |
| முதற்பொருளின் வகை | 9 | 8 |
| நிலத்தின் வகை | 10 | 9 |
| காலத்தின் வகை | 11 | 10 |
| பெரும்பொழுதின் பாகுபாடு | 12 | 11 |
| சிறுபொழுதின் பாகுபாடு | 13 | 12 |
| நிலங்களுக்குரிய பொழுது | 14 | 13-18 |
| கருப்பொருள் வகை | 15 | 19 |
| குறிஞ்சிக்குரிய கருப்பொருள் | 16 | 20 |
| பாலைக்குரிய ,, | 17 | 21 |
| முல்லைக்குரிய ,, | 18 | 22 |
| மருதத்திற்குரிய ,, | 19 | 23 |
| நெய்தலுக்குரிய ,, | 20 | 24 |
| உரிப்பொருள் பாகுபாடு | 21 | 25 |
| ஐந்திணைக்குரிய கைகோள் வகை | 24 | 26 |
| களவொழுக்கம் கண்நிகழும் புணர்ச்சி வகை | 25 | 27 |
| கைக்கிளை நிகழுங்காலம் | 27 | 29 |
| கைக்கிளை-தலைமக்கள் | 28 | 30, 31 |
| இயற்கைப்புணர்ச்சி | 29 | 32 |
| இயற்கைப்புணர்ச்சி சிறப்புவிதி | 30 | 33 |
| களவுப் புணர்ச்சிக்கு ஒழிபு | 31 | 34 |
| உள்ளப்புணர்ச்சி நிகழுங்காலம் | 32 | 35 |

| | இ.வி. | ந.அ. |
|---|---|---|
| மெய்யுறு புணர்ச்சி நிகழுங்காலம் | 33 | 36 |
| களவுப் புணர்ச்சி நிகழும் இடம் | 34 | 37, 38 |
| களவில் நிகழும் பிரிவு வகை | 35 | 39 |
| ஒருவழித் தணத்தலின் இலக்கணம் | 36 | 40 |
| வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவு | 37 | 41 |
| வரைவு நிகழும் இடம் | 38 | 42 |
| களவு வெளிப்படாமுன் நிகழும் வரைவு | 39 | 43 |
| களவு வெளிப்பட்ட பின் வரைதல் | 40 | 44 |
| உடன்போய் வரைதல் | 41 | 45 |
| மீண்டு வரைதல் | 42 | 46 |
| அறத்தொடுநிலை நிகழும் இடம் | 43 | 47 |
| அறத்தொடு நிற்றற்குரியர், நிற்கும் நெறி | 44 | 48 |
| தலைவி அறத்தொடு நிற்கும் இடம் | 45 | 49 |
| பாங்கி அறத்தொடு நிற்கும் இடம் | 46 | 50 |
| செவிலி அறத்தொடு நிற்கும் இடம் | 47 | 51 |
| நற்றாய் அறத்தொடு நிற்கும் இடம் | 48 | 52 |
| அறத்தொடு நிற்பார்க்கு வினா நிகழும் இடம் | 49 | 53 |
| உடன்போக்கு நிகழ்ந்த விடத்து அறத்தொடு நிற்றற்குரியர் | 50 | 54 |
| கற்பின் வகை | 51 | 55 |
| கற்பிற் புணர்ச்சியின் வகை | 52 | 56 |
| களவின் வழிவந்த கற்பின் வகை | 53 | 57 |
| கற்புக்காலத்து தலைவற்கு நிகழும் புணர்ச்சி | 54 | 58 |
| அந்நிகழ்ச்சிக்குரிய மகளிர் | 55 | 59 |
| களவிற் புணர்ச்சிக்குரிய மகளிர் | 56 | 60 |
| மன்றற் புணர்ச்சிக்குரிய மகளிர் | 57 | 61 |
| கற்பிற் பிரிவின் வகை | 58 | 62 |
| பரத்தையர் பிரிவின் வகை | 59 | 63 |
| அயன்மனைப் பிரிவுக்கு ஏது | 60 | 64 |
| அயர்சேரியர் பிரிவுக்கு ஏது | 61 | 65 |
| புறநேகர்ப்பாக்கிற்குக் காரணம் | 62 | 66 |

| | இ.வி. | ந.அ. |
|---|---|---|
| ஊடல் நிகழும் இடம் | 63 | 67 |
| ஊடல் தணிவிக்கும் வாயில்கள் | 64 | 68 |
| ஓதற் பிரிவு | 65 | 69 |
| ஏனைக் கல்விக்கு உரியர் | 66 | 70 |
| படைக்கலம் பயில உரியர் | 67 | 71 |
| காவற் பிரிவின் வகை | 68 | 72 |
| அறப்புறங் காவல் | 69 | 73 |
| நாடு காவலுக்குரியர் | 70 | 74 |
| தூது போதற் தொழிலின் தன்மை | 71 | 75 |
| நாடுகாவற் பிரிவு & தூதிற் பிரிவு சிறப்பு விதி | 72 | 76 |
| உதவி நிமித்தம் பிரியும் பிரிவு | 73 | 77 |
| நான்கு வருணத்தார்க்கும் உரிய பிரிவு | 74 | 78 |
| நில மக்களுள் தலைமக்களுக்கு உரிய பிரிவு | 75 | 79 |
| பிரியும் தலைமகற்கு உரிய இலக்கணம் | 76-8 | 80-2 |
| நால்வர்க்கு உரியஇயல்பு | 79 | 83 |
| அந்தணர்க்கு ஆகாத இயல்பு | 80 | 84 |
| அரசர்க்கு ஆகாத இயல்பு | 81 | 85 |
| தலைமகற்கு பிரிவிடத்து உரியதோர் இயல்பு | 82 | 86 |
| செலவழுங்கற்குரிய இடம் | 83 | 87 |
| செலவழுங்கற்குரிய காரணம் | 84 | 88 |
| ஓதற்பிரிவுக்குக் காலவரையறை | 85 | 89 |
| தூது துணை பொருள்வயிற் பிரிவு | 86 | 90 |
| பரத்தையிற் பிரிவு நிகழ்தற்காகாக் காலம் | 87 | 91 |
| ஓதற்குப் பிரிவோன் செய்யுத்தகாதன | 88 | 92 |
| தூது துணைவயிற் பிரிவுக்குச் சிறப்பு விதி | 89 | 93 |
| கற்புக் காலத்துத் தலைவிக்குரிய ஒழுகலாறு | 90 | 94 |
| பாணர்க்குரிய செயல் | 91 | 95 |
| விறலி, கூத்தர், இளையோர், கண்டோர்க்குரிய செயல் | 92-5 | 96-9 |
| பார்ப்பனப் பாங்கற்குரிய செயல் | 96 | 100 |

| | இ.வி. | ந.அ. |
|---|---|---|
| சூத்திரப் பாங்கற்குரிய செயல் | 97 | 101 |
| பாகற்குரிய செயல் | 98 | 102 |
| பாங்கிற்குரிய செயல் | 99 | 103 |
| செவிலி அறிவர்க்குரிய செயல் | 100 | 104 |
| காமக் கிழத்திக்குரிய செயல் | 101 | 105 |
| பரத்தைக்குரிய செயல் | 102 | 106 |
| பரத்தைக்குரிய வேறுபாடு | 103 | 107 |
| இளையர் தலைமகற்கு இன்ன உரிமையர் | 104 | 108 |
| இருவகைப் பாங்கர் இன்ன உரிமையர் | 105 | 109 |
| தோழி உரிமை | 106 | 110 |
| செவிலி உரிமை | 107 | 111 |
| அறிவர் உரிமை | 108 | 112 |
| காமக் கிழத்தியர் இலக்கணம் | 109 | 113 |
| காதற் பரத்தையர் | 110 | 114 |
| காதற் பரத்தையர் இயல்பு | 111 | 115 |
| துறவு | 112 | 116 |

(அகத்திணை இயல் முற்றும்)

| | | |
|---|---|---|
| களவின் இலக்கணம் | 113 | 117 |
| கைக்கிளையின் பாகுபாடு | 114 | 118 |
| ஐயம் | 117 | 120 |
| ஐயங்களையும் கருவி | 118 | 121 |
| குறிப்பறிதல் | 119 | 122 |
| களவிற்குரிய கிளவித்தொகை | 120 | 123 |
| தெய்வத்தின் எய்தும் புணர்ச்சியின் விரி | 121 | 125 |
| தலைவியின் எய்தும் புணர்ச்சியின் வகை | 122 | 126 |
| தலைவியின் எய்தும் புணர்ச்சியின் விரி | 123 | 127 |
| வன்புறைவகை | 124 | 128 |
| வன்புறை விரி | 125 | 129 |
| தெளிவு இலக்கணம் | 126 | 130 |
| பிரிவுழி மகிழ்ச்சி விரி | 127 | 131 |

| | இ.வி. | ந.அ. |
|---|---|---|
| பிரிவுழிக் கலங்கல் வகை | 128 | 132 |
| பிரிவுழிக் கலங்கல் விரி | 129 | 133 |
| இடந்தலைப்பாட்டின் வகை | 130 | 134 |
| இடந்தலைப்பாட்டின் விரி | 131 | 135 |
| பாங்கற்கூட்டம் வகை | 132 | 136 |
| பாங்கற்கூட்டம் விரி | 133 | 137 |
| மதியுடம்பாட்டின் வகை | 134 | 138 |
| மதியுடம்பாட்டின் விரி | 135 | 139-142 |
| பாங்கியிற்கூட்டம் வகை | 136 | 143 |
| பாங்கியிற்கூட்டம் விரி | 137 | 144-150 |
| பகற்குறி வகை | 138 | 151 |
| பகற்குறி விரி | 139 | 152 |
| ஒருசார் பகற்குறி வகை | 140 | 153 |
| ஒருசார் பகற்குறி விரி | 141 | 154 |
| பகற்குறி இடையீட்டு வகை | 142 | 155 |
| பகற்குறி இடையீட்டு விரி | 143 | 156 |
| இரவுக்குறி வகை | 144 | 157 |
| இரவுக்குறி விரி | 145 | 158 |
| இரவுக்குறி இடையீட்டு வகை | 146 | 159 |
| இரவுக்குறி இடையீட்டு விரி | 147 | 160-162 |
| வரைதல் வேட்கை வகை | 148 | 163 |
| வரைதல் வேட்கை விரி | 149 | 164 |
| வரைவு கடாதல் வகை | 150 | 165 |
| வரைவு கடாதல் விரி | 151 | 166 |
| ஒருவழித் தணத்தல் வகை | 152 | 167 |
| ஒருவழித் தணத்தல் விரி | 153 | 168 |
| வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் வகை | 154 | 169 |
| வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் விரி | 155 | 170 |

(களவியல் முற்றும்)

| | இ.வி. | ந.அ. |
|---|---|---|
| வரைவு இலக்கணம் | 156 | 171 |
| வரைவு-கிளவித்தொகை | 157 | 172 |
| வரைவு மலிதலின் வகை | 158 | 173 |
| வரைவு மலிதலின் விரி | 159 | 174 |
| அறத்தொடு நிலை | 160 | 175 |
| அறத்தொடு நிற்றலின் விரி | 161 | 176-179 |
| களவு வெளிப்பாட்டிற்குரிய கிளவித்தொகை | 162 | 180 |
| உடன்போக்கின் வகை | 163 | 181 |
| உடன்போக்கின் விரி | 164 | 182 |
| கற்பொடு புணர்ந்த கௌவையின் வகை | 165 | 183 |
| கற்பொடு புணர்ந்த கௌவையின் விரி | 166 | 184-188 |
| மீட்சி வகை | 167 | 190 |
| மீட்சி விரி | 168 | 191 |
| கூற்றின் பகுதி | 169 | 192 |
| தன்மனை வரைதல் வகை | 170 | 193 |
| தன்மனை வரைதல் விரி | 171 | 194 |
| வரைந்து மீளுதலின் விரி | 172 | 195 |
| ஒருவகை மீண்டுவரைதலின் விரி | 173 | 196 |
| உடன்போக்கு இடையீட்டின் வகை | 174 | 197 |
| உடன்போக்கு இடையீட்டின் விரி | 175 | 198 |
| வரைதல் | 176 | 199 |
| (வரைவியல் முற்றும்) | | |
| கற்பின் இலக்கணம் | 177 | 200 |
| கற்பின் கிளவித்தொகை | 178 | 201 |
| இல்வாழ்க்கை வகை | 179 | 202 |
| இல்வாழ்க்கை விரி | 180 | 203 |
| பரத்தையிற் பிரிவு வகை | 181 | 204 |
| உணர்த்த உணரும் ஊடல் விரி | 182 | 205 |
| உணர்த்த உணரா ஊடல் விரி | 183 | 206 |
| உணர்த்த உணரா ஊடலுக்கு ஒழிபு | 184 | 207 |
| பரத்தையிற் பிரிவின் விரி | 185 | 208 |

| | இ.வி. | ந.அ. |
|---|---|---|
| மற்றைப் பிரிவுக்குரிய கிளவிகள் (ஒழிபியல் முற்றும்) | 186 | 209 |
| அகப்பாட்டுறுப்பு | 187,188 | 210,211 |
| திணை கைகோள் | 189 | 212 |
| நற்றாய் செவிலி கூற்று | 193 | 219-220 |
| கண்டோர் கூற்று | 194 | 221 |
| தலைவி கூற்றுக்குச் சிறப்பு விதி | 196 | 217 |
| விதந்தோதப் படாதோர் | 197 | 222 |
| புறநடை | 200 | 224 |
| கேட்போர் | 201 | 225-226 |
| இடம் | 202 | 227 |
| காலம் | 203 | 228 |
| எச்சம் | 209 | 232 |
| அகப்பாட்டினுள் வரும் பொருள்கள் | 212 | 236 |
| உவம வகை | 213 | 237 |
| உள்ளுறை உவம இயல்பு | 214 | 238 |
| வெளிப்படை உவம இயல்பு | 215 | 239 |
| இறைச்சி | 216 | 240 |
| கைக்கிளைக்குரியர் | 218 | 242 |
| அகப்பாட்டினுள் பாடப்படுவோர் | 220-1 | 245-6 |
| இருவகைத் தலைவர்க்கும் உரிய பெயர் | 222 | 247 |
| ஒழிபு | 223 | 248 |
| அகத்துள் வரும் தலைமக்கள் இயல்பு | 224 | 249 |
| அகப்புறப்பாட்டுக்கு விதி | 225 | 250 |
| புறநடை | 226 | 252 |


## இலக்கண விளக்கம்,
## தொல்காப்பியம்-இணைநிலைப் பார்வை


| | இ.வி. | தொல்: |
|---|---|---|
| கைக்கிளை | 115 | 90 (களவியல்) |
| ஒப்பு | 116 | 269 (மெய்.) |

| | | |
|---|---|---|
| களவியற் கிளவிக்குரியர் | 190 | 490, 491 (செய்.) |
| கற்பியற் கிளவிக்குரியர் | 190 | 491 (செய்.) |
| ஒழிபு | 191 | 492 (செய்.) |
| நற்றாய் கூற்றிற்குரிய மரபு | 192 | 493 (செய்.) |
| | 198 | 194 (பொருளியல்) |
| | 199 | 195 (பொருளியல்) |
| முன்னம் | 205 | 508 (செய்.) |
| மெய்ப்பாடு | 206 | 505, 247-255 (மெய்.) |
| வேறுபட்டு வரும் சில மெய்ப்பாடு | 207 | 256 (மெய்.) |
| அகம் புறம் இரண்டுக்கும் பொதுவான மெய்ப்பாடு | 208 | 257-262 (மெய்.) |
| பொருள்வகை | 210 | 509 (செய்.) |
| துறை | 211 | 510 (செய்.) |
| கைக்கிளை | 217 | 53 (அகத்.) |
| பெருந்திணை | 219 | 54 (அகத்.) |

# இணைப்பு 7

## தொன்னூல் விளக்கம் பெரும்பொழுதிற்குரிய நிகழ்ச்சிகள்

**கார் (நூ. 167)**

வாடைவீசல், இந்திரகோபம் மயிலும் கேகயப்புள்ளும் தோன்றி மகிழ்தல், செங்காந்தள், வெண்காந்தள், கொன்றை, கூதாளம், வேங்கை, காக்கணஞ்செடி, முல்லை கடம்பு காயா குறுந்தென இவையே மலர்தல், அன்னங்கிளி குயிலகன்று வருதல், தாமரை முதனீர் மலரே யொளித்தல்.

**கூதிர் (நூ. 168)**

கூதிர்க்காற்று, குருகு அன்னம் கொக்கு சகோரப்புள் சங்கு நண்டு நத்தை — மகிழ்தல். நீர் தெளிதல், மீனினஞ் சனித்தல், மேகஞ் சூற்கொள்ளல், பாரிசாதம் சந்தனம் சிறு செண்பகஞ் செம்பரத்தை நாணல் என இவை மலர்தல், பறவை விலங்கு மக்கள் வருந்தல்.

**முன்பனி (நூ. 169)**

கொண்டல் வீசல், தூக்கணங்குருவி, கூகை ஆந்தை என இவை மகிழ்தல், மாவுஞ் சிவந்தியும் மலர்தல், இலந்தை பழுத்தல், குன்றி காய்த்தல், செந்நெல் விளைதல், கரும்பு முதிர்தல்.

**பின்பனி (நூ. 170)**

உலவைக் காற்று வீசல், புறவினம் கானங்கோழி மகிழ்தல், கோங்கு மிலவும் பூத்தல், பேரிந்துபனை என்றிவை பழுத்தல், பருத்தி வெண்சுளை வெடித்தல்.

**இளவேனில் (நூ. 171)**

தென்றல் வீசல், வண்டினம் கிளி பூவை அன்றில் குயில் மகிழ்தல் மாங்கனி உதிர்தல், நீர் மலரன்றித் தாழை புன்னை செண்பகம் மலர்தல், கேகயம் மெலிதல்.

**முதுவேனில் (நூ. 172)**

கோடைக் காற்று வீசல் — கானல் தோன்றல் — காடையும் வலியானும் வானம்பாடியுங் காகமும் கவுதாரியும் மகிழ்தல். மல்லிகை புளி பாதிரி என்றிவை பூத்தல், பாலை காஞ்சிரம் நாவல் இலுப்பை காய்த்தல், நீரே குறுகல், ஈண்டுக் கூறிய உயிரேயன்றி மற்றெலாங்குழைந்து சோரல்.

## சிறுபொழுதிற்குரிய நிகழ்ச்சிகள் (நூ. 173)

**மாலை**

குவளை மலர்தல், புள்ளினஞ் சோலை பசு முதற்கறவைகள் கன்றையுள்ளிக் கரைந்து வருந்தல், தாமரை கூம்பல், கன்னடம் காம்போதி வீரிராகம் பாடல்.

**யாமம்**

ஆகரிராகம் பாடல், கூகையோடு சகோர மகிழ்தல், பெருங்கடல் வந்து பொங்கல், காமம் களவு மிகுதல்.

**வைகறை**

கோழி கூவல், கனாவுறல், வான்மீனொளியே குறைதல், வெள்ளி மீனுதித்தல், தேவ வாழ்த்துரைத்தல், வீரி ராகம் பாடல்.

**விடியல்**

விலங்கு பறவை மக்கள் அக மலர்ந்துவத்தல், பூங்காவனத்துள் நீர்ப்பூ மலர்தல், பூபாளம்.

**உச்சிப்பொழுது**

சக்கரவாகப் புள் மகிழ்தல், வெண்டேரோடல், கானல் எனும் பேய்த்தேரோடல், எருமைகள் நீரிற்பாய்ந்து கிடத்தல் — சாரங்க ராகம் பாடல்.

**ஏற்பாடு**

மலை முதனிழல் நீளல், வானஞ் சிவத்தல், ஆட்டுக்குட்டிகள் குதித்தல், காபி கலியாணியென வீரிராகம் பாடல்.

# இணைப்பு 8

## முத்துவீரியம்

**பெரும்பொழுதிற்குரிய நிகழ்ச்சிகள்**

| வ. எண் | கார்காலம் (நூ. 790) | கூதிர் (நூ. 791) | முன்பனி (நூ. 792) | பின்பனி (நூ. 793) | இளவேனில் (நூ. 794) | முதுவேனில் (நூ. 795) |
|---|---|---|---|---|---|---|
| 1. | வாடையடித்தல் | 1. கூதிர் காற்றடித்தல் | 1. கோடைக் காற்றடித்தல் | 1. உலவைக் காற்றடித்தல் | 1. தென்றற் காற்றடித் தல் | 1. பேய்த் தேரோடல் |
| 2. | மயில் கேகயம் இந்திரகோபம் தோன்றி மகிழ்தல் | 2. கொக்கு அன்னம் சங்கு மகிழ்தல் | 2. கோட்டான் ஆந்தை மகிழ்தல் | 2. காட்டுக்கோழி புறவு மகிழ்தல் | 2. வண்டு குயில் அன்றில் மகிழ்தல் | 2. கோடைக் காற்றடித் தல் |
| 3. | அன்னம் கிளி மயில் அகன்று வருதல் | 3. நீர் தெளிதல் | 3. செவ்வந்தி மரம் மாமரம் மலர்தல் | 3. இலவு கோங்கு மலர்தல் | 3. மாங்கனி யுதிர்தல் | 3. வலியான் காடை வானம்பாடி மகிழ்தல் |
| 4. | காந்தள் கொன்றை காயா மலர்தல் | 4. மீனினஞ் செவித்தல் | 4. இலந்தை பழுத்தல் | 4. பேரீந்து பனை பழுத்தல் | 4. மயில் மகிழ்ந் தாடல் | 4. பாதிரி மலர்தல் |
| 5. | தாமரையேங்கல் | 5. மேகங்கள் சூல் கொளல் | 5. கரும்பு நெல் முதிர்தல் | | 5. புன்னை தாழை மலர்தல் | |
| | | 6. சிறு சண்பகம் பாரிசாதம் மலர்தல் | | | | |
| | | 7. மானிடர் வருந்தல் | | | | |

**சிறுபொழுதிற்குரிய நிகழ்ச்சிகள்**

| வ.எண் | மாலை (நூ. 796) | யாமம் (நூ. 797) | வைகறை (நூ. 798) | விடியல் (நூ. 799) | நண்பகல் (நூ. 800) |
|---|---|---|---|---|---|
| 1. | குவளை மலர்தல் | 1. கோட்டான் சகோதரம் மகிழ்தல் | 1. வான்மீனொளி கெடல் | 1. மிருகங்கள் பறவைகள் மகிழ்தல் | 1. பேய்த் தேரோடல் |
| 2. | பறவைகள் சந்தித்தல் | 2. கடல் நீரதிகப்படல் | 2. வெள்ளி முளைத்தல் | 2. தாமரை மலர்தல் | 2. சக்கரவாக மகிழ்தல் |
| 3. | கன்றை நினைத்துக் கறவைப் பசு போதல் | 3. களவதிகமாதல் | 3. கோழி கூவல் | | 3. எருமை நீரிற் கிடத்தல் |
| 4. | தாமரை கூம்பல் | | | | |

* தொல்காப்பியம் தொன்னூல் விளக்கம் ஆகியவை அறுவகைச் சிறுபொழுதைக் குறிக்கின்றன; முத்துவீரியம் ஐவகைச் சிறுபொழுதை மட்டும் குறிக்கின்றது.

## இணைப்பு 9

### முத்துவீரியம் (19 நூ.) திருக்கோவையார் (9 நூ.) ஒப்பியல் நோக்கு

| | முத்துவீரியம் நூற்பா எண் | திருக்கோவையார் துறை எண் |
|---|---|---|
| கைக்கிளையின் வகை | 805 | 1— 7 |
| இயற்கைப்புணர்ச்சி | 836 | 8— 18 |
| பாங்கற்கூட்டம் | 836 | 19— 48 |
| இடந்தலைப்பாடு | 837 | 49 |
| மதியுடம்படுத்தல் | 839 | 50— 59 |
| இருவருமுள்வழி அவன் வரவுணர்தல் | 840 | 60— 61 |
| முன்னுறவுணர்தல் | 841 | 62 |
| குறையுறவுணர்தல் | 842 | 63— 66 |
| நாணநாட்டம் | 843 | 67— 71 |
| நடுங்கநாட்டம் | | 72 |
| மடற்றிறம் | 844 | 73— 81 |
| குறைநயப்புக்கூறல் | 845 | 82— 89 |
| சேட்படை | 846 | 90—115 |
| பகற்குறி | 847 | 116—147 |
| இரவுக்குறி | 848 | 148—180 |
| ஒருவழித்தணத்தல் | 849 | 181—193 |
| உடன்போக்கு | 850 | 194—249 |
| வரைவுமுடுக்கம் | 851 | 250—265 |
| வரைபொருட்பிரிதல் | 852 | 266—298 |
| **கற்பு** | | |
| மணஞ்சிறப்புரைத்தல் | 854 | 299—307 |
| ஓதல் பிரிவு | 856 | 308—311 |
| காவற்பிரிவு | 857 | 312—313 |
| பகைதணிவினைப்பிரிவு | 858 | 314—315 |
| வேந்தற்குற்றுழிப்பிரிவு | 859 | 316—331 |
| பொருள்வயிற்பிரிவு | 860 | 332—351 |
| பரத்தையிற்பிரிவு | 861 | 352—400 |

## இணைப்பு 10

(அ) கருப்பொருள்கள் ஒப்பீடு குறிஞ்சி

| | தொல் | இ.அ. | த.நெ.வி. | வீ.சோ. | ந.அ. |
|---|---|---|---|---|---|
| தெய்வம் | சேயோன் | முருகவேள் | முருகன் | முருகன் | சேய் |
| உணா | தினை, ஐவனம் வெதிர் நெல் | ஐவன நெல், தினை | தினை | தேன் | மலைநெல், மூங்கிலரிசி தினை |
| மா | யானை, புலி, பன்றி, கரடி | புலி, பன்றி, யானை | சீயம் | யானை | புலி, கரடி, யானை, சிங்கம் |
| மரம் | வேங்கை, கோங்கு | அகில், ஆரம், திமிசு, தேக்கு, வேங்கை | வேங்கை | மூங்கில் | சந்தனம், தேக்கு, அகில், அசோகு, நாகம், மூங்கில் |
| புள் | மயில், கிளி | கிளி, மயில் | மயில் | மஞ்ஞை | கிளி, மயில் |
| பறை | வெறியாட்டு, தொண்டகம் | வெறியாட்டு தொண்டகம் | ——— | ——— | தொண்டகப்பறை |
| செய்தி | தேனழித்தல் | தேனழித்தல், கிழங்கு அகழ்தல், குன்றம் ஆடுதல், தினைக் கிளிகடிதல் | நிறைத் தேனழித்தல் | தினை (எடுத்தல்) சுனை (ஆடல்) | வெறியாடல், மலைநெல் விதைத்தல், தினை காத்தல், தேனழித் தெடுத்தல், கிழங்கு கிண்டி எடுத்தல், அருவி நீராடல், சுனைநீராடல் |
| யாழின் பகுதி | குறிஞ்சி | குறிஞ்சி யாழ் | குறிஞ்சி | குறிஞ்சி | குறிஞ்சி யாழ், குறிஞ்சிப் பண் |

| | தொல். | இ.அ. | த.நெ.வி. | வீ.சோ. | ந.அ. |
|---|---|---|---|---|---|
| பூ | வேங்கை, காந்தள், குறிஞ்சி | வேங்கை, காந்தள் குறிஞ்சி, சுனைக் குவளை | ——— | வேங்கை காந்தள், இலவம் | வேங்கை, குறிஞ்சி, காந்தள் |
| நீர் | சுனை நீர், அருவிநீர் | சுனை நீர், அருவிநீர் | காந்தள் | ——— | அருவிநீர் சுனை நீர், |
| தலைமகன் பெயர் | ——— | சிலம்பன், வெற்பன் பொருப்பன் | வெற்பர் | வெற்பன் | பொருப்பன், வெற்பன், சிலம்பன் |
| தலைமகள் பெயர் | ——— | கொடிச்சி, குறத்தி | ——— | ——— | ——— |
| ஊர் | ——— | சிறுகுடி, குடிச்சி | ——— | ——— | சிறுகுடி |
| மக்கள் பெயர் | ——— | குறவர், இறவுளர் குன்றவர் | குறவர் | குன்றவர் | குறவர், கானவர், குறத்தியர் |

பாலை

| | தொல். | இ.அ. | த.நெ.வி. | வீ.சோ. | ந.அ. |
|---|---|---|---|---|---|
| தெய்வம் | கொற்றவை | பகவதி | இரவி | கன்னி | கன்னி |
| உணா | ஆறலைத்த லான் வரும் பொருள் | ஆறலைத்தன ஊரெறிந்தன | தருப்பனம் | ——— | வழியிற்பறித்த பொருள், பதியிற் கவர்ந்த பொருள் |
| மா | வலியழிந்த யானை புலி, செந்நாய் | வலியழிந்த யானை, புலி, செந்நாய் | செந்நாய் | கலை செந்நாய் | செந்நாய் |
| மரம் | பாலை, இருப்பை, கள்ளி | இருப்பை, ஓமை | பாங்கர், மரா | அகில் | உழிஞை, பாலை, ஓமை, இருப்பை, |
| புள் | எருவை, பருந்து | கழுகு, பருந்து, புறா | பருந்து | பருந்து | புறா, பருந்து, எருவை, கழுகு |
| பறை | ஆறலைப் பறை, சூறை கொண்டபறை | ஊசற்பறை, ஊரெறிபறை, நிரைகோட்பறை | துடி | ——— | துடி |
| செய்தி | ஆறலைத்தல் | நிரைகோடல், சாத்தெறிதல் சூறையாடல் | நெறிச் சென்றலைத்தல் | ——— | போர் செய்தல், பகற் சூறையாடுதல் |

| | தொல். | இ.அ. | த.நெ.வி. | வீ.சோ. | ந.அ. |
|---|---|---|---|---|---|
| யாழின்பகுதி | பாலை | பஞ்சுரம் (பண்) | பஞ்சுரம் | பாலை (யாழ்) | பாலையாழ், பஞ்சுரம் (பண்) |
| பூ | மரா | மராம்பூ, குராம்பூ, பாதிரிப்பூ | ——— | ——— | குராஅ, மராஅ |
| நீர் | அறுநீர்க்கூவல் அறுநீர்ச்சுனை | அறுநீர்க்கூவல் அறுநீர்சுனை | ——— | ——— | நீரில்லாக்குழி, நீரில்லாக்கிணறு |
| தலைமகன் பெயர் | ——— | மீளி, விடலை, காளை | விடலை | விடலை | விடலை, காளி, மீளி, எயிற்றி |
| தலைமகள் பெயர் | ——— | எயிற்றி, பேதை | ——— | ——— | ——— |
| ஊர் | ——— | கொல், குறும்பு | ——— | ——— | குறும்பு |
| மக்கள் பெயர் | ——— | எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர். | எயினர் | வேடர், குறும்பர் | எயினர், எயிற்றியர் மறவர், மறத்தியர். |

(இ) முல்லை

| | தொல். | இ.அ. | த.நெ.வி. | வீ.சோ. | ந.அ. |
|---|---|---|---|---|---|
| தெய்வம் | மாயோன் | வாசுதேவன் | மாயன் | திருமால் | நெடுமால் |
| உணா | வரகு, முதிரை | வரகு, சாமை | தருப்பம், மூதிரை | —— | வரகு, சாமை, முதிரை |
| மா | மான், முயல் | முயல், சிறுமான் | இரலை | —— | மான், முயல் |
| மரம் | கொன்றை, குருந்தை, புதல் | கொன்றை குருந்து | குருந்து | கொன்றை, குருந்து | கொன்றை, குருந்தம், காயா |
| புள் | கானங்கோழி | கானாங்கோழி, மயில், சிவல் | புறா | —— | காட்டுக்கோழி |
| பறை | ஏறுகோட் பறை | ஏறுகோட் பறை, முரசு | ஏறங்கோட் பறை | —— | ஏற்றுப்பறை |
| செய்தி | நிரை மேய்த்தல் | வரகுக்குக்களை கட்டல், அவை அறுத்தல், கடா விடுதல், நிரை மேய்த்தல் | ஒருக்கின மோம்பல் | நிரை மேய்த்தல் | சாமை வரகு விதைத்தல், அவற்றின் களை கட்டல் அரிதல், கடாவிடுதல், கொன்றைக் குழ லூதல், மூவின மேய்த்தல், கொல் லேறு தழுவுதல், குரவைக் கூத்தாடல், கான்யாறாடல் |

| | தொல். | இ.அ. | த.நெ.வி. | வீ.சோ. | ந.அ. |
|---|---|---|---|---|---|
| யாழின் பகுதி | சாதாரி | முல்லை (பண்) | தாரம் | முல்லை | முல்லையாழ், சாதாரி |
| பூ | முல்லை, பிடா, தளா | முல்லை, தோன்றி | முல்லை | தோன்றி | குல்லை, முல்லை தோன்றி, பிடவம் |
| நீர் | கான்யாறு | கான்யாறு | —— | —— | —— |
| தலைமகன் பெயர் | —— | குறும்பொறை, நாடன் | குறும்பொறை, நாடன் | —— | குறும்பொறை, நாடன், தோன்றல் |
| தலைமகள் பெயர் | —— | கிழத்தி, மனைவி | —— | —— | கிழத்தி, மனைவி |
| ஊர் | —— | பாடி, சேரி | —— | —— | பாடி |
| மக்கள் பெயர் | —— | இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர் | குறவர் | இடையர் | இடையர், இடைச்சியர் ஆயர், ஆய்ச்சியர் |

(ஈ) நெய்தல்

| | தொல். | இ.அ. | த.நெ.வி. | வீ.சோ. | ந.அ. |
|---|---|---|---|---|---|
| தெய்வம் | வருணன் | வருணன் | வருணன் | வருணன் | வருணன் |
| உணா | உப்புவிலை, மீன்விலை | மீன்விலைப் பொருள் | விலைகோள் | மீன் | மீனும் உப்பும் விற்றுப் பெற்ற பொருள் |
| மா | கரா, சுறா | சுறா, முதலை | கராம் | திமிலம், சுறா, முதலை | சுறாமீன் |
| மரம் | புன்னை, கைதை | புன்னை, ஞாழல் | —— | புன்னை கண்டல் | கண்டல், புன்னை, ஞாழல் |
| புள் | கடற்காக்கை | அன்னம் அன்றில் | கம்புள் | அன்னம் | கடற்காகம் |
| பறை | நாவாய்ப்பறை | மீன்கோட்பறை நாவாய்ப்பறை | மழப்பறை | —— | மீன்கோட்பறை, நாவாய்ப்பம்பை |
| செய்தி | மீன்படுத்தல், உப்புவிளைத்தல் | மீன்விற்றல், உப்பு விற்றல் அவை படுத்தலும் | திரைக்கடல் சேறல் | —— | மீன்பிடித்தல், உப்புப் படுத்தல், அவை விற்றல், மீன் உணக்கல், அவற்றை உண்ணவரும் பறவைகளை ஓட்டுதல், கடலாடல் |

| | தொல். | இ.அ. | த.நெ.வி. | வீ.சோ. | ந.அ. |
|---|---|---|---|---|---|
| யாழின் பகுதி | செவ்வழி | விளரியாழ் | செவ்வழி | விளரி | விளரியாழ், செவ்வழிப்பண் |
| பூ | நெய்தல் | வெள்ளிதழ், கைதை, நெய்தல் | கைதை, முண்டகம் | கைதை | நெய்தல், தாழை முண்டகம், அடம்பம் |
| நீர் | கேணிநீர், கடல் நீர் | —— | —— | —— | உவர்நீர்க்கேணி, கவர்நீர் |
| தலைமகன் பெயர் | —— | துறைவன், கொண்கன், சேர்ப்பன் | சேர்ப்பன் | கொண்கன் | சேர்ப்பன், புலம்பன் |
| தலைமகள் பெயர் | —— | நுளைச்சி, பரத்தி | --- | —— | பரத்தி, நுளைச்சி |
| ஊர் | —— | கல்மேறுபட்டின மும் சிறுகுடியும் பாக்கமும் | —— | —— | பாக்கம், பட்டினம் |
| மக்கள் பெயர் | —— | பரதர், பரத்தியர், நுளையர், நுளைச்சியர் | பரதவர் | நுளையர் | நுளையர், நுளைச்சியர், பரதர், பரத்தியர், அளவர், அளத்தியர் |

(உ) மருதம்

| | தொல். | இ.அ. | த.நெ.வி. | வீ.சோ. | ந.அ. |
|---|---|---|---|---|---|
| தெய்வம் | வேந்தன் | இந்திரன் | வேந்தன் | இந்திரன் | இந்திரன் |
| உணா | நெல் | செந்நெல், வெண்ணெல் | செந்நெல் | செந்நெல் | செந்நெல்லரிசி, வெண்ணெல்லரிசி |
| மா | எருமை, நீர்நாய் | எருமை, நீர்நாய் | மேதி | எருமை, நீர்நாய் | எருமை, நீர்நாய் |
| மரம் | மருது, காஞ்சி | வஞ்சி, காஞ்சி மருது | காஞ்சி | —— | காஞ்சி, வஞ்சி, மருதம் |
| புள் | அன்னம், அன்றில் | நீர்க்கோழி, தாரா | அன்னம் | மகன்றில் | அன்னம், பெருநாரை கம்புள், குருகு, தாரா |
| பறை | நெல்லரிப்பறை | மணமுழவு, நெல்லரிகிணை | பல்லியம் | —— | நெல்லரிகிணை, மணமுழவு |
| செய்தி | உழவு | நெல்லரிதல், கடா விடுதல், பயிர்க்குக் களை கட்டல் | முழவொடு பயிறல் | —— | விழாச்செய்தல், வயற் களைகட்டல், நெல் லரிதல், கடாவிடுதல் குளம் குடைதல், புதுப் புனலாடல் |
| யாழின் பகுதி | மருதம் | மருத யாழ் | —— | —— | மருத யாழ், மருதப்பண் |

| | தொல். | இ.அ. | த.நெ.வி. | வீ.சோ. | ந.அ. |
|---|---|---|---|---|---|
| பூ | தாமரை, கழுநீர் | தாமரைப்பூ, செங்கழுநீர் | கழுநீர் | தாமரை | தாமரை, கழுநீர், குவளை |
| நீர் | ஆற்றுநீர், பொய்கைநீர் | மனைக்கிணறு, பொய்கை | —— | —— | யாற்றுநீர், கிணற்றுநீர், குளத்து நீர் |
| தலைமகன் பெயர் | —— | ஊரன், மகிழ்நன் | மகுணன் | ஊரன் | ஊரன், மகிழ்நன் |
| தலைமகள் பெயர் | —— | கிழத்தி, மனைவி | —— | —— | கிழத்தி, மனைவி |
| ஊர் | —— | பேரூர் | —— | —— | பேரூர், மூதூர் |
| மக்கள் பெயர் | —— | கடையர், கடைசியர், உழவர், உழத்தியர் | உழவர் | கடைசியர் | உழவர், உழத்தியர், கடையர், கடைச்சியர் |

2

இயல் இரண்டு

# திணை

# திணை

## திணை என்றால் என்ன?

செய்யுளுறுப்புக்களைத் தொகுத்துக் கூறும் தொல்காப்பியம் திணையை அவற்றுள் ஒன்றாகச் சுட்டும்.[1] பின்வந்த இறையனார் களவியல் உரை,

> ஒழுக்கத்திணைத் திணை என்பாரும் நிலத்திணைத்
> திணை என்பாரும் என இருபகுதியர் ஆசிரியர்.
> அது பொருந்தாது; ஒழுக்கமே திணை எனப்படும்.
> குறிஞ்சியாகிய ஒழுக்கம் நிகழ்ந்த நிலமும்
> குறிஞ்சி எனப்பட்டது; என்னை, விளக்காகிய
> சுடர் இருந்த இடனும் விளக்கு எனப்பட்டது போல[2]

என விளக்கி, ஒழுக்கத்திணைத் திணை என்கின்றது. நிலத்தைத் திணை எனக் கொண்டால் கைக்கிளை, பெருந்திணை ஆகியன விடுபட்டுப் போகின்றன. எனவே நக்கீரர் உரைவழி, ஒழுக்கத்தைத் திணை எனக்கொள்வது பொருத்தமாக உள்ளது. இருப்பினும் ஒழுக்கமே திணை எனக் கொண்டால் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் எனப் பெயரிட்டிருக்கலாமே ஏன் குறிஞ்சித்திணை முல்லைத்திணை எனப் பெயரிட வேண்டும்? அவற்றின் ஆட்சி தேவையற்றதா என்று எண்ணத் தூண்டுகின்றது. இச்சிக்கலை இளம்பூரணர் உரை தீர்த்து வைக்கின்றது. நடுவண் ஐந்திணையை விளக்கும் உரையாசிரியர்,

> நடுவண் ஐந்திணை என்பவை யாவை எனில் முல்லை,
> குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்பனவாம்.
> எற்றுக்கு? இந்நூலகத்து அகமும் புறமும் ஆகிய
> உரிப்பொருள் கூறுகின்றாராதலான் புணர்தல்,
> பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என அமையுமே
> எனின், புறப்பொருட்கண் நிரைகோடலை வெட்சி
> எனக் குறியிட்டு ஆளுமாகலான் ஈண்டு இப்பொருளையும்
> முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என ஆளும் என்க[3]

என்ற தொல்காப்பியரது இலக்கணக் கோட்பாட்டைத் தெளிவு படுத்தி அகப்பொருளில் அக்குறியீட்டின் பயனைக் கீழ்க்காணுமாறு விளக்குவர்.

> இதனாற் பயன் என்னையெனின், உரிப்பொருளே
> திணையென உணர்த்துவராயின் முதற்பொருளும்
> கருப்பொருளும் திணையாதல் தோன்றாதாம்.
> அவையெல்லாம் அடங்குதற்பொருட்டு முல்லை
> குறிஞ்சி பாலை மருதம் நெய்தல் என்றார்[4]

எனவே, தொல்காப்பியர் 'திணை' என்ற சொல்லை அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவானதாகவும், அகத்தோடு புறத்தைச் சார்த்திக் கூறும் தனது இலக்கணக் கோட்பாட்டைத் தெளிவு படுத்தவும், அன்பின் ஐந்திணையுள் காணப்படும் முதல், கரு, உரி ஆகிய மூன்றையும் உள்ளடக்கிக் காட்டும் வகையிலும் பயன்படுத்தியுள்ளார் என்பது புலனாகும்.

### ஏழு திணை

> கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
> முற்படக் கிளந்த எழுதிணை என்ப[5]

என அவற்றின் எண்ணிக்கையைச் சுட்டுகின்றார் தொல்காப்பியர். அவற்றுள் திணைக்குரிய நிலத்தைக் குறிக்கும்போது முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய நான்கையும்,[6] திணைக்குரிய காலமும் இடனும் உணர்த்தும்போது நடுவு நிலைத்திணை எனப் பாலையையும்[7] அறிமுகப்படுத்துகின்றனர்.

### மூவகைப் பொருள்கள்

செய்யுளில் முதல், கரு, உரி ஆகிய மூன்று பொருள்கள் பயின்று வரும். இதனை,

> முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே
> நுவலுங் காலை முறைசிறந் தனவே
> பாடலுட் பயின்றவை நாடுங் காலை[8]

என்னும் நூற்பா புலப்படுத்தும்.

### முதற் பொருள்

முதற்பொருள் நிலம் பொழுது என இருவகைப்படும்.

> முதல்எனப் படுவது நிலம்பொழு திரண்டின்
> இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே[9]

என்பது **தொல்காப்பியம்.** இவ் வகைப்பாட்டின் சிறப்பைப் பின்வருமாறு விளக்குவர் அ.அ. மணவாளன்:

> இவ் விருபதாம் நூற்றாண்டின் அறிவியல்
> தந்தையான ஈன்ஸ்டினின் ஒப்புமைக்
> கொள்கைக்கு அடிப்படையே இந்நிலமும்
> காலமும் தான் (Time, Space)
> இவ்விரண்டின் தொடர்பு விகிதங்களால்தான்
> வான்வெளிப் பயணமே இயைவதாயிற்று.
> இத்துணைச் சிறப்பினவாய இவற்றை முதற்
> பொருள் எனக் கருதி இலக்கணம் வகுத்த
> தொல்காப்பியத்தின் பெருமை வியத்தற்குரியது.[10]

**கருப்பொருள்**

> தெய்வம் உணாவே மாமரம் புட்புறை
> செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
> அவ்வகை பிறவும் கருவென மொழிப[11]

என்று தொல்காப்பியர் கருப்பொருள்கள் பற்றிக் கூறுவர்.

**உரிப்பொருள்**

> புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
> ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை
> தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே[12]

என்ற நூற்பா முறையே குறிஞ்சி, பாலை, முல்லை நெய்தல், மருதம். ஆகிய ஐந்திணைக்குமுரிய உரிப்பொருள்களைக் காட்டும்.

**கைக்கிளை**

காமஞ் சாலா இளமையோளைக் கண்ட தலைமகன் தனக்கும் அவளுக்கும் ஒத்தன புணர்த்து எதிர்மொழி பெறானாய்ச் சொல்லித் தானே இன்புறுதல் கைக்கிளையாகும்.

> காமஞ் சாலா இளமை யோள்வயின்
> ஏமஞ் சாலா இடும்பை யெய்தி
> நன்மையும் தீமையும் என்றிரு திறத்தான்
> தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்
> சொல் எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்
> புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே[13]

எனக் கைக்கிளைப் பொருண்மையையுணர்த்தும் **தொல்காப்பியம்.**

**பெருந்திணை**

ஏறிய மடல்திறம் இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே[14]

எனப் பெருந்திணைப் பொருண்மையை வரையறை செய்கின்றது **தொல்காப்பியம்.** இவற்றுள் இளமை தீர்திறத்தை இளம்பூரணர்,

தலைமகன் முதியனாகித் தலைமகள் இளையளாதலும்
தலைமகள் முதியளாகித் தலைமகன் இளையனாதலும்
இல்விருவரும் இளமைப் பருவம் நீங்கியவழி
அறத்தின் மேல் மனம் நிகழ்தலன்றிக் காமத்தின்
மேல் மனம் நிகழ்தலும்

என மூவகைப்படுத்துவர்; மிக்க காமத்து மிடலாவது ஐந்திணைக் கண் நிகழும் காமத்தின் மாறுபட்டு வருவது என்பர்.[15] ஐந்திணை யாவது அளவுக் காதல்; பெருந்திணையாவது மிகுதிக் காதல் என்றும் விளக்குவர்.[16]

**அகத்திணை ஆரிய மணத்தை ஒத்ததா ?**

அகத்திணையை ஆரிய மணத்தோடு கீழ்க்காணுமாறு ஒப்பிட்டுக் காட்டுவர் நச்சினார்க்கினியர்.[17]

அகத்திணை

| கைக்கிளை | ஐந்திணை | பெருந்திணை |
|---|---|---|
| ஆசுரம் | காந்தருவம் | பிரமம் |
| இராக்கதம் | | பிரசாபத்தியம் |
| பைசாசம் | | ஆரிடம் |
| | | தெய்வம் |

அகத்திணைக்கும் ஆரியர் மணத்திற்கும் உள்ள அடிப்படை வேற்றுமைகளை உறழ்ந்து நோக்கிய க. ப. அறவாணன்,

தமிழ் முறை ஆண்பெண் காதல் உணர்வுகளின்
படிநிலைகளைக் காட்டுவது. ஆரிய முறை திருமண
வகைகளைப் பேசுவது. இரண்டும் வேறு வேறு

அடித்தளத்தில் எழுந்தவை. இரண்டையும்
பொருத்துவது சற்றும் பொருந்தாது.[18]

என்பர். வ. சுப. மாணிக்கமும் நச்சினார்க்கினியரை வன்மையாக மறுக்கின்றார்.

தமிழ் மணநெறிகளும் ஆரிய மணநெறிகளும் இன்ன
வகையில் ஒப்புமையுடையன என்று காண்பது அறிவின்
பாலது. அஃதன்றி, தமிழர்தம் தன்னேரில்லாப்
படைப்பான அகத்திணையின் உட்பிரிவாகிய
பெருந்திணை
ஆரிய மணப்பிரிவுகளை எண்ணி இடப்பட்டது என்றல்,
சுருங்கச் சொல்லின் அகத்திணையையும் அதனைத்
கண்ட சான்றோர் அறிவையும் அவமதிப்பதாகும்.
மேலும் தம் அறியாமையை நன்கு
வெளிப்படுத்துவதாகும்[19]

எனவே எழுதிணை ஆரிய மணவகையோடு ஒப்ப வைத்து எண்ணத் தக்கதல்ல என்பது தெளிவு.

## புறத்திணையியல் காட்டும் திணைக் கோட்பாடு

அகத்திணைக்குப் புறனாகப் புறத்திணைகளைச் சார்த்திக் கூறுவதால் அவையும் ஏழாகும் அவை புறனாகுமாற்றைப் புறத் திணையியலில் கீழ்க்காணுமாறு விளக்குவர் தொல்காப்பியர்.

'வெட்சி தானே குறிஞ்சியது புறனே'
'வஞ்சி தானே முல்லையது புறனே'
'உழிஞை தானே மருதத்துப் புறனே'
'தும்பை தானே நெய்தலது புறனே'
'வாகை தானே பாலையது புறனே'
'காஞ்சி தானே பெருந்திணைப் புறனே'
'பாடாண்பகுதி கைக்கிளைப் புறனே[20]

இவற்றுள் பெருந்திணைக்குக் காஞ்சியும் கைக்கிளைக்குப் பாடாணும் புறனாகும் முறையை உரைவழிக் காண்போம்.

## பெருந்திணைப் புறன் காஞ்சி

ஏறிய மடற்றிறம் (அகத்திணை 54) முதலாகிய
நோந்திறக் காமப்பகுதி அகத்திணை
ஐந்தற்கும் புறனாயவாறு போல இது

புறத்திணை ஐந்தற்கும் புறனாகலானும்
இதுபோல அதுவும் நிலையாமை நோந்திறம்
பற்றியும் வருதலானும் அதற்கு இது புறனாயிற்று[21]

### கைக்கிளைப் புறன் பாடாண்

'கைக்கிளையாவது ஒரு நிலத்திற்கு உரித்தன்றி ஒருதலைக் காமமாகி வருமன்றே; அதுபோல இதுவும் ஒருபாற்கு உரித்தன்றி ஒருவனை ஒருவன் யாதானும் ஒருபயன் கருதியவழி மொழிந்து நிற்பது ஆகலானும் கைக்கிளையாகிய காமப்பகுதிக்கண் மெய்ப்பெயர் பற்றிக் கூறுதலானும்* கைக்கிளை போலச் செந்திறத்தாற் கூறுதலானும், அதற்கு இது புறனாயிற்று. நோந்திறமாவது கழிபேரிரக்கம்; செந்திறமாவன அஃது அல்லாதன'[22] எனக் கைக்கிளையோடு பாடாண்திணை பொருந்துவதை விளக்குவர் இளம்பூரணர்.

மேலும் பாடாண்பாட்டில் இயற்பெயர் பயின்று வரும் மரபை,

மெய்ப்பெயர் மருங்கின் வைத்தனர் வழியே[23]

என்ற நூற்பா உணர்த்தும்.

தொல்காப்பியர் காட்டிய அகத்திணை ஏழனில் கைக்கிளை பெருந்திணை ஆகிய இரண்டும் பல்வேறு திரிபுகளோடு புறத்திணை இலக்கண நூலான புறப்பொருள் வெண்பாமாலையில் இடம் பெற்றுள்ளன. எனவே இவ்விருதிணைகளும் அகப்பொருள் வரலாற்றில் காலத்தின் தேவைக்கேற்ற மாற்றத்திற்கு உள்ளாயின. புதிய புதிய இலக்கிய வகைகள் தோன்ற வழி வகுத்தன. எனவே அவை பற்றிய விளக்கம் ஈண்டுச் சிறப்பு நிலையில் எடுத்துக் காட்டப்பட்டன.

'திணை' பற்றிய செய்தி தொல்காப்பியத்தின்வழி சுருக்கமாக எடுத்துக் கூறப்பட்டது. இனி இலக்கியங்களின்வழித் திணையின் வரலாற்றைக் காணலாம்.

### சங்க அக இலக்கியங்கள்

சங்க இலக்கியங்கள் என்பன எட்டுத்தொகையும், பத்துப் பாட்டும். எட்டுத்தொகையுள் ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை,

---

* அகத்திணை இயலில் நூ. 58இல் 'இதனாற் சொல்லியது, ஒருவர்க்குரித்தாகிவரும் பெயர் அகத்திணை பற்றி வரும் கைக்கிளை பெருந்திணையினும் வரப்பெறாது' என உரை செய்த இளம்பூரணர் ஈண்டு (நூ. 78 உரை) 'மெய்ப்பெயர் கூறுதலானும்' எனக் குறிப்பது அவர் கருத்தோடு முரண்படுவதாக உள்ளது.

அகநானூறு, கலித்தொகை ஆகிய ஐந்தும் அகம் பற்றியன. பத்துப் பாட்டுள் முல்லைப் பாட்டு, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை எனும் மூன்றும் அகம் பற்றியன; இவை திணைப் பெயர்களை நூற்பெயரில் கொண்டிருக்கின்றன.

இவற்றுள் கலித்தொகையில் மட்டும் கைக்கிளை, பெருந்திணை களுக்குரிய பாடல்கள் உள்ளன என்பதைத் துறைக்குறிப்புவழி அறிய முடிகின்றது. அவற்றுள் கைக்கிளை பற்றியன குறிஞ்சிக் கலியிலும் (56-58) முல்லைக்கலியிலும் (109*, 112, 113) உள்ளன; பெருந்திணை பற்றியன குறிஞ்சிக் கலியிலும் (62) நெய்தற்கலியிலும் (142-147) உள்ளன. எனவே இவை பிறதிணைகளுக்குள் வைத்து எண்ணப்பட்டன என்பது தெளிவாகும்.

சங்க இலக்கியத்தை ஆய்ந்த அறிஞர்கள் சிலர் துறைக் குறிப்பில் கருத்து வேறுபாடு கொண்டுள்ளனர்.[24] அத்தன்மைத்தானே பாடல் கள் தனியே ஆராயத் தக்கவை.

எட்டுத் தொகையில் உள்ள அகப்பாடல்கள் 1849. அவற்றை எண்ணிக்கை அடிப்படையில் நோக்கும்போது பாலை 28.66% (530), குறிஞ்சி 26.34% (487), நெய்தல் 18.66% (345), மருதம் 13.79% (255), முல்லை 12.55% (232) என்னும் முறையில் உள்ளன (காண்க இணைப்பு).

எட்டுத் தொகையில் ஐங்குறுநூறும், கலித்தொகையும் ஒவ்வொரு திணைக்கும் ஒவ்வொரு புலவர் என்ற முறையில் ஐந்திணைகளுக்கும் ஐந்து புலவர்களைப் பெற்றுள்ளன. எனினும் அவை தனித்தனிப் பாடல்களாக அமைந்தவை; பொருள் தொடர்ச்சி உடையன அல்ல.

ஏனைய அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகிய மூன்றும் பல புலவர்களால் பாடப்பெற்ற பாடல்களைக் கொண்டுள்ளன. இவற்றுள் அகநானூறு களிற்றியானை நிரை (1-120), மணிமிடை பவளம் (121-300), நித்திலக் கோவை (301-400) என்னும் மூன்று

---

* வினைவல பாங்கின் தலைவியைக் கண்ட வினைவல பாங்கின் தலைவன் 'காமம் சாலா இளமையோள் வயின், ஏமம் சாலா இடும்பை எய்தி' கூறியது என்று மட்டுமே துறைக்குறிப்பு உள்ளது. பிற பாடல்களில் காணப்படுவதுபோல் 'இது கைக்கிளை' என்ற குறிப்புக் காணப்படவில்லை.

பகுதிகளை உடையது; எண் அடிப்படையில் திணை உணரும் வண்ணம் இதன்கண் உள்ள பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.*

நற்றிணையில் காணப்படும் திணைக்குறிப்பு அந்நூலை முதன் முதலாகப் பதிப்பித்த பின்னத்தூர் நாராயணசாமி ஐயரின் புதுச் சேர்க்கை ஆகும். எனவே அதனைப் புலப்படுத்தும் வண்ணம் பகர வளைவுக்குள் அமைத்துள்ளார். குறுந்தொகையைக் கூற்று வகையில் உ. வே. சாமி நாதையர் பதிப்பித்திருப்பதும் ஈண்டு நினைவு கூரத்தக்கது. எனவே, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகியவற்றில் காணப்படும் திணைக்குறிப்பு பழமையானது என்பதும், நற்றிணை, குறுந்தொகை ஆகிய இரண்டின் திணைக் குறிப்பு பதிப்பாசிரியர்களால் அண்மைக்காலத்தில் (20 நூ.) மேற் கொள்ளப்பட்டது என்பதும் தெளிவு.

## கலித்தொகையின் தனித்தன்மை

ஏனைய அகப்பொருள் நூல்கள் ஆசிரியப்பாவால் அமைந் திருக்க, கலித்தொகை மட்டும் தொல்காப்பியர் காட்டிய அகப் பாவான கலிப்பாவில் பாடப்பட்டுள்ளது; கூற்றுக்குரியர் கேட்போர் இருவரும் மாறிமாறி உரையாடும் பான்மையில் பாடல்கள் உள்ளன; அன்பின் ஐந்திணை அல்லாத கைக்கிளை, பெருந்திணைக்குரிய பாடல்கள் கலித்தொகையில் மட்டும் காணப்படுதல் முன்னரே காட்டப்பட்டது.

மடலேறுதல், ஏறு தழுவுதல், கூன்குறள் காதல் என்பன போன்ற செய்திகள் கலித்தொகையில் மட்டுமே உள்ளன; மடலேறுதல் பற்றி நெய்தற்கலியும் ஏறு தழுவுதல் பற்றி முல்லைக் கலியும் விரிவாக விளக்குகின்றன.

திணைப் பொருண்மையை நோக்கும்போதும் 'கலி' முல்லைப் பாடல்கள் காதலர்கள் களித்திருக்கும் காட்சியைக் காட்டுகின்றன; பிற முல்லைப் பாடல்கள் காதலர் தனித்திருக்கும் துயரை வடிக் கின்றன. இது கலித்தொகை முல்லைப் பாடல்களுக்கும். பிற முல்லைப் பாடல்களுக்கும் உள்ள குறிப்பிடத்தக்க வேறுபாடாகும்'[25] எனும் அறிஞரின் கூற்றும் ஈண்டு நினைவு கூரத்தக்கது.

---

* அதாவது ஒற்றைப்பட எண்களாக வருவது பாலை (1, 3, 5, 7....,)
இரண்டும் எட்டுமாக வருவன குறிஞ்சி (2, 8, 12, 18....,)
நான்காக வருவது முல்லை (4, 14, 24, 34,....)
ஆறாக வருவன மருதம் (6, 16, 26, 36,....)
பத்துப் பத்தாக வருவன நெய்தல் (10, 20, 30, 40,....)

**கைக்கிளை பெருந்திணைப் பாடல்கள் அதிகம் இடம் பெறாதது ஏன் ?**

> கைக்கிளையாவது அகத்திணையின் முதிராக் குறுங்கரு என்றும் ஒரேருழவன் போல ஒரே துறைகொண்டு ஒரு திணையாயிற்று என்றும் அறிய வேண்டும்[26]

என்பர் வ. சுப. மாணிக்கம். மேலும் கைக்கிளைக் காமம் மேல் வளராது தோன்றியவுடன் அழிதலின் காதல் குறுங்கரு என்று கூறலாம்.[27] என அதன் தன்மையை விளக்குவர். இவ்வழி நோக்கின் குறுகிய காலத்திற்கும், ஒரே ஒரு துறைக்கும் உரிய கைக்கிளைத் திணை பற்றி மிகுதியான பாடல்கள் இல்லாமல் இருப்பதில் வியப் பில்லை.

பெருந்திணை நால்வகைப் பொருண்மையை உடையதாக இருந்தும் மிகுதியான பாக்கள் தோன்றவில்லை.

எனவே துறைவளம் பெற்ற - ஒத்த காமத்திற்குரிய அன்பின் ஐந்திணை புலனெறி வழக்கில் பொலிவனவாக இருந்தது என்பது தெளிவு.

**பெயர் சுட்டாத மரபு**

ஒத்த தலைவன் தலைவியரின் காதலொழுக்கத்தைப் புலனெறிப் படுத்தும்போது அவர்களது இயற்பெயர்கள் சுட்டப் பெறாமல் அகப் பாடல் அமைய வேண்டும் என்பது தொல்காப்பிய மரபு.

சங்க அகப்பாடல்கள் முதல், கரு ஆகிய இரண்டையும் உரிப் பொருளை விளக்கும் பின்னணியாக அமைத்துக் கொண்டுள்ளன.

> அகப்பாடலாகிய சொல்லோவியத்துக்கு உயிர் போன்றது இவ்வுரிப் பொருள்; முதற்பொருள் இவ்வோவியத்தின் சட்டகமாகவும், கருப்பொருள் இதன் உடலுறுப்புகளாகவும் அமைந்துள்ளமையை இப்பாடல்களில் காணலாம்[28]

எனத் தொல்காப்பியர் காட்டிய திணைக் கோட்பாட்டின்வழி சங்க அக இலக்கியம் அமைந்துள்ள பாங்கை விளக்குவர்.

அங்ஙனம் மூன்று பொருளும் பயின்று வரும்போது முதல், கரு ஆகிய இரு பொருளிலும் மக்களின் இயற்பெயர்களும் வரலாறுகளும் இடம் பெறுவதுண்டு; உவமைப் பகுதியாகவும் அமைவதுண்டு.

ஆனால் உரிப் பொருளில் வரும் தலைவன் தலைவியர் இயற்பெயர்கள் வருமாறு புலனெறி வழக்கம் செய்யப்படவில்லை.

**களப்பிரர் காலம்**

'தமிழகத்தின் தென் பகுதியாகிய பாண்டிநாடு கி.பி. மூன்றும் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாண்டியர் ஆட்சியை இழந்து களப்பிரர் ஆளுகைக்கு உட்பட்டது. அங்ஙனமே, தமிழகத்தின் வடபகுதியாகிய தொண்டை நாடும் நடுநாடும் கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் இடையில் பல்லவர் ஆட்சிக்குள்ளாயின. நடு நாட்டிற்கும் பாண்டி நாட்டிற்கும் இடையிலுள்ள சோழ நாடும் களப்பிரர் ஆளுகைக்கு உட்பட்டதாயிற்று'.[29] கி. பி. மூன்றாம் நூற்றாண்டிற்குப் பின் தமிழகம் வேற்றரசர்களான களப்பிரர், பல்லவர் ஆட்சியின்கீழ் இருந்தது. அவர்கள் தமிழ் மொழியை ஆட்சி மொழியாகக் கொண்டவரல்லர்; அவர்கள் ஆட்சிக் காலத்தில் பிராகிருதமே அரசாங்க மொழியாக இருந்தது.

சங்க காலத்திற்குப் பின்னும் பிற்காலப் பல்லவர் காலத்திற்கு முன்னும் உள்ள பகுதி அற இலக்கியங்கள் தோன்றிய காலம் ஆகும். அக்காலப் பகுதியில் அறநூல்கள் மலிந்தமைக்கான சமுதாயச் சூழலைக் காண்போம்.

> சமுதாயத்தின் விளைபொருளே இலக்கியம்,
> சூழ்நிலைக்கேற்பவே இலக்கியம் தோன்றுகிறது.
> ...இவ்விரு காலப் பகுதிகளையும் உற்று
> நோக்கும்போது, சில உண்மைகள் பளிச்சிடுகின்றன.
> களப்பிரராட்சிக் காலத்திலும் விஜய நகர நாயக்க-
> ராட்சிக் காலத்திலும் தமிழ் நாட்டில் வெளியார்
> படையெடுப்பு நிகழ்ந்து போர், குழப்பம்,
> அமைதியின்மை முதலின காணப்பட்டன.
> இவ்வாறமையும்
> சூழ்நிலையில், மக்கள் ஒழுக்கம் குன்றுவதியல்பு.
> அக்குறைவை நிவர்த்தி செய்யும் நோக்கமாக,
> ஒழுக்கத்தை வலியுறுத்தும் நூல்கள் தோன்றுவது
> எதிர்பார்க்கக் கூடியதே. அந்த வகையில்
> இக்காலங்களில் அறநூல்கள் தோன்றின எனக்
> கொள்ளலாம்.[30]

'பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர், ஐயர் யாத்தனர் கரணம் என்ப' (நூ. 143) என்ற தொல்காப்பிய நூற்பாவும் ஈண்டு நினைவு கூரத்தக்கது. பொய்யும் வழுவும் தோன்றிய பின் தான் கரணம் என்ற ஒரு சடங்கு ஏற்பட்டது என்பதை அந்நூற்பா

எடுத்துரைக்கிறது. அதுபோலவே அறம் தேய்ந்து அல்லவை பெருகும்போது அறம் பற்றிய நூல்கள் மலர்வது இயல்பாகும்.

> ...பல வழிகளில், சான்றோர் செய்யுட்களின்
> வடிசாறாக விளங்கும் திருக்குறளில் புகழ், மானம்
> முதலிய அதிகாரங்களில் மேற்கூறிய கருத்துக்கள்
> அறவியற் சாயல் பெற்றுத் திகழ்வது கவனிக்கத் தக்கது.
> பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலே வீரயுகப் பண்புகள்
> தமது "தூய்மை" இழந்து நல்லொழுக்கம், நல்லறம்
> ஆகிய கோட்பாடுகள் வழி வருவதைக் குறிப்பிட
> வேண்டும்
> இஃது இலக்கிய வரலாற்றிற் காணும் பெருமாற்றமாம்[81]

எனும் அறிஞரின் கூற்றும் ஈண்டு ஒப்ப நோக்கத்தக்கது.

## அற இலக்கியக் காலத்தில் அக நூல்கள் தோன்றியது எப்படி?

ஒவ்வொரு உயிரும் வாழ்க்கைப் போராட்டத்தை எதிர்நோக்குவது போல, இலக்கிய வகையும் போராடுகிறது என்பதைத் தமிழ் இலக்கிய வரலாறு வழிக்காணலாம். சங்க காலச் சூழலில் தோன்றிய அகப்பொருள் என்னும் இலக்கிய வகை, அற நூல்கள் காலத்தில் தோன்றியுள்ளது எனின் அது உருவாக-அதனை உருவாக்கும் கவிஞர்களும் முனைப்போடு செயல்பட்டிருந்தால்தான் உயிர்ப்பித்திருக்க முடியும். இதனைப் பற்றிய குறிப்பைத் திணை மாலை நூற்றைம்பதில் அமைந்துள்ள பாயிரம் புலப்படுத்துகிறது.

> முனிந்தார் முனிவு ஒழிய, செய்யுட்கண் முத்துக்
> கனிந்தார் களவியல் கொள்கைக்கு அணிந்தார்
> இணை மாலை ஈடுஇலா இன் தமிழால் யாத்த
> திணைமாலை கைவரத் தேர்ந்து[82]

இப்பாயிரம் வழிப் பெறும் சதாசிவ பண்டாரத்தார் முடிவு பின்வருமாறு:

> அதனை நோக்குமிடத்து, இவ்வாசிரியர் காலத்தில்
> அகப்பொருளாகிய களவியலை வெறுத்துக்
> கொண்டிருந்த
> ஒரு குழுவினர் நம் தமிழ்நாட்டில் இருந்திருத்தல்
> வேண்டும் என்பதும் அவர்கட்கு அதன் சிறப்பினை
> விளக்கி அன்னோர் கொண்டிருந்த வெறுப்பினைப்

> போக்க வேண்டியே இவ்வினிய நூலை இவர்
> இயற்றியிருத்தல் வேண்டும் என்பதும் நன்கு,
> வெளியாகின்றன[83]

இக்கருதுகோள் அகப்பொருள் தோன்றிய சூழலை விளக்குகிறது.

> அற இலக்கியே மரபு தோன்றி மிகவும் செல்வாக்குப்
> பெற்ற காலத்தில் சங்க மரபிலான அகப்பொருள்
> பெருமை குன்றியிருந்ததாகவும், இலக்கியத் தகுதி
> அற்றதெனவும் கருதப்பட்டது. இக்கருத்தை மறுத்து
> அகப்பொருள் மரபின் பெருமையை மீண்டும் நிலைநாட்ட
> எழுந்த முயற்சிகளுள் ஒன்று திணை மாலை நூற்றைம்பது
> என்ற செய்தி இதனால் புலனாகிறது[84]

என நூல் தோன்றிய கால கட்டத்தை விளக்குவர் அ. அ. மணவாளன்.

அறநெறிக் காலத்தில் அகப்பொருள் நிலை பற்றி ஆய்வு செய்த நா. செயராமன் பரிபாடலில் இருந்து தமது சான்றை நிறுவி விளக்குகின்றார்.

> அகப்பொருள் பாடல்கள் மிகுந்த எதிர்ப்புக்கு
> உள்ளாகியிருக்க வேண்டும். அதனைப் பரி-
> பாடலிலேயே (*பரி*. 9:7) உணரலாம்.
> அத்தகைய எதிர்ப்புக் குரல் இருந்ததாலேயே
> அகப்பொருள் சிறந்ததென எடுத்துரைக்கும் நிலை
> உருவாகிறது[85]

என்பது அவர் கருத்து. மேலும் அதே காலத்தில் தோன்றிய ஐந்திணை ஐம்பதின் சிறப்புப் பாயிரமும் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது

> பண்பு உள்ளி நின்ற பெரியார் பயன்தெரிய
> வண் புள்ளி மாறன் பொறையன் புணர்ந்துயாத்த
> *ஐந்திணை ஐம்பதும் ஆர்வத்தின் ஓதாதார்*
> *செந்தமிழ் சேரா தவர்*[86]

இப்பாடல் செந்தமிழ் சேர்ந்தவர் ஐந்திணை ஐம்பதை ஆர்வத்துடன் ஓதவேண்டும் எனச் சொல்லி அகப்பொருளின் இன்றியமையாமையை வலியுறுத்திய கால கட்டத்தைப் புலப்படுத்துகின்றது.

**திணை**

திருவள்ளுவர் அகப்பொருள் மரபைத் தழுவிக் காமத்துப்பால் யாத்தனர். எனினும், அன்பின் ஐந்திணைப் பெயர்கள் இடம் பெற வில்லை; ஆனால் ஒத்த தலைவன் தலைவிக்கிடையே தோன்றும் இன்ப உணர்வு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அதாவது பெயர ளவில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என எடுத்தாள வில்லையெனினும் அவற்றின் பொருண்மைக் கூறுகள் இடம் பெற்றுள்ளன.

ஒரு தலையான் இன்னாது காமம்காப் போல்
இருதலை யானும் இனிது (1196)

எனக் காவினது பாரம்போல, தலைவன் தலைவியரிடையே தோன்றும் வேட்கை அமைய வேண்டும் என்று எடுத்துரைப்பதும் இக்கருத்துக்கு அரண் செய்வதாகும்.

**முதல் கரு இடம் பெறாமைக்குக் காரணம்**

திணை பற்றிய செய்திகளைக் காமத்துப்பாலில் வள்ளுவர் யாண்டும் குறிப்பால் கூடப் புலப்படுத்தவில்லை. எனவே குறளில் சங்க அக மரபை மனத்திற்கொண்டு முதற்பொருள் கருப்பொருள் காண விழைவது பொருத்தமில்லை. இருப்பினும் அதற்கான காரணத்தைச் சுட்டும் அறிஞர்களின் கருதுகோள்களைக் காண் போம்.

சுருங்கிய ஈரடிகளைக் கொண்ட குறட்பாவில்
முதற்பொருள் கருப்பொருள் குறிப்புகள் பின்னிலமாக
அமைதல் எளிதன்று[87]

என்பர் சண்முகம் பிள்ளை, தொல்காப்பியம் அகம், புறம் ஆகிய இரண்டுக்கும் இலக்கணம் இயம்பியது; அதனைச் சங்ககால இலக் கியம் போற்றியமைத்துள்ளது. தொல்காப்பியம் அகம் புறம் இரண் டையும் திணை துறை வடிவில் அமைத்துத் தந்தது; திருக்குறள் அதிகாரப் பொருண்மையில் பெயர் வடித்தது; முன்னவற்றில் அமைந்த அகம் தலைவன் தலைவியரின் அக வாழ்வில் மலர்ந்த அன்புச் சிக்கல்களையும் பாட்டில் அமைக்கத் துணை புரிந்தது. அதைப் போலவே புறத்திலும் பகைவர் நாட்டின் அழிவு தன் நாட்டு மன்னனின் பெருமைக்கு அளவுகோலாக நின்றது; பின்னவற்றில் அகவாழ்வுச் சிக்கல்கள் இடம் பெறவில்லை. புறச் செய்திகள் தொல்காப்பியத்தினின்றும் வேறுபட்டு அரசியல், அங்கவியல் என்ற தலைப்புக்களில் பொருட்பாலில் இடம் பெற்றுள்ளன. அவை அரசியல் அமைப்பை விளக்குவதாக அமைந்துள்ளன. இதனை இலக்கிய வகை வழித் தெளிவு படுத்துவர். அதாவது அகம், புறம் என்ற பாகுபாடு சங்க இலக்கியத்திற்குரியதாகும்.

குறள் தோன்றிய காலத்தில் அறம், பொருள், இன்பம் எனும் திரிவர்க்கக் கோட்பாடு தோற்றம் பெற்றது.[88]

எனவே இன்பம் சொல்ல விழைந்த வள்ளுவர் தன் காலத்திற் கேற்ற வடிவத்தில் (குறள் வெண்பா) அகமரபைப் பின்பற்றிக் காமத்துப்பால் இயற்றியுள்ளார்.

ஆகத் தொல்காப்பியம் அல்லது சங்க இலக்கியம் அகப்புற அமைப்பிலிருந்து திருக்குறள் வேறுபட்ட அமைப்புடையது என்பது தெளிவு. இந்த மாற்றம் புறத்தில் அமைந்தது போலவே காமத்துப் பாலிலும் அமைந்துள்ளமை இயற்கை. இவ்வேறுபாட்டைக் காமத் துப்பாலோடு பொருட்பாலையும் இணைத்து முன் தோன்றிய இலக்கண இலக்கியங்களோடு ஒப்பிட்டு நோக்கும்போது தெற் றெனப் புலனாகும். வெண்பா யாப்பு மட்டும் குறளில் முதல் கரு உரி அமையாமைக்கு ஒரு காரணமாகாது எனச் சுட்டும் நா. செய ராமன்.

> முதல், கருப்பொருள் பின்னணி இவர் பாடல்களில்
> அமையவில்லை. குறள் யாப்பே காரணம் என்பர்.
> ஐங்குறுநூற்றில் கூட அப்பின்னணியைக் காண்கிறோம்.
> ஆயின் குறளில் பாடாததற்குக் காரணம் யாப்பு
> என்று மட்டும் கூற இயலாது. வள்ளுவர் ஐந்திணைப்
> பிரிவை மேற்கொள்ள விரும்பாததே காரணம்
> எனலாம்[89]

எனத் தம் கருத்தைக் கூறுகிறார். காரணம் எதுவாயினும் காலத் தின் தேவையை நிறைவு செய்யும் இலக்கியம் சமுதாயத்தால் போற்றப்படும். நாடு அமைதியிழந்து தவித்துக் கொண்டிருந்த போது எளிய வெண்பாவால் மக்களுக்கு நற்கருத்துக்களை எடுத்துச் சொல்லப் புலவர்கள் விழைந்தனர். அகம் புறம் என்ற வகைப்பாடு மாறி அறம் பொருள் இன்பம் எனும் வகைப்பாடு தோன்றியது. அக்காலத்தில் பழைய இலக்கிய மரபை அப்படியே பின்பற்றக்கூடிய சூழல் வள்ளுவருக்கு இல்லாதிருந்தது இயல்பாகும். ஒட்டு மொத்த மாக இலக்கிய அமைப்பில் ஏறபட்ட மாற்றம் புலவர் அறிந்தோ அறியாமலோ உள்ளமைப்பிலும் நிகழக் காரணகாகி விட்டது என முடிவு செய்யலாம்.

## ஆறு அகப்பொருள் நூல்கள்

திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணை எழுபது, ஐந்திணை ஐம்பது, திணைமாலை ஐம்பது, கைந்நிலை, கார் நூற்பது ஆகிய ஆறு நூல்கள் அகம் பற்றி எழுந்த சங்க மருவிய காலம் அல்லது அற இலக்கிய காலத்திற்குரிய அகப்பொருள் நூல்களாகும்.

இவற்றுள் **கார் நாற்பது** முல்லைத் திணைக்குரிய பாடல்களை மட்டும் பெற்றுள்ளது; ஏனைய ஐந்து நூல்கள் அகனைந்திணைப் பகுப்பை மேற்கொண்டுள்ளன. இந்நூல்களின் பெயரும், அமைப்பும் தொல்காப்பியர் காட்டும் ஏழு திணைகளுள் ஐந்திணைக் கோட்பாடு மட்டும் தொடர்ந்து வந்திருத்தலைக் காட்டும். சங்க காலத்திலேயே கைக்கிளை பெருந்திணைப் பாடல்களின் சிறுபான்மை முன்பு எடுத்துக்காட்டப்பட்டது. இந்நூல்களில் அவ்விரு திணைக்குரிய பாடல்கள் இல்லை; இம்முறை கைக்கிளை பெருந்திணை ஆகிய வற்றின் மரபு வீழ்ச்சியைப் புலப்படுத்துகின்றது.

### பெயர் சுட்டாத மரபு

**தொல்காப்பியம்** வழிநின்ற **சங்க இலக்கியம்** போன்றே இந்த நூல்களிலும் சுட்டி ஒருவர் பெயர் கொள்ளப் பெறாத அகமரபு உள்ளது.

### பா வடிவம்

**தொல்காப்பியம்** அகப்பாடலுக்குரிய பாவகையாகக் கலி, பரிபாட்டு ஆகியவற்றைக் குறிக்கும்; ஆனால் சங்க அக இலக்கியத்தில் **கலித்தொகை** தவிர எஞ்சியவை ஆசிரியப்பாவால் இயற்றப் பட்டுள்ளன. சங்கம் மருவிய கால அகப்பொருள் நூல்கள் வெண்பாவால் ஆனவை.

சங்க அக இலக்கியம் போன்றே இவை தனித்தனிப் பாடல் களால் ஆனவை; திணைப் பாகுபாடு உடையவை; **சங்க இலக்கியம்** போன்று பாடலுக்கொரு புலவர் அல்லது திணைக்கொரு புலவர் என்றில்லாமல் ஒரு நூலுக்கு ஒரு புலவர் என அமைந்துள்ளது; எனினும் அவ்விலக்கியம் போன்று உள்ளுறை இறைச்சியின் வளம் அவ்வளவாகக் காணப்படவில்லை. அதற்கு மேற்காட்டியது போல் நூல் தோன்றிய காலச் சூழலும், அகப்பொருள் மரபில் ஏற்பட்ட நெகிழ்ச்சியும் காரணம் எனல் பொருத்தம்.

**திருக்குறள்** காட்டும் அகமரபு மாற்றம், நெகிழ்ச்சி, **திணை மாலை நூற்றைம்பது** பாடிய கணிமேதாவியார் காலத்தில் மீண்டும் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. அகநூல்களின் பெயர்களை நோக்கும் போதும் நூலின் அமைப்பை அறியும்போதும் இவ் உண்மை வெளிப் படுகின்றது. மேலும் அக்காலத்தில் அகப்பொருள் மரபை மீண்டும் தமிழ் இலக்கிய உலகுக்குக் கொண்டுவர மரபுக் கவிஞர்கள் முயன்றனர் என்பது உறுதியாகின்றது. எனவே திணைமாலை முதலான நூல்களின் காலத்தை 'அகப்பொருள் இலக்கியத்தின்

மறுமலர்ச்சிக் காலம்'[40] எனக் கருதும் அறிஞரின் கூற்றும் ஈண்டுப் பொருத்தமாக உள்ளது.

**சிலப்பதிகாரம்**

சிலப்பதிகாரத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியவற்றிற்குரிய முதற்பொருளும் கருப்பொருளும் வருணனைப் பாங்கில் நூல் முழுதும் விரவிக் கிடக்கின்றன. எனினும் அவை உரிப்பொருளை விளக்கும் பாங்கில் ஆளப்படவில்லை.

வேனலங் கிழவனொடு வெங்கதிர் வேந்தன்
தானலந் திருகத் தன்மையிற் குன்றி
முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் திரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை யென்ப தோர் படிவங் கொள்ளும்
காலை யெய்தினிர் காரிகை தன்னுடன்[41]

என்ற அடிகள் நாடுகாண் காதையில் வருணனையாக மட்டும் வந்துள்ளன.

காதைகளுக்கேற்ப அவ்வத் திணைக்குரிய வருணனைக் கூறுகள் உள்ளன. குன்றக் குரவையில் குறிஞ்சியும், ஆய்ச்சியர் குரவையில் முல்லையும், நாடுகாண் காதையில் மருதமும், கானல் வரியில் நெய்தலும், வேட்டுவரியில் பாலையும் மிகுதியும் வந்துள்ளன.

**கோவை**

ஐந்திணையில் நிகழும் நிகழ்ச்சிகளை வரலாற்று முறையில் தொகுத்து நிகழ்ச்சித் தொடர்புடன் தருவது கோவை இலக்கிய மாகும்.

இவ் இலக்கிய வகை துறைத் தலைமை உடையது; திணைத் தலைமை உடையது அன்று. இதில் அகத்திணையைச் சார்ந்து துறைகள் உள்ளன. கோவையுள் முதல் முழுநூலாகக் கிடைக்கும் திருக்கோவையாரையும் அதில் உள்ள நூறு துறைகளை மட்டும் எடுத்துக் கொண்டு நூலாகத் தோற்றம் பெற்ற கல்லாடத்தையும் அறிஞர்கள் திணையின் பாற்படுத்தி ஆராய்ந்துள்ளனர்.[42] இருப்பினும் கோவை இலக்கியம் திணைத் தலைமை பெற்றவை அன்று; கோவைகளை இயற்றிய ஆசிரியர்களும் திணைத் தலைமை கொடுத்த தாகத் தெரியவில்லை. எனவே அவை திணையின்கீழ் ஆராயப்பட வில்லை.

**பெருங்கதை**

சமணக் காப்பியமான பெருங்கதை மகத நாட்டின் சிறப்பை விளக்கும்போது நில வருணனையாக ஐந்திணைப் பெயர்களை எடுத்தாளுகின்றது.

சிறந்த சீர்த்திக் குறிஞ்சி கோலிக்
கல்லென் சும்மையொடு கார்தலை மணந்த
முல்லை முதுதிணைச் செல்வ மெய்திப்
பாலையு நெய்தலு வேலி யாகக்
கோல மெய்திக் குறையா வுணவொடு[43]

என மருதம் தவிர்ந்த நால்வகை நிலத்தை ஒருங்கு காட்டுகிறது.

......பழனப் படப்பைக்
கூடுகுலைக் கமுகின் கொழுநிழ லசைந்து'
மன்றயற் பரக்கு மருதற் றழீஇ[44]

எனப் பிறிதோர் இடத்தில் மருதத்தையும் வருணிக்கிறது. மேலும் பல இடங்களில் நிலம் பொழுது வருணனைகள் இடம் பெற்றிருக்கின்றன. எனினும் அவை தலைவன் தலைவி வாழ்வோடு தொடர்பு படுத்தப்படவில்லை.

எனவே, திணை என்ற சொல் நிலத்தை மட்டும் குறிக்கும் நிலையில் காப்பியங்களில் வழங்கத் தலைப்பட்டது எனக் கொள்ளலாம். மேலும்,

'பல்லாப் படுநிரைப் பயம்படு வாழ்க்கைக்
கொல்லைப் பெருங்குடிக் கோவலர் குழீஇய
முல்லைப் பெருந்திணை புல்லுபு கிடந்த'
குறிஞ்சிப் பெருந்திணை குலாஅய்க்கிடந்த[45]

என முல்லை குறிஞ்சி ஆகியவற்றைப் பெருந்திணைகள்* எனச் சிறப்பித்து நாட்டு வளத்தைக் காட்டுவர்.

**சீவக சிந்தாமணி**

சீவக சிந்தாமணியில் ஐவகை நிலங்கள் பின்வருமாறு வருணிக்கப் படுகின்றன.

* ஆசிரியர் பெருந்திணை என்ற சொல்லைப் பரந்த நிலம் என்ற பொருளில் ஆள்கின்றார். தொல்காப்பியர் காட்டிய பெருந் திணைப் பொருளில் அன்று.

தடஞ்சிறை யன்னங் குருகொடு
நாரைப் பார்ப்பின மோம்புதண் *மருதம்*
மடங்கல்போற் றிறலார் மாமணி கறங்க
வளவயற் புள்ளெழக் கழிந்தார்

அரிதுண ரன்னம் பெடையெனத் தழுவி
யண்மையி னலமர லெய்தித்
திரிதரு நோக்கந் தீதிலார் நோக்கி
*நெய்தலுங்* கைவலத் தொழிந்தார்

கோட்டிளங் கலையுங் கூடுமென் பிணையுங்
கொழுங்கதிர் மணிவிளக் கெறிப்ப
...................................
மோட்டிள *முல்லை* மொய்ம்மலர்க் கான
முருகுவந் தெதிர்கொள நடந்தார்

கழைவளர் குன்றிற் களிறுநின் றாடுங்
கடிநறுஞ் சந்தனச் சாரல்
இழைவளர் முலையார் சாயல்போற் றோகை
இறைகொள்பூங் *குறிஞ்சியு* மிறந்தார்

ஆன்றவெம் *பாலை* யழன்மிதித் தன்ன
வருஞ் *சுரஞ்* சுடர்மறை பொழுதின்
ஊன்றினார் பாய்மா வொளிமதிக் கதிர்போற்
சந்தன மொருங்கு மெய் புதைத்தே[46]

மேற்காணும் பாடல்கள் சீவகனது வழிப்பயணத்தின்போது வருணனையளவில் மட்டும் காணப்படுகின்றன; அவை சீவகன் மருதம், நெய்தல், முல்லை, குறிஞ்சி, பாலை ஆகிய ஐந்நிலங்களையும் கடந்து செல்லும் பாங்கைக் கூறுகின்றன.

**சூளாமணி**

சூளாமணியில் காணப்படும் நிலவருணனை இதற்கு முன் தோன்றிய காப்பியங்களின் வருணனை மரபிலிருந்து முற்றிலும் வேறுபட்டுள்ளது.

இதில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நான்கிற்கும் முறையே ஐந்தைந்து பாடல்கள் வீதம் இருபது பாடல்கள் தொடர்ச்சியாகக் காணப்படுகின்றன. அவை அந்நிலங்களுக்குரிய

ஒலி, மலர், பறவை, விலங்கு, விளைவு ஆகியன பற்றிக் குறிப்பிடுவனவாக உள்ளன. அவற்றின் அமைப்பும் பாடல்களின் எண்ணிக்கையும் பின்வருமாறு:

| | ஒலி | மலர் | பறவை | விலங்கு | விளைவு |
|---|---|---|---|---|---|
| குறிஞ்சி | 13 | 17 | 21 | 25 | 29 |
| முல்லை | 14 | 18 | 22 | 26 | 30 |
| மருதம் | 15 | 19 | 23 | 27 | 31 |
| நெய்தல் | 16 | 20 | 24 | 28 | 32 |

(எண் பாடலெண்ணைக் குறிக்கும்)

இங்ஙனம் முதலில் குறிஞ்சி முதலிய நான்கு திணைக்குமுரிய ஒலிகளைக் கூறிமுடிக்கின்றது. அடுத்து அவ்வாறே மலர், பறவை, விலங்கு, தொழில் பற்றியும் விளக்குகின்றது. இங்ஙனம், காணப்படும் வருணனை அமைப்பு பிற காப்பியங்களில் இல்லாத, திணை மரபைப் பின்பற்றி ஆனால் அதே நேரத்தில் அதனின்று திரிந்த நிலையில் அமைந்த மரபு மாற்றம் எனலாம்.

இவை தவிர திணை மயக்கம் (33-35) பற்றியும், பாலை, முல்லை மருத நில வருணனைகளும் (777-818) சூளாமணியில் உள்ளன. சூளாமணியைப் பொருட் பகுப்பாய்வு செய்தோர் அக்காப்பியத்தில் உள்ள நில வருணனை, பொழுது வருணனை ஆகியவற்றைப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளனர்.[47]

சூளாமணியைப் பொறுத்த மட்டில் வருணனை மரபில் மாற்றமுள்ளதே தவிர, திணை என்றால் நிலம் என்ற பொருளில்தான் ஆளப்பட்டுள்ளது; எனவே திணை பற்றிய பொருளில் ஏனைக் காப்பியங்களை ஒட்டியே செல்கின்றது எனலாம்.

**நீலகேசி**

நீலகேசியில் நாட்டுச் சிறப்பில் ம்ட்டும் நில வருணனை உள்ளது.

> "திணி நிலையன திரளரையன தெரிமலரென *மருதம்*"
> "நிரை தழுவிய நெறிகழியிடை நிகரலரன *நெய்தல்*"
> "முருகுடயணமுகைவிரிவன முறியலர்வன *முல்லை*"
> "இனியனபல சுனையயலன விறுவரையன *குறிஞ்சி*"[48]

என நால்வகை நிலத்தைக் குறித்த ஆசிரியர்

> ஆலு மழை மூன்றுமுடை மாதமென லானுங்
> கால மவை தாங்கடுமை காண்பருமை யாலும்
> பாலைநில மொன்றுமவ ணின்மை பழுதன்றே[49]

எனப் பாலைநிலம் இல்லாதது பழுதன்று எனக் கூறி நாட்டு வளத்தை மிகுவித்துக் காட்டுவர்.

## திரு ஏகம்பமுடையார் திருவந்தாதி

பதினோராந் திருமுறை நூல்களுள் ஒன்றான இந்நூலுள்ளும் சில பாடல்களில் முல்லை (92), மருதம் (6, 81), பாலை (62) ஆகிய திணைகள் பற்றிய குறிப்பு உள்ளது.

## பெரியபுராணம்

இந்நூலில் உள்ள திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தில் நாற்பத்திரண்டு செய்யுட்கள் (6-47) தொண்டை நாட்டின் நிலப் பிரிவுகள் பற்றிக் கூறுவன. அவற்றுள் ஆறு செய்யுட்கள் (41-46) திணை மயக்கம் பற்றியன.

### திணை வருணனை

'தாவில் செம்மணி யருவியா றிழிவன *சாரல்*
பூவில் வண்டினம் புதுநற வருந்துவ *புறவம்*
வாவி நீள்கயல் வரம்பிற வுகைப்பன *மருத*
நீவி நித்திலம் பரத்திய ருணக்குவ *நெய்தல்*'

'குறவர் பன்மணி யரித்திதை விதைப்பன *குறிஞ்சி*
கறவை யானிரை மானுடன் பயில்வன *கானம்*
பறவை தாமரை யிருந்திற வருந்துவ *பழனஞ்*
சுறவ முண்மருப் பணங்கயர் வனகழிச் சூழல்'[50]

எனப் பாலை தவிர்ந்த குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நான்கு திணைகளுக்குமுரிய இயற்கை நிகழ்ச்சிகளும், மானுட வினைகளும் ஒவ்வொரு பாடலிலும் கலந்து வந்துள்ளன.

### திணை மயக்கம்

புணர்ந்த வானிரைப் புறவுடைக் குறுமுயல் பொருப்பி
னணைந்த வான்மதி முயலினை யினமென வணைந்து
மணங்கொள் கொல்லையில் வரகுபோர் மஞ்சன
வரைக்கா
ரிணைந்து *முல்லையுங் குறிஞ்சியும்* கலப்பன வெங்கும்[51]

எனக் குறிஞ்சியும் முல்லையும் இணைவதைக் காட்டுவர்.

இப்புராணத்தில் பாலை தவிர்ந்த ஏனைய நால் நிலங்களின் தொடர்பான வருணனையும், அவற்றின் திணைமயக்கமும் மரபு

கருதி பயின்று வந்துள்ளன. இந்நூலுள் பிற புராணங்களிலும் திணை வருணனைகள் உள்ளன.[52] அவற்றிலும் ஏனைய காப்பியங்கள் போலவே திணை என்பது அகப்பொருள் மரபில் ஆளப்படவில்லை.

**அரிச்சந்திர புராணம்**

இந்நூலுள் சரயு ஆற்றின் போக்கை வருணிக்கும் இடங்களில் ஐந்நிலம் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

'காயும் பாலையில் வந்து கலந்ததே'
.....................'செழும்
புறவ மேய்ந்தது பூம்புனல் ஆறரோ'

ஆவி அன்ன பெடைகளும் அன்றிலும்
தூவி அன்னமும் துன்னிய நாரையும்
மேவி இன்பம் விடாத நெடும்புனல்
வாவி சூழும் மருதம் புகுந்ததே[53]

எனச் சரயு ஆறு பாயும் பாலை, முல்லை, மருத நிலங்களைக் காட்டுவர்.

நெடிய நெய்தலின் நித்தில வண்டலில்
கொடிய காதலிற் கூடல் இழைத்திடும்
கடிய நீலக் கருங்கண் நுளைச்சியர்
மடியி லேறி வளைக்கண்முத் தீனுமே[54]

என நெய்தல் நிலத்தையும் அதன்கண் வாழும் மகளிர் செயலையும் வருணிக்கின்றார்.

**திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம்**

பெரியபுராணத்தைப் போலவே இந்நூலிலுள் ஒரே பாடலில் நான்கு அல்லது ஐந்து திணைகளுக்குரிய குறிப்பு உள்ளது.

கானெருங்கும் வரைவளங்க டருமென்றுங் கடிக்குறிஞ்சி
யானெருங்கு மினியவளந் தருமென்று மணிமுல்லை
வானெருங்கும் பொழில்வளங்க டருமென்றும் வயன்மருத
மீனெருங்குங் கடல்வளங்க டருமென்றும் வியனெய்தல்
அடுகுறவர் திறம்பெருகு மலர்குறிஞ்சி யானாயர்
குடிநெருங்கும் படர்முல்லை கொழுமள்ளர்
குழுத்துவன்றுங்
கடிமருதம் விளையளவர் கணநிறையுங் கழிநெய்தல்
படைமறவர் நிரம்புநெறி பரன்முரம்பு தரும்பாலை[55]

என்பன அப்பாடல். இவை, நானிலத்திற்குரிய இடத்தையும் ஐவகை நிலத்திற்குரிய சில மக்களையும் குறிப்பிடுகின்றன.

இங்ஙனம் புராணங்களிலும் காப்பியங்களைப் போலவே நில வருணனை காணப்படுகின்றது. கச்சியப்ப சுவாமிகள் இயற்றிய **திருவானைக்காப் புராணம், தணிகைப்புராணம்** போன்ற புராணங்களிலும் ஐந்நிலங்களும், திணை மயக்கமும் பற்றிய பாடல்கள் உள்ளன.[56]

ஆக நில வருணனையை மரபு கருதிப் புராணங்களும் போற்றின எனலாம். அவற்றில் காணப்படும் நில வருணனைக்கும், காப்பியங்களில் காணப்படும் நில வருணனைக்கும் பெரும்பாலும் வேறுபாடு இல்லை. எனவே திணை—நில வருணனை மரபில் இரண்டும் ஒற்றுமை உடையனவாக உள்ளன எனக் கூறுதல் பொருத்தமானது.

**பள்ளு நூல்கள்**

காப்பியங்கள் புராணங்கள் மட்டுமன்றிப் பதினேழாம் நூற்றாண்டளவில் தோன்றியதாகக் கருதப்படும் பள்ளு இலக்கிய வகையும் நில வருணனை மரபைப் போற்றியுள்ளது.

முக்கூடற்பள்ளு குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய ஐந்நிலங்களிலும் பாய்ந்து வரும் பொருநையாற்றைப் பின்வருமாறு காட்டும்.

சேனைப் புரவி அழகனார் - மரு
கோனைப் பரவி அழகுபூந்
    தினையை வனத்தில் உதிர்த்துப் - *பாலை*
      யனைய வனத்தை எதிர்ந்ததே
கன்னி முலையிற் சுரந்தபால் - என
முன்னி முலையிற் பரந்ததே

(முல்லை)

கொள்ளுங் கயத்தை நிகர்த்து - *மருதந்*
துள்ளுங் கயத்தில் பாய்ந்ததே
கழனிக் குடிலைத் தொகுத்து - *நெய்தலந்*
துழனிக் குடிலிற் புகுந்ததே[57]

இங்ஙனம் ஆற்று வரவுரைக்கும் இடங்களில் திணைப்பெயர் நிலத்தைக் குறிக்க ஆளப்பட்டுள்ளது. மேலும் இப்பள்ளு நூல் ஒவ்வொரு திணைப் பாடலுக்குப் பின்னும் அவ்வத் திணைக்குரிய உரிப்பொருள் பற்றிய அகத்துறைப் பாடல்களைப் பெய்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

தண்டிகைக் கனகராயன் பள்ளு, முக்கூடற்பள்ளு போன்ற பிற பள்ளு நூல்களிலும் திணை வருணனை உள்ளது.[58]

முன்னர்க் காட்டிய அரிச்சந்திர புராணமும் ஆறு பாய்ந்து செல்லும் வழியைக் கூறும்போது இத்தன்மைத்தான நில வருணனையைப் பின்பற்றியிருப்பது ஈண்டு ஒப்புநோக்கற்பாலது.

**இராவண காவியம்**

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய இராவண காவியத்தில் புலவர் குழந்தை தமிழகப் படலத்தில் (திணை வருணனை தொடர் பாக ஐம்பது பாடல்கள் (48-97) பாடியுள்ளார். காட்டாகத்

துளிமிகு கூதிரிற் றுணைமை யோடுயிர்
களிமிகு யாமமெய் கலந்தங் கின்புற
அளிமிகு காதல ரணுகி யன்பது
கொளவிட மாய்மழைக் *குறிஞ்சி* மன்னுமால்[59]

எனக் குறிஞ்சி நிலத்தில் கூதிர்காலத்தில் நிகழும் ஒழுக்கத்தைக் காட்டுவர். இவர் காட்டும் வருணனைகள் அகப்பொருள் துறைகள் நிகழும் பின்புலத்தில் உள்ளன.

......கொதிகொள் வெஞ்சுரம்
துடியிடை யினைதரத் துறந்து செல்பவர்
படருற நண்பகற் *பாலை* மன்னுமால்

'பொருந்திய நண்பகற் போதிற் காளையின்
திருந்திழைக் கன்னியுஞ் செல்லக் கண்டுமே
இருந்துமே யெம்மனை யின்று நாளைநீர்
விருந்துண்டு சென்மென வேண்டிக் கொள்வரே'[60]

என்பன போன்ற பாடல்கள் பிற காப்பியங்களில் காணப்படும் நில வருணனைப் பாடல்களின்று வேறுபட்டு நிற்பதைக் காணலாம். அதாவது இவற்றில் வருணனையோடு அகப்பாடலில் காணப்படும் துறைக்குரிய நிகழ்ச்சிகளும் இடம் பெற்றுள்ளன.

இதற்கு, ஆசிரியரின் அகத்திணைப் பயிற்சியும் தமிழ்ப் பற்றும் ஒரு காரணம் எனலாம்.

**பிற**

பாரதியார் கவிதைகளில் காதல், பக்தி ஆகிய இரண்டின் பொருண்மையில் அமைந்த பாடல்களில் அகத்திணை ஒழுக்கம் பற்றிய செய்திகள் உள்ளன. அவை அகம் காட்டும் முதல், கரு, உரி ஆகிய மூன்றையும் உள்ளடக்கியவை அல்ல.

பாரதிதாசன் சங்க இலக்கிய மரபில் தோய்ந்தவர். அவர் **காதற் பாடல்கள்** என்னும் தமது நூலிலும், பிற படைப்புக்களிலும் அகப்பொருள் துறையிலமைந்த பாடல்களைப் பாடியுள்ளார். எனினும் அவை திணைத் தலைமை பெற்றவை அல்ல. பாடும் முறையாலும், காலத்தாலும் அகத்தினின்றும் விலகி நிற்கின்றன.

கண்ணதாசன் கவிதைகளில் 'எழுதிணைகளுள் கைக்கிளை பெருந்திணைக் கூறுகள் அடங்கிய பாடல்களின் எண்ணிக்கை மிகுதியாக உள்ளன. ஐந்திணைகளுள் பாலை மருதம் பற்றிய அகப் பொருள் கூறுகள் இல்லை. முதற்பொருள், கருப்பொருள் பற்றிய செய்திகள் மிகமிக அருகியே காணப்படுகின்றன[61] என்பர்.

புதுக்கவிதையில் திணைக்குரிய நிலம் இயற்கை வருணனையாக உள்ளது; கருப்பொருள்கள் பாடப்படவில்லை. எனினும் ஐந்திணைக்குமுரிய உரிப்பொருள்கள் பாடப்பட்டுள்ளன[62] என்பர்.

இங்ஙனம் இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகளில் சென்று தேய்ந்து இறுதல் எனும் நிலை காணப்படுகின்றது.

## தொகுப்புரை

**தொல்காப்பியம்** காட்டும் திணைக்கோட்பாடு அகம் புறம் ஆகிய இரண்டையும் இணைத்து நிற்பது; அதாவது அகத்திணை ஏழோடு புறத்திணை ஏழையும் சார்த்தி இலக்கணம் இயம்புகின்றது; இரண்டுக்கும் உள்ள வரையறைகளும் தெளிவாக விளக்கம் பெற்றுள்ளன.

**சங்க இலக்கியம்** தொல்காப்பியரது திணைக் கோட்பாட்டைப் பெரும்பாலும் பின்பற்றியுள்ளது; அவற்றுள் ஐங்குறுநூறும் கலித்தொகையும் திணையடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளன; அகநானூறு எண்ணடிப்படையில் திணைக்குறிப்புப் பெற்றுள்ளது. **தொல்காப்பியம்** அகத்திணைக்குரிய பாக்களாகக் கலியையும் பரிபாட்டையும் சுட்டுகின்றது; ஆனால் சங்க அக இலக்கியத்துள் கலித்தொகை தவிர எஞ்சியன ஆசிரியப்பாவால் ஆனவை. இது பாவடிவில் ஏற்பட்ட மாற்றமாகும். கைக்கிளை பெருந்திணைக்குரிய பாடல்கள் சில கலித்தொகையில் மட்டுமே காணப்படுவது குறிப்பிடத் தக்கது.

சங்கம் மருவிய காலத்துத் தோன்றிய அறநூல்களுள் ஒன்றான திருக்குறளில் காமத்துப்பால் அகத்திணைக் கூறுகளை உடையது; எனினும் திணைத் தலைமை பெறவில்லை.

அதனையடுத்துத் தோன்றிய திணைமாலை முதலான ஆறு அகப்பொருள் நூல்களும் சங்க அக இலக்கியத்தைப் போலவே

தொல்காப்பியரின் அகத்திணைக் கோட்பாட்டைப் பின்பற்றி அமைந்துள்ளன. எனினும் பாவடிவில் சங்க இலக்கியத்தைப் போலவே வேறுபடுகின்றன; அதாவது அற இலக்கியக் காலத்தில் தோன்றிய ஆறு அக நூல்களும் வெண்பா யாப்பின.

சங்க அக இலக்கியங்களுள் ஐங்குறுநூறும் கலித்தொகையும் ஒவ்வொரு திணைக்கும் ஒரு புலவர் என்ற அமைப்பையுடையன. ஆனால் சங்கம் மருவிய காலத்துத் தோன்றிய ஆறு அகப்பொருள் நூல்களுள் **கார் நாற்பது** தவிர ஏனையவற்றில் காணப்படும் ஐந்திணைக்குரிய பாடல்களும் ஒரே புலவரால் பாடப் பெற்றவை; எனினும் நிகழ்ச்சித் தொடர்பற்ற தனிப்பாடல்களாக அமைந்தவை. **கார் நாற்பது** பிற நூல்களின் அமைப்பிலிருந்து வேறுபட்டு முல்லைக்குரிய கார்காலம் பற்றி அமைந்துள்ளது; அது மட்டுமின்றி முல்லைக்குரிய பெரும்பொழுதின்வழி முல்லைக்குரிய உரிப் பொருளை மட்டும் பாடுகின்றன.

நூற்பெயரைப் பொறுத்தவரை **கைந்நிலை, கார் நாற்பது** தவிர்ந்து ஏனையவை திணை என்ற சொல்லை நூற்பெயரோடு பெற்றுத் திகழ்கின்றன.

பாடலாசிரியர்களைப் பொறுத்தவரை சங்க அக இலக்கியப் பாடல்களைப் பாடியவர் பலர்; சங்கம் மருவிய கால அகப்பொருள் நூல்களைப் பாடியவர் ஆறு புலவர்களாவர் (சிறு பான்மை).

தொல்காப்பியர் காட்டிய கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரு திணைகளின் துறைகளின்கீழ் அமைந்த பாடல்கள் இவ் ஆறு அகப் பொருள் நூல்களில் இல்லை.

தொல்காப்பியர் காட்டும் இலக்கிய உத்திகளான உள்ளுறை இறைச்சி போன்றவை சங்க அக இலக்கியத்துள் பயின்று வந்துள்ளமை போல் சங்கம் மருவிய கால நூல்களில் அதிகமாக இல்லை.

தொல்காப்பியர் காட்டும் பெயர் சுட்டா மரபு போற்றப்பட்டுள்ளது. திணை வளர்ச்சியை ஒட்டு மொத்தமாக நோக்கும்போது சங்கம் மருவிய கால ஆறு அகப்பொருள் நூல்களோடு தொல்காப்பியர் காட்டிய அகத்திணை மரபு முற்றுப் பெற்றுவிட்டது என்பது பொருத்தமாகும்.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்குரியதாகக் கருதப்படும் சிலப்பதிகாரம் பாலைக்குரிய நிலம் பற்றிய விளக்கத்தைச் சுட்டுகின்றது. இது தவிர எல்லாக் காண்டங்களிலும் முதல் கரு ஆகியவை பற்றிய வருணனைகள் உள்ளன; ஆனால் அவை உரிப்பொருளை விளக்கப்

பயன்படுத்தப் படவில்லை. மேலும் காப்பியங்களில் திணை என்பது நிலம் என்ற பொருளில் வழங்கத் தலைப்பட்டது திணை மரபில் எழுந்த மாற்றமாகும்.

பெருங்கதை அன்பின் ஐந்திணைப் பெயர்களை வருணனை நோக்கில் மட்டும் குறிக்கின்றது.

சூளாமணி ஆசிரியர் திணை வருணனைப் போக்கில் சற்று மாறு பட்ட முறையை மேற்கொண்டுள்ளார். அம்முறைமை சூளாமணியில் மட்டும் காணப்படுகின்றது. பிற காப்பியங்களில் இல்லை.

நீலகேசி நாட்டுச் சிறப்பில் பாலை தவிர்ந்த ஏனைய நாநிலத்தையும் சுட்டுகின்றது; மாதம் மூன்று முறை மழை பொழிவதால் வளமிக்க நாடு. எனவே, பாலை நிலம் இல்லாதது பழுதன்று எனக் காட்டுகிறது. நாட்டு வளத்தை மிகுவிக்கப் பாலை நிலத்தைச் சுட்டாத மரபு சிறப்புடைத்து எனக் கருதிய இந்நூலாசிரியர் அதனை ஓர் உத்தியாகத் தமது காப்பியத்துள் பயன்படுத்திக் கொண்டுள்ளார். எனவே திணை என்ற சொல் நிலத்தை மட்டும் குறிக்கத் தலைப்பட்டதைத் தெளிவாக உணரலாம்.

பெரியபுராணம், தலப்பெருமை சுட்டும் பாங்கில் நில வருணனையையும் திணை மயக்கத்தையும் பாடுகின்றது.

புராண இலக்கியங்களிலும் காப்பியங்களைப் போலத் திணை வருணனைப் பாங்கு உள்ளது. திணைகளின் முறை வைப்பில் புராணங்களுக்கிடையே மாற்றமிருப்பினும் நோக்கத்திலும் அமைப்பிலும் வேறுபாடு இல்லை.

பள்ளு இலக்கிய வகையும் புராணத்தைப் போன்றே திணை மரபைப் போற்றி இருக்கின்றது. எனினும் ஒவ்வொரு திணைக்கும் அடுத்து இடம் பெறும் பாடல்கள் அவ்வத்திணையைச் சார்ந்த துறைக்குரியன என்பது குறிப்பிடத்தக்க மாற்றமாகும்.

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய இராவண காவியம், காப்பியத்தைப் போன்று நில வருணனையைப் பெய்து வைத்துள்ளது. மேலும் பாரதியார், பாரதிதாசன், கண்ணதாசன் போன்றோரது படைப்புக்களில் திணைக்குரிய கூறுகள் மட்டுமே இடம் பெற்றுள்ளன; அவை அகம் காட்டும் திணைப் பொருண்மையைப் பெற்றவை அல்ல.

சுருங்கக் கூறின், தொல்காப்பியர் காட்டிய திணைக் கோட்பாடு, இலக்கியத்தைப் பொறுத்தமட்டில் சங்கம் மருவிய கால ஆறு அகப்பொருள் நூல்களோடு நிறைவு பெறுகின்றது. அதன்பின்

வருபவை அவற்றின் திரிபுகளாகவும், எச்சங்களாகவும் காணப் படுவன. அதாவது திணை என்பது ஒழுக்கத்தைக் குறிக்க வில்லை; நிலத்தை மட்டும் குறித்தது எனலாம்.

# சான்றெண் விளக்கம்

## இயல் இரண்டு

### திணை

1 தொல். பொருள், 310:5.

2 நக்கீரர் உரை, இறையனாரகப்பொருள், 1.

3 இளம்பூரணம், தொல், பொருள்., 2.

4 ,, 2.

5 தொல். பொருள்., 1.

6 ,, 5:5.

7 ,, 11.

8 ,, 3.

9 ,, 4.

10 அ.அ. மணவாளன், ''சங்க இலக்கியம்'', இலக்கியக் கொள்கை-1, 31.

11 தொல். பொருள். 20.

12 ,, 16.

13 ,, 53.

14 ,, 54.

15 இளம்பூரணம், தொல். பொருள். 54.

16 வ. சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், 235.

வலிந்து பற்றிய புணர்ச்சியே பெருந்திணை என்று இது வரை கூறிவரும் கருத்து அடிப்பிழை. தூய காதலர்களிடை அளவு கடந்து போய சில பால் வினைகளைப் புலப் படுத்துவதே பெருந்திணையின் உட்கோள்... பெருந்திணை யாவது அகத்திணையின் முதிர்ந்து வீழ்கரு என்றும், இத்திணைக்கு உரிய துறை நான்கும் தனிநிலையுடை யவல்ல; சில ஐந்திணைத் துறைகளின் சார்புடையனவே என்றும் நினையல் தகும் என்றும் விளக்குவர் (27).

17 நச்சினார்க்கினியம், தொல். பொருள்., 92.

18 க.ப. அறவாணன், அற்றைநாட் காதலும் வீரமும், 184.

19 வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், 232.

20 தொல். பொருள். 59:3, 64:1, 66:1, 70:1, 73:1, 76:1, 78:1.

21 இளம்பூரணம், தொல். பொருள்., 76.

22 ,, ,, 78.

23 தொல். பொருள். 84,

24 1. அ. நற். 64, அகம். 243 ஆகியவற்றில் பெருந்திணைக் குறிப்பு உண்டு. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், 245.

ஆ. கலி. 62, பெருந்திணை பாடல் அன்று,மேற்படி 374.

2. Even in the Kurinci songs of other anthologies, there are a few songs which may be looked upon as belonging to Kaikilal (**Narrinai**, 39)

—RM. Periakaruppan, **Tradition and Talent in Cankam Poetry**, 124.

25 கி. இராசா, ஒப்பிலக்கிய நோக்கு, 20-21.

26 வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், 28.

27 ,, ,, 244.

28 அ.அ. மணவாளன், ''சங்க இலக்கியம்'', இலக்கியக் கொள்கை-1, 32.

29 தி.வை. சதாசிவ பண்டாரத்தார், தமிழ் இலக்கிய வரலாறு (கி.பி. 250-கி.பி. 600), 15.

30 ஆ. வேலுப்பிள்ளை, தமிழர் சமய வரலாறு, 51.

31 க. கைலாசபதி, ஒப்பியல் இலக்கியம், 118.

32 திணைமாலை நூற்றைம்பது, 'சிறப்புப் பாயிரம்.

33 தி.வை. சதாசிவ பண்டாரத்தார், தமிழ் இலக்கிய வரலாறு (கி. பி. 250—கி. பி. 600), 69.

34 அ. அ. மணவாளன், ''அகப்பொருளிலக்கியத்தின் மறுமலர்ச்சிக் காலம்'', ஆ.கோ. 17-1, 427.

35 நா. செயராமன், 'தனிநிலைப்பாடல்', தமிழ் இலக்கிய நெறிகள், 97.

36 ஐந்திணை ஐம்பது, சிறப்புப்பாயிரம்.

37 மு. சண்முகம் பிள்ளை, அகப்பொருள் மரபும் திருக்குறளும், 246.

38 With these theoritical notions of transformation of genres, if we approach the subsequent Literary Period of the Tamils, we could see the chenges that have come upon their **Akam** poetry. The **Kural** is a good example in this regard. The society that gave birth to the **Kural** has a world-view different from that of earlier period. Accordingly the three fold **Purusharthas** formed the theme of Tamil poetry replacing the twofold theme of the Cankam Period.

A. A. Manavalan, The Life influence and death of Tamil Genre, UGC/Seminar on Comparative Literature, Madurai Kamaraj University, May 15, 1986.

39 நா. செயராமன், 'காமத்துப் பாலும் அகப்பொருள் மரபும்' ஆ. கோ. 12-1, 327.

40 அ.அ. மணவாளன், ''அகப்பொருளிலக்கியத்தின் மறு மலர்ச்சிக் காலம்'' ஆ. கோ. 17-1, 427.

41 சிலப்பதிகாரம், 11:62-67.

42 The theme wise arrangement of the total 25 situations in Thirukkovaiyur may be given as follows :

18 (Kurinchi) + 1 (Mullai) + 5 (Palai) + 1 (Marutham)

Gloria Sundaramathy, 'Kovai' **Literary Heritage of the Tamils,** 329.

கல்லாடத்தில் உள்ள துறைகளைப் பின்வருமாறு வகைப் படுத்துவர் க.த. திருநாவுக்கரசு. கு. 60, மு. 9, ம. 21, நெ. 2, பா. 8, க.த. திருநாவுக்கரசு, 'கல்லாடம்', இலக்கியக்கொள்கை-4, 41-77.

43 பெருங்கதை, 3:2:36-40.

44 ,, 3:2:23-25.

45 ,, 1:49:123-125, 1:50:59.

46 சீவக சிந்தாமணி, 10:2102-2106.

47 நிலவருணனை 8, 9, 12-35, 367, 368, 728-69, 772, 774, 777-85, 787-811, 822, 823, 971, 974, 985, 1412, 1419, 1423, 1428, 1471, 1490, 1511-16, 1519, 1522-24, 1526, 1748, 1813, 1862.

பொழுது வருணனை 26, 64, 82, 161-78, 221, 280, 363-72, 440, 443, 615, 653, 735, 742, 783, 787, 799, 834, 880, 887, 947, 1025-35, 1041-44, 1048, 1049, 1051, 1053-69, 1071, 1078, 1523, 1544, 1549, 1556, 1668-82, 1669-1702, 1076, 1709, 1750, 1776, 1813, 1894, 1895, 2055.
சிந்திகெயாள், ''சூளாமணி-ஒரு பொருட் பகுப்பாய்வு'', (எம், ஃபில். ஆய்வேடு), பின்னிணைப்பு, பகுதி-1.

48 நீலகேசி, 13:14, 14:4, 15:4, 16:4.

49 ,, 20:2-4.

50 பெரியபுராணம், திருக்குறிப்புத் தொண்டர் புராணம், 6,7

51 ,, ,, 43.

52 குறிஞ்சி : 142 பாடல்கள் 5 புராணங்கள் கண்ணப்ப நாயனார் புராணம் (மிகுதி), திருக்குறிப்புத் தொண்டர், விறல் மிண்டர், எறிபத்தர், திருநாவுக்கரசு நாயனார் ஆகியோர் புராணங்கள் (சில கூறுகள்).

முல்லை : 38 பாடல்கள் 8 புராணங்கள் ஆனாயர் புராணம் (மிகுதி), திருக்குறிப்புத் தொண்டர், கண்டேசுரர், திருமூலர், திருநாவுக்கரசு, மானக்கஞ்சாறர், எறிபத்தர், விறல்மிண்டர், ஆகிய புராணங்கள் (சில கூறுகள்)

மருதம்: 308 பாடல்கள் 37 புராணங்கள்

நெய்தல்: 38 ,, 4 ,,

பாலை: 3 ,, 3 ,,

பிரபாவதி பிரின்ஸில்லா சினேகபாய், ''பெரியபுராணத்தில் இயற்கை வருணனைக் கூறுகள்''. (எம், ஃபில். ஆய்வேடு), 17-145.

53 அரிச்சந்திர புராணம், 16, 18, 22.

54 ,, 57.

55 திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம் 12, 13

56 புராணங்கள் :

கந்தபுராணம் : பாலை 14, 15, முல்லை 16, மருதம் 17.
திருவானைக்காப் புராணம் (கச்சியப்ப சுவாமிகள்)

கு. 10-33
மு. 34-38
ம. 40-77
நெ. 78-105
பா. 106-115
திணை மயக்கம் 116-123.

**தணிகைப்புராணம்** *(கச்சியப்ப முனிவர்)*

| | |
|---|---|
| கு. | 32-49 |
| பா. | 50-58 |
| மு. | 59-72 |
| ம. | 73-135 |
| நெ. | 136-153 |
| திணை மயக்கம் | 154-170. |

**சங்கரநாராயணசாமி கோயிற்புராணம்** *(முத்துவீரக் கவிராயர்)*

| | |
|---|---|
| ஐவகை நிலம் பற்றியன | 6-44 |
| திணை மயக்கம் பற்றியன | 45-50 |
| கு. + மு. | 45 |
| கு. + ம. | 46 |
| கு. + நெ. | 47 |
| மு. + ம. | 48 |
| நெ. + மு. | 49 |
| ம. + நெ. | 50 |

**திருவாரூர்த் தியாகராச லீலை/திருவாரூர்த் திருவிளையாடல்**
*(திரிசிபுரம் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை)*

| | | **திணை மயக்கம்** | |
|---|---|---|---|
| குறிஞ்சி வளம் | 31-50 | | |
| முல்லை வளம் | 51-70 | கு. + மு. | 166-7 |
| மருத வளம் | 71-140 | கு. + ம. | 168-9 |
| நெய்தல் வளம் | 141-155 | கு. + நெ. | 170 |
| பாலை வளம் | 156-165 | நானிலம் | 171-5 |

திணை வைப்பு முறையில் புராணங்களுக்கிடையே மாற்றமிருப்பினும் வருணனைப் பாங்கில் வேறுபாடுகள் இல்லை. அனைத்தும் அக மரபினின்று விலகி, திணை என்ற சொல்லாட்சியை நிலத்தைக் குறிக்கப் பயன்படுத்துகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

57 **முக்கூடற் பள்ளு**, 43, 45, 47, 49, 41

58 பள்ளு : **தண்டிகைக் கனகராயன் பள்ளு** : கு. 99, பா. 100, மு. 101, ம. 102, நெ. 103, ஐந்திணை மயக்கம் 104.

**வையாபுரிப் பள்ளு** : பா. 58, மு. 60, ம. 62, நெ. 64. **செண்பகராமன் பள்ளு**: பா. 43, 53, மு. 45, 54. ம. 47 55, நெ. 49, 56, கு. 52, திணை மயக்கம் 51.

59 **இராவண காவியம்**, 56

60 ,, 71, 68.

61 சு. செயராமன், ''கண்ணதாசன் கவிதைகளில் அகப் பொருள் மரபுகள்'' (எம். ஃபில். பட்ட ஆய்வேடு, 110.)

62 ப. கொழந்தசாமி, ''தமிழ்ப் புதுக் கவிதைகளில் அகப் பொருள் மரபுக் கூறுகள்'' (எம். ஃபில். பட்ட ஆய்வேடு), 106.

எட்டுத்தொகையிலுள்ள அகப்பொருள் நூல்கள் (பரிபாடல் தவிர)

| பாடல்கள் எண்ணிக்கை | ஐங்குறுநூறு | | | | | குறுந்தொகை | | | | | நற்றிணை | | | | | அகநானூறு | | | | | கலித்தொகை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 1 | 2 | 3 | 4 | 5 | 1 | 2 | 3 | 4 | 5 | 1 | 2 | 3 | 4 | 5 | 1 | 2 | 3 | 4 | 5 |
| திணைக் குறிப் புள்ளவை 1849 | 100 | 100 | 100 | 100 | 100 | 147 | 45 | 48 | 71 | 90 | 131 | 30 | 32 | 102 | 104 | 80 | 40 | 40 | 40 | 200 | 29 | 17 | 35 | 33 | 35 |
| துறைக் குறிப் புள்ளவை 1848 | 100 | 100 | 100 | 98 | 100 | 147 | 45 | 48 | 71 | 90 | 133 | 30 | 32 | 101 | 104 | 80 | 40 | 40 | 40 | 200 | 29 | 17 | 35 | 33 | 35 |

* 1, 2, 3, 4, 5 ஆகிய எண்கள் முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய திணைகளைக் குறிக்கும்.

# 3

## இயல் மூன்று

# துறை

# துறை

தொல்காப்பியர் செய்யுளுறுப்புக்களுள் ஒன்றாகத் துறையைச் சுட்டுவர் (310). அத்துறை அகம் புறம் ஆகிய இரண்டுக்குமுரியது. **சங்க இலக்கியம்** அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். காலப் போக்கில் அகத்தில் உள்ள துறைகள் தமிழ் இலக்கிய உலகியல் செல்வாக்குப் பெற்று வளர்ச்சியடையத் தொடங்கின. அந்நிலை முழுநிலை அடைந்ததற்குக் கோவை இலக்கிய வகை சிறந்த எடுத் துக்காட்டாகும். அகத்துறைகளை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றது அவ்விலக்கியமாகும்.

கைக்கிளைப் பொருண்மையில் அரும்பிய பக்தி இலக்கியம், உலா, தூது, மடல் போன்றவையும் அகத்துறைகளைப் போற்றின. கலம்பகம், குறவஞ்சி, பள்ளு போன்ற சிற்றிலக்கிய வகைகளும், அகத்துறைப் பாடல்களைப் பெற்றிருக்கின்றன. புராணம், அந்தாதி, காப்பியம் போன்றவையும் ஆங்காங்கு அகத்துறைப் பாடல்களைப் பெய்து வைத்துள்ளன. திரிவர்க்கக் கோட்பாட்டைப் போற்றிய திருக்குறளும் காமத்துப்பாலுள் அகத்துறையில் குறள்களைக் காட்டு கின்றன. உதிரியாகத் தொகுக்கப்பட்ட தனிப்பாடல் திரட்டிலும் அகத்துறைப் பாடல்கள் உள்ளன.

இருபதாம் நூற்றாண்டில் பாரதியார், பாரதிதாசன், கண்ண தாசன் போன்ற புலவர்களும் அகத்துறையில் பாடல்களைப் புனைந்துள்ளனர்.

இங்ஙனம் **தொல்காப்பியம்** முதல் இன்று வரை மரபுத் தொடர்ச்சி பெற்ற அகத்துறைகள் அனைத்தையும் ஒருங்கே ஆய்வது என்பது 'விழுமியது பயத்தல்' என்பதற்கு இடையூறாக அமையும். எனவே இன்றியமையாதனவாக ஆய்வாளரால் கருதப்பட்ட துறைகள் மட்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அவை காலந் தோறும் எவ்வித மாற்றமுமின்றிப் பயின்று வருபவை, புதிய இலக்கிய வகைகள் தோன்ற அடிப்படையாக அமைந்தவை, தொல் காப்பியத்தில் இடம்பெறாமல் இடைப்பட்ட காலத்தில் புதியன வாகத் தோன்றியவை—ஆகிய வரலாற்று அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஈண்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்ட துறைகளாவன:

காட்சி
ஐயம்
தெளிவு
குறிப்பறிதல்
நாணிக்கண் புதைத்தல்
பாங்கற்கூட்டம்
கையுறை
குறியிடங்கூறல்
இற்செறித்தல்
வெறிவிலக்கல்
அறத்தொடு நிற்றல்
உடன்போக்கு
ஏறு தழுவுதல்
காமமிக்க கழிபடர்கிளவி
தூது
மாலைவேண்டல்
கூடலிழைத்தல்
மடல்
பரத்தையிற் பிரிவு

மேற்காட்டிய துறைகளின் அகமரபு, நெகிழ்ச்சி, திரிபு, வீழ்ச்சி ஆங்காங்கு சுட்டப்படுகின்றன. சில துறைகளுக்குத் தொகுப்புரை சுருக்கமாகவும், இன்றியமையாதனவற்றிற்கு விரிவாகவும் அந்த அந்தத் துறைகளுக்குக் கீழேயே கொடுக்கப்பட்டுள்ளன.

இனித் துறைகளின் வளர்ச்சி நிலையைக் கால முறைப்படி இலக்கியச் சான்றுகளின்வழிக் காணலாம்.

## காட்சி

காமத்திணையில் குறிப்பினாலும் இடத்தினாலும் அன்றி தலைவிக்கு வேட்கை புலப்பட நிகழாது. இதனைக்

குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை
நெறிப்பட வாரா அவள்வயின் ஆன[1]

என்கின்றது **தொல்காப்பியம்.**

மறைந்தவற் காண்டல் தற்காட் டுறுதல்
நிறைந்த காதலில் சொல்லெதிர் மழுங்கல்
வழிபாடு மறுத்தல் மறுத்தெதிர் கோடல்
பழிதீர் முறுவல் சிறிதே தோற்றல்[2]

ஆகிய ஆறு நிலைகளும் புணர்ச்சிக்கு முன் நிகழும். இவற்றுள் முதல் மூன்றில் கூற்று நிகழாது; அடுத்தது குறிப்பினானும் கூற்றினானும் நிகழும்; கடை இரண்டும் புணர்தற்கு உடன்பாடு காட்டி நிற்கும் என்பது இளம்பூரணம். ஆக, பெரும்பாலும் கூற்று நிகழாது; குறிப்பால் நிகழும் என்பது பெறப்படும்.

சங்க அகப்பாடல்கள் அகமாந்தர் கூற்றாக அமைந்துள்ளதால் அவற்றில் 'காட்சி'க்குரியனவாகத் துறையளவில் பாடல்கள் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சங்கம் மருவிய காலத்துத் தோன்றிய ஆறு அகப்பொருள் நூல்களுள்ளும் இத்துறையிலமைந்தனவாகப் பாடல்கள் இல்லை.

அதனையடுத்துக் களப்பிரர் காலத்து நூலாகக் கருதப்படும் முத்தொள்ளாயிரத்தில் அகப்புறக் கைக்கிளையில் அமைந்தனவாகப் பல பாடல்கள் உள்ளன; அவற்றுள் தலைவி கூற்றில் அமைந்த பல பாடல்கள் அவள் மன்னனைத் தெருவில் உலாவரும்போது காண் பதாகக் காட்டுகின்றன.[3] தலைவி தன் காதலைத் தானே எடுத்து மொழிவதாகப் பெண்பாற் கைக்கிளையில் பல பாடல்கள் அமைந் துள்ளன.[4] உலாவரும் மன்னனைக் காணவிடாது தடுக்கும் அன்னையை

வளையவாய் நீண்ட தோள் வாட்கணாய்! அன்னை
இளையளாய் மூத்திலள் கொல்லோ! தளையவிழ்தார்
மண்கொண்ட தானை மறங்கனல்வேல் மாறனைக்
கண்கொண்டு நோக்கல் என்பாள்![5]

என்ற தலைவி கூற்றுப் பாடல்வழி அறியலாம்.

*வழுவில்எம் வீதியுள் மாறன்வருங்கால்*
*தொழுதேனைத் தோள்நலமுங் கொண்டான் —*
இமிழ்திரை
கார்க் கடற் கொற்கையார் காவலனுந் தானேயால்
யார்க் கிடுகோ பூசல் இனி[6]

இப்பாடல் முத்தொள்ளாயிரத் தலைவி தலைவனைக் கண்ட இடத் தைக் காட்டும். இந்நூலில் காணும் பாடல்கள் அகமரபுக்குரிய காட்சியைப் பாடியிருப்பினும், அவை அகமாந்தர் கூற்றில் காணப் படினும் ஒத்த காமத்தார் மாட்டு நிகழ்வன அல்ல; தலைவன்

ஒருவனாகவும் அவனைக் கண்டு காமுறும் பெண்கள் பலராகவும் உள்ளனர்.

அடுத்துக் காப்பியம் பாடிய கவிச்சக்கரவர்த்தி கம்பர் அக மரபைப் பின்பற்றி மிதிலைக் ''காட்சிப் படலத்''தை யாத்து அதில் சீதையும் இராமனும் சந்திப்பதைப் பின்வருமாறு காட்டுவர்.

எண் அரு நலத்தினாள் இனையள் நின்றுழி
கண்ணொடு கண் இணை கவ்வி ஒன்றையொன்று
உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்[7]

இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினார்[8]

இங்ஙனம் காப்பியத் தலைவனும் தலைவியும் சந்தித்தல் வால்மீகி இராமாயணத்தில் இல்லை. கம்பர் தமிழ் மரபைப் போற்றிக் காட்டுவர். எனினும் இப்பாடல்கள் கவிக்கூற்றில் அமைவதால் அகப்பொருள் மரபினின்று விலகியிருக்கின்றன.

அப்பர் தேவாரத்தில் 'ஆமாத்தூர் இறைவன், பிச்சைக்குவர, பிச்சையிடச் சென்று, அவரைக் கண்டு காதல் கொண்டு அவரது குறிப்பையும் உணர்ந்து தானும் உடம்பட்டு அவர்க்கு உரியளான ஒருத்தி, பின்பு அவர் தன்னை வரையாது நீங்குதல் கண்டு தெளி வொழிந்து பலரோடும் முறையிட்டு அவரைக் கூட்டுவிக்குமாறு வேண்டுவதாகப் பாடல்கள் அமைந்துள்ளன[9]. இவை நாவுக்கரசர் இறைவன்பால் கொண்ட காதலைப் புலப்படுத்துவன; மானுடக் காதல் பற்றியன அல்ல. இறைவன்மீது அடியார்க்கு உள்ள ஈடுபாட்டை விளக்க அகத்தலைவன் தலைவியின் உறவு நிலையை விளக்கும் துறைகள் பயன்படுத்தப்பட்டன; எனினும் ஈண்டுக் காட்சி என்பதே கற்பனைக்குரியது என்பது நினைவுகூரத்தக்கது.

''இன்தமிழ் இயற்கை இன்பம்''[10] என அகத்திணையைப் போற்றும் திருத்தக்கதேவர் கேமசரி சீவகனைக் கண்ட காட்சியை,

இலங்குபூங் கொடியன வேழை நோக்கமும்
உலங்கொடே ளுறுவலி நோக்கு மொத்தவே[11]

எனப் பாடுவர். அடுத்த பாடல்,

கண்ணுறக் காளையைக் காண்டலுங் கைவளை
மண்ணுறத் தோய்ந்தடி வீழ்ந்தன மாமையும்
உண்ணிறை நாணமுமு டைந்தன வேட்கையும்
ஒண்ணிறத் தீவிளைத் தாளுருக் குற்றாள்[12]

எனச் சேமசரியின் நிலையைக் காட்டும். இங்ஙனம் கதைப்போக்கில் தேவையான இடங்களில் அகக் கூறுகளைத் தொடர்ச்சியாக எடுத்தியம்பும் நிலையைக் காப்பியங்கள் போற்றுகின்றன; எனினும் அவை அக மரபுக்குரியன அல்ல; கலிக்கூற்றில் தொடர்நிலைப் பாடல்களாக, பெயர்கொளப்பட்ட மாந்தர்களையுடைய தனி இலக்கிய வகையான காப்பியத்தின் தன்மையைப் பெற்று விளங்குவன.

**உதயணகுமார காவியம்** *(157)* பதுமாவதியும் உதயணனும் காட்சி எய்துவதைக் கூறுகின்றது. நளவெண்பாவில் தமயந்தியின் அழகை அன்னம் சொல்லக் கேட்ட நளன் அவள் மீது காதல் கொள்கின்றான்; பின் சுயம்வரத்தின்போது நளன் தமயந்தியைக் காணுகின்றான்.

*நீண்ட கமலத்தை நீலக்கடை சென்று*
*தீண்டும் அளவில் திறந்ததே - பூண்டதோர்*
*அற்பின்தாழ் கூந்தலாள் வேட்கை அகத்தடக்கிக்*
*கற்பின்தாழ் வீழ்த்த கதவு*[18]

என்பது அப்பாடல். இந்நூல் காட்சி என்பதை அக மரபை ஒட்டிக் காட்டியிருப்பினும் சுயம்வரம் அவர்கள் இருவரையும் கூட்டுவிக்கின்றது; இப்படி ஏற்பாடு செய்யப்பட்டு நிகழ்வது அன்று அகப் பொருள் 'காட்சி'.

கோவை நூல்கள் அகப்பொருள் துறைகள், அனைத்தையும் நிகழ்வுபடத் தொகுத்துக் காட்டுவன. எனவே அவற்றுள் காணப்படும் துறைகள் அகமரபைப் பின்பற்றி அமைவன. **திருக்கோவையார் தஞ்சைவாணன் கோவை, அம்பிகாபதிக் கோவை** போன்ற கோவை நூல்களில் (ஒரு துறை/இரு துறைக் கோவை நீங்கலாக) காட்சிக்குரிய பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

சிற்றிலக்கியங்களுள் உலா, குறவஞ்சி, மடல், காதல் போன்றவற்றில் காட்சிக்குரியனவாக அமைந்த பாடல்கள்/கண்ணிகள் இடம் பெற்றுள்ளன.

உலா நூல்கள் மன்னன் உலாவரும்போது ஏழுவகைப் பருவப் பெண்களும் அவனைக் கண்டு மையலுற்றதாகப் பாடும்: இந்நூல்கள் முத்தொள்ளாயிரத்தைப் போலவே தலைவியின் நிலையைக் காட்டுகின்றன.

குறவஞ்சி நூல்களும் பாட்டுடைத் தலைவன் உலா வருவதைக் கண்ட அளவில் குறவஞ்சித் தலைவி காதல் கொண்டு வாடுவதாகக்

காட்டும்: கன்னிவாடி நரசிங்கப்ப நாயக்கன் வளமடலில் ஒன்பது கண்ணிகள் (280 – 288) காட்சி பற்றியன: **சித்திரமடல்,** சோலையில் தலைவன் தலைவியைக் காணுமாற்றைப் பதினொன்று (164—174) விளக்கும் **முத்து சுவாமியா பிள்ளையவர்கள் பேரிற் காதற் பிரபந்தம்** என்ற நூல் தலைவன் தலைவியைக் கண்டு மோகித்தலை (297—312) விளக்கும்.

பாரதியார், பாரதிதாசன், கண்ணதாசன் போன்ற இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களது படைப்புக்களிலும் காட்சி பற்றிக் கூறும் பாடல்கள் உள்ளன.

இங்ஙனம் **தொல்காப்பியம்** முதல் இன்று வரை உள்ள நூல்களில் காட்சி பற்றிய குறிப்புக் காணக்கிடக்கின்றது.

## ஐயம்

சிறந்துழி ஐயஞ் சிறந்த தென்ப
இழிந்துழி இழிவே சுட்ட லான[14]

என்பர் தொல்காப்பியர். இவ் ஐயக்கிளவி தலைமகனுக்குரியது என்பது அவரது அக இலக்கணக் கோட்பாடு.[15] ''தலைமகள் ஐயப்படாதது என்னையெனின் அவள் ஐயப்படுங்கால் தெய்வமோ என்று ஐயுறல் வேண்டும். அவ்வாறு ஐயுற்றால் அச்சம் வரும். அஃது ஏதுவாகக் காமநிகழ்ச்சியுண்டாகாது என்பர் உரையாசிரியர்.[16]

பண்ணித் தமர்தந் தொருபுறந் தைஇய
கண்ணி யெடுக்கல்லாக் கோடேந் தகலல்குல்
புண்ணில்லார் புண்ணாக நோக்கும்; முழுமெய்யுங்
கண்ணளோ ஆயர்மகள்[17]

என்ற ''முல்லைக்கலி''ப் பாடலடிகளைத் தலைவன் ஐயமின்றிச் சுட்டியுணர்தலுக்கு எடுத்துக்காட்டியுள்ளார் இளம்பூரணர். எனினும் துறையளவில் தனித்து அமைந்த பாடல்கள் சங்க அக நூல்களிலும், சங்கம் மருவியகால அக நூல்களிலும் இல்லை. தனித்துறையளவில் தலைவன் ஐயப்படுவதாகிய பாடல்கள் கோவை நூல்களில் உள்ளன.

முத்தொள்ளாயிரத் தலைவி சேரன் உலா வருவதைக் கண்டதும் கீழ்க்காணுமாறு ஐயுறுகின்றாள்.

இந்திரன் என்னின் இரண்டேகண் ஏறூர்ந்த
அந்தரத்தான் என்னிற் பிறையில்லை - அந்தரத்துக்
கோழியான் என்னின் முகன் ஒன்றே கோதையை
ஆழியான் என்றுணரற் பாற்று[18]

இந்திரன் எனில் ஆயிரம் கண் இருக்க வேண்டும்; சிவன் எனில் பிறை இருக்கும்; முருகன் எனில் ஆறுமுகங்கள் வேண்டும்; இவை யனைத்தும் இல்லையாகையால் இவன் சேரன் என உணர்கின்றாள். இப்பாடல், தலைவி ஐயப்படுதல் இல்லை; அச்சமயம் கூற்று நிகழ்த் தலும் இல்லை என்னும் அகப்பொருள் மரபுக்கு மாறாக அமைந் துள்ளது. எனவே இது அகப் பொருள் மரபினின்றும் விலகியது. காப்பியங்களிலும் இம்மரபு போற்றப் பட்டுள்ளது. சீவக சிந்தா மணியில்,

வாக்கணங் கார்மணி வீணைவல் லாற்கவள்
நோக்கணங் காய்மன நோய்செய நொந்தவள்
வீக்கணங் கார்முலை வேய்நெடுந் தோளியொர்
தாக்கணங் கோமக ளோவெனத் தாழ்ந்தான்[19]

எனச் சீவகன் ஐயப்படுவதைத் திருத்தக்க தேவர் புலப்படுத்தி யுள்ளார். கம்பராமாயணத்தில்,

வள்ளல் சேக்கைக் கரியவன் வைகுறும்
வெள்ளப் பாற்கடல் போல்மிளிர் கண்ணினள்
அள்ளல் பூமகள் ஆகுங்கொல் ஓ! எனது
உள்ளத் தாமரை உள்உறை நின்றதே[20]

என்ற இராமன் கூற்றிலும் அகப்பொருள் மரபின் செல்வாக்கைக் காண்கின்றோம்.

முன்னேவந் தெதிர்தோன்றும் முருகனோ
பெருகொளியால்
தன்நேரில் மாரனோ தார்மார்பின் விஞ்சையனோ
பின்நேர்செஞ் சடை அண்ணல் மெய்யருள்பெற்
றுடையவனோ
என்னே! என் மனந்திரிந்த இவன்யாரோ என
நினைத்தார்[21]

எனச் சுந்தரரைக் கண்ட பரவைநாச்சியார் ஐயுற்றதாகப் **பெரிய புராணம்** காட்டும். இதுவும் முத்தொள்ளாயிரப் பாடல் போலவே அக மரபினின்றும் விலகித் தலைவி கூற்றாய் அமைவது; கவிக் கூற்றில் கொண்டெடுத்து மொழியப்படுகிறது.

குறவஞ்சி, பள்ளு, காதல் போன்ற சிற்றிலக்கியங்களும் இத் துறைத் தொடர்பாக உள்ள செய்திகளைக் கொண்டுள்ளன. திருக்குற்றால நாதரைக் கண்ட வசந்தவல்லி,

முனிபரவும் இனியானோ—வேத
முழுப்பலவின் கனிதானோ

கனியில் வைத்த செந்தேனோ—பெண்கள்
கருத்துருக்க வந்தானோ ?[22]

என்று ஐயம் கொள்கின்றாள்: செண்பகராமன் பள்ளில் தலைவி தலைவனை ஐயுறுவதாக ஒரு பாடல் உள்ளது.[23] **முத்து சுவாமியா பிள்ளையவர்கள் பேரிற் காதல் பிரபந்தம்** என்ற நூல் தலைவன் தலைவியைச் சந்தேகித்தலை நான்கு கண்ணிகளில் (313-316) காட்டும்.

அக நூல்களில் தனித்த நிலையில் ஐயக்கிளவிக்குரிய பாடல்கள் இல்லை. முத்தொள்ளாயிரத்திலும் பக்தி இலக்கியங்களிலும் பெண்கள் ஐயப்படுவதாகப் பாடல்கள் உள்ளன; எனினும் அவர்கள் அகப்பொருள் தலைமைக்களல்லர்; ஒத்த காமத்திற்குரியவரல்லர்; காப்பியங்கள், சிற்றிலக்கியங்களில் காணப்படுவன தலைவன் கூற்றில் அமைந்த ஐயக் கிளவிகள் எனினும் அவை அகப்பொருள் சூழலில் அமைந்தவை அல்ல; தனிப்பட்ட இலக்கிய வகைக்குரியன.

## தெளிவு

வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்று
அன்னவை பிறவும் ஆங்கண் நிகழ
நின்றவை களையும் கருவி என்ப[24]

என ஐயம் களையும் கருவிகளைக் குறிக்கும் **தொல்காப்பியம்.** இந் நூற்பாவின் உரையில் ''காட்சி முதலாகிய இத்துணையும் கைக்கிளைக் குறிப்பாம். இதற்குச் செய்யுள் வந்தவழிக் காண்க''[25] என்பர் இளம்பூரணர். இவ்வுரைவழிச் சங்க அக இலக்கியத்துள் இவற்றிற்குரியனவாக அமைந்த துறைகள் இல்லை என்பது தெளிவு; இருந்திருந்தால் இளம்பூரணர் சுட்டியிருப்பர். பாட்டும் தொகையும் என்ற நூலிலிருந்து அறியலாகும் துறைகளுக்குள்ளும் இத்துறைக் குறிப்பு இல்லை.

சங்கம் மருவிய கால நூல்களிலும் இத்துறைக்குரிய பாடல் இல்லை.

**முத்தொள்ளாயிரம்,** சோழ மன்னன் உலா வருவதைக் கண்ட தலைவி அவனைக் கண்ணனா! சிவனா! என ஐயுற்றுப் பின் தெளிவடைதலைக் காட்டும்.

அடிநோக்கின் ஆழ்கடல் வண்ணன் அவன்றன்
படிநோக்கிற் பைங்கொன்றைத் தாரான்—முடிநோக்கித்
தேர் வளவனாகத் தெளிந்தேன் சென்னியின்மேல்
ஆரலங்கல் தோன்றியது கண்டு[26]

எனப் பாடுகின்றாள். இதுவும் காட்சி ஐயம் போலவே தலைவி கூற்றில் காணப்படுவது மரபு மாற்றமாகும், அகத்திணைக்குரிய தன்று; அகப்பொருள் சூழலும் இல்லை.

முத்து சுவாமியா பிள்ளையவர்களின் காதற் பிரபந்தத்தில் தலைவன் சந்தேகந்தெளிதல் பற்றிய கண்ணிகள் (317-318) உள்ளன. கோவை நூல்களிலும் இத்துறை பயின்று வருகின்றது. இங்ஙனம் தமிழ் இலக்கியங்கள் ஆங்காங்கு இத்துறை பற்றிய சில குறிப்புகளைச் சுட்டுகின்றன.

## குறிப்பறிதல்

நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்
கூட்டி உரைக்குங் குறிப்புரை யாகும்[27]

என்பது **தொல்காப்பியம்.** ஒத்த தலைவனும் தலைவியும் கண்ட பின்பு இருவரது வேட்கையும் குறிப்பால் உணர்த்தப்படும். 'இருவர்க்குங் கவர்த்து நின்ற அறிவை ஒருப்படுத்தற் பொருட்டு வேட்கையொடு கூட்டிக் கூறுங் காமக்குறிப்புச் சொல் இருவரது நாட்டமாகும்' என இதனை விளக்குவர் இளம்பூரணர்.

ஒருவர் குறிப்பு ஒருவர் குறித்ததனைக் கொள்ளுமாயின் அவ்விடத்துக் கண்ணினான் வருங்குறிப்பு நிகழும்.

குறிப்பே குறித்தது கொள்ளு மாயின்
ஆங்கவை நிகழும் என்மனார் புலவர்[28]

எனவே குறிப்பைக் கொள்ளாதவழி அக்குறிப்புரை நிகழாது என்பது பெறப்படும்.

பானல்அம் தண்கழிப் பாடு அறிந்து, தன்னைமார்
நூல் நல நுண்வலையால் நொண்டு எடுத்தகானல்
படு புலால் காப்பாள் படைநெடுங் கண் நோக்கம்
கடிபு ஒல்லா; என்னையே காப்பு[29]

எனும் திணைமாலை நூற்றைம்பதில் உள்ள பாடலை இதற்கு எடுத்துக் காட்டியுள்ளார் இளம்பூரணர். எனினும் இப்பாடல் பாங்கற்குச் சொல்லியது என்ற துறையில் அமைந்தது. கோவை நூல்களில் இத்துறை இடம் பெற்றுள்ளது.

**தொல்காப்பியம்** களவியலில் தலைவி கூற்று நிகழிடங்களைக் குறிக்கும்போது குறிப்பினாலும், கூற்றினாலும் காமக்குறிப்பு வெளிப்படுத்தப்படும் இடங்களைத் தெளிவாகக் காட்டுகின்றது.

அந்நேரத்தில் மொழி செய்யாத செயலை மௌனம் செய்ய வல்லது; அச்சூழலில் கூற்று நிகழ்த்துவது செயற்கைத் தன்மை உடையதாக இருக்குமே தவிர இயற்கைத் தன்மை உடையதாக இராது. மனக் குறிப்பு விழிக்குறிப்பால் வெளிப்படுத்தும் தன்மை; விழி மொழி பேசவல்லது; எனவே அவ்விடத்தில் கூற்று நிகழாது எனத் தொல் காப்பியர் காட்டுவது உளவியல் நோக்கிலும் பொருத்தமாக உள்ளது.

சங்க அக இலக்கியங்களிலும் (கலித்தொகை தவிர) சங்கம் மருவிய காலத்து ஆறு அகப்பொருள் நூல்களிலும்* கைக்கிளைக் குரியனவாக உள்ள துறைகளில் அமைந்த பாடல்கள் இல்லை; பிற துறைகளில் அப்பொருண்மை உய்த்துணரப்படுகின்றது. அவை அகமாந்தர் கூற்றில் அமையும் தனிப் பாடல்கள் என்பதும் நினைவு கூரத்தக்கது,

'கைக்கிளைக்குரிய காட்சி, ஐயம், துணிவு, குறிப்பறிதல் ஆகிய துறைப் பகுதிகள் சங்கப் புலவர்களால் பாடப்படவில்லை'.[30] என்பர் க. ரத்னம். தொல்காப்பியரது தெளிவான அக இலக்கணக் கோட்பாட்டின் தாக்கமே அதற்குக் காரணம் எனலாம்.

சங்கம் மருவிய காலத்திற்குப் பின் தோன்றிய முத்தொள்ளாயிரம் காப்பியம் சிற்றிலக்கியம் போன்றவை பாடற்பொருண்மையாலும், பாடுமுறைமையாலும் அக இலக்கியத்தினின்றும் மாறுபட்ட தன்மையை உடையன. எனவே பல மாற்றங்களோடு அகமரபின் திரிபை மட்டும் போற்றலாயின.

## நாணிக் கண் புதைத்தல்

தொல்காப்பியத்தில் இத்துறை பற்றிய விளக்கம் கூற்றுக்குரிய சூழலில் இடம் பெறவில்லை.

ஐங்குறு நூற்றில் குறிஞ்சித் திணையுள் 'பகற்குறியிடம் புக்க தலைமகன் தலைவி பின்னாக மறைய வந்து கண் புதைத்துழிச் சொல்லியது' என்ற துறையில் மஞ்ஞைப் பத்தில் ஒரு பாடல் உள்ளது.

---

* **திணை மாலை நூற்றைம்பது**—கணி மேதாவியார்
**ஐந்திணை எழுபது**—மூவாதியார்
**ஐந்திணை ஐம்பது**—மாறன் பொறையனார்
**திணை மொழி ஐம்பது**—கண்ணஞ் சேந்தனார்
**கைந்நிலை**—புல்லங்காடனார்
**கார் நாற்பது**—கண்ணங் கூத்தனார்

சிலம்பு கமழ் காந்தள் நறுங்குலை அன்ன
நலம்பெறு கையின் என்கண் புதைத்தோயோ!
பாயல்இன் துணை ஆகிய பணைத்தோள்
தோகை மாட்சிய மடந்தை !
நீ அலது உளரோ—என் நெஞ்சு அமர்ந்தோரே ?[81]

என்பது அப்பாடல். மற்றும் இந்நூலில் பாலைத்திணையில் 'புணர்ந்து உடன்போகிய தலைமகன் இடைச்சுரத்துக்கண் விளை யாட்டு வகையால் பூத்தொடுக்கின்ற தலைமகளைக் கண்டு புகழ, அவள் அதற்கு நாணி, கண்புதைத்தவழிச் சொல்லியது' (ஐங். 361) என உடன்போக்கின்கண் இத்துறை அமைந்துள்ளதைக் காணலாம்.

சங்கம் மருவிய காலத்தைச் சார்ந்த ஆறு அகப்பொருள் நூல்களில் துறையளவில் இத்துறை பற்றிய குறிப்பு காணப்பட வில்லை,

**திருக்கோவையார்**, பாங்கற்கூட்டத்துள் நாணிக்கண் புதைத்தல் (42), கண்புதைக்க வருந்துதல் (43), நாண்விட வருந்துதல் (44) ஆகிய துறைகளைக் குறிக்கின்றது. தஞ்சைவாணன் கோவையில் இத்துறை இல்லை. **அம்பிகாபதிக் கோவை**, இடந்தலைப்பாட்டில் கண் புதைத்தல் (36) நனி நாண் விடுத்தல் (38) ஆகியவற்றையும் உடன்போக்கில் கண் புதை நாண்மீதூரல் (377) என்ற துறை யையும் காட்டுகின்றது.

அகப்பொருளில் ஒரு துறையாகிய 'நாணிக் கண் புதைத்தல்' என்ற துறை பதினேழாம் நூற்றாண்டில் (தனி ஒரு நூல்) ஒரு துறைக் கோவை தோன்ற வழி வகுத்தது. 'நாணிக் கண் புதைத்தல்' என்ற துறையை மட்டும் எடுத்துக் கொண்டு **திருவள்ளுவர் ஒரு துறைக்கோவை** என்ற நூல் தோன்றியுள்ளது; விசய ரகுநாத சேதுபதி பெயரில் அமிர்த கவிராயர் இத்துறையில் ஒரு நூல் இயற்றியுள்ளார்.[82]

**தணிகைப்புராணம்**, 'களவுப் படலத்தில் நாணிட மழைக்கண் வாணுதல் புதைத்தல் (94), வருந்தி நாண் விடுத்தல் (97), பெய் வளைப் பாங்கி பிறைதொழு கென்றல் (217) ஆகிய துறைகளில் அமைந்த பாடல்கள் உள்ளன.

'பொன்னுங்கூடக் கவிராயர் மருதூர் ஜமீன்தார் நாகயசாமிக் காமநாயகர் பேரில் 'நாணிக்கண் புதைத்தல்' 'வண்டோச்சி மருங் கணைதல்' என்னும் இரு பொருள்களில் நூறு நூறு பாடல்களில் ஒரு துறைக் கோவைகள் பாடியுள்ளார்.[83]

தனிமனிதன் - வள்ளல்-சிற்றரசர் ஆகியோரைப் பாடிப் பரிசில் பெற்ற புலவர்கள் அவர்களைப் புகழவும் மகிழ்விக்கவும் இத் துறையை ஒரு வாயிலாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

ரா. ராகவையங்கார் பாடிய இராசராச சேதுபதி ஒருதுறைக் கோவையில் கண்ணில்லாது முலையை மட்டும் யார் மதிப்பார் (3). யானையாகிய முலையை வெளிப்படுத்தி, மன்மதனின் நாணாகிய வண்டை ஏன் மறைத்தீர் (8), முலையை யான் கைப்பற்றிய பின் கண்ணை முடிப் பயனில்லை (23) எனத் தலைவன் கூறுவதாகப் பாடல்கள் உள்ளன. பிற பாடல்களும் இப்பொருண்மையைப் பின்பற்றியனவே. காட்டாக,

மண்காட்சி கொள்ள மதமா வுகைத்து வரும்பவனி
எண்காட்சி செய்யும் பருவத் தெழுவர்க்கு மின்பமயல்
பண்காட்சி மிக்கவன் இராசராசன் பருவரையீர்
கண்காட்சி யில்லா மலைவளத் தார்க்குங்
களிப்பில்லையே[84]

என்ற பாடலைக் கொள்ளலாம். ஒரே துறையில் நூற்றுக்கு மேற்பட்ட பாடல்கள் உள்ளதால் ஒருதுறைக் கோவையில் கூறியது கூறல் என்ற தன்மை மிகுந்திருக்கின்றது. எனவே கருத்தாழம் இல்லை; பொருள்நயம் இல்லை; நடை நலமும் குறைவு.

> மொழி நாணத்தையும் கற்பனைக் கற்பையும் கோவை நூல்கள் சின்னஞ்சிறு நலங்கருதிப் பலியாக்கி விட்டன. பெண்பாலின் உறுப்புக்கள் இந்நூல்களில் படாத கற்பனை பட்டுள. நாணிக்கண் புதைத்தல் என்னும் ஒருதுறைக் கோவை நூல் படிப்பார் நாணிக்கண் புதைத்தற்குரியதாக நிற்கின்றது[85]

எனும் அறிஞரின் கூற்றும் நூலைப் படிக்கும்போது பொருத்தமாகத் தோன்றுகின்றது. எனவே இத்துறை தனி இலக்கியம் தோன்ற வழிவகுத்தது எனினும் அவ்விலக்கியத்தின் தரம் ஆய்விற்குரியதாக உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இருபதாம் நூற்றாண்டில் இரண்டு துறைகளைக் கொண்டு பாடும் 'இருதுறைக் கோவை' தோன்றியது. குருவாயூரப்பன் இருதுறைக் கோவை என்ற நூலின்கண் நாணிக்கண் புதைத்தல், வெறிவிலக்கல் இரு துறைகளிலும் அமைந்த பாடல்கள் உள்ளன; அந்நூல் டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையத்திலுள்ளது; சுவடியாக உள்ள இந்நூல் இன்னும் அச்சாகவில்லை''[86] என்பர் அ. ம. சத்தியமூர்த்தி.

தனிப்பாடல் திரட்டின் தொகுதிகளிலும் இத்துறையிலமைந்த பல பாடல்கள் உள்ளன.[87]

பாரதியார் 'கண்ணம்மா—என் காதலி'யில்

வன்ன முகத்திரையைக் களைந்திடென்றேன்—நின்றன்
மதங்கண்டு துகிலினை வலிதுரிந்தேன்
என்ன கருத்திலடி கண்புதைக்கிறாய்?—எனக்
கெண்ணப் படுவதில்லை யேடி கண்ணம்மா![38]

எனச் சொல்லி நாணிக் கண் புதைத்தல் துறையைப் போற்றியிருப்பதைக் காணலாம். ஈண்டு இத்துறை மானுடக் காதலிலிருந்து இறைக் காதலுக்கு மடைமாற்றம் செய்யப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இங்ஙனம் இத்துறை ஐங்குறு நூற்றில் முகிழ்த்து, கோவை, புராணம் ஆகியவற்றில் வளர்ந்து, ஒருதுறைக் கோவை, இருதுறைக் கோவை ஆகியனவாக மலர்ந்துள்ளது

## பாங்கற்கூட்டம்

காமக் கூட்டந் தனிமையிற் பொலிதலின்
தாமே தூதுவ ராகலும் உரித்தே[39]

எனத் துணையின்றி நிகழும் காமத்திணையைத் **தொல்காப்பியம்** குறிப்பிடுகின்றது; எனினும் களவுப் புணர்ச்சி தோழி அல்லது பாங்கனால் தொடர்வதையும் இலக்கணப்படுத்தியுள்ளது.

முந்நா ளல்லது துணையின்று கழியாது
அந்நா ளகத்தும் அதுவரை வின்றே[40]

எனத் தொல்காப்பியர் துணையைப் பற்றிக் கூறுவர். இதற்கு உரையாக ஈண்டுத் துணையென்றது பாங்கன் ஆயிற்று. எனவே, 'எதிர்ப்பட்ட தலைவன் இயற்கைப் புணர்ச்சி புணர்வதன் முன் பாங்கற்கு உணர்த்தவும் பெறும்' எனச் சொல்லி பாங்கனைத் துணையாகக் கூறுவர் இளம்பூரணர்.

பாங்கர் துணையாகக் கூடும் கூட்டம் பன்னிரண்டு வகைப்படும்.

பாங்கர் நிமித்தம் பன்னிரண் டென்ப[41]

என்பது **தொல்காப்பியம்**. இதற்கு உரையாசிரியர் ஆரிய மணத்தைக் கூட்டி உரை செய்துள்ளார்.[42] அவ்வகைப்பாடு தமிழ் மரபுக்கு உகந்தது அன்று.

மேலும் 'பாங்கொடு தழாஅலும்'[43] எனக் கைகோள் வகையில் ஒன்றான களவில் பாங்கற்கூட்டத்தைக் காட்டுவர் தொல்காப்பியர்.

அகமாந்தர் பலருடைய கூற்று நிகழிடங்களை ஆங்காங்கு காட்டும் பொருளதிகாரத்துள் பாங்கன் கூற்று நிகழிடங்கள் தனியே இடம் பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பாங்கற் கூட்டத்துள் தலைவன் பாங்கன் ஆகிய இருவர் கூற்று மட்டுமே இடம் பெறும்; சங்க அக இலக்கியத்துள் தலைவன் கூற்றில் அமைந்த பாடல்கள் அதிகமாகவும், பாங்கன் கூற்றில் அமைந்த பாடல்கள் மிகக் குறைவாகவும் உள்ளன; அதாவது பாங்கன் பெரும்பாலும் கேட்போனாகவே உள்ளான்.

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைவன் பாங்கற்கு உரைத்ததாகவும், கழறிய பாங்கற்கு கழற்றெதிர் மறுத்தலாகவும் அமைந்த பாடல்கள் மொத்தம் இருபத்தைந்து.[44] அவை **கலித் தொகை** தவிர்ந்த ஏனைய நான்கு அகநூல்களிலும், குறிஞ்சி, நெய்தல் ஆகிய இரு திணைகளின்கீழ் அமைந்துள்ளன.

பாங்கன் தலைமகற்கு உரைத்ததாகவும், குறிவழிச் சென்று தலைமகளைக் கண்டு தன்னுள்ளே சொல்லியதாகவும் அமைந்தவை மூன்று;[45] அவை குறுந்தொகையிலும் ஐங்குறுநூற்றிலும் குறிஞ்சி நெய்தல் ஆகிய இரு திணைகளிலும் காணப்படுகின்றன. அவற்றுள் ஒரு பாடல்,

காமம் காமம் என்ப; காமம்
அணங்கும் பிணியும் அன்றே; நினைப்பின்,
முதைச் சுவற் கலித்த முற்றா இளம் புல்
மூதா தைவந்தாங்கு
விருந்தே காமம் பெருந்தோளோயே[46]

வயது முதிர்ந்த பசு புல்லைப் புசிக்க மாட்டாமல் நாவால் நக்கு கின்ற அளவிலே இன்புறுவது போல, நீ தலைவி பற்றிய எண்ணங் களைத் தழுவுகின்ற மாத்திரத்திலே துன்பம் எய்துகின்றனை என்கிறான் பாங்கன்.

பாங்கற் கூட்டப் பாடல்கள் சங்க இலக்கியத்தில் இல்லை; நச்சினார்க்கினியர் உரைக்குறிப்பு அவ்வாறு எண்ணுவதற்குப் பொருத்தமாக அமைந்துவிட்டது[47] என்பாருடைய கூற்று ஏற் புடைத்தாக இல்லை. சங்க இலக்கியத்தில் அக்கூட்டத்திற்குரிய பாடல்கள் பெருமளவில் இல்லையெனினும், குறிப்பிடத்தக்க அளவு உள்ளன.[48]

சங்கம் மருவிய கால அகப்பொருள் நூல்கள் சிலவற்றில் இருவர் கூற்றில் பயின்றுவரும் பாடல்கள் உள; அவற்றுள் தலைவன் கூற்றிற்குரியன ஆறு, பாங்கன் கூற்றிற்குரியன மூன்று.[49] சங்க அகப் பாடல்கள் போலவே குறிஞ்சித் திணையிலும் நெய்தல் திணையிலும் அவை பயின்று வந்துள்ளன. காட்டாக, தலைவன் பாங்கற்குச் சொல்லியதாக அமைந்த ஒரு பாடல்,

மயில்கொல்? மடவாள் கொல்? மாநீர்த் திரையுள்
பயில்வதோர் தெய்வம் கொல்?—கேளீர்!--குயில்பாடும்
கன்னிஇள ஞாழல் பூம்பொழில் நோக்கிய
கண்ணின் வருந்தும் என் நெஞ்சு[50]

காப்பியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம் போன்றவற்றுள்ளும் பாங்கற் கூட்டத்திற்குரிய பாக்கள் உள்ளன.

சிலப்பதிகாரத்தில் கானல் வரியில் பாங்கற் கூட்டத்திற்குரியனவாக ஏழு பாடல்கள் (8, 14-16, 20-22) உள்ளன. அவற்றுள் தலைவன் கூற்றிற்குரியவை மூன்று; பாங்கன் கூற்றிற்குரியவை நான்கு.

நம்மாழ்வார் இயற்றிய திருவிருத்தத்தில் அமைந்த ஒரு பாடல்.

புலக்குண் டலப்புண்ட ரீகத்த
  போர்க் கெண்டை வல்லி ஒன்றால்
விலக்குண் டுலாகின்று வேல்விழிக்
  கின்றன கண்ணன்கையால்
மலக்கு ணடமுதம் சுரந்த
  மறிகடல் போன் றவற்றால்
கலக்குண்ட நான்றுகண் டார்
  எம்மை யாரும் கழறலரே[51]

இது, 'தலைவன் பாங்கனுக்குக் கழற்றெதிர் மறுத்தல்' என்னும் துறையில் அமைந்தது. மானுடக் காதல் பாட எழுந்த இலக்கண மரபு, தெய்வீகக் காதல் பாட பயன்படுத்தப்பட்ட பாங்கை இப் பாடல் காட்டும்.

திருக்கோவையார் இயற்கைப் புணர்ச்சிக்கு அடுத்த கிளவித் தொகையாகப் பாங்கற் கூட்டத்தையும் அதன் பின் இடந்தலைப் பாட்டையும் அமைத்துள்ளது; அப்பகுதிக்குரியனவாக முப்பது துறைகள் உள்ளன.

திரு ஏகம்பமுடையார் திருவந்தாதியில் இதற்குரியனவாக இரண்டு பாடல்கள் (15, 93) உள்ளன. கல்வளையந்தாதியில் உற்றது வினாதல் (74), கற்றறி பாங்கன் கழறல் (88) ஆகிய துறைகளில் அமைந்த பாடல்கள் உள்ளன. மருதூரந்தாதியில் 'பாங்கன் தலைவனை வியத்தல்' என்ற துறையில் ஒரு பாடல் (2) உள்ளது. திருவலஞ்சுழி மும்மணிக் கோவையிலும் அதே துறையில் ஒரு பாடல் (4) உள்ளது.

மதுரைக் கலம்பகத்தில் 'தலைவியின் இயலிடம் பாங்கனுக்குக் கூறல்' என்ற ஒன்று(12) உள்ளது.

**நம்பியகப்பொருள், திருக்கோவையார்** போலன்றி இடந்தலைப் பாட்டிற்குப் பின் பாங்கற் கூட்டத்தைச் சுட்டும்.

சார்தல் கேட்டல் சாற்றல் எதிர்மறை
நேர்தல் கூடல் பாங்கிற் கூட்டலென்
றாங்கெழு வகைத்தே பாங்கற் கூட்டம்[52]

என அதனை எழுவகைப்படுத்தும். பாங்கன் தலைவனைச் சார்தல் முதலாகப் பாங்கிற் கூட்டல் ஈறாக உள்ள ஏழு வகைக்கும் இருபத்து நான்கு துறைகளை விரித்துள்ளது.

இதனையடுத்துத் தோன்றிய நூலான **தஞ்சைவாணன் கோவை** இருபத்து நான்கு துறைகளைக் காட்டுகின்றது; **அம்பிகாபதிக் கோவை** முப்பது துறைகள் அமைத்துப் பாடியுள்ளது. இங்ஙனம் துறை எண்ணிக்கையில் கோவை நூல்களுக்குள் வேறுபாடு உள்ளதே தவிரப் பாடும் முறையில், நோக்கத்தில் மாற்றம் எழவில்லை.

## கையுறை

தொல்காப்பியத்தில் கையுறை பற்றிய குறிப்பு காணப்படவில்லை. சங்க அக இலக்கியத்தில் 'தோழி கையுறை மறுத்தது' என்ற துறையில் குறிஞ்சித்திணையில் குறுந்தொகையில் ஒரு பாடலும் (1) நெய்தல் திணையில் ஐங்குறு நூற்றில் ஒரு பாடலும் (187) உள்ளன.

ஐங்குறு நூற்றில் 'தலைமகன் ஆற்றாமை கண்டு கையுறை ஏற்ற தோழி தலைமகள் தழை ஏற்க வேண்டிக் கூறியது' என்ற துறைக் குறிப்பை உடைய பாடல் உள்ளது.

நெய்யொடு மயக்கிய உழுந்து நூற்றன்ன
வயலைஅம் சிலம்பின் தழையது
செயலைஅம் பகைத் தழைவாடும்—அன்னாய்[53]

என்பது அப்பாடல். இவை தவிர, கலித்தொகையுள் சில பாடல்களில் இத்துறைக்குரிய குறிப்புகள் உள்ளன. ஆயமகன் சூடிவந்த கண்ணியைக் கூந்தலுள் பெய்த ஆய்ச்சி படும்பாட்டை விளக்கும் சில அடிகள் கீழ்க்காணுமாறு :

புல்லினத்து ஆயர்மகன் ஓடிவந்தது ஓர்
முல்லை ஒரு காழும் கண்ணியும், மெல்லியால்!
கூந்தலுள் பெய்து முடித்தேன்மன்; தோழி! யாய்
வெண்ணெய் உரைஇவிரித்த கதுப்போடே
அன்னையும் அத்தனும் இல்லரா, யாய் நாண

அன்னை முன்வீழ்ந்தன்று அப்பூ
அதனை, வினவலும் செய்யாள், சினவலும் செய்யாள்
நெருப்புக் கைதொட்டவர் போல விதிர்த்திட்டு,
நீங்கிப் புறங்கடைப் போயினாள்[54]

எனத் தலைவி தான் கையும் களவுமாக அகப்பட்டதைத் தோழியிடம் எடுத்துக் கூறுகின்றாள்; பிறர் காணாது கள்ளையுண்டவன் அவனது களிப்பு உடலின்கண் மிகுவதால் நாணாமல் பிறரிடம் சென்று கூறுவது போல் தனது களவு, அன்னைக்குத் தலையிலிருந்து வீழ்ந்த கண்ணி மூலம் அறிவிக்கப்பட்டு விட்டது என்கின்றாள். அதுகேட்ட தோழி அவன் கண்ணியை நீ சூடினமையறிந்து தமர் அவற்கே நின்னைக் கொடுக்கச் சூழ்ந்தார்' என மொழிந்து அச்சம் அகற்றுகின்றாள்.

கண்ணி தந்தவன் கைப்பிடிப்பதைக் கீழ்வரும் பாடலடிகளால் அறியலாம்.

மண்ணி மாசு அற்ற நின் கூழையுள் ஏறஅவன்
கண்ணி தந்திட்டது எனக்கேட்டு திண்ணிதா
தெய்வ மால் காட்டிற்று இவட்கு என நின்னைஅப்
பொய் இல் பொதுவற்கு அடை சூழ்ந்தார்—தந்தையோடு
ஐயன்மார் எல்லாம் ஒருங்கு[55]

மேலும் தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்கும்பொழுது தலைவனிடம் தான் பெற்ற கண்ணியைக் குறிப்பாகக் காட்டிக் களவைப் புலப்படுத்துகின்றாள். 'தொழுவத்தில் இருக்கும் ஏற்றைத் தழுவியவனது சென்னியில் கிடந்த முல்லைக் கண்ணியை அவ் ஏறு கொம்பிலே எடுத்துக்கொண்டு துள்ளியது; அதனால் அப்பூ வந்து என் கூழையுள் வீழ்ந்தது; அது கண்ட நான் கொடுத்தது பெற்றார் போல் மகிழ்ந்து சூடிக்கொண்டேன் என்கின்றாள்.[56]

திணை மாலை நூற்றைம்பதில் கையுறைமறை, கையுறை எதிர்தல் என்ற துறைகளில் இரண்டு பாடல்கள் (20, 21) உள்ளன; இரண்டும் தோழிக்குரியன.

நாள் வேங்கை பொன்விளையும் நல்மலை நல் நாட!
கோள் வேங்கைபோல் கொடியார் என் ஐயன்மார்,
கோள் வேங்கை
அன்னையால் நீயும்; அருந்தழை யாம் ஏலாமைக்கு
என்னையோ? நாளை எளிது[57]

என்ற பாடல் தோழியின் கூற்றில் அமைந்தது; இங்ஙனம் கையுறை ஏலாமைக்குத் தமர் பற்றி எழுந்த அச்சத்தைக் காரணமாகக் காட்டுகின்றாள் தோழி.

கோவை நூல்கள் பாங்கி மதிஉடன்பாட்டினுள்ளும், பாங்கியிற் கூட்டத்துள்ளும் கையுறைக் குறிப்புக்களைக் கொண்டுள்ளன; அவை தோழி தலைவன் ஆகிய இருவர் கூற்றிலும் பயின்று வருவன.

அந்தாதி, கலம்பகம் போன்றவற்றுள்ளும் கோவை நூல்கள் போன்று இரு தலைவர்கள் வருவதால் இத்துறையிலமைந்த பாடல்கள் இடம் பெறுகின்றன. கலம்பகத்தில் தழை என்பது ஓர் உறுப்பு என்பதும் குறிப்பிடத்தக்கது. மருதூரந்தாதியில் கையுறை மறுத்தல் என்ற துறையிலமைந்த பாடல் (76) உள்ளது. அம்பலவாணர் தேசிகர் கலம்பகத்தில் தழை பற்றி ஒரு பாடல் (22) உள்ளது. தலைவி கையுறை ஏற்றமையைப் பாங்கி தலைவனுக்குக் கூறுவதாகத் தணிகைக் கலம்பகத்தில் ஒரு பாடல் (36) உள்ளது. **மதுரைக் கலம்பகம்** தழை ஏற்பித்தல் என்ற துறைப்பாடல் (20) ஒன்றைக் காட்டும்.

இருபதாம் நூற்றாண்டில் புலவர் பழநி எழுதிய **அனிச்ச அடி** நாடகத்தில் பாடினி பாடிய பாடல்களில் இத்துறை இடம் பெற்றுள்ளது. அந்நாலுள் 'தோழி கையுறை மறுத்தது' என்ற துறையில் 3 பாடல்கள் (அங்கம் 1; களம் 2) பாடினி பாடுவதாக உள்ளது. இது வரலாற்றுப் பின்னணியில் அமைந்த நாடகம் என்பதால் அப்பாடல்களில் மன்னன் பற்றிய செய்திகள் இடம் பெறுகின்றன. பாடினி நார்முடிச் சேரலின் பூழிநாட்டை நன்னன் கவர்ந்துகொண்டதாகப் பாட அது கேட்ட நாடகத் தலைவன் அருளாழி சினங்கொள்கின்றான். நாடக நீட்சிக்குக் கருவாக அமைந்து விடுகின்றது அப்பாடல்.

எனவே, இம்மரபு இலக்கியங்களில் தொடர்ந்து வந்திருப்பினும் பாடும் முறைமையால், நோக்கத்தால் காலத்துக்குக் காலம் வேறுபட்டுள்ளது என அறிகிறோம்.

## குறையிடங்கூறல்

களவியலில் குறி தொடர்பான செய்திகளைக் காட்டுவர் தொல்காப்பியர். அவர் குறியை,

> குறியெனப் படுவ திரவினும் பகலினும்
> அறியக் கிடந்த ஆற்ற தென்ப[58]

என இருவகைப் படுத்துவர். அவற்றுள் இரவுக்குறி இல்லத்துள்ளும் பகற்குறி எயிற்புறமும் நிகழும் என்றும் அக்குறியிடத்தைக் குறித்துக் கூறும் கிளவி தலைமகளுக்கு உரியது என்றும் விளக்குவர்.[59]

மேலும் தலைவனுக்கு இருவகைக் குறி பிழைப்பாகிய இடத்தும்[60] தலைவிக்குக் 'குறியின் ஒப்புமை மருடற் கண்ணும்[61] கூற்று நிகழும் எனக் கூற்று நிகழ் சூழலை விளக்குவர்.

**'கூடுதல் வேட்கையாற் குறி பார்த்து'**[62] எனக் கலித்தொகை குறியின் நோக்கத்தைப் புலப்படுத்தும்.

பல்பூங் கானல் *பகற்குறி* மரீஇச்
செல்வல் கொண்க[63]

பல்பூங் கானல் பகற்குறி வந்து[64]

பூவிரி கானல் *புணர்குறி* வந்து[65]

நளிஇருங் கங்குல் புணர்குறி வாய்த்த
களவும் கைம்மிக அலர்ந்தன்று[66]

நெய்தல் பரப்பில் பாவை கிடப்பி
நின்குறி வந்தனென், இயல் தேர்க் கொண்க[67]

கூழைக்கு எருமணம் கொணர்கம் சேறும்
ஆண்டும் வருகுவள் பெரும் பேதையே[68]

பூவேய் புன்னை அம் தண் பொழில்
வாவே தெய்ய மணந்தனை செலற்கே[69]

*நின்றாய் நீ சென்றி; எமர் காண்பர்; நாளையும்*
*கன்றொடு சேறும் புலத்து*[70]

ஆம்பற் குழலால் பயிர்பயிர் எம் படப்பைக்
காஞ்சிக் கீழ்ச் செய்தேம் குறி[71]

போன்ற அடிகள் ஐந்திணையுள் பகற்குறி பயின்றுவரும் பாங்கைப் புலப்படுத்தும். இவை குறியிடங்கூறல் என்ற துறையில் மட்டுமின்றி இற்செறிப்பு அறிவுறியது (நற். 25), வரைவுநீட ஆற்றாளாங் காலத்துத் தோழி வரைவு மலிந்தது (நற். 235) கொண்டு நீங்கக் கருதிய தலைமகன் பிரிவின்கண் தோழிக்குத் தலைவி சொல்லியது (அகம். 325) இடத்துய்த்து நீங்கும் தோழி கூறியது (குறுந். 114) போன்ற பிற துறைப் பாடல்களிலும் காணக்கிடக்கின்றன.

இரவின்வந்து எம் இடைமுலை முயங்கி[72]

என்ற அடி தலைவன் தலைவியின் இரவுக் கூட்டத்தைக் காட்டும்;

இங்ஙனம் 'நாள்பல நீடிய கரந்துறை புணர்ச்சி'[73]

தக்கதன்று எனத்தோழி நீக்கி நிறுத்துவாள். எனவே இரவு வருவானைப் பகல் வாவென்றும், பகல் வருவானை இரவு வருக வென்றும் குறி பெயர்த்துரைப்பாள்.

இரவின் வாரல் ஐய! விரவு நீ
அகல் அறை வரிக்கும் சாரல்
பகலும் பெறுகுவை, இவள் தடமென் தோளே[74]

தினை கிளி கடிதலின் பகலும் ஒல்லும்;
இரவு நீ வருதலின், உள்ளும் அஞ்சுவல்,
யாங்குச் செய்வாம், எம் இடும்பை நோய்க்கு ?[75]

எனத் தலைவியின் நிலைகூறி, தலைவனைப் பகல்வாவென்பாள். பின் அன்னையின் இற்செறிப்பையும் அவர்மிகுதியையும் எடுத்துக் கூறுவாள்.

செறுவர்க்கு உவகை ஆக, தெறுவர
ஈங்கனம் வருபவோ?—தேம்பாய் துறைவ;[76]

என மொழிந்து குறி மறுத்து, வரைவு சுடாவத் தலைப்படுவாள்.

அகநானூற்றுப் பரணர் பாடல் ஒன்று இரவுக்குறி இடையூறு களைக் தொகுத்துக் காட்டும்.[77]

குறியைக் கூறுபவள் தலைவி எனத் தொல்காப்பியர் காட்டியது போலக் குறியிடம் தலைமகளாலே சுட்டப்பெறும் என்பதற்குச் சான்றாக அமைவன கீழ்க்காணும் கலித்தொகை அடிகள்.

"நேரிதழ்க்கோதையாள் செய்குறி நீவரின்"
"சோர்ந்துவீழ் கதுப்பினாள் செய்குறி நீவரின்"
"ஐதக லல்குலாள் செய்குறி நீவரின்"[78]

இங்ஙனம் குறியைச் சுட்டுபவள் தலைவி; குறி பற்றிய பாடல் களுக்குக் கருவாக அமைபவள் தலைவி. எனினும் அப்பொருண்மைக் குரிய செய்திகள் யாவும் தோழி கூற்றிலேயே பொதிந்து கிடக் கின்றன என்பது குறிப்பிடத் தக்கது; தலைவியின் உள்ளுணர்வு களைத் தலைவனிடத்துப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகத் தோழி கூற்றுப் பாடல்கள் அமைகின்றன.

வான் உயர் வெற்ப! இரவின் வரல் வேண்டா
யானை உடைய சுரம்[79]

நல் மலைநாட!--இர வரின், வாழாளால்
நல் மலைநாடன் மகள்[80]

எனச் சங்கம் மருவிய கால நூல்களும் குறி பற்றிய துறைகளில் அமைந்த பாடல்களைக் கொண்டுள்ளன. அவை குறிஞ்சி நெய்தல் ஆகிய திணைகளில் அமைந்துள்ளன.

**திருக்கோவையார்** பகற்குறி, இரவுக்குறி ஆகிய களவித் தொகை களை உடையது: அவற்றுள் முன்னதில் முப்பத்திரண்டு துறைகளும் (116-147), பின்னதில் முப்பத்து மூன்று துறைகளும் (148-180) உள்ளன. அவற்றுள் வரைவு கடாதல், அலர் அறிவுறுத்தல் ஆகிய பொருண்மையில் அமைந்த பாடல்களும் அடங்கும். இவை தவிர, உடன் போக்கில் தோழி தலைவனை இன்ன இடத்திற்கு வர வேண்டும் எனக் குறியிடம் கூறுவதாகவும் பாடல் (210) உள்ளது.

பதினோராம் திருமுறையுள் திரு ஏகாம்பரநாதர் திருவந்தாதி யில் ஐந்து பாடல்கள் (17, 18, 23, 24, 95) இரவுக்குறி பற்றியன; பகற்குறி, பகற்குறி இடையீடு பற்றியன இரண்டு பாடல்கள் (25, 28). மருதூரந்தாதியில் குறியிடத்து உய்த்து நீங்கல் என்ற துறையில் ஒரு பாடல் (96) உள்ளது.

திருவரங்கக் கலம்பகத்தில் இரவுக்குறி விலக்கல் பற்றி ஒரு பாடல் (51) உள்ளது. பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம் ஆகிய வற்றுள் சில கோவை நூல்களைப் போன்று இரண்டு தலைவர் களைப் பெற்றுள்ளன; எனவே பெரும்பாலும் அவை கோவை மரபை ஒட்டிக் குறி பற்றிய செய்திகளை விளக்குகின்றன. கந்த **புராணம்** வள்ளியைப் பாங்கி இரவுக் குறியில் உய்த்தலைக் காட்டு கின்றது.

*தாய்துயி லறிந்து தங்க டமர்துயி*
 லறிந்து துஞ்சா
*நாய்துயி லறிந்து மற்றந் நகர்துயி*
 லறிந்து வெய்ய
பேய்துயில் கொள்ளும் யாமப்பெரும்பொழு
 ததனிற் பாங்கி
வாய்தலிற் கதவை நீக்கி வள்ளியைக்
 கொடுசென் றுய்த்தாள்[81]

இப்பாடல் அகமரபைப் பின்பற்றிப் பாங்கி வள்ளியைக் குறியிடம் நோக்கிக் கொண்டு செல்லுதலைப் பாடியிருப்பினும் அம்மரபி னின்றும் முற்றிலும் திரிந்த பொருண்மையுடையது. தலைவியின் இயற்பெயர் பாடலில் சுட்டப்பட்டுள்ளது; மீமானுடம் பற்றியது. இங்ஙனம் மானுடக் காதலர்கள் பற்றிய இலக்கிய மரபு, மீமானுடக் காதலை விளக்கப் பயன்படுத்தப்பட்டது.

முக்கூடற்பள்ளு 'வேலமரங்கள் நிறைந்த வழியில் கால்வாய், ஆறு இவற்றில் பொங்கி அடித்துக் கொண்டு போகும் வெள்ளத்தில், நடக்கும் கரைகண்டு தலைவன் காதல் வெள்ளத்தின் கரையைக் காணா இரவு நேரத்தில் வருதலையும், அவ்வரவைத் தோழி விலக்கு வதையும் காட்டும்.

பாவெள்ளத் தாறுடைய பண்ணர்முக் கூடலின்கண்
வேவெள்ளத் தாறெமது பின்னிறைக்குங் கார்காலம்
காவெள்ளத் தாறுகரை கண்டுகரை காணாமல்
மாவெள்ளத் தாறு வரலிரவு தீர்வாயே[82]

எனும் இப்பாடல் அகக்கூறு உடையது எனினும் நூல் தோன்றிய காலமும் நடையும் கருதத்தக்கது.

மகாகவி பாரதியார் தன்னைக் காதலியாகவும் கண்ணனைக் காதலனாகவும் பாவித்துப் பாடும் கண்ணன் பாட்டில் காதலன் குறியிடம் கூறுவதாகப் பாடுவர்.

வெண்கல வாணிகரின் வீதி முனையில்
　வேலிப் புறத்திலெனைக் காணடி யென்றான்;
கண்கள் உறங்கலெனுங் காரிய முண்டோ
　கண்ணனைக் கையிரண்டுங் கட்டலின்றியே?[83]

எனக் காதலி ஏங்குவதாகப் பாடுவர். அகத்திணையில் தலைவன் அடைய விரும்புவது தலைவியை எனவே தலைவி குறியிடம் கூறு கின்றாள். அங்குத் தலைவன் அவளைக் கூடுகின்றான். அவ்வகை யில் நோக்கின் கண்ணன் என்ற காதலன் குறியிடம் கூறுவது பொருத்தம்; இப்பாட்டு வெளிப்படையாக நோக்கின் மரபுமாற்றம் போல் தோன்றினும் ஆழ்ந்து நோக்கின் அகமரபை ஒட்டிச் செல் கின்றது.

தீர்த்தக் கரையினிலே--தெற்கு மூலையிலே
　செண்பகத் தோட்டத்திலே
பார்த்த விடத்திலெல்லாம்--உன்னைப் போலவே
　பாவை தெரியுதடீ![84]

எனக் கண்ணம்மாவைக் காதலியாக்கிய பாரதி தன்னைக் காதல னாக்கிப் பாடுவதில் தலைவி குறியிடம் கூறுவதாகக் காட்டுவர்.

இங்ஙனம் காதலனாகவும், காதலியாகவும் வரும் கண்ணன் (கடவுள்) குறியிடம் கூறுவதாகப் பாடியுள்ளார் பாரதியார்.

புரட்சிக்கவி பாரதிதாசன் தமது படைப்புக்களில் அகமரபைப் போற்றியுள்ளார். இசையமுது புன்னைமரத்தைக் குறியிடமாகக்

காட்டும்,[85] 'மாந்தோப்பில் மணம்' என்ற காதல் பாடல் தலைவி குறியிடம் கூறலைக் காட்டும்,

காலை மலர்ந்தது! மாந்தரெல்லாம்-தாங்கள்
கண்மலர்ந் தே நட மாடுகின்றார்-இச்
சோலையிலே இள மாமரங்கள்-அடர்
தோப்பினை நோக்கி வருக! என்றாள்[86]

எனத் தலைவி நேரடியாகத் தலைவனிடம் சொல்லுகின்றாள்.

காதற் பாடல்களில் தலைவன் தலைவி சந்திக்கின்ற இடங்கள் வருதல் இயல்பு; அகப்பொருள் காட்டும் குறி தொடர்பான துறைகள் காலந்தோறும் மாறியும், திரிந்தும், எல்லா இலக்கியங்களிலும் பயின்று வந்துள்ளன. அவை அகத்திணைக் கூறுகள் பலவற்றுள் ஒரு கூறு. எவையேனும் ஒருகூறு இடம் பெற்றுள்ளதால் மட்டும் அது அகப்பொருள் ஆகாது, ஒரு சுளை பழமாகாதது போல.

## இற்செறித்தல்

தலைவி தலைவனைக் குறிவழிச் சென்று காணவிடாமல் தாய் இல்வயின் செறித்தபொழுது தலைவிக்குக் கூற்று நிகழும்; தலைவியின் ஒழுக்கத்தில் ஐயமுற்றுத் தாய் மனையில் கட்டுக்காவலை மிகுவிக்கும்பொழுது தோழிக்குக் கூற்று நிகழும். இதனை,

தமர்தற் காத்த காரண மருங்கினும்[87]

அவள் விலங்குறினும்[88]

என விளக்கும் **தொல்காப்பியம்,**

சில்செவித்து ஆகிய புணர்ச்சி அலர்எழ
இல்வயிற் செறித்தமை அறியாய்[89]

பல்பூங் கானல் பகற்குறி மரீஇச்
செல்வல் கொண்க! - செறித்தனள் யாயே[90]

....................அன்னையும்
உட்கொண்டு ஓவாள் காக்கும்[91]

....................வென்வேற்
கொற்றச் சோழர் குடந்தை வைத்த
நாடுதரு நிதியினும் செறிய
அருங்கடிப் படுக்குவள், அறன்இல் யாயே[92]

மேற்காணும் சான்றுகள் இற்செறிப்புக்கான காரணத்தையும் அதன் தன்மையையும் புலப்படுத்துவன. தலைவியின் ஒழுகலாற்றில் ஐயம்

கொண்ட தாய் அவளைக் கடிமனையில் நிறுத்திவிட்டுத் தோழியின் வழியாக அதற்குரிய காரணத்தை ஆராய முற்படுவாள்; தோழி தலைவனுக்குச் செறிப்பு அறிவுறுத்தி வரைவு கடாவத் தொடங்குவாள்.

அக இலக்கியங்களுக்குப் பின் இத்துறை பற்றிய குறிப்பு முத்தொள்ளாயிரத்தில் ஆறு பாடல்களில் காணக்கிடக்கின்றது.[93] அவை உலாவந்த மன்னனைக் கண்ட மகளிர் காமுற்றுப் பாடியனவாக உள்ளன. எனவே அகமரபினின்று விலகிக் கிடக்கின்றன.

அன்னை கதவைத் தாளிட்டு விடுகின்றாள்; எனவே உலா வரும் பாண்டியனைக் கதவில் உள்ள துளை வழியாகக் காண்கின்றாள் தலைவி.

காப்படங்கென் றன்னை கடிமனை யிற்செறித்
தியாப்படங்க ரோடி யடைத்தபின்-மாக்கடுங்கோன்
நன்னலங் காணக் கதவந் துளை தொட்டார்க்
கென்னை கொல் கைம்மா றினி[94]

இங்ஙனம் மன்னனைக் கண்ட தலைவி கதவில் துளை செய்வதற்கு என்ன கைம்மாறு செய்வது என எண்ணுகின்றாள். இப்பாடலில் 'இற்செறித்து' என்ற சொல் இடம் பெற்றிருப்பினும் அது பெயரளவில் மட்டும் அகமரபைப் போற்றியுள்ளது என்பதைப் பாடற் பொருண்மையால் அறியலாம். உலா வருபவன் அகத் தலைவன் அல்லன்; பல பெண்களாலும் விரும்பப்பட்டவன். மேலும் அகப் பாடலில் வரும் நற்றாய் காட்சியின்போது இடம் பெறுவதாகப் புலனெறி வழக்கு இல்லை,

கடற்றானைக் கோதையைக் காண்கொடாள் வீணி
லடைத்தா டணிக்கதவம் அன்னை - யடைக்குமேல்
ஆயிழையாய்! என்னை யவன்மே லெடுத்துரைப்பார்
வாயு மடைக்குமோ தான்[95]

கோட் டெங்கு சூழ்கடற் கோமானைக் கூடவென
வேட்டாங்கு சென்றவென் நெஞ்சறியாள் - கூட்டே
குறும்பூழ் பறப்பித்த வேட்டுவன்போல் அன்னை
வெறுங்கூடு காவல்கொண் டாள்![96]

இப்பாடல்கள் அகப்பொருள் துறையைப் பின்புலமாகக் கொண்டு எழுதப் பட்டவை; அகப்புறக் கைக்கிளைக்குரியன; பெண்பாற் கூற்றில் அமைந்தவை.

அகப்பொருள் துறைகள் பல. அவையனைத்தும் காலந்தோறும் தோன்றிய பல்வேறு இலக்கிய வகைகளால் போற்றப்படவில்லை.

இலக்கியத்தின் தேவைக்கும் ஆசிரியரின் ஈர்ப்புக்கும் ஆளானவை மிகச் சில. அவற்றுள் ஒன்று இத்துறையாகும். நம்பியகப்பொருள் போன்ற கோவை இலக்கணங்களிலும் மற்றும் கோவை நூல்களிலும் இத்துறை காணப்படுகின்றது.

கந்தபுராணத்தில் வள்ளியம்மை திருமணப்படலத்தில் அகப் பொருள் துறையைப் பின்பற்றியமைந்த பாடல்கள் பல உள்ளன.[97] அவற்றுள்

செற்ற மெய்தியே யன்னவ டன்னையிற் செறித்தார்[98]

என்ற அடி முருகன் வள்ளி களவு வாழ்வைக் கவிக்கூற்றில் காட்டும். எனினும் அது மானுடம் பற்றியதல்ல. ஆகையால் அகத்திணைக் குரியதல்ல.

**பிரபந்தத் திரட்டு** மாதிரக்கட்டு (41) வெளிப்படை (485-486) என்னும் இலக்கிய வகைகளுள் இற்செறித்தல் பற்றிய குறிப்புள்ள தைக் கூறுகின்றது.

கண்ணனைக் காதலியாகவும் காதலனாகவும் நினைத்துப் பாடப் பெற்ற பாரதியாரின் பாடல்கள் அகத்துறைப் பொருண்மை களைக் கொண்டவை.

கடுமை யுடைய தடீ! - எந்த நேரமும்
  காவலுன் மாளிகையில்
அடிமை புகுந்த பின்னும் - எண்ணும்போது நான்
  அங்கு வருதற் கில்லை;
கொடுமை பொறுக்க வில்லை - கட்டுங் காவலும்
  கூடிக் கிடக்கு தங்கே;
நடுமை யரசி யவள் - எதற்காகவோ
  நாணிக் குலைந்திடுவாள்[99]

இப்பாடல் காப்புமிகுதி கூறி பாரதியாகிய காதலன், காதலி கண்ணம்மாவைக் காண முடியாது ஏங்குவதைக் காட்டும்.

புதுப்பெயல் வருதல் கண்டும்
  புகுந்தாடும் வேட்கை மிக்கும்
விதிப்புற்றுத் தயங்குகின்ற
  வெப்புநோ யாளன் போல
விதுப்புறும் அவன்றான் அந்த
  வேலியின் புறத்தா னேனும்
மதுப்படும் மார்பின் மூழ்கி
  மகிழ்ந்தாடும் வகையில் லேனால்[100]

என்ற பாடல் **அனிச்சஅடி** நாடகத்தில் அரங்கில் பாடினி பாடுவதாக 'இற்செறிக்கப்பட்ட தலைமகள் தன்னெஞ்சிற்குக் கூறியது' என்ற துறைக்குரியது. இந்நாடகத்தில் காணப்படும் அகத்துறைப் பாடல்கள் பல[101] சிலப்பதிகாரக் கானல்வரிப் பாடல்களைப் போல நாடக வளர்ச்சிக்கு அடித்தளமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## வெறி விலக்கல்

வெறியாட்டு நிகழுமிடத்துத் தலைவி, தோழி, செவிலி ஆகிய மூவருக்கும் கூற்று நிகழும். இதனைக் கீழ்வருமாறு **தொல்காப்பியம்** இலக்கணப்படுத்துகின்றது.

வெறியாட் டிடத்து வெருவின் கண்ணும்[102]

அவள்விலங் குறினுங் களம்பெறக் காட்டினும்[103]

கட்டினுங் கழங்கினும் வெறியென இருவரும்
ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்[104]

இவை மேற்சொன்ன மூவருக்கும் கூற்று நிகழிடங்களை விளக்கும் போது களவியலில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

வெறி என உணர்ந்த வேலன் நோய் மருந்து
அறியான் ஆகுதல் அன்னை காணிய[105]

எனத் தலைமகன் சிறைப்புறைத்தானாக, வெறி அஞ்சிய தோழிக்குச் சொல்லுவாளாய்த் தலைவி சொல்லுகின்றாள்.

வேலன் புனைந்த வெறிஅயர் களம்தொறும்
செந்நெல் வான் பொரி சிதறி அன்ன
எக்கர் நண்ணிய எம்ஊர் வியன்துறை[106]

எனப் பிற திணைக்குரிய துறைகளிலும் வெறி அயர்களம் உவமை வாயிலாகப் பெறப்படுகின்றது.

பெய்ம்மணல் வரைப்பில் கழங்கு படுத்து அன்னைக்கு
'முருகு' என மொழியும் வேலன்; மற்று - அவன்
வாழிய - இலங்கும் அருவிச்
சீர்மலை நாடனை அறியாதோனே![107]

என வேலன் கூறிய மாற்றத்தை மெய்யெனக் கொண்ட தாய்க்குத் தலைவியின் மாற்றத்துக்குக் காரணமானவனை அறிவிக்க முயலுகின்றாள் தோழி.

அருவி யின்னியத்து ஆடுநாடன்
மார்பு தர வந்த படர்மலி யருநோய்

நின்னணங்கு அன்மை யறிந்தும், அண்ணாந்து
கார்நறுங் கடம்பின் கண்ணிசூடி
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்
கடவு ளாயினும் ஆக
மடவை மன்ற வாழிய முருகே[108]

எனத் துணிந்து கூறித் தோழி வெறி விலக்குவதை நற்றிணைப் பாடல் காட்டும்.

வெறிகமழ் வெற்பன் என்மெய்ந் நீர்மை கொண்டது
அறியாள், மற்று அன்னோ! அணங்கு அணங்கிற்று!
என்று
மறி ஈர்த்து உதிரம்தூய், வேலன் - தலைஇ
வெறியோடு அலம்வரும், யாய்[109]

எனத் தலைவி தோழியிடம் அறத்தொடு நின்று வெறிவிலக்குவிக்கு மாறு கேட்கின்றாள். இதே பொருண்மையில் ஐந்திணை எழுப திலும் ஒரு பாடல் உள்ளது.[110]

முத்தொள்ளாயிரத் தலைவி தன் காதல் நோய் வெறியாட்டி னால் தீர்க்கப்படும் தன்மைத்தன்று எனத் தோழியிடம் கூறு கின்றாள்.

காராட் டுதிரந்தூ உயன்னை களனிழைத்து
நீராட்டி நீங்கென்றால் நீங்குமோ - போராட்டு
வென்று களங்கொண்ட வெஞ்சினவேற் -கோதைக்கென்
னெஞ்சங் களங்கொண்ட நோய்[111]

இப்பாடல் அகத்திணைக்குரிய துறைவழி மன்னரின்வெற்றிச் சிறப் பையும் அவனைக் கண்ட மாதர் நிலையையும் புலப்படுத்துகின்றது.

சிலப்பதிகாரத்தில் குன்றக்குரவையுள் இடம்பெறும் பாடல் தனிநிலையில் நோக்கின் அகப்பாடலை நினைவு கூர்கின்றது:

இறைவளை நல்லா யிதுநகையா கின்றே
கறிவளர் தண்சிலம்பன் செய்தநோய் தீர்க்க
அறியாண்மற் றன்னை யலர்கடம்ப னென்ற
வெறியாட றான்விரும்பி வேலன்வரு கென்றாள்[112]

என்பது அப்பாடல்.

திருவாய் மொழியிலும் (2467-2479) திருவிருத்தத்திலும் (3599) வெறிவிலக்கு என்னும் துறையிலமைந்த பாடல்கள் உள்ளன. அவற்றுள் சில பின்வருமாறு:

இதுகாண்மின் அன்னையீர்! இக்கட்டு விச்சிசொற்
கொண்டுநீர்
எதுவானும் செய்தங்கோர் கள்ளும் இறைச்சியும்
தூவல்மின்
மதுவார் துழாய்முடி *மாயபிரான்கழல் வாழ்த்தினால்*
*அதுவே யிவளுற்ற நோய்க்கும் அருமருந் தாகுமே*[113]

ஒருங்காக வேயுல கேழும் விழுங்கி உமிழ்ந்திட்ட
*பெருந்தேவன் பேர்சொல்ல கிற்கில்* இவளைப்
*பெறுதிரே*[114]
என்மொழி கேண்மின்என் அம்மனை யீர்! உல
கேழுண்டான்
சொல்மொழி மாலையந் *தண்ணந் துழாய்கொண்டு*
*சூட்டுமினே*[115]

இவை வெறிவிலக்குவிக்கும் முறைமை அகமரபினின்றும் வேறுபடுகின்றது என்பதற்குப் போதுமான சான்றுகளாகும். பக்தி இலக்கிய நாயகியின் துயர் கண்ணனைப் போற்றும் பாடல்களைக் கேட்ட அளவிலும், அவன் திருநாமம் கேட்ட அளவிலும், அவனது திருத்துழாய் மாலை சூட்டிய அளவிலும் தணிக்கப்படுகின்றது. அகப்பொருள் தலைவியின் நிலை அத்தன்மைத்து அன்று.

**திருக்கழுமல மும்மணிக்கோவை** *(15, 17, 20)*, **கோயில் நான்மணிமாலை** *(35)*, **அம்பலவாண தேசிகர் கலம்பகம்** *(88)*, **தணிகைக் கலம்பகம்** *(24)* போன்ற நூல்களிலும் இத்துறை தொடர்பான பாடல்கள் உள்ளன. தணிகாபுரியில் உள்ள தேனைக் கொணர்ந்தால் தலைவியின் துன்பம் நீங்கும் என்கின்றது **தணிகைக் கலம்பகம்.** பக்திப் பொருண்மையையுடைய சிற்றிலக்கிய வகைகளும் அகத்துறைகளைப் பக்தி இலக்கியத்தைப் போலப் பயன்படுத்திக் கொண்டுள்ளன.

**கந்தபுராணம்**, வள்ளியின் தமர் தந்தை அனைவரும் சேர்ந்து வெறியெடுப்பதைக் காட்டும்.

*தந்தையுங் குறவர் தாமுந் தமர்களும்*
*பிறகு மீண்டிச்*
சிந்தையுள் ளயர்வு கொண்ட தெரிவைதன்
செயலை நோக்கி
முந்தையின் முதியா ளோடு முருகனை
முறையிற் கூவி
வெந்திறல் வேலி னாற்கு
*வெறியயர் வித்தா ரன்றே*[116]

என்பது பாடல். அக இலக்கியம் வெறியாட்டு நிகழும் போது நற்றாய் தோழி தலைவி ஆகியோரை மட்டும் காட்டும் என்ற வேறு பாடு நினைவு கூரத்தக்கது.

**தனிப்பாடல் திரட்டு** என்ற தொகுதிகளில் இத்துறைக்குரியன வாகப் பல பாடல்கள் உள்ளன.[117] அவை ஆட்டைப் பலிகொடுப் பதைக் காட்டி, அந்நோய்க்குக் காரணத்தைச் சுட்டுவனவாக அமைந்துள்ளன. அவை பெரும்பாலும் வள்ளல்களைத் தலைவ னாகக் கொண்டு பாடப்பட்டவை.

மு. ரா. கந்தசாமிக் கவிராயரின் தனிச்செய்யுட் சிந்தாமணியில் சில பாடல்கள் அகப்பொருள் கோவையின் சில உறுப்புக்களைப் போலப் பாடப்பட்டுள்ளன. பாலனைப் பழித்தல், வெறிவிலக்கல் முதலிய துறைகளில் மரபுப்படி பாடும் நிலை காணப்படுகிறதே தவிர ஊற்றாக வரும் காதல் உணர்வு காணப்படவில்லை[118] என்பர் நா. செயராமன்.

இவையன்றி இத்துறையிலமைந்த ஒரு துறை, இருதுறைக் கோவைகள் உள்ளன. **திருவாரூர் ஒருதுறைக் கோவை** வெறிவிலக்கல் என்ற துறைக்குரியது.[119]

**குருவாயூரப்பன் இருதுறைக் கோவை** என்ற நூலில் நாணிக் கண் புதைத்தல், வெறிவிலக்கல் ஆகிய இரு துறைகளிலும் அமைந்த பாடல்கள் உள்ளன. இந்நூல் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையத்தில் சுவடியாக உள்ளது என்பர்.[120]

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றிய தாகக் கருதப்படும் **பிரபந்தத் திரட்டு** 'வெளிப்படை' (485-486) என்ற இலக்கியத்தில் இத்துறை பற்றிய செய்தி இருப்பதாகக் கூறு கின்றது.

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாரதிதாசன் அகப் பொருளில் ஈடுபாடு கொண்டு, சில அகத்துறைப் பாடல்களைப் பாடியுள்ளார். அவற்றுள் ஒன்று :

> முருகனால் வந்த நோயாம்! உனக்கிது
> முருகனால் வந்த நோயாம்!
> கருதிக் கருதிக் கண்ணான வெற்பனை
> உருகும் உன்உடம்பில் வந்த இந்நோய்
> முருகனால் வந்த நோயாம்![121]

இவ்வண்ணம் வெறிவிலக்கல் துறை அகமாந்தர்க்குத் (தோழி, செவிலி) தலைவியின் களவு வாழ்வைப் புலப்படுத்தி அறத்தொடு நின்று கற்பு வாழ்க்கை மலர வழிவகுத்ததை மேற்காட்டிய சான்றுகளால் அறியலாம்.

அகப்பொருளைச் சார்ந்த வெறிவிலக்கல் துறை காப்பியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், புராணம் போன்றவற்றுள் பயன் படுத்தப்பட்டுள்ளது. தனித்தனிப் பாடல்களாகவும் பாடப்பெற்ற மையைத் தனிப்பாடல் திரட்டுவழி அறியலாம். காலவெள்ளத்தில் அதன் நோக்கமும் பாடுவோருக்கும் அவைக்கும் ஏற்ப திசை திருப்பப் பட்டது. தனிமனிதனை மகிழ்விக்கும் நோக்கில் எழுந்த ஒருதுறைக் கோவை ஒரு துறையை மட்டும் எடுத்துப் பல பாடல்கள் பாடுவனவாக அமைந்தது. எனவே அகப்பாடலின் மரபினின்றும் விலகி நிற்கின்றது. நாணிக் கண் புதைத்தல் என்ற துறையில் அமைந்த ஒருதுறைக் கோவை போல வெறிவிலக்கல் துறையிலும் ஒருதுறைக் கோவை தோன்றியது; இருதுறைகளை இணைத்துப் பாடும் கோவையிலும் இத்துறை இடம் பெற்றது.

ஆக இத்துறை தனிமனிதனைப் புதழ்ந்து பாடவும் பரிசில் பெறவும் புலவர்களுக்கு அதிக வாய்ப்பு வழங்கியது எனலாம்.

## அறத்தொடு நிற்றல்

களவியலில் தோழி கூற்று நிகழிடங்களைக் கூறும் தொல்காப் பியர் முன்னிலை வகையிலும் அறத்தொடு நிலையிலும் குற்றந் தீர்ந்த கிளவியைத் தாய் மாட்டுப் புகவிடுதலும் தோழிக்குரியது என்பர்.

முன்னிலை அறனெனப் படுதலென் றிருவகைப்
புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்[122]

எனத் தோழிக்குரியதாக அறத்தொடு நிற்றலையும் அதனைக் கேட் போராகத் தாயையும் காட்டுவர். அறத்தொடு நிற்றலை,

எளித்தல் ஏத்தல் வேட்கை யுரைத்தல்
கூறுதல் உசாவுதல் ஏதீடு தலைப்பாடு
உண்மை செப்புங் கிளவியொடு தொகைஇ
அவ்வெழு வகைய என்மனார் புலவர்[123]

என ஏழு வகைப்படுத்துவர். அதாவது தலைவன் தம்மாட்டு எளிய னென்று கூறுதல், தலைவனை உயர்த்துக் கூறுதல், தலைவன் மாட்டுத் தலைவி வேட்கையும் தலைவிமாட்டுத் தலைவன் வேட் கையும் கூறுதல், தலைவியைத் தலைவற்குக் கொடுக்க வேண்டு மென்பதுபடக்கூறுதல், வெறியாட்டுங் கழங்கும் இட்டுரைத்துழி வேலனோடாதல் பிற ரோடாதல் தோழி உசாவுதல், யாதானும் ஓர் ஏதுவை இடையிட்டுக் கொண்டு தலைப்பட்டமை கூறுதல், உள்ளபடி கூறுதல் என்னும் முறையில் தோழி அறத்தொடு நிற்பாள்.

'அறம் என்பது தக்கது: தக்கதனைச் சொல்லி நிற்றல்' எனத் துறை விளக்கம் செய்வர் நக்கீரர்.[124] குறிஞ்சிப்பாட்டு இத்துறையில் அமைந்த நெடும் பாடலாகும்.

பெய்ம்மணல் முற்றம் கவின் பெற இயற்றி
மலைவான் கொண்ட சினை இய வேலன்
கழங்கினான் அறிகுவது என்றால்
நன்றால் அம்ம, நின்ற இவள் நலனே[125]

என வேலன் கூற்றைப் பொய்யென இகழ்ந்த தோழி வெறிவிலக்கிச் செவிலிக்கு அறத்தொடு நிற்பதை ஐங்குறுநூறு காட்டும்.

அகவன் மகளே! அகவன் மகளே!
மனவுக் கோப்பு அன்ன நல் நெடுங் கூந்தல்
அகவன் மகளே! பாடுக பாட்டே;
இன்னும் பாடுக பாட்டே அவர்
நல்நெடுங் குன்றம் பாடிய பாட்டே[126]

எனக் கட்டுக்காணிய நின்றவிடத்து அறத்தொடு நிற்கின்றாள் குறுந்தொகைத் தலைவி.

தலைவனிடம் தான் கொண்ட அன்பைத் தோழிக்குக் கூறித் தானுற்ற துயர் களையும்படி கேட்கின்றாள் முல்லைக்கலித் தலைவி:

சொல்லிய ஆறு எல்லாம் மாறுமாறு யான் பெயர்ப்ப,
அல்லாந்தான் போலப் பெயர்ந்தான்; அவனை நீ
ஆயர் மகளிர் இயல்பு உரைத்து, எந்தையும்
யாயும் அறிய உரைத்தீயின், யான் உற்ற
நோயும் களைகுவைமன்[127]

இப்பாடல் தலைவி தானே அறத்தொடு நிற்க விழைதலையும், அதன்வழித் தலைவனைப் பெற முயல்வதையும் காட்டும் சான்றாகும்.

கலித்தொகையில் அறத்தொடு நிற்றலின்றி வள்ளைப்பாட்டுப் பாடுவது கேட்ட தலைவன் மகட்கொடை கேட்டதாகவும், தந்தை மகட்கொடை நேர்ந்ததாகவும் குறிஞ்சிக்கலி கூறுகின்றது. இதனை,

நன்று ஆகின்றதால் தோழி! நம் வள்ளையுள்
ஒன்றி நாம் பாட மறைநின்று கேட்டு அருளி

மென் தோட் கிழவனும் வந்தனன்; நுந்தையும்
மன்றல் வேங்கைக் கீழ் இருந்து,
மணம் நயந்தனன், அம் மலைகிழவோற்கே[128]

என்னும் குறிஞ்சிக்கலி வழி அறியலாம்:

அறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட
என்னையர்க்கு உய்த்து உரைத்தாள் யாய்
அவரும் தெரிகணை நோக்கி சிலைநோக்கி கண்சேந்து
ஒருபகல் எல்லாம் கருத்து எழுந்து, ஆறி
'இருவர் கண் குற்றமும் இல்லையால்,' என்று
தெருமந்து சாய்த்தார் தலை[129]

இப்பாடலடிகள் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றதையும், செவிலி தந்தை தன்னையர்க்கு அறத்தொடு நின்றதையும், அவர் சினந்து பின் மகட்கொடை நேர ஒருப்பட்டமையும் காட்டும்.

செவிலி தோழியிடம் தலைவியின் மெலிவுக்குக் காரணம் கேட்கின்றாள்; அதுகேட்ட தலைவி 'பாலும் உண்ணாள், பழங்கண் கொண்டு நனி பசந்தனள்' என வினவுகின்றீர். அதற்குக் காரணம் குன்று கிழவோன் எனக் கூறுகின்றாள்.[130] இப்பாடல் வெறியாட்டின்றித் தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்பதற்குச் சான்றாகும். திணைமாலை நூற்றைம்பதிலும் இம்மரபுத் தொடர்ச்சி காணப்படுகின்றது.

வேலனார் போக; மறிவிடுக்க; வேரியும்
பாலனார்க்கு ஈக; பழியிலாள் பாலால்
கடும்புனலின் நீந்தி, கரை வைத்தாற்கு அல்லால்
நெடும் பணைபோல் தோள் நேராள் நின்று[131]

என்பது தோழி செவிலிக்கு வெறிவிலக்கி அறத்தொடு நின்றது.

தாய் வெறியாட்டு எடுப்பதைக் கண்ட தலைவி வெறிவிலக்கி அறத்தொடு நிற்பதை முத்தொள்ளாயிரம் காட்டும்.[132]

சிலப்பதிகாரத்தில் குன்றக்குரவையில் இத்துறையிலமைந்த பாடல்கள் (11-19) உள்ளன.

சம்பந்தர் தேவாரத்தில் தலைவி அறத்தொடு நிற்பதாகவும் (1-73; 2-10) செவிலி அறத்தொடு நிற்பதாகவும் (2-23; 1-10) அமைந்த பாடல்கள் உள்ளன.

திருமங்கையாழ்வார் தலைவி நிலையில் நின்று தோழிக்கு அறத்தொடு நிற்பதாக அமைந்த பாசுரங்கள் சில பின்வருமாறு :

ஒரு கையில்சங் கொருகைமற் றாழியேந்தி
உலகுண்ட பெருவாயர் இங்கேவந்து என்
பொருகயல்கண் ணீரரும்பப் புலவிதந்து
*புனலரங்கம் ஊரென்று போயி னாரே*[183]

என்னலனும் என்னிறையும் என்சிந்தையும்
என்வளையும் கொண்டு; என்னை யாளுங் கொண்டு
பொன்னலர்ந்த நறுஞ்செருந்திப் பொழிலி னூடே
புனலரங்கம் ஊரென்று போயி னாரே[184]

*இப்பாசுரங்கள் தலைவன் தோற்றப் பொலிவையும், தலைவி நலனிழத்தலையும் தலைவன் ஊரையும் எடுத்து மொழிகின்றன. நம்மாழ்வார்* **திருவிருத்தம்** *(3670) வெண்ணெய் உண்ட கண்ணன் தன்னை நயந்ததைத் தலைவி தோழியிடம் சொல்லி அறத்தொடு நிற்பதாக உள்ளது.*

*பதினொன்றாம் திருமுறையில்* **கோயில் நான்மணிமாலை** *(11,35)* **திருக்கழுமல மும்மணிக்கோவை** *(9, 17),* **திரு ஏகம்பமுடையார் திருவந்தாதி** *(12),* **திருவிடைமருதூர் மும்மணிக்கோவை** *(23),* **ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி** *(57),* **ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்** *(22) ஆகியவற்றுள் அறத்தொடு நிற்றல் துறைக்குரிய பாடல்கள் உள்ளன. இலக்கியம் என்பதால் கோவையைப் போன்று இரண்டு தலைவர்களைப் பெற்றோ அல்லது மாலை வேண்டி வெறிவிலக்கி அறத்தொடு நிற்பதாகவோ அமைகின்றன.*

**ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி** *தோழி தலைவியின் நோய்க்கு மருந்தாக மாலையைச் சுட்டி அறத்தொடு நிற்பதைப் பின்வருமாறு காட்டும்.*

கட்டது வேகொண்டு கள்ளுண்டு
நுங்கைக ளாற்சு ணங்கை
இட்டது வேயன்றி எட்டனைத்
தான் இவள் உள்ளுறு நோய்
விட்டது வேயன்றி வெங்கரு
*நாதன் தன்* பங்கயத்தின்
*மட்டவிழ் தார்கொண்டு சூட்டுமின்*
*பேதை மகிழ்வுறவே*[185]

*ஆளுடை பிள்ளையார்* **திருமும்மணிக்** *கோவையில் தோழி களிறுதரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்பதாக உள்ள பாடல் அகப்பாடலை நினைவூட்டுகின்றது.*

தேமரு தினைவளர் காமரு புனத்து
மும்மதஞ் சொரியும் வெம்முகக் கைம்மா
மூரி மருப்பின் சீரிய முத்துக்
கொடுஞ்சிலை வளைத்தே கொடுஞ்சுரம் துரந்து
முற்பட வந்து முயன்றங் குதவிசெய்
வெற்பனுக் கல்லது
சுணங்கணி மென்முலைச் சுரிகுழல் மாதினை
மணஞ்செய மதிப்பது நமக்குவன் பழியே[186]

இப்பாடல் கோவை நூல்களைப் போன்று இரண்டு தலைவர்களைப் பெற்றிருப்பதால் அகமரபுச் சாயலைப் பெற்றிருக்கின்றது.

**திருவேங்கடத்தந்தாதி** *(53)*, **அழகரந்தாதி** *(51)* போன்ற அந்தாதி வகை நூல்களிலும் இத்துறைக்குரிய பாடல்கள் காணப் படுகின்றன.

**சீவக சிந்தாமணி** அகத்துறைகளுள் காட்சி, ஐயம், பிரிவு, தூது போன்றவற்றைப் பாடுவது போல அறத்தொடு நிற்றல் துறையையும் காப்பியப் போக்கிற்கேற்ப எடுத்தாண்டுள்ளது.

"கற்பெனு மாலை வீசி நாணெனுங் களிவண் டோப்பிச்
சொற்புக ரின்றித் தோழிக் கறத்தினோ டரிவை
நின்றாள்"
"பொழிமதுப் புயலைங் கூந்தற் செவிலியைப்
பொருந்திச் சொன்னாள்"
"சுனைவளர் குவளை யுண்கட் சுமதிக்குச் செவிலி
செப்ப..."
"வண்புகழ்க் குபேர தத்தன் கேட்டனன் மனைவி
சொன்னாள்"[187]

எனச் சுரமஞ்சரியார் இலம்பகம் அறத்தொடு நிற்கும் முறைமையைப் போற்றுகின்றது. தலைவி தோழிக்கும், தோழி செவிலிக்கும், செவிலி சுரமஞ்சரியின் தாய்க்கும் அவள், தன் கணவனுக்கும் அறத்தொடு நின்றமையை மேற்காணும் பாடல்கள் எடுத்துக் காட்டு கின்றன.

மேலும் தாய், தந்தையிடம் கூறி மணம்புரிவித்தலைக் குணமாலையார் இலம்பகத்திலுள்ள கீழ்க்காணும் பாடலடிகள் காட்டும்,

அகன்மனைத் தாய்க்குச் சொன்னா
ளவளுந்தன் கேட்குச் சொன்னாள்[188]

*வினையமா மாலை கேள்வன்*
*குபேரமித் திரற்குச் சொல்ல*
*அனையதே பட்டதென்றா லையனே*
*நங்கைக் கொத்தான்*
வனையவே பட்டபோலு மணிமருண்
முலையி னாளைப்
புனையவே பட்ட பொற்றாப் புண்ணியற்
கீது மென்றான்[139]

எனத் திருத்தக்கதேவர் கவிக்கூற்றில் காப்பியத் தலைமக்களின் வாழ்வில் அறத்தொடு நிற்றல் நிகழ்வதைக் கூறுகின்றார்.

நந்திக்கலம்பகத்தில் தோழி அன்னையிடம் அறத்தொடு நிற்கின்றதாகப் பாடல்கள் (50, 67) உள்ளன.

துயக்குவித் தான்துயில் வாங்குவித் தான்; துயில்வித்(து) இவளை
வயக்குவித் தான்; உள்ளம் வஞ்சனை யான்மலர்க் காவகத்து
முயக்குவித் தான்துகில் வாங்குவித் தான்முனம் நின்றிவளை
*மயக்குவித் தான்நந்தி மானோ தயன்என்று வட்டிப்பேனே*[140]

எனத் தலைவனின் பெயரைக் கூறுகின்றாள் தோழி; அகப்புறக் கைக்கிளைப் பொருண்மையில் அமைந்தது.

முன்னூல்களைப் போற்றிக் கோவைக்கு இலக்கணங்கண்ட நாற்கவிராச நம்பியும்,

தலைவி பாங்கிக் கறத்தொடு நிற்கும்
பாங்கி செவிலிக் கறத்தொடு நிற்கும்
செவிலி நற்றாய்க் கறத்தொடு நிற்கும்
நற்றாய் தந்தை தன்னையர்க் கறத்தொடு
நிற்கும் என்ப நெறியுணர்ந்தோரே[141]

என அறத்தொடு நிற்கும் மரபைக் கூறுவர். எல்லாக் கோவை நூல்களிலும் இத்துறை தொடர்பான பாடல்கள் உள்ளன. கோடீசுரக் கோவையில் தமருக்கு அறத்தொடு நிற்றல் என்ற துறையிலமைந்த பாடல் (314) உள்ளது.

கந்தபுராணத்தில் களிறு தரு புணர்ச்சியால் தோழி அறத்தொடு நின்றதற்குரிய பாடல்கள் (6:24; 114:115) உள்ளன. எனினும்

களிறாக வருவது விநாயகப் பெருமான் என்பதும் குறிப்பிடத்தக்கது. அகப்பொருள் மரபைப் பின்பற்றி மீமானுடக் காதல் பாடப்படுவதால் பொருண்மையிலும், புலப்பாட்டு முறையிலும் மாற்றம் உள்ளது.

தணிகைப் புராணத்தில் 'தந்தை தன்னையர்க்கு தாயினிதுரைத்த' துறைக்குரிய பாடல் (525) உள்ளது. வெள்ளக்கால் சுப்பிரமணியரின் தனிக்கவித்திரட்டில் இத்துறைக்குரிய இரண்டு பாடல்கள் (118, 126) உள்ளன.

காதல் இலக்கிய வகையுள் ஒன்றான கந்தர் காதல் 'தோழிக்குத் தலைவி அறத்தொடு நிற்றல்' துறையாக அமைகிறது.[142] என்பர் த. அழகப்பரக

அனிச்சஅடி நாடகத்தில் இத்துறைக்குரியனவாக மூன்று பாடல்கள் (அங்கம்: களம் 2) உள்ளன. அவை தனித்த நிலையில் நோக்கில் அகச்சாயல் உடையனவாகவும் நூலோடு இணைத்து நோக்கின் நாடக வளச்சிக்கு உதவுவனவாகவும் அமைந்து காணப்படுகின்றன,

## உடன்போக்கு

தொல்காப்பியம் தோழி, கண்டோர், தலைவன், செவிலி ஆகியோர் கூற்றுக்குரிய சூழலில் உடன்போக்கைப் பின்வருமாறு மொழிகின்றது.

போக்கற் கண்ணும் விடுத்தற் கண்ணும்[143]

சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும்
கண்டோர் மொழிதல் கண்டது என்ப[144]

ஒன்றிய மொழியொடு வலிப்பினும் விடுப்பினும்
இடைச்சுர மருங்கில் அவள்தமர் எய்திக்
கடைக்கொண்டு பெயர்தலிற் கலங்கஞர் எய்தி[145]

போக்குடன் அறிந்தபின் தோழியொடு கெழீஇக்
கற்பின் ஆக்கத்து நிற்றற் கண்ணும்[146]

சங்க அக இலக்கியம் உடன்போக்கில் பல பாடல்களைக் கொண்டுள்ளது. உடன்போக்கில் செல்லும் தலைவி சிலம்பு கழித்தும் (நற். 12) சிலம்பு கழிக்காமலும் (அகம். 383) செல்வதுண்டு. 'அம்சிலம்பு ஒடுக்கி அஞ்சிவந்து, துஞ்சி ஊர் யாமத்து முயங்கும்' (அகம். 198:10-11) தலைவி தலைவனுடன் செல்வதைப் பின்வரும் பாடலடிகள் காட்டும்.

தான்அமர் துணைவன் ஊக்க ஊங்கி
உள்ளாது கழிந்த முள் எயிற்றுத் துவர்வாய்ச்
சிறு வன் கண்ணி சிலம்பு கழீஇ,
அறியாத் தேஎத்தள் ஆகுதல் கொடிதே[147]

வைகு புலர் விடியல் மெய்கரந்து தன்கால்
அரி அமை சிலம்பு கழீஇ, பல் மாண்
வரி புனை பந்தொடு வைஇய செல்வோள்[148]

பெய் சிலம்பு ஒலிப்பப் பெயர்வனள்[149]

*மகளைப் பிரிந்த தாய்,*

எம்போல்,
பெரு விதுப்புறுக மாதோ—எம்இற்
பொம்மல் ஓதியைத் தன்மொழிக் கொளீஇ,
கொண்டு உடன்போக வலித்த
வன்கண் காளையை ஈன்ற தாயே*[150]

*எனத் தான் உறும் துயரைத் தலைவனின் தாய் பெற வேண்டுமென் கின்றாள்.*

பைங்காய் நெல்லி பல உடன் மிசைந்து,
செங்கால் மராஅத்த வரி நிழல் இருந்தோர்
யார்கொல், அளியர் தாமே—வார் சிறைக்
குறுங்கால் மகன்றில் அன்ன
உடன்புணர் கொள்கைக் காதலோரே ?[151]

*எனக் கண்டோர் கூற்றில் உடன்போக்கு உரைக்கப்படுகின்றது.*

'கடுங்கட் காளையொடு நெடுந் தேர்ஏறி
கோள்வல் வேங்கைய மலைபிறக்கு ஒழிய,
வேறுபல் அருஞ்சுரம் இறந்தனள் அவள்' எனக்
கூறுமின் வாழியோ! ஆறுசெல் மாக்கள்
நல்தோள் நயந்து பாராட்டி,
எற்கெடுத்து இருந்த அறன்இல் யாய்க்கே[152]

---

* *நினைத்தொறும் கலிழும் இடும்பை எய்துக
புலிக்கோட் பிழைத்த கவைக்கோட்டு முதுகலை
மான்பிணை அணைதர ஆண்குரல் விளிக்கும்
வெஞ்சுரம் என்மகள் உய்த்த
அம்பு அமை வல்வில் விடலை தாயே! (ஐங், 373)*

எனத் தலைமகன் இடைச்சுரத்துக் கண்டோரிடம் ஆய்க்குச் சொல்லி விட்டதாகப் பாடல் உள்ளது. மேலும் இப்பாடல் மகட்கொடை மறுக்கப்பட்ட போது, உடன்போக்கு நிகழும் என்பதைக் குறிப்பால் புலப்படுத்துகின்றது. ''அறநெறி இது எனத் தெளிந்த என் பிறை நுதற் குறுமகள்' (ஐங். 371:3-4) என்ற தொடர் உடன்போக்கை அறத்தின்பாற்படுத்தும். கலித்தொகையில் பாலைக்கலியில் உடன் போக்கு பற்றிய துறைகள் இல்லை.

தொல்காப்பியர் உடன்போக்கைக் கற்பிற்குரியதாகக் காட்டு வர்; அதனை 'மறைவெளிப் படுதல்' (தொல். பொருள். நூ. 488) என்ற தொடரால் அறியலாம். எனினும் இத்துறையைக் களவுக் குரியதாகக் காட்டுவர் அறிஞர். மேலும் அவர் 'உடன்போன தலை மகள் மீண்டு வந்தவுடன் நின் ஐயன்மார் பின்பற்றி வந்தபோது இடைச்சுரத்து நிகழ்ந்தது என்ன? (ஐங், 312, 322, 361, 383, 384) என்ற துறையைப் புதுமையதாகச் சுட்டுவர்.[153]

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் திணைமொழி ஐம்பது 'மகட் போக்கிய நற்றாய் சொல்லியது' என்ற துறையில் (20) ஒரு பாடலைக் காட்டும். திணைமாலை நூற்றைம்பது நற்றாய் படிமத் தானிடம் 'எல்வளையைத் தன் மனைக்கு உய்க்குமோ? அல்லது என் மனைக்கு ஏறக் கொணருமோ? (90) என வினவுவதைக் காட்டும்.

திருஏகம்ப முடையார் திருவந்தாதியில் உடன்போக்குத் துறைக் கான பல பாடல்கள் (16, 21, 66, 68, 73, 78-85) உள்ளன. பழ மலையந்தாதியில் ஒரு பாடல் (16) உள்ளது. இவை கோவை நூல் களைப் போன்று அகமரபினின்று வந்த மரூஉ போலத் தோன்றி னாலும் பாடும் முறைமையால், நோக்கத்தால் அகப்பொருள் மரபி லிருந்து வேறுபட்டு நிற்கின்றன.

பக்தி இலக்கியத்தில் மாயவன் பின் சென்ற மகளை நினைந்த தாயின் புலம்பலைக்காணலாம். 'இல்லம் வெறிச்சோடிக் கிடக் கின்றது. என் மகளை எங்கும் காணேன்; கண்ணன் பின் போய் மதுரைப்புறத்தே புக்காளோ'[154] என்றும்,

ஒருமகள் தன்னை யுடையேன்
உலகம் நிறைந்த புகழால்
திருமகள் போல வளர்த்தேன்
செங்கண்மால் தான்கொண்டு போனான்[155]

என்றும் புலம்புகின்றாள். திருமங்கையாழ்வார்,

கள்வன்கொல்? யான் அறியேன்
கரியானொரு காளைவந்து

வள்ளிமருங்குல் என்தன்
  மடமானினைப் போதஎன்று
வெள்ளி வளைக்கைப்பற்ற
  பெற்றதாயரை விட்டகன்று
அள்ளலம் பூங்கழனி
  யணியாலி புகுவர் கொலோ?[156]

என உடன்போக்கிற் சென்ற தலைமகளைக் குறித்துத் தாய் இரங்குவதாகப் பாடியுள்ளார். உடன்போக்கிற் சென்ற மகளின் வாழ்வையும் நினைத்துப் பார்க்கும் தாய் 'செங்கண்மாலுடன் சென்ற என்மகளை அசோதை வரவேற்றிருப்பாள்; அவள் மாமன் நந்தகோபாலன் தழுவிக்கொண்டிருப்பான். அவர்கள் வீட்டில் கண்ணுறங்காமல் இருந்து என்மகள் தயிர்கடைய வல்லளோ[157] எனத் தன் எண்ணத்தை வெளிப்படுத்துகின்றாள். இதன் மூலம் மானுட வாழ்க்கையினின்றுமுற்றிலும் விலகிச் செல்வனபக்திப்பாடல்கள், என்பது புலனாகின்றது. மேலோட்டமாக நோக்கும்போது அவை அகப்பொருள்துறைகளைப் பயன்படுத்தி இருப்பினும், அத்துறை இறைக்காதலுக்காக மடைமாற்றம் செய்யப்பட்டது எனத் தெளியலாம்.

கந்தபுராணத்தில் உடன்போக்கில் கையடைப் படுத்தல் (6:24:166) உடன்போக்கு (6:24:67-100) நற்றாய் தேடல் (6:24:171) என்பன போன்ற அகத்துறையிலமைந்த பாடல்கள் உள்ளன. இந்நூல்,

மாத்தவ மடந்தை நிற்ப வள்ளலை
  யிகுளை நோக்கித்
தீத்தொழி லெயினர் காணிற் றீமையாய்
  விளையு மின்னே
யேத்தருஞ் சிறப்பி னும்மூர்க் கிங்கிவ
  டனைக் கொண் டேகிக்
காத்தருள் புரியு மென்றே கையடை
  யாக நேர்ந்தாள்[158]

என முருகன்-வள்ளியின் உடன்போக்கைக் காட்டும்; பின் எயினர் அவர்களைத் தேடுவதாகவும் (173-178), சோலையில் வளைந்து கொள்வதாகவும் (179-181), முருகன் அவர்களை அழிப்பதாகவும் (184) வள்ளி அது கண்டு பதைப்பதாகவும் (185) காட்டும். எனவே இப்பாடல் அகமரபைப் போற்றியிருப்பினும் நிகழ்ச்சித் தொடர்புடன் அமைந்து அகப்பாடலினின்றும் வேறுபட்டு நிற்பதை அறியலாம்.

காப்பிய வளர்ச்சிக்கு அகத்துறைகள் பயன்படுத்தப்பட்டன. அவற்றைப் போல அவை புராண வளர்ச்சிக்கும் பெரிதும் உதவின என்பது தெளிவு.

நந்திக்கலம்பகம் உடன்போக்கைப் புறத்தோடு பொருத்தி விளக்கும். கழல் நந்தியொடு வெள்ளாற்றில் நடந்த வெம்போரில் போர் செய்ய முடியாமல் அஞ்சி ஓடிய அரசர் கூட்டம் மறைந்து சென்ற, பருக்கைக்கற்கள் சூழ்ந்த வழியில் இவர்கள் (தலைவன் தலைவி) ஏகிய நோக்கமென்ன?[159] எனச் செவிலி புலம்புவதாகக் காட்டும் இப்பாடல்வழி நந்திவர்மனின் வெற்றியும் எடுத்துரைக்கப் படுகின்றது.

கச்சிக்கலம்பகம் 'சிவனைக் கூடித் துன்பப்பட்டிருந்த என்மகள் வீட்டைவிட்டு வெளிச்சென்றாள்' என்பதை 'வேதனை பெற்றோ வேதனையுற்றாள் வெளியானாள்' (19) எனத்தாய் கூற்றில் அமைத்துக்காட்டும். இந்நூலில் உள்ள பாடல்கள் மூன்று அடிகளில் ஏகாம்பரநாதனின் பெருமையையும், ஓர் அடியில் அகத்துறைச் செய்திகளையும் பெற்றுள்ளன.

தனிப்பாடல் திரட்டு 'உடன்போக்கு வருத்தங் கூறல்' (ப. 603) என்ற துறையில் ஒரு பாடலைக் காட்டும்.

**இராவண காவியம்** இயற்றிய புலவர் குழந்தை,

தோட்டுணை யாகவே சுரிமென் கூந்தலைக்
கூட்டியே செல்பவன் குற்ற மற்றவன்
ஆட்டிநீ பிரிக்கலை யென்றவ் வன்னையை
மீட்டுமே யூர்செல விடுக்கு வார்களே[160]

என உடன்போக்கில் அன்னையுடன் உரையாடும் கண்டோரையும் காட்டுவர்.

பாரதிதாசனும் **இசையமுது** என்னும் நூலில் (2. ப.5) பொன்னனும் பொன்னியும் மேற்குப்புறத்தில் போயினர் என உடன்போக்கைப் புனைந்துள்ளார்.

தொல்காப்பியர் கூற்றுக்குரிய சூழலில் காட்டிய உடன் போக்கினைச் சங்க அக இலக்கியம் காட்டுகின்றது. அவ்வாறு உடன் போகும் போது தலைவி சிலம்பு கழிக்காமலும், கழித்தும் செல்வதை அக இலக்கியத்தின் வழி அறிகின்றோம். பக்தி இலக்கியத்தில் அத்துறை பயின்று வந்துள்ளது எனினும் அகமரபினின்று திரிந்து நிற்கின்றது. காரணம் ஈண்டுத் தலைவி மட்டும் தலைவனிருப்பிடம் நாடிச் செல்கின்றாள், மேலும் இத்துறை கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்ததற்குச் சான்றாகும். கந்தபுராணம், கலம்பகம்,

இராவண காவியம், இசையமுது போன்ற நூல்களும் இத்துறை மரபைப் போற்றியுள்ளன.

## ஏறுதழுவுதல்

தொல்காப்பியர் காட்டும் அகமாந்தர் கூற்றுச் சூழலில் ஏறுதழுவுதல் பற்றிய குறிப்பு இல்லை. சங்க அக இலக்கியத்தைப் பொறுத்தவரை கலித்தொகையில் மட்டும் ஆறு பாடல்கள் (101-106) ஏறு தழுவுதல் பற்றிய விரிவான செய்திகளை அளிக்கின்றன.

தோழி 'தலைவன் ஏறுதழுவி நம்மை வரைந்து கொள்வன்' என்று தலைவியை ஆற்றுவித்தல் (101), 'ஆயன் தலைவனாய் ஏறு தழுவினமை சுற்றத்தார் கண்டு கூறுதல் (102), தோழி ஆயர் ஏறு தழுவியதைக் காட்டி, ஏறுதழுவிவிட்டுக் குரவை ஆடுகின்றமையும் கூறித் தலைவியை அழைத்தல் (103), தோழி 'ஏறுதழுவிய வாற்றைத் தலைவிக்குக் காட்டி, இக்குரவையுள் அவனைப் பாடுகம் வா' என அழைத்துத் தமர் கொடை நேர்ந்ததைக் கூறுதல் (104) தலைவியின் நோக்கை அறிந்து பாண்டியன் நீடு வாழுமாறு தெய்வத்தைப் பரவுகம் வா எனல் (105), ஏறு கொண்டவாறு கண்டு ஆய்ச்சி தம் காதல் மிகுதியால் தம் காதலைக் கைப்பிணைத்து குரவையாடித் தென்னன் வாழ்க!' எனப் பாடுதல் (106) ஆகிய பொருண்மையில் முல்லைக்கலிப் பாடல்கள் வந்துள்ளன.

கொல் ஏற்றுக் கோடு அஞ்சுவானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்[161]

என்ற அடிகள் ஏறுதழுவுதல் வீரமிக்க செயலாகக் கருதப்பட்டமையைக் காட்டும்.

தொழுவினுள் புரிபு புரிபு புக்க பொதுவரைத்
தெரிபு தெரிபு குத்தின ஏறு
ஏற்றின் அரி பரிபு அறுப்பன, சுற்றி
எரிதிகழ் கணிச்சியோன் சூடிய பிறைக்கண்
உருவ மாலை போல
குருதிக் கோட்டொடு குடர் வலந்தன
கோட்டொடு சுற்றிக் குடர்வலந்த ஏற்றின் முன்
ஆடிநின்று, அக்குடர் வாங்குவான் பீடுகாண்
செந்நூற் கழி ஒருவன் கைப்பற்ற, அந்நூலை
முந்நூலாக் கொள்வானும் போன்ம்[162]

என ஏறுதழுவுவதை விரித்துக் காட்டும் முல்லைக்கலி. ஏறுதழுவிய பின் அம்மகிழ்ச்சி குரவையாடுதல் மூலம் எடுத்துக்கூறப்பட்டுக் கொண்டாடப்பட்டது. இதனைப்,

பாடுகம் வம்மின் பொதுவன் கொலை ஏற்றுக்
கோடு குறி செய்த மார்பு[163]

என்ற அடிகளால் அறியலாம். மேலும் ஏறுதழுவுதலில் ஆயனின் வீரமும் ஆய்ச்சியின் காதலும் இணைவதை,

ஆங்குபோர் ஏற்று அருந் தலைஅஞ்சலும் ஆய்ச்சியர்
காரிகைத் தோள் காமுறுதலும், இவ்இரண்டும்
ஓராங்குச் சேறல் இலவோ ?—எம்கேளே![164]

என்ற முல்லைக்கலிப்பாடல் காட்டும். ஏறுதழுவிய பொதுவனுக்குத் தமர்மகட்கொடை நேர்ந்ததை,

நேரிழாய்! கோள் அரிதாக நிறுத்த கொலை ஏற்றுக்
காரி கதன் அஞ்சான் பாய்ந்த பொதுவற்கே,
ஆர்வுற்று, எமர் கொடை நேர்ந்தார் அலர் எடுத்த
*ஊராரை உச்சி மிதித்து*[165]

என்ற கலிப்பாடலடிகளால் அறியலாம்.

பதினெண் கீழக்கணக்கில் உள்ள அகநூல்களில் ஏறுதழுவுதல் பற்றிய குறிப்பு இல்லை.

ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் (27), ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி (27), திருஏகம்பமுடையார் திருவந்தாதி (91), நம்மாழ்வார் திருவிருத்தம் (2600) ஆகியவற்றில் ''ஏறுகோள் கூறி வரைவு கடாதல் / ஏறு தழுவினோர்க்கு இவன் முரசு முழங்கிற்று எனல்' என்ற துறையிலமைந்த பாடல்கள் உள்ளன.

திருக்கோவையார் ''பகற்குறி''யுள் ஏறுகோள் கூறி வரைவு கடாதல் (136) என்ற துறையைச் சுட்டும். தஞ்சைவாணன் கோவையில் இத்துறை பற்றிய குறிப்பு இல்லை. அம்பிகாபதிக் கோவை ஏறு தழுவலுரைத்தல் (258) என்ற துறையை 'வரைதல் வேட்கை'யுள் குறிப்பிடுகின்றது.

கலித்தொகை காட்டிய ஏறுதழுவுதல் வளர்ச்சி பெற்றுக்கோவை நூல்களிலும் பக்தி இலக்கியங்களிலும் வரைவு கடாதல் அல்லது மகட்கொடை நேர்தல் என்ற பொருண்மையில் இடம் பெற்றது எனலாம். முல்லைக்கலியின் பாடற் பொருண்மையும் இத்துறையின் வளர்ச்சிக்கு அடித்தளமாகத் திகழ்ந்தது எனில் மிகையன்று.

## காமமிக்க கழிபடர் கிளவி

காமம் என்பது வேட்கை, மிகுதல் என்பது பெருகுதல்
கழி என்பது சிறத்தல், படர் என்பது நினைத்தல்

கிளவி என்பது சொல் - வேட்கை மிக்குச்
சிறப்பச் சிந்தித்துச் சொல்லும் சொல்[166]

என, 'காம மிக்க கழிபடர் கிளவி' என்ற தொடரை விளக்குவர் களவியலுரைகாரர் நக்கீரர்.

நோயும் இன்பமும் இருவகை நிலையிற்
காமம் கண்ணிய மரபிடை தெரிய
எட்டன் பகுதியும் விளங்க ஒட்டிய
உறுப்புடை யதுபோல் உணர்வுடை யதுபோல்
மறுத்துரைப் பதுபோல் நெஞ்சொடு புணர்த்துஞ்
சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச்
செய்யா மரபில் தொழிற்படுத் தடக்கியும்
அவரவர் உறுபிணி தமபோற் சார்த்தியும்
அறிவும் புலனும் வேறுபட நிறீஇ[167]

எனத் தலைவன் தலைவி ஆகிய இருவர் மாட்டும் காமப் பொருண்மை பற்றி நிகழும் கிளவி பற்றி விளக்கும் தொல்காப்பியம் இதனை,

அகவுணர்வுகளுள் சில பிறர்க்கு உணர்த்தத் தகாதனவாகவும் தக்கனவாயினும் நேர்முகமாகக் கூறப்படாதனவாகவும் உள்ளன. நாகரிக உணர்வும், மரபும் இவற்றை மக்கட்கு உணர்த்து-வதைத் தடைசெய்யும். ஆனால் இத்தகைய உணர்வுகளாலும் உணர்ச்சிகளாலும் உண்டாகும் சுமையை/உள்ளக் குமுறலைக் குறைத்துக் கொள்ளுவதற்கு ஒருவழி அவற்றை எவ்வாறேனும் வெளியிடுவதுதான். வெளியிடுவதில் ஏற்படும் ஒழுகலாற்றுச் சிக்கலை நீக்குவதற்காகப் புலவருலகம் படைத்துக் கொண்ட உத்திதான் உணர்வு வழுவமைதி (Pathetic Fallacy)[168]

என்பர் திறனாய்வாளர்.

இதன் பயனைக் 'கேட்போர் தலைமகனாயின் வரைவானாம்; தோழியாயின் வரைவு கடாவுவாளாம்; கேட்போரில்லையாயின் தானே சொல்லி ஆற்றுவாளாம்'[169] என விளக்குவர் நக்கீரர்' இவ்வாறு அமைந்த கூற்று ஒரு உணர்ச்சித் தணிப்பானாகப் (Emotional Safety Value) பயன்படுவதைக் காண்கிறோம்'[170] என உளவியல் வழி நோக்குவர் அறிஞர்.

யார் அணங்குற்றனை கடலே! பூழியர்
சிறுதலை வெள்ளைத் தோடு பரந்தன்ன
மீன்ஆர் குருகின் கானல்அம் பெருந்துறை
வெள்வீத் தாழை திரைஅலை
நள்ளென் கங்குலும் கேட்கும், நின் குரலே?[171]

என்ற தலைவி கூற்று தன் துயரைக் கடலுக்கு ஏற்றிக் காண்பதைக் காட்டும். தலைவி, கிளி, சேவல், நாரை, நண்டு போன்றவற்றை விளித்துப் பேசுவதாக நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு ஆகியவற்றில் பாடல்கள் உள்ளன.[172]

என்போலத் துஞ்சாய்; இதுசெய்தார் யார் உரையாய்!
என்போலும் துன்பம் நினக்கு?[173]

எனக் கடலை வினவுகின்றாள் நெய்தல் தலைவி.

கொடுந் தாள்அலவ! குறையாம் இரப்பேம்
ஒடுங்கா ஒலிகடற் சேர்ப்பன் நெடுந்தேர்
கடந்த பழியை எம்கண் ஆரக்காண
நடந்து சிதையாதி, நீ![174]

என அலவனைக் கெஞ்சுகின்றாள் தலைவி.

சிலப்பதிகாரத்தில் மாதவி பாடியனவாக ஆறு பாடல்கள் (32-36, 46) உள்ளன. அவை மாதவியின் உள்ள உணர்வுகளைக் காப்பியத் தலைவன் கோவலனிடம் புலப்படுத்துவனவாக உள்ளன; அதன் அடிப்படையில் எழும் ஊடல் காப்பிய வளர்ச்சிக்கு அடித்தளமாகின்றது.

சீவக சிந்தாமணியில் பதுமையார் இலம்பகத்தில் பதுமை, கிளி, பூவை, அன்னம், மயில், விளக்கு ஆகியவற்றை விளித்துப் பேசுவதாக ஐந்து பாடல்கள் (1363-1367) உள்ளன.

திருக்கோவையாரில் இரவுக்குறியுள் 'கடலிடை வைத்துத் துயர் அறிவித்தல்' (173) 'காமம் மிக்க கழிபடர் கிளவி' (174) என்பன போன்ற துறைகள் இடம் பெற்றுள்ளன. பிற கோவை நூல்களும் இத்துறையைப் பிரிவு பற்றிய சூழலில் வடித்துக் காட்டுகின்றன.

சம்பந்தர் தேவாரத்தில் பிரிவாற்றாமையால் பசலை நோயுற்று வாடும் தலைவி, வண்டு, குருகு, கோழி, நாரை, மாடப்புறா, அன்னம், அன்றில், குயில், பூவை ஆகியவற்றை நோக்கிப் பேசுவதாகப் பாடல்கள் (1-60; 1-10) உள்ளன. அவை நாயகி நிலையில் நின்று பாடும் சம்பந்தரின் ஆன்மா, பரமான்மாவை அடையத் துடிக்கும் விழைவைக் காட்டும்.

நம்மாழ்வார் திருவிருத்தத்தில் தலைவி கடலோசைக்கு ஆற்றா திரங்குவதாகவும் *(3630)* மாலைப்பொழுது கண்டு வருந்துவ தாகவும் *(3656, 3659, 3664)* பாடல்கள் உள்ளன.

திங்களம் பிள்ளை புலம்பத்தன் செங்கோல் அரசுபட்ட
செங்களம் பற்றிநின் றெள்குபுன் மாலை தென்
பாலிலங்கை
வெங்களம் செய்தநம் விண்ணோர் பிரானார் துழாய்
துணையா
*நங்களை மாமைகொள் வான் வந்து தோன்றி*
*நலிகின்றதே*[175]

மாணிக்கங் கொண்டு குரங்கெறி வொத்திரு ளோடுமுட்டி
ஆணிப்பொன் அன்ன சுடர்படு மாலை உலகளந்த
மாணிக்கமே! என் மரகத மே! *மற்றொப் பாரையில்லா*
*ஆணிப்பொன் னே! அடி யேன்அடிஆவி யடைக்கலமே*[176]

இவை நம்மாழ்வார் நாயகியின் உள்ளப்போக்கை-கண்ணனுடன் இணையத் துடிக்கும் ஆன்மா-பரமான்மா உறவுநிலையைப் புலப் படுத்தும்.

காமம் மிக்க கழிபடர் கிளவிக்குரிய பாடல்கள் காப்பியம், பக்தி இலக்கியம் போன்றவற்றில் காணப்படுவதைப் போன்று சில சிற்றிலக்கிய வகைகளிலும் காணப்படுகின்றன.

நந்திக் கலம்பகம் *(8, 9, 59, 72, 73, 88)*, திருவரங்கக் கலம்பகம் *(35, 48)*, மதுரைக் கலம்பகம் *(53, 61, 74, 80)* தணிகைக் கலம்பகம் *(43)*, கச்சிக் கலம்பகம் *(20)* போன்றவற்றில் மேகம், புள் போன்ற வற்றிடம் கூறுவதாகத் தலைவன் தலைவி ஆகிய இருவர் கூற்றிலும் அமைந்த பாடல்கள் உள்ளன.

செம்பொன ரங்கத்த ரங்கநீர்ச்
சீதள சந்திர வாவிசூழ்
கம்புளு டன்பயில் நாரைகாள் !
காதலை என்சொலி ஆறுவேன் !
வெம்பனி வந்தது; வந்தபின்
வேனிலும் வந்தது; வேனில்போய்ப்
பைம்புயல் வந்தது; சென்ற நம்
*பாதகர் வந்திலர் காணுமே !*[177]

இப்பாடல் தலைவியின் ஆற்றாமையை வெளிப்படுத்தும். **தணிகைக் கலம்பகம்** 'கழிக்கரைப் புலம்பல்' என இத்துறையைப் பெயரிட்டுள்ளது.

மூக்கூடற் பள்ளில் தலைவி, படகையும் சங்கையும் விளித்துப் பேசுவதாக அமைந்த பாடல் ஒன்று :

கங்கமே யூரும் கடவுள்முக் கூடலிலே
தங்கமே தேடத் தணந்தார் மணந்திலரே
வங்கமே அங்கமணல் வங்கமே யானேன்வென்
சங்கமே செங்கைதனில் தாங் கேனே[178]

கருடனை ஊர்தியாக உடைய திருமாலின் முக்கூடலில் பொருள் தேடச் சென்றவர் வந்து என்னைச் சேர்ந்திலர்; மரக்கலங்களே! என் உடலுறுப்புக்கள் அனலில் இட்ட ஈயம் போல் ஆயின; சங்குகளே! என் உடல் மெலிந்து சங்கு வளையல் கைகளில் தங்க இயலாவாயின' எனத் தன் மெலிவினைக் கூறுகின்றாள் தலைவி. இந்நூலில் அன்றிலிடம் பேசுவதாகவும் ஒரு பாடல் (47) உள்ளது.

அனிச்ச அடி நாடகத்தில் தலைமகள் பொழுது கண்டழிந்ததாக மூன்று பாடல்கள் (அங்கம் 1, களம் 2) உள்ளன.

அல்லிமலர் இதழ்விரிய
அரும்பவிழ்ந்து கொடியாட
அடியில் லாத
நெல்லரியும் அரிவாள் போல்
நிலவின்கீற் றெழுந்தாட
நிரல்ப டாத
பல்லியத்தின் முழக்கமெனப்
பறவையினம் முரசுசெயப்
பகலும் மாய
எல்மறையும் மறைவதனால்
எவனெஞ்சே நீமயங்கி
இருக்கு மாறே[179]

எனத் தலைவி நெஞ்சோடு புலம்புகின்றாள். சி. என். அண்ணாதுரையைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட அண்ணா கோவையில் இத்துறையிலமைந்த பாடல் கீழ்க்காணுமாறு :

தம்பியர்க் கண்ணாத் தமிழ்மேல் தணியாத தாகம்போல்
எம்பிரான் மீதெனக் கேற்படும் வேட்கையை
ஏற்குமாறென்

நம்பியர்க் கெவ்வணம் நானுரை செய்வதோ
நாணமென்னும்
அம்பரம் நீந்திட வோர்புனை கூறுவா யஞ்சுகமே[180]

இங்ஙணம் அகப்பொருள் அல்லாத பிற இலக்கிய வகைகளுள்ளும் காமம் மிக்க கழிபடர் கிளவி என்ற துறை பயின்று வந்துள்ளது; இத்துறை பக்தி இலக்கியத்துள் அகமரபினின்று மாறியும் திரிந்தும் சிற்றிலக்கிய வகைகளுள் (கோவை, கலம்பகம், பள்ளு) அக மரபை ஒட்டியும் அமைந்துள்ளது.

இத்துறையை அகப்பொருள் இலக்கிய மரபு தலைவன் தலைவியரிடையே உள்ள அன்பை வெளிப்படுத்தப் பயன்படுத்தியது; காப்பியம் காப்பியத் தலைவன் தலைவி ஆகியோரிடையே நிகழும் பிரிவுத்துயரைக் காட்டவும், பக்தி இலக்கியம் இறைவனுக்கும் அடியாருக்கும் உள்ள உறவைப் புலப்படுத்துவதற்கும் பயன்படுத்திக் கொண்டன; சிற்றிலக்கியங்கள் கைக்கிளைப் பொருண்மையில் பாட்டுடைத் தலைவர்களின் பெருமையை விளக்கும் வகையில் அமைத்துக் கொண்டன.

துறை மரபு தொடர்ந்து வரினும் பாடும் முறையாலும் நோக்கத்தாலும் அம்மரபினின்றும் இவை விலகி நிற்கின்றன.

## தூது

காமக் கூட்டந் தனிமையிற் பொலிதலின்
தாமே தூதுவ ராகலும் உரித்தே[181]

என்பர் தொல்காப்பியர். காமக்கூட்டம் நிகழ்ந்தபின் தூது இன்றியமையாததாகின்றது. அனுப்பப்படும் தூது உயர்திணைக்குரியதாகவும் இருக்கலாம்: அஃறிணைக்குரியதாகவும் இருக்கலாம்.

பிரபந்தத் திரட்டு தூதுக்குரிய பொருள்களாகப் பத்தைச் சுட்டும். (182) அவை : எகினம், மயில், கிள்ளை, எழிலி, பூவை, சகி, குயில், நெஞ்சம், தென்றல், வண்டு. சங்கத் தலைவி தூதுரைக்க நண்டைத் தேர்ந்தெடுக்கின்றாள்.

கானலும் கழறாது; கழியும் கூறாது
தேனிமிர் நறுமலர்ப் புன்னையும் மொழியாது
ஒருநின் அல்லது பிறிது யாதும் இலனே;
இருங்கழி மலர்ந்த கண்போல் நெய்தல்

கமழ் இதழ்நாற்றம் அமிழ்தென நசைஇ
தண் தாது ஊதிய வண்டினம் களிசிறந்து
பறைஇ தளரும் துறைவனை நீயே
சொல்லல் வேண்டுமால் அலவ[188]

என அலவனைத் தலைவனிடம் தூதுரைக்க வேண்டுகிறாள் நெய்தல் தலைவி.

திணை மாலை நூற்றைம்பதிலும் (115) ஐந்திணை ஐம்பதிலும் (22) இத்துறைக்குரிய பாடல்கள் உள்ளன.

செங்கால் மட நாராய்! தென்னுறந்தை சேரியேல்
நின்கால்மேல் வைப்பன்என் கையிரண்டும் - நன்பால்
கரைஉரிஞ்சி மீன்பிறழும் காவிரிநீர் நாடற்
குரையாயோ யானுற்ற நோய்[184]

என நாரையைச் சோழனிடம் தூது விடுகின்றாள் முத்தொள்ளா யிரத் தலைவி.

என்னை உரையல்என் பேருரையல் ஊருரையல்
அன்னையும் இன்னள் எனவுரையல் - பின்னையுந்
தண்படா யானைத் தமிழ்நர் பெருமாற்கென்
கண்படா வாறே யுரை[185]

எனப் பாண்டியனைக் கண்ட தலைவி தூதனுப்புகின்றாள்: மேலும் முத்தொள்ளாயிரத்தில் தலைவி தூது விடுவதாகப் பல பாடல்கள் உள்ளன.[186] எனினும் அவை அகப்புறக் கைக்கிளையில் அடங்குவன; காமத்திணைக்கு உரியனவல்ல.

சம்பந்தர் தேவாரத்தில் பிரிவாற்றாத தலைவி அன்றில் முதலிய வற்றைத் தலைவனிடம் தூது விடுப்பதாக ஒரு பதிகம் (3-63:1-10) உள்ளது. நாயகி நிலையிலிருக்கும் அடியார் இறைவனிடம் தூது விடுவதாக அமைவதால் இது அகப்பொருள் மரபினின்றும் விலகியது.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் பெரிய திருமொழி (2077, 2078), திருவாய்மொழி (2115-2125; 2634-44; 2711-2721; 2 30-3040) ஆகியவற்றில் தூதுக்குரிய பாடல்கள் உள்ளன. அவற்றுள் சில அடிகள் :

நீயலையே? சிறுபூவாய்! நெடுமாலார்க் கென்தூ தாய்
நோயெனது நுவலென்ன, நுவலாதே திருந்தொழிந்
தாய்[187]

தூதுரைத்தல் செப்புமின்கள் - தூ மொழிவாய்
வண்டினங்காள்!
தூதுரைத்தல் செப்புதிரேல், சுடர்வளையும்
கலையுமே[188]

ஆமருவி நிரைமேய்த்த அமரர் கோமான்
அணியழுந்தூர் நின்றானுக் கின்றே சென்று
நீ மருவி, யஞ்சாதே 'நின்று ஓர் மாது
நின்நயந்தாள்' என்றிறையே இயம்பிக் காணே[189]

இவை இறைவனுக்கும் அடியவனுக்கும் இடையே நிலவும் உறவை விளக்குவன; இறைவனின் பெருமைகளைப் பறை சாற்றுவன.

திருவாய்மொழியில் செம்போத்து (1942), காக்கைப் பிள்ளை (1943), குயில் (1944), பல்லிக்குட்டி (1945), கிளி (1946), கோழி (1947) ஆகியவற்றை விளித்து மாயனை அழைக்கும்படி வேண்டுவதாகச் சில பாடல்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று,

கரையாய், காக்கைப் பிள்ளாய்!
கரு மாமுகில் போல் நிறத்தன்
உரையார் தொல்புகழ் உத்தம னைவர
கரையாய், காக்கைப் பிள்ளையாய்[190]

இத்தன்மைத்தான பாடலைத் தூதின் திரிபு எனக் கொள்ளலாம்.

திருக்கழுமல மும்மணிக்கோவை (23), பழமலையந்தாதி (73), கல்வளை யந்தாதி (41) போன்றவற்றில் தூதுக்குரிய பாடல்கள் பல உள்ளன.

சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றான கலம்பகத்தின் ஓர் உறுப்பு தூது ஆகும். நந்திக்கலம்பகம், மதுரைக் கலம்பகம், அம்பலவாணர் தேசிகர் கலம்பகம், தணிகைக் கலம்பகம், திருவரங்கக் கலம்பகம், கச்சிக் கலம்பகம் ஆகியவற்றுள் மேக விடுதூது, நாரை விடுதூது, வண்டு விடுதூது, கார் விடுதூது முதலானவை இடம் பெற்றுள்ளன.[191] காட்டாகக் கச்சிக் கலம்பகப் பாடல்கள் சில :

என்னெஞ் சினுமினியார் இல்லையென எண்ணியதைத்
துன்னற் கருங்கச்சித் தூயவர்பால் இன்னலறப்
பூங்கொன்றைத் தாரிரக்கப் போதியென விடுத்தேன்
தீங்கொன்றைச் சூழ்ந்திலா தேன்[192]

கடுக்கைத் தொடை நயந்தேன் காதலுடை யார்யான்
நடுக்கை யுறுமா நயந்தோர் - கொடுக்கைக்குச்

செல்லே! சிறந்தாய் திருக்கச்சி வாணர்பால்
வல்லே தொடை யிரந்து வா[193]

இவை தலைவி மேகத்தையும் நெஞ்சையும் மாலை கேட்டுக்கச்சியானிடம் அனுப்புவதை நுவலும். அவன் மார்பின்கண் பொலிந்து காணப்படும் கொன்றை மாலை வேண்டும் என்கிறாள் தலைவி[194]

முக்கூடற்பள்ளு, தலைவி அன்றில் குலத்தைத் தூதுவிடுவதாகக் (48) காட்டும். திருக்குற்றாலக் குறவஞ்சி,

தூது நீ சொல்லி வாராய் பெண்ணே குற்றாலர்
முன்போய்த்
தூதுநீ சொல்லி வாராய்...
வந்தால் இந் நேரம்வரச் சொல்லு வரா திருந்தால்
மாலையா கிலுந்தரச் சொல்லு குற்றாலநாதர்
தந்தாலென் நெஞ்சைதரச் சொல்லு தரா திருந்தால்
தான்பெண் ணாகிய பெண்ணை நான்விடேன் என்று
சொல்லு[195]

என வசந்தவல்லி பாங்கியைத் திருக்குற்றாலநாதர் முன் தூதனுப்புவதைக் காட்டும்.

செந்திக் குமரன் திருவழகைக் கண்டவுடன்
வந்திக்கு மாரன் வதைக்கின்றான் - அந்திக்கு
முன்னமே சென்றென்றன் மோகமெல்லாஞ் சொல்லி
வந்தால்
அன்னமே கும்பிடுவேன் யான்[196]

என்ற பாடல் தனிப்பாடல் திரட்டில் காணப்படுகின்றது. இந் நூலுள் தோழி நாரை, அன்னம், வண்டு, குயில், கிளி ஆகியவற்றைத் தூது விடுப்பதாக அமைந்த பாடல்கள் பல உள்ளன.[197]

வெள்ளக்கால் சுப்பிரமணியரின் தனிக்கவித்திரட்டு என்ற நூலுள் தலைவி தலைவனிடம் தூதுரைக்க வேண்டி, தோழியை விடுப்பதாக ஒருபாடல் (112) உள்ளது.

தொல்காப்பியத்தில் அகத்திணை புறத்திணை ஆகிய இரண்டிலும் தூது பற்றிய குறிப்பு உள்ளது; அதாவது அது அகம் புறம் ஆகிய இரண்டுக்கும் உரியது. சங்க அக இலக்கியங்களிலும் சங்கம் மருவிய கால அக நூல்களிலும் புறநானூற்றிலும் தூதுப் பொருண்மையில் அன்பைப் புலப்படுத்தவும், புறத்தூது இரு அரசர்களுக்கிடையே பகைமையைக் குறைக்கவும் அல்லது சந்து செய்விக்கவும், செய்திகளை உணர்த்தவும் புலனெறிப் படுத்தப்பட்டுள்ளன.

காலப் போக்கில் புறத்தூதை விட அகத்தூது செல்வாக்குப் பெற்றது; செழித்து வளர்ந்தது. காப்பியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம் போன்றவை அதற்குரிய நிலங்களாயின: நாளடைவில் அகமரபினின்றும் தோன்றிய அத்துறை சில மாற்றங்களைப் பெற்றுத் தனி ஓர் இலக்கிய வகையாகவே முகிழ்க்கும் நிலையை அடைந்தது.

இலக்கியப் புலவர்களின் உள்ளங்கவர்ந்த அகக்கூறுகளுள் தூதும் ஒன்று. சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சுவிடுதூது அந்நோக்கத்தின் திரிபுக்குச் சான்றாகும்.

> பாலை யுணர்த்திப் பசியாறுஞ் செங்கழுநீர்
> மாலை கொடு விரைந்து வா[198]

இதனை அகத்தூதின் மருஉ எனல் தகும்.

விறலி விடுதூது கணவன், மனைவியின் ஊடல் தீர்க்க விறலியை அவளிடம் தூதனுப்புவதாகக் காட்டும்.

> உள்ளம் விடுதூது, காக்கை விடுதூது ஆகியவை
> மனைவி வேலை காரணமாகப் பிரிந்து வெளியூரில்
> தங்கியிருக்கும் கணவனிடம் தூது அனுப்புதல் என்ற
> அடிப்படையில் எழுந்தவை[199]

என்பர் தமிழில் தூது இலக்கியங்கள் பற்றி ஆய்ந்த ஈஸ்வர பிள்ளை. இது காலத்தின் தேவைக்கேற்ப அரும்பிய மரபு மாற்றமும் திரிபு மாகும்.

> தமிழ்த்தூது நூற்களில் காட்டப்படுமளவுக்குப் பிற
> மொழித் தூது நூற்களில் தூது அனுப்புவோரின்
> விரகத்துயர் காட்டப்படுதல் இல்லை[200]

என்பது தமிழ், மலையாளம், சமஸ்கிருதம் ஆகிய மூன்று மொழி நூல்களையும் ஒப்பிட்டுக் கண்ட ஆய்வாளரின் கூற்றாகும். வளமான அக இலக்கியப் பின்புலம் தமிழில் தலைமரபாக அமைந்த மையே இதற்குரிய காரணமாகக் கருதலாம்.

## மாலை வேண்டல்

தூது நூல்களுள் சில இறைவனின் மாலை வேண்டுதலை நோக்க மாகக் கொண்டு எழுந்தவை என்பதற்கு எடுத்துக்காட்டாகச் சுப்பிர மணிய தேசிகர் நெஞ்சு விடுதூதை முன்பு கண்டோம்.

மாலை வாங்கி வா என்று வேண்டுதல் தூது என்ற
இலக்கணத்தைக் கடந்து வளர்ச்சியுற்ற நிலையைத்
தமிழ்நூ ற்களில் காணலாம்[201]

எனத் தூதின் வளர்நிலையாக இதனைக் காட்டுவர்.

சங்க அக நூல்களில் கையுறை பெறுதல் பற்றிய துறை உள்ளது. கையுறை என்பது தலைவனிடமிருந்து தலைவி பெறும் கண்ணியும் தழையும் ஆகும். அது அன்பின் அடையாளமாகக் கருதப்பட்டது. சங்கம் மருவிய காலத்து நூல்களும் கையுறை பற்றிய குறிப்புகளைக் கொண்டுள்ளன. இது பற்றி முன்பு கூறப்பட்டது. எனவே ஈண்டு மாலை பெறும் குறிப்பிலிருந்து காணலாம்.

பன்மாடக் கூடல் மதுரை நெடுந் தெருவில்
என்னோடு நின்றார் இருவர் அவருள்ளும்
பொன்னாடை நன்றென்றாள் நல்லளே பொன்னாடைக்
கியானைநன் றென்றாளும் அந்நிலையள் யானை
எருத்தத் திருந்த இலங்கிலைவேல் தென்னன்
திருத்தார்நன் றென்றேன் தீயேன்[202]

என முத்தொள்ளாயிரத் தலைவி தென்னனின் மாலை விரும்பிப் புணரா இரக்கத்தால் தான் படும்பாட்டைத் 'தீயேன்' என்ற சொல்லால் உணர்த்துகின்றாள். மாலையை விரும்பியவள் என்பதால் மன்னனிடம் கொண்ட காதல் வெளிப்பட்டு விடுகின்றது. இக்கருத்து பெண்பாற் கைக்கிளையில் அமைந்த முத்தொள்ளாயிரப் பாடலில் முதன்முதலில் அரும்பியுள்ளது.

பக்தி இலக்கியத்தில் தலைவி நிலையில் நிற்கும் அடியார்கள் சைவராயின் கொன்றை மாலையையும், வைணவராயின் திருத்துழாய் மாலையையும் விரும்புவதாகப் பாடல்கள் உள்ளன.

சித்தந் தேறுஞ் செறிவளை சிக்கெனும்
பச்சை திருமென் பைங்கொடி பால்மதி
வைத்த மாமயி லாடு துறையரன்
கொத்தி னிற்பொலி கொன்றை கொடுக்கிலே[203]

என்பது நாவுக்கரச நாயகியின் விருப்பம்.

'ஊரார் உகக்கும்படி ஆயினேன் வாராய் / மட நெஞ்சே! வந்து மணிவண்ணனது திருத்துழாம் மாலை நமக்கருளச் செய்வாய்'[204] என வேண்டுகின்றாள் திருமங்கை 'நாயகி'

ஓரானைக் கொம்பொசித் தோரானை கோள்விடுத்த
சீரானை செங்கண் நெடியானைத் தேன் துழாய்த்

தாரானை தாமரை போல் கண்ணானை -
எண்ணருஞ்சீர்ப்
பேரா யிரமும் பிதற்றி - பெருந்தெருவே
ஊரார் இகழினும் ஊரா தொழியேன்நான்
வாரார் பூம் பெண்ணை மடல்[205]

என்பது மாலை வேண்டும் மடல் ''நாயகி''யின் துணிபு.

நம்மாழ்வார் பாடிய 'தலைவி தார் பெற்று மகிழ்தல்' என்ற துறையில் உள்ள பாடல் கண்ணனின் தண்ணந் துழாய் பெற்றுப் புனைந்து கொண்ட தலைவிக்கு வாடை தண்ணென்று இருப்பதாகக் காட்டும்'.[206]

நீலார் தண்ணந் துழாய் கொண்டென்
நெறிமென் குழல்மேல் சூட்டீரே[207]

என ஆண்டாள் பாடுவதும் பக்தி மார்க்கம் என்ற அடிப்படையில் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

மாலை பெறாத தலைவி படும்பாட்டைக் கோயில் நான்மணி மாலை தோழி கூற்றில் காட்டும்.

கோதையந் தாமத்தன் கொன்றை
கொடான் இன்று கொல்ல எண்ணி
ஊதையும் காரும் துளி யொடும்
கூடி உலாவி யவே[208]

எனக் கார்ப்பருவம் கண்ட தோழி தலைவி நிலை குறித்துக் கவலு கின்றாள். மேலும் இந்நூலுள் கொன்றை மாலை விரும்பும் தலைவிக்குத் தோழி கூறுவதாகப் பாடல்கள் (18, 19, 22) உள்ளன. பொன் வண்ணத்தந்தாதியில் செவிலி கூற்றில் தலைவி மாலை விழைவதைக் காட்டும் பாடல் (16) உள்ளது. பழமலையந்தாதியில் 'மாலை விருப்புரைத்தல்' என்ற துறையிலமைந்த பாடல் (74) உள்ளது. கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதியில் மகள் மாலை விரும்புவதை நற்றாய் புலப்படுத்துவதாகப் பாடல் (27) உள்ளது. ஆளுடை பிள்ளையார் திருவந்தாதி அறத்தொடு நிற்கும் தோழியின் கூற்றில் (57) இப்பொருண்மையைச் சுட்டுகின்றது.

தந்திவனப் புராணம் சிவனின் பொருள்கள் பலவற்றைக் காட்டி மலைமகளின் விரகத்தைத் தீர்ப்பதாகக் கூறும்.

ஏற்றிணை ஏனவெள் எயிற்றை மானினைத்
தோற்றிய கொன்றையும் தொடையைக் காட்டியும்

போற்றிய பாங்கியர் பொருப்பின் வஞ்சியை
ஆற்றின விரகமுற்று அழுங்கு றாமலே[209]

இப்பாடல் பிரிவின் துயரைக் களையும் தன்மைத்தாக மாலை கருதப் பட்டது என்பதைக் காட்டும். அதாவது தலைவனிடம் உள்ள பொருள்கள் தலைவிக்கு இன்பம் அளிக்கவல்லனவாம்.

நந்திக் கலம்பகத்தில் பெண்கள் நந்தியின் தொண்டையந்தாரை விரும்புவதாகப் பல பாடல்கள் உள்ளன.[210]

கற்கொள் வார்மதிற் நச்சி நந்தி
நலங்கொள் அன்னவன் அலங்கல்மேல்
ஒற்கம் என்மகள் உரைசெய் தோவுல(கு)
அளிப்பன் இத்திறன் உரைத்தியே[211]

எனத் தாய் தன் மகளின் தளர்ச்சிக்குக் காரணம் கூறுகின்றாள். அடியார் இறைவனின் மாலையை விரும்புவது போல, கலம்பகத் தலைவி மன்னனின் மாலையை வேண்டி நிற்கின்றாள்.

தூது நூல்கள் மட்டுமின்றிக் குறவஞ்சி நூல்கள் சிலவும் மாலை பெறுதல் என்பதோடு நிறைவு பெறுகின்றன. இதற்குத் திருமலை யாண்டவர் குறவஞ்சி சான்றாகும்.

தெருள்பெறு தோழி வந்து
திருமலைக் கந்த நாதன்
அருளிய கடப்ப மாலை
அன்பினாற் கொண்டு வந்து
மருமலர்க் குடில்சேர் காம
வல்லிகைக் கொடுப்ப வாங்கிப்
பெருமயல்தீரப் பூண்டு
பேரின்ப மேபெற் றாளே[212]

இப்பாடல் மாலையைப் பெற்ற தலைவி பேரின்பம் அடைந்ததாகக் காட்டுகிறது.

சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றான உலாவும் ஏழு பருவ மகளிரின் நிலையைக் காட்டும்போது மாலை வேண்டல் என்ற பொருண்மையைக் குறிப்பாகக் காட்டும்.

பொன்னித் துறைவன் பொலந்தார் பெறத்தகுவார்
தன்னிற் பிறரின்மை சாதித்தாள்[213]

என அரிவைப் பெண்ணின் பிடிவாதத்தைக் கூறும் விக்கிரம சோழனுலா.

இப்பொருண்மையைப் புறப்பொருள் **வெண்பாமாலை,**

தண்டாக் காதற் றளரிய தலைவன்
வண்டார் விரும்பிய வகையுரைத் தன்று[214]

என இலக்கணப் படுத்திக் காட்டும். இது பாடாண் படலத்துள் உள்ள கைக்கிளைக்கு இலக்கணமாகும்.

'தில்லையில் திருவீற்றிருக்கும் திருமலைக்கு முன்புபோய் மாலை கேளுங்கள்; அவன் மறுத்தால் கடல், படுக்கை, அந்திப்பொழுது, புல்லாங்குழல், மதியம், இரவு, மாரன், வாடை, ஆரம், அன்றில் ஆகிய பத்தும் என்னை வருத்துகின்றன எனச் சொல்லுங்கள்.

வாரி ஒன்று பாயிரண்டு மாலைமூன்று நாலுவேய்
மதியமைந்து கங்குலாறு மாரனேழு வாடையெட்
டார மொன்ப தன்றில்பத் தடங்கலும் ஒறுக்குமால்
அத்தனைக்கெ லாம்இலக்கே னாவியொன்று
காணுமே[215]

எனப் பட்டியலிட்டுக் காட்டுகின்றாள் தலைவி.

சிற்றரசர்கள், பாளையப்பட்டுக்காரர்கள் காலத்துத் தோன்றிய தனிப்பாடல்கள் சில இத்துறையிலமைந்துள்ளன.

அகப்பொருளில் தலைவன் தலைவியை அடைய விரும்புகின்றான்; கையுறை கொடுக்கின்றான்; அன்பின் அடையாளமாக அதனை மகிழ்வுடன் பெற்றுக் கொள்கின்றாள் தலைவி; ஒத்த காமம்; சமமான ஈர்ப்பு விசை. பக்தி இலக்கியத்தில் பக்தன் இறைவனைச் சேர எண்ணுகின்றான்; எனவே இறைவனிடமிருந்து மாலையைப் பெற விழைகின்றான். கடவுள் மாட்டு மானுடராகிய அடியார்கள் நயப்பதால் இது ஒருதலை அன்பாகின்றது.

இறைவனிடம் உள்ள பொருள்களை நாயகி நிலையில் நிற்கும் அடியார்கள் பெற விழைகின்றனர்; அதன்வழி இன்பமெய்துகின்றனர்.

அகப்பொருள் தலைவன், அன்புச் சின்னமாக பூவைக் கொடுத்துக் காதலை புலப்படுத்துகின்றான்; அதாவது தலைவன் தலைவிக்கு விரும்பிக் கையுறை கொடுக்கின்றான். ஆனால் அகப்பொருள் தவிர்ந்த ஏனைய இலக்கியங்களில் காமமுற்ற தலைவியால் நாயகி நிலையில் நிற்கும் அடியாரால் மாலை விரும்பி வேண்டப்படுகின்றது.

**கூடலிழைத்தல்**

தொல்காப்பியத்தில் அகமாந்தர் கூற்று நிகழிடங்களில் கூடலிழைத்தல் பற்றிய செய்தி இல்லை. சங்க அக இலக்கியத்தில் கலித்தொகையில் ஒரு பாடல் (142:24-28) உள்ளது.

கோடுவாய் கூடாப்பிறையை, பிறிது ஒன்று
நாடுவேன், கண்டெனன்; சிற்றிலுள்கண்டு, ஆங்கே
ஆடையான் மூஉய் அகப்படுப்பேன்; சூடிய
காணான், திரிதரும் கொல்லோ - மணிமிடற்று
மாண்மலர்க் கொன்றை யவன்?

இப்பாடல் கூடலிழைத்துத் தலைவனைக் கூடுவேனோ என்று ஆராய்கின்ற தலைவியின் உள்ளத்தைப் புலப்படுத்துகின்றது. கூடலிழைத்த தலைவி அது கூடாது இளம்பிறையாய் நிற்றலைக் கண்டு அது விண்ணில் சென்று நிறைமதியாய்த் தன்னை வருத்துமென நினைந்து துகிலால் மூடுகின்றாள்; அவ்வாறு செய்தால் சிவன் தலையில் சூடிக்கொள்ளத் தேடுவானோ என ஐயுறுகின்றாள். இப்பாடல்களுக்கு ஆராய்ச்சிக் குறிப்பு எழுதிய அனந்தராமையர் கூடலிழைத்தல் என்றால் என்ன என்பதைப் பின்வருமாறு விளக்குவர்.

> பெரிதாக ஒரு வட்டங்கீறி அதற்குள்ளே சிறு சுழிகளைக் கணக்கிடாது சுற்றுஞ்சுழித்து அவற்றை இவ்விரண்டு சுழியாகக் கூட்டி இறுதியில் ஒன்று எஞ்சாது கூடுகின்றனவா என்று பார்த்தல். அச்சுழிகளுள் ஒன்று எஞ்சாது கூடுமாயின் தலைவன் விரைவில் வந்து கூடுவனென்றும், ஒன்று எஞ்சிக் கூடாதாயின் அவன் விரைவில் வந்து கூடானென்றும், கோடல் மரபு; தலைவன் வரவை அறிதற்கு அவனைப் பிரிந்த தலைவி இதனைச் செய்வதாகக் கூறல் பண்டை வழக்கென்பர்.
> ...இவ்வாறன்றிக் கண்ணை மூடிக்கொண்டு நிலத்தில் வட்டமாக ஒரு கோட்டைக் கீறிப் பின்பு கண் திறந்து பார்த்து, அக்கோடு தொடங்கிய இடத்தில் தவறாமல் வந்து சேர்ந்திருப்பின் தலைவனும் தவறாமல் வந்து சேருவானென்றும் அது வந்து சேராமல் விலகியிருப்பின்

தலைவனும் வந்து சேராது விலகியிருப்பானென்றும்
கொள்ளுதல் மரபென்பாரும் உளர்.[216]

மேலும் அவர் கூடலிழைத்தல் பயின்று வரும் இலக்கியங்களாக **ஐந்திணை ஐம்பது, (அப்பர்) தேவாரம், நான்முகத் திருவந்தாதி, திருவிருத்தம், சீவக சிந்தாமணி, கம்பராமாயணம்** என்பன போன்றவற்றை எடுத்துக்காட்டியுள்ளார்.

கடற் பெருமானைக் கூட லார் கோமானைக்
கூடப் பெறுவேனேல் கூடென்று—கூடல்
இழைப்பாள் போற் காட்டி யிழையா திருக்கும்
பிழைப்பிற் பிழைபாக் கறிந்து[217]

என முத்தொள்ளாயிரப் பாடல் கூடலிழைத்தலைக் காட்டுகின்றது. கைக்கிளைப் பொருண்மையில் அமைந்த இப்பாடல் 'கூடலிழைக்குந் தலைவியின் நிலையை மறைவில் நின்று கண்ட தோழி தன் நெஞ்சோடு கூறியது' எனும் துறையில் பயின்று வருகின்றது.

நாச்சியார் திருமொழியில் (534-544) ஆண்டாள், 'திருவேங்கடத்திலும் திருக்கண்ணபுரத்திலும் உறையும் இறைவன் ஓடிவந்து என் கையைப் பற்றித் தன்னுடன் அணைத்துக்கொள்வான் எனில் கூடலே கூடுவாய்' என்கின்றாள்.

**கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி** (90), **ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி** (87), **பழமலை அந்தாதி** (85) ஆகிய அந்தாதி நூல்களிலும் கூடலிழைத்தல் துறையில் பாடல்கள் உள்ளன. மதுரைக் கலம்பகத்திலும் (21) இத்துறை உள்ளது.

கோவை நூல்களைப் பொறுத்த வரையில் **திருக்கோவையார்** ஒருவழித் தணத்தலில் கூடல் இழைத்தலைக் (186) காட்டுகின்றது. **தஞ்சைவாணன் கோவை, அம்பிகாபதிக் கோவை** ஆகிய இரண்டிலும் இத்துறை இல்லை.

கலிங்கத்துப்பரணியில் 'கடைதிறப்பு'ப் பகுதியில் ஒரு பாடல் (51) கூடல் இழைத்தல் பற்றிய செய்தியைப் புலப்படுத்துவதையும் கலித்தொகைப் பாடலுக்கு (142) அனந்தராமையர் எழுதிய ஆராய்ச்சிக் குறிப்புவழி அறிகின்றோம்.

குஞ்சரமுதற் பூசித்த நாயகர் குறுமுனி
தமிழ்நேசித்த நாயகர்
குறும்ப லாவினிற் கூடுவ ராமெனிற்
கூடலேநீ கூடாய்[218]

எனக் குற்றாலநாதரைக் கூட வேண்டி வசந்தவல்லி கூடலிழைப் பதைத் **திருக்குற்றாலக்** குறவஞ்சி காட்டும். கூடலிழைத்தல் பற்றிய குறிப்பு 'குறியறி சிந்து' என்ற இலக்கியத்துள் இடம் பெற்றுள்ள மையைப் பிரபந்தத் திரட்டு (18) குறிப்பிடுகின்றது.

'கூடலிழைத்தல்' துறையை ஆய்வு செய்த இ. சுந்தரமூர்த்தி சங்க அக இலக்கியங்களில் காதலர் வரவைக் கோடிட்டுக் கணக்குப் பார்க்கும் குறிப்புக்களை* எடுத்துக்காட்டி அத்துறைக்கான தோற் றத்தைப் பின்வருமாறு எண்ணுகின்றார்.

> சுவரில் வட்டங்கீறி எண்ணிப் பார்த்த இவ்வழக்கமே பிற்காலத்தில் தலைவனைப் பிரிந்த தலைவி அவன் வருங்கையினை அறிவதற்குப் பார்த்த நிமித்தக் குறியாக-ஆழியிழைத்தலாக-கூடலிழைத்தலாக-மாறியிருக்குமோ என்ற எண்ணமும் எழுகிறது.[219]

மற்றும் கலித்தொகைப் பாடல் 142-ல் ஆராய்ச்சிக் குறிப்பில் அனந்தராமையர் அகம் 351-இல் இரண்டு அடிகளை* (10-11) எடுத் துக் காட்டி அதன்கண் உள்ளது கூடலிழைத்தலைக் குறிப்பதாயின் அதுவும் இங்கே அறிதற்பாலன என உரைப்பதும் ஈண்டு சிந்திக்கத் தக்கது.

இங்ஙனம் கூடலிழைத்தல் பற்றிய குறிப்பு சங்க அக இலக்கியங் களுள் ஒன்றான கலித்தொகை முதல் **திருக்குற்றாலக்** குறவஞ்சி வரையுள்ள இலக்கியங்களில் காணப்படுகின்றது.

## மடல்

இலக்கியக் கோட்பாடுகளை வரையறுத்தும் விளக்கியும் செல் லும் தொல்காப்பியர் பொருளதிகாரத்துள் அகத்திணையியல், களவியல் ஆகிய இரண்டு இயல்களிலும் மடல் பற்றிய குறிப்புகளைப் பெய்து வைத்துள்ளார். அவற்றை,

மடன்மா கூறல்
மடலேறுதல்

என்ற இருநிலைகளில் பாகுபடுத்தி ஆராயலாம்.

---

* அகம். 351, 359, 361; குறுந். 358.

* செய் குறி ஆழி வைகல்தோறு எண்ணி
எழுது சுவர் நினைந்த அழுதுவார் மழைக்கண்.

**மடன்மா கூறல்**

களவியலில் அகமாந்தரின் கூற்று நிகழிடங்களையும் அவற்றிற் குரிய சூழல்களையும் விளக்கும்போது,

............தோழி
நீக்கலி னாகிய நிலைமையும் நோக்கி
மடல்மா கூறும் இட னுமா ருண்டே[220]

எனத் தலைவன் கூற்றில் மடற்கூற்று அமைதல் குறிப்பிடப்பட் டுள்ளது. அதற்கு அடுத்த நூற்பா தோழியிற் கூட்டத்துள் மடல்மா கூறல் இடையூறுபடுதலும் உண்டு என்பதைப்

பண்பிற் பெயர்ப்பினும் பரிவுற்று மெலியினும்
அன்புற்று நகினும் அவட்பெற்று மலியினும்
ஆற்றிடை யுறுதலும் அவ்வினைக் கியல்பே[221]

என விளக்கி எய்தியது விலக்குகிறது.

இனித் தலைவி கூற்று நிகழிடத்தைக் குறிப்பிடும் தொல் காப்பியர், தலைவி குறிவழிச் செல்லா இடங்களை விளக்கும் போது ''பொய்தலை அடுத்த மடலின் கண்ணும்''[222] என்று கூறு கிறார். அதாவது தலைவன் பொய்ம்மையால் மடலேறுவன் எனக் கூறும்போது தலைவி தலைவனைக் காண, குறியிடத்திற்குச் செல்ல மாட்டாள் என்பதாம். இதனால் மடற்கூற்றுப் பிறிதொரு ஏதீடு இட்டுப் பொய்யாகக் கூறப்படுதலும் உண்டு என்பது பெறப்படு கின்றது.

மேற்காணும் நூற்பாக்களை ஒருங்குவைத்து நோக்கின் சில செய்திகள் தெளிவாகின்றன. தலைவன் பொய்யாக மடல் கூறுதல் உண்டு. 'மடன்மா கூறும் இடனுமா ருண்டே' என்பதால் மடல்மா கூறல் சிறுபான்மை; மடல்மா கூறாமை பெரும்பான்மை என்பது பெறப்படும். மேலும் தோழி நீக்கும் பொழுதுதான் தலைவன் மடல்மா கூறுவான்; தோழியின் அன்பு கிடைத்துத் தலைவியைப் பெறும் வாய்ப்பு ஏற்படின் தலைவன் மடல்மா கூறான் என்பதும் பெறப்படுகின்றன.

**மடலேறுதல்**

தொல்காப்பியர் மகடூஉ மடலேறுதல் இல்லை என்று கூறி ஆடூஉ மடலேறுதல் உண்டு என்பதைப் பெற வைக்கின்றார்.

எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்
பொற்புடை நெறிமை இன்மையான[223]

என்ற நூற்பா மடலேறுதல் ஆண்மகனுக்கே உரியது என்பதை அரண் செய்கிறது. மேலும் பெருந்திணைக்குரிய பொருண்மையுள் ஒன்றாக 'ஏறிய மடல்திறம்' (நூ. 54:1) என்பதைக் குறிப்பிடு கிறார். அது யாருக்குரியது என்பது முன்னர்ச் சுட்டிய நூற்பா வால் அறியக் கிடக்கின்றது.

## தொல்காப்பியத்திலிருந்து பெறப்படும் மடற்செய்திகள்

1. மடற்கூற்று அன்பின் ஐந்திணைக்குரியது
2. மடலேறுதல் பெருந்திணைக்குரியது.
3. பெண் மடலேறுதல் இல்லை; ஆண் மடலேறுதல் உண்டு.

### சங்க இலக்கியம்

தொல்காப்பியரது மடல் என்ற அகப்பொருள் துறை பற்றிய கோட்பாடு அதனை அடுத்துத் தோன்றிய சங்க அக இலக்கியத்துள் எவ்வாறு பயின்று வந்துள்ளது என்பதைக் கீழ்க் காணலாம்.

### மடற்கூற்று

**தொல்காப்பியம்** (நூ. 99) தலைவன் தலைவியைக் காணும் வாய்ப்பு தோழியால் தடைப்படும்போது மடக்கூற்று நிகழ்த்து வதைக் காட்டும்.

விழுத்தலைப் பெண்ணை விளையல் மாமடல்
.......................................
தெருவின் இயலவும் தருவதுகொல்லோ
கலிழ்கவின் அசைநடைப் பேதை
மெலிந்திலள், நாம் விடற்கு அமைந்த தூதே[224]

என்ற பாடல் 'தோழியால் குறை மறுக்கப்பட்ட தலைமகன் தன் நெஞ்சிற்கு உரைத்தது' ஆகும். இங்ஙனம் தொல்காப்பியரது மடன்மா கூறல் பற்றிய கோட்பாடு சங்க இலக்கியத்தில் பொருந்தி யிருக்கின்றது.

### மடலேறுதல்

**தொல்காப்பியம்** 'மடல்' பற்றிய சில இலக்கிய விதிகளை மட்டும் விளக்கியது. எனவே மடல் என்றால் என்ன? மடலேறும் முறைமை யாது? என்பன போன்ற செய்திகளை விரிவாக அறிந்து கொள்ள வாய்ப்பில்லை. சங்க அக இலக்கியத்தின்வழி மேற்சொன்ன செய்தி களைச் சில சான்றுகள்மூலம் பின்வருமாறு பாகுபடுத்தி ஆராயலாம்.

### மடலேற்றம் ஏன்?

தலைவன் மடலின்போது தன் மனக்குமுறலைக் கொட்டித் தீர்ப்பதால் அவனது உணர்வுக்கு ஒரு வடிகாலாக மடல் அமை

கின்றது. மற்றும் தான் விரும்பும் பெண்ணை அடைய ஒரு வழியாக மடலேற்றம் பயன்பட்டதைப் புலானறிவழக்கின்வழி அறிகின்றோம்.

துன்பத்தில் துணையாய மடல்[225]

காமக் கடும்பகையின் தோன்றினேற்கு ஏமம்—
எழினுதல் ஈத்த இம்மா[226]

என் உள்இடும்பை தணிக்கும் மருந்தாக
நன்னுதல் ஈத்த இம்மா?[227]

'மா மேலேன்' என்று மடல்புணையா நீந்துவேன்—
தே மொழி மாதர் உறாது உறீஇய
காமக் கடல் அகப்பட்டு[228]

மேற்காணும் தொடர்கள் தலைவனின் உள்ள நிலையையும், மடலேறுவதன் நோக்கத்தையும் புலப்படுத்துகின்றன.

## மடலேற்றம் எத்தன்மையது?

மடலேற்றம் என்பது நாண் துறந்த செயலாக வழக்கிலிருந்தது: இக்கருத்தைக் கீழ்க்காணும் தொடர்களால் அறியலாம்.

... ... பிறர் எள்ளத் தோன்றி
ஒருநாள் மருங்கில் பெருநாண் நீங்கி[229]

பல்லோர் நக்கு எள்ளப்படு மடல்மா ஏறி[230]

... ... பனைபடு கலிமாப்
பூண் மணி கறங்க ஏறி, நாண் அட்டு[231]

அறிவும் நம் அறிவு ஆய்ந்த அடக்கமும் நாணொடு
வறிதாக - பிறர் என்னை நகுபவும்[232]

'நல்லோள் கணவன் இவன்' எனப்
பல்லோர் கூற யாஅம் நாணுகம் சிறிதே[233]

## மடலேறும் முறை

இத்தலைப்பில் தலைவன் மடலேறப் பயன்படுத்திய குதிரை, அதை அழகுபடுத்திய முறை, மடலூர்ந்த இடம் போன்ற செய்திகளைக் காணலாம்.

## மடலூர்ந்த குதிரை

படரும், பனை ஈன்ற மாவும் - சுடர்இழை
நல்கியாள் நல்கியவை.[234]

பனை ஈன்ற மா ஊர்ந்த[235]

பனைபடு கலி மா[236]

.......................மணி ஆர்ப்ப
ஓங்கிரும் பெண்ணை மடல் ஊர்ந்து[237]

அணிநிலைப் பெண்ணை மடல் ஊர்ந்து[238]

விழுத்தலைப் பெண்ணை விளையல் மாமடல்[239]

நெடுமாப் பெண்ணை மடல்மா னோரயே[240]

என்பன போன்ற தொடர்கள் பனைமடலால் செய்த குதிரையைத் தலைவன் மடலூரப் பயன்படுத்தியதைத் தெளிவு படுத்துகின்றன.

## 2. மடலுள் மணி, மலர், எலும்பு

மடலூரும் தலைவன் மணியையும் ஆவிரை, எருக்கு, பூளை, உழிஞை ஆகிய மலர்களையும் எலும்பினையும் அணிவதுண்டு என்பதைக் கீழ்வரும் எடுத்துக்காட்டுகள் புலப்படுத்துகின்றன.

மணிஅணி பெருந் தார்மரபிற் சூட்டி[241]

மணிப்பீலி சூட்டிய நூ லொடு, மற்றை
அணிப்பூளை ஆவிரை எருக்கொடு பிணித்து யாத்து[242]

பூளை, பொலமலர் ஆவிரை - வேய் வென்ற
தோளாள் எமக்கு ஈத்த பூ[243]

அடர்பொன் அவிர் ஏய்க்கும் ஆவிரங்கண்ணி[244]

பொன்நேர் ஆவிரைப் புதுமலர் மிடைந்த
பல்நூல் மாலை[245]

.......................பூ எனக்
குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப[246]

வில்லாப் பூவின் கண்ணி சூடி[247]

பூ அல்ல; பூளை உழிஞை யொடு, யாத்த[248]

அணி அலங்கு ஆவினப் பூவோடு எருக்கின்
பிணையல் அம்கண்ணி மிலைந்து மணி ஆர்ப்ப[249]

பல்வகை மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையையும் மணியையும் அணிந்த தலைவன் எலும்பும் அணிந்திருந்தான் என்பதற்கு,

வெள் என்பு அணிந்து[250]

என்ற குறுந்தொகை அடி சான்றாக அமைகிறது.

### 3. மடலூரும் இடம்

தலைவன் ஊரறிய மடலூர்ந்து வர, அது கண்டு தலைவியின் பெற்றோர் தலைவியைக் கொண்டு வந்து கொடுக்கத் தலைவன் பெறுதல் மரபு.

......மடல் மாமேல்
மன்றம் படர்வித்தவள்[251]

...இவ்வூர் மன்றத்து மடல்ஏறி[252]

மல்லல் ஊர் மறுகின்கண் இவட்பாடும்[253]

நல்லே முறுவலெனப் பல்லூர் திரிதரும்[254]

போன்ற தொடர்கள் தலைவன் மன்றத்து மடலூர்தலைக் காட்டும்

### 4. தலைவன் பாடுதல்

தலைவன் மடலூரும்போது கையில் எழுதிப் பிடித்துள்ள கிழியில் உள்ள தலைவியைக் காட்டிப் பாடுவான் என்பதை,

என்று யான் பாடக் கேட்டு[255]

பாடுவேன் பாய்மா நிறுத்து[256]

......மறுகின்கண் பாட[257]

என்னும் கலித்தொகைப் பாடலடிகளால் அறியலாம்.

### 5. கேட்போர்

தலைவன் மன்றத்தே மடலூர்கின்றான். எனவே அவன் விளி

கண்டவிர் எல்லாம் கதுமென வந்து, ஆங்கே
பண்டு அறியாதீர் போல நோக்குவீர்[258]

சான்றீர்[259]

சான்றவிர்[260]

எனப் பொதுவாகச் சான்றோரை நோக்கி அமைகின்றது.

### மடலூர்தலால் பயன்

தலைவன் ஊரறிய மடலூரும்போது தலைவியிடம் அவன் கொண்ட உறவைப் பலரும் அறிந்து விடுகின்றனர். தமர் ஊரார் முன்பு தலைவியைத் தலைவனிடம் ஒப்படைக்கும் நிலைமைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இதனை,

வருந்த மாஊர்ந்து, மறுகின் கண்பாட
திருந்திழைக்கு ஒத்தகிளவி கேட்டு, ஆங்கே
பொருந்தாதார் போர்வல்வழுதிக்கு அருந்திறை
போல, கொடுத்தார் தமர்[261]

மடல் மாஊர்ந்து மாலை சூடி[262]

என்பன போன்ற தொடர்கள்வழி அறியலாம். இங்ஙனம் தலைவன் நோக்கம் மடலூர்தலால் நிறைவு பெறுவதாகப் புலனெறி வழக்கம் செய்யப்பட்டுள்ளது.

மேற்காட்டிய சான்றுகள் மடல் பற்றிய துறைகளமைந்த பாடல்களிலும், மடல் அல்லாத பிற துறைப் பாடல்களிலும் காணப் படுவன. அவை கைக்கிளை, பெருந்திணை, குறிஞ்சி, நெய்தல் ஆகிய நான்கு திணைகளுள்ளும் இடம் பெற்றிருக்கின்றன.[263]

**சங்கம் மருவிய காலம்**

சங்க காலத்தை அடுத்த சங்கம் மருவிய காலத்து நூலான திருக்குறளில் காமத்துப்பாலுள் ''நாணுத்துறவு உரைத்தல்'' என்ற அதிகாரம் மடலைப் பற்றிப் பேசுகிறது; அவற்றுள் முதல் ஏழு குறள் தலைவன் கூற்றாகவும் (1131-1137) எஞ்சிய மூன்று குறள் தலைவி கூற்றாகவும் அமைந்துள்ளன. இவ்வதிகாரம் 'காதற்சிறப்புரைத்தல்' (113) என்ற அதிகாரத்திற்குப் பின்னும் 'அலரறிவுரைத்தல் (114) என்ற அதிகாரத்திற்கு முன்னும் இடம் பெற்றுள்ளது; எனவே குறள் கூறும் மடற்செய்தி அன்பின் ஐந்திணையில் அமையும் மடற்கூற்றுக்கு இணையானது என்பது பெறப்படும்.

'நாணுத்துறவு உரைத்தல்' என்னும் அதிகாரத்தில் தலைவன் கூற்றில் அமைந்த ஏழு குறட்பாக்களில் குறள் 1134ஐத் தவிர ஏனையவற்றுள் 'மடல்' என்ற சொல்லாட்சி உள்ளது.[264] தலைவி கூற்றில் அமைந்த மூன்று குறளில் இரண்டு குறள் (1138, 1130) காமத்தின் தன்மையையும் ஒரு குறள் (1140) தலைவியின் ஆற்றா மையையும் வெளிப்படுத்துகின்றன.

**பெண் மடலேறாமை**

கடல்அன்ன காமம் உழந்தும் மடல்ஏறாப்
பெண்ணிற் பெருந்தக்கது இல் (1137)

என்ற குறள் தொல்காப்பியர் சுட்டிய இலக்கண மரபையும், சங்க அக இலக்கியத்தின் கோட்பாடுகளையும் பின்பற்றியுள்ளமையைப் புலப்படுத்துகிறது.

**குறுந்தொடி தந்த மடல்**

*தலைவன் தான் மடலூர யார் காரணம் என்பதைத் தெரிவிக்கின்றான்.*

தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை உழக்கும் துயர் (1135)

**மடல் தலைவன் நிலை**

*தலைவியைப் பெற விரும்பும் குறள் தலைவன் ஊர் உறங்கும் நேரத்தும் உறக்கமின்றித் தலைவியை நினைத்து வாடுவதை,*

மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற
மடல்ஒல்லா பேதைக்குஎன் கண் (1136)

*என்று தன் நிலையை வெளிப்படுத்துகிறான். எனவே,*

காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்
மடல் அல்லது இல்லை வலி (1131)

*எனக் காமத்தின் பண்பைக் கூறி அத்துன்பம் நீக்கும் துணையாய் மடலையும் முன் மொழிகிறான்.*

**நாண் நீங்கிய செயல்**

*'காமக் கடும்புனல்' தன்னிடமிருந்த நாணத்தையும் நல்லாண்மையையும் பிரித்துக் கொண்டு போய்விட்டது (1134) என்றும் இன்று 'காமுற்றார் ஏறும் மடல்' (1133) உடையேன் என்றும், தலைவன் வருந்துகிறான்; எனவே, அவ்வருத்தத்தினைப் பொறாத உடம்பும் உயிரும்* **நாணத்தை நீக்கி மடல் ஏறக் கருதுகின்றன** *என்பதை*

நோனா உடம்பும் உயிரும் மடல்ஏறும்
நாணினை நீக்கி நிறுத்து (1132)

*என்றும் எடுத்துரைக்கிறான்.*

*மேற்கண்ட மூன்று குறள்களும் சங்ககாலத் தலைவன் போலவே குறள் தலைவனும் மடலூர்தலை நாண் நீங்கிய செயலாகவும், நல்லாண்மை துறந்த செயலாகவும் கருதினான் என்பதை உறுதிப் படுத்துகின்றன.*

தலைவனின் ஆண்மை தலைவியின் அன்பைப் பெறத் துணை
நிற்கிறது; ஆனால் மடலேறும்போது மட்டும் ஆண்மை
நீங்கிய செயலாகக் கருதுகின்றான். பரி.உரை. (1133)
(ஆண்மை: ஒன்றற்கும் தளராது நிற்றல்)

## குறள்வழிப் பெறும் மடல் மரபு

1. குறள் காட்டும் மடற்செய்தி 'அன்பின் ஐந்திணை'யில் இடம் பெறும் மடற்கூற்றுக்கு இணையானது; தலைவனின் நோக்கம் பாங்கியைக் குறைநேர்தல் ஆகும்; தலைவியின் நோக்கம் பாங்கியை அறத்தொடு நிற்றல் வேண்டியாகும். எனவே, இருவர் கூற்றும் 'நாணுத்துறவு உரைத்த'லில் இடம் பெற்றுள்ளன. நாணுத்துறவு உரைத்தலுக்குப் பின் அலரறிவுரைத்தல் என்ற அதிகாரம் இடம் பெற்றிருப்பதும் இக்கருத்தை உறுதிப்படுத்துகின்றது.

2. திருக்குறளில் தொல்காப்பியம் சுட்டும் பெருந்திணை மடற் பொருண்மை பற்றிய செய்தி இல்லை.

3. பெண் மடலேறா மரபைப் போற்றுகிறது.

4. கலித்தொகைத் தலைவன் போலவே குறள் தலைவனும் தலைவி மடல் தந்தாள் என்று புலப்படுத்துகிறது.

5. காமத்தின் தன்மை கூறும் தலைவன் மடலேறுதலை நாண் நீங்கிய செயலாக எண்ணுதலைக் காட்டுகிறது.

6. இவ்வதிகாரத்தில் (114) இடம் பெற்ற குறட்பாக்களையும் துறைகளையும் இணைத்து நோக்கின் கோவை இலக்கியத்தின் சாயலுக்குக் குறள் முன்னோடி போல் அமைந்திருக்க வாய்ப்பு உண்டு என எண்ணத் தூண்டுகிறது.

## திணை மாலை நூற்றைம்பது

இந்நூலில் குறிஞ்சித்திணையில் 'தோழி சேட்படுத்த இடத்து ஆற்றானாய தலைமகன் தனது ஆற்றாமையால் சொல்லியது' என்ற துறையில் ஒரு பாடல் உள்ளது.

> நாள் நாகம் நாறும் நனைகுழலாள் நல்கி, தன்
> பூண் ஆகம் நேர்வு அளவும் போகாது, பூண் ஆகம்
> என்றேன்; இரண்டாவது உண்டோ? மடல் மாமேல்,
> நின்றேன் மறுகிடையே நேர்ந்து[265]

எனத் தலைவன் மடல் கூற்று நிகழ்த்துகிறான். இது தவிர, பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள அகம் பற்றிய பிற நூல்களில் கைக்கிளை, பெருந்திணைப் பொருண்மையில் மடல் இடம் பெற வில்லை. எனவே இந்நூலில் தொல்காப்பியர் சுட்டிய 'மடன்மா கூறும்' மரபு மட்டும் போற்றப்பட்டுள்ளது எனத் தெளியலாம்.

## நச்சினார்க்கினியருரையும் முத்தொள்ளாயிரமும்

'எத்திணை மருங்கினும்' என்ற தொல்காப்பிய நூற்பாவின் உரையில் நச்சினார்க்கினியர்,

கடலன்ன காமத்த ராயினும் பெண்டிர்
மடலூ ரார் மைந்தர்மே லென்ப—மடலூர்தல்
காட்டுகேன் வம்மின் கலிவஞ்சி யார்கோமான்
வேட்டமா மேல்கொண்ட போழ்து[266]

என்ற பாடலைக் காட்டி 'மடலூர்வேன் என்று கூறியவாறின்றி ஊர்ந்த பாடில்லை' என விளக்குகிறார்; பாடலின்கீழ் நூற்பெயர் சுட்டவில்லை. ஆனால் இப்பாடலின் பொருளும், நடையும் இதை முத்தொள்ளாயிரப்பாடல் எனக் கொள்வதாக உள்ளன.

உலாக் கண்ட பெண்ணின் கூற்றாக இப்பாடல் உள்ளது; அகப் பொருள் காட்டும் மடலில் இருந்து முற்றிலும் மாறுபட்டுள்ளது; வெண்பா யாப்பில் உள்ளது; முதன்முதலாக மடற்கூற்றும் மன்னன் உலாவும் இணைந்து வந்துள்ளன. இவையனைத்தும் மடல் மரபில் ஏற்பட்ட மாற்றத்தையும், முத்தொள்ளாயிரப் பாடலைச் சார்ந்தது என்பதையும் உறுதி செய்கின்றன.

## இறையனார் அகப்பொருள் உரையும் பாண்டிக்கோவையும்

இறையனார் அகப்பொருளில் மடற்குறிப்பு இல்லை. 'முன்னுற உணரினும்....(9)' என்ற நூற்பாவின் உரையில் நக்கீரர் மடல் பற்றிய துறைகளையும் அவற்றிற்குரிய பாண்டிக்கோவைப் பாடல்களையும் எடுத்துக் காட்டியுள்ளார். அவை :

- மடலூர்தல்
- அருளியல் கிளத்தல்
- மொழிநடை யெழுதல் அரிதெனக் கிளத்தல்
- அவயவமெழுதல் அரிதெனக் கிளத்தல்
- உடம்பட்டு விலக்கல்

மேற்காணும் துறைகளுள் 'மடலூர்தல்' என்ற துறைக்குறிப்பு உள்ளது எனினும் அது மடற்கூற்றைத் தான் குறிக்கின்றது. இதைக் 'கொண்டு நிலைக் கூற்று' எனச் சுட்டுகின்றார் நக்கீரர். காரணம் 'தலைமகன் இறந்து படுவானை அச்சொல் தாங்கிக் கொண்டு நின்றமையான்' என்பர்.

எனவே இறையனார் அகப்பொருள் உரை வழியே முதல் கோவை நூலாகக் கருதப்படும் (நூ. 7) பாண்டிக்கோவையில் மடற் செய்தி அன்பின் ஐந்திணைப் பொருண்மையில் அமைந்துள்ளது என்பது தெளிவாகின்றது.

## புறப்பொருள் வெண்பாமாலை

புறப்பொருள் வெண்பாமாலை இருபாற் பெருந்திணையுள் 'மடலூர்தல்' துறையை அமைத்திருப்பினும் எடுத்துக்காட்டுச் செய்யுள் தலைவன் மடலூர்தல் குறித்து அமைந்துள்ளது. அதாவது, மடலூர்தலை ஆண்பாலுக்குரியதாகவே காட்டியுள்ளது.[267]

ஒன்றல்ல பலபாடி
மன்றிடை மடலூர்ந்தன்று (கொளு.21)

என்று கொளுவும்

இன்றிப் படரோ டியானுழப்ப ஐங்கணையான்
வென்றிப் பதாகை எடுத்தானாம்—மன்றில்
தனிமடமான் நோக்கி தகைநலம்பா ராட்டிக்
குனிமடல்மாப் பண்ணிமேற் கொண்டு

என்று வெண்பாவும் அமைந்துள்ளன.

1. தொல்காப்பியம் மடலேறுதலைப் பெருந்திணைப் பொருண்மையில் ஆண்பாலுக்குரியதாகக் காட்டுகிறது: புறப்பொருள் வெண்பாமாலை இருபாற் பெருந்திணையில் காட்டுகிறது. ஆனால், கூற்றுக் குரியராக வெண்பா, ஆண்பாலை மட்டும் சுட்டியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

2. தொல்காப்பியம் மடலேறுதலை அகத்தில் காட்ட, புறப் பொருள் வெண்பாமாலை புறத்தில் இணைக்கிறது.

3. தொல்காப்பியம் அகத்தில் மடல் பற்றிய செய்திகளைச் சுட்டுகின்றது; புறப்பொருள் வெண்பாமாலை அகப்புறத்தில் அகப் பொருள் துறைகளைக் குறிப்பிடுவது இலக்கண வரலாற்றில் தோன்றிய புதிய மரபு எனக் கொள்ளலாம்.

## திருக்கோவையார்

தமிழுக்குக் கிடைத்துள்ள கோவை நூல்களுள் முழுமையான முதல் நூலாகக் கருதப்படும் திருக்கோவையாரில் 'மடற்றிறம்' என்ற கிளவித் தொகையில் மடல் பற்றி ஒன்பது துறைகள் உள்ளன. அவை :

திருக் கோவையார் துறை எண் 73-81

- ஆற்றாது உரைத்தல்
- உலகின் மேல் வைத்துரைத்தல்
- தன் துணிவு உரைத்தல்
- மடலேறும் வகை உரைத்தல்
- அருளால் அரிதென விலக்கல்
- மொழிநடை எழுதல் அரிதென விலக்கல்
- அவயவம் எழுதல் அரிதென விலக்கல்
- உடம்படாது விலக்கல்
- உடம்பட்டுவிலக்கல்

*இத்துறைகளுள் முதல் நான்கும் தலைவன் கூற்றாகவும் பின் ஐந்தும் தோழி கூற்றாகவும் உள்ளன.*

*தொல்காப்பியர் கோட்பாட்டினை ஒட்டி, கோவையுள் இடம் பெறும் மடற்கூற்று அன்பின் ஐந்திணைப் பொருண்மையில் அமைந்தது; கைக்கிளை பெருந்திணைகளுக்கு உரியது அன்று.*

**திருமடல்கள்**

*பக்தி இலக்கியத்துள்* **சிறிய திருமடல், பெரிய திருமடல்** *ஆகிய இரண்டிலும் பெண் மடலேற விழைவதாகக் கூறப்படுகின்றது. எனவே அகத்திணை மரபு போற்றப்படவில்லை. அம்மரபு நெகிழ்ச்சிக்கான காரணத்தைப் பெரிய திருமடலில்,*

> ..................காமத்தின்
> மன்னும் வழிமுறையே நிற்றும்நாம்—மான்நோக்கின்
> அன்ன நடையார் அலரேச ஆடவர்மேல்
> மன்னும் மடலூ ரார் என்பதோர் வாசகமும்
> தென்னுரையில் கேட்டறிவதுண்டு அதனையாம்
> தெளியோம்
> *மன்னும் வடநெறியே வேண்டினோம்*[268]

*என்று குறிப்பிடுகிறார். ஆழ்வார் கருதிய 'மன்னும் வடநெறி' எது? வடமொழி இலக்கியங்களில் மடல் பற்றிய குறிப்புண்டா? என்று வடமொழிப் பேராசிரியர்களை[269] அணுகியபோது, அத்தகைய செய்தி வடமொழி இலக்கியங்களில் இல்லை என்பது தெரியவந்தது.*

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்கள் இச்சிக்கலைக் கீழ் வருமாறு விளக்க முயன்றுள்ளார்.

> இவ்வடநெறி எங்கே கூறப்பட்டுள்ளதெனின், அதர்வ வேதத்திலே தான். இந்நெறியைக் கையாளும்பொழுது காதலால் மீதூரப்பட்ட தலைவி, தலைவன் உருவப் படத்தைக் கிழியில் எழுதி, அதன் இதயத்தின் மீது கொழுந்து விட்டெரியும் அம்பு நுனியை எறிந்து, அதர்வ வேதம் 6-ம் காண்டம் 130 13?-வது சூக்தங்களை ஓதுவாள் என்று கூறப்படுகிறது.[270]

ஆனால் இச்செய்தி, தமிழ் அக இலக்கிய மரபோடு தொடர்புடையது தானா? என்பது மேலும் ஆராயத்தக்கது.

இனி டாக்டர் நரசிம்மாச்சாரி திருமங்கை ஆழ்வார் சுட்டும் வடநெறியாக வடமொழி இராமாயணத்தில் உள்ள ஒரு தொடரைக் காட்டுகிறார்.[271] ஆனால் அத்தொடர் அகப்பொருள் சுட்டும் மடல் சூழலுக்குப் பொருத்தமாக இல்லை. எனவே உரையாசிரியர்வழி சில விளக்கங்களைக் காண்போம்.

> இப்போது ஆழ்வார் மடலூர்வே னென்று
> சொல்வது மாத்திரமேயன்றி மடலூர்தலைச்
> செய்து முடித்தல் இல்லாமையாலே
> தென்னுரையோடு விரோதம் ஒன்றுமில்லையே
> யென்னில்; இஃது உண்மையாயினும்,
> மடலூர் வேனென்று சொல்லுகிற வார்த்தை தானே
> ஆழ்வார் திருவுள்ளத்தால் மடலூர்வதாதலானும்
> மடலூர்ந்தே தீர்வே னென்று இவர் சொல்வதைக்
> கேட்டு 'மாதராகிய நீர் எப்படி மடலூ ரலாம்?'
> என்று கேட்பார்க்கு ஸமாதாநம் சொல்ல
> வேண்டியிருப்பதாலும் "தென்னுரையில்
> கேட்டறிவதுண்டு
> அதனை யாந்தெளியேம் என்று இங்கு அருளிச் செய்ய
> வேண்டியது அவசியமாயிற்று[272]

என்பர் அண்ணங்கராசாரியர்.

திருமங்கையாழ்வார் சிறிய திருமடலில் வாசவதத்தையும், பெரிய திருமடலில் சீதை, வேகவதி, உலூபிகை, உஷை, பார்வதி ஆகியோரையும், அவர்களது நாணிறந்த செயல்களையும் எடுத்துக் காட்டியுள்ளார். எஞ்சிய பகுதி இறைவனின் திரு அவதாரப்

பெருமையைப் பறை சாற்றுகிறது. இப்பகுதியில் ஆழ்வார் ஏன் மடல் பற்றிய குறிப்பை ஒரு வரியில் பெய்துள்ளார் என நோக்கும் போது,

> காமத்தின் அதிசயத்தைக் காட்டும் வகையில் மடலூர்தல்
> என்னும் சொல்லைத் தமிழர் உபயோகித்திருப்பதால்,
> ஹேயமான காமத்தின் ஸ்தானத்திலே பகவத் காமத்தை
> ஏற்றுக் கொண்ட ஆழ்வார்கள் தமது காமாதிசயத்தை
> அந்த
> மடல் சப்தத்தையிட்டே வெளியிட்டார்கள் என்னுமிதுவே
> ஸாரம்[273]

என்று விளக்கும் அண்ணங்கராசாரியார் உரை ஓரளவு பொருத்த மாக உள்ளது. ஆனால் ஆழ்வார் கருதிய பொருள் என்னவென்பது தெளிவாக விளங்கவில்லை.

திருமங்கையாழ்வார் குறிப்பிடும் 'வடநெறி' பிராகிருத மொழி இலக்கியத்தில் உள்ள மரபைக் குறிக்குமோ என ஐயுற்று நோக்கின் கி. பி. இரண்டாம் நூற்றாண்டளவில் தொகுக்கப்பட்டதாகக் கருதப்படும் காதாசப்த சதியிலும் 'மடலூர்தல்' பற்றிய செய்தி இல்லை[274] என்பது தெரிய வந்தது.

மேற்கூறிய கருத்துக்களை நோக்கும்போது ஆழ்வார் மடலேறு தலுக்குக் கருதிய பொருள் அகப்பொருளில் அமைந்த மடலோடு ஒப்ப வைத்து எண்ணத் தக்கதன்று; உறழ்ந்து நோக்கும்போது பெண் மடலேறுவதாகப் பாடுவதும் குறிப்பிடத்தக்க மாற்றமாகும். எனினும், நாயகி நிலையில் நின்று பாடும் ஆழ்வார்தான் மடலூர்ந்த தாகப் பாட முடியும்; இறைவன் மடலூர்வதாகப் பாட முடியாது; ஏனெனில் ஆழ்வார் அடைய விரும்புவது இறைவனை- அகப்பொருள் மடல் பருப்பொருள்களுக்கு இடையே நிகழும்; தலைவன் தலை வியரைப் பற்றி நிற்கும். பக்தி இலக்கிய மடலில் ஆழ்வார் மட்டுமே பருப்பொருள்; இறைவன் நுண்பொருள். இந்நிலையில் நோக்கினும் நாயகி நிலையில் நிற்கும் அடியார்தான் மடலேறுவதாகப் பாட முடியும். தொகுத்து நோக்கின்

*1.* 'மடல்' என்ற அகப்பொருள் துறை திருமங்கையாழ் வாருக்கு ஓர் இலக்கிய வகையைப் படைக்கத் துணை செய்திருக் கிறது.

தமிழர் சமய வரலாறு என்ற நூலில் வேலுப்பிள்ளை,

> சங்ககால அகத்திணைப் பொருளான
> மடலேறுதலுக்குப் பிரபந்த வடிவம் தந்து பக்தி-

> யிலக்கியமாக அதனைப் புனைந்து தமிழ் பக்தி-
> யிலக்கியத்தின் வளத்தினைப் பெருக்கத் திருமங்கை
> யாழ்வார் உதவியுள்ளார்[275]

என்பதும் ஈண்டு நினைவு கூரத்தக்கது.

2. பெண் மடலேறுதலுக்குத் திருமங்கையாழ்வார் சுட்டும் வடநெறியை நாடுவதை விட, பன்னிரு பாட்டியலார் குறிப்பிட்டது போல்

> மடன்மாப் பெண்டிர் ஏறார் ஏறுவர்
> கடவுளர் தலைவ ராய்வருங் காலே[276]

என இறைவன் தலைவனாக வரும்போது தலைவி மடலூர்வாள் என்று கொள்வதே பொருத்தமானது.

3. மடலூர்தலுக்கு ஆழ்வார் கருதிய பொருள் என்ன என்பது விளங்கவில்லை; ஆனால் அகப்பொருள் சுட்டும் மடற்பொருள் அல்ல என்பது உறுதி.

4. 'வடநெறியே வேண்டினோம்' என்பதால் வடமொழியில் மடல் இலக்கியம் உள்ளதோ என எண்ணத் தூண்டுகிறது; ஆனால் வடமொழியில் மடல் இலக்கியம் இல்லை. நரசிம்மாசாரியார் சுட்டும் இராமாயணக் குறிப்பு அகப்பொருள் சுட்டும் மடல் குறிப் போடு எந்த வகையிலும் தொடர்புடையது அன்று. திருமங்கை யாழ்வார் மடலின் பொருளை மாற்றி|பிறழ உணர்ந்ததால் 'வடநெறி' என்று சுட்டியிருக்கிறார்.

5. 'மடல்' பற்றிய செய்தியும், அகப்பொருட்டுறையும் தமிழ் இலக்கியத்திற்கு மட்டும் உரியது என்பதும் புலனாகிறது.

**தமிழ்நெறி விளக்கம்**

தமிழ் நெறி விளக்கத்தில் மடற்கூற்று அமையும் சூழலைத் துறைப் பெயர்களின் வழி அறிந்து கொள்ளலாம். அவை :

> கையுறை எளிகை கூறல்
> கையுறை எமக்குத் தகாதென்றல்
> மடன்மா கூறல்
> மடலேற்று விலக்கல்
> கையுறை கோடல்

ஈண்டு, தலைவன் மடன்மாகூறல் தலைவியைத் தழையேற்பிக்கச் செய்வதற்கு என்ற செய்தி பெறப்படுகின்றது.

இந்நூல் கோவைக்கு இலக்கணமாக அமைந்தது. எனினும், திருக்கோவையாரில் காணும் மடற்கூற்றுப் பின்னணிக்கும் தமிழ் நெறி விளக்கத்தில் உள்ள துறைச் சூழலுக்கும் இடையே வேறுபாடு உள்ளது; அவ்வேறுபாடு துறைகளின் ஒழுங்கு படுத்தப்பட்ட தன்மையை விளக்குகின்றது.*

**சீவக சிந்தாமணி**

சமணக் காப்பியமான சீவக சிந்தாமணியில் சீவகனைப் பிரிந்த குணமாலையின் பிரிவுத் துயரை விளக்கும்போது,

சோலை வேய்மருள் சூழ்வளைத் தோளிதன்
வேலை மாக்கடல் வேட்கைமிக் கூர்தர
ஓலை தாழ்பெண்ணை மாமட லூர்தலைக்
கால வேற்றடங் கண்ணி கருதினாள்[278]

என்ற பாடல் மடலூர்தல் என்ற மரபைக் குறிப்பிடுகின்றது. இதற்குத் 'தடங்கண்ணியாகிய தோளி தன் வேட்கை கடல்போல் மிக்கூர்தலால் ஆடவர் காமத்தால் மடலூர்தலைக் கருதினாள்' என உரை கூறுவர் நச்சினார்க்கினியர். இவர் பெண் மடலூரக் கூடாது என்ற மரபைப் போற்றுபவராக இருந்திருக்கக் கூடும். எனவே ஆண் மடலூர்தலைக் கருதினாள் என உரை வகுத்து விட்டார். எனினும் கவிக்கூற்றில் அமைந்த இப்பாடல் குணமாலை மடலூரக் கருதினாள் என்ற நேரடிப் பொருளைத் தருகின்றது. எனவே திருத்தக்க தேவர் காலத்தில் பெண் மடலூரக் கருதும் மரபு இருந்தது என்பது தெளிவாகின்றது.

**வளையாபதி**

தலைவியை அடைய விரும்பும் தலைவன் அவளைப் பெறுதற் குரிய முறைமைகளுள் மடலேறுதல் ஒன்றாகும். வளையாபதி ஆசிரியர் '**இணை விழைச்சு**' என்ற பகுதியில்,

மாவென் றுரைத்து மடலேறுப மன்று தொறும்
பூவென் றெருக்கி னிணர்சூடுப புண்மை கொண்டே

---

* திருக்கோவையாரில் தலைவன் மடலேற ஒரு காரணமும் இல்லாத நிலையில் மடற்றிறம் பற்றி கூறுகின்றான். பின் வந்த கோவை நூல்கள் தோழி தழை மறுக்கும்போது தலைவன் மடற்கூற்று நிகழ்த்துவதாகவும், பின் தோழி தழையேற்பதாகவும் காட்டுகின்றன. அடுத்து, கூற்று நிலையிலும் இம்மாற்றம் ஏற்பட்டுள்ளது. திருக்கோவையாரில் முதலில் தலைவன் கூற்றில் நான்கு பாடல்கள், பின் தோழி கூற்றில் ஐந்து பாடல்கள் என அமைய, தமிழ்நெறி விளக்கத்தில் உரையாடல் பாங்கில் இருவர் கூற்றும் மாறிமாறி அமைந்துள்ளன.

பேயென் றெழுந்து பிறரார்ப்பவு நிற்பர் காம
நோய்நன் கெழுந்து நனிகாழ்க் கொள்வ தாயினக்கால்[278]

எனக் காமத்தால் வரும் தீமையை எடுத்துரைக்கும் பொழுது மடற்குறிப்பைக் கூறியுள்ளார்.

### திருவாய்மொழி

ஐந்தாம் திருவாய் மொழியில் 'தலைமகள் காதல் கைமிக்கு மடலூரத் துணிதல்' (2546-56) என்ற துறையின்கீழ் ஒரு பெண் நாண் நீங்கி, பிற மடவார் அலர் தூற்ற மடலூரத் துணிந்ததாகப் பத்துப் பாடல்கள் உள்ளன. காட்டு :

நாணும் நிறையும் கவர்ந்தென்னை நன்னெஞ்சம்
கூவிக்கொண்டு
சேணுயர் வானத் திருக்கும் தேவ பிரான்றன்னை
ஆணையென் தோழீ! உலகு தோறலர் தூற்றி, ஆம்
கோணைகள் செய்து குதிரி யாய்மட லூர்துமே

யாம்மட லூர்ந்தும் எம்மாழி யங்கைப் பிரானுடை
தூமடல் தண்ணந் துழாய்மலர் கொண்டு சூடுவோம்[279]

நாயகி நிலையில் நின்ற நம்மாழ்வார் திருமங்கையாழ்வாரைப் போல மடல் பற்றிப் பாடியுள்ளார். எனினும் ஆழ்வார் பாசுரத்தில் வரும் மடலேற்றத்திற்கும் அகப்பொருளில் வரும் மடலேற்றத் திற்கும் மிகுதியான வேறுபாடு உள்ளது.

நிரைக் கொளந் தாதி யோரா யிரத்துள் இப்பத்தும்
உரைக்கவல் லார்க்கு வைகுந்த மாகும்தம் ஊரெல்லாம்[280]

என்ற பயனுரைக்கும் பாசுரம் ஆழ்வார்கள் நோக்கத்தைப் புலப் படுத்துகிறது.

### ஒன்பதாம் திருமுறை

ஒன்பதாம் திருமுறைக்கண் சேந்தனார் பாடிய திருவாவடு துறை திருவிடைக்கழிப் பதிகத்தினுள் பெண் மடல் தொடங்கிய தாகப் பாடல்கள் உள்ளன.*

---

* ஒன்பதாம் நூற்றாண்டில் சேந்தனார் பெண்மடல் தொடங் குவதாகப் பாடியுள்ளார். திருமங்கையாழ்வாரது திருமடலில் இது பற்றிய குறிப்பு இல்லை. எனவே திருமங்கையாழ்வார் சேந்தனார் காலத்துக்கு முற்பட்டவராக இருக்கலாம். இது பற்றிக் கருத்து வேறுபாடு காணப்படுகிறது.
காண்க : பழ. முத்தய்யன், திருமுறைகளில் அகக் கோட்பாடு, 144.

வகைமிகும் அசுரர் மாளவந் துழிஞை வானமர்
விளைத்ததாளாளன்
புகைமிகும் அனலிற் புரம்பொடி படுத்த பொன்மலை
வில்லிதன் புதல்வன்
திகைமிகு கீர்த்தித் திருவிடைக் கழியில் திருக்குரா
நிழற்கீழ் நின்ற
தொகைமிகுநாமத் தவன்திரு வழக்கென் துடியிடைமடல்
தொடங் கினளே[281]

தொடங்கினள் மடலென் றணி முடித் தொங்கல் புறஇத
ழாகிலும்அருளான்[282]

பக்தி இலக்கியங்களில் அகப்பொருள் மரபுக்கு மாறாகப் பெண் மடலூர விழைவதாகப் பாடல்கள் உள்ளன; எனினும் அவற்றின் நோக்கம் அகப்பொருளினின்று வேறுபட்டது என்பதற்கு அப்பாடல்களிலேயே சான்றுகள் உள்ளன. ஈண்டு மடல் தலைவியின் நோக்கம் தலைவன் அணிந்த மலர் அல்லது மாலை பெறுதல் ஆகும். எனவே ஆன்மா பரமான்மாவை அடையத் துடிக்கும் நிலையை இம்மடல் வழி வெளிப்படுத்தினர் எனக் கொள்ளல் தகும்.

**நந்திக் கலம்பகம்**

நந்திக் கலம்பகத்தில் தலைவன் தன் காதல் நோயை மடலூர்ந்தால் தீர்க்கலாம் என மொழிவதாக ஒரு பாடல் உள்ளது.

ஆட்குலாம் கடற்படை அவனி நாரணன்
நோட்குலாம் மதுமலர்த் தொண்டை வாய்ச்சியர்
வாட்குலாம் கண்ணினால் வளைத்த மம்மர்நோய்
மீட்குலாம் மடல்கையில் விரவும் ஆகிலே[283]

இப்பாடல் சிற்றிலக்கியங்களுள் ஒன்றான கலம்பகம், மடல் என்ற அகப்பொருள் மரபைப் பின்பற்றியதற்குச் சான்றாகும்; எனினும் இது அகப்புறக் கைக்கிளைக்குரியது.

விட்ட கூந்தலும் விழியும்நன் முறுவலும்
நுதல்மிசை இடுகோலம்
இட்ட பொட்டினோ டிளமுலைப் போகவும்
எழுதவும் ஆகாதே[284]

எனத் தோழி கூற்றில் மடல் விலக்கு காணப்படுகின்றது. அவள் மடல் கூறும் தலைவனைத் தலைவியின் எழிலைத் தீட்டுவது அரிது எனக் கூறி மடல் விளக்குகின்றாள்.

மேலும் இந்நூலுள் நந்தியின் பகைவர்கள் அவனுடைய வீரத்திற்கு எதிராக நிற்க முடியாமல் (மடலேறி) உயிர்விடக் கூடிய வகையில் வாகை மாலை சூடினான் என்பதை,

......அடங்கலர் தாம்
மடலேறிட வாகை புனைந்த பிரான்[285]

என்ற தொடர் காட்டுகின்றது. இங்கு மடல் 'உயிர் துறத்தல்' என்ற பொருளையும் பெற்றுவிட்டது போலும். எனவே பகைவர் இறத்தல் முற்றிலும் திரிந்த சூழலில் (புறப்பொருள்) மடலேறுதலோடு இணைத்துக் காட்டப்பட்டுள்ளது.

மடலேற்றத்தை வரைபாய்தலோடு ஒப்ப வைத்து எண்ணியோரும்[286] இதே பொருண்மையை மனதில் கொண்டுள்ளனர் எனல் தகும்.

**பன்னிரு பாட்டியல்**

இலக்கிய வகைகளைத் தொகுத்துச் சுட்டும் களஞ்சியங்களாக அமைவன பாட்டியல் நூல்கள். அவற்றுள் முதல் நூலாகக் கருதப்படும் **பன்னிரு பாட்டியல்** மடலேறுதலில் ஆணுக்குரிய விதி, பெண்ணுக்குரிய விதி என இரண்டு வகை விதிகளைக் காட்டுகின்றது; அவை ;

அறம் பொருள் வீடுதிறம் பெரி தழித்துச்
சிறந்த வேட்கை செவ்விதிற் பராஅய்ப்
பாட்டுடைத் தலைவன் இவர் பெயர்க் கெதுகை
நாட்டிய வெண்கலிப் பாவ தாகித்
தனிச் சொல் லொரீஇத் தனியிடத் தொருத்தியைக்
கண்டபின் அந்த ஒண்டொடி எழுதிக்
காமம் கவற்றக் கரும்பனை மடல்மா
ஏறுவர் ஆடவர் என்றனர் புலவர்[287]

மடன்மாப் பெண்டிர் ஏறார் ஏறுவர்
கடவுளர் தலைவ ராய்வருங் காலே[288]

இவற்றுள் பெண்ணுக்குரிய மடற்செய்தி திருமங்கையாழ்வாரின் மடலுக்கு இலக்கணமாக அமைகின்றது; பக்தி இலக்கியத்துள் காணப்படும் இலக்கியங்களை வகைப்படுத்தி இலக்கணம் செய்த பாட்டியலார் பணியையும் புலப்படுத்துகின்றன.

இந்நூலுக்குப் பின் தோன்றிய பல்வேறு பாட்டியல் நூல்களும் மடல் பற்றியும், காலந்தோறும் தோன்றிய மாற்றத்தையும் உள்ளடக்கித் தோன்றிய மடல் வகைகளையும் குறிப்பிடு கின்றன.[289]

## நம்பியகப்பொருள்

இந்நூலின் களவியலில் உள்ள பாங்கியிற் கூட்டத்து வகை பன்னிரண்டனுள் (நூ. 143) மடற்கூற்று, மடல் விலக்கு, உடன் படல், மடற்கூற்றொழிதல் ஆகிய நான்கும் மடல் பற்றியன. இவை தவிர ஒழிபியலில் 'அகப்பொருட் பெருந்திணைக்கு' உரியவற்றுள் ஒன்றாக மடற்கூற்றும் (நூ. 243) 'அகப்புறப் பெருந்திணை'க்குரிய வற்றுள் ஒன்றாக மடலேறுதலும் (நூ. 244) இடம் பெற்றுள்ளன.

இவற்றுள் அகப்புறப் பெருந்திணையின் இலக்கணத்தைக் கீழ் வருமாறு சுட்டுவர்.

> மடலே றுதலொடு...
>
> ........................................
>
> புகன்றவை இயற்பெயர் பொருந்தா வாயின்
> அகன்ற வகப்புறப் பெருந்திணைக் காகும்[290]

இதற்குரிய விளக்கத்தை உரைவழிக் காண்போம். ''மடலேறல் முதலாகத் தபுதார நிலை ஈறாகச் சொல்லப்பட்டன **இயற்பெயர் கூடாவாயின் அகப்புறப் பெருந்திணைக்காகும்** என்றவாறு. எனவே, **இயற்பெயர் கூடுமாயின் புறப்பொருட் பெருந்திணையாம்** என்பதா யிற்று. அவற்றுள், மடலேற்றிற்கு உதாரணம் நெய்தற்கலியுட் கண்டு கொள்க'' என்பர்.[291]

நாற்கவிராச நம்பியின் **நம்பியகப்பொருள், தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை** ஆகிய இலக்கண நூல்களின் கோட்பாடு களைப் போற்றியுள்ளது. ஆனால் அதே நேரத்தில் அவர் காலத் துக்கு முன்னர்த் தோன்றிய கோவை எனும் இலக்கிய வகைக்கு இலக்கணமாக அமைந்துள்ளது. எனவே பழைய இலக்கண நூல் களின் மரபுகளும், புதிய இலக்கிய வகையின் தன்மைகளும் கலக்கு மிடமாக இந்நூல் காணப்படுகின்றது. அதாவது தெளிவான இலக்கணக் கோட்பாட்டை அறிய முடியவில்லை. திணைக் கோட் பாட்டில் தெளிவில்லை. எனவே அதனுள் பயின்றுவரும் துறை களும் மயக்கத்தை விளைவிக்கின்றன.

இந்நூலில் உள்ள சேட்படுத்தப்பட்ட தலைவனின் மடற் கூற்றும், தோழியின் மடல்விலக்கும் பின்வருமாறு :

நூ. 145—
- இரந்து குறைபெறாது வருந்திய கிழவோன் மடலே பொருளென மதித்தல்
- உலகின் மேல் வைத்துரைத்தல்
- தன் மேல் வைத்துச் சாற்றல்
- தலைமகள் அவயத்தருமை சாற்றல்
- தலைமகன் தன்னைத் தானே புகழ்தல்
- அருளியல் கிளத்தல்
- கொண்டுநிலை கூறல்

இங்ஙனம் நம்பியகப்பொருள் மடற்கூற்றையும் மடலேற்றத்தையும் குறிப்பிடுகின்றது. அவற்றை அகத்திணையிலும், அகப்புறத் திணையிலும் காட்டுகின்றது. அப்பாகுபாடு தெளிவான அகக் கோட்பாடாக அமையவில்லை.

தொல்காப்பியர் மடலேற்றத்தைப் பெருந்திணைக்கும் மடற் கூற்றை அன்பின் ஐந்திணைக்கும் உரியதாக்குவர். நாற்கவிராச நம்பி மடற்கூற்றை அகப்பொருட் பெருந்திணைக்கும் மடலேறுதல் இயற்பெயர் இன்றி வரின் அகப்புறப் பெருந்திணைக்கும் உரியதாக்கு கின்றார்.

**களவியற்காரிகை**

களவியற்காரிகையில் தோழியிற் கூட்டத்துள் பகற்குறியில் மடற்கூற்று உள்ளது.

நூள். 31-42 —
- மதியுடம்படுத்தல்
- பகற்குறி
- இரவுக்குறி
- வரைதல் வேட்கை
- உடன் போக்குவலித்தல்

பகற்குறி—
- தழை மறுத்துரைத்தல்
- மடற்றிறங்கூறல்
- மடல் வெளிப்படுத்தல்
- மடல் விலக்கல்
- எழுதரிது என்றல்
- தழைகோடல்

இதில் காணப்படும் மடற்கூற்றுச் சூழல் தமிழ்நெறி விளக்கத்தைப் போன்று உள்ளது. 'எழுதரிது என்றல்' என்ற துறை மட்டும் கூடுதலாக உள்ளது. மேலும் இறையனார் அகப்பொருளுரை (நூ.9) காட்டிய பாடல்களையே இந்நூலும் மேற்கோள் காட்டியிருக்கின்றது.*

**கந்த புராணம்**

அகப்பொருள் மரபைப் பின்பற்றி வள்ளியம்மை திருமணப் படலத்தில் களவுத்துறைகள் பல அமைத்துப் பாடல்களைப் புனைந்த கந்தபுராண ஆசிரியர்,

தோட்டின் மீதுசெல் விழியினாய் தோகையோ
டென்னைக்
கூட்டி டாயெனிற் கிழிதனி லாங்கவள் கோலந்
தீட்டி மாமட லேறிநும் மூர்த்தெரு வதனி
லோட்டு வேனிது நாளையான் செய்வதென்
றுரைத்தான்[292]

என்ற பாடலில் தலைவனாகிய முருகன் மடற்கூற்று நிகழ்த்துவதாகக் காட்டுகின்றார். புராணத் தலைவன் இறைவன் (முருகன்) என்பதால் அகத்திணை நெறியினின்றும் இம்மடற்செய்தி விலகி நிற்கின்றது.

தணிகைப் புராணத்தில் மடல் தொடர்பாகப் பன்னிரண்டு பாடல்கள் (260-69, 274, 277) இருப்பது ஈண்டு நினைவு கூரத் தக்கது. புராண இலக்கிய வகையில் அகப்பொருள் துறைகள் அமைந்த பாங்கிற்கு இவ்விரண்டு புராணங்கள் சான்றாக அமைகின்றன.

**சித்திரமடல்**

காளமேகப் புலவர் இயற்றிய **சித்திரமடல், உலாமடல்*** என்ற வகையைச் சார்ந்தது. பாவை என்னும் ஊரில் வாழ்ந்த தெய்வங்கள்

---

* இறைனார் அகப்பொருள் உரை (நூ. 9) 'மடலூர்தல்' என்ற துறைக்குப் பாண்டிக்கோவைப் பாடல்கள் இரண்டினைக் காட்டுகின்றது. **களவியற்காரிகை** மடற்றிறங்கூறல், மடல் வெளிப்படுதல் என்ற இருதுறைக்கு அப்பாடல்களை எடுத்துக் காட்டியுள்ளது.

* கனவில் ஒரு பெண்ணைக் கண்டு நெருங்கி இன்பமுற இணைந்த பின்பு கண் விழித்து, அப்பெண்ணைக் காணாமல் அவளுக்காக மடலூருவதைக் கலிவெண்பாவால் கூறுதல் உலாமடல். **பிரபந்ததீபிகை** (நூ. 20).

பெருமாள் வள்ளலைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு 174 கண்ணிகளால் பாடப்பட்ட கலிவெண்பாட்டாகும்.

கிளவித் தலைவன் பெண்ணொருத்தியைக் கண்டு காமுற்று, கனவில் கூடி விழித்தெழுந்து அவளைக் காணப் பெறாமல் வள்ளல் தெய்வங்கள் பெருமாளின் பாவைநகர்த் தொகுதியில் மடலூர்ந்து அவளைப் பெறுவதாகக் கூறும் பொருண்மையுடையது இந்நூல்.

> கேவித்த பாதாதி கேசத்தை யும்எழுதி
> உளவிக்கும் சித்திரமடல் உண்டாக்கி—கோவித்துச்
> சாடிப் பொருது வெல்லும் சங்கிராமத் துள்புகுந்தங்கு
> ஈடுற்ற மெய்யில் எலும்பெடுத்துச்-சோடித்தும்
> பூண்ட எருக்கணிந்து...
> ..........................................
> ......ஊர்வேன் மடல்[203]

என்பது தலைவன் கூற்று. போரில் வீரமரணமடைந்த வீரனது உடம்பிலுள்ள எலும்பையும் எருக்கமாலையையும் அணிந்து மடலூர்வேன் என்று கூறுகின்றான் தலைவன்.

பதினைந்தாம் நூற்றாண்டில் 'மடற்கூற்று' என்ற அகப் பொருட்டுறை மானுடக் காதலைப் பாடுவதோடு தனி இலக்கிய மாகத் தோன்றியுள்ளது; முன்பே திருமங்கையாழ்வாரின் மடல் தோன்றியுள்ளது எனினும் அது மானிடத்தைப் பற்றியது அன்று, ஈண்டுச் சித்திர மடலில் கோவை நூலைப் போன்றே பாட்டுடைத் தலைவன் கிளவித் தலைவன் என இரண்டு தலைவர்கள் உள்ளனர்; சோலையில் கண்ட பெண்ணைக் கனவில் கண்டு புலம்புகின்றான். பிறகு பிரிவாற்றாமையால் மடலூரத் துணிகின்றான். எனவே ஒத்த அன்புடையார் மாட்டும் நிகழவில்லை. தலைவன் மடலூரும் இடம் பாட்டுடைத் தலைவனின் நகர் ஆகும்.

சித்திரமடலில் காணும் மடல் அக மரபிலிருந்து விலகியும், மாறியும் அமைந்துள்ளது.

### மாறனகப் பொருள்

நம்பியகப்பொருள் போன்ற அமைப்பினை உடைய மாறனகப் பொருள் அந்நூலிலுள்ள துறைகளை விட 'எழுது முன்னிரங்கல்', 'இறைவன் இறைவியைக் கிழியெ ழுதியிரங்கல்' என்னும் இரண்டு துறைகளை அதிகமாகச் சுட்டுகின்றது (நூ. 37). இவ்வாறு மடல் துறைகள் விரிவு பெற்றமையை இத்துறைகள் புலப்படுத்தி நிற்கின்றன.

### அழகர் அந்தாதி

தோழி தலைமகளது மடலூர்தல் துணிவைச் செவிலிக்கு உணர்த்துவதாக ஒரு பாடல் உள்ளது.

சாற்றுக் கரும்பனைக் கூற்றென்னு மாசைத் தமிழ்மலயக்
காற்றுக் கரும்பனை யுங்கண் படாளலங் காரற்கண்டார்
ஏற்றுக் கரும்பனை யக்கொங்கை யாள்கொண்ட
வின்னலுக்கு
மாற்றுக் கரும்பனை யல்லாது வேறு மருந்தில்லையே[294]

இங்ஙனம் தோழி செவிலியிடம் மடலூர்தல் பற்றி மொழிவதாக அகப்பாடல் மரபு இல்லை; இம்மரபு மடல் மரபினின்று விலகிப் புதியதாகத் தோன்றுகிறது. மடலூர்தலைக் கூறி அறத்தொடு நிற்றல் போல மடலில் செவிலி கேட்போராக அமைவதும் குறிப்பிடத்தக்க மாற்றமாகும்.

### மதுரைக் கலம்பகம்

'மனமே! சிவனுருக் கொண்டு வந்தாய்; சோமசுந்தரர் போன்று திருவடிகளை மாற்றி வைத்துக் கூத்தாடும் வெள்ளியம்பலத்தில் நாளை மடலூர்தும்' என்ற பொருளில் மதுரைக் கலம்பகத்தில் உள்ள பாடல் :

இடங்கொண்ட மானும் வலங்கொண்ட
வொண்மழு வும்மெழுதும்
படங்கொண்டு வந்தனை யானெஞ்சே
மேயினிப் பங்கயப் பூந்
தடங்கொண்ட கூடற் சவுந்தர
மாறர் பொற் றாள் பெயர்த்து
நடங்கொண்ட தோர் வெள்ளி மன்றே
றுதுமின்றே நாளையிலே[295]

இப்பாடலில் சங்க அகப்பாடல்கள் காட்டும் சூழலில் மடல் மரபு இல்லையெனினும், மடல் மரபு மாறியும், திரிந்தும், புதியதாகத் தோன்றியும் தொடர்ந்து வந்துள்ளது என்பதற்குச் சான்று உள்ளது என்பது உறுதியாகின்றது. இது தவிர இந்நூலுள் தலைவன், தலைவி, தோழி ஆகியோர் கூற்றிலும் மடல் பற்றிய பாடல்கள் (34, 71, 94) உள்ளன.

### மதன வித்தாரமாலை

கடிகை முத்துப்புலவர் இயற்றிய **மதன வித்தார மாலை** கைக்கிளைத்திணையில் தலைவி கூற்றாக அமைந்தது:

பாட்டுடைத் தலைவன் உலா வந்தபோது அவனைக் கண்டு காமுற்ற பெண் தன்னை வருத்தும் மன்மதனை விளித்து, தன் நிலை கூறி உலா வந்த தலைவன் மாலையை விரும்பி நிற்பதாக இந்நூல் அமைந்துள்ளது.

330 கண்ணிகளை உடைய இந்நூல் மன்மதனின் சிறப்புப் பற்றி 132 கண்ணிகளில் (6-138) விளக்குகின்றது. அவற்றுள் 17 கண்ணிகள் (95-111) மன்மதனின் கணைபட்டோர் படும் துன்பங்களைச் சுட்டுகின்றன; அந்த இடத்தில் ஆசிரியர் மடல் பற்றிய இலக்கிய மரபை எடுத்துக்காட்டுகின்றார்.

...........நீலவிழி
மாதுதனைக் காணாமன் மாமடலே தெய்வமென்று
போது புகுமுன் புறப்பட்டுக் - காதலாய்ப்
பெண்ணை வெட்டிச் சாய்த்தொருவன் பெண்ணாசை யான் மடலைப்
பண்ணை* யமைத்த பரியாக்கி - வண்ணச்
சடைமுடித்து வெண்ணீறு சாத்தியெருக் கின்பூத்
தொடைய லெனமார்பிற் சூட்டி - மடன்மாக்
கருக்கு முதுகினிந்தக் காமுகன்போ யேறி
யிருக்க விளையோ ரிழுக்கச் - செருக்குடனே
பேரம் பலத்திலவள் பேருரைத்து நிற்பதுமுன்
கூரம்பு தைத்த குணமன்றோ...[296]

என்பன அக்கண்ணிகள்.

**கன்னிவாடி நரசிங்கப்ப நாயக்கன் வளமடல்**

விசுவநாத நாயக்கன் காலத்தில் கன்னிவாடி பாளையப்பட்டின் தலைவனாக ஆட்சி செலுத்திய நரசிங்கப்ப நாயக்கன் மீதெழுந்தது இம்மடல்; 338 கண்ணிகளால் ஆனது; அவற்றுள் மன்மதன் செயல் பற்றி 5 கண்ணிகளும் (328-332) மடற்கோலம் பற்றி 4 கண்ணிகளும் (333-336) மடல் ஊர்வேன் என்ற பொருளில் 2 கண்ணிகளும் உள்ளன.

...............பெண்ணைக்
கருக்கே கலனையாய்க் கட்டுபரி யேறி
யுருகுகளிப் பாலே யுடல்பிளந்த புள்வாய்
திருகுகளிப் பாலே பொற்சிந்தி வடியப்

* பண்ணை யமைத்தபரி - கல்லணையைப் பொருத்திய குதிரை.

பெருமை நரசிங்கர் பிரியமுறு கோதைத்
(தெருவு தொருமன்று தொறுஞ் சென்று மயல்செய்த)
வரிவளையால் ஊர்வேன் மடல்[297]

பாட்டுடைத் தலைவன் பெயரையே நூற்பெயராகக்கொண்டு மடல்கள் தோன்றியுள்ளன; எனினும் அவற்றில் அமைந்துள்ள வருணனைகள் மரபு மீறல்களையும், திரிபுகளையும் புலப்படுத்து கின்றன.

காட்டாக இம்மடலில் 126 கண்ணிகள் காம இன்பம் பற்றிய விளக்கமாக உள்ளன.

## இரட்சணிய யாத்திரிகம்

இந்நூலில் மடல் பற்றிய குறிப்பு இருப்பதாகக் கலைக்களஞ் சியம் சுட்டுகின்றது.

காமத்தின் உச்சிநிலையடைந்தவன் மடலேறியோ
வரைபாய்ந்தோ தன் உயிரைத் தியாகம் செய்கின்றான்.
இதைச் சிறந்த தத்துவமாக்குகிறார் இரட்சணிய
யாத்திரிகம் ஆசிரியர் கிருஷ்ணபிள்ளை. ஏசுநாதர்
மக்கள் மீது கொண்ட ஆராக்காதலால் சிலுவை ஏறித்
தம் உயிரை மாய்த்ததை மடலேறியதாகக் கூறுகிறார்[298]

எனினும் நூலில் மடலேறுதல் பற்றிய செய்தி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆய காலையிற் பாதகந் திரண்டுரு வமைந்த
பேய ரோர்சிலர் நம்பனை யிறுகுறப் பிணித்து
நாயெ னாக்குரைத் தணிநகர் வீதியி னடத்திப்
போயி னார்பதைத் தெவருங்கண் புதைத்தழு திரங்க[299]

என வரும் பாடலின் இரண்டாவது அடியில் உள்ள 'நம்பனை யிறுகுற' என்பதில் (ஏசுவை இறுகுறப் பிணித்து) 'நம்பன்' என்பது 'ஏசு'வைக் குறிக்கும். அதற்கு மாறாக (நம்) 'பனையிறுகுறப் பிணித்து' எனப் பொருள் கொண்டிருக்கலாம். அதன் விளைவே கட்டுரை ஆசிரியர் 'கிருஷ்ணபிள்ளை மடலேறுதலைச் சுட்டியுள் ளார்'' என்று குறிப்பிடக் காரணமாக இருந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

எப்படியிருப்பினும், இரட்சணிய யாத்திரிகத்தில் மடலேறுதல் பற்றிய செய்தி இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இனி, இதுவரை கூறப்பெற்ற மடல் பற்றிய செய்திகளைத் தொகுத்துக் காணலாம்.

**தொல்காப்பியம்** மடற்கூற்று, மடலேறுதல் என இருவகைப்பட்ட மடற்றுறைகளைக் குறிக்கின்றது; அவற்றுள் மடலேறுதலைப் பெருந்திணைக்குரியதாகக் காட்டுகின்றது. மேலும் பெண்கள் மடலேறுதல் இல்லை என இலக்கிய மரபையும் எடுத்துக் கூறு கின்றது.

**தொல்காப்பியம்** காட்டிய மடல் இலக்கணக் கோட்பாட்டிற்கு இலக்கியமாகச் சங்க அக இலக்கியங்கள் திகழ்கின்றன; அவற்றுள் கைக்கிளை அன்பின் ஐந்திணை, பெருந்திணை ஆகிய ஏழு அகத் திணையுள்ளும் மடல் பற்றிய பாடல்கள் உள்ளன; பெருந்திணை கைக்கிளைக்குரிய மடல் கலித்தொகையில் நெய்தல் திணையிலும் அன்பின் ஐந்திணைக்குரிய மடல் குறுந்தொகை, **நற்றிணை** ஆகிய இரண்டில் குறிஞ்சித் திணையிலும் காணப்படுகின்றன; மடல் பற்றிய செய்தி தலைவன், தோழி ஆகிய இருவர் கூற்றுப் பாடல் களிலும் உள்ளன; அவற்றுள் தலைவன் கூற்றைக் கேட்போராகச் சான்றோர், கண்டார், (பெருந்திணை), தோழி, நெஞ்சு (அன்பின் ஐந்திணை) ஆகியோரும், தோழி கூற்றைக் கேட்போராகத் தலைவி யும் அமைகின்றனர். தலைவன் கூற்றுப் பாடல்களில் எழுதிணைக் குரிய மடலும் உள்ளது. தோழி கூற்றுப் பாடல்களில் அன்பின் ஐந்திணைக்குரிய மடல் மட்டும் உள்ளது. துறையைப் பொறுத்த மட்டில் சில பாடல்கள் மடற்றுறைகளாகவும், சில பாடல்கள் மடற்றுறையல்லாத பாடல்கள் எனினும் மடற்குறிப்பைப் பெற்றுத் திகழ்வனவாகவும் உள்ளன.

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய திருக்குறள்-காமத்துப் பால் மடல் மரபு பற்றிய கோட்பாடு தொடர்ந்து வந்துள்ளது என்பதற்குச் சான்றாக உள்ளது.

அதே காலகட்டத்தில் அகப்பொருள் நூல்கள் ஆறனுள் **திணை மாலை நூற்றைம்பது** அன்பின் ஐந்திணைக்குரிய மடற்குறிப்பை மட்டும் கொண்டுள்ளது; கைக்கிளை பெருந்திணை ஆகியவற்றில் அமைந்த மடல் இல்லை.

முத்தொள்ளாயிரத்தில் பெண் மடலூர்தல் என்ற குறிப்புள்ள பாடல் உள்ளது என்ற செய்தி நச்சினார்க்கினியர் உரைவழி உய்த் துணரப் பட்டுள்ளது. அப்பாடல் உலா வந்த மன்னன் பொருட்டு பெண்கள் மடலூரக் கூடாது என்ற மரபை மீறப்போவதாகத் தலைவி கூறுவதாக உள்ளது. இப்பாடல் அகத்திணைக்குரியதன்று; அகப்புறக் கைக்கிளைக்குரியது என்பது நினைவுகூரத்தக்கது. எனவே இந்நூல் தோன்றிய காலத்தில் மடலேறுதல் என்ற துறை

அகப்பொருள் அல்லாத பிற கைக்கிளைப் பாடல்களிலும் இடம் பெறும் நிலையை எய்தி விட்டது என்பது தெளிவு.

**இறையனார் அகப்பொருள்** சூத்திரத்தில் மடற்குறிப்பு இல்லை; எனினும் உரையாசிரியர் ஐந்து மடல்துறைகளையும், அதற்குரிய தாகச் சில பாண்டிக்கோவைப் பாடல்களையும் காட்டியுள்ளார்.

**புறப்பொருள் வெண்பாமாலை** மடலூர்தலை அகப்புறப் பொருளில் இருபாற் பெருந்திணையுள் காட்டும். எனினும் எடுத்துக் காட்டு வெண்பா ஆண்பாற்குரியதாக உள்ளது. பெண்பாற்குரியது காட்டப்படவில்லை.

அகப்பொருள் துறைகளை நிகழ்ச்சித் தொடர்புடன் அடைவு செய்த கோவை எனும் இலக்கிய வகையுள் ஒன்றான **திருக் கோவையார்** 'மடற்றிறம்' என்ற கிளவித்தொகையுள் ஒன்பது துறைகளை அமைத்துள்ளது; நக்கீரர் காட்டிய மடற்றுறைகளும் இதனோடு ஒப்ப வைத்து எண்ணத்தக்கன.

திருமங்கையாழ்வார் மடல்துறையைக் கருவாகக் கொண்டு **சிறிய திருமடல், பெரிய திருமடல்** என இரண்டு நூல்களை இயற்றியுள்ளார்; அவையிரண்டும் தனி இலக்கிய வகையாகக் கொள்ளத் தக்கன. அகப் பொருள் மடல் புறப்பொருள் வெண்பாமாலையில் அகப்புறத்தில் இடம் பெற்றது. திருமங்கையாழ்வார் காலத்தில் அது பக்தி இலக் கியத்துள் இடம் பெற்று விட்டது; நாயகி நிலையிலிருந்த ஆழ்வார் தான் (ஆன்மா) மடலூர்வதாகப் பாடுவதால், இவ் இரண்டு பாடல்களும் தொல்காப்பியர் காட்டும் மடல் மரபை மீறுவதாக உள்ளன; இவற்றுள் மடலூர்வேன் என்ற குறிப்பு உள்ளதே தவிர மடலூர்ந்ததாகக் குறிப்பு இல்லை. ஆசிரியர் காட்டும் 'மன்னும் வடநெறி' என்ற தொடர் புரியா தபுதிராக உள்ளது; அவர் சுட்டியது போல வடமொழி இலக்கியத்தில் அகத்திணைச் சூழலில் அமைந்ததாக 'மடல்' பற்றிய குறிப்பும் இல்லை; மரபும் இல்லை.

**தமிழ்நெறி விளக்கம்** நக்கீரர் உரை, திருக்கோவையாரைப் போன்று மடற்துறைகளைக் கொண்டுள்ளது. எனினும் மடற்கூற்று இடம்பெறும் சூழல் முன்னூல்களைவிடப் பொருத்தமாக உள்ளது.

**சீவகசிந்தாமணி** குணமாலை, சீவகன் பிரிவைத் தாங்காது மடலூரக் கருதுவதாகக் குறிப்பிடுகின்றது. எனவே காப்பிய ஆசிரியர் கவனத்தையும் மடற்றுறை ஈர்த்தது என்பது புலனாகும்.

**வளையாபதி** அகமரபினின்று முற்றிலும் விலகிக் காமத்தால் வரும் கேட்டினுள் ஒன்றாக மடலூர்தலைக் காட்டும். பொருள்

ஒன்று எனினும் ஆளுவோரின் நோக்கத்திற்கேற்பப் பயன்படுத்தப் படும் என்பதற்கு மடற்றுறை எடுத்துக்காட்டு.

திருவாய்மொழியில் நம்மாழ்வார் நாயகி நிலையில் மடலூர்ந்து, திருமாலின் திருத்துழாய் மாலை சூடுவோம் என்று பாடுகின்றார். எனவே பக்தி இலக்கிய மடலின் நோக்கம் மாலை பெறுதல் என்பது புலனாகும். இது ஆன்மா பரமான்மாவை அடையத் துடிக்கும் நிலையைக் காட்டுவது. அகப்பொருள் மடல் அத்தன்மைத்தன்று. மானுடக் காதலைப் பாடுவது.

ஒன்பதாம் திருமுறையுள் சேந்தனார் பாடல்கள் இரண்டு மடற்குறிப்பைச் சுட்டுகின்றன. சைவத் திருமுறைகளுள் மடற் குறிப்புடைய பாடல்களைப் பாடியவர் சேந்தனார் மட்டுமே என்பதும் குறிப்பிடத்தக்கது.

நந்திக்கலம்பகத்தில் மடல் பற்றிய பாடல்கள் உள்ளன. அவை தலைவன் தோழி ஆகியோர் கூற்றில் உள்ளன. இவை தவிர ஒரு பாடல் நந்திவர்மனின் வீரத்திற்கு முன் நிற்கமாட்டாமல் பகை வர்கள் மடலேறி உயிர் துறந்தனர் என அவனது வீரத்தைச் சிறப்பிக்கின்றது. அப்பாடல் காட்டும் மடல் மரபு முற்றிலும் திரிந்த பொருளில், தொடர்பற்ற சூழலில் ஆளப்பட்டுள்ளது. காரணம் என்னவென்று அறிய இயலவில்லை.

இலக்கிய வகைகளைத் தொகுக்கும் பணியைச் செய்த பாட்டியல் நூல்களும் காலந்தோறும் மடல் மரபில் ஏற்பட்ட மாற்றத்தை உட்படுத்தி இலக்கணம் செய்துள்ளன. பன்னிரு **பாட்டியல்** இதற்குச் சான்றாகும். இது 'பெண்கள் மடலேறுவர் கடவுள் தலைவராக வரும்பொழுது' எனச் சுட்டி திருமங்கையாழ்வார் மடலை வகைப்படுத்தியுள்ளது.

**நம்பியகப்பொருள்** மடற்கூற்றை அகப்பொருட் பெருந்திணைக் கும், மடலேறுதலை அகப்புறப் பெருந்திணைக்கும் காட்டும். இப் பாகுபாடு அகத்திணை மரபுக்குப் பொருத்தமானதாக இல்லை. தொல்காப்பியர் அன்பின் ஐந்திணைக்குக் காட்டிய மடற்கூற்றை இவர் ஏன் பெருந்திணையில் சேர்த்தார் என்பதும் விளங்கவில்லை; அகத்திணைக்கே உரியதான மடலேறுதலை புறப்பொருள் வெண்பா மாலையைப் பின்பற்றி அகப்புறத்தில் இணைத்துள்ளார் போலும்.

**களவியற்காரிகை** தோழியிற் கூட்டத்துள் பகற்குறியில் மடற் றுறைகளைத் தொகுத்துள்ளது; மடற்சூழல் தமிழ்நெறி விளக் கத்தை ஒட்டி அமைந்துள்ளது.

காப்பியம், பக்தி இலக்கியம் போன்றவை மட்டுமின்றிப் புராணங்களிலும் 'மடல்' பற்றிய குறிப்பு உள்ளது. இதற்குக் **கந்தபுராணம், தணிகைப்புராணம்** ஆகிய இரண்டும் சான்றாகும்.

காளமேகப் புலவரின் **சித்திரமடல்** தலைவன் கூற்றாக அமைந்தது. தலைவன் சோலையில் கண்ட தலைவியை நனவிற் கண்டு புலம்பி மடலூர்வேன் என்கின்றான். அகப்பொருள் மடலைப்போல இந்நூல் தலைவன் கூற்றில் மடற்குறிப்பைப் பெய்துள்ளது. நீண்ட இடைவெளிக்குப்பின் மானுடக் காதல் பற்றிய குறிப்பில் மடல் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

**மாறனகப்பொருள்** மடல் பற்றிய இருதுறைகளைச் சுட்டுகின்றது.

அழகர் அந்தாதியில் ஒரு பாடல் தலைமகளது மடலூரும் குறிப்பைச் செவிலிக்குத் தோழி உணர்த்துவதாகக் காட்டுகின்றது. இப்பாடல் அறத்தொடு நிற்றலாகவும், ஆனால் அம்மரபினின்றும் விலகி மடலூர்ந்து தலைவனைப் பெறும் விழைவை வெளிப்படுத்துவதாகவும் உள்ளது.

**மதனவித்தாரமாலை** மன்மதன் கணைக்கு ஆட்பட்டோர் படும் துன்பத்தைக் காட்டும்போது மடலையும் மடலூரும் முறையையும் எடுத்துக் காட்டுகின்றது.

கன்னிவாடி நரசிங்கப்ப நாயக்கன் வளமடலில் தலைவன் தலைவியின் பிரிவாற்றாமையால் மடலூர்வதாகக் குறிப்பு உள்ளது. பாட்டுடைத் தலைவன் பெயரில் அமைந்த இந்நூல், அவன் தெருவில் கிளவித் தலைவன் மடலூர்வேன் என மொழிவதாகக் காட்டும். எனினும் இந்நூல் காட்டும் மடல் அகத்திணை மரபுக்குரிய ஒத்த தலைவனுக்கும் தலைவிக்கும் உரியது அன்று.

இரட்சணிய யாத்திரிகத்தில் மடல் மரபு போற்றப்பட்டுள்ளதாகக் கலைக்களஞ்சியம் காட்டும். எனினும் அந்நூலில் அத்தகைய மரபு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சுருங்கக் கூறின் சங்க அக இலக்கியங்கள். சங்கம் மருவிய காலத்து நூல்கள் ஆகியவற்றில் மட்டுமே **தொல்காப்பியம்** காட்டிய அக இலக்கண மரபு போற்றப்பட்டுள்ளது, அதற்குப் பின் வந்த இலக்கணங்களும் இலக்கியங்களும் அம்மரபைப் போற்றவில்லை. மாறாக அவற்றைத் திரித்தும், மாற்றியும், மருவியும் போற்றத் தலைப்பட்டன. பிற துறைகளை விட இத்துறை அனைவரின் கவனத்தையும் ஈர்த்ததும் அப்போற்றுதலுக்கு ஒரு காரணமாகலாம்.

ஏனெனில் தலைவியை அடைய முடியாத தலைவன் அவளைப் பெறுவதற்கு ஓர் உபாயமாக - துணையாக மடலேற்றத்தைப் பயன்

படுத்தியுள்ளான்; பின் வந்தோர் தம்மால் பெறமுடியாத பொருளை (இறைவன்) அடைய இத்துறையை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டனர். எனவே தொல்காப்பியர் காலம் முதல் இக்காலம் வரை இம்மரபு ஆழப் பதிந்து விட்டது (அதே மரபில் இல்லையெனினும்). மேலும் அத்துறை மாற்றம் பெற்று பல்வேறு புதிய இலக்கிய வகைகளையும் தோற்றுவிக்கும் ஆற்றல் பெற்றதாய்த் திகழ்கின்றது.

**பரத்தையிற் பிரிவு**

தொல்காப்பியர் பிரிவு வகைகளுள் ஒன்றாகப் பரத்தையிற் பிரிவைக் காட்டவில்லையெனினும் தலைவன், தலைவி, தோழி ஆகியோரது கூற்று நிகழிடங்களில் அது பற்றிய குறிப்பைப் பெய்து பின்வருமாறு விளக்குவர்.

பரத்தையின் அகற்சியிற் பிரிந்தோட் குறுகி
இரத்தலுந் தெளித்தலும் என இரு வகையோடு[300]

தங்கிய ஒழுக்கத்துக் கிழவனை வணங்கி
எங்கையர்க் குரையென இரத்தற் கண்ணும்

……………………………

கொடுமை ஒழுக்கங் கோடல் வேண்டி
அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கி
காதல் எங்கையர் காணின் நன்றென
மாதர் சான்ற வகையின் கண்ணும்[301]

அடங்கா ஒழுக்கத் தவன்வயின் அழிந்தோளை
அடங்கக் காட்டுதற் பொருளின் கண்ணும்
பிழைத்து வந்திருந்த கிழவனை நெருங்கி
இழைத்தாங் காக்கிக் கொடுத்தற் கண்ணும்

……………………………

பேணா ஒழுக்கம் நாணிய பொருளினும்[302]

இங்ஙனம் அகமாந்தர் கூற்றுக்குரிய சூழலில் பரத்தையிற் பிரிவு பற்றிய செய்தி பெறப்படுகின்றது.

சங்க இலக்கியத்தை ஆய்ந்த அறிஞர்கள் '966 கற்பியற் பாக்களில் 279 பரத்தையிற் பிரிவுக்குரியன'[303] எனக் கைகோள் அடிப்படையிலும், 'மருதத்திணைப் பாடல்கள் 263 உள்ளன; அவற்றுள் 221 பாடல்கள் பரத்தையிற் பிரிவைப் பற்றியன[304] எனத் திணையடிப்படையிலும் எடுத்துக்காட்டுவர்.

இப்பிரிவுக்கு மகப்பேறு ஒரு காரணமாக இலக்கியப்படுத்தப் பட்டுள்ளதைப் பின்வரும் சான்றுகளால் அறியலாம்.

பழனப் பல்மீன் அருந்த நாரை
கழனி மருதின் சென்னிச் சேக்கும்
மா நீர்ப் பொய்கை யாணர் ஊர!
தூயர்; நறியர்-நின் பெண்டிர்
பேஎய் அனையம், யாம்; சேய் பயந்தனமே[305]

புதல்வனை ஈன்ற எம் மேனி
முயங்கன்மோ தெய்ய; நின் மார்பு சிதைப்பதுவே[306]

புதல்வற் தடுத்த பாலொடு தடைஇ
திதலை அணிந்த தேம்கொள் மென்முலை
நறுஞ் சாந்து அணிந்த கேழ்கிளர் அகலம்
வீங்க முயங்கல் யாம் வேண்டினமே;
தீம்பால் படுதல் தாம் அஞ்சினரே; ஆயிடைக்
கவவுக் கை நெகிழ்ந்தமை போற்றி[307]

மேலே காணும் அடிகள் தலைவியின் உள்ளக் குமுறலை வெளிப் படுத்துவன. சங்க இலக்கியத்தை ஆய்ந்த அறிஞர் 'பரத்தையிற் பிரிவுக்குத் தலைவியின் மகப்பேறு மட்டும்தான் காரணமாகின் றது' [308] என்பர்.

சங்கம் மருவிய கால அகப்பொருள் நூல்களுள்ளும் பரத்தையிற் பிரிவு பற்றிய பாடல்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று,

போது ஆர் வண்டு ஊதும் புனல்வயல் ஊரற்குத்
தூதாய்த் திரிதரும் பாண்மகனே! நீ தான்
அறிவு அயர்ந்து, எம் இல்லுள் என் செய்ய வந்தாய்?
நெறி அதுகாண், எங்கையர் இற்கு[309]

இப்பிரிவு பற்றிய செய்தி திருக்குறளில் காமத்துப்பாலுள் புலவி, புலவி நுணுக்கம், ஊடல் உவகை ஆகிய மூன்று அதிகாரங்களில் (131-133) காணப்படுகின்றது. அதுபற்றி நூல் நுவலும் செய்தியை அறியும் முன்பு அந்நூலைப் பற்றி ஆய்வு செய்த அறிஞர்கள் முடிவு களைக் காணலாம். அவை,

தலைவியின் புலவி, ஊடல்களுக்கு அத்தலைவனின்
பரத்தையிற் பிரிவை ஓர் ஏதுவாக வள்ளுவர்
யாண்டும் கூறிற்றிலர்[310]

சங்க இலக்கியத்தில் புலவிக்குப் பரத்தையர் முதன்மைக்
காரணமாகக் காட்டப்படுகின்றனர். ஆயின் வள்ளுவர்
தான் புலவியை மிகச் சிறப்பாக மாசில்லா அற

> இன்பமாக ஆக்கினர். புலவிக்குப் பரத்தையரைக் காரணமாய்ச் சுட்டினாரில்லை. இது புதுமை... புலவிக்கு விளக்கமே இங்குதான் பெறுகிறோம்.[311]

> பரத்தையிற் பிரிவு, வாயில் வேண்டல் முதலிய துறைகளில் வள்ளுவர் பாடவில்லை என்பது குறிக்கத்தக்க மாற்றமே.[312]

> குறள் காட்டும் தலைமகளின் ஊடலுக்குத் தலைமகனின் பரத்தமை ஒழுக்கம் காரணமாகவில்லை...குறளில் தலைமகன் பரத்தையிற்பிரிவு மேற்கொண்டதற்கான செய்திகள் இல்லை.[313]

இனி, நூல்வழிக் குறள் காட்டும் தலைவியின் காரணத்தைக் காண்போம்:

தலைவன்
- சொல்
  - யாரினும்...1314
  - இம்மைப்பிறப்பில்...1315
- செயல்
  - தும்மல் 1317, 1318, 1312
  - பெண் 1311, 1313
  - பணிவு 1319
  - நோக்கு 1320

மேற்குறிப்பிட்ட குறள்கள் தலைவியின் ஊடலுக்குக் காரணம் ஒரு பெண் என்பதைக் கூற்றாலும் குறிப்பாலும் உணர்த்துவதைக் காணலாம்.

> பரத்தையரை ஒதுக்கி ஊடல் அதிகாரங்கள் நுணுக்கமாக யாத்த புதுப் பெருமையுடையவர் வள்ளுவர். எனினும் பரத்தமைக் குறிப்பை அவர் ஒதுக்கவில்லை[314]

எனக் குறளில் பரத்தமைக் குறிப்பு உள்ளது என மொழிவர் வ. சுப. மாணிக்கம்.

ஆக, குறள், தலைவியின் ஊடலுக்கு அவள் ஐயப்படும் தன்மை அடித்தளமாக அமைந்துள்ளது. அவள் கூற்றுள் மலரின்கண் உள்ள மணம் போல, பரத்தையிற் பிரிவு பற்றிய குறிப்பும் காணப்படுகின்றது. எனவே பரத்தையிற் பிரிவு குறளில் இல்லை எனக் கூறுவது நூல் நுவலும் பொருளை மறுத்து/மறைத்துப் பிறழ உரைப்பதாக அமையும்.

கோவை நூல்கள் பிரிவு வகைகளுள் பரத்தையிற் பிரிவுக்குரிய துறைகளையும் பாடல்களை யும் காட்டுகின்றன. அவற்றிற்கிடையே வைப்பு முறையில் மாற்றமிருப்பினும் பிறவற்றில் இல்லை. காட்டாகத் திருக்கோவையார் பரத்தையிற் பிரிவை இறுதியில் வைக்க, அம்பிகாபதிக் கோவையும் தஞ்சைவாணன் கோவையும் முதலில் வைத்துள்ளன.

பதினொன்றாம் திருமுறையினுள் ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியில் தலைவி காமக்கிழத்தியைப் பழிப்பதாக அமைந்த பாடல் அவள் தன் மகனை முத்தமிட்டதைக் கூறுகின்றது.

வளைபடு தண்கடற் கொச்சை வயவன் மலர்க்கழற்கே
வளைபடு நீண்முடி வார்புன லூரன்தன் நீரிலங்கு
வளைபடு கண்ணியர் தம்பொதுத் தம்பலம் நாறும்இந்த
வளைபடு கிங்கிணிக் கால்மைந்தன் வாயின் மணி
முத்தமே[315]

என்பது அப்பாடல்.

'பரத்தையைப் பழித்தல்' என்ற துறையிலமைந்த பாடல் கல்வளையந்தாதியில் உள்ளது. அப்பாடல் உணர்த்தும் பொருள்

தலைவன் பின்சென்ற என் ஆசைக்குரிய மகனே! எனது அரிய முலைப்பாலைத் தருதற்கு, மணியணி புனைந்த முலையினையுடையவளாகிய பரத்தை அழகிய பழத்தை நினது கையிற் தந்த குற்றம் நீங்க, சிதம்பரம் காசி சென்று வருவாய்[316]

என்பதாகும். இறைவன் புகழைப் பரப்புதல் இந்நூலின் நோக்கம் என்பதை இப்பாடல்வழி அறியலாம். மக்கள் வாழ்வில் குற்றம் நீங்கிச் சிறக்க வழியென்னவெனில் இறைவன் எழுந்தருளியிருக்கும் திருத்தலங்களை வழிபடுவதாகும் என்ற சிந்தனையை இப்பாடலின் மூலம் அறிவுறுத்துகின்றார் ஆசிரியர். இதற்குத் தலைவன் தலைவி வாழ்வில் எழும் ஒழுகலாற்றுச் சிக்கல்களை ஊடகமாகப் பயன்படுத்திக்கொண்டுள்ளார். பரத்தையிற் பிரிவு எப்படிப் பக்தி இலக்கியத்தில் இடம்பெற முடியும் என்ற ஐயம் தோன்றின் அதற்குச் சிறந்த விடையாக அமைவது இப்பாடலாகும்.

தலைவி தன் மகன் பரத்தையின் கையால் பழம் வாங்கி விட்டான்; எனவே அவன் அக்குற்றங்களையச் சிதம்பரம் காசி சென்று வரவேண்டும். பிறகுதான் அவனுக்குப் பாலூட்டுவேன் என்று கூறும்போது பரத்தையிற் பிரிவையும் பக்தி நோக்கத்திற்குப் பயன்

படுத்திக்கொண்ட பக்தி இலக்கிய ஆசிரியர்களின் ஆளுமைத்திறன் மேலோங்கி நிற்கின்றது.

தனிப்பாடல் திரட்டிலும் பரத்தையிற் பிரிவுக்குரிய பாடல்கள் உள்ளன.[317]

பழமையில் இங்குள அன்புறு காதற்
பயனுறும் அகப்பொருள் காண்போம்[318]

நாடும் அகப்பொருளி னுக்கே-அவள்
நல்லதோர் இலக்கியமோ?[319]

என அகப்பொருள் ஈடுபாடு கொண்ட பாரதிதாசன் தேனருவியில்,

ஏனத்தான் இந்தப்பொய்? - அந்தப்
பரத்தை இல்லம் புகுந்தது மெய், உனக்
கேனத்தான் இந்தப் பொய்?...
கண்டதே இல்லை அவளை என்கின்றாய்,
கடலைமே லாடையால் மறைக்கின்றாய்,
பண்டுநாம் நுகர்ந்து எலாமறக் கின்றாய்
பல் காட்டிப் பஞ்சணை அச்சாரம் தந்தாய்[320]

என்ற பாடலை இயற்றியுள்ளார். இப்பாடல் அகமரபைப் பின்பற்றி யமைந்தது; தலைவி தலைவனிடம் உரைப்பது. எனினும், இடத்தாலும் காலத்தாலும் அகப்பொருளினின்றும் விலகி நிற்கின்றது. ஆசிரியரின் சங்க இலக்கியப் புலமையும், அதன்கண் உள்ள ஈடுபாடும் அச்சாயலுடைய இலக்கியங்கள் படைக்கத் தூண்டுகோலாய் விளங்கியன எனலாம்.

## தொகுப்புரை

காட்சி, ஐயம், தெளிவு, குறிப்பறிதல் ஆகிய நான்கு துறைகள் பற்றியும் **தொல்காப்பியம்** குறிப்பிடுகின்றது; சங்க அக இலக்கியத்தில் இத்துறைகளில் அமைந்த பாடல்கள் இல்லை; பாடல்களுக்குள் அவை பற்றிய குறிப்புகள் காணக்கிடக்கின்றன என்பதும் எண்ணத்தக்கன. இந்நான்கையும் முத்தொள்ளாயிரமும் காப்பியம், பக்தி இலக்கியம், குறவஞ்சி, உலா, மடல், காதல் போன்ற இலக்கிய வகைகளும் போற்றியுள்ளன.

'நாணிக்கண் புதைத்தல்' என்ற துறை தொல்காப்பியத்தில் கூற்று நிகழிடத்துள் காணப்படவில்லை; ஐங்குறுநூற்றில் இரண்டு பாடல்கள் இத்துறைக்குறிப்பைப் பெற்றுள்ளன. **திருக்கோவையார், அம்பிகாபதிக்கோவை, தணிகைப்புராணம்** ஆகியவற்றில் இதற்குரிய

பாடல்கள் உள்ளன. இத்துறை ஒருதுறைக்கோவை, இருதுறைக் கோவை எனத் தனி நூல்கள் தோன்றும் அளவுக்குப் புலவர்களின் உள்ளங்கவர்ந்த துறையாக விளங்கியுள்ளது. அந்நூல் தோன்றிய காலமும் அதற்கு ஒரு காரணம் எனலாம்.

பாங்கற்கூட்டம் பற்றிய குறிப்பு தொல்காப்பியத்தில் உள்ளது; சங்க அக நூல்களும், சங்கம் மருவிய காலத்துத் தோன்றிய அக நூல்களும் இக்கூட்டத்திற்குரிய பாக்களைப் பெற்றுள்ளன. சிலப்பதிகாரம், அந்தாதி, கலம்பகம், பக்தி இலக்கியம் ஆகியவற்றிலும் இம்மரபு போற்றப்பட்டுள்ளது.

கையுறை பற்றிய குறிப்பு தொல்காப்பியத்தில் இல்லை. எனினும் இத்துறையிலமைந்த பாடல்களை அகப்பொருள் இலக்கியமும், கலம்பகம், அந்தாதி போன்ற சிற்றிலக்கியங்களும், அனிச்ச அடி என்னும் நாடகமும் குறிப்பிடுகின்றன.

குறி, இற்செறித்தல், வெறிவிலக்கல், அறத்தொடு நிற்றல் ஆகிய துறைகள் பற்றிய குறிப்புக்கள் தொல்காப்பியத்தில் உள்ளன. சங்க அக இலக்கியம், சங்கம் மருவிய கால அக இலக்கியம், முத்தொள்ளாயிரம், பக்தி இலக்கியம், காப்பியம், புராணம், கலம்பகம், பள்ளு, அந்தாதி, தனிப்பாடல் திரட்டு, பாரதியார் கவிதைகள், பாரதிதாசன் படைப்புகள் ஆகியவற்றில் இவற்றிற்குரிய பாடல்கள் உள்ளன. இவற்றுள் 'வெறிவிலக்கல்' 'நாணிக்கண் புதைத்தலை'ப் போலவே ஒருதுறைக்கோவை, இருதுறைக் கோவை ஆகியன தோன்ற வழி வகுத்துள்ளது.

'உடன்போக்கு' தொல்காப்பியத்தில் அகமாந்தர் கூற்று நிகழிடங்களில் விளக்கப்பட்டுள்ளது. அக இலக்கியம், பக்தி இலக்கியம், கந்த புராணம், நந்திக் கலம்பகம், கச்சிக் கலம்பகம், தனிப்பாடல் திரட்டு, இராவண காவியம் போன்றவற்றில் இத்துறைக்குரிய பாடல்கள் பயின்று வந்துள்ளன.

ஏறுதழுவுதல் பற்றிய குறிப்பு தொல்காப்பியத்தில் இல்லை. கலித்தொகையில் இத்துறைச் செய்தியைப் பெற்றுள்ள ஆறு பாடல்கள் உள்ளன. பதினொன்றாம் திருமுறையில் இதற்குரிய பாடல்கள் உள்ளன; கோவையைப் பொறுத்த வரையில் திருக்கோவையார், அம்பிகாபதிக் கோவை போன்றவற்றில் காணப்படுகின்றன.

காமமிக்க கழிபடர் கிளவி, தூது, மாலை வேண்டல்,* கூடலிழைத்தல் ஆகிய நான்கினுள் முன் இரண்டைப் பற்றிய குறிப்பு தொல்காப்பியத்தில் உள்ளது; பின் இரண்டைப் பற்றிய குறிப்பு இல்லை. இந் நான்கனுள் மாலை வேண்டல் நீங்கலாக ஏனையவற்றிற்குரிய பாடல்கள் அகப்பொருள் நூல்களில் உள்ளன. ஏனெனில் மாலை வேண்டல் கைக்கிளைப் பொருண்மைக்குரியது: எனவே அகப்பொருளில் பயின்று வரவில்லை. மற்றும் காப்பியம், பக்தி இலக்கியம், கலம்பகம், பள்ளு, புராணம், குறவஞ்சி, தூது, தனிப்பாடல் திரட்டு ஆகியவற்றிலும் இவற்றிற்குரிய குறிப்புக்கள்/பாடல்கள் உள்ளன.

தொல்காப்பியத்தில் மடல் பற்றிய கோட்பாடுகள் விளக்கப் பட்டுள்ளன. அகப்பொருள் நூல்களும், திருக்குறளும் அம்மடல் மரபைப் போற்றியுள்ளன. மடல், ஏனைய இலக்கியங்களில் (கோவை தவிர) கைக்கிளைப் பொருண்மையில் அமைந்துள்ளது. அவற்றுள் வளையாபதி வீடுபேறு போற்றும் காப்பியமாதலால் மடலைத் தன் நோக்கத்தை (காமத்தால் வரும் தீமையைக் கூறுதல்) விளக்கப்பயன்படுத்திக் கொண்டுள்ளது. 'மடல்' என்ற அகப்பொருள் துறை வரலாற்றுவழி நோக்கும்போது பல்வகைத் திரிபுக்கும், மாற்றத்திற்கும் உள்ளானதை அறியலாம். நாணிக்கண் புதைத்தல், வெறிவிலக்கல் ஆகியன போன்று இத்துறையும் தனி இலக்கிய வகையைத் தோற்றுவிக்க வித்தாக அமைந்தது. சித்திர மடல், உலாமடல், வளமடல் என்பன போன்ற இலக்கிய வகைகள் இதற்குச் சிறந்த சான்றாகும்.

---

* அகப்பொருள் இலக்கியத்தில் தலைவியை விரும்பும் தலைவன் அவளுக்குக் கையுறை கொடுக்கின்றான். அவ்வழி நோக்கின் ஈண்டு இறைவனை விரும்பும் அடியார் மாலை கொடுப்பதாகத்தான் பாடவேண்டும். அதாவது இத்துறை 'மாலை கொடுத்தல்' என்றுதான் இருக்க வேண்டும்.

மடல், உருவெளிப்பாடு ஆகிய துறைகளில் அக மரபையொட்டி அடியார்தான் மடலூர்வதாகவும், இறைவனின் உருவெளியைக் காண்பதாகவும் பாட இத்துறை மட்டும் அதிலிருந்து விலகிக் காணப்படுகின்றது. காரணம் அடியார் மடலூர்வதாகப் பாடும்போது உணர்வுகளை வெளிப்படுத்த முடியும். ஆனால் கையுறையைப் பொறுத்த வரையில் மாலை கொடுப்பதாகப் பாடினால் ஏக்கத்தை வெளிப்படுத்த முடியாது எனக் கருதி மாலை வேண்டுவதாக அமைத்துக் கொண்டனர் போலும்.

பரத்தையிற் பிரிவு **தொல்காப்பியம்**, அகப்பொருள் நூல்கள் ஆகியவற்றில் இடம் பெற்றுள்ளது. திருக்குறளில் இது பற்றிய செய்தி வெளிப்படையாக இல்லையெனினும் குறிப்பால் அறியப்படுகின்றது. பதினொன்றாம் திருமுறையில் இத்துறை உள்ளது. **கல்வளையந்தாதி**, இத்துறையைப் பக்தி பரப்புச் சாதனமாகவும் பயன்படுத்திக் கொண்டுள்ளது.

துறையைப் பொறுத்தவரையில் மரபுத் தொடர்ச்சிக்குப் பெரும் பங்கு வகிப்பதில் கோவை இலக்கியம் தலைசிறந்து நிற்கின்றது. அடுத்ததாகப் பக்தி இலக்கியங்களையும் சிற்றிலக்கியங்களையும் கூறலாம். அவற்றுள்ளும் பதினொன்றாம் திருமுறையின் இடம் குறிப்பிடத்தக்கது.

தனி நூல்களைப் பொறுத்தவரை **தணிகைப்புராணம்** களவுப் படலம் 587 துறைகளைப் பெற்றிருக்கின்றது.

காப்பியங்களைப் பொறுத்தவரை காப்பிய மாந்தர்களின் வாழ்வோடு அகம் தொடர்பான செய்திகள் பின்னப்பட்டுக் காப்பிய வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், போன்றவற்றில் பயின்றுவரும் துறைகள் கைக்கிளைப் பொருண்மைக்குரியன; அகப்பொருளுக் குரியன அல்ல.

அகப்பொருள் துறைகள் பல பக்தி இலக்கியத்துள் காணப் படினும் தேவையான இடங்களில் அவை பல்வகைத் திரிபுகளுக்குட் படுத்தப்பட்டு தக்க முறையில் ஆளப்பட்டன. இதற்கு எடுத்துக் காட்டு 'மாலை வேண்டல்' துறையாகும்.

சில துறைகள் (நாணிக் கண்புதைத்தல், வெறிவிலக்கல், தூது, மடல்) புதிய இலக்கிய வகைகளின் தோற்றத்திற்குத் துணை நின்றுள்ளன; சில துறைகள் (மாலை வேண்டல், கூடலிழைத்தல்) இடைக்கால இலக்கியங்களில் செல்வாக்குப் பெற்றுள்ளன; சில துறைகளைப் (ஏறு தழுவுதல், கூடலிழைத்தல்) பற்றிய குறிப்பு தொல்காப்பியத்தில் இல்லை. ஆனால் சங்க அக இலக்கியத்தில் கலித்தொகையில் அவை பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

சுருங்கக் கூறின் அகப்பொருளின் தாக்கம்/கூறு தொல்காப்பியர் காலம் முதல் இன்று வரையுள்ள இலக்கியங்களில் காணப்படுகிறது.

## சான்றெண் விளக்கம்

### இயல் மூன்று

### துறை

1 தொல். பொருள், 106:3-4.

2 ,, 109:1-4.

3 மான்தேர் மேற் கண்டவர் 2:1.
உலா மறுகில் 33:3.
.... தான் பாடலம் ஏறிப்
படர்தந்தான் பைந்தொடியார் காண 26:2.
நெடுவீதி நேர்பட்ட போது 42:4.
வழுவில் எம் வீதியுள் மாறன் வருங்கால் 57:1.
பூந்தார் வழுதி புறப்படின் 83:2.

—முத்தொள்ளாயிரம்

4 முத்தொள்ளாயிரம், 28, 33, 34, 42, 72.

5 ,, 54.

6 ,, 57.

7 கம்பராமாயணம், 1;10:14.

8 ,, 1:10:16-4.

9 அப்பர் தேவாரம், 6/9.

10 சீவக சிந்தாமணி, 2063.

11 ,, 1471:3-4.

12 ,, 1472.

13 நளவெண்பா. 89.

14 தொல், பொருள், 91.

15 ,, 234.

16 தொல். பொருள். இளம்பூரணம், 91.

17 கலித்தொகை, 109:9-12.

18 முத்தொள்ளாயிரம், 130.

19 சீவக சிந்தாமணி, 1473.

20 கம்பராமாயணம், 1:11:3.

21 பெரியபுராணம், 144.

22 திருக்குற்றாலக் குறவஞ்சி, 26:1.

23 செண்பகராமன் பள்ளு, 22.

24 தொல். பொருள்., 92.

25 தொல். பொருள். இளம்பூரணம், 92.

26 முத்தொள்ளாயிரம், 105.

27 தொல். பொருள். 93.

28 ,, 94.

29 திணைமாலை நூற்றைம்பது. 32.

30 க. ரத்னம், ''சங்க அகப்பாடல்களில் கூற்று'', டாக்டர் பட்ட ஆய்வேடு, 70.

31 ஐங்குறுநூறு, 293.

32 அ. கந்தசாமிப் பிள்ளை, ''கோவை'', கலைக்களஞ்சியம், தொகுதி 4, 337.

33 மு. சண்முகம் பிள்ளை, சிற்றிலக்கிய வளர்ச்சி, 7.

34 ரா. ராகவையங்கார், இராசராச சேதுபதி ஒரு துறைக்-கோவை, 105.

35 தலைமையுரை, சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள், நான்காவது மாநாடு, 2.

36 அ. ம. சத்தியமூர்த்தி, ''கோவை இலக்கியம்-கரந்தைக் கோவை'', சுவடியியல் பதிப்பாய்வேடு, 16.

37 தனிப்பாடல் திரட்டு-1 561, 788.
,, 2 365, 367, 405, 472, 546, 683-685, 711.

38 பாரதியார் கவிதைகள், ப. 280.

39 தொல்.பொருள். 117.

40 ,, 120.

41 ,, 101.

42 பிரமம் முதலிய நான்கும், கந்தருவப் பகுதியாகிய களவும், உடன்போக்கும் அதன்கண் கற்பின் பகுதியாகிய இற்கிழத்தியும், காமக்கிழத்தியும், காதற் பரத்தையும், அசுரம் முதலாகிய மூன்றுமென இவை.

தொல்.பொருள். இளம்பூரணம், 101.

43 தொல்.பொருள். 487:2.

44

| | ஐங். | குறுந். | நற். | அகம். |
|---|---|---|---|---|
| குறிஞ்சித்திணை | 255 | 58, 72, 95, 100, 119, 129, 132, 136, 156. 206, 272, 280, 291 | 95, 160, 185, 201, 324 | —— |
| நெய்தல் திணை | 172, 191 | 184 | —— | 130, 140, 390 |

45 குறுந்தொகை, 78, 204 (கு) ; ஐங்குறுநூறு 173 (நெ.)

46 குறுந்தொகை, 204.

47 Rm. Periakaruppan, Tradition and Talent in Cankam Poetry. 12-13.

48 காண்க, இயல் நான்கிலுள்ள இணைப்புகள் 3,4.

49 தலைவன் கூற்று

| | திணைமாலை நூற்றைம்பது | திணைமொழி ஐம்பது |
|---|---|---|
| கு. | 9, 30 | —— |
| நெ. | 32, 33, 60 | 49 |
| பாங்கன் கூற்று | | |
| கு. | 28 | —— |
| நெ. | 45,47 | |

50 திணைமொழி ஐம்பது, 49.

51 நாலாயிர திவ்வியப் பிரபந்தம், 3636.

52 நம்பியகப் பொருள், 136.

53 ஐங்குறுநூறு, 211.

54 கலித்தொகை, 115:4-10.

55 ,, 107:31-35.

56 ,, 107:5-11.

57 திணைமாலை நூற்றைம்பது, 20,

58 தொல். பொருள், 128.

59 ,, 129, 130, 118.

60 ,, 105:1.

61 ,, 109:24.

62 கலித்தொகை, 46:12.

63 நற்றிணை, 258:1-2.

64 ,, 235:4.

65 ,, 307:8.

66 அகநானூறு, 325:3-4.

67 குறுந்தொகை, 114:1-2.

68 ,, 113:4-6.

69 அகநானூறு, 240:14-15.

70 கலித்தொகை, 110:22-23.

71 ,, 108:62-63.

72 அகநானூறு, 328:5.

73 ,, 187:2.

74 கலித்தொகை, 49:23-25.

75 குறுந்தொகை, 217:1-3.

76 ,, 336:1-2.

77 இரும் பிழி மகாஅர் இவ் அழுங்கல் மூதூர்
விழவு இன்று ஆயினும் துஞ்சாது ஆகும்;
மல்லல் ஆவண மறுகு உடன் மடியின்,
வல்உரைக் கடுஞ்சொல் அன்னை துஞ்சாள்;
பிணிகோள் அருஞ்சிறை அன்னை துஞ்சின்,
துஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவர்;
இலங்குவேல் இளையர் துஞ்சின், வை எயிற்று
வலம் சுரித் தோகை ஞாளி மகிழும்;
அரவாய் ஞமலி மகிழாது மடியின்,
பகல் உரு உறழ நிலவுக் கான்று விசும்பின்
அகல்வாய் மண்டிலம் நின்று விரியும்மே;
திங்கள் கல் சேர்பு கனை இருள் மடியின்,
இல் எலி வல்சி வல் வாய்க் கூகை
கமுது வழங்கு யாமத்து அழிதகக் குழறும்;
வளைக்கண் சேவல் வாளாது மடியின்,
மனைச் செறி கோழி மாண் குரல் இயம்பும்;
எல்லாம் மடிந்தகாலை, ஒரு நாள்
நில்லா நெஞ்சத்து அவர் வாரலரே; அதனால்,
அரிபெய் புட்டில் ஆர்ப்பப் பரிசிறந்து,
ஆகி போகிய பாய்பரி நன்மா
நொச்சி வேலித் தித்தன் உறந்தைக்
கல்முதிர் புறங்காட்டு அன்ன
பல்முட்டின்றால் - தோழி! - நம் களவே

—அகநானூறு, 122.

78 கலித்தொகை, 52:8, 12, 16.

79 திணைமொழி ஐம்பது, 1:3-4.

80 திணைமாலை நூற்றைம்பது, 7:3-4

81 கந்தபுராணம், 6:24:164.

82 முக்கூடற்பள்ளு, 41.

83 பாரதியார் கவிதைகள், 273.

84 ,, 281.

85 பாரதிதாசன், இசையமுது I-11.

86 பாரதிதாசன். பாரதிதாசன் கவிதைகள்-1, 68.

87 தொல். பொருள், 109:26.

88 ,, 112:39.

89 அகநானூறு, 90:4-5.

90 நற்றிணை, 258:1-2.

91 அகநானூறு, 325:5-6.

92 ,, 60:12-15.

93 முத்தொள்ளாயிரம், 25, 29, 33, 34, 35, 129.

94 ,, 49.

95 ,, 121.

96 ,, 55.

97 களிறு தருபுணர்ச்சி 6:24:114, 115.
தோழி களவையறிதல் 6:24:22.
இற்செறிப்பு 6:24:152.
வெறியாட்டு 6;24:155.
மடற்கூற்று 6:24:136.
குறியிடத்துய்த்தல் 6:24:164.
உடன்போக்கில் கை-
யடைப்படுத்தல் 6:24:166.
உடன்போக்கு 6:24:167-170.
நற்றாய் தேடல் 6:24:171.

—கந்தபுராணம்

98 கந்தபுராணம், 6:24:152-4,

99 பாரதியார் கவிதைகள், 281.

100 அனிச்ச அடி, அங்கம் 1; களம் 2.

| | | |
|---|---|---|
| 101 தோழி கையுறை மறுத்தல் | 3 | பாடல்கள் |
| கழற்றெதிர் மறை | 4 | ,, |
| தோழி வரைவு கடாயது | 3 | ,, |
| இற்செறிக்கப்பட்ட தலைமகள் தன்னெஞ்சிற்குக் கூறியது | 3 | ,, |
| வரைவு நீட்டித்தவழித் தோழி இயற்பழித்தாளாகத் தலைவி இயற்பட மொழிந்தது | 3 | ,, |
| தலைமகள் பொழுது கண்டழிந்தது | 3 | ,, |
| காமமிக்க கழிபடர் கிளவி | 3 | ,, |
| தன்னுட்கையாறெய்திடு கிளவி | 3 | ,, |
| வெறியாட்டயர்ந்துழித் தோழி அறத்தொடு நின்றது | 3 | ,, |
| | 28 | ,, |

—அனிச்ச அடி, அங்கம் 1; களம் 2.

102 தொல்.பொருள். 106:23.

103 ,, 112:39.

104 ,, 113:3-4.

105 குறுந்தொகை, 360:1-2.

106 ,, 53:2-4.

107 ஐங்குறுநூறு, 249.

108 நற்றிணை, 34:5-11.

109 ஐந்திணை ஐம்பது, 20.

110 ஐந்திணை எழுபது, 13.

111 முத்தொள்ளாயிரம், 127.

112 சிலப்பதிகாரம், 24:11.

113 நாலாயிர திவ்வியப்பிரபந்தம், 2471.

114 ,, 2472.

115 ,, 3599.

116 கந்தபுராணம், 6:24:155.

117 தனிப்பாடல் திரட்டு
தொகுதி 1 - 419, 564, 836, 852, 1035, 1036, 1084
தொகுதி 2 - 51-57, 87, 339.
தொகுதி 3 - 754, 755.
தொகுதி 5 - 250, 338, 339, 460, 470, 628, 632, 652.

118 நா. செயராமன், தமிழ் இலக்கிய நெறிகள், 101.

119 அ. கந்தசாமிப் பிள்ளை, ''கோவை'' கலைக்களஞ்சியம், தொகுதி 4, 337.

120 அ.ம. சத்தியமூர்த்தி, ''கோவை இலக்கியம்—கரந்தைக் கோவை'', சுவடியியல் பதிப்பாய்வேடு, 16.

121 பாரதிதாசன், தேனருவி. 57.

122 தொல். பொருள். 112:41-42.

123 ,, 204.

124 இறையனார் அகப்பொருள், நக்கீரர் உரை, 29:6.

125 ஐங்குறுநூறு, 248.

126 குறுந்தொகை, 23.

127 கலித்தொகை, 111:20-24.

128 ,, 41:40-44.

129 ,, 39:20-25.

130 அகநானூறு, 48.

131 திணைமாலை நூற்றைம்பது, 12.

132 முத்தொள்ளாயிரம், 127.

133 நாலாயிர திவ்வியப் பிரபந்தம், 2075.

134 ,, 2076.

135 ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, 57.

136 ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை, 7:7-14.

137 சீவக சிந்தாமணி. 2073:3-4, 2074:4, 2075:2. 2076:4.

138 ,, 1052:3-4.

139 ,, 1053.

140 நந்திக் கலம்பகம், 67.

141 நம்பியகப் பொருள், 48.

142 த. அழகப்பராசு, ''காதல் இலக்கியங்கள்'' இலக்கியக் கொள்கை-8, 128.

143 தொல். பொருள், 42:2.

144 ,, 43:8-9.

145 ,, 44:2-4.

146 ,, 113:8-9.

147 அகநானூறு, 385:15-18.

148 நற்றிணை, 12:4-6.

149 அகநானூறு, 383:12.

150 நற்றிணை, 293:6-10.

151 ஐங்குறுநூறு, 381.

152 ,, 385.

153 வ. சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், 86, 360.

154 நாலாயிர திவ்வியப் பிரபந்தம், 297.

155 ,, 300.

156 ,, 1208.

157 ,, 300, 301, 305.

158 கந்தபுராணம், 6:24:166.

159 நந்திக்கலம்பகம், 32.

160 இராவண காவியம், 69.

161 கலித்தொகை, 103:63-64.

162 ,, 103:23-32.

163 ,, 104:63-64.

164 ,, 106:34-45.

165 ,, 104:73-76.

166 இறையனார் அகப்பொருள், நக்கீரர் உரை, 30.

167 தொல்.பொருள். 194.

168 அ.அ. மணவாளன்: ''சங்க இலக்கியம்'', தமிழ் இலக்கியக் கொள்கை-1, 40.

169 இறையனார் அகப்பொருள், நக்கீரர் உரை, 30.

170 அ.அ. மணவாளன், ''சங்க இலக்கியம்'' தமிழ் இலக்கியக் கொள்கை-1, 40-41.

171 குறுந்தொகை, 163.

172 நற்றிணை, 102 (கு.); குறுந்தொகை, 107 (ம.) நற்றிணை 54 (நெ.), 70 (ம.); அகநானூறு 170 (நெ.).

173 திணைமாலை நூற்றைம்பது, 38:3-4.

174 ஐந்திணை ஐம்பது, 42.

175 நாலாயிர திவ்வியப் பிரபந்தம், 3656.

176 ,, 3664.

177 திருவரங்கக் கலம்பகம், 48

178 முக்கூடற்பள்ளு, 49.

179 அனிச்ச அடி, அங்கம் 1; களம் 2.

180 இரா. மணியன், அண்ணா கோவை, 221.

181 தொல்.பொருள். 117.

182 அன்னிதாமசு (ப.ஆ.), பிரபந்தத்திரட்டு, 30.

183 அகநானூறு, 170:1-8.

184 முத்தொள்ளாயிரம், 38.

185 ,, 70.

186 தூது: தோழி 11, 70; நெஞ்சு 6, 29, 39, 101, வாடை 41, 71; நாரை 38, 96; யானை 40.

—முத்தொள்ளாயிரம்

187 நாலாயிர திவ்வியப் பிரபந்தம், 2122.
188 ,, 3035.
189 ,, 2077.
190 ,, 1943.

191 தூது :

நந்திக்கலம்பகம் : 7 (கிளி), 91 (கம்புள்), 108 (மேகம்).

மதுரைக் கலம்பகம் : 30 (பறவை)

அம்பலவாணர் தேசிகர் கலம்பகம்: 23 (நாரை) 24-26 (வண்டு), 21 (கார்)

தணிகைக் கலம்பகம்: 22 (வண்டு)

திருவரங்கக் கலம்பகம்: 30 (நாரை), 25 (வண்டு), 12, 70 (மேகம்)

கச்சிக் கலம்பகம்: 17 (கிளி), 31, 52 (வண்டு), 42 (மேகம்), 32 (தோழி), 44 (நெஞ்சு).

192 கச்சிக் கலம்பகம், 44.

193 ,, 42.

194 ,, 52.

195 திருக்குற்றாலக் குறவஞ்சி, 43.

196 தனிப்பாடல் திரட்டு - 1, 546.

197 தனிப்பாடல் திரட்டு (1,2,3,4,5-தொகுதியைக் குறிக்கும்)
தோழி: 1-920, 923, 1001, 1075; 5-468.
நாரை. 1 - 844; 5-408.
அன்னம்: 1 - 546.
வண்டு; 1-884, 902, 953; 4-867; 5-608.
கிளி: 2-348, 349; 4-951; 5-644, 647.

198 சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சு விடுதூது, 311.

199 தா. ஈஸ்வரப் பிள்ளை, ''தமிழில் தூது இலக்கியங்கள்''.
டாக்டர் பட்ட ஆய்வேடு, 505.

200 ,, 473.

201 ,, 473.

202 முத்தொள்ளாயிரம், 58.

203 அப்பர் தேவாரம், 5/39:2.

204 நாலாயிர திவ்வியப் பிரபந்தம், 3775.

205 ,, 3775.

206 ,, 3606.

207 ,, 628:4.

208 கோயில் நான்மணி மாலை, 22:3-4.

209 கமலை ஞானப்பிரகாசர், தந்திவனப் புராணம், 179.

210 மாலை வேண்டல்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தோழி கூற்று | 44 | 45 | 54 | 59 | 70 | 82 |
| தலைவி கூற்று | 48 | 63 | 92 | 100 | | |
| தாய் கூற்று | 26 | 66 | 83 | | | |

—நந்திக் கலம்பகம்

211 நந்திக் கலம்பகம், 26:3-4.

212 திருமலையாண்டவர் குறவஞ்சி, 65.

213 விக்கிரம சோழனுலா, 261.

214 புறப்பொருள் வெண்பாமாலை, 9, கொளு. 45.

215 தனிப்பாடல் திரட்டு, 1-953.

216 இ. வெ. அனந்தராமையர் (ஆராய்ச்சிக் குறிப்புரை), கலித்தொகை, 142:24-28.

217 முத்தொள்ளாயிரம், 31.

218 திருக்குற்றாலக் குறவஞ்சி, 38.

219 இ. சுந்தரமூர்த்தி, 'கூடலிழைத்தல்', ஆ.கோ. 4. 129.

220 தொல்பொருள், 99.

221 ,, 100.

222 ,, 109:21.

223 ,, 38.

224 குறுந்தொகை, 182:1,4-6.

225 கலித்தொகை, 138:28.

226 ,, 139:24-25.

227 ,, 140:15-16.

228 ,, 139:15-17.

229 குறுந்தொகை 182:4.

230 கலித்தொகை, 61:22.

231 குறுந்தொகை, 173:2-3.

232 கலித்தொகை, 138:3-4.

233 குறுந்தொகை, 14:5-6.

234 கலித்தொகை, 138:12-13.

235 ,, 147:60.

236 குறுந்தொகை, 173:2.

237 கலித்தொகை, 139:11.

238 ,, 141:5.

239 குறுந்தொகை, 182:1.

240 நற்றிணை, 146:3.

241 குறுந்தொகை, 182:2.

242 கலித்தொகை, 138:8-9.

243 ,, 138:18-19.

244 ,, 140:7.

245 குறுந்தொகை, *173:1-2.*
246 ,, *17:1-2.*
247 நற்றிணை, *146:1.*
248 கலித்தொகை, *140:4.*
249 ,, *139:8-9.*
250 குறுந்தொகை, *182:3.*
251 கலித்தொகை, *141:9-10.*
252 ,, *58:22.*
253 ,, *138:10.*
254 நற்றிணை, *146:2.*
255 கலித்தொகை, *138:26.*
256 ,, *139:13.*
257 ,, *141:22.*
258 ,, *140:1-2.*
259 ,, *139:4.*
260 ,, *139:1, 33.*
261 ,, *141:22-25.*
262 நற்றிணை, *377:1.*
263

| | குறுந். | நற். | கலி. | |
|---|---|---|---|---|
| கு. | 14, 17, 32, 173, 182, 276 | 146, 377 | 58*, 61 | *கைக்கிளை |
| நெ. | —— | 152, 342 | 138-141* | *பெருந்திணை |

264 மடல் *(1131)*, மடல் ஏறும் *(1132)*, ஏறும்மடல் *(1133)*, மடலொடு *(1135)*, மடலூர்தல் *(1136)*, மடல்ஏறா *(1137)*.
—திருக்குறள்
265 திணைமாலை நூற்றைம்பது. *16.*
266 தொல். பொருள்., நச்சினார்க்கினியம், *35.*
267 புறப்பொருள் வெண்பாமாலை *17*, கொளு *21.*
268 பெரிய திருமடல் *37-39.*
269 சென்னைப் பல்கலைக் கழகத்தில் உள்ள சமஸ்கிருதப் பேராசிரியர்கள் சி. எஸ். சுந்தரம், டாக்டர்

என். கங்காதரன் ஆகியோர் மூலம் ஆழ்வார் காட்டிய வடநெறிக்குத் திறனாய்வாளர்களால் காட்டப்படும் குறிப்பு அகப்பொருள் சூழலில் பயின்றுவரும் 'மடல்' பற்றிய குறிப்புடன் ஒப்ப வைத்து எண்ணத்தக்கது அன்று என்பது தெரியவந்தது.

270 எஸ். வையாபுரிப்பிள்ளை, இலக்கிய உதயம் (இரண்டாம் பகுதி), 171.

271 The Sanskrit tradition referred to by the Alvar is sought to be suggested in the following passage of the Ramayana:

'ya na sakyā purā drastum bhūtairā kāsagairapi'
या न शक्या पुरा द्रष्टम् भूतैरा काशगैरपि

N. Narasimhachary, 'The Bhakta (consert) Bhagavan relationship according to Sri Ramanuja's Sampradaya", 8.

272 பெரிய திருமடல், அண்ணங்காராசாரியார் உரை, 39.

273 ,, 5.

274 காதா சப்த சதி மொழிபெயர்ப்பாசிரியர் மூலநூலில் உள்ள அனைத்துப் பாடல்களையும், மொழிபெயர்க்கவில்லை என்ற செய்தி நூல் முன்னுரையால் தெரிய வந்தது. எனவே அவரால் மொழிபெயர்க்காது விடப்பட்ட பாடல்களில் மடல் பற்றிய குறிப்பு இருக்குமோ என எண்ணிக் கடிதம்மூலம் தொடர்பு கொள்ளப்பட்டது. அதற்கு அவரது பதில்:

காதா சப்த சதியில் 'மடல்', ஆண்களோ பெண்களோ மடலூருவது போன்ற செய்திகள் இல்லை.

காதா சப்த சதி மொழிபெயர்ப்பாசிரியர் மு.க. ஜகந்நாத ராஜாவின் 24-5-86 நாளிட்ட கடிதம்.

275 ஆ. வேலுப்பிள்ளை, தமிழர் சமய வரலாறு, 124-125.

276 பன்னிரு பாட்டியல், 147.

277 சீவக சிந்தாமணி, 999.

278 வளையாபதி, 28.

279 நாலாயிர திவ்வியப் பிரபந்தம், 2554, 2555.

280 ,, 2556.

281 சேந்தனார், ஒன்பதாம் திருமுறை: திருவாவடுதுறை திருவிடைக் கழிப்பதிகம், 8.

282 ,, 9:1.

283 நந்திக் கலம்பகம், 22.

284 ,, 79:3-4.

285 ,, 59:1-2.

286 இளிவந்தன செய்தலாவது மடலூர்ந்தானும் வரைபாய்ந்தானும் என்றவாறு.

— இறையனாரகப் பொருள், நக்கீரர் உரை, 9.

மடன்மாகூறும் (தொல். பொருள். 102) ....உம்மையான் வரைபாய்வலெனக்கூறும் இடனும் உண்டென்றவாறு

— நச்சினார்க்கினியருரை

விரும்பியனபெற இயலாவிடத்து நிகழ்த்தப்படும் பிராயோப வேகம் - தற்கொலைமுறை, வரைபாய்தல்.

— திருமடல், பெரியவாச்சான்பிள்ளை உரை

மடலரிதாயினும் வரைபாய் வுண்டென அடல் வேலண்ணலை யஞ்சின ளெதிர்த்தல்

— தணிகைப்புராணம் 277 (களவுப்படலம்)

காமங்காழ் கொண்டமையால் மடலேறுதலும் வரைபாய்தலுமன்றிப் பிறிதொன்று செய்யக் கிடந்ததில்லையென மடற்பரி கொண்டமையின், காமம் மடலைத் தந்ததென்றான்.

— நற்றிணை, 152 பின்னத்தூர்
அ. நாராயணசாமி ஐயர் உரை.

மேலும் நற்றிணை 146, 342, 377 ஆகிய பாடல்களிலும் இக்குறிப்பைக் காணலாம்.

287 பன்னிரு பாட்டியல், 146.

288 ,, 147.

289 மடல் பற்றிய இலக்கணம் கூறும் பாட்டியல்

| | |
|---|---|
| பன்னிரு பாட்டியல் | (10 நூ.) |
| வெண்பா பாட்டியல் | (13 நூ.) |
| நவநீதப் பாட்டியல் | (14 நூ.) |
| *சிதம்பரப் பாட்டியல் | (16 நூ.) |

*பிரபந்த மரபியல் (16 நூ.)
*இலக்கண விளக்கம் (17 நூ. முற்பகுதி)
*தொன்னூல் விளக்கம் (17 நூ. முற்பகுதி)
*பிரபந்த தீபம் (18 நூ. முற்பகுதி)
*பிரபந்த தீபிகை (18 நூ. பிற்பகுதி)
பிரபந்தத் திரட்டு (19 நூ. முற்பகுதி)
*முத்துவீரியம் (19 நூ. நடுப்பகுதி)
*சுவாமிநாதம் (19 நூ. பிற்பகுதி)
யாப்பு நூல் (20 நூ. பிற்பகுதி)

**உலா மடலைச் சுட்டுவன**

**வரையறுத்த பாட்டியல்** *(14 நூ.)*

* - அரங்க நலங்கிள்ளி, ''பாட்டியல்கள்: ஓர் ஒப்பாய்வு'', டாக்டர் பட்ட ஆய்வேடு, பின்னிணைப்பு 2, 1983, பக். 4-18.

பிற இலக்கிய வகையுள் :

**பிரபந்தத் திரட்டு** 'ஆன்ம நிலை' (481), எதிர்மொழி நாடகம் (479), வெளிப்படை (485-486) ஆகிய நூல்களுள் மடல் பற்றிய செய்தி இருப்பதாகக் குறிப்பிடுகின்றது.

290 **நம்பியகப்பொருள்**, 244:1,5:6.

291 ,, 244 (உரை).

292 **கந்தபுராணம்**, 6:24:136.

293 காளமேகப் புலவர், **சித்திரமடல்**, 164-174.

294 **பிரபந்தங்கள் : அழகர் அந்தாதி**, 19.

295 **மதுரைக் கலம்பகம்**, 33.

296 கடிகை முத்துப்புலவர், **மதன வித்தாரமாலை**, 106-111 கண்ணிகள்.

297 க. கிருட்டிணமூர்த்தி (ப.ஆ), ''கன்னிவாடி நரசிங்கப்ப நாயக்கன் வளமடல்'', **பதிப்பாய்வேடு**, 336-338 கண்ணிகள்.

298 ச. அகஸ்தியலிங்கம், ''மடல்'' **கலைக்களஞ்சியம், தொகுதி-8**, 48.

299 **இரட்சணிய யாத்திரிகம்**, இரக்ஷணிய சரிதப்படலம், 213.

300 **தொல். பொருள்.** 44:23-24.

301 ,, 145:15-16, 28-31.

302 ,, 148:6 9, 14.

303 வ. சுப. மாணிக்கம், **தமிழ்க்காதல்**, 102/291.

304 Rm. Periakaruppan, **Tradition and Talent in Cankam Poetry**, 192.

305 ஐங்குறுநூறு, 70.

306 ,, 65.

307 அகநானூறு, 26:12-18.

308 Her (Heroine) child-birth is the sole reason for the hero's separation on account of prostitues.

—Rm. Periakaruppan, **Tradition and Talent in Cankam Poetry**. 196.

309 ஐந்திணை ஐம்பது. 22.

310 மு. சண்முகம் பிள்ளை, அகப்பொருள் மரபும் திருக்குறளும் 195.

311 வெ. சுப. அழகப்பன், ''வள்ளுவரும், அகத்துறையும், ஆ.கோ. 5, 19.

312 நா. செயராமன், ''காமத்துப்பாலும் அகப்பொருளும்'' ஆய்வுக்கோவை 12-1, 327.

313 கு. மோகனராசு, தொல்காப்பியமும் திருக்குறளும் ஓர் ஒப்பாய்வு, 287.

314 வ. சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், 293.

315 ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, 89.

316 கல்வளையந்தாதி, 37.

317 தனிப்பாடல் திரட்டு, தொகுதி 1, 553, 729, 783, 830.

318 பாரதிதாசன், இசையமுது 2, 32.

319 பாரதிதாசன், காதல் பாடல்கள், 25.

320 பாரதிதாசன், தேனருவி, 64.

# 4

## இயல் நான்கு

## கூற்று

# கூற்று

## (அ) கூற்று நிகழ்த்துவோர்

தொல்காப்பியர் அகத்திணையியல், களவியல், கற்பியல் ஆகிய வற்றில் கூற்றுக்குரியோரின் (விறலி தவிர) கூற்று நிகழிடங்களைப் பற்றி விளக்குகின்றார்;[1] பொருளியல், செய்யுளியல் ஆகியவற்றில் கூற்றிற்குரியோரின் சில அக இலக்கியக் கோட்பாடுகளையும் எடுத்துக் கூறுகின்றார். செய்யுளியலில் கூற்றுக்குரியரைக் கைகோள் அடிப்படையில் பின்வருமாறு பிரித்துக் காட்டுகின்றார் (490, 491).

*களவுக்கும் கற்பிற்கும் உரியர்*

1. பார்ப்பான்
2. பாங்கன்
3. தோழி
4. செவிலி
5. கிழவன்
6. கிழத்தி

*கற்புக்கு மட்டும் உரியர்*

7. பாணன்
8. கூத்தன்
9. விறலி
10. பரத்ஂதை
11. அறிவர்
12. கண்டோர்

மேலும் கூற்றுக்குரியர் மட்டும் அகப்பொருளில் பயின்று வருவ தில்லை; அகப்பொருள் மாந்தர் அனைவரும் கூற்றுக்கு உரிமை உடையவரும் அல்லர். இதனைத் தெளிவுபடுத்த விரும்பிய தொல் காப்பியர்,

ஊரும் அயலுஞ் சேரி யோரும்
நோய்மருங் கறிநருந் தந்தையுந் தன்ஐயும்

கொண்டெடுத்து மொழியப் படுத லல்லது
கூற்றவண் இன்மை யாப்புறத் தோன்றும்[2]

எனச் சொல்லி கூற்றுக்குரிமையற்றோர் இவரிவரென வரையறுக்கின்றார்.

தொல்காப்பியர் கூற்றுக்குரியோருள் இன்னின்ன பாத்திரங்கள் இவ்இவ் இடங்களில் பேசலாம்; இன்னின்ன இடங்களில் பேசக் கூடாது என இலக்கணம் செய்துள்ளார்; அதாவது, அவர் கூற்றுக்குரிய சூழலைச் சொல்லும் போது கூற்று நிகழிடங்களை மட்டுமின்றி அகப்பொருளின் தன்மையையும் போக்கையும் விளக்கியுள்ளார் எனக் கொள்ளலாம்.

தொல்காப்பியர் எடுத்துரைத்த கூற்றுக்குரியர் பற்றிய இலக்கியக் கோட்பாடுகள் அவர் காலம் முதல் இன்று வரையுள்ள இலக்கியங்களில் பயின்று வருகின்றனவா? இல்லையெனில் அவற்றில் திரிபும், நெகிழ்ச்சியும், வீழ்ச்சியும் காணப்படுகின்றனவா என்பன போன்றவற்றை வரலாற்றுவழி சில இலக்கியச் சான்றுகளுடன் காணலாம்.

தொல்காப்பியம் கூற்று நிகழ்த்துவோராகக் கூறிய அனைத்து மாந்தர்களும் இங்கு ஆய்வுக்குட்படுத்தப்படவில்லை. இடங்கருதியும் காலங்கருதியும் மாதிரிக்காகத்

தோழி
தலைவி
தலைவன்
நற்றாய்
செவிலி
கண்டோர்

ஆகிய அறுவர் கூற்றுகள் மட்டுமே எடுத்துக்காட்டப் பெறுகின்றன.

## 1. தோழி கூற்று

தொல்காப்பியர் தோழி கூற்று நிகழிடம், சூழல், கேட்போர் ஆகியனவற்றை விரிவாக எடுத்துக் கூறியுள்ளார்.[3] எட்டுத் தொகையிலுள்ள ஐந்து அகப்பொருள் நூல்களில் தோழி கூற்றாக அமைந்த பாடல்கள் 777. அதாவது சங்க அகப்பாடல்களுள் (குறிஞ்சிப்பாட்டு தவிர) 41.94 விழுக்காடு தோழி கூற்றிற்குரியனவாக அமைந்துள்ளன.

அகமாந்தர் கொள்ளும் மனப் போராட்டங்களுக்கு
உளவியல்வழித் தீர்வு காண்பதற்கெனப்
படைக்கப்பட்ட படைப்பு தோழி[4]

என்பர். தோழி கூற்றுப் பாடல்களின் எண்ணிக்கை மிகுதியும், அவள் கூற்று நிகழிடங்களும் அவற்றின் நோக்கமும் அப்பாத்திரத்தின் இன்றியமையாமையைக் காட்டும்.

தோழி கூற்றைக் கேட்போராக வரும் அகமாந்தர்களும் அவர்களுக்குரிய பாடல்களின் எண்ணிக்கையும் பின்வருமாறு:

தலைவன் 300 (38. 7%), தலைவி 289 (37.55%),
தலைவி தலைவன் சிறைப்புறம் 96 (12.39%),
செவிலி 36 (4. 52%), பாணர் 12 (1. 42%),
வாயில் 6 (0. 78%), தாய் 3 (0. 39%),
விறலி 2 (0. 26%), அறிவர் 1 (0.13%),
தெய்வம் 1 (0. 13%)[5]

தோழி தலைவனிடம் கூறும் கூற்றுக்கள் அதிகமாக உள்ளன. தோழி கூற்று, தலைவன் தலைவியரைப் பற்றியதாக அமையும்; சிறப்பாகத் தலைவியின் களவு வாழ்வு அரும்பி, மொட்டாகி மலர்ந்து கற்பு மணம் பெறக் காரணமாக அமையும். எனவே அவள் கூற்றை மிகுதியும் கேட்போனாகத் தலைவன் அமைவது மரபு. இதனை அக இலக்கிய நெறி எனக் கொள்ளலாம்.

கூற்றுக்குரியார் கேட்போர் பற்றிய மரபுகளில் அக இலக்கியக் கோட்பாடுகள் சில பொதிந்து கிடக்கின்றன. காட்டாகத் தோழி கூற்றைக் கேட்போராகப் பாங்கனோ, பாகனோ இடம் பெறுவதில்லை; தலைவன் கூற்றைக் கேட்போராகச் செவிலியைப் புலனெறிப்படுத்தும் மரபு இல்லை. இங்ஙனம் கூற்றுக்குரியார் வழிக் கேட்போரையும், கேட்போர் மூலம் கூற்றுக்குரியாரையும் சில சூழல்கள் தீர்மானிக்கின்றன.

திருவள்ளுவர் காமத்துப்பாலில் அகத்திணை நிகழ்ச்சிகள் சிலவற்றை இருபத்தைந்து அதிகாரங்களில் எடுத்துரைக்கின்றார். அவற்றுள் தோழி கூற்றுக்குரிய குறள்கள் இருப்பதைத் துறைக் குறிப்புவழி அறிகின்றோம்.

'முனிந்தார் முனிவு ஒழிய'த் தோன்றிய ஆறு அகப்பொருள் நூல்களுள்ளும் தோழி கூற்றுக்குரிய பாடல்கள் உள்ளன. அவற்றைக் கேட்போராகத் தலைவன், தலைவி, செவிலி, பாணர் வாயில் ஆகியோர் அமைகின்றனர்.

முத்தொள்ளாயிரத்தில் தோழியானவள் தலைவி, மன்னன், நெஞ்சு ஆகியோரிடம் கூற்று நிகழ்த்துவதாகப் பாடல்கள் உள்ளன.[6] அவை கூற்று அடிப்படையில் அகமரபைப் பின்பற்றியிருப்பினும் பொருண்மை நிலையில் அகப்பொருளினின்றும் வேறுபடுகின்றன.

சிலப்பதிகாரத்தில் கானல்வரியில் தோழி கூற்றுப் பாடல்கள் (5, 6, 7, 28, 31, 37-39) உள்ளன: அவை தலைவனிடம் கூறுவ தாகும்; காப்பிய மாந்தர்களின் மனக்குமுறல்கள் பிரதிபலிக்கப் பயன்படுத்தப்பட்டன. குன்றக் குரவையிலும் சில பாடல்கள் (8-14) குறிஞ்சித் திணைக்குரியனவாக உள்ளன.

திருக்கோவையாரில் 169 பாடல்கள் (42.25%) தோழிக்குரியன. அவை இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு தவிர ஏனைய கிளவித்தொகைகளில் இடம் பெற்றுள்ளன. அவள் மிகுதியாகப் பேசுமிடங்கள் பகற்குறி (24), சேட்படை (22), இரவுக்குறி (21), உடன்போக்கு (17), வரை பொருட்பிரிதல் (15), வரை முடுக்கம் (14) ஆகியன.

திருக்கோவையாரிலிருந்து நூறு துறைகளையும் அதற்குரிய பாடல்களையும் எடுத்துக்காட்டி நூறு பாடல்களை யாத்த கல்லா டனாரது கல்லாடத்தில் உள்ள தோழி கூற்றுப் பாடல்கள் முப்பத் தெட்டு (38%). அவற்றுள் களவிற்குரியன இருபத்திமூன்று. கற்பிற் குரியன பதினைந்து.

திருவிருத்தத்திலும் (3660, 3662, 3666, 3673) திருவாய் மொழியிலும் (2678-2688, 2942-2952) தோழி கூற்றுப் பாசுரங் கள் பாடப் பெற்றிருக்கின்றன. திருவாய்மொழியிலுள்ள தோழிப் பாசுரம் தாயாரிடம் உரைப்பதாக அமைந்தது; அயல் மணம் விலக்குவித்தல் பொருண்மையைப் பெற்றவை. தலைவி நிலை கண்டு ஆற்றாமையால் தோழி உரைக்கும் பாசுரங்கள் பல.[7]

பதினோராம் திருமுறையில் பல நூல்களில் அகத்துறையில மைந்த பனுவல்கள் உள்ளன. ஆளுடைய பிள்ளைய திருவந் தாதியில் பருவங்கண்டு ஆற்றாத தலைவிக்குக் கூறல் (23), பிறை கண்டு கலங்கிய தலைவி நிலை கூறல் (53). இச்செறிப்பு (29), நொதுமலர் வரைவு (10), மடல் விலக்கு (35), அறத்தொடு நிற்றல் (57, 69, 70) போன்ற துறைகளுக்குரிய தோழி கூற்றுப் பாடல்கள் பலவாகும்.

ஆளுடை பிள்ளையார் திருமும்மணிக்கோவையில் இரவு வரல் விலக்கல் (13) வரவுணர்த்தல் (18) என்பன தோழி கூற்றுப் பாடல் களாகும்; ஆளுடை பிள்ளையார் திருக்கலம்பகத்தில் வரைவு கடாதல் (16) அறத்தொடு நிற்றல் (8) இரவு வரல் விலக்கல் (6) ஆகிய பாடல்கள் உள்ளன.

**பழமலையந்தாதி** *(49, 51, 73, 80-82)*, **திருஏகம்பமுடையார் திருவந்தாதி** *(11-14, 16-18, 27, 54, 80, 97)*, **கல்வளையந்தாதி** *(17, 18)*, **மருதூரந்தாதி** *(18, 25, 42, 52)*, **திருவாரூர் மும்மணிக் கோவை** *(1, 7, 10-12, 27)* **திருவலஞ்சுழி மும்மணிக்கோவை** *(5,7)*, **கோயில் நான்மணிமாலை** *(11, 23)*, **திருவேங்கடத்தந்தாதி** *(21)* ஆகிய நூல்களில் தோழி கூற்றுப் பாடல்கள் அமைந்திருக்கின்றன. அவை கோவை நூல்கள் போன்று போன்று இல்லாமல் துறைத் தொடர் பின்றி நூல் முழுதும் அங்கொன்றும் இங்கொன்றும் ஆக அமைந் துள்ளன. அவை இறைவன் எழுந்தருளியிருக்கும் திருத்தலத்தின் சிறப்பை அகமாந்தர் கூற்று மரபைப் போற்றி வெளிப்படுத்து கின்றன.

நந்திக் கலம்பகத்தில் தோழி கூற்றுப் பாடல்கள் பல உள்ளன.[8] அவை மாலை வேண்டல், தூது, காதற்சிறப்புரைத்தல் ஆகிய பொருண்மைகளில் அமைந்தவை. அவற்றுள் ஒன்று:

நெஞ்சாகுல முற்றிங்ங னோமெலிய
  நிலவின்கதிர் நீளெரி யாய்விரியத்
துஞ்சாநய னத்தொடு சோருமிவட் (கு)
  அருளாதொழி கின்றதுதொண்டைகொலோ?[9]

என நந்தி மன்னனிடம் தலைவிக்காகத் தொண்டைமாலையை வேண்டுகின்றாள் தோழி.

மதுரைக் கலம்பகத்தில் சில பாடல்கள் *(6, 25, 31, 88, 73, 78)* தலைவியின் காமநோயைத் தோழி கூற்றில் வெளிப்படுத்துவன வாகும்.

பள்ளு இலக்கிய வகையில் அகத்துறைப் பாடல்கள் உள்ளன. அவை ஆற்று வருணனையில் ஒவ்வொரு திணையை வருணிக்கும் பாடல்களுக்கு இடையில் இடம் பெற்றுள்ளன. அதாவது குறிஞ்சி நில வருணனைக்குப் பின் அகத்திணைக்குரிய துறைப்பாடல் ஒன்று அமையும். அது அகமாந்தர் கூற்றில் வரும். அம்முறையில் முக்கூடற் பள்ளில் தோழிக்குரிய பாடல்களாக இரண்டு *(41, 45)* காணப்படுகின்றன. அவை இரவுக்குறி மறுத்தல், தலைவி நிலை கண்டு கலங்கல் ஆகிய துறைகளுக்குரியன.

காப்பியங்கள், **அரிச்சந்திர புராணம்** (தோழி *194*, தோழிமார் *217*), **நளவெண்பா** (கோமகள் தன் தோழியர்கள் 59:1), **நைடதம்** *(1145:2, 1146:2)* போன்றவை தோழி என்ற பாத்திரப்படைப் பைப் படைத்துக் காட்டுகின்றன. எனினும் அவள் அகத்திணைத் தோழி அல்லள்.

பாரதியார் கவிதைகளில் அகத்துறைப் பாடல்கள் சிலவற்றில் தோழி இடம் பெற்றுள்ளாள்.

பாரதிதாசனது தேனருவியில் அகத்துறையைப் பின்பற்றிய பாடல்கள் உள்ளன. அவற்றுள் தோழி கூற்றுப் பாடல்கள் (38, 39, 42, 43, 47-49, 53) தலைவன், செவிலி, தலைவி ஆகியோரை நோக்கி அமைந்துள்ளன. அவற்றுள் ஒன்று:

பெற்றோர் அறிந்திலர்
உற்றார் தெரிந்திலர்
கற்றவனே இவளைக் கொண்டாய்
கங்குலில் வரச்சொல்லிவிண்டாய்
..........................................................
கூந்தல் நரைத்தாலும்
கொண்ட நின் காதற்சொல்
ஏந்திய பெண்ணினைத் தள்வையோ?
இன்று போல் என்றும் நீ கொள்வையோ?[10]

இப்பாடல்

அண்ணாந்து ஏந்திய வனமுலை தளரினும்
பொன்நேர் மேனி மணியின் தாழ்ந்த
நல்நெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்
நீத்தல் ஓம்புமதி—பூக்கேழ் ஊர[11]

என்ற நற்றிணைப் பாடலை அவர் தன்மொழிப் படுத்தியிருப்பதைக் காட்டுகின்றது. சங்க இலக்கியத்தில் ஈடுபாடு கொண்ட பாரதிதாசன் இத்தன்மைத்தான அகமாந்தர் கூற்றுக்குரிய பாடல்களைத் தமது கவிதைகளில் புனைந்துள்ளார்.

கவியரசு கண்ணதாசன் கவிதைகளில் 'தலைவன் தலைவி ஆகிய இருவர் கூற்றுக்குரிய பாடல்களே காணப்படுகின்றன. தோழி தலைவனிடத்துத் தலைவிபால் தூது அனுப்பப்படுகின்ற அளவுக்கே இடம் பெறுகின்றாளேயன்றி கூற்று நிகழ்த்துவதில்லை'[12] என முடிவு செய்துள்ளார் ஓர் ஆய்வாளர்.

இங்ஙனம் தோழி கூற்று மரபைத் தொல்காப்பியர் காலம் முதல் இன்று வரையுள்ள இலக்கியங்கள் போற்றியுள்ளன. எனினும் சங்க அகப் பாடல்களிலும் சங்கம் மருவிய காலத்து ஆறு அகப்பொருள் நூல்களிலும் இடம் பெற்றுள்ள தோழி கூற்றுத் தவிர, ஏனையவற்றில் இடம் பெற்றிருப்பவை அகப்பொருளுக்குரியன அல்ல; அதனின்றும் மருவியும், திரிந்தும், நெகிழ்ந்தும், விலகியும் அமைந்தவை.

## 2. தலைவி கூற்று

தலைவி கூற்று நிகழிடங்கள் பற்றித் தொல்காப்பியர் விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்; அவற்றுள் கேட்போர் பற்றிய சூழலும் இடம் பெற்றுள்ளது.[13]

சங்க அக இலக்கியத்தில் தோழிக்கு அடுத்து தலைவி கூற்றுப் பாடல்கள் மிகுதியாக உள்ளன. எட்டுத் தொகையில் உள்ள தலைவி கூற்றுக்குரிய அகப்பாடல்கள் 548; அதாவது 29.76 விழுக்காடு ஆகும். அவற்றின் வழி அறியலாகும் கேட்போரின் எண்ணிக்கையும் விழுக்காடும் கீழ்க்காணுமாறு:

> தோழி 337 (61.64%), தோழி+தலைவன்/
> தலைவன் சிறைப்புறம் 57 (10.36%), தலைவன்
> 54 (9.82%), இல்லை 22 (4.36%), தன்னுள்
> 19 (3.45%), பாணன் 18 (3.27%), நெஞ்சு
> 9 (1.27%), வாயில் 6 (1.09%), மகன் 3
> (0. 55%), ஆறு 2 (0.36%), நாரை 2
> (0.36%)[14]

மேலும் காமமிக்க கழிபடர் கிளவியில் கடல், சேவல், தும்பி நண்டு, மேகம் போன்றவற்றை விளித்துப் பேசுவதாக அமைந்த பாடல்களும் உண்டு.[15]

இவற்றுள் சில பாடல்கள் மட்டும் சற்றுப் புதுமையான-மிகுதியும் பயின்று வாராத துறைக் குறிப்பு* அல்லது பொருண்மை உடையன. அவை தலைவி கூற்று மரபு வளர்ச்சியை வரலாற்று நோக்கில் காணும்போது ஒப்புநோக்கத் தக்கன. எனவே ஈண்டு ஒரு சான்று எடுத்துக் காட்டப்படுகின்றது. தலைவன் ஊருக்குச் செல்ல விழையும் தலைவி,

> மனையுறை வாழ்க்கை வல்லியாங்கு
> மருவின் இனியவும் உளவோ
> செல்வாம் தோழி! - ஒல்வாங்கு நடந்தே[16]

எனத் தோழியிடம் மொழிகின்றாள். இத்தன்மைத்தான பொருண்மையுடைய பாடல்கள் பக்தி இலக்கியத்துள் பயின்று வருவது ஈண்டு நினைவு கூரற்பாலது;

---

* பூப்பெய்திய தலைவி உரைத்தது (குறுந். 157)....

பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள ஆறு அகப்பொருள் நூல்கள் தலைவி கூற்றுக்குரியனவாக அமைந்த பாடல்களைப் பெற்றுள்ளன. அவற்றைக் கேட்போர் தோழி, தலைவன், பாணர், வாயில், அலவன், புறா, கடல் போன்றோராவர். சங்க அக இலக்கியம் போன்றே இந்நூல்களிலும் தலைவி கூற்றை மிகுதியும் கேட்பவளாகத் தோழி அமைந்துள்ளாள்.

முத்தொள்ளாயிரத்தில் தலைவி கூற்றுப்பாடல்கள் அதிகம் உள்ளன.[17] அவை தோழி, நெஞ்சு, செவிலி ஆகியோரை நோக்கியவை; மற்றும் காமமிக்க கழிபடர் கிளவியில் வாடை, நாரை, பிடி, குதிரை, ஊரார் ஆகியோரை விளித்துக் கூறுவதாகவும் உள்ளன. அவற்றுள் சில:

தளையவிழும் பூங்கோதைத் தாயரே! ஆவி
களையினுமென் கைதிறந்து காட்டேன் -
வளைகொடுபோம்
வன்கண்ணன் வான்மாறன் மால்யானை தன்னுடன்
வந்தென்கண் புகுந்தா னிரா[18]

இப்பாடல் தலைவி செவிலியிடம் நேரடியாகத் தன் காதலை வெளிப்படுத்துவதாக உள்ளது. அகப்பொருள் இலக்கியத்தில் தலைவி கூற்று நிகழிடம் இவ்வாறு அமையாது. அகப்பொருள் செவிலி உடன்போக்கில் இடம் பெறுகின்றாள். இங்ஙனம் முத்தொள்ளாயிரத்தில் கூற்று நிலையிலும் கேட்போர் நிலையிலும் மாற்றம் காணப்படுகின்றது.

சேரமன்னன் உலா வருவதைக் கண்ட ஒரு பெண், அவன் பல மகளிரால் விரும்பப்படுவதை,

இவனென் னலங்கவர்ந்த கள்வ னிவனெனது
நெஞ்சம் நிறையழித்த கள்வனென் - றஞ்சொலாய்
செல்லு நெறியெலாஞ் சேரலர் கோக் கோதைக்குச்
சொல்லும் பழியோ பெரிது[18]

எனப் புலப்படுத்துகின்றாள். ஆணும் பெண்ணும் தலைப்படும் இடமாக அகப்பொருளில் வீதி அமையாது; மேலும் காட்சி, ஐயம் தெளிவு, குறிப்பறிதல் ஆகியன நிகழ்ந்த பிறகு தலைமகன் மாட்டே கூற்று நிகழும்; தலைவியிடத்து அல்ல. இத்தன்மைகளால் முத்தொள்ளாயிரத் தலைவியின் கூற்று அகப்பொருள் தலைவியின் கூற்றிலிருந்து வேறுபட்டது எனத் தெளியலாம்.

தலைவி தான் கொண்ட காதலை ஊராரிடம் வெளிப்படுத்துவதாக அகப்பொருள் புலனெறி வழக்கம் செய்யாது. முத்தொள்ளாயிரத் தலைவி

நீரும் நிழலும்போல நீண்ட அருளுடைய
ஊரிரே யென்னை யுயக்கொண்மின் - போரிற்
புகலுங் களியானைப் பூழியர்கோக் கோதைக்
கழலுமென் னெஞ்சங் கிடந்து[20]

இங்ஙனம் கேட்போர் நிலையில் நிகழ்ந்த மாற்றம் முத்தொள்ளாயிரம் தோன்றிய காலத்திலேயே அகப்பொருள் மரபு திரிந்து விட்ட நிலைக்கு-குன்றிவிட்ட நிலைக்கு ஒரு சான்றாகும்.

தலைவி பாண்டியனைச் சுமந்து வரும் பிடியை நோக்க,

துடியடித் தோற்செவித் தூங்குகைந் நால்வாய்ப்
பிடியேயா னின்னை யிரப்பல் - கடிகமழ்தார்ச்
சேலேக வண்ணனொடு சேரி புகுதலுமெஞ்
சாலேகஞ் சார நட[21]

என வேண்டுகின்றாள். அகப்பொருள் தலைவியின் கூற்று இயற்கைப் புணர்ச்சிக்குப்பின் நிகழும்; ஒத்த காமமுடையது. முத்தொள்ளாயிரத் தலைவியின் கூற்று கைக்கிளைப் பொருண்மைக்குரியது; எனவே அகத் தலைவியின் கூற்றிலிருந்து நெகிழ்ந்தும் திரிந்தும் காணப்படுகின்றது.

சிலப்பதிகாரத்தில் குன்றக் குரவையில் தலைவி தோழியிடம் கூறுவதாக அகத்துறைப் பாடல்கள் (4-6, 32, 36, 40-45) உள்ளன.

திருக்கோவையாரில் அறுபது பாடல்கள் (15%) தலைவி கூற்றிற்குரியன. அவை மிகுதியும் இடம் பெறும் கிளவித்தொகைகள் பரத்தையிற் பிரிவு (18) வரைபொருட்பிரிதல் (10), ஒருவழித் தணத்தல் (10) ஆகியனவாகும்.

அப்பர் தேவாரத்தில் தலைவி சிவன் உறையும் திருவதிகை வீரட்டத்தைக் கண்டு களித்தாலொழியக் கண்ணுறங்காது என்கின்றாள்.

வண்டார்கொன்றையு மத்தம் வளர்சடைக்
கொண்டான் கோல மதியோ டரவமும்
விண்டார் மும்மதி லெய்தவண் வீரட்டம்
கண்டா லல்லதென் கண்டுயில் கொள்ளுமே[22]

என்ற அப்பாடல் இறைவனைக் காண ஏங்கும் நாயகியின் நிலையைக் காட்டுகின்றது.

மனமுருக வளைகழல மாயம்பேசி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே[23]

என்ற தலைவி கூற்றுப்பாடல் வளைகழலுதல் என்று அகக்கூறு உடையதெனினும் மானுடக் காதல் பற்றியதன்று; இதே போன்று சுந்தரர் தேவாரத்திலும் தலைவி கூற்றில் அமைந்த பாடல்கள் உள்ளன; அவை நிறைகவர்தல் (7:91:4), வளை நீங்கல் (7:36:6), தூது விடுதல் (7:37:4) ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றன. நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் தலைவியின் கூற்றிற்குரிய பாடல்கள் பல.* கண்ணன் மேல் காதல்கொண்ட தலைவி.

*மற்றொரு வர்க்கென்னைப் பேச லொட்டேன்*
*மாலிருஞ் சோலைஎம் மாயற் கல்லால்*
கொற்றவ னுக்கிவ ளாமென் றெண் ணிக்
கொடுமின்கள்; கொடீராகில் கோழம்பமே[24]

என வேண்டுகின்றாள். தலைவனின் உரு வெளித் தோற்றம் கண்ட தலைவி தாயரை நோக்கி,

எங்ஙனேயோ அன்னை யீர்காள்! என்னை முனிவது நீர்?
நங்கள் கோலத்திருக்கு *றுங்குடி நம்பியை நான் கண்டேன்*
சங்கினோடும் நேமியோடும் தாமரைக் கண்களோடும்
செங்கனிவாய் ஒன்றி னோடும்
செல்கின்ற தென் நெஞ்சமே[25]

எனத் தன் காதலை எடுத்துரைக்கின்றாள். இங்ஙனம் தலைவி தாயிடம் தன்நிலை கூறல் அகப்பொருளில் வராது. அதாவது தாய் தோழி கூற்றைக் கேட்பவளாக வருவாளே தவிர, தலைவி கூற்றைக் கேட்பவளாகப் புலனெறி வழக்கம் செய்யும் மரபு அகத்திணைக்குரிய தன்று. மேலும் பொருள்வயிற் பிரிந்த தலைவன் தலைவியின் உருவெளிப்பாடு காண்டல் மரபு. ஈண்டுத்தலைவி தலைவனின் உருவெளிப்பாடு கண்டு கூற்று நிகழ்த்துகின்றாள்.**

---

* 1118-27, 1758-67, 2612-21, 2766-76, 3041-51.

** அக இலக்கிய மரபுப்படி தலைவன் தலைவியின் உருவெளி காண்பதே மரபு. பக்தி இலக்கியம் என்பதால் தலைவன் நிலையில் இருக்கும் இறைவன் தலைவியின் உருவெளி காண்பதாகப் பாட முடியாது. அதனால் விளையும் பயனொன்றுமில்லை. ஆன்மா பரமான்மாவை அடையத் துடிக்கின்றது; எனவே தலைவி உருவெளிப்பாடு காண்பதாக மாற்றம் பெற்றுள்ளது.

பிரிவாற்றாத தலைவி தலைவன் வீற்றிருக்கும் திருக்குறுங்குடி (1788-97)க்குத் தன்னைக் கொண்டு சேர்க்குமாறு தோழியரை வேண்டுகின்றாள்.

குவளை மலர்நிற வண்ணர் மன்னு
குறுங்குடிக் கேயென்னை யுய்த்திடுமின்[26]

கோதை நறுமலர் மங்கைமார்வன்
குறுங்குடிக் கேயென்னை யுய்த்திடுமின்[27]

என்பன பாசுர அடிகள். தூதர் மீளும் அளவும் தனிமை பொறாத தலைவி தலைவன் நகரான திருவல்லவாழ் செல்ல நினைக்கின்றாள்; இந்நிலையில் தன்னைத் தடுக்கும் தோழியரிடம் தலைவி,

மானேய் நோக்குநல்லீர்! வைகலும் வினை யேன்மெலிய
வானார் வண்கமுகும் மதுமல்லிகை யுங்கமழும்
தேனார் சோலைகள்சூழ் திருவல்ல வாழுறையும்
கோனா ரைஅடியேன் அடிகூடுவ தென்றுகொலோ?[28]

எனத் தன் நிலை கூறிப் புலம்புகின்றாள். இச்சூழலும், அந்நிலையில் தலைவி கூற்று நிகழ்த்துவதும் அகப்பொருள் புலனெறி வழக்கில் அமையா;

தாய்மாரும் தோழிமாரும் உற்றாரும் தடுக்கவும் தலைவி திருப்பேரெயில் சேரத் துணிதலைப் பின்வருமாறு கூறுகின்றாள்.

வெள்ளச் சுகமவன் வீற்றி ருந்த
வேத வொலியும் விழா வொலியும்
பிள்ளைக் குழாவிளை யாட்டொலியும்
அறாத்திருப்பே ரெயில் சேர்வன் நானே[29]

இங்ஙனம் தலைவி தன் தாயிடம் தலைவன் ஊர் செல்லுதலைக் கூறுவதாகச் செய்யுள் செய்வது அகமரபுக்கு உரியதன்று. உடன் போக்கு நிகழ்ந்த பின்னோ அல்லது அறத்தொடு நிற்றலின் போதோ தாய் தன் மகளின் கனவைத் தோழிவழி அறிவது அகமரபாகும். பாசுரத்தில் காணப்படும் இக்கூற்று அகமரபின் திரிபாகும்.

பொருட்டக்கீர் சில்பலிக்கென் றில்புகுந்தீ ரேனும்
அருட்டக்கீர் யாதும்ஊர் என்றேன்—மருட்டக்க
மாமறையம் என்றார் வலஞ்சுழிநம் வாழ்வென்றார்
தாம் மறைந்தார்காணேன்கைச் சங்கு[30]

இப்பாடல் சிவன் தலைவியின் வளைகவர்ந்ததாகக் காட்டுகின்றது. இறைக் காதல் பற்றிய தலைவியின் கூற்று அனைத்து மானிடராலும்

உணரும் தன்மையதன்று; அகத்தலைவியின் கூற்று அனைத்து மானிடராலும் உணரக் கூடியதாகும்.

திரு ஏகம்பமுடையார் திருவந்தாதியில் கோவை நூலைப் போன்று இரண்டு தலைவர்கள் கொண்ட அகப்பொருள் துறையிலமைந்த தலைவி கூற்றுப் பாடல்கள் உள்ளன (11, 20, 23, 24, 49, 51, 90). அவற்றுள் ஒன்று:

ஏகம்பரரது தண்ணளிபோல் தலைவன் நீங்கிய
காலத்துக் கையினின்று கழன்ற வளையல்கள்
அவர்தம் தேர்வரவு கேட்டுப் பொலிவுபெற்று
இறுக்கம் பெற்றன[81]

என்று கூறுகின்றாள் தலைவி.

மற்றும் **திருவாரூர் மும்மணிக்கோவை** *(4, 19, 20, 28, 30)*, **ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்** *(10, 12, 19, 31, 43)*, **திருவேங்கடத்தந்தாதி** *(153)*, **பழமலையந்தாதி** *(33, 44-46, 63, 77, 83-85)*, **கல்வளையந்தாதி** *(29,37)*, **கோயில்நான்மணிமாலை** *(27)*, **ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி** *(3, 8, 59)*, **ஆளுடைய பிள்ளையார் மும்மணிக்கோவை** *(20, 24, 62, 96)* போன்ற பக்தி இலக்கியங்களிலும் தலைவி கூற்றுப் பாடல்கள் விரவிக் கிடக்கின்றன.

நந்திக் கலம்பகத்தில் தலைவிக்குரியவனவாக ஏறக்குறைய 21 பாடல்கள் உள்ளன;[82] அவற்றைக் கேட்போராகத் தோழி, செவிலி, பாணன், பாலன் போன்றோரைக் காட்டும். மதுரைக் கலம்பகத்தில் தலைவி கூற்றிற்குரிய பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

பள்ளு இலக்கியம் திணை வருணனைகளுக்கு இடையில் அகத்துறைப் பாடல்களைக் கொண்டுள்ளது. முக்கூடற் பள்ளில் ஐந்து பாடல்கள் *(39, 43, 45, 47, 49)* தலைவிக்குரியன.

**மதன வித்தார மாலை** பெண்பாற் கூற்றுக் கைக்கிளையில் அமைந்த நூலாகும். இந்நூல் பாட்டுடைத் தலைவனான மருதப்ப வீரன் உலா வரும்போது அவனைக் கண்ட தலைவி அவன் மாலையை விரும்பி மன்மதனை விளித்துக் கூறுவதாக அமைந்தது. உலா நூலின் தன்மையும் பக்தி இலக்கியத்தில் காணும் மாலை வேண்டல் பண்பும் கலந்த தன்மையுடைய இந்நூலில் காணப்படும் தலைவி கூற்று அகத்திணைக்குரியதன்று; அக மரபினின்றும் திரிந்தது.

உலா நூல்கள், பாட்டுடைத் தலைவன் உலாவைக் கண்ட பெண்கள் காமுற்ற நிலையைக் கூறிக் கூற்றுவழி எடுத்துரைக்கின்றன. காட்டாக விக்கிரம சோழனுலாவிலிருந்து சில கண்ணிகள்:

காமங் கலக்கக் கலங்கிக் குழல்சரியத்
தாமஞ் சரியத் தனிநின்றாள்...
வாரை முனிந்த வளமுலைமேல் விட்டபணி
நீரை யிதுவோ நெருப்பென்றாள்......
வாழு முலகத் தெவரு மனங்களிப்ப
வீழு நிலவை வெயிலென்றாள்[33]

இங்ஙனம் எழுவகைப் பருவ மகளிரின் மிகு காமச் செயல்கள் கவிக் கூற்றில் கொண்டெடுத்து மொழியப்படுகின்றது. இது அக மரபினின்று விலகி, புலவனின் கற்பனையாக உள்ளது.

திருக்குற்றாலக் குறவஞ்சித் தலைவி தன் பாங்கியிடம் தன் காதலைக் கீழ்வருமாறு கூறுகின்றாள்.

மெய்யர்க்கு மெய்யர் திரிகூட நாயகர் மீதில் மெத்த
மையல்கொண் டேனந்தச் செய்தியைக் கேளாய்நீ பாங்கி
செய்யசடையும் திருக்கொன்றை மாலைஅழகும் அவர்
கையில் மழுவுமென் கண்ணைவிட் டேஅகலாவே[34]

என்னும் இத்தலைவி கூற்று அகமரபினின்றும் திரிந்தது என்பதை உணர்த்தும் சான்று பின்வருமாறு:

நீரிலே பெருகுகுறும்பலாவிலே
  கொலுவிருக்கும் நிமல மூர்த்தி
பேரிலே பிரமைகொண்ட பெண்களிலே
  நானுமொரு பெண்கண் டாயே[35]

இங்குத் தலைவனை விரும்பும் தலைவியர் பலராகும் நிலையைக் காணலாம். அகத்திணைக்காதல் இத்தன்மையதன்று.

திரு அருட்பா தலைவனின் ஊருக்குச் செல்ல விழையும் தலைவியைக் (4212) காட்டும்.

தனிப்பாடல் திரட்டில் தலைவி கூற்றில் அமைந்த பாடல்கள் கவிஞர்களின் நோக்கத்தைச் செவ்வனே நிறைவு செய்யும் வகையில் அமைந்துள்ளன; வள்ளலைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற விழைந்தனர் புலவர்கள். எனவே அவர்கள் தலைவனாக வள்ளலையும் அவனைப் புகழ்பவளாகப் பெண்ணையும் புனைந்து, அகத்துறைச் சூழலைப் பயன்படுத்தி, பாடல்கள் பாடினர். இதற்கு எடுத்துக் காட்டாக,

மாலைதனைப் புனைந்தாலும் மலரணையில் படுத்தாலும்
  மருவார் பன்னீர்

ஏலமுறத்தெளித்தாலு மெவ்வளவே னுங்குளிர
விலையென் செய்வேன்
கோலமுறு மணலியிலே கிளைகளொடு சுகம்படைத்துக்
குலாவு மெங்கள்
சோலைதனைச் சேராமற் காமவிடாய் தணியாதே
தோகை மாரே[36]

என்ற பாடலைக் கூறலாம். ஈண்டுச் 'சோலை' என்ற சொல் மணலியில் வாழ்ந்தவள்ளல் சோலையப்பரைக் குறிக்கும். எனவே தலைவிக்குரிய கூற்றெனினும் அகப்பொருள் தலைவி கூற்றுக்கும் தனிப்பாடல் திரட்டுத் தலைவி கூற்றுக்கும் நோக்கம் வேறு வேறு என்பது தெளிவு.

மற்றொரு பாடல் 'தலைவி திங்களைப் பழித்தல்' என்ற துறையில் அமைந்தது; வெங்கடேசுவரன் வந்து மருவாநாளில் மன்மதன் தொடுத்த கணையால் ஏற்பட்ட துளைவழியே தென்றல் வந்து சுவைத்து விட்ட வெறுங்கூட்டை ஏன் சுட்டெரிக்கின்றாய் வெண்ணிலாவே[37] என்கிறாள் தலைவி. எனவே, இவை ஒருதலைக் காதலாக அமைந்தவை.

தலைவி கூற்றில் உள்ள பாடல்கள் சில (தொகுதி 1-553, 729, 783, 830) குழந்தை பெற்ற பின் தலைவன் தலைவியைப் புறக் கணிப்பதை வெளிப்படையாக எடுத்துரைக்கின்றன. அவற்றுள் சில:

பாண்டியன்தா ரானேன் பசுவின்முலைப் பாலானேன்
ஆண்டிகையிலேந்திய தொன்றானேனே
வேண்டியபோ(து)
உள்ளங்கைத் தேனானேன் ஓர்மதலை பூத்தபின்பே
உள்ளங்கைத் தேனானுனக்கு[38]

முன்னே இரண்டுமுலை முற்றியபின் னாலுமுலை
எந்நேரம் என்மதலைக் கெட்டுமுலை-எந்நாளும்
பைந்நாகஞ் சூழ்மதுரைப்பாண நின் பாகனுக்கிங்
கொன்னாக மென்னாம் இனி[39]

சங்க அக இலக்கியமும் மகப்பேற்றினைப் பரத்தையிற் பிரிவுக்கு ஒரு காரணமாகக் காட்டும் பொருண்மையுடைய பாடல்களைப் பெற்றுள்ளன.

பாரதியாரின், ''கண்ணன் - என் காதலன்'' என்ற தலைப்பி லுள்ள கவிதைகள் தலைவிக்குரியன. அவற்றுள் சில :

உணவு செல்லவில்ல; சகியே
உறக்கங் கொள்ளவில்லை

மணம் விரும்பவில்லை; சகியே !
மலர் பிடிக்கவில்லை
........................
பாலுங் கசந்த தடீ! - சகியே
படுக்கை நொந்ததடீ !
கோலக் கிளி மொழியும்-செவியில்
குத்த லெடுத்ததடீ ![40]

இங்ஙனம் தலைவி தன் நிலையைத் தோழியிடம் உரைக்கின்றாள். ஈண்டுத் தலைவன் கண்ணன் ஆவான். எனவே இவை கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கத்திற்குரியன.

பாரதிதாசன் இசையமுது, தேனருவி (பாடல் 40, 41, 46, 52). காதல் பாடல்களில் சில (பக்கம் 51, 52, 56, 57, 59, 78, 104, 112, 113) தலைவி கூற்றிற்குரியன. அவற்றுள் சில பாடல்கள் பின் வருமாறு:

வருத்தம் தொலையும் அன்றோ? என்னை
மணந்து கொண்டால் இந்த
வருத்தம் தொலையு மன்றோ?
பரந்து பொன்போற் வேங்கைப்பூக்கள்
பாறைமேற் பொலியும் பன்மலை நாடனே
வருத்தம் தொலையுமன்றோ?[41]

எனத்தலைவி தலைவனிடம் வேண்டுகின்றாள். இங்ஙனம் தலைவி தலைவனிடம் வரைதல் வேண்டி நேரடியாக உரையாடுவதாக அகச்செய்யுள் செய்யும் மரபு இல்லை; தோழிதான் வரைதல் வேண்டித் தலைவனிடம் உரையாடுவாள். எனவே கூற்றுக்குரியாருள் காணப்படும் இம்மாற்றம் குறிப்பிடத்தக்கது.

இசையாயோ தோழி? - கொடும்
பசலை படர்ந்தான் என்முகம் தனைப்
பார்த்திருந்தும் அவனிடம் சொல்ல, இசை
யாயோ தோழி
சொன்ன சொல் மாறாத தலைவர் - அவர்
தொலையாத நிலையன்புக் கினியர் - தோழி
தோளினைப் பிரியாத துணைவர்! - அவர்
தூய்மையும் வாய்மையும் வாய்ந்தால் கணவர்[42]

இப்பாடல் 'நின்ற சொல்லர்; நீடுதோறு இனியர்' (நற். 1:1-2) என்ற நற்றிணைப் பாடலை நினைவூட்டுகின்றது. பாரதிதாசன் சங்க இலக்கியத்தில் கொண்ட ஈடுபாடு இத்தகைய பாடல்களை எழுதத் தூண்டியது எனலாம்.

புலவர் பழநி இயற்றிய அனிச்ச அடி நாடகத்தில் அங்கம் ஒன்று களம் இரண்டில் தலைவி கூற்றில் அமைந்த அகப்பாடல்கள் ஆறு உள்ளன. அவை பாடினியால் பாடப்படுகின்றன; சிலப்பதிகாரக் கானல்வரிப் பாக்கள் போன்று நாடக நீட்சிக்கு ஒரு காரணமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

''கூற்றிற்குரியராகத் தொல்காப்பியர் கூறிய பன்னிருவருள் தலைவன் தலைவி ஆகிய இருவர் கூற்று மட்டுமே கண்ணதாசன் கவிதைகளில் காணப்படுகின்றன'[43] என்பர்.

இங்ஙனம் தலைவி கூற்று மரபு தமிழ் இலக்கிய உலகில் தொல்காப்பியக் காலம் முதல் இக்காலம் வரை பயின்று வந்துள்ளன. சங்க அக இலக்கியத் தலைவியின் கூற்றுத் தவிர ஏனைய இலக்கிய வகையில் இடம் பெற்றிருப்பவை அக மரபினின்றும் விலகி நிற்பவை; அவை காலந்தோறும் தோன்றிய இலக்கியத்தின் நோக்கிற்கும், போக்கிற்கும் ஏற்பப் படைப்பாளிகளால் எடுத்தாளப்பட்டுள்ளன.

## 3. தலைவன் கூற்று

தொல்காப்பியர் தலைவன் கூற்று நிகழிடங்களையும் கேட்போர் பற்றிய மரபையும் பெய்து வைத்துள்ளார்.[44]

சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை நூல்களில் மட்டும் அகப்பாடல்கள் 1850 உள்ளன; அவற்றில் நற்றிணையில் உள்ள இரண்டு பாடல்கள் நீங்கலாக ஏனைய பாடல்கள் துறைக் குறிப்பைப் பெற்றுள்ளன.

துறைக் குறிப்புள்ள 1848 பாடல்களில் தலைவன் கூற்றிற் குரியவை 351 (19.05%) அவற்றைக் கேட்போரைப் பற்றிய பாடல் எண்ணிக்கையும் விழுக்காடும் பின்வருமாறு:

> நெஞ்சு 119 (34.09%), தலைவி 56 (15.91%),
> தேர்ப்பாகன் 49 (13.92%), தோழி 27 (7.67%),
> பாங்கன் 26 (7.39%), பாணன் 5 (1.42%),
> இல்லை 35 (9.94%), தன்னுள் 14 (3.98%),
> உழையர் 2 (0.57%), கண்டோர் 2 (0.51%),
> கனா 1 (0.29%), சான்றோர் 1, புறா 1,
> மழை 1, முல்லை 1, வாடை 1[45]

பதினெண் கீழ்க்கணக்கு அகப்பொருள் நூல்களுள் தலைவன் கூற்றாக உள்ளவை 10.42 விழுக்காடு ஆகும். அவற்றைக் கேட்போராகப் பாங்கன், தோழி, தேர்ப்பாகன், நெஞ்சு, தலைவி

ஆகியோர் குறிக்கப்படுகின்றனர். கேட்போரின்றி அமைந்த பாடல்களும் உள்ளன.[46]

திருக்குறளில் தலைவன் கூற்றிற்குரிய துறைகள் உள்ளன.

முத்தொள்ளாயிரத்துள் தலைவி, தோழி, செவிலி ஆகியோர் கூற்றுக்குரிய பாடல்கள் உள்ளன. எனினும் தலைவன் கூற்றுக்குரிய பாடல்கள் இல்லை. ஏனெனில் அவை உலாக் கண்ட மகளிரது காதல்பற்றிய கைக்கிளைப் பாடல்கள். எனவே, தலைவன் கூற்றுப் பாடல்கள் இடம்பெற வாய்ப்பில்லை. இடமும் காலமும் இலக்கியத்தையும் அதன்கண் இடம்பெறும் பொருண்மையையும் தீர்மானிப்பதால் கூற்றுக்குரியார் மரபுகூட அதனால் (அறிந்தோ, அறியாமலோ) வரையறை படுத்தப்படுகின்றது; இதற்கு முத்தொள்ளாயிரக் கைக்கிளைப் பாடல்கள் நல்ல சான்றாக அமைகின்றன.

சிலப்பதிகாரத்தில் கானல்வரியில் தலைவன் பாங்கற்குரைப்பதாகவும் (9, 10, 14-16), தலைவிக்குக் கூறுவதாகவும் (11-13), கேட்போரின்றியும் (17-19, 23) அமைந்த பாடல்கள் உள்ளன. அவை காப்பியத்தலைவன் கோவலனின் மனக்குமுறல்களைப் புலப்படுத்துவனவாக அமைந்தன; காப்பிய நீட்சிக்கு வித்திட்டுக் கனகவிசயர் முடித்தலை நெரியக் காரணமாயின. அவை தனியே நோக்கின் அகப்பொருள் கூற்று மரபைப் போற்றுவதாகவும், காப்பியத்தோடு இணைத்து நோக்கின் காப்பிய மாந்தரின் மனக் குமுறலை வெளிப்படுத்தி அகமரபினின்றும் சரிந்தும் காணப்படுகின்றன.

திருக்கோவையாரில் காணப்படும் தலைவன் கூற்றுப் பாடல்கள் 103 (25.25%). அவை இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, மதியுடம்பாடு, குறையுற உணர்தல், மடற்றிறம், சேட்படை, உடன்போக்கு, பிரிவு ஆகிய கிளவித் தொகைகளில் உள்ளன. தலைவன் மிகக் குறைவாகப் பேசும் கிளவித்தொகை வரைவு முடுக்கமாகும்.

தலைவன் கூற்று அதிகமாக இடம் பெற்ற கிளவித்தொகைகள் இயற்கைப்புணர்ச்சி (18), பாங்கற்கூட்டம் (17), மதியுடம்படுத்தல் (10), உடன்போக்கு (9), பொருள்வயிற்பிரிவு (9) இரவுக்குறி (8), பகற்குறி (7) ஆகியன. சங்க அகப்பொருள் நூல்களில் காணப்பெறும் துறை மரபும், கூற்றுக்குரிய சூழலும் கோவை நூல்களில் பின்பற்றப் பட்டுள்ளன என்பதற்குத் திருக்கோவையார் ஒரு நல்ல சான்றாகும்.

திருக்கோவையாரில் இருந்து நூறு துறைகளை மட்டும் எடுத்துக் கொண்ட கல்லாடத்தில் 21 தலைவன் கூற்றுப் பாடல்கள் உள்ளன; அவற்றுள் களவிற்குரியன 14; கற்பிற்குரியன 7.

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியில் பன்றி வினாதல் (55), இடைச்சுரத்துப் படை கண்டு தலைவன் கூறல் (51), தலைவன் தலைவியைப் புகழ்தல் (65), ஆயத்துய்த்தல் (70), பொருள்வயிற் பிரிய எண்ணிய நெஞ்சிற்குக் கூறல் (84) போன்ற துறைகளில் தலைவன் கூற்றுப் பாடல்கள் உள்ளன. கோவை அல்லாத நூல்களிலும் அகத்துறைகள் போற்றப்பட்டன என்பதற்குப் பதினோராம் திருமுறையில் இடம் பெற்றிருக்கும் சில நூல்கள் சான்றாகும்.

**ஆளுடை பிள்ளையார் திரு மும்மணிக்கோவை** ''வறும் புனம் கண்டு இரங்கல்'' (21) என்ற துறையில் தலைவன் கூற்றுப் பாடல் உள்ளது. இந்நூலுள் அகத்துறைக்குரியதாகவும் ஆனால் துறைக் குறிப்பின்றியும் ஒரு பாடல் (25) உள்ளது.

ஆளுடை பிள்ளையார் திருக்கலம்பகத்தில் நான்கு பாடல்கள் (4, 13, 15, 29) உள்ளன. அவை பாங்கற்கூட்டத்துக்கும், தோழியற் கூட்டத்திற்கும், பிரிவுக்கும் உரியன.

திரு ஏகம்பமுடையார் திருவந்தாதியில் வறும் புனம் கண்டு வருந்தல் (25), பொழில் கண்டு கூறல் (26), தன் வலிமை கூறி அஞ்சேல் என்றல் (69), மீண்டுவரு தலைவன் நகரணிமை கூறல் (75) நகர்வளங்காட்டல் (78, 79, 81-84), பொழில் மேம்பாடு கூறித் தளர்வு அகற்றல் (77), தன் நகர் இதுவெனக் கூறல் (89) ஆகிய துறைகளிலமைந்த தலைவன் கூற்றுப் பாடல்கள் உள்ளன. இவை இறைவனின் பெருமையை மிகுதியும் கூறுகின்றன.

**பழமலையந்தாதி**, பாசறை முற்றி மீண்ட தலைவன் பாகனொடு கூறியதைக் (76) காட்டும்; **கல்வளையந்தாதி** உற்றதுரைத்தல் (55), தலைவியைப் புகழ்தல் (80), தன்பதியடைந்தமை தலைவிக்குக் கூறல் (81), பாகனொடு கூறல் (60), இவ்விடத்து இவ்வியற்று என்றல் (85) ஆகிய துறைப் பாடல்களைக் காட்டும். இப்பாடல்களின் மூன்று அடிகள் இறைவன் சிறப்பையும், ஓர் அடி அகத்துறை மரபுச் செய்தியையும் காட்டுவனவாக உள்ளன.

**மருதூரந்தாதி** (13), **திருவாரூர் மும்மணிக்கோவை** (28, 29) **திருவலஞ்சுழி மும்மணிக்கோவை** (9, 10), **கோயில் நான்மணிமாலை** (23) ஆகிய நூல்களிலும் தலைவன் கூற்றுப் பாடல்கள் உள்ளன. இவை பாங்கனிடம் இயலிடம் கூறுவதாகவும் (**ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி** 19, **கோயில் நான்மணிமாலை** 23) தலைவியிடம் இடம் அணித்து என்றும் (**ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி** 47) நகர்வளங்காட்டுவதாகவும் அமைகின்றன. காரணம் அத்துறைப் பாடல்களைப் புலவர்கள் இறைவனின் திருத்தலமகிமையைக் கூற,

தக்கவாயிலாகப் **பயன்படுத்திக்** கொண்டமையாகும். நந்திக் கலம் பகத்தில் தலைவன் நெஞ்சு (*14, 22, 24, 29, 36, 112*), மேகம் (*108*), பாங்கன் (*27, 47, 73, 52*), தோழி (*62*) ஆகியோரிடம் கூற்று நிகழ்த்துவதாகப் பாடல்கள் உள்ளன.

ஓடுகின்ற மேகங்காள் ஓடாத தேரில் வெறும்
கூடு வருகிறதென்று கூறுங்கள்! - நாடியே
நந்திச் சீராமனுடைய நல்நகரில் நல்லுதலைச்
சந்திச் சீர் ஆமாகில் தான்[47]

எனத் தலைவன் மேகத்தைத் தலைவியிடம் தூது விடுகின்றான். அவன் 'நந்திப் படைகள் வருகின்றனவெனில் பகைவர் துயில் கொள்ளாது வருந்துவர். அதே நிலைதான் எனக்கும் ஏற்பட்டுள்ளது. நான் என் உயிரோவியத்தின் கொங்கையின் மீது துயில் கொள்ளும் நிலையை இழந்து விட்டேன்[48] என்று நெஞ்சிடம் கூறுகின்றான்.

பக்தி இலக்கியங்களில் நாயகி நிலையில் நிற்கும் அடியார்கள் கூற்று நிகழ்த்துகின்றனர். எனவே நாயகன் நாயகி பாவனையில் அமைந்த பாடல்களில் தலைவன் கூற்றுப் பாடல்கள் இல்லை.

**'சித்திரமடல்'** என்ற நூல் தலைவன் கூற்றில் அமைந்தது; *108* கண்ணிகளைக் கொண்டது. எனவே தனிப்பாடல்கள் என்ற நிலை மாறி, தனி இலக்கிய வகையைப் படைக்கவும் தலைவன் கூற்றைப் பயன்படுத்திக் கொண்டனர் புலவர் என்பதற்கு இந்நூல் சான்றாகும்.

மகாகவி பாரதியாரின் கண்ணன் பாட்டு தலைவன் தலைவியர் விரக தாபத்தை எடுத்து மொழிகின்றது. அவர் கண்ணனைக் காதலியாக்கிப் பாடிய பாடல்கள் தலைவனின் பிரிவுத்துயரைக் காட்டுவன. அவற்றுள் சில அடிகள் பின்வருமாறு:

நெரித்த திரைக்கடலில் நின்முகங் கண்டேன்;
  நீல வீசும்பினிடை நின்முகங் கண்டேன்;
திரித்த நுரையினிடை நின்முகங் கண்டேன்;
  சின்னக் குமிழிகளில் நின்முகங் கண்டேன்;[49]

மேனி கொதிக்கு தடீ! தலை சுற்றியே
  வேதனை செய்கு தடீ!
வானி லிடத்தையெல்லாம் - இந்த வெண்ணிலா
  வந்து தழுவுது பார்!

மோனத் திருக்கு தடீ! இந்த வையகம்
மூழ்கித் துயிலினிலே
நானொருவன் மட்டிலும் - பிரி வென்பதோர்
நரகத் துழலுவதோ[50]

பாரதிதாசன் இயற்றிய 'தேனருவி' என்ற நூலில் துறைப் பாடல்கள் பகுதியில் தலைவன் தலைவிக்குக் கூறுவதாகவும் (40, 51, 56) வலவனுக்குக் கூறுவதாகவும் (45, 47) பாடல்கள் உள்ளன. 'காதல் பாடல்கள்' என்ற நூலில் 'எனக்காகப் பிறந்தவன்' (ப. 99), தானும் அவளும் (ப. 100), அவள் மேற்காதல் (ப. 50), அவள்மேல் புன்னகை (ப. 69) போன்ற தலைப்புக்களில் தலைவன் கூற்றுப் பாடல்கள் இடம் பெற்றிருக்கின்றன.

கண்ணதாசன் கவிதைகளில் ''கூற்றுக்குரியராகக் கூறப்பட்ட பன்னிருவருள் தலைவன் தலைவி ஆகிய இருவர் மட்டுமே கூற்று நிகழ்த்த ஏனையோர் கவிஞர் கவிதைகளில் இடம் பெறவில்லை''[51] என்பர்.

ஆகத் தலைவன் கூற்று மரபு அகப்பொருளிலக்கியத்திலும், அகத்துறைப் பாடல்களிலும் போற்றப்பட்டுள்ளது: பிற இலக்கிய வகையிலும் தலைவன் கூற்றுப் பாடல்கள் உள்ளன. எனினும் முத்தொள்ளாயிரம் பக்தி இலக்கியம் போன்ற இலக்கியங்களில் காணப் படவில்லை. இவற்றுள் காணப்படும் தலைவன் கூற்று மரபின் வீழ்ச்சி இலக்கியத்தின் நோக்கத்தையும், காலத்தையும் ஒட்டி ஏற்பட்டதாகக் கொள்ளலாம்.

காளமேகப் புலவருக்குத் தலைவன் கூற்று மரபு ஒரு தனி இலக்கியத்தையும் படைக்கத் துணை நின்றது என்பதற்குச் சித்திர மடல் சான்றாகும்.

பக்தி இலக்கியத்துள் இடம் பெறாத தலைவன் கூற்று பாரதியாரின் 'கண்ணம்மா-என் காதலி'யில் காணப்படுகிறது. எனினும் கண்ணனைப் பல உறவு நிலைகளிலும் (சகோதரன், சீடன், வேலைக்காரன்) வைத்துப் பாடிய பாரதியின் படைப்பில் தலைவன் கூற்றும் இடம் பெற்றிருப்பது இயற்கையே.

## 4, நற்றாய் கூற்று

தொல்காப்பியம் கூற்றிற்குரியோரைக் குறிப்பிடும்போது நற்றாயைக் குறிக்கவில்லை (490, 491), எனினும் கற்பின்கண் வரும் வாயில்கள் பன்னிருவருள் தொல்காப்பியர் தாயைக் குறிப்பிடுகின்றார் (145); செய்யுளியலில்,

கிழவன் தன்னொடுங் கிழத்தி தன்னொடும்
நற்றாய் கூறல் முற்றத் தோன்றாது[52]

என நற்றாய் கூற்றிற்குரிய மரபைப் புலப்படுத்துவர். மற்றும் அகத்திணையியலில் நற்றாய் கூற்று நிகழிடத்தைப் பின்வருமாறு இலக்கணப்படுத்தியுள்ளார்.

தன்னும் அவனும் அவளும் சுட்டி
மன்னும் நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்
நன்மை தீமை அச்சஞ் சார்தலென்று
அன்ன பிறவும் அவற்றொடு தொகைஇ
முன்னிய கால மூன்றொடு விளக்கித்
தோழி தேஎத்துங் கண்டோர் பாங்கினும்
போகிய திறத்து நற்றாய் புலம்பலும்
ஆகிய கிளவியு மவ்வழி உரிய[53]

எனவே உடன்போக்கில் தோழி, கண்டோர் ஆகியோரிடம் நற்றாய் கூற்று நிகழ்த்துவாள் என்பது பெறப்படுகின்றது.

எட்டுத்தொகை அகநூல்களில் உள்ள நற்றாய் கூற்றுப் பாடல்கள் முப்பத்தாறு (1.97%) ஆகும். அவற்றுள் கேட்போரின்றி அமைந்தவை 27 பாடல்கள்; எஞ்சிய ஒன்பதும் தோழி, செவிலி, அயலோர் ஆகியோரோடு மொழிவதாகும்.

அவை ஐங்குறுநூறு (83 பாடல்கள்), அகநானூறு (12 பாடல்கள்), நற்றிணை (10 பாடல்கள்), குறுந்தொகை (1 பாடல்) ஆகிய நான்கு நூல்களில் காணப்படுகின்றன; கலித்தொகையில் நற்றாய் கூற்று இடம் பெறவில்லை.[54]

சங்க அக இலக்கியத்தில் நற்றாய் கூற்றைப் பொறுத்த வரையில் திணை மயக்கம் காணப்படவில்லை; அனைத்தும் பாலைத் திணையில் பயின்று வந்துள்ளன.

பதினென் கீழ்க்கணக்கு நூல்களுள் ஐந்திணை ஐம்பது, திணை மொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது ஆகிய மூன்றிலும் நற்றாய்க்குரிய பாடல்கள் உள்ளன.[55] அவற்றுள் ஐந்து பாலைத் திணைக்குரியன; ஒன்று குறிஞ்சித் திணைக்குரியது. அது 'தலை மகன் சான்றோரை வரைவு வேண்டி விடுத்துவிடத்து தலைமகள் தந்தைக்கும் தமையன்மார்க்கம் நற்றாய் அறத்தொடு நிற்றல்' என்ற துறைக்குரிய பாடலாகும். நற்றாய் கூற்றுச் சூழலில் சங்க அக இலக்கியத்துக்கும், சங்கம் மருவிய கால அக நூல்களுக்கும் வேறுபாடு காணப்படவில்லை.

முத்தொள்ளாயிரத்தில் தலைவி, தோழி ஆகியோரது கூற்றி லமைந்த பாடல்களில் நற்றாய் கூற்று கொண்டெடுத்து மொழியப் படுவதைக் காணலாம் ('கடற்றானைக் கோதையை' என்ற பாடல்).

திருக்கோவையார், உடன்போக்கின்கண் நற்றாய் கூற்றிற்குரிய ஏழு பாடல்களைக் கொண்டுள்ளது.

ஐந்தாம் திருமுறையில் 45ஆவது பதிகம் 'தாய் தன் மகள் சிவபெருமான்மேல் கொண்ட காதலைப் பற்றிக் கூறுவது போல் அமைந்துள்ளது' ''மனைக்குள் இரு என்று நான் சொன்ன போது தோணிபுரத்து இறைவர் மேல் காதல் கொண்ட என் மகள். 'எனக்கு நீதி சொல்ல நீ யார்? என்று கேட்பதோடு, அவருக்கு நான் தாதி ஆவேன்' என்று சொல்லுகின்றாள்'' என்கின்றாள்.

மாதி யன்று மனைக்கிரு வென்றக்கால்
நீதி தான்சொல நீயெனக் காரெனும்
சோதி யார்தரு தோணி புரவலர்க்குத்
தாதி யாவன் நா னென்னுமென் தையலே[56]

என்பது அப்பனுவல். இங்ஙனம் தாய் மகள் உரையாடல் பக்தி இலக்கியத்துள் காணப்படுவது புதுமரபாகும். அகத்திணை மரபில் இல்லை.

திருமாலிடத்து ஈடுபட்ட தலைமகளது செயல் கண்டு தாய் இரங்குதல், உடன்போக்கில் சென்ற தலைமகளைக் குறித்துத் தாய் இரங்குதல் ஆகிய இரு நிலைகளில் தாயின் கூற்று நிகழ்வதாக நாலாயிர திவ்வியப்பிரபந்தம் காட்டுகின்றது.* அவற்றுள் சில காட்டுகள் வருமாறு :

வடங்கொள்பூந் தண்ணந் துழாய்மலர்க் கேயிவள்
மடங்குமால் வாணுத லீர்! என் மடக்கொம்பே[57]

சங்கென்னும்; சக்கரமென்னும்; துழாயென்னும்
இங்ஙனே சொல்லும் இராப்பகல் என்செய்கேன்?[58]

வாயிற்பல்லும் எழுந்தில மயிரும் முடிகூ டிற்றில
சாய்வி லாத குறுந்தலைச் சில பிள்ளைகளோ டிணங்கி
தீயி ணக்கிணங் காடிவந்திவள் தன்னன்ன
செம்மை சொல்லி
மாயன் மாமணி வண்ணன் மேல்இவள் மாலுறு
கின்றாளே[59]

* 286-96, 1318-27, 1648-67, 2700-10.

இல்லம் வெறியாடிற் றாலோ!
என்மக ளையெங்கும் காணேன்
மல்லரை யட்டவன் பின்போய்
மதுரைப் புறம்புக்காள் கொ(ல்)லோ?[60]

இவை தாய் கூற்றில் அமைந்திருப்பினும் பாடுபொருளாலும் நோக்கத்தாலும் அகப்பொருளினின்றும் முற்றிலும் வேறுபட்டு நிற்கின்றன.

தலைவி உடன்போக்கின் போது தலைவனுடன் சென்ற இடமாகப் புனையப்படுவது திருமால் கோயில் கொண்டுள்ள திருத்தலமாகும். தலைவிக்குரிய தலைவன் பெயரைத் தாய் அறிந்திருக்கின்றாள். இத்தன்மைத்தான தாய் கூற்று அகத்திணையில் காணப்படுவதில்லை.

11ஆம் திருமுறையில் **பொன்வண்ணத் தந்தாதி** (56) **திருஏகம்பமுடையார் திருவந்தாதி** (68, 70) **கோயில் நான்மணிமாலை** (22), **கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி** (27, 28) ஆகிய நூல்களில் நற்றாய் கூற்றில் அமைந்த பாடல்கள் உள்ளன. அவற்றுள் சில:

பொருதநன் மால்விடைப் புண்ணியன் பொங்கிளங்
கொன்றை யின்னே
தருதிர்நன் றாயிடுந் தாராவிடிற் கொல்லுந் தாழிருளே[61]

என மகளுக்காகத் தலைவனிடம் கொன்றை மாலை வேண்டுகின்றாள் நற்றாய். பக்தி இலக்கியத்தில் அமைந்த நற்றாய் கூற்று பக்தியைப் பரப்புவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. உடன்போக்கில் சென்ற மகளைக் குறித்து இரங்கும் தாய் 'ஏகாம்பரரது திருவடிகளை நினைத்தலை மறந்த தீயவரைப் போல, காளைக்குப் பின்னர்ப் போதலைக் கூறுதல் அரிதாகும்'[62] என்கின்றாள். எனவே ஏகாம்பரர் திருவடியை நினைப்பவர் நல்லவர் என்பதும் பெறப்படுகின்றது.

மகிந்தலரும் வெண்கொன்றை மேலே மனமாய்
நெகிழ்ந்து நெகிழ்ந்துள்ளே நெக்குத் திகழ்ந்திலங்கும்
விண்ணிறங்கா ஓங்கும் வியன்கயிலை மேலாய்என்
பெண்உறங்காள் என்செய்கேன் பேசு[63]

என்ற பாடலும் இறைவனிடம் மகளின் நிலையைக் கூறி, கொன்றை மாலை வேண்டுவதாகவே உள்ளது. இங்ஙனம் நற்றாய் தலைவனிடம் நேரடியாகக் கூற்று நிகழ்த்தும் மரபு சங்க அகநூல்களில் காணப்பெறவில்லை.

கூதிர் காலத்தின் வரவறிந்த நற்றாய் 'தலைவன் கொன்றை மாலை கொடுத்து அருளவில்லை. எனவே என்மகட்குக் காற்றும்

மேகமும். நீர்த்துளிகளுடன் கொல்லக்கருதி அச்சமின்றி உலாவின'[64] என மொழிவது கூற்று நிகழிடத்தில் அமைந்த மாற்றத்தைப் புலப்படுத்துகிறது. அகப்பொருளில் கார்காலம் கண்ட நற்றாய் வருந்துவதாக அகப்பாடல் தோன்றாது. இங்ஙனம் இப்பாடல் நற்றாய் கூற்றுக்குரிய சூழலில் காணப்படும் திரிபைக் குறிக்கின்றது.

மேற்காணும் சான்றுகள் வழி அறியப்படுவன :

1. அகப்பொருள் மாலை வேண்டலை நோக்கமாகக் கொண்டதன்று; எனவே அடிப்படை நோக்கத்தில் மாற்றம் நிகழ்ந்துள்ளது. மேலும் மாலை பெறாவிடில் தலைவி இறப்பாள் எனத் தாய் சுட்டுவதும் அகப்பொருள் மரபன்று.

2. அகப்பொருள் நற்றாய் கூற்று களவைத் தோழியின் மூலம் அறிந்து பின் கற்பாக மாற்றும் முயற்சியில் அமையும். பக்தி இலக்கிய நற்றாய் கூற்று பொருண்மையிலும், நோக்கத்திலும் வேறுபடுகின்றது.

3. கார்வரவு கண்டு தலைவி அல்லது தோழி இரங்குவதாகப் பாடுவது அகப்பொருள் மரபாகும்; பக்தி இலக்கியத்தில் இத்துறைக்குரிய சூழலில் நற்றாய் கூற்று நிகழ்த்துகின்றாள். எனவே துறையில் மாற்றமில்லை / புதுமை இல்லை; கூற்றுக்குரியவர் மாறியுள்ளனர்.

பல இலக்கிய வகையின் கூறுகளைப் பெற்றுத் தோன்றிய 'கலம்பகம்' என்ற இலக்கிய வகையில் நற்றாய் கூற்று இடம் பெற்றுள்ளது. திருவரங்கக் கலம்பகத்தில் ஒரு பாடல் :

மாலை எய்தவர் இன்னம் என்மட
  மானை எய்திலர்; நேமியால்
மாலை தந்தவர் பைந்து ழாய்மது
  மாலை தந்திலர்[65]

இங்ஙனம் தலைவனிடமிருந்து மாலை வரவில்லையே என நற்றாய் இரங்குவதாக அகப்பாடல் அமையாது. மதுரைக் கலம்பகத்தில் நற்றாய் பறவையைத் தூது விடுவதாகவும் (30), தலைவனிடம் தலைவியை வரையக் கூறுவதாகவும் அமைந்துள்ள பாடல்கள் (10, 45, 46, 60) அக மரபினின்று விலகி நிற்கின்றன. ஏனெனில் நற்றாய் தூது விடுவதாகவும், தலைவனுடன் உரையாடுவதாகவும் இலக்கியப்படுத்தும் பாங்கு அகமரபில் இல்லை. எனவே அகப் பொருள் மாந்தர் என்ற அளவிலும் நற்றாயிரங்கல் என்ற துறையளவிலும் சில மரபுக் கூறுகள் கலம்பகத்தில் இலக்கிய வகைக்கேற்ப மாற்றம் செய்யப்பட்டுப், புலவனின் நோக்கத்தை நிறைவு செய்யப் பயன்படுத்தப் பட்டுள்ளன எனலாம்.

பழமலையந்தாதியில் நற்றாய் செவிலியை வினாதல் (33), பாங்கியோடிரங்கல் (5, 89, 93), ஆற்றாது இரங்கல் (14, 21, 39, 45, 46, 55, 59, 70, 75, 86, 89, 92-95) ஆகிய துறைகளுக்குரிய பாடல்கள் உள்ளன.

செண்பகராமன் பள்ளு 'நற்றாய் தலைவி நிலை கண்டு இரங்குதல்' என்ற துறைக்குரிய பாடல்களைக் கொண்டுள்ளது.[66]

தனிப்பாடல் திரட்டில் நற்றாய் கூற்றுப் பாடல்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன.[67] எனினும் அவை அகப்பொருள் மரபிலிருந்து முற்றிலும் வேறுபட்டு நிற்கின்றன. பொருளுக்காகவே கவிதை இயற்றிய காலமென்பதால் பொருள் கொடுப்போனைப் புகழ்ந்து பாடவேண்டிய கட்டாய நிலைக்குப் புலவர்கள் தள்ளப்பட்டனர். எனவே அவர் தம் கவிதைகள் தனிமனிதனைப் போற்றுவதாய் அமைந்தன. இத்தன்மை நற்றாய் கூற்றில் ஏற்பட்ட மரபு மாற்றத்திற்கு ஒரு காரணம் ஆகும். இதைச் சில எடுத்துக்காட்டுகள் வாயிலாகக் காண்போம்.

தண்டமிழ்தே ருத்தமத யாளுவெங்க டேசுரெட்ட
மண்டலிகன் கூடிமருவா நாள் - செண்டு
முலைமானாட் கின்னமுது முன்கொடுக்க ஆட்டுத்
தலையானாள் மால்மயக்கத் தால்[68]

என்ற நற்றாய் கூற்றில் அமைந்த பாடல் தலைவி நிலையை விளக்குகிறது. வெங்கடேசுவர எட்டப்ப நாயக்கன் மீது கொண்ட காதலால் ஊன் உண்ண மறுக்கிறாள்; எனவே அவள் தலையையாட்டி மறுப்பதை ஆட்டுத்தலை அசைவுக்கு ஒப்பிட்டுக் கூறுகிறாள் நற்றாய்.

நற்றாய் கூற்றில் அமைந்த ஒருபாடல் வெங்கடேசுவர எட்டப்ப நாயக்கனின் பக்தியையும் வீரத்தையும் எடுத்துக் காட்டுவதோடு பெண்களுக்கு அவன் எத்தகையன் என்பதையும் விரித்துரைக்கிறது:

ஆளுக்கே யழகனெங்கள் இளசைவெங்க டேசுரெட்டன்
அன்பை யீசன்
தாளுக்கே விருந்திட்டான் ஒன்னலர்கள் செங்குருதித்
தசையைச் செங்கை
வாளுக்கே விருந்திட்டான் மாதரா ராவியெல்லா
மலர்க்கை வாளி
வேளுக்கே விருந்திட்டான் வெண்மதிக் கென்
விருந்திட் டானே[69]

இப்பாடல் புறவாழ்வில் வீரத்தைப் போற்றிய மனிதன், மகளிர் பலராலும் தான் விரும்பப்படுவதைப் பெருமையாகக் கருதினான் என்ற கருத்தை விளக்கச் சிறந்த சான்றாகும்.

நற்றாய் தன் மகளின் காதல் பற்றிச் சோதிடரின் கூற்றில் அமைந்த குறையைச்

..................சீதக் காதி யணிமலரின்
ஏகத்தத் தும்பி யிசைபாடு மார்பனி லென்மகட்கோர்
மோகத்தத் துண்டென்று சொன்னா ரிலைமுன்
மொழிந்தவரே[70]

எனக் கூறுவதன் மூலம் புலப்படுத்துகிறாள். இப்பாடல் சீதக்காதி வள்ளலை மகிழ்விக்கத் தோன்றியது என்பதற்குப் பாடலிலேயே சான்று உள்ளது.

குற்றாலநாதர் உலா வரும்போது தலைவி காதல்கொள்கிறாள். எனவே வளை கழல்கிறது. நாளும் புதிய வளை தரவேண்டிய நிலையில் உள்ளேன் என்கிறாள் தாய். இதனைத்,

திரைவேலை சுற்றிய குற்றால நாதர் தினம்பவனி
வரவேலை நீயு மயல்கொள வேலையம் மாரனம்பு
பொரவேலை நீசங்கம் போட்டிட வேலை புதியவளை
தரவேலை யாச்சு மகளே யுனைப்பெற்றதா லெனக்கே[71]

என்ற நற்றாய் கூற்றுப்பாடலால் அறியலாம். புலவர்கள் பாட்டுடைத்தலைவனின் சமயத்தையும், அவன் ஆளுகையின் கீழ் உள்ள திருக்கோயில்களில் எழுந்தருளியுள்ள இறைவனையும் புகழ்ந்து பாடிஅவனை மகிழ்வித்தனர்; இதற்கு மடக்கு, சிலேடை போன்ற பல்வகை அணிகளையும் பயன்படுத்தினர் என்பதற்குத் தனிப்பாடல் திரட்டு சான்றாகும்.

மேற்காணும் நற்றாய் கூற்றில் அமைந்த பாடல்களின் வழி அறியவரும் சில முடிவுகள் :

1. அகப்பாடல் மரபு தனிப்பாடல் திரட்டுக் காலத்தில் சிதைந்து வழங்கி வரலாயிற்று. புலவர் கூட்டம் நாடெங்கும் புரக்கும் வள்ளல்களை நாடித் திரிந்தது. எனவே, அகப்பொருள் துறையைப் பயன்படுத்தி, காலத்திற்கேற்ற இலக்கியம் படைத்தனர் புலவர்கள்; அவை பெரும்பாலும் தற்சார்புக் கவிதையாக அமைந்து விட்டன.

2. பாளையப்பட்டுக்களாகப் பிரிந்த தமிழகம் தமிழ்மொழி யல்லாத பிறமொழியினரையும் தலைவராகப் பெற்றிருந்தது. தன் தலைமையின் கீழிருக்கும் நாட்டைப் பல்வேறு தாக்குதல்களுக்கும்,

இன்னல்களுக்கும் இடையே ஆட்சி செய்து வந்த குறுநில மன்னர்கள் தம்மைப் புகழ்ந்து பாடிய புலவர்களுக்குப் பரிசில் வழங்கி மகிழ்வித்தனர். புலவர்களும் தம்மைப் புரக்கும் வள்ளலின் நோக்கமறிந்து கவிதை பாடினர்.

குறிப்பாக நற்றாய் கூற்றில் அமைந்த பாடல்கள் புரவலர்கள் பெண்கள் பலராலும் தாம் விரும்பப்படுவதைப் பெரிதும் விரும்பினர் என எண்ணத் தூண்டுகின்றன.

3. பாட்டுடைத் தலைவனின் பெயர் பாடலில் இடம் பெறுகிறது. அகப்பாடலில் பெயர்சுட்டும் முறை இல்லை.

4. **தனிப்பாடல் திரட்டு** தொகுதி 5 இல் உள்ள 888 ஆம் பாடல் வீரத்தையும் காதலையும் ஒன்றாக இணைத்துத் தலைவன் பெயரையும் சுட்டுகிறது. மேலும் தலைவன் ஒருவனாகவும் அவனை விரும்புவோர் பலராகவும் உள்ளனர். அகப்பொருள் மரபு இதனின்று மாறுபட்டது.

5. சோதிடரைத் தாய் பழித்துக் கூறுதல்—என்ற துறை புதியதாகும். அதுமட்டுமின்றிச் சோதிடர் கூற்று அகப்பொருள் துறையில் நற்றாய் கூற்றோடு இணைக்கப்படுவதும், நற்றாய் கூற்றில் மகளின் களவுக் காதல் உரைக்கப்படுவதும் அகப்பொருள் மரபிற் காணப் பெறாதன.

6. தாய் மகளிடம் கூற்று நிகழ்த்துவதாக அகப்பாடல் அமையாது. தனிப்பாடல் திரட்டில் களவுக் காதலை அறிந்த தாய் தினமும் வளையல் தரவேண்டிய நிலையில் உள்ளேன் எனக் கவலுகிறாள். பாட்டுடைத் தலைவன் முருகனாகிறான். அகப்பொருள் மானுடம் பற்றியது; இறைவனைப் பற்றியதன்று.

7. தனிப்பாடல் திரட்டில் தாய் கூற்றைக் கேட்போராக முருகன் அமைகிறான்; முருகனிடம் தன் மகளைச் சேர்த்துக்கொள்ளும்படி வேண்டுகிறாள். தாய் தன் மகள் காதலுக்காகத் தலைவனிடம்/இறைவனிடம் கூற்று நிகழ்த்தும் பாங்கு அகப்பொருளில் இடம் பெறாது.

8. அகமாந்தர்கள் பெயரளவில், இடம் பெற்றுள்ளனர்; அக மரபு துறையளவில் பின்பற்றப்பட்டுள்ளது; எனினும் **தனிப்பாடல் திரட்டு** அகப்பொருள் மரபினின்றும் நோக்கத்தினின்றும் முற்றிலும் வேறுபட்டது.

இராமலிங்க அடிகள் இயற்றிய திருவருட்பாவில் 2, 4, 6 ஆகிய திருமுறைகளில் நற்றாய் கூற்றில் அமைந்த பதிகங்கள் உள்ளன.[72]

நற்றாய் கூற்றில் காணும் மரபு மாற்றங்களை அறிய அக்கூற்றிலமைந்த பாடல்களின் பாடுபொருளை அறியவேண்டியது இன்றியமையாததாகும்; அவற்றின் நோக்கமும் கூற்றில் காணும் மரபு மாற்றங்களைப் புலப்படுத்தவல்லன. எனவே அவற்றைச் சில சான்றுவழி நோக்குவோம்.

புத்திக் குரிய பக்தர்கள்தம் பொருளை
உடலையாவையுமே
எத்திப் பறிப்பார் மகளேநீ ஏதுக்கவரை
விழைந்தனையே[73]

எனத் தாய் மகளிடம் தலைவனின் பண்பை எடுத்துரைக்கின்றாள்,

ஆடிய பாதத் தழகன்என் றணைத்தான்
அன்பினால் கூடினான் என்றாள்
கோடிமா தவங்கள் புரியினும் பிறர்க்குக்
கூடுதல் கூடுமோ என்றாள்[74]

என்று தலைவி பெற்ற இன்பத்தைத் தன்னிடம் கூறியதாகக் கொண்டெடுத்து மொழிகின்றாள் நற்றாய்; மற்றும்,

உணர்ந்தவர் தமக்கும் உணர்வரி யான்என்
உள்ளகத் தமர்ந்தனன் என்றாள்
அணிந்தனன் எனக்கே அருண்மண மாலை
அதிசயம் அதிசயம் என்றாள்
துணிந்துநான் தனித்த போதுவந் தென்கை
தொட்டனன் பிடித்தனன் என்றாள்
புணர்ந்தனன் கலந்தான் என்னுளே களித்துப்
பொங்கினாள் நான்பெற்ற பொன்னே[75]

எனத் தன்மகள் தன்னிடம் கூறிய காதலின்பத்தைச் செவிலியிடம் கூறுகிறாள் நற்றாய்.

மேற்காட்டிய மூன்று பாடல்களால் விளங்கும் மரபு மாற்றங்களாவன:

1. அக இலக்கியத்தில் உடன்போக்கு நிகழ்ந்த பிறகே தாய் கூற்று இடம் பெறும். அருட்பாவில் தலைவியின் களவு வாழ்க்கையைத் தொடக்கத்திலிருந்தே தாய் அறிந்து கொள்கிறாள்; எனவே களவுச் செய்தியைத் தாய் நேரடியாகவே தலைவி மூலம் உணர்ந்து கூற்று நிகழ்த்துகிறாள். இது கூற்று நிகழிடத்தில் ஏற்பட்ட மாற்றமாகும்.

2. நற்றாய் கூற்று நேரடியாக/வெளிப்படையாகத் தலைவியிடம் நிகழ்வதாக அகப்பொருள் சுட்டவில்லை. அருட்பாவில்

'இன்பப் புகழ்ச்சி' என்ற தலைப்பின்கீழ் அமைந்த 10 பாடல்கள் மகளிடம் கூற்று நிகழ்த்துவதாக அமைந்துள்ளன; அதுமட்டுமின்றித் தலைவியிடம் நற்றாய். 'நீ ஏன் அவரை விரும்பினாய்' என்று கேட்கிறாள். இப்பண்பை அகப்பொருள் இலக்கியத்தில் காண முடியாது.

3. அக இலக்கியத்தில் தலைவி தன் தலைவன் யார் என்று நற்றாயிடம் சொல்லமாட்டாள். ஈண்டு நற்றாயிடம் தலைவி 'ஆடிய பாதத்து அழகன் என்னைக் கூடினான் எனவே பிறர்க்குக் கூறுதல் முடியுமோ' எனக் கூறியதாக, நற்றாய் கூற்றில் அமைந்த பாடல்கள் காட்டுகின்றன. இப்பண்பை அகப்பொருள் இலக்கியத்தில் காண இயலாது.

4. தாய் மகளிடமோ, நற்றாய் செவிலியிடமோ கூற்று நிகழ்த்துவதாக அகப்பொருள் இலக்கியம் அமையவில்லை; செவிலி நற்றாயிடம் கூற்று நிகழ்த்துவாள். ஆனால் செவிலியிடம் நற்றாய் கூற்று நிகழாது; நற்றாய் மகளின் களவுக் காதலை மற்றவர்க்குப் புலப்படுத்துவதாக அமையாது. அருட்பாவில் நற்றாய் கூற்றைக் கேட்பவராக மகளும் செவிலியும் அமைந்துள்ளனர். இது கேட்போர் நிலையில் தோன்றிய குறிப்பிடத்தக்க மாற்றமாகும்.

5. மகளின் கூற்றைக் கொண்டெடுத்து மொழியும் நற்றாய் கூற்று, 'ஆடிய பாதத் தழகன்' எனத் தலைவன் பெயர். அருண் மாலை அணிந்தனன் எனக்கே' 'புணர்ந்தணன் கலந்தான்' எனத் தலைவியின் நிலை என்பன போன்ற செய்திகளைக் கொண்டுள்ளது. அருண்மாலை அந்ணிதனன் என்ற தொடர் ஆன்மா - பரமான்மா உறவு நிலையைப் பறை சாற்றுகிறது. அகப்பொருள் மானுடம் பாடுவது; அருட்பா பக்தர்க்கும் இறைவனுக்கும் இடையே அமைந்த உறவை—உணர்வை வெளிப்படுத்துவது.

6. அகப்பொருள் நற்றாய் உடன்போக்கில் சென்ற தலைவியைத் தேடி, தோழி, கண்டோர் ஆகியோருடன் கூற்று நிகழ்த்துவாள். அவள் நோக்கம் தலைவன் தலைவியை மீட்டுவந்து மணம் புரிவிப்பது; அருட்பா நற்றாயின் நோக்கம் இறைவனின் அருட்பண்பை — மகளின் உறவு நிலையில் வைத்துப் புலப்படுத்துவது.

தமிழ் இலக்கியங்களில் காணப்படும் நற்றாய் கூற்றுப் பாடல்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. அகப்பொருளில் இடம் பெற்றவை
2. பக்தி இலக்கியத்தில் இடம் பெற்றவை
3. (அ) கோவை இலக்கியத்தில் இடம் பெற்றவை
   (ஆ) தனிப்பாடல் திரட்டில் இடம் பெற்றவை

இவற்றுள் அகப்பொருளினின்றும் திரிந்த நிலையில் பக்தி இலக்கிய நற்றாய் கூற்று உள்ளது; அவை இடம், கூற்றுக்குரிய சூழல், கேட்போர், நோக்கம் ஆகிய அனைத்திலும் அக இலக்கியத்தினின் றும் வேறுபட்டு நிற்கின்றன;

கோவை நூல்கள், அகப்பொருள் நற்றாய் கூற்று மரபைப் போற்றுவன.

தனிப்பாடல் திரட்டில் காணப்படும் நற்றாய் கூற்று வள்ளல் களின் புகழைப் பாடி புலவர்களுக்குப் பரிசில் பெற்றுத்தரப் பயன் பட்டன.

## 5. செவிலி கூற்று

செவிலி களவு கற்பு ஆகிய இரு கைகோளிலும் கூற்று நிகழ்த்து தற்குரியள் (நூ-ள். 490, 491) என்பது தொல்காப்பியர் கோட் பாடு. அவர் செவிலிக்குரிய கிளவிகள் பதின்மூன்று என்பர். அக் கிளவி நிகழிடங்களைப் பின்வரும் நூற்பாவால் அறியலாம்.

களவல ராயினும் காமமேற் படுப்பினும்
அளவுமிகத் தோன்றினுந் தலைப்பெய்து காணினுங்
கட்டினுங் கழங்கினும் வெறியென இருவரும்
ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்
ஆடிய சென்றுழி அழிவுதலை வரினும்
காதல் கைம்மிகக் கனவின் அரற்றலுந்
தோழியை வினாதலுந் தெய்வம் வாழ்த்தலும்
போக்குடன் அறிந்தபின் தோழியொடு கெழீஇக்
கற்பின் ஆக்கத்து நிற்றற் கண்ணும்
பிரிவின் எச்சத்து மகள்நெஞ்சு வலிப்பினும்
இருபாற் குடிப்பொருள் இயல்பின் கண்ணும்
இன்ன வகையிற் பதின்மூன்று கிளவியொடு
அன்னவை பிறவுஞ் செவிலி மேன[76]

மேலும் கற்பியலில்,

கழிவினும் நிகழ்வினும் எதிர்வினும் வழிகொள
நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும்
செவிலிக் குரிய ஆகும் என்ப[77]

எனச் செவிலி கூற்றுப் பொருண்மையைச் சுட்டுவர்.

செவிலி கூற்றுப் பாடல்கள் எட்டுத்தொகையில் கலித்தொகை தவிர ஏனைய நான்கு நூல்களிலும் முப்பத்தைந்து பாடல்கள் (1.89%)

உள்ளன. அவற்றுள் கேட்போர் இல்லர் தன 18 பாடல்கள் (49.48%), நற்றாய் கேட்போராக அமைந்தவை 13 பாடல்கள் (37·14%), கண்டோர் கேட்போராக வருபவை நான்கு (2.86%).

இவை குறுந்தொகை, நற்றிணை ஆகியவற்றுள் பாலைத் திணையிலும், ஐங்குறுநூற்றில் முல்லைத் திணை, பாலைத் திணை ஆகிய இரு திணைகளிலும் காணப்படுகின்றன. முல்லைத் திணையில் அமைவன ஐங்குறுநூற்றில் மட்டும் உள்ளன. காரணம் அந்நூலில் முல்லைத்திணையில் உள்ள முதல் பத்து செவிலி கூற்றுப் பத்தாகும் (401-410). அவற்றில் முதல் ஒன்பது பாடல்கள் (401-9) 'கடிமனை சென்று வந்த செவிலி உவந்த உள்ளத்தாளாய்ச் சொல்லியது' என்ற துறைக்குரியன; கடைசிப் பாடல் (410). 'கடிமனைச் சென்ற செவிலி, தலைமகனும் தலைமகளும் புதல்வனொடு பாடல் கேட்டிருந்தமை கண்டு, தன்னுள்ளே உவந்து சொல்லியது' என்ற துறைக்குரியது.

இற்செறிப்பு, அறத்தொடு நிற்றல், உடன்போக்கு ஆகிய துறைகளில் தலைவி கூற்றிலோ தோழி கூற்றிலோ தாய் சுட்டப் படுவது போலச் செவிலித்தாயும் தலைமகளுடன் இணைத்துப் பேசப் படுகின்றாள்.

> வெறிஉற விரிந்த அறுவை மெல்அணைப்
> புனிறு நாறு செவிலியொடு புதல்வன் துஞ்ச[78]

எனப் பரத்தை கூற்றிலும்,

> ......................மதவு நடைச்
> செவிலிகை என் புதல்வனை நோக்கி[79]

எனத் தலைவி கூற்றிலும்,

> நரை விராவுற்ற நறுமென் கூந்தற்
> செம்முது செவிலியர் பல பாராட்ட[80]

எனத் தலைவன் கூற்றிலும்,

> அரி நரைக் கூந்தற் செம்முது செவிலியர்[81]

என நற்றாய் கூற்றிலும்,

> காதற் செவிலியர் தவிர்ப்பவும் தவிராது[82]

எனக் கண்டோர் கூற்றிலும் செவிலியைப் போற்றும் மரபு உள்ளது.

சங்கம் மருவிய காலத்து ஆறு அக நூல்களுள் திணைமாலை நூற்றைம்பதில் மட்டும் செவிலி கூற்றுக்குரிய இரண்டு பாடல்கள் (65, 71) பாலைத்திணையில் உள்ளன. அவை 'சுரத்திடைச் சென்ற

செவிலி குரவொடு புலம்பியது', 'சுரத்திடைச் சென்ற செவிலிக்குத் தலைமகனையும் தலைமகளையும் கண்டார் சொல்லிய வார்த்தையைத் தாங்கள் கேட்டார்க்குச் சொல்லி ஆற்றுவித்தது' என்ற துறைகளுக்குரியன.

முத்தொள்ளாயிரத்தில் காணப்படும் செவிலி கூற்றுப் பாடல் ஒன்று;

அலங்குதார்ச் செம்பிய ஆடெழிற்றோள் நோக்கி
விலங்கியான் வேண்டாவெனினும் - நலந்தொலைந்து
பீர்மேற் கொளலுற்ற பேதையர்க் கென்வாய்ச்சொல்
நீர்மேல் எழுந்த நெருப்பு[83]

இங்ஙனம் இயற்கைப் புணர்ச்சிக்கு முன் செவிலி கூற்று நிகழ்த்துவதாக அகப்பொருள் அமையாது. அகப்பொருள் செவிலி, அறத்தொடு நிற்றல் துறையில் கேட்போளாகவும் உடன்போக்கில் கூற்று நிகழ்த்துபவளாகவும் அமைவாள். ஆனால் முத்தொள்ளாயிரத்தில் செவிலி உலாக்கண்ட மகளிர் நிலை கண்டு கூற்று நிகழ்த்துகின்றாள். எனவே ஈண்டுக் காணப்படும் செவிலிகூற்று அகப்பொருள் சூழலில் அமையவில்லை.

4ஆம் திருமுறையில் 6ஆம் பதிகம் 'செவிலி உரைப்பதாகவும்' 5ஆம் திருமுறையில் 40ஆம் பதிகம் 'காதல் கொண்டு வருந்தும் ஒருத்தியை ஆற்றுவிக்கத் கருதும் செவிலி கூற்றாகவும்' அமைந்துள்ளது.

கழிப்பாலை இறைவன் மீது காதல் கொண்ட தலைவி இறைவனின் நிறம், வடிவம் போன்றவற்றை நேரே சென்று காணவில்லை; இருப்பினும் காணாமலே காதல்கொண்டு பிதற்றுகிறாள். இவள் தன்மையைக் கழிப்பாலை இறைவனே அறிவான் எனச் செவிலி கூறுகிறாள்,

வண்ண மும்வடி வுஞ்சென்று கண்டிலள்
எண் ணி நாமங்க ளேத்தி நிறைந்திலள்
கண்ணு லாம்பொழில் சூழ்கழிப் பாலையெம்
அண்ண லேயறி வனிவ டன்மையே[84]

இப்பாடல் தலைவனைக் காணாமல் காதல் கொண்ட தலைவி நிலையைக் காட்டுகின்றது.

திங்கள் சூடி திருக்கழிப் பாலையான்
இங்கு வந்திடு மென்றிறு மாக்குமே[85]

என்ற அடிகள் தலைவனின் பெயரையும், அடியார்க்கு வந்தருள் புரியும் பண்பையும் விளக்குவதாக உள்ளன.

திருக்கோவையாரில் உடன்போக்கு, வரைபொருட் பிரிதல், மணஞ்சிறப்புரைத்தல் ஆகியவற்றில் செவிலி கூற்றுப் பாடல்கள் இருபத்திமூன்று உள்ளன.

கயிலைமலை நாதனை நினைந்து அவன் பின்னே சென்று இல்லற வாழ்வில் பொருந்தி சிறந்த தவமுடையவளாக வாழ்வாயாக எனச் செவிலி கூறுவதாக அமைந்த பாடல் பொன்வண்ணத்தந்தாதியில் உள்ளது.

ஓதவ னாம முரையவன் பல்குண மூன்னேவிட்டேன்
போதவன் பின்னே பொருந்தவன் வாழ்க்கை
திருந்தச் சென்று
மாதவ மாகிடு மாதவ மாவளர் புன்சடையான்
யாதவன் சொன்னா னதுகொண் டொழியினி
யாரணங்கே[86]

என்பது அப்பாடல். மேலும் திருஏகம்பமுடையார் திருவந்தாதியில் சுவடு கண்டு வருந்திக் கூறியது, புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினாதல் ஆகிய துறைகளில் அமைந்த பாடல்கள் (71, 73) உள்ளன. **திருவாரூர் மும்மணிக்கோவை** (13-16, 18) **கோயில் நான்மணிமாலை** (17,31), **ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி** (86), **ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை** (22), **ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்** (7) ஆகிய நூல்களில் செவிலி கூற்றிற்குரிய பாடல்கள் பயின்றுள்ளன.

திருவேங்கடத்தந்தாதியில் இரண்டு பாடல்கள் (17, 55) தலைவியின் பிரிவாற்றாமை கண்டு செவிலி இரங்கல் என்ற துறையின்கீழ் உள்ளன. இத்துறைச்சூழலில் செவிலி கூற்று நிகழ்த்துவதாக அகப்பாடல் மரபு இல்லை.

**கல்வளையந்தாதி** (27) **பழமலையந்தாதி** (37, 38, 52, 54, 55, 87) **மருதூரந்தாதி** (9, 27, 86) **அழகரந்தாதி** (69, 72) போன்ற அந்தாதி இலக்கிய வகைகளிலும் செவிலி கூற்றுப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன,

மதுரைக் கலம்பகத்தில் செவிலி கூற்றுப் பாடல்கள் பல உள்ளன.[87] அவை தலைவியின் காமநிலை பற்றியன. நந்திக்கலம்பகத்தில் உள்ள பாடல்கள் (10, 32, 75, 81) உடன்போக்கு பற்றி நுவலும். அவற்றுள் ஒரு பாடல் :

கொடுவார் புனைந்து நகுவார் படைக்கண்
மடவார் இடைக்குள் மனமே
வருவா யிருக்கும் மகளேஇ முன்றில்
மணிஊசல் ஆடல் மறவே[88]

இப்பாடல் 'நந்திவர்மன் உலாவரும் நேரம் இது; அவனைப் பார்த்தால் காதல் பெருகும்; எனவே உள்ளே வா! ஊசல் ஆடாதே' என மகளிடம் செவிலி கூறும் பொருண்மையில் அமைந்தது. இத் தன்மைத்தான பாடல் அகப்பொருளில் வாராது.

தனிப்பாடல் திரட்டில் செவிலி கூற்றுப் பாடல்கள் உள்ளன.[89] பாரதியார் பாடல்களில் செவிலி கூற்றுப் பாடல்கள் இருப்பதாகத் தெரியவில்லை. பாரதிதாசன் இயற்றிய தேனருவியில் உள்ள ஒரு பாடல் பின்வருமாறு :

> காதல னோடு சென்றாள் விரும்பி-அவள்
> களவு மணந்திருந்தாள் அரும்பி,
> கணவனோடு வருவாள் திரும்பி!......
> அறநெறி இதுவென அவனுடன் சென்றாள்
> அன்பினை அன்பு மனத்தினால் வென்றாள்!
> பிறைநுதல் சிறுமி சென்ற பாலைவனம்
> பேரின்பம் ஆக்கட்டும் மழையின் வளம்[90]

இப்பாடல் சங்க அகப்பாடல்களில் உள்ள உடன்போக்குப் பொருண்மையைப் பெற்றிருக்கின்றது.

செவிலி கூற்றும் நற்றாய் கூற்று மரபோடு ஒப்ப வைத்து எண்ணத்தக்கதாகும். அகப்பொருள் தவிர, ஏனையவற்றில் (முத்தொள்ளாயிரம், பக்தி இலக்கியம்) காணப்படும் செவிலி கூற்றுகைக்கிளைப் பொருண்மையில அமைந்தவை. பாரதிதாசன் அகத் துறைகளைக் கொண்டு பல பாடல்கள் இயற்றியுள்ளார். அவரது படைப்புக்களில் செவிலி கூற்றுப் பாடல்களும் உள்ளன. ஆசிரியருக்குச் சங்க இலக்கியத்தில் உள்ள ஈடுபாடுதான் இத் தன்மைத்தான பாடல்கள் எழுதி அகமரபைப் போற்றத் தூண்டியது எனலாம்.

## 6. கண்டோர் கூற்று

**தொல்காப்பியம்** கண்டோரைக் கற்பினில் கூற்றிற்குரியராகவும் (491) பன்னிரு வாயில்களுள் ஒருவராகவும் (145) காட்டுகின்றது; அகத்திணை இயலில் அவர்க்குரிய கூற்று நிகழிடங்களைப்,

> பொழுது மாறும் உட்குவரத் தோன்றி
> வழுவின் ஆகிய குற்றங் காட்டலும்
> ஊரது சார்பும் செல்லுந் தேயமும்
> ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழியினும்

புணர்ந்தோர் பாங்கிற் புணர்ந்த நெஞ்சமொடு
அழிந்தெதிர் கூறிவிடுப்பினும் ஆங்கத்
தாய்நிலை கண்டு தடுப்பினும் விடுப்பினும்
சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும்
கண்டோர் மொழிதல் கண்டது என்ப[19]

எனவரும் நூற்பாவால் குறிக்கிறது. தலைவன் தலைவியரது உடன் போக்கின்கண் கண்டோர் கூற்று நிகழும். அதைக் கேட்போராகத் தலைவன், தலைவி ஆகியோர் அமைவர் என்பது இந்நூற்பாவழி அறியப்படுகின்றது.

எட்டுத்தொகையில் உள்ள நூல்களில் கண்டோர் கூற்றுக் குரியன 21 பாடல்களாகும் (1.12%). அவற்றைக் கேட்போராகத் தலைவி அல்லது ஊரார் 16 (76.19%) செவிலி 2 (9.52%), தலைவன் தலைவி 1 (4.76%) தம்முன் 1 (4.76%), தாய் 1 (4.76%), ஆகியோர் உள்ளனர். இவற்றுள் செவிலி கேட்போராக உள்ள பாடல் ஐங்குறுநூறு தவிர (388, 390) பிற தொகை நூல்களில் இல்லை (காண்க இணைப்பு 4). இவை பாலை, நெய்தல், முல்லை ஆகிய மூன்று திணைகளில் உள்ளன; நெய்தல் திணை கலித் தொகையிலும், முல்லைத்திணை நற்றிணையிலும் காணப்படு கின்றன. ஏனையவை பாலைத்திணையில் பயின்று வந்துள்ளன. மேலும் காதல் உணர்ந்தோர் கூறுவதாக ஐங்குறு நூற்றில் முல்லைத் திணையில் ஒரு பாடல் உள்ளது.

இவற்றுள் நற்றிணைப்பாடல் ஒன்றும் (நற். 394) கலித் தொகைப் பாடல்கள் அனைத்தும் தொல்காப்பியர் காட்டாத கூற்றுச்சூழலில் கண்டோர் கூற்றைப் பெற்றிருக்கின்றன. ஏனையவை உடன்போக்கின்கண் கண்டோர் கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியர் குறித்த கூற்றுச் சூழலைப் பெற்றுள்ளன. அவற்றின் துறைகள் பின்வருமாறு:

வினைமுற்றி மறுத்தரா நின்ற தலைமகனை இடைச்சுரத்துக் கண்டார் சொல்லியது (நற். 394), பிரிவிடையாற்றாத தலைவி மாலைப்பொழுது கண்டு கழிய ஆற்றாளாயின இடத்துத் தலைவன் வரவும் அவளது அகமலர்ச்சியுங் கண்டார் கூறியது (கலி. 120), இரந்து பின்னின்ற தலைவன் மடலேறியவழி அவள்தமர் அஞ்சித் தலைவியைக் கொண்டு வந்து கொடுத்தலைக் கண்டோர் கூறியது (கலி. 141), தலைவி பிரிவு ஆற்றகில்லாது நாணு வரை இறந்து கலங்கி மொழிந்து அறிவு அழிந்துழி, அவன் வந்து சாரத் தெளிந் தமை கண்டார் கூறிற்று என்று கூறியது (கலி.142-147), தலைவன்

வரைவிடை வைத்து வேந்தற்கு உற்றுழிப்பிரிந்துழி அவள் வருத்த மிகுதி கண்டார் கூறியது (கலி. 148).

இவற்றுள் கலித்தொகைப் பாடல்களில் கண்டார் கூற்று மட்டும் பயின்று வருவதில்லை. அவை தலைவன் (கலி. 141)/ தலைவி (கலி. 142-148) கூற்றும் கண்டோர் கூற்றும் எனக் கலந்து அமைந்துள்ளன. மேலும் தொல்காப்பியர் கண்டோரைக் களவில் கிளவிக்குரியராகச் சுட்டவில்லை.* கலித்தொகைத் துறைக்குறிப்பு களவில் கிளவிக்குரியராகக் காட்டுகின்றது. (கலி. 148).

திணைமாலை நூற்றைம்பதில் சுரத்திடைச் சென்ற செவிலியை ஆற்றுவிப்பதாகவும் (72, 89) தலைவன் தலைவியைச் செலவு விலக்கித் தம் சீறூர்த் தங்கிப் பின் (மறுநாள்) செல்லுமாறு கேட்டுக் கொள்வதாகவும் (69) கண்டோர் கூற்றுப் பாடல்கள் உள்ளன.

முத்தொள்ளாயிரத்தில் மன்னன் உலா வரும் நிகழ்ச்சியை யொட்டிக் கண்டோர் கூற்று நிகழ்த்துவதாகப் பாடல்கள் (54, 87) உள்ளன.

சுடரிழைவேற் சோழன்றன் பாடலம் ஏறிப்
படர்தந்தான் பைந்தொடியார் காணத் தொடர்புடைய
நீலவலையிற் கயல்போற் பிறழுமே
சாலேக வாயில்தொறுங் கண்[92]

இப்பாடல் கைக்கிளைப் பொருண்மையில் அமைந்தது. கூற்றுக் குரிய சூழலும் கண்டோர் கூற்றிலுள்ள மரபின் திரிபைப் புலப் படுத்துகின்றது.

கோவை நூல்கள் அகப்பொருள் துறைகளைப் பெற்றவையாத லால் அவற்றுள் கண்டோர் கூற்று இடம் பெற்றுள்ளது.

பக்தி இலக்கியத்தில் காணப்படும் கண்டோர் கூற்று அகமரபின் திரிபு எனலாம். சான்று:

சிவனும் அவன் எழுந்தருளும் விடையூர்தியும் வருகின்ற
திருவிழா வைக்கண்டு வரக்கடவாயென்று அகன்ற
தெருவீதியிலே அனுப்பி உங்களாலேயே உங்கள்
புதல்விக்கு நீங்கள் துன்பங்களைச் செய்தீர்கள்[93]

---

* மறை வெளிப்படுதலைத் தொல்காப்பியர் கற்பிற்குரிய கைகோள் (488) இணைத்திருப்பது ஈண்டு நினைவு கூரத்தக்கது.

எனத் தலைவியின் வருத்தம் கண்டோர் தாய்மாரை நிந்திக்கின் றனர். தொல்காப்பியர் காட்டும் கண்டோர் உடன்போக்கில் கூற்று நிகழ்த்துவர். ஈண்டுப் பழமலையந்தாதியில் உள்ள கண் டோர் கூற்று அச்சூழலில் இல்லை.

திருஏகம்பமுடையார் திருவந்தாதியில் 'கலந்துடன் வருவோர் செவிலியிடம் கூறுவதாக ஒரு பாடல் (73) உள்ளது. இப்பாடல் திணைமாலை நூற்றைம்பதில் உள்ள 'நண்ணி நீர்சென்மின்' (89) என்ற பாடல் பொருண்மையைப் பிரதிபலிப்பதாக உள்ளது. இச் செய்தி பக்தி இலக்கியப் படைப்பாளிகள் சங்க இலக்கியத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர்; எனவேதான் அம்மரபை மிகுதியும் போற்றியுள்ளனர் என எண்ணத் தூண்டுகின்றது.

மற்றும் **பொன் வண்ணத்தந்தாதி** (3), **திருவலஞ்சுழி மும்மணிக் கோவை** (12), **ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி** (13, 93), **ஆளு டைய பிள்ளையார் மும்மணிக்கோவை** (29), **ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்** (25) ஆகிய நூல்களிலும் கண்டோர் கூற்றுப் பாடல் கள் உள்ளன.

சங்க அக இலக்கியத்தில் காணப்பெறும் கண்டோர் கூற்று மரபு தொல்காப்பியத்தில் இடம் பெறவில்லை; உடன்போக்கு அல்லாத பிற சூழலில் இடம்பெறத் தொடங்கிவிட்டது. இதற்குக் கலித் தொகைப் பாடல் சான்றாகும். முத்தொள்ளாயிரத்துள்ளும் பக்தி இலக்கியத்துள்ளும் கண்டோர் கூற்றுப் பாடல்கள் உள்ளன. எனினும் அவை கைக்கிளைப் பொருண்மை உடையவை.

## ஆ. கேட்போர்

எல்லா அகமாந்தர் கூற்றையும் எல்லா அகமாந்தரும் கேட்ப தாகப் புலனெறி வழக்கம் செய்தல் இல்லை; **தொல்காப்பியம்** கூற்றுக் குரியர், கூற்று நிகழிடங்கள் ஆகியவற்றை விளக்கும்போது கேட் போர் பற்றிய தெளிவான இலக்கியக் கோட்பாட்டையும் பெய்து வைத்துள்ளது. மேலும் தேவையான இடங்களில் தனியாகக் கேட்போர் பற்றிய செய்திகளையும், வழுக்களையும் பொருளியல், செய்யுளியல் ஆகியவற்றில் இடம் பெறச் செய்துள்ளது (194, 492-501).

தொல்காப்பியரின் இலக்கியக் கோட்பாட்டின்படி கேட்போர் அனைவருமே கூற்றிற்குரியரல்லர். ஊரார், அயலார், சேரியோர், நோயறிவோர், தந்தை, தமையன், கொண்டெடுத்து மொழியப் படுவர் ஆகியோர் கூற்றுக்குரிமை உடையர் அல்லர் (492); ஞாயிறு முதலான பதினொன்றும்* அவையல்லாத பிறவும் சொல்லுந

* ஞாயிறு, திங்கள், அறிவு, நாண், கடல், கானல், விலங்கு, மரம், பொழுது, புள், நெஞ்சு.

போலவும் கேட்குந போலவும் சொல்லியமையப் பெறும் (501). தொல்காப்பியர் கருத்துப்படி பாகன் தலைவன் கூற்றைக் கேட்போனாக மட்டும் (42:21, 144:48) அமைபவன். இங்ஙனம் கேட்போரில் கூற்றுக்குரிமையில்லாதோரும் உளர். எனினும் அவர்கள் அகத்திணை மாந்தராக இடம் பெறுவர். எனவே அகத்திணை மாந்தராக அமையும் அனைவருமே கூற்றுக்குரிமையுடையவரல்லர் என்றும் கேட்போராக மட்டும் வரும் மாந்தர்களும் உளர் என்பதும் பெறப்படும்.

கூற்றுக்குரியர், கேட்போர் ஆகிய இருவருக்கும் இடையேயுள்ள மரபு, இலக்கியத்தைச் செம்மையுடையதாக்கப் பயன்பட்டிருக்கின்றது.

சில பாத்திரங்கள் நேருக்கு நேர் பேசுவது கூற்றுக்குரியரின் நோக்கத்தை/பயனை நிறைவேற்றத் துணை செய்யும்.

தோழி ———→ தலைவி /
தலைவன் /
செவிலி

சில பாத்திரங்கள் நேருக்கு நேர் கூற்று நிகழ்த்துவதால் தலைமைப் பாத்திரங்களின் தகுதி குறைய வாய்ப்புண்டு.

தலைவி ———→ பரத்தை

சில பாத்திரங்கள் நேருக்கு நேர் உரையாடுவதால் தீமை இல்லையெனினும் தேவையற்றது.

தலைவன் ———→ செவிலி

சில பாத்திரங்களை நேருக்கு நேர் மோதவிடுவதால் குறிக்கோள் இலக்கியம் பிறவாது.

தலைவன் ———→ தலைவியின் தந்தை / தமையன்

சில பாத்திரங்கள் சிலரிடம் பேசும் போது இலக்கிய இன்பம் குன்றும்.

பாங்கன் ———→ தலைவி / தந்தை, தமையன்
காதற் பரத்தை ——→ செவிலி / தாய் / தந்தை, தமையன்

இவற்றையே மாற்றி, கேட்போருக்கும் எடுத்துக் கொள்ளலாம். காட்டாகப் பாங்கன் கூற்றைக் கேட்போளாகத் தலைவி/தோழி அமைதல், தலைவியின் தந்தை தமையன் பேசுவதைத் தலைவன் கேட்டல் என்பன போன்றவற்றை எடுத்துக் கொள்ளலாம்.

எனவே தொல்காப்பியரது கேட்போர் பற்றிய இலக்கணக் கோட்பாடு சிறந்த இலக்கியத்தின் விளைநிலமாக அமைந்தது எனலாம்.

கேட்போரில் கூடச் சிறைப்புறம் என்ற உத்தியைச் சங்க இலக்கியம் பல பாடல்களில் பின்பற்றியுள்ளது. தோழி/தலைவி, தலைவன் வேலிப்புறத்தனாய் இருப்பதை அறிந்ததும் ஒருவரை நோக்கி ஒருவர் விளித்துப் பேசித் தாம் உணர்த்த விரும்புவதைத் தலைவனுக்கு மறைமுகமாக உணர்த்தி விடுகின்றனர்; தம் நிலையைக் கூறி விடுகின்றனர்.

இங்ஙனம் கேட்போராக வரும் அனைவரும் ஆராயத்தக்கவர் எனினும் ஆய்வுச்சுருக்கம் கருதிஇங்குத் தலைவன், தலைவி, தோழி, பாங்கன், பாகன், பாணன், செவிலி, தாய், கண்டோர் ஆகியோர் மட்டும் ஆராயப்பட்டுள்ளனர்

## தலைவன்

தோழி, தலைவி, பரத்தை, பாங்கன், பாணன், பாகன் ஆகியோர் கூற்றைக் கேட்போனாகச் சங்க இலக்கியத் தலைவன் அமைகின்றான். இவற்றுள் பாகனைக் கூற்றுக்குரியோனாகத் தொல்காப்பியர் சுட்டவில்லை; எனவே அவன் கூற்றைக் கேட்போனாகத் தலைவன் அமைவதில்லை. நற்றிணையில் முல்லைத் திணையில் ஒரு பாடல் (121) பாகன் தலைவனிடம் கூறுவதாக உள்ளது. இந்நெகிழ்ச்சி கூற்றுக்குரியர் கேட்போர் ஆகிய இரண்டிலும் சங்க அக இலக்கியத்தில் ஏற்பட்ட மாற்றத்தைப் புலப்படுத்துகிறது.

பதினெண்கீழ்க்கணக்கில் உள்ள ஆறு அகப்பொருள் நூல்களுள்ளும் தோழி, தலைவி, பாங்கன் ஆகியோரின் கூற்றைக் கேட்போனாகத் தலைவன் இடம் பெறுகின்றான். அவற்றிலும் மிகுதியும் தோழி கூற்றைக் கேட்போனாகக் காட்டப்படுகின்றான்.

பதினோராம் திருமுறையில் ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி (10, 29, 35), ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் (6, 16, 23), ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை (13, 17) ஆகியவற்றில் தோழி கூற்றைக் கேட்போனாகின்றான். தலைவன், தலைவி கூற்றைக் கேட்போனாகத் திருவாரூர் மும்மணிக்கோவை (4, 21), ஆளுடைய பிள்ளையார் மும்மணிக்கோவை (62) ஆகியவற்றில் சில பாடல்கள் உள்ளன.

நந்திக்கலம்பகம் தோழி கூற்றைக் கேட்போனாகத் தலைவனைக் காட்டுகின்றது (15, 37, 45, 49, 59).

**கந்தபுராணம்** உடன்போக்கு, அறத்தொடு நிற்றல் போன்ற அகத்துறைகளில் சில பாடல்களைக் காட்டுகின்றது. அவற்றுள் உடன்போக்கில் கையடைப்படுத்தும் தோழியின் கூற்றைக் கேட்போனாகத் தலைவன் காட்டப்படுகின்றான் (6:24,152,166).

பழமலையந்தாதியில் தலைவி கூற்றைக் கேட்போனாக ஒரு பாடல் (33) உள்ளது.

**முக்கூடற்பள்ளு** ஆற்று வருணனைக்கு இடையில் அகத்துறைப் பாடல்களைப் புனைந்துள்ளது. அவற்றுள் தோழியின் இரவுக்குறி மறுப்பைக் கேட்போனாகத் தலைவன் உள்ளான்.

பாரதிதாசனது தேனருவியில் தலைவி கூற்றைக் கேட்போனாகத் தலைவன் உள்ளான் (46).

புலவர் பழநி எழுதிய **அனிச்ச அடி** நாடகத்தில் மூன்று பாடல்கள் தோழி கூற்றைக் கேட்போனாகத் தலைவனைக் காட்டுகின்றன.

தொல்காப்பியர் காட்டும் தலைவன் கூற்று நிகழிடங்களை அக இலக்கியப் பாடல்கள் மிகுதியும் போற்றியுள்ளன. கைக்கிளைப் பொருண்மையுடைய பாடல்களில் (**முத்தொள்ளாயிரம்**, பக்தி இலக்கியம்) கேட்போனாக மட்டுமே தலைவன் அமைகின்றான். எனினும் அவன் மன்னன்/இறைவனாக இருப்பதால் அகப்பொருளில் கேட்போனாக இடம்பெறும் தலைவனின்றும் வேறாகின்றான். அகத்துறையைப் போற்றும் இலக்கியங்கள் (கோவை, பள்ளு, கலம்பகம், தனிப்பாடல்கள்) கேட்போனாகத் தலைவனைக் காட்டும் துறையைப் பெற்றுள்ளன. எனினும் அவை காலத்தாலும் நோக்கத்தாலும் பாடல் முறைமையாலும் அகப்பொருள் மரபினின்றும் வேறுபடுகின்றன.

### தலைவி

தலைவி, தோழி கூற்றைத் தனித்தும் தலைவன் சிறைப்புறமாக இருக்கும் போது (இருவர்) கேட்போளாகின்றாள். இங்ஙனம் தோழி கூற்றைப் பொறுத்தவரையில் இரு நிலைகளில் காட்டப்படுகின்றாள். மற்றும் தலைவன் செவிலி ஆகியோர் கூற்றைக் கேட்போளாகவும், அகப்பொருள் காட்டுகின்றது.

சங்க அக இலக்கியத்தில் தனித்துத் தோழி கூற்றைக் கேட்போளாகவும், தலைவன் சிறைப்புறமாக இருக்கும் போது தோழி கூற்றைக் கேட்போளாகவும் தலைவி இடம் பெறும் பாடல்கள்

மிகுதியாக உள்ளன; அவை குறிஞ்சித் திணையில் இடம் பெறு கின்றன.

செவிலி கூற்றைக் கேட்போளாக ஒரே ஒரு பாடல் அகநானூற் றில் பாலைத்திணையில் உள்ளது (63).

பதினெண்கீழ்க்கணக்கில் உள்ள அகப்பொருள் நூல்கள் தலைவன் தோழி ஆகியோர் கூற்றைக் கேட்போளாகத் தலைவியைக் காட்டுகின்றன.

சிலப்பதிகாரக் கானல்வரியில் சில பாக்கள் (11-13) தலைவன் கூற்றைக் கேட்கும் தலைவியைக் காட்டும்.

முத்தொள்ளாயிரத்தில் ஒரு பாடல் (126) தலைவியைத் தோழி கூற்றைக் கேட்போளாகக் குறிப்பிடுகின்றது.

திருஏகம்பமுடையார் திருவந்தாதியில் சில பாடல்கள் (69, 75, 78, 79, 81-84, 89) தலைவன் கூற்றைக் கேட்கும் தலைவியைக் காட்டும். ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி (23, 53), திருஏகம் பமுடையார் திருவந்தாதி (97), திருவாரூர் மும்மணிக்கோவை (27) ஆகியன தோழி கூற்றைக் கேட்போளாகத் தலைவியைக் காட்டு கின்றன.

கல்வளையந்தாதி தலைவன் கூற்றைக் கேட்போளாகவும் (80, 81) தோழி கூற்றைக் கேட்போளாகவும் (78) தலைவியைக் காட்டு கின்றது.

குறியிடத்துய்க்கும் போதும், களவையறியும் போதும் தோழி கூற்றைக் கேட்போளாகத் தலைவியைக் கந்தபுராணம் (6:24; 22:164) காட்டும்.

பாரதிதாசனது தேனருவியில் தலைவன் (44, 50, 51, 56), தோழி (39, 42, 43, 47) ஆகியோரின் கூற்றுக்களைக் கேட் போளாகத் தலைவி வருகின்றாள்.

இங்ஙனம் தொல்காப்பியம் முதல் இன்று வரை உள்ள இலக்கியங் களில் கேட்போளாகத் தலைவி இடம் பெறும் மரபு பயின்று வந்துள்ளது. அகத்துறையைப் போற்றிய முத்தொள்ளாயிரம், கோவை, பக்தி இலக்கியம் போன்றவைகளும் தலைவி கேட் போளாக அமையும் துறைச் சூழலைப் போற்றியுள்ளன. கைக்கிளைப் பொருண்மையில் வரும் இலக்கியங்களில் தலைவி கேட்போளாக வரும் இடங்கள் அக இலக்கியங்களை விடக் குறைவாகவே உள்ளன. முத்தொள்ளாயிரத் தலைவியும், பக்தி

இலக்கியத் தலைவியும் மிகுதியும் கூற்றுக்குரியராகவே காணப் படுவது ஈண்டு எண்ணத்தக்கது.

**தோழி**

தலைவி கூற்றைக் கேட்போளாகத் தோழி அமையும் முறை இருநிலைகளில் காணப்படுகின்றது. ஒன்று தலைவி கூற்றைத் தோழி கேட்டல்; இரண்டு தலைவன் சிறைப்புறத்தானாக இருக்கும் போது தலைவி கூற்றைத் தோழி கேட்டல். முன்னது பாலைத் திணையிலும், பின்னது குறிஞ்சித்திணையிலும் இடம் பெற்றுள்ளன.

சங்க அக இலக்கியத்தில் தலைவன் கூற்றைத் கேட்போளாக இருபத்தேழு பாடல்கள் உள்ளன (கு.12, மு.1, ம.5, நெ.5, பா.4). நற்றாய் கூற்றைக் கேட்போளாக உடன்போக்கில் வருகின்றாள் தோழி.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் தலைவன் சிறைப்புறமாக இருக்கும் போது தலைவி தோழியிடம் கூற்று நிகழ்த்துகின்றாள். அவை குறிஞ்சி, நெய்தல் ஆகிய இரு திணைகளில் மட்டும் உள்ளன; தலைவி தோழியிடம் மட்டும் கூறுவதாக உள்ள பாடல்கள் அறுபத் தொன்பது ஆகும்; தலைவன் கூற்றைக் கேட்போளாக மிகக் குறைந்த அளவு பாடல்கள் உள்ளன.

சிலப்பதிகாரத்தில் தலைவி கூற்றைக் கேட்போளாக அமைந்த கானல்வரிப் பாக்கள் (4-6, 32-36, 40-42, 43-45) உள்ளன.

முத்தொள்ளாயிரத்தில் தலைவி கூற்றைக் கேட்போளாகத் தோழி அமைந்த பாடல்கள் (24, 26-28,30....) உள்ளன.

நந்திக்கலம்பகத்தில் தலைவன் கூற்றையும் (62), தலைவி கூற்றையும் (6, 12, 39, 40, 41, 48, 56, 63, 69, 102, 103) கேட்போளாகத் தோழி இடம் பெறுகின்றாள்.

திருஏகம்பமுடையார் திருவந்தாதி (11), திருவாரூர் மும்மணிக் கோவை (24, 25), பழமலையந்தாதி (63) ஆகியவை தோழியைத் தலைவி கூற்றைக் கேட்போளாகக் காட்டுகின்றன.

கந்தபுராணம் (6:24:136) தலைவன் கூற்றைக் கேட்போ ளாகக் காட்டும்.

பாரதிதாசனது தேனருவி (40) தலைவி கூற்றைக் கேட்போ ளாகக் காட்டும்.

தொல்காப்பியர் கூறும் கூற்றுச் சூழலைப் போற்றியமைந்த சங்க இலக்கியத் தோழி, கூற்று நிகழ்த்துவதில் முதலிடம் பெறுகின்றாள்.

எனினும் கேட்போளாகவும் குறிப்பிடத்தக்க அளவு இடம் பெற்றுள்ளாள். பதினெண் கீழ்க்கணக்கு அகப்பொருள் நூல்களுள் குறிஞ்சி, நெய்தல் ஆகிய இருதிணைப் பாடல்களில் மட்டும் கேட்போளாக இருக்கின்றாள் தோழி. மற்றும் கானல்வரி, கோவை போன்ற அகத்துறைப் பாடல்களிலும் இடம் பெற்றுள்ளாள். கலம்பகம், **முத்தொள்ளாயிரம்** ஆகியவை கைக்கிளைப் பொருண்மை பற்றியவை. எனவே தோழிக்குரிய கேட்போர் மரபும் அகப்பொருளின்றும் வேறாகின்றது. பாரதிதாசன் சங்க இலக்கியத்தில் தாம் கொண்ட பயிற்சி காரணமாகப் பல்வேறு அகத்துறைப் பாடல்களைப் புனைந்துள்ளார்; அவற்றுள் தோழிக்குரிய கேட்போர் மரபும் காணப்படுகின்றது. எனினும் அவை நடையாலும், காலத்தாலும் அகப்பொருளின்றும் விலகி நிற்கின்றன.

**பாங்கன்**

பாங்கன் தலைவன் கூற்றைக் கேட்போனாக அமையும் சூழலைத் **தொல்காப்பியம்** கூற்று நிகழிடத்தின் போது காட்டுகின்றது (99:9).

சங்க அக நூல்களில் தலைவன் கூற்றைக் கேட்போனாகப் பாங்கன் வரும் பாடல்கள் 26. அவை குறிஞ்சி (19), முல்லை (1), நெய்தல் (6) ஆகிய மூன்று திணைகளில் மட்டும் உள்ளன.

கலித்தொகையில் பாங்கன் கேட்போனாக அமைந்த பாடல்கள் தனி நிலையில் இல்லை; உரையாடல் பாங்கில் அமைந்ததாக உள்ளது.*

பாங்கன் கேட்போனாகத் திணைமாலை நூற்றைம்பதில் குறிஞ்சித் திணையில் இரண்டு பாடல்களும், நெய்தல் திணையில் மூன்று பாடல்களும் உள்ளன; திணைமொழி ஐம்பதில் நெய்தல் திணையில் ஒரு பாடல் உள்ளது.

சிலப்பதிகாரக் கானல்வரியில் கேட்போனாகப் பாங்கனைக் காட்டும் சில அகத்துறைப் பாக்கள் (9, 10, 14-16) இடம் பெற்றுள்ளன.

**திருவலஞ்சுழி மும்மணிக்கோவை** (9, 10) **கோயில் நான்மணி மாலை** (23), **ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி** (15, 19), **கல்வளையந்தாதி** (55, 85), **நந்திக்கலம்பகம்** (21, 27, 47, 52, 73) ஆகிய நூல்களிலும் பாங்கன், தலைவன் கூற்றைக் கேட்போனாக அமைந்த பாடல்கள் உள்ளன.

---

* முல்லைக்கலி 102 தலைவன்[1] + பாங்கன்[2] + சுற்றத்தார்[3]

செண்பகராமன் பள்ளில் ஒரு பாடல் (61) தலைவன் கூற்றைக் கேட்கும் பாங்கனைக் காட்டும்.

இங்ஙனம் அகப்பாடல்களிலும் அகத்துறையைப் போற்றிய நூல்களிலும் பாங்கன் கேட்போனாக வரும் மரபு போற்றப் பட்டுள்ளது. கைக்கிளைப் பொருண்மையுடைய நூல்களில் (முத்தொள்ளாயிரம்....) பாங்கன் பெரும்பாலும் இடம்பெறவில்லை என்பதும் ஈண்டு கருதத்தக்கது.

**பாகன்**

தொல்காப்பியர் பாகனைக் கூற்றுக்குரியனாகக் கூறவில்லையெனினும் கேட்போனாக இடம் பெறும் பாங்கைத் தலைவன் கூற்று நிகழிடங்களில் காட்டுகின்றார் (44:24, 144:48).

தலைவன் கூற்றைக் கேட்போனாக மட்டும் பாங்கன் வருவது போலப் பாகனும் தலைவன் கூற்றைச் செவி மடுப்போனாக மட்டும் உள்ளான்.* முன்னவர் களவில் பாங்கற் கூட்டத்திலும், பின்னவர் பொருளவயிற் பிரிவிலும் இடம்பெறுபவராவர். பாங்கன் கேட் போனாக வரும் பாடல்கள் குறிஞ்சித் திணையில் இடம்பெற, பாகன் கேட்போனாக வரும் பாடல்கள் முல்லைத்திணையில் இடம் பெறுகின்றன. மருதத்திணையில் அத்தகைய பாடல்கள் இல்லை. பாலை, நெய்தல், குறிஞ்சி ஆகிய திணைகளில் மிகவும் குறைவாக உள்ளன.

ஐந்திணை ஐம்பது (மு.10), கார் நாற்பது (19-22) ஆகிய நூல்களில் பாகன் கேட்போனாக அமைந்த பாடல்கள் உள்ளன.

பழமலையந்தாதி (76), மருதூரந்தாதி (13), கல்வளையந்தாதி (66) போன்ற அந்தாதி நூல்களிலும் அத்தகைய பாடல்கள் உள்ளன.

பாரதிதாசனது தேனருவியில் உள்ள ஓர் அகத்துறைப் பாடல் (55) பாங்கனைக் கேட்போனாகக் காட்டும்.

பாகன் கேட்போராக வரும் மரபு அகப்பொருளிலும், அகத் துறையைப் போற்றும் கோவை, அந்தாதி போன்றவற்றுள்ளும்

---

* தலைவன் ⟶ தேர்ப்பாகன் 49 பாடல்கள்.

கு.1, மு.44, ம.—, நெ.1, பா.3;

நற்றிணையில் ஒரு பாடல் (121) பாகனைக் கூற்றுக்குரியனாகக் காட்டுவதும் ஈண்டு எண்ணத்தக்கது.

காணப்படுகின்றது. **முத்தொள்ளாயிரம்**, தூது போன்ற கைக்கிளைப் பொருண்மையுடைய நூல்களில் பாங்கற்கூட்டம் பற்றிய செய்தி இல்லை: எனவே பாங்கன் கேட்போனாக அமையும் பாடல்களும் இல்லை.

**பாணன்**

தலைவன் (144:16,25), தோழி (148:25), பரத்தை (149:10) ஆகியோர் கூற்றைக் கேட்போனாகப் பாணனைக் காட்டுகின்றது **தொல்காப்பியம்**.

எட்டுத்தொகை நூல்களில் தலைவி, தோழி, தலைவன், பரத்தை, காதற்பரத்தை, காமக்கிழத்திக்குப் பாங்காயின விறலி ஆகியோர் கூற்றைக் கேட்போனாகப் பாணன் காட்டப்படுகின் றான். இவற்றுள் தலைவி கூற்றைக் கேட்போனாக உள்ள பாடல்கள் ஏனையவற்றைக் காட்டிலும் அதிகமாகும்.*

**கைந்நிலை** தோழி தலைவி ஆகியோரது கூற்றைக் கேட் போனாகப் பாணனைக் காட்டும்; **திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணை ஐம்பது, திணை மொழி ஐம்பது** ஆகியவை தலைவி கூற்றைக் கேட்போனாகப் பாணனைக் காட்டும்.

**நந்திக்கலம்பகம்** (105) தலைவி கூற்றைக் கேட்கும் பாணனைக் காட்டும்.

பாணன் 'கற்பு' எனும் கைகோளில் 'பரத்தையிற் பிரிவு' எனும் கிளவித்தொகையில் ஒருசில அகமாந்தரின் கூற்றை மட்டும் கேட்பவ னாக அமைபவன். எனவே பாணன் கேட்போனாக வரும் பாடல் களின் எண்ணிக்கை சிறுபான்மையாகும். அகத்துறையைப் போற்றும் நூல்களுள்ளும் கோவை, கலம்பகம் போன்ற சிலவற்றுள் மட்டும் பாணன் கேட்போராகும் மரபு உள்ளது.

**செவிலி**

அறத்தொடு நிற்றலின் போதும், உடன்போக்கின் கண்ணும் தோழி கூற்றையோ, அல்லது கண்டோர் கூற்றையோ கேட் போளாக வருபவள் செவிலி.

எட்டுத்தொகை அகநூல்களில் குறிஞ்சித்திணையிலும், நெய்தல் திணையிலும் செவிலி கேட்போளாக உள்ள பாடல்கள் மிகுதியாக வும், பாலைத் திணையிலும் மருதத் திணையிலும் மிகக் குறைவாக

* தலைவி 18, தோழி 12, தலைவன் 5, பரத்தை 1, காதற் பரத்தை 1, காமக்கிழத்திக்குப் பாங்காயின விறலி 1.

வும் உள்ளன. முல்லைத் திணையில் அப்பாடல்கள் இல்லை.* அவற்றில் கண்டோர், நற்றாய் ஆகியோரது கூற்றைக் கேட்போளாகச் செவிலி அமைக்கின்றாள்.

திணைமாலை நூற்றைம்பதில் குறிஞ்சித்திணையில் மூன்று பாடல்களும் (2,12,14), நெய்தலில் இரண்டு பாடல்களும் (39,62), தோழி கூற்றைக் கேட்கும் செவிலியைக் காட்டுவன. மேலும் அந் நூலில் மூன்று பாடல்கள் (71, 72, 89) கண்டோர் கூற்றைக் கேட்போளாகவும் செவிலியைக் காட்டுகின்றன.

**முத்தொள்ளாயிரம்** தலைவி கூற்றைக் கேட்கும் செவிலியைக் காட்டும் (38).

**நந்திக் கலம்பகம்** (17, 22, 28), **ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி** (57, 69, 70), தோழி கூற்றைக் கேட்கும் செவிலியைக் காட்டும். **கந்தபுராணம்** அறத்தொடு நிற்றலின் போது தோழி கூற்றைக் கேட்போளாகச் செவிலியைக் காட்டும் (6:24; 114,115), **திருவேங்கடத்தந்தாதி** (53) தலைவி கூற்றைக் கேட்போளாகவும், **பழமலையந்தாதி** (33) நற்றாய் கூற்றைக் கேட்போளாகவும் செவிலியைக் காட்டும்.

பாரதிதாசனது தேனருவியில் தோழி கூற்றைக் கேட்போளாகச் செவிலி அமைந்ததைக் காட்டும் துறைப்பாடல் ஒன்று (49) உள்ளது.

**அனிச்சஅடி** நாடகத்தில் (அங்கம் 1 களம் 2) அறத்தொடு நிற்றலின்கண் செவிலி கேட்போளாக இடம் பெறுகின்றாள்.

தோழி, தலைவி, தலைவன் போன்றில்லாமல் குறிப்பிட்ட சில இடங்களில் (அறத்தொடு நிற்றல், உடன்போக்கு) மட்டும் வருபவள் செவிலி. எனவே செவிலி கேட்போராக வரும் மரபு சங்க அக நூல்களிலேயே சிறுபான்மைப் பாடல்கள் தான்; எனவே அகப்பொருள் கூறுகளைப் போற்றும் நூல்களிலும் அம்மரபு மிகக் குறைவாகக் காணப்படுகின்றது.

**தாய்**

தோழி, கண்டோர் ஆகிய இருவரது கூற்று நிகழிடங்களைக் கூறும் **தொல்காப்பியம்**, அவர்களது கூற்றுச் சூழலில் தாய் கேட்போராக அமைவதைக் காட்டும் (42:5, 112:37, 43:7).

---

* தோழி→ செவிலி — 36 பாடல்கள்

கு. 16, மு. ——, ம. 4, நெ. 14, பா. 2.

சங்க அகப்பாடல்களில் கண்டோர் தோழி ஆகிய இருவரின் கூற்றுக்களையும் கேட்போராகத் தாய் காணப்படுகின்றாள்.

**நாலாயிர திவ்வியப்பிரபந்தம்**, தலைவி (1118-1127, 2568-78), தோழி (2678-88) ஆகியோரது கூற்றுக்களைச் செவிமடுக்கும் தாயைக் காட்டும். அவை 'தாய்மாரும் தோழிமாரும் உற்றாரும் தடுக்கவும் திருப்பேரெயில் சேரத் துணியும்' தலைவியைப் பற்றியன. எனவே கேட்போராக நற்றாய் இடம் பெற்றிருப்பினும், பாடற் பொருண்மை அகப்பொருளின்று விலகி நிற்பதைக் காணலாம்.

நந்திக் கலம்பகத்தில் தோழி தாய்க்குக் கூறியதாக ஒரு பாடல் (87) உள்ளது.

அகப்பொருளில் செவிலி வரும் இடங்களில் வந்து அவள் கூற்றைக் கேட்போளாக வருபவள் நற்றாய். எனவே அவள் கேட்போராக வரும் மரபு இலக்கியங்களில் மிகக் குறைவாகக் காணப்படுகின்றது.

**முத்தொள்ளாயிரம்,** பக்தி இலக்கியம், **தனிப்பாடல் திரட்டு** போன்றவற்றுள் நற்றாய் மிகுதியும் கூற்றுக்குரியவளாக வருகின்றாள் என்பதும் ஈண்டு உறழ்ந்து நோக்கத்தக்கது; அவை கைக்கிளைப் பொருண்மை பற்றியன; ஆனால் அகத்துறையைப் போற்றும் நூல்களில் உடன்போக்குச் சூழலில் நற்றாய் கேட்போளாக வரும் மரபு போற்றப்பட்டுள்ளது.

**கண்டோர்**

**தொல்காப்பியம்** நற்றாய் கூற்று நிகழிடங்களில் கேட்போராகக் கண்டோரைக் காட்டும் (39:6). மேலும் 'ஏனைய வாயிலோ ரெதிரொடு தொகைஇ'(144:57) எனக் கண்டோரை உளப்படுத்தித் தலைவன் கூற்றுச் சூழலை விளக்கும். இதற்கு இளம்பூரணர் 'இவை யெல்லாம் காமப் பொருளாகத் தோன்றா, அவர் செயல் பொருளாகத் தோன்றும்' என அக்கூற்றின் தன்மையைப் புலப்படுத்துவர்.

தலைவி கூற்றைக் கேட்போராக உடன்போக்கில் கண்டோர் அமைவதை ஐங்குறுநூற்றில் இருபாடல்கள் (385, 397) காட்டும். நற்றிணையில் ஒரு பாடல் (198) செவிலி கூற்றைக் கேட்போராகக் கண்டோரை அமைத்துள்ளது.

தொல்காப்பியத்தில் இடம் பெறாத துறைச் சூழலைச் சில பாடல்கள் பெற்றுள்ளன. கலிப்பாடல் (140), 'மடலேறும் தலைவன் கண்டார்க்குக் கூறியது' என்றும், நற்றிணைப் பாடல் (374) 'வினைமுற்றி மீள்வான் இடைச்சுரத்துக் கண்டார்க்குச் சொல்லியது

என்றும் துறைக்குறிப்புப் பெற்றுள்ளன. எனவே கண்டோர், தலைவன் கூற்றை மட்டும் கேட்போராகும் மரபு சங்க அக இலக்கியத்தில் தொல்காப்பியர் மரபினின்றும் விலகத் தொடங்கிவிட்டது எனத் தெளியலாம்.

பதினெண்கீழ்க்கணக்கில் உள்ள அகநூல்கள் தொல்காப்பியர் காட்டிய துறைச்சூழலில் செவிலி கூற்றைக் கேட்கும் கண்டோரைக் காட்டுகின்றன.

முத்தொள்ளாயிரத்தில் உலாக்கண்ட மகளிரின் காமநிலையைக் கூறுவதாகக் கண்டோர் கூற்றுப் பாடல்கள் உள்ளன. ஆனால் கண்டோர் கேட்போராகும் மரபு அதில் காணப்படவில்லை.

செவிலி, நற்றாய் ஆகியோரைப் போன்று ஒருசில இடங்களில் மட்டும் வரும் கண்டோர் கேட்போராகும் மரபு, தமிழ் இலக்கியங்களில் வரலாற்று நோக்கில் மிக அருகியே காணப்படுகின்றது. அகத்துறையைப் போற்றும் கோவை இலக்கியம் தவிர ஏனையவற்றில் அவ்வளவாக அம்மரபு போற்றப்படவில்லை.

## தொகுப்புரை

தோழி, தலைவி, தலைவன். நற்றாய், செவிலி, கண்டோர் ஆகியோர் கூற்றுமரபு பெரும்பாலும் **தொல்காப்பியம்** முதல் இன்று வரையுள்ள இலக்கியங்களில் காணப்படுகின்றன. அவற்றுள் தலைவன் கூற்று **முத்தொள்ளாயிரம்**, பக்தி இலக்கியம் ஆகியவற்றில் இடம் பெறவில்லை; அதாவது கைக்கிளைப் பொருண்மையுடைய நூல்களுள்ளும், கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பொருண்மையுடைய பாடல்களிலும் இடம் பெறவில்லை. நற்றாய் செவிலி ஆகியோர் கூற்று மரபைத் **தனிப்பாடல் திரட்டு** மிகுதியும் போற்றியுள்ளது. கண்டோர் கூற்று மரபு கலித்தொகையில் தொல்காப்பியர் கூறாத துறைச் சூழலில் பயின்று வந்துள்ளது. கலித்தொகையில் காணப்படும் கூற்று மரபு பிற எட்டுத்தொகை நூல்களின்றும் வேறுபட்டு உரையாடல் பாங்கில் (ஒன்றுக்கு மேற்பட்டோர் கூற்றுக்குரியராகும் மரபு) அமைந்துள்ளது.

இங்ஙனம் மேற்காட்டிய கூற்றுக்குரியர் மரபு அகப்பொருள் நூல்கள், அகத்துறையைப் போற்றும் நூல்கள் (கோவை) அகக் கூறுகளைப் போற்றும் நூல்கள் (தூது, பள்ளு, கலம்பகம்) தனிப்பாடல்கள் ஆகியவற்றில் காணப்படுகின்றன. எனினும் அகப்பொருள் தவிர்ந்த ஏனையவற்றில் இடம்பெறும் கூற்றுக்குரியார் மரபு அகப்பொருளினின்றும் விலகி அமைந்தவை எனக் கொள்ளத்தக்கவை.

கேட்போராக உள்ள தலைவன், தலைவி, தோழி, பாங்கன், பாகன், பாணன், செவிலி, தாய், கண்டோர் ஆகியோர் மரபு

ஆங்காங்குச் சில இலக்கியங்களில் காணப்படுகின்றன. அவர்களுள் **முத்தொள்ளாயிரம்**, பக்தி இலக்கியம் ஆகியவற்றுள் இடம்பெறும் தலைவன் கேட்போராக வைத்துப் பாடப்படுகின்றான்; கூற்று நிகழ்த்துவதில்லை. தாய் கூற்று மரபு பக்தி இலக்கியத்திலும், தனிப் பாடல் திரட்டிலும் மிகுதியும் காணப்படுவன எனினும் தாய் இடம் பெறும் துறைச்சூழல் அறத்தொடுநிற்றல் உடன்போக்கு ஆகிய வற்றில் மட்டுமே; எனவே கேட்போராக உள்ள பாடல்கள் அருகிக் காணப்படுகின்றன. பாங்கன் (பாங்கற் கூட்டம்), பாகன் (பொருள் வயிற்பிரிவு), பாணன் (பரத்தையிற் பிரிவு) போன்றோர் பயின்று வரும் சூழல் மிகக் குறைவு, அவர்கள் கேட்கும் மரபு அக இலக்கியத் துள்ளேயே மிகக் குறைவு. எனவே அகப்பொருள் கூறுகளையுடைய பிற இலக்கியத்தில் மிகச் சிறுபான்மை மட்டுமே உள்ளனர். கண்டோர் தலைவன் கூற்றைக் கேட்போராக அமைந்திருப்பது சங்க அக நூல்களுள் கலித்தொகையில் மட்டுமே காணப்படுகின்றது.

இங்ஙனம் அகமாந்தர் கேட்கும் மரபு அகப்பொருள் நூல்களிலும் அகத்துறை மரபினைப் போற்றும் நூல்களிலும் அகக்கூறு உடைய இலக்கியங்களிலும் தொடர்ந்து பயின்று வந்துள்ளன. எனினும் அகப்பொருள் தவிர்ந்த ஏனையவற்றில் உள்ள கேட்போர் பற்றிய மரபு அகப்பொருளினின்றும் விலகி நிற்கக் காண்கின்றோம்.

## சான்றெண் விளக்கம்

### இயல் நான்கு

#### கூற்று

1 தோழி 42, 112, 148.
தலைவி 45 (இளம்பூரணம்) 109, 145, 171, 172.
தலைவன் 44, 99, 144.
நற்றாய் 39.
செவிலி 113, 151.
காமக்கிழத்தி 149.
கூத்தர் 166.
பார்ப்பர் 175.
பாணர் 167.
இளையர் 168.
வாயில்கள் 150.

—தொல். பொருள்.

2 தொல். பொருள், 492.

3 தோழி கூற்றுக் கேட்போர் :
தலைவன் (42:1, 148:27), தாய் (42:5, 112:37); பாணர் (148:25), கூத்தர் (148:25), விறலியர் (148:25) —தொல், பொருள். (42, 112, 148).

4 அ. இராமகிருட்டிணன், அகத்திணை மாந்தர் - ஓர் ஆய்வு, 104.

5 காண்க, இணைப்பு-1.

6 தலைவி (126), மன்னர் (118), நெஞ்சு (31, 40, 46, 59, 125).

— முத்தொள்ளாயிரம்.

7 நாலாயிர திவ்வியப் பிரபந்தம், 2225-35, 2425-35, 2447-57, 2579-89, 2689-99, 2700-10, 2755-65.

8 நந்திக் கலம்பகம். 15, 17, 22, 28, 37, 42, 44, 45, 49, 54, 55, 57, 59, 60, 61, 67, 70, 79, 88, 90.

9 நந்திக் கலம்பகம், 15.

10 பாரதிதாசன், தேனருவி, பக்கம் 71/பாடல் 53.

11 நற்றிணை, 10:1-4.

12 சு. செயபாலன், ''கண்ணதாசன் கவிதைகளில் அகப் பொருள் மரபுகள்'' 80.

13 தலைவி கூற்றுக் கேட்போர் :
தோழி (109:12), கிழவன் (145:32...), புதல்வன் (145:18, 24, 32), மாயப்பரத்தை (145:33)
— தொல்.பொருள். (109,145, 171, 172).

14 காண்க, இணைப்பு-2.

15 ,,

16 குறுந்தொகை 322:4-6.

17 முத்தொள்ளாயிரம், 24-30, 32-36, 39, 41-45, 47, 48, 50-53, 55-58, 60, 61, 86, 88-97, 99, 100-106, 119-124, 127-130.

18 முத்தொள்ளாயிரம் 38.

19 ,, 126.

20 ,, 120.

21 ,, 50.

22 தேவாரம், 5/53:6.

23 ,, 6/58:5.

24 நாலாயிர திவ்வியப் பிரபந்தம், 258.

25 ,, 2568.

26 ,, 1788.

27 ,, 1789.

28 ,, 2612.

29 ,, 2766.

30 திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, 8.

31 திருஏகம்பமுடையார் திருவந்தாதி, 90.

32 நந்திக் கலம்பகம், 6, 12, 13, 39, 40, 41, 48, 50, 56, 68, 69, 76, 77, 84, 87, 100, 102, 103, 105, 107, 109.

33 மூவருலா (விக்ரம சோழனுலா), 160, 281, 283.

34 திருக்குற்றாலக் குறவஞ்சி, 36:1.

35 ,, 39.

36 தனிப்பாடல் திரட்டு-1, 1074.

37 ,, 885.

38 ,, 553.

39 ,, 729.

40 பாரதியார் கவிதைகள், 271.

41 பாரதிதாசன், தேனருவி, 56.

42 ,, 59.

43 சு. செயபாலன், ''கண்ணதாசன் கவிதைகளில் அகப் பொருள் மரபுகள்'', 80.

44 தலைவன் கூற்றுக் கேட்போர் :
அந்தணர் (144:5)
சான்றோர் (144:15)
பிறர் பிறர் (144:16)
வாயில் (144:25)
வாயிலோர் (144:57)
ஐயர் (144:29)
கிழத்தி (44:24, 144:49)
தோழி (99:13, 144:44)

* பாகர் (44:21, 144:48)
காமக்கிழத்தி (144:49)
புதல்வன் (144:27)

— தொல். பொருள். (44, 99, 144)

* தொல்காப்பியர் தலைவன் கூற்றைக் கேட்போரைக் குறிப்பிடுகின்றார் (496); அவர்களுள் பாகன் இல்லை. எனினும் கூற்றுக்குரிய சூழலில் பாகன் கூடுதலாக இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

45 காண்க, இணைப்பு-3.

46 ,,

47 நந்திக் கலம்பகம், 108.

48 ,, 24.

49 பாரதியார் கவிதைகள், 279.

50 ,, 281.

51 சு. செயபாலன், ''கண்ணதாசன் கவிதைகளில் அகப் பொருள் மரபுகள்'', 80.

52 தொல். பொருள். 493.

53 ,, 39.

54 காண்க, இணைப்பு-4.

55 ஐந்திணை ஐம்பது 20.
திணைமொழி ஐம்பது 33, 37.
திணைமாலை நூற்றைம்பது 15, 75, 90.

56 தேவாரம், 5/45:1.

57 நாலாயிர திவ்வியப் பிரபந்தம், 2431.

58 ,, 2433.

59 ,, 287.

60 ,, 297.

61 பொன் வண்ணத்தந்தாதி, 56.

62 திரு ஏகம்பமுடையார் திருவந்தாதி, 68.

63 கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி, 27.

64 கோயில் நான்மணிமாலை, 22.

65 திருவரங்கக் கலம்பகம், 27.

66 ந. சிவராசு, ''முப்பள்ளு'', (முதுகலைப் பொருட் கட்டுரை), 31-35.

67 தனிப்பாடல் திரட்டு-1, *552, 833, 852, 853, 880, 888, 893, 895, 900, 904, 905, 909, 914-917, 929, 930, 933, 937, 939, 941, 943, 945, 947, 1082.*

68 தனிப்பாடல் திரட்டு-1, *914.*

69 ,, *888.*

70 ,, *856.*

71 ,, *860.*

72 திருஅருட்பா, *1580-1600, 2990-99, 4190-99, 5680-89.*

73 ,, *1582.*

74 ,, *4199.*

75 ,, *5680.*

76 தொல். பொருள். *113.*

77 ,, *151.*

78 நற்றிணை, *40:5-6.*

79 அகநானூறு, *26:17-18.*

80 ,, *254:1-2.*

81 நற்றிணை, *110:6.*

82 குறுந்தொகை, *229:3.*

83 முத்தொள்ளாயிரம், *98.*

84 தேவாரம், *5/40:1.*

85 ,, *5/40:6.*

86 பொன் வண்ணத்தந்தாதி, *54.*

87 மதுரைக் கலம்பகம், *5. 7, 14, 28, 29, 35, 50, 51, 59, 79, 91, 99.*

88 நந்திக் கலம்பகம், *10.*

89 தனிப்பாடல் திரட்டு-1, *910, 911, 913, 922, 925, 927, 932, 935, 938, 940.*

90 பாரதிதாசன், தேனருவி, பக்கம் 72/பாடல் 54.

91 தொல்பொருள். *43.*

92 முத்தொள்ளாயிரம், *87.*

93 பழமலையந்தாதி, *96.*

# இணைப்பு—1

## தோழி கூற்று

| கேட்போர் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| தலைவன் | ஐங். | 231-234, 236-240, 244, 251, 257, 260, 264, 266, 273, 275-277, 279, 282, 285, 287, 289, 290, 294, 296, 297 | 423, 424 | 1-10, 44-46, 50-52, 54-60, 75, 76, 84, 91, 98, 100 | 143, 158, 159, 177, 179, 180, 186, 187, 193, 194, 196 | 301-310, 362, 364, 368 |
| | குறுந். | 1, 18, 42, 69, 81, 115, 138, 179, 198, 225, 244, 335, 336, 342, 355, 365 | 210 | 10, 53, 55, 113, 127, 139, 178, 196, 238, 252, 258, 295, 309, 354, 384 | 9, 114, 236, 294, 303, 324, 345, 381, 397 | 124, 363, 388 |
| | நற். | 23, 55, 57, 93, 98, 108, 156, 168, 188, 232, 247, 253, 255, 257, 259, 276, 292, 306, 317, 326, 336, 353, 379, 383, 396, | 266 | 30, 210, 230, 330, 360 | 15, 19, 35, 45, 58, 67, 124, 131 145, 159, 172, 183, 195, 215, 223, 227, 254, 258, 270, 283, 295, 323, 331, 345, 347, 354, 363, 375, 395, 398 | 10, 12, 26, 33, 37, 43, 46, 48, 71, 229, 318, 325, 337 |

| கேட்போர் நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| அகம். | 2, 12, 18, 78, 92<br>112, 118, 132, 148<br>168, 172, 182, 192,<br>202, 218, 238, 288,<br>308, 318 | 104, 314<br>394 | 46, 96, 116,<br>156, 176, 226,<br>246, 256, 286,<br>296, 306, 326,<br>346, 366, 386 | 10, 30, 60,<br>80, 90, 100<br>120, 150, 200<br>220, 240, 270,<br>300, 310, 320,<br>340, 350, 360 | 13,81,107,<br>143, 161,<br>179, 215,<br>271, 283,<br>307, 319,<br>387 |
| கலி. | 44, 46, 48, 49, 50,<br>52, 53 | — | 70 | 121, 124-127,<br>129, 132, 133,<br>135, 136, 149 | 3-5, 7, 8, 12<br>14, 15, 18,<br>19, 21, 22,25 |
| தலைவி + ஐங். (தலைவன் சிறைப்புறம்) | 204, 206, 214, 216,<br>225, 227, 261,<br>267-269 | — | — | — | — |
| குறுந். | 90, 159, 161, 268,<br>284, 292, 332, 357,<br>372, 392 | — | — | 109, 123, 227 | 48 |
| நற். | 36, 47, 53, 61, 68,<br>83, 88, 114, 122,<br>147, 151, 154, 173,<br>182, 194, 206, 228,<br>233, 251, 261, 285,<br>297, 313, 322, 339,<br>344, 355, 365, 368,<br>376, 389, 399 | —<br>— | —<br>— | 4, 11, 27, 72,<br>96, 123, 135,<br>138, 175, 191,<br>203, 231, 239,<br>263, 367, 299,<br>372, 378 | —<br>— |

| கேட்போர் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| தலைவி | அகம். | 26, 68, 88, 98, 108, 188, 222, 228, 232, 242, 248, 272, 278, 282, 302, 312, 358, 362, 382 | — | — | 20, 210 | — |
| | கலி. | 65 | — | — | — | — |
| | ஐங். | 202, 207, 211, 217-219, 223, 226, 228-230, 235, 242, 245, 246, 252, 254, 270, 300 | 431-440 461-470 | 17, 21, 26, 27, | 145, 147, 148, 189, 198-200, | 315, 331, 351-354, 357, 358, 398, |
| | குறுந். | 13, 52, 73, 74, 88, 111, 143, 146, 176, 212, 247, 263, 265 297, 298, 308, 307, 321, 333, 339, 346 353, 373, 374, 379, 389, 394. | 66, 251, 275, 287, 358, 382 | 34, 367, 393 | 51, 117, 116, 177, 230, 248, 328, 351 | 16, 22, 37 59, 130, 135, 180, 211, 213, 215, 217, 232, 253, 255, 260, 262, 273, 282, 331, 338, 343, 348, 350, 369, 380, 383, |

| கேட்போர் நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| நற் | 13, 22, 25, 32, 65, 78, 85, 112, 125, 128, 129, 134, 158, 165, 220, 222, 244, 268, 273, 282, 288, 294, 328, 334, 359, 373, 386, 393 | 89, 99, 115 316, 367. | — | 49, 91, 111, 132, 149, 163, 235, 245, 278, 307, 311, 333, 358, 392 | 5, 7, 18, 28, 41, 86, 92,148, 164, 171, 189, 197, 208, 212, 237, 246, 252, 274, 286, 329, 387 |
| அகம் | 32, 42, 178, 268, 392 | 4, 184 | 316, 356 | 70, 180, 250, 330, 380, 400 | 25, 27, 59, 61, 65,69,71,73,75 85,91,111, 125 127, 129, 137, 159, 171, 173, 177, 197, 201, 209, 211, 213, 221, 223, 227, 231, 233, 237, 251, 253, 259, 269, 285, 295, 311, 313, 317, 323, 357, 359, 363, 393, 399 |

| கேட்போர் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| | கலி. | 37-41, 60, 61, 63 | 101, 103–105 107, 115 | —— | 131, 150 | 2, 10, 13, 16, 17 26-29, 31-36 |
| செவிலி | ஐங். | 205, 208, 210 212, 220, 241, 248, 250, 271, | —— | 28-30, 93 | 101, 102, 104, 110, 168, 190 | 366, 367 |
| | குறுந். | 23, 26, 83, 362, 366 | —— | —— | —— | —— |
| | நற். | —— | | —— | 207 | |
| | அகம். | 41, 158 | —— | —— | 110, 190 | —— |
| | கலி. | —— | —— | —— | —— | —— |

| கேட்போர் | ஐங்குறு நூறு | குறுந்தொகை | நற்றிணை | அகநானூறு | கலித்தொகை |
|---|---|---|---|---|---|
| தலைவி (வாயிலோர் கேட்ப) | 24,25 (ம.) | — | — | — | — |
| தலைவி (தமர் கேட்ப) | 247, 249 (கு.) | — | — | — | — |
| தாய் | 243 (கு.) 103 (நெ.) | — | 351 (கு.) | — | — |
| தமர் (தலைவன் கேட்ப) | 258 (கு.) 182 (நெ.) | — | — | — | — |
| தமர் | — | 214 (கு.) | — | — | — |
| அறிவர் | — | 277 (பா.) | — | — | — |
| உழவர் (தலைவன் சிறைப்புறம்) | — | — | 60 (ம.) | — | — |
| தலைமகற்குப் பாங்காயினார் | — | 45 (ம.) | — | — | — |
| விறலி | — | — | 170, 310 (ம) | — | — |
| பாணர் | 471, 472 (மு.) | 85, 359 (ம.) | 50, 90, 180, 200, 380 (ம.) 127, 167, 291 (நெ.) | 50 (நெ.) | |

| கேட்போர் | ஐங்குறு நூறு | குறுந்தொகை | நற்றிணை | அகநானூறு | கலித்தொகை |
|---|---|---|---|---|---|
| வாயில் | 16 (ம.) 153, 156 (நெ.) | 61 (ம.) | 361 (மு.) 269 (பா.) | — | — |
| தன்னுள் | — | 89 (ம.) | 301 (கு.) 211, 342 (நெ.) | — | 43, 47 (கு.) |
| இல்லை | 283 (கு.) 149 (நெ.) 316 (பா.) | — — | 181 (மு.) | 38 (கு.) 160 (நெ.) | — |
| தெய்வம் | — | | 34 (கு.) | — | — |
| நிலா (தலைவன்) | — | 47 (கு.) | — | — | — |
| சிறைப்புறம் | 284 (கு.) 166 (நெ.) | 375 (கு.) | 199, 125 (கு.) 63, 178 (நெ.) | 370 (நெ.) | — |

* பத்துப்பாட்டில் குறிஞ்சிப்பாட்டு தோழி கூற்றிற்குரியது.

# இணைப்பு—2

## தலைவி கூற்று

| கேட்போர் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| தோழி | ஐங். | 201, 203, 209, 213, 253, 262, 263, 274, 286 | 453-457 459 | 14, 15, 19, 20, 22, 23, 32-36 | 112, 141, 144, 146, 150, 151, 152, 154, 155, 161-165, 167, 169, 170, 181, 184, 192 | 311, 312, 314, 317, 319, 332, 334-340, 392, |
| | குறுந். | 25, 36, 38, 54, 60, 68, 76, 82, 86, 96, 105, 106, 112, 121, 133, 134, 150, 152, 153, 160, 170, 185, 187, 201, 208, 223, 241, 249, 257, 259, 264, 271, 288, 301, 302, 315, 322, 361, 371, 377, 385 | 21, 64, 65, 94, 98, 108, 110, 126, 148, 183, 186, 188, 190, 191, 193, 194, 221, 234, 240, 279, 289, 314, 319, 344, 387, 391 | 31, 33, 46, 93, 171, 181, 202, 203, 231, 293, 330, 368, 399, | 4, 5, 6, 57, 97, 102, 103, 118, 145, 172, 175, 197, 200, 205, 226, 228, 243, 245, 290, 304, 310, 316, 318, 325, 334, 340, 341, 386 | 12, 20, 27, 28, 30, 39, 41, 43, 67, 77, 79, 104, 140, 149, 154, 174, 192, 207, 216, 218, 220, 224, 254, 266, 278, 281, 283, 285, 307, 329, 352, 395, 398 |

| கேட்போர் நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| நற். | 1, 17, 64, 104, 116, 133, 217, 225, 255, 304, 309, 332, 357, | 97, 289, 364 | 79, 280, | 38, 87, 117, 130, 199, 218, 219, 272, 303, 338, 369, 392, | 14, 24, 56, 73, 84, 107, 109, 119, 174, 177, 186, 214, 224, 226, 241, 281, 296, 343, 397, |
| அகம். | 28, 82, 292, 352 | 74, 194, 264, 294, 364 | 26, 56, 66, 236 | 40 | 1, 11, 23, 31, 37, 45, 53 67, 95, 97, 101, 103, 113, 115, 119, 133, 135, 139, 141, 147, 151, 155, 157, 163, 175, 183, 185, 187, 205, 217, 229, 235, 241, 243, 247, 249, 255, 267, 277, 281, 293, 301, 305, 309, 325, 329, 331, 333, 341, |

| கேட்போர் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 345, 347, 349 355, 367, 375 389, 391, 395 |
| | கலி. | 42, 51, 54, 55, | 111, 114 | 67,75,76 | 118, 119, 112, 128 | 11, 24 |
| தோழி + தலைவன்/ | ஐங். | 215, 221, 222, 224, 272, 278 | — | — | 111, 113-120 142 | — |
| ததைவன் சிறைப் புறம் | குறுந். | 3, 141, 158, 239, 261, 360 | — | — | 125, 219, 246 269, 296, 299 311, 313, 320 326, 349 | — |
| | நற். | 51, 94, 136, 114, 236, | — | — | 31, 275, 327, 388 | — |
| | அகம். | 8, 72, 102, 122, 128, 138, 252, 328, 332, 348, 368, 378, 388 | — | — | 260, 290 | |
| | கலி. | — | — | — | 137 | |

| கேட்போர் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| தலைவன் | ஐங். | 293 | — | 42,43,47-49,53,61-66,68-71,80,83,85 | 137, 160 | 369, 370 |
| | குறுந். | — | — | 169 | 49 | — |
| | நற் | — | — | 20, 260, 340, 350 | — — | — — |
| | அகம். | 58, 298 | — | 6, 16, 36, 196, 266 | — | — |
| | கலி. | — | 110, 112, 113, 116 | 73,79,88, 93,98,66, 77,89, 95-97. | — | 6,20,23 |
| இல்லை | ஐங். | — | 451, 452 458, 460 | — | — | 33, 341-350 |
| | குறுந். | — | 24, 155 | — | 195 | — |
| | நற். | — | 69, 381 | — | 249 | 302 |
| தன்னுள் | ஐங். | 292 | — | 12 | — | 318, 320 |
| | குறுந். | — | — | 157, 305 | 401 | — |

| கேட்போர் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| | நற். | — | — | — | 187, 196 | 153, 193, 204, 243, 314 |
| | அகம். | — | — | — | — | 273 |
| | கலி. | — | — | 84, 86 (மகன்) 83, 85 | — | — |
| பாணன் | ஐங். | — | 473, 474, 476 | 11, (தலைவன் கேட்ப) 82 | 131-133 136-140 (தலைவன் கேட்ப) 134, 135 | — |
| | குறுந். | — | — | 75 | — | — |
| | நற். | — | — | — | 74 | — |
| | அகம். | — | — | 146 | — | — |
| | கலி. | — | — | — | — | — |

| கேட்போர் | ஐங்குறு நூறு | குறுந்தொகை | நற்றிணை | அகநானூறு | கலித்தொகை |
|---|---|---|---|---|---|
| நெஞ்சு | 295 (கு.) | 91 (ம.) 306 (நெ.) | 287, 348 (நெ.) 118 (பா.) | 303 (பா.) | 87 (ம.) 123 (நெ.) |
| வாயில் | 265 (கு.) 13, 18, 41, 95, (ம.) | 50 (ம.) | — | — | — |
| மகன் (தலைவன் சிறைப்புறம்) | 157 (நெ.) | — | — | — | 80,82 (ம.) |
| ஆறு | — | 327 (கு.) | — | 398 (கு.) | — |
| நாரை | — | — | 70(ம.) 54(நெ.) | — | — |
| பொழுது | 183 (நெ.) | 92, 122 (நெ.) | — | — | — |
| விறலி | 67 (ம.) | — | — | 206 (ம.) | — |
| அந்தணர் | 384 (பா.) | — | — | — | — |
| இடைச்சுரத்துக் கண்டார் | 385 (பா.) | — | — | — | — |
| தன்னூர்க்குச் செல்கின்றார் | 397 (பா.) | — | — | — | — |
| கடல் | — | 163 (நெ.) | — | — | — |
| கிளி | — | — | 102 (கு.) | — | — |
| செவிலி | — | — | — | 52 (கு.) | — |

| கேட்போர் | ஐங்குறு நூறு | குறுந்தொகை | நற்றிணை | அகநானூறு | கலித்தொகை |
|---|---|---|---|---|---|
| சேவல் | — | 107 (ம.) | — | — | — |
| திங்கள் | — | — | 335 (நெ.) | — | — |
| தும்பி | — | — | 277 (பா.) | — | — |
| தெய்வம் | — | 87 (கு.) | — | — | — |
| தோழி | — | — | — | — | — |
| (உழையர் கேட்ப) | — | — | — | — | — |
| நண்டு | 475 (மு.) 31 (ம.) | — | — | 170 (நெ.) | — |
| மேகம் | — | — | 238 (மு.) | — | — |

# இணைப்பு—3

## தலைவன் கூற்று

| கேட்போர் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| நெஞ்சு | ஐங். | 288 | — | — | — | 323, 330 |
| | குறுந். | 29, 62, 70, 116, 120, 165, 182, 199, 312 | — | 19 | 128, 376 | 11, 63, 71, 131, 151, 168, 256, 267, 274, 347 |
| | நற். | 44, 77, 140, 190, 204, 209, 265, 365 | 169 | 80 | — | 3, 16, 52, 62, 103, 105, 126, 137, 141, 157, 205, 298, 308, 312, 346, 366, 384 |
| | அகம். | 62, 142, 152, 162, 198, 208, 212, 256, 262, 265, 322, 338, 342, 372 | 164, 174, 214, 304 | 126, 136 | 230, 280 | 3, 5, 19, 21, 33, 43, 47, 51, 77, 79, 83, 87, 93, 109, 121, 123, 131, 149, 167, 169, 181, 191, 193, 199, |

| கேட்போர் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 225, 239, 245, 279, 287, 289, 291, 297, 299, 327, 335, 337, 339, 343, 351, 353, 361, 365 371, 373, 377, 379, 381 |
| | கலி. | — | — | — | — | — |
| தலைவி | ஐங். | — | 411-415, 418, 419, 426-430, 491-500 | — — — | 175, 197 | 355, 356, 360, 361, 363, 395, 396 |
| | குறுந். | 2, 40, 300 | — | — | — | 137 |
| | நற். | 39, 192 | — | — | 155 | 9, 76, 162, 166, 202, 256, 264, 362 |
| | அகம். | — | — | — | — | 29, 39, 99, 257 |
| | கலி. | 49, 59, 62, 64 | 117 | 192 | — | — |

| கேட்போர் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| தேர்ப்பாகன் | ஐங். | — | 422, 425 481-490 | — | — | — |
| | குறுந். | 189 | 233, 323, 400 | — | — | 237, 250 |
| | நற். | — | 21, 42, 59, 81, 142, 161, 221, 242, 321, 371 | — | 106 | — |
| | அகம். | — | 34, 44, 54, 64, 94, 114, 124, 134, 154, 204, 224, 234, 244, 254, 274, 284, 334, 344, 374 | — | — | 9 |
| | கலி. | — | — | — | — | — |
| தன்னுள் | ஐங். | 259, 299 | — | 97 | 174 | — |
| | குறுந். | 142, 222 | 270 | — | — | — |
| | நற். | 8, 22 | — | 120 | 319 | 262, 352 |
| | அகம். | — | 84 | — | — | — |

| கேட்போர் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| | கலி. | — | — | — | — | — |
| இல்லை | ஐங். | 281, 291, 298 | 441-450 | 94, 99 | 177, 188, 195 | 321, 322, 326 327, 359 |
| | குறுந். | — | — | — | — | 56 |
| | நற். | 341, 391 | — | — | — | 113, 284 |
| | அகம். | — | 24 | — | — | 41, 57 |
| | கலி. | 56-58 | 109 | — | — | — |
| தோழி. | ஐங். | 356, 280 | — | 72, 73, 74, 92 | 176, 178, 185 | 324, 325 |
| | குறுந். | 14, 17, 32, 173, 276, 286, 337 | 99 | — | — | 209 |
| | நற். | 75, 146, 213 | — | — | 101, 152 | — |
| | அகம். | — | — | 86 | — | 261 |
| | கலி. | — | — | — | — | — |
| பாங்கன் | ஐங். | 255 | — | — | 172, 191 | — |

| கேட்போர் நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| குறுங். | 58, 72, 95, 100, 119, 129, 132, 136, 156, 206, 276, 280, 291 | — | — | 184 | — |
| நற், | 95, 160, 185, 201, 324 | 248 | — | — | — |
| அகம். | — | — | — | 130, 140, 390 | — |
| கலி. | — | — | — | — | — |

| கேட்போர் | ஐங்குறு நூறு | குறுந்தொகை | நற்றிணை | அகநானூறு | கலித்தொகை |
|---|---|---|---|---|---|
| பாணன் | 477-479 (மு.)<br>250,370 (ம.) | —<br>— | — | — | — |
| உழையர் | 328, 329 (பா.) | — | — | — | — |
| கண்டோர் | — | — | — | — | 140 (நெ.) |
| இடைச்சுரத்துக் கண்டோர் | — | — | 374 (மு.) | — | — |
| பாங்காயினார் தலைமகட்கு | — | 101 (கு.) | — | — | 138 (நெ.) |
| சான்றோர் | — | — | — | — | 139 (நெ.) |
| தன்னுள் (தலைவி கேட்ப) | 416, 417, (மு.) | — | — | — | — |
| தன்னுள் (தோழி கேட்ப) | — | — | 377 (கு.)<br>349 (நெ.) | — | — |
| நெஞ்சு (பாகர்) | — | — | — | 144 (மு.) | — |
| நெஞ்சு (தோழி கேட்ப) | — | — | 6 (கு.) | — | — |

| கேட்போர் | ஐங்குறு நூறு | குறுந்தொகை | நற்றிணை | அகநானூறு | கலித்தொகை |
|---|---|---|---|---|---|
| புறா | 420 (கு.) | — | — | — | — |
| மழை | — | — | 139 (மு.) | — | — |
| மாந்தளிர் | 365 (பா.) | — | — | — | — |
| முல்லை | — | 162 (மு.) | — | — | — |
| வாடை | — | 235 (பா.) | — | — | — |
| கனா | — | 147 (பா.) | — | — | — |

பத்துப்பாட்டில் பட்டினப்பாலை தலைவன் கூற்றிற்குரியது.

| கூற்றுக் குரியோர் | கேட்போர் | ஐங்குறுநூறு | குறுந்தொகை | நற்றிணை | அகநானூறு | கலித்தொகை |
|---|---|---|---|---|---|---|
| செவிலி | இல்லை | 389 (பா.) | 44, 84, 144, 356, 378 (பா.) | — | 7,17,49,89, 117,145,153, 189,321,369, 385, 397 (பா.) | — |
| ,, | தனக்குள் | 410 (மு.) | — | — | — | — |
| ,, | நற்றாய் | 401-409 (மு.) 400 (பா.) | 167,242 (மு.) 15 (பா.) | — | — | — |
| ,, | தன்மகள் | — | — | — | 63 (பா.) | — |
| ,, | கண்டோர் | — | — | 198 (பா.) | — | — |
| ,, | தெருட்டுவோர் | 380 (பா.) | — | — | — | — |
| நற்றாய் | இல்லை | 371-374,376, 377 (பா.) | 396 (பா.) | 29, 66, 110, 143,179,184, 271, 279, 293 (பா.) | 15, 35, 105, 195,203,207, 219,263,275, 315,383 (பா.) | — |
| ,, | தோழி | 378,379 (பா.) | — | 305 (பா.) | — | — |
| ,, | செவிலி | 313 (பா.) | — | — | — | — |
| ,, | வந்தார் | 399 (பா.) | — | — | — | — |

| கூற்றுக் குரியோர் | கேட்போர் | ஐங்குறுநூறு | குறுந்தொகை | நற்றிணை | அகநானூறு | கலித்தொகை |
|---|---|---|---|---|---|---|
| நற்றாய் | அயலார் | — | — | 55(பா.) | — | — |
| ,, | தேடிக் காணாது வந்தார் | 375 (பா.) | — | — | — | — |
| ,, | சுற்றத்தார் | 394 (பா.) | — | — | — | — |
| ,, | காகம் | 391 (பா.) | — | — | — | — |
| கண்டோர் | — | 381-383(பா.) | 7 (பா.) | 394 (மு.) 2(பா.) | — | 120, 141-148 (நெ.) |
| ,, | செவிலி | 388,390(பா.) | | — | — | — |
| ,, | தாய் | 386 (பா.) | — | — | — | — |
| ,, | தலைவன் தலைவி | — | 390 (பா.) | — | — | — |
| ,, | தம்முள்ளே | — | 229 (பா,) | — | — | — |
| காதல் உணர்ந்தோர் | — | 421 (மு.) | — | — | — | — |
| பாங்கன் | தலைவன் | — | 78, 204 (கு.) | — | — | — |
| ,, | தன்னுள் | 173 (நெ.) | — | — | — | — |
| அகப்புறத் தலைவி | தலைவன் | — | — | — | — | 108 (மு.) |

| கூற்றுக் குரியோர் | கேட்போர் | ஐங்குறுநூறு | குறுந்தொகை | நற்றிணை | அகநானூறு | கலித்தொகை |
|---|---|---|---|---|---|---|
| அந்தணர் | செவிலி | 387 (பா.) | — | — | — | — |
| அயலோர் | தாய் | 393 (பா.) | — | — | — | — |
| ஆய்ச்சியர் (பாடுதல்) | | — | — | — | — | 106 (மு.) |
| உழையர் | தலைவன் | — | — | — | 354 (மு.) | — |
| ,, | இல்லை | — | — | — | 324, 384 (மு.) | — |
| குறளன் → கூனி<br>கூனி ← குறளன் | | — | — | — | — | 94 (ம.) |
| சான்றோர் | தலைவன் | — | — | — | — | 99, 100 (ம.) |
| தலைவன் பாங்கன், சுற்றத்தார் } → ← | தலைவன் | — | — | — | — | 102 (மு.) |
| தலைவி + தலைவன் (புதல்வன்) → ← | தோழி + தலைவன் | — | — | — | — | 81 (ம.) |
| தேர்ப்பாகன் | தலைவன் | — | — | 121 (மு.) | — | — |
| முக்கோற் பகவர் | செவிலி | — | — | — | — | 9 (பா.) |

| கூற்றுக் குரியோர் | கேட்போர் | ஐங்குறுநூறு | குறுந்தொகை | நற்றிணை | அகநானூறு | கலித் தொகை |
|---|---|---|---|---|---|---|
| பரத்தை | தலைவன் | 77, 78, 86 (ம.) 121-130 (நெ.) | — | 400 (ம.) 315 (நெ.) | — | — |
| ,, | தலைவி பாங்காயினார் | 88 (ம.) | 370 (மு.) 80 (மு.) | 40, 100 (ம.) | 70, 106, 276 (ம.) | — |
| ,, | தன் பாங்காயினார் | 38 (ம.) | 320 (ம.) | 166 (ம.) | — | — |
| ,, | தனக்குப் பாங்காயினார் | — | — | 216 (ம.) | — | — |
| ,, | தலைவன் (தலைமகட்குப் பாங்காயினார் கேட்ப) | 81 (ம.) | — | — | — | — |
| ,, | தன் தோழி (தலைமகட்குப் பாங்காயினார் கேட்ப) | 39 (ம.) | — | — | — | — |
| ,, | பாணர் (தலைமகட்குப் பாங்காயினார் கேட்ப) | — | — | 150 (ம.) | — | — |

| கூற்றுக் குரியோர் | கேட்போர் | ஐங்குறுநூறு | குறுந்தொகை | நற்றிணை | அகநானூறு | கலித் தொகை |
|---|---|---|---|---|---|---|
| பரத்தை | பாணர் (அல்லது) விறலி (தலைமகட்குப் பாங்காயினார் கேட்ப) | — | — | 216 (ம.) | — | — |
| காதற் பரத்தை | தலைவன் | | — | — | 376 396 (ம.) | — |
| ,, | தலைவன் (தலைமகட்குப் பாங்காயினார் கேட்ப) | 87, 90 (ம.) | — | — | — | — |
| ,, | தன் தோழி (தலைமகட்குப் பாங்காயினார் கேட்ப) | 37 (ம.) | 164 (ம.) | — | — | — |
| ,, | தன் தோழி (அயற்பரத்தைக்குப் பாங்காயினார் கேட்ப) | 40 (ம.) | — | — | — | — |

| கூற்றுக் குரியோர் | கேட்போர் | ஐங்குறுநூறு | குறுந்தொகை | நற்றிணை | அகநானூறு | கலித் தொகை |
|---|---|---|---|---|---|---|
| காதற் பரத்தை | பாணன் (தலைவி பாங்காயினார் கேட்ப) | 89 (ம.) | — | — | — | — |
| ,, | கிழத்தி பாங்காயினார் | — | 8 (ம.) | — | — | — |
| இல்லிடைப் பரத்தை | தலைமகட் குப் பாங் காயினார் | — | — | — | 186 (ம.) | — |
| இற் பரத்தை | தலைமகட்குப் பாங்காயினார் | — | 364 (ம.) | — | — | — |
| காமக் கிழத்தி | வேறொரு பரத்தை கேட்ப புதியாளின் பக்கத்தவராய வாயிலவர் கேட்ப | — | — | 390 (ம.) | — | — |
| ,, | பரத்தையிற் பிரிந்து வந்த தலைவன் | — | — | — | — | 68, 69, 71, 72, 74, 78, 90, 91 (ம.) |

| கூற்றுக் குரியோர் | கேட்போர் | ஐங்குறுநூறு | குறுந்தொகை | நற்றிணை | அகநானூறு | கலித் தொகை |
|---|---|---|---|---|---|---|
| காமக் கிழத்திக் குப் பாங்கா யின விறலி | பாணன் | — | — | 300 (ம.) | — | — |
| நயப்புப் பரத்தை | இற்பரத்தைக் குப் பாங்காயி னார் கேட்ப | — | — | 336 (ம.) | — | — |
| பரத்தைத் தோழி | தலைவன் | 79 (ம.) | — | — | — | — |
| வாயில் | தம்முள்ளே | 96 (ம.) | — | — | — | 130, 134, (நெ.) |
| பாணன் | தனக்குப் பாங்காயினார் | — | — | — | 14 (மு.) | |
| ,, | தலைவன் | 480 (மு.) | — | — | — | — |

பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள அகப்பொருள் நூல்களில் கூற்று

| கூற்றுக் குரியோர் | கேட்போர் | தி.நா. | ஐ.எ. | ஐ.ஐ. | தி.ஐ. | கைந்நிலை | கார் நாற்பது |
|---|---|---|---|---|---|---|---|
| தோழி (49.19%) | தலைவன் | 3,6,7,10, 11,13,19-21,25-27 (கு.) 34-37 43,44,46, 48-59, 61 (நெ.) 85 (பா.) | 1,2,6-8, 10,11(கு.) | 12,15-19(கு.) 44,46,48(நெ.) 34 (பா.) | 1,2,4-10(கு.) 36(ம.)42, 44-46 (நெ.) 12 (பா.) | — | — |
| ,, | தலைவி | 5,18,29, 31 (கு.) 9, 107,112, 114,116, 117(மு.) 40,42 44 (நெ.) 63,64, 66, 73, 79, 80, 82 (பா.) | 3 (கு.) | 11,14,(கு.)1, 3-9 (மு.) 41, 49,50 (நெ.) 32,38 (பா.) | 3 (கு.),21-30 (மு.)41, 43,48 50 (நெ.) | 25 (மு.) 59, 60 (நெ ) 18, 22 (பா.) | 1-18 23, 40 |

| கூற்றுக் குரியோர் | கேட்போர் | தி.நூ. | ஐ.எ. | ஐ.ஐ. | தி.ஐ. | கைந்நிலை | கார் நாற்பது |
|---|---|---|---|---|---|---|---|
| தோழி | செவிலி | 2, 12, 14 (கு.) 39, 62 (நெ.) | — | — | — | — | — |
| ,, | பாணர் | — | — | — | — | 40 (ம.) | — |
| ,, | வாயில் | | — | 26 (ம.) | 33 (ம.) | — | — |
| தலைவி (35.18%) | தோழி | 93,94,96-106, 108-111, 113, 118-123, (மு.) 67,78,83,84, 86-88,91,92(பா) | 13,14(கு.) 15-24 (மு.) | 20(கு.) 2(மு.) 26,28-30(ம.) 45 (நெ.) 31, 35,36 (பா.) | 11, 13-15, 17-19(பா.) | 21,23 24 (பா.) | — — |
| ,, | தோழி (தலைவன் சிறைப்புறம்) | 41 (நெ.) | 4,5,9, 12 (கு.) | 13 (கு.) | 47 (நெ.) | 55 (நெ.) | — |
| ,, | பாணர் | 124-127 (ம.) | — | 21-24 (ம.) | 34,35,37, 38 (ம.) | 37, 41-43 (ம.) | — |
| ,, | தலைவன் | — | — | — | — | 38 (ம.) | — |
| ,, | வாயில் | — | — | 25,27 (ம.) | 31,32 39 (ம.) | — | — |

| கூற்றுக் குரியோர் | கேட்போர் | தி.நூ. | ஐ.எ. | ஐ.ஐ. | தி.ஐ. | கைந்நிலை | கார் நாற்பது |
|---|---|---|---|---|---|---|---|
| தோழி | அலவன் | — | — | 42,43 (நெ.) | — | — | — |
| ,, | கடல் | 38 (நெ.) | — | — | — | — | — |
| ,, | புறா | 74 (பா) | — | — | — | — | — |
| ,, | இல்லை | — | — | — | — | 54,58 (நெ.) | — |
| தலைவன் (10.42%) | பாங்கன் | 9, 30 (கு.) 32, 33, 60 (நெ.) | — | — | 49 (நெ.) | — | — |
| ,, | தோழி | 1, 8,16,17, 23 (கு.) | — | 47 (நெ.) | — | — | — |
| ,, | தேர்ப்பாகன் | — | — | 10 (மு.) | — | — | 19-22 |
| ,, | தலைவி | 70 (பா.) | — | — | 16 (பா.) | — | — |
| ,, | நெஞ்சு | 68, 76(பா.) | — | 39, 40 (பா.) | — | — | — |
| ,, | இல்லை | 22, 24 (கு.) 115 (மு.) 81 (பா.) | — | -- | — | — | — |

| கூற்றுக் குரியோர் | கேட்போர் | தி.நூ. | ஐ.எ. | ஐ.ஐ. | தி.ஐ. | கைந்நிலை | கார் நாற்பது |
|---|---|---|---|---|---|---|---|
| தலைவன் | தலைவி வடிவம் | 77 (பா.) | — | — | — | — | — |
| பாங்கன் (0.98%) | தலைவியைக் கண்டு | 28 (கு.) | — | — | — | — | — |
| | தலைவன் | 47 (நெ.) | — | — | — | — | — |
| ,, | இல்லை | 45 (பா.) | — | — | — | — | — |
| தாய் 2.28% | தந்தை அன்னையர் | 15 (கு.) | — | — | — | — | — |
| ,, | இல்லை | 75 (பா.) | — | 33,37 (பா.) | 20 (பா.) | — | — |
| ,, | படிமத்தாள் | 90 (பா.) | — | — | — | — | — |
| செவிலி | குரவு | 65 (பா.) | — | — | — | — | — |
| இடைச் சுரத்துக் கண்டோர் 1.31% | செவிலி | 71,72, 89 (பா.) | — | — | — | — | — |
| ,, | தலைவன் தலைவி | 69 (பா.) | — | — | — | — | — |

பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள அகப்பொருள் நூல்கள்

| பாடல்கள் | தி.ஐ. | | | | | ஐ.எ. | | | | | ஐ.ஐ. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கு. | மு. | ம. | நெ. | பா. | கு. | மு. | ம. | நெ. | பா. | கு. | மு. | ம. | நெ. | பா. |
| குறிப்பின்படி உள்ளவை | 31 | 31 | 30 | 31 | 30 | 14 | 14 | 14 | 14 | 14 | 10 | 10 | 10 | 10 | 10 |
| துறைக்குறிப்பு இல்லாதவை | — | — | 26 | — | — | — | 4 | 14 | 14 | 14 | — | — | — | — | — |
| துறைக்குறிப்பு உள்ளவை | 31 | 31 | 4 | 31 | 30 | 14 | 10 | — | — | — | 10 | 10 | 10 | 10 | 10 |

| பாடல்கள் | தி.ஐ. | | | | | கைந்நிலை | | | | | கார் நாற்பது | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கு. | மு. | ம. | நெ. | பா. | கு. | மு. | ம. | நெ. | பா. | | |
| குறிப்பின்படி உள்ளவை | 10 | 10 | 10 | 10 | 10 | 12 | 12 | 12 | 12 | 12 | 40 | 423 |
| துறைக்குறிப்பு இல்லாதவை | — | — | — | — | — | 12 | 11 | 6 | 7 | 7 | 16 | 131 |
| துறைக்குறிப்பு உள்ளவை | 10 | 10 | 10 | 10 | 10 | — | 1 | 6 | 5 | 5 | 24 | 292 |

# 5

இயல் ஐந்து

# அகப்பொருள் இலக்கிய வகை ஆய்வில் சில சிக்கல்கள்

# அகப்பொருள் இலக்கியவகை ஆய்வில் சில சிக்கல்கள்

தொல்காப்பியர் பொருளை அகம் புறம் என இருவகைப் படுத்துவர். எனவே பாடல் சான்ற புலனெறி வழக்கில் பயின்று வரும் பொருண்மையை அகத்திணை புறத்திணை எனப் பெயரிட்டுள்ளார். மற்றும் செய்யுளியலில் யாப்பு அடிப்படையில் பின்வருமாறு இலக்கிய வகைப்பாட்டை அமைத்துக் காட்டுவர்.

பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பே ரெல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்[1]

இந்நூற்பா தொல்காப்பியர் காலத்தில் அரும்பியிருந்த இலக்கிய வகை ஆய்விற்கு எடுத்துக்காட்டு எனலாம்.

இங்ஙனம் இலக்கியத்தை வகைப்படுத்தும் முறைமை உலகெங்கும் உள்ள அறிஞர்களிடமும் பரவியிருந்தது. பிளேட்டோ (Plato), அரிஸ்டாடில் (கி.மு. 4 நூ.) (Aristotle) டயானோசியஸ் த்ராக்ஸ் (கி.மு. 2 நூ.) (Dianosyious Thrax) ஆகிய மேலை நாட்டறிஞர்களிடமும் காணப்பட்டமை ஈண்டு நினைவு கூரத்தக்கது.

பாட்டியல் நூல்கள் இலக்கியங்களை வகைப்படுத்தி, சில இலக்கிய வகைகளுக்குரிய இலக்கணங்களை விளக்கத் தொடங்கின. இதற்குப் பத்தாம் நூற்றாண்டளவில் தோன்றிய **பன்னிரு பாட்டியல்** சிறந்த எடுத்துக் காட்டாகும்.

பாட்டியல்கள் இலக்கியவகை பற்றி எடுத்துரைப்பன எனினும் ஓர் இலக்கியம் இன்ன இலக்கிய வகையைச் சார்ந்தது என இனங் கண்டு கொள்வதற்கான வழிமுறைகள் பற்றிய ஆய்வில் அவை ஈடுபடவில்லை.

தெளிவான இலக்கிய வகை பற்றிய ஆய்வு, இலக்கிய வரலாற்று வளர்ச்சிக்கும், திறனாய்வு நெறிக்கும், ஒப்பீட்டு ஆய்வுக்கும் இன்றியமையாதது. தொல்காப்பியரின் செய்யுளியல், பாட்டியல்கள்

போன்றவை பல்வேறு இலக்கிய இலக்கணக் கொள்கை - பற்றிய ஆராய்ச்சிக்கு இடையே இலக்கிய வகை பற்றிக் குறிப்பிட்டுச் சென்றன. எனவே தமிழ் ஆய்வுலகில் தமிழ் இலக்கியத்தை வகைப் படுத்தும் நெறி, நுண்ணோக்கில் முழுமையாகத் தோன்றவில்லை. இதன் பயனாக அகப்பொருள் என்றால் என்ன என்று உணராத நிலை ஏற்பட்டது. எனவே அகப்பொருள் என்றால் என்ன என்பதும், அகப்பொருள் ஆகாத இலக்கியங்கள் எவை என்பதும் ஈண்டு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

## இலக்கிய வகையைக் கண்டறிவது எப்படி?

பாடுபொருள், வடிவம் (பாவகை), உத்தி (முறைமை) ஆகிய வற்றுள் எவையேனும் ஒன்றின்/பலவற்றின் துணைகொண்டு இலக்கிய வகையை இனங்கண்டு கொள்ளலாம்.

### 1. பாடுபொருள்

பாடுபொருள் வழி இலக்கிய வகைமை செய்ய முயன்றால் **புறநானூறு** (ஆசிரியப்பா), பரணி (தாழிசை), **களவழி நாற்பது** (வெண்பா) போன்ற இலக்கியங்களைப் புறப்பொருளில் அடக்க லாம். கலம்பகத்தில் அகம், புறம் ஆகிய இரண்டற்குமுரிய இரு வகைப் பாக்களும் பயின்று வருவதைக் காண்கின்றோம். எனவே சில இலக்கியங்கள் பாடுபொருள் அடிப்படையில் மட்டும் வகைப் படுத்தும் போது விடுபட்டுப் போகின்றன.

பக்தி இலக்கியம் (ஆசிரியப்பா, விருத்தம், கண்ணி) பல்வேறு வடிவங்களைப் பெற்றிருக்கின்றன. எனவே அவை பாடுபொருள் அடிப்படையில் ஒன்றுபட்டிருப்பினும் வடிவ அடிப்படையில் வேறு படுகின்றன. எனவே இத்தன்மைத்தான இலக்கியங்களைப் பாடு பொருள் அடிப்படையில் ஒருங்கு கொணர்வது பொருத்தமாக இல்லை.

### 2. வடிவம்

பாவடிவம் வழி நின்று வகைப்படுத்த எண்ணலாம்.

வெண்பா (குறள், அகப்பொருள், உலா, தூது)

ஆசிரியப்பா (அகம், புறம், காப்பியம்)

விருத்தம் (**சூளாமணி, சீவக சிந்தாமணி, தேவாரம்,** பெரிய **புராணம்,** பிள்ளைத்தமிழ்)

கலித்துறை (கோவை, இலக்கண நூல்கள் சில)

எனப் பாவடிவம் வழி வகைப்படுத்தும் போது தெளிவான இலக்கிய வகைப்பாடு கிடைக்க வாய்ப்பில்லை. எனவே வடிவம் மட்டும் இலக்கிய வகை பற்றி அறியத் துணை நிற்கவில்லை.

## 3. பாடும் முறைமை

பாடுபொருள் அல்லது வடிவம் மட்டும் கொண்டு ஓர் இலக்கியத்தை நோக்கும் போது அதனைப் பிறழ (வேறு ஓர் இலக்கிய வகையாக) உணரத் தலைப்படுகின்றோம். இவை தவிர, பாடும் முறைமை என்பது இலக்கிய வகைக்கு வகை வேறுபடலாம். எனவே எந்த உத்தி பிற இலக்கிய வகைகளில் பயன்படுத்தப் படவில்லையோ அதுவே இலக்கியத்தின் வகை பற்றி அறிய-அடையாளம் காணத் துணை செய்கின்றது.

காட்டாகப் பின்வருவனவற்றை அகப்பொருளுக்குரியனவாகக் குறிக்கலாம்.

1. சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாத மரபு.

2. முதல் கரு உரி ஆகியவற்றை உள்ளடக்கிய எழுதிணை மரபு.

3. தனித்தனிப் பாடல்களாகப் பாடப்படுதல்; ஒரே புலவரால் ஒரு திணைக்குரிய பாடல்கள் அனைத்தும் பாடப்பெற்றிருப்பினும் (ஐங்குறுநூறு, கலித்தொகை) நிகழ்ச்சித் தொடர்பு இன்மை.

4. நாடக வழக்கும் உலகியல் வழக்கும் பாடல் சான்ற புலனெறி வழக்கும் உடையவை; எனவே அறக்கழிவுடையன அவற்றுள் இடம் பெறுவதில்லை.

5. மாடனும் பற்றியது.

6. அகமாந்தர் கூற்றில் அமைவது.

7. உள்ளுறை உவமம், இறைச்சி ஆகிய புலப்பாட்டு நெறிகளை மிகுதியும் போற்றுவது.

இங்ஙனம் பாடுபொருளும் பாடல் முறைமையும் இணைந்த ஓர் **கூட்டு வடிவம்** அகப்பொருளாகும். எனவே அகப்பொருள் என்பது ஓர் இலக்கியவகை எனத் தெளியலாம்.

ஓர் இலக்கிய வகை என்பது மிகக் குறுகிய காலத்தில் உருவாக்கம் பெறுவதில்லை. எல்லாப் புலவர்களும் இலக்கியம் படைக்க அவ்வக் காலகட்டத்தில் நிலவிய இலக்கிய வகையைப் பயன்படுத்திக் கொண்டனர். எல்லாப் படைப்பாளிகளும் புதிய இலக்கிய வகையைத் தோற்றுவிக்க முடியாது. அவை காலப் போக்கில் உருவாக்கம் பெறுவதை பின்வரும் கூற்றால் அறியலாம்.

தொல்காப்பியர் காலத்தில் இடம்பெற்ற
சிற்றிலக்கிய வித்து சங்ககாலத்தில் ஆற்றுப்படையாக
முளைவிட்டு, ஐந்தாம் நூற்றாண்டில் உலாவாக

> மரமாகி, ஒன்பதாம் நூற்றாண்டில் கலம்பக-
> மாகக் கிளைத்து, பதினோராம் நூற்றாண்டில்
> சதமாகவும் பரணியாகவும் அரும்பி, பன்னி-
> ரண்டாம் நூற்றாண்டில் பிள்ளைத்தமிழாக
> மொட்டாகி, பதினான்காம் நூற்றாண்டில்
> தூதாகப் பூத்து பதினாறாம் நூற்றாண்டில்
> பள்ளாகக் காய்த்தது. பதினெட்டாம்
> நூற்றாண்டில் குறவஞ்சியாகக் கனிந்தது[2]

எனச் சிற்றிலக்கியங்களின் வளர்ச்சியைக் காட்டுவர் ந. வீ. செய ராமன். இதன் வழி ஒவ்வொரு காலக்கட்டத்திலும் வெவ்வேறு இலக்கியவகை முகிழ்த்த பாங்கை அறிகின்றோம்.

வரலாற்று நோக்கில் காணும் போது மொழியும், சமயமும் அரசியல் செல்வாக்கிற்கேற்ப வளம் பெறுவதைக் காண்கின்றோம். மன்னன் எந்த மதத்தையும் மொழியையும் சார்ந்தவனாக இருக்கின்றானோ அம்மதமும் மொழியும் மக்களிடையே வாழ்வு பெறுகின்றன. அதைப்போலவே இலக்கிய வகையும் அரசியல் பின்னணிக்கு ஏற்பத் தோற்றம் பெறுகின்றது. பரணி, உலா, தூது போன்ற இலக்கிய வகைகளின் தோற்றம் இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். இலக்கிய வகையின் வளர்ச்சி, சமுதாய அரசியல் மாற்றங்களையும் புலப்படுத்தவல்லது எனும் இலக்கிய வகைத் திறனாய்வு பற்றிய அறிஞரின் கருத்தும்[3] ஈண்டு எண்ணத்தக்கது.

வளர்ச்சியடையாதது எதுவும் மாற்றத்திற்குள்ளாகாது; ஒரு-காலத்தில் தோன்றிய இலக்கிய வகை சிறிதும் மாற்றமின்றிப் பிறிதொரு காலச் சூழலில் தோன்றும் என்பது இயற்கைக்கு முரணானது. அப்படித் தோன்றுகிறது எனில் அச்சமுதாயத்தில் எந்த ஒரு சிறுமாற்றமும் நிகழவில்லை என்றாகும். இல்லையேல் பல்வேறு போராட்டங்களுக்கிடையில் கவிஞர் கூட்டம் போராடி வேண்டுமென்றே அவ் இலக்கியத்தை இயற்றிருக்க வேண்டும்; அதுவுமில்லையெனில் அது செயற்கைத் தன்மை மிக்க நூலாகத் தோன்றியிருக்கும்.

> தமிழ்ப்புலவன் எக்காலத்தன் எந்நிலையன்
> காதல் பாடினும் ஆண்டு அகத்திணை தோன்றா
> திராது......என்றாலும் இந்நூல் வகைகளில்
> வரும் காதல்கள் அகத்திணையாகா[4]

என்ற அறிஞரின் கூற்று ஈண்டு நினைவுகூரத்தக்கது.

எனவே சங்க அக இலக்கியம் அல்லது அகப்பொருள் என்பது ஓர் இலக்கியவகை என்பது புலனாகிறது. அவ்வகைக்குள்ளே பின் வந்த இலக்கியங்கள் அடங்கலாம்; அடங்காமல் போகலாம்; அடங்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. பின்வந்த இலக்கியங்களை அகப் பொருளில் அடக்கிக் காட்ட முயல்வது இலக்கிய வளர்ச்சி வரலாற்றை அறியத் தடையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

## அகப்பொருள் ஆய்வில் சில சிக்கல்கள்

### பரிபாடலில் அகப்பொருள்

பரிபாடலில் எட்டுப்பாடல்கள்[5] அகத்துறைக் குறிப்பைக் கொண்டுள்ளன. அவற்றுள் வையை பற்றியன ஏழு; செவ்வேள் பற்றியது ஒன்று. அவற்றின் உட்பொருளை நோக்கும் போது அவை அகப்பாடல்கள் தாமா என்ற ஐயம் எழுகின்றது. இவ் ஐயத் திற்கான காரணத்தை வையைப் பாடல்கள் வாயிலாகவும், செவ் வேள் பற்றிய பாடல் மூலமாகவும் பாகுபடுத்தி நோக்குவோம்.

### வையை பற்றியன

வையை பற்றிய பாடல்கள் ஏழு (6, 7, 10-12, 16, 20). அவற்றுள், ஒரு பாடலின் அமைப்பு முறை பின்வருமாறு:

வையையின் வரவு (1-11), புனலாடும் மைந்தர், மகளிர் நிலை, (11-26), தலைமகனது காதற் பரத்தையைத் தோழியர் கண்ட பொழுது நேர்ந்த நிகழ்ச்சி (27-35), தலைமகனது முகமாற்றமும்' கூட்டத்துள் பரத்தை மறைதலும் (36-39), ஆயத்தாரோடு பரத்தை உரைத்தல் (40-45), தலைமகள் திகைப்பு (46-47), ஆயத்தார் பரத்தையை நோக்கி வைது உரைத்தல் (48-65), பரத்தை ஏசுதலைக் கண்ட முதுமகளிர் கூற்று (66-70), பரத்தை யின் பதில் (71-73), தலைவி கூற்று (74-78), பரத்தையின் மறு மொழி (79-83), கண்டார் சிலர் பரத்தையை நோக்கி உரைத்தல் (84-85), தலைமகனுக்கு முனிவு நீங்க உரைத்தல் (86-94), வையை நீர் பாயும் காட்சி (95-107), பிரிந்தாரைக் கூட்டுவிக்கும் வகையில் வையையின் இயல்பு (108-111).[6]

இப்பாடலின் துறைக்குறிப்பு, 'பருவ வரவின் கண் தலைமகளது ஆற்றாமை கண்டு தூதுவிடச் சென்ற பாணன் தலைமகற்குக் கார்ப் பருவமும் வையைநீர்விழவணியும் கூறியது' என்பதாகும்.

இப்பாட்டில் காதற்பரத்தையர், தோழியர், ஆயத்தார், கண் டோர், தலைவன், பரத்தை ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். மேலும் ஆயத்தாருள் ஒருத்தி பரத்தையை,

அமர் காமம்

மாயப் பொய் கூட்டி மயக்கும் விலைக் கணிகை!
பெண்மைப் பொதுமைப் பிணையிலி! ஐம் புலத்தைத்
துற்றுவ துற்றும் துணை இதழ் வாய்த் தொட்டி!
முற்றா நறுநறா மொய் புனல் அட்டி
காரிகை நீர் ஏர் வயல், காமக் களி நாஞ்சில்
மூரி தவிர முடுக்கு முதுசாடி!
மட மதர் உண்கண் கயிறாக வைத்துத்
தடமென் தோள் தொட்டு, தகைத்து, மடவிரலால்
இட்டார்க்கு யாழ் ஆர்த்தும் பாணியில், எம் இழையைத்
தொட்டு, ஆர்த்தும் இன்பத்துறைப் பொதுவி![7]

எனப் பழிப்பதாக உள்ளது. பரத்தையை ஏசும் இம்முறை பிற அக இலக்கியங்களில் காணப்படாத மரபாகும்.

தலைவி பரத்தையை நோக்கி ''எந்தை எனக்கு ஈத்த இடுவளை, ஆரப்பூண் வந்தவழி நின்பால் மாயக்களவு அன்றேல், தந்தானைத் தந்தேதருக்கு''[8] என்று சொல்லாடுகின்றாள்.

பரத்தை,

மாலை அணிய விலை தந்தான்; மாதர் நின்
கால சிலம்பும் கழற்றுவான்; சால
அதிரல் அம் கண்ணி! நீ அன்பன் எற்கு அன்பன்;
கதுவாய்; அவன் கள்வன், கள்வி நான் அல்லேன்[9]

என்று மறுமொழி கூறுகின்றாள். இத்தன்மையான பழிப்புரைக்கும் உரையாடலுக்கும் அப்பாடலின் துறைக்குறிப்பிற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. பரிபாடலின் மரபை ஆய்ந்த அறிஞர்,

சங்க இலக்கியத்தின் பெரும் பகுதிப் பாடல்களின்
பாடுபொருளாய் அமைந்த அகப்பொருள் பரிபாடல்
காலத்தில் தன் நிலையில் ஏதோ மாற்றம்
பெற்றுள்ளது[10]

எனக் குறிப்பிடுவது ஈண்டு நினைவு கூரற்பாலது. பரிபாடலின்,

காதல் காமம் காமத்துச் சிறந்தது
விருப்போர் ஒத்து மெய்யுறு புணர்ச்சி[11]

மாமயில் அன்னார் மறையில் புணர்மைந்தர்
காமம் களவிட்டுக் கைகொள் கற்புற்றென
மல்லல் புனல்வையை யிம்மலை விட்டிருத்தல்
இல்லத்து நீதனிச் சேறல் இளிவரல்[12]

என்ற அடிகள் அகப்பொருளை வாதிட்டுக் கூறவேண்டிய நிலை ஏற்பட்டதைப் புலப்படுத்துகிறது என்பர்.[13] மேலும் அவர்,

அகப்பொருளையே பாடுபொருளாகக் கொண்ட
எந்தத் தொகைப்பாடலும் அதன் சிறப்பைப்
பாராட்டிக் கூறவில்லை. ஆயின் கடவுளரைப்
பாடுபொருளாகக் கொண்ட பரிபாடல் அகப்-
பொருளின் சிறப்பைப் பாடக் காண்கின்றோம்[14]

என்றும் கூறுகின்றார். இங்ஙனம் பரிபாடலின் மரபு மாற்றத்தை எடுத்துக்காட்டு வழியும், ஆய்வறிஞர் கருத்து வழியும் தெளிந்த பின் வையை பற்றிய பாடல்கள் ஏழினையும் பின்வருமாறு இருவகையாகப் பிரித்து விடலாம்.

1 வையை நீர் விழவணி பற்றியவை (6,10,20,11,12)
2 புனலாடல் / புனலணி இன்பம் பற்றியவை (7,16)

இவை இரண்டுக்கும் பின்புலமாக அவற்றைச் சுற்றிக் குழுமியுள்ள மக்களின் வாழ்வு வருணிக்கப்பட்டுள்ளது. பழைய மரபிலிருந்து விடுபடமுடியாமல் அவற்றிற்கும் அகத்துறைக் குறிப்புக்கள் எழுதி வைத்துவிட்டனர் முன்னோர் எனத் தெளியலாம். திருக்குறள் காமத்துப்பாலுக்கு உரையாசிரியர் தரும் துறைக்குறிப்புக்களும் ஈண்டு ஒப்புநோக்கத்தக்கன.

**செவ்வேள் பற்றியது**

பரிபாடலில் செவ்வேள் பற்றிய பதினான்காவது பாடல் 'பருவம் கண்டு அழிந்த தலைமகள் கேட்ப. முருகவேளைப் பரவுவாளாய் இப்பருவத்தே தலைமகன் வரும்' என்பதுபடத் தோழி வற்புறுத்தியது' என்ற துறைக்குறிப்பைப் பெற்றுள்ளது. ஆனால் அப்பாடலுள் இடம் பெற்றிருப்பவை அகப்பொருட் செய்திகள் அல்ல: அது கார்மலிந்த குன்றின் வருணனை (1-17). முருகனைப் போற்றுதல் (17-28)· வேண்டுதல் (28-32) என்ற மூன்று பகுதியை உடையது. இருப்பினும் இத்துறைக் குறிப்புக்குக் காரணமான அடிகள்,

தோகை ஆர் குரல் மணந்து தணந்தோரை
'நீடன்மின் வாரும்' என்பவர் சொல் போன்றனவே[15]

என்பனவாகும்; மயில் அகவுவது பிரிந்தோரைக் காலம் தாழ்க்காது வாரும் என அழைப்பது போல் உள்ளது என்ற ஆசிரியரின் கற்பனை துறைக்குறிப்பைத் தோற்றுவிக்கக் காரணமாக அமைந்து விட்டது. தவிர, அகப்பொருள் கருத்துக்கள் இப்பாடலில் இல்லை. மேலும் அகமாந்தர் கூற்றில் அமையவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது. முருகனது குன்று கார் கால வருணனை அவற்றுள் அமைந்த மயிலின் அகவல் பற்றிய ஆசிரியரின் கற்பனை-ஆகிய இம்மூன்றும் அகத்துறைக் குறிப்பை எழுதத் தூண்டு கோலாகி வழிவகுத்து விட்டன எனலாம்.

### வையையாற்றை வாழ்த்துதல்

வையையின் இயல்பையும் சிறப்பையும் வாழ்த்தும் முறைமை வையைக்கு முதன்மை கொடுக்கப்பட்டிருப்பதைப் புலப்படுத்து கின்றது.

நாம் அமர் ஊடலும் நட்பும் தணப்பும்
காமமும் கள்ளும் கலந்து உடன் பாராட்ட
தாம் அமர் காதலரொடு ஆடப் புணர்வித்தல்
பூ மலி வையைக்கு இயல்பு[16]

என ஆங்கு
இன்ன துனியும் புலவியும் ஏற்பிக்கும்
தென்னவன் வையைச் சிறப்பு[17]

இன்பமும் கவினும் அழுங்கல் மூதூர்
நன்பல நன்பல நன்பல - வையை!-
நின்புகழ் கொள்ளாது, இம்மலர் தலை உலகே[18]

என்பன போன்ற அடிகள் அதற்குச் சான்றாகும்.

### கூற்று முறை

'என்மாரும்' (பரி. 115, 117, 119, 121), என்மரும் (பரி. 12:49), என ஒருத்தி (பரி. 12:46), என நோக்க(பரி. 20:35)' என (பரி. 20:69) என்பன போன்ற சொற்கள் **பரிபாடல்** கூற்றுமுறை யில் பெற்ற மாற்றத்தை விளக்குவன. பொதுநிலையில் நோக்கின் அவை அகமாந்தர் கூற்றாகக் கொள்ளத்தக்கன அல்ல. அகமரபி னின்று மாற்றம் பெற்றது **பரிபாடல்** என்பதை விளக்க, கூற்று முறை மையும் ஒரு சான்றாகும்.

மேற்காட்டிய எடுத்துக்காட்டுகள் வழி, பரிபாடலில் சில அகத் துறைக் குறிப்புப் பெற்றவை எனினும் அவை பாடுமுறையாலும் பாடு பொருளாலும் வேறுபடுகின்றன; அகப்பொருள் தன்மையைப்

பெற்றிருக்கவில்லை; வையை ஆறு பற்றிய வருணனை முதன்மை வகிக்கின்றது; வையையில் நீராடும் மக்களின் செயல்களை விளக்கும் மூகமாக வருணனைப் பாங்கில் அமைந்துள்ளன. பாடலுக்கும் துறைக்கும் இயைபு காணப்படவில்லை. எனவே இவ் வையைப் பரிபாடல்களை அகப்பாடல் எனக் கொள்ள இயலாது; வையை பற்றிய பாடல்களாகவே கொள்ள வேண்டும்.[19]

செவ்வேள் பற்றிய பாடலுக்கும் துறைக்குறிப்பு பொருத்தமாக இல்லை. எனவே பரிபாடல் 'அகமும் புறமும் கலந்தது' எனச் சொல்வது பொருந்தாது. அவற்றுள் இடம் பெற்றுள்ள அகப் பாடல்களாகக் கருதப்படுபவை அகப்பொருளுக்குரியன அல்ல.

## புறநானூற்றில் அகப்பாடல்களா?

புறநானூற்றில் மூன்று பாடல்கள் (83-85) கைக்கிளைத் திணையில், பழிச்சுதல் துறையில் **'சோழன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளி மூக்காவனாட்டு ஆமூர் மல்லனைப் பொருது அட்டு நின்றானைச் சாத் தந்தையார்** பாடியதாக உள்ளன. இவை அகத்தில் கொள்ளத்தக்கனவா? என்ற வினா அறிஞர்களிடையே எழுந்துள்ளன. இவற்றை அகப்பாடல்கள் எனக் கொண்ட க. ப. அறவாணன் இவற்றைப் புறத்தில் சேர்த்திருப்பதைப் 'புறநானூற்றுத் தொகுப்பாசிரியர் இழைத்த வழு'[20] எனச் சுட்டுகின்றார். நக்கண்ணையார் பாடல்களை 'அகப்பாடல்கள் என்றே கொள்ளலாம்'[21] என்பர் ச. கணபதிராமன்.

தலைவி தலைவனைப் புகழ்வதாலும், வெளிப்படையாகப் பேசுவதாலும் இவை அகப்பாடல் அன்று. இவை தலைவன் கூற்றாக அமைந்து தலைவியைப் புகழ்வதாக இருந்திருந்தால் அகத்துள் தொகுக்கப்பட்டிருக்கும் எனத் தனது கருத்தை விளக்குவர் இராம. பெரிய கருப்பன்.[22]

மேற்காட்டிய மூன்று பாடல்களும் **நெடுநல்வாடை** போன்று துறைக்குறிப்பு வழிநோக்கின் புறத்தைச் சார்ந்தன எனலாம். ஏனெனில் 'அவனை அவர் பாடியது' என்ற துறைக்குறிப்பு புறத்திற்குரியதாகும்.

## நெடுநல்வாடை

பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றான **நெடுநல்வாடை** நச்சினார்க்கினியர் காலம் தொட்டு அகப்பாடலா? இல்லையா? என்ற சிக்கலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இந்நூலின் பெயர்ப்பொருத்தத்தை ஆராய்ந்த நச்சினார்க்கினியர் தலைவனையும் தலைவியையும் இணைத்துப் பின்வருமாறு விளக்குவர்.

> தலைவனைப் பிரிந்திருந்து வருந்துந் தலைவிக்கு ஒருபொழுது ஒருழிபோல நெடிதாகிய வாடையாய்ப் பாலையாகிய உரிப்பொருளுணர்த்திற்று. அகத் தொடுங்கிப் போகம் நுகர்வார்க்குச் சிறந்த காலமாயினும் அரசன் போகம் வேண்டிப் பொதுச்-சொற் பொறானாய் அப்போகத்தில் மனமற்று வேற்றுப் புலத்துப் போந்திருக்கின்ற இருப்பாகலின் நல்ல வாடையாயிற்று. எனவே காமத்திடத்து வெற்றியெய்தலின் வாகைத்திணையாயிற்று[23]

என 'வாகை தானே பாலையது புறனே' (நூ. 73) என்னும் தொல்காப்பியரது இலக்கணக் கோட்பாட்டைப் பொருத்திக் காட்டியுள்ளார். அவருக்கு இப்பாட்டு அகமா? புறமா? என்ற சிக்கல் தோன்றவே பாண்டியனது அடையாளப் பூவான வேம்பு இப்பாடலில் இடம் பெற்றுள்ளதால் அகப்பாடல் அன்று என்கின்றார்.

> இப்பாட்டு சுட்டி ஒருவர்ப்பெயர் கொள்ளாமையின் (தொல். அகத். சூ. 54) அகப்பொருளாமேனும், "வேம்புதலையாத்த நோன்காழெஃகம் (175) என அடையாளப் பூக் கூறினமையின் அகமாகா-தாயிற்று[24]

இங்ஙனம் தமது முடிவுக்கான காரணத்தை எடுத்துக் கூறியுள்ளார்.

வையாபுரிப்பிள்ளையவர்கள் நச்சினார்க்கினியரின் உரையை ஒட்டி, 'தலைவியை நோக்கும்போது அகத்திணையாகவும், தலைவனை நோக்கும்போது புறத்திணையாகவும் இச்செய்யுள் அமைந்தது'[25] என்பர்.

'வேம்பு தலையாத்த' என்பதற்கு வேப்பந்தழை எனப்பொருள் கொண்டு 'வேலின் தலையில் கட்டியிருப்பதாகச் சொல்லப்படும் இவ்வேம்பு அடையாளப் பூ அன்று' என்றும், நெடுநல்வாடை யாதும் குறைவற்ற அகப்பாட்டு[26] என்றும் கூறுவர் வ. சுப. மாணிக்கம், 'தற்காப்புக்கு வேப்பந்தழை அணிந்திருந்தான் எனில் எல்லோரும் அணிந்திருக்க வேண்டும். மேலும் சேர சோழ பாண்டியர் மலர் அணிந்து போர் தொடுத்தனர்; எனவே அப்பாட்டில் வரும் மன்னன் பாண்டியனைத்தான் குறிக்கும்; ஆகவே அகப்பாடல் இல்லை[27] என்பர் இராம. பெரிய கருப்பன்.

மேற்கண்ட அறிஞர்களின் கருத்துக்கள் யாவும் தொல்காப்பியரது 'சுட்டியொருவர் பெயர் கொளப்பெறாது' என்னும் அகத்திணை இலக்கண மரபையொட்டி எழுந்தவையாகும். அதனை

விடுத்து நூலின் அமைப்பைத் தொல்காப்பியத்தினின்றும் விடுபட்டு நோக்கின் சில உண்மைகள் புலனாகும்.

தொல்காப்பியத்திற்கு இலக்கியமாகக் காணப்படும் எட்டுத் தொகையில் காணப்படும் ஐந்து அகநூல்களில் உள்ள பாடல்களுக்கும், நெடுநல்வாடைக்கும் அமைப்பில் மிகுந்த வேறுபாடு உள்ளது.

கூதிர்கால நிலை, ஊரின் செழிப்பு, மக்கள் சுற்றித்திரிதல், பெண்களின் நிலை, அரசியின் அரண்மனை, அந்தப்புரத்தின் அமைப்பு, கட்டிலின் அமைப்பு, அதன் மேலுள்ள படுக்கை ஆகியவற்றின் வருணனைகள் மட்டும் 131 அடிகளில் அமைந்துள்ளன. அவை உரிப்பொருளை விளக்கும் பின்புலமாகப் பயன்படுத்தப்படவில்லை. தனித்த நிலையில் வருணனை போல் இடம்பெற்றுள்ளன. அகப்பாடல்களின் புலப்பாட்டு நெறி இத்தன்மைத்தன்று.

எஞ்சிய அடிகளில் தலைவன் தலைவியின் உணர்வுகள் புலப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் அவை தலைவியின் தோற்றத்தையும் (132-151) பாசறையில் நிகழ்வனவற்றையும், தலைவனின் செயலையும் (170-188) விளக்குவனவாகும்.

இடையிலுள்ள சில அடிகள் (152-169) தலைவியின் பிரிவுத் துயரையும் வருத்த மிகுதியையும் வெளிப்படுத்துகின்றன.

எனவே 'பாலை தானே வாகையது புறனே' (நூ. 73) என்ற தொல்காப்பிய நூற்பா அடியைக் கருவாகக் கொண்டு, இயற்றப்பட்ட ஓர் இலக்கியம் நெடுநல்வாடை எனலாம்.

இது 'பாண்டியன் நெடுஞ்செழியனை மதுரைக் சணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது' என்பதால் அகமாந்தர் கூற்றிலும் அமையவில்லை. எனவே துறைவழி நோக்கின் புறத்திற்குரியது என்பது தெளிவு.[28]

குறிஞ்சி கூதிர் யாமம் என்மனார் புலவர் எனக் குறிஞ்சித் திணைக்குரிய காலத்தைக் (ஐப்பசி, கார்த்திகை) கூறுவர் தொல்காப்பியர். அக்கூதிர் காலத்தின் வருகையால் நிகழ்ந்த விளைவுகள் வருணிக்கப் பட்டுள்ளன (45-72).

ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் குறிப்பிட்ட இலக்கிய வகை செல்வாக்குப் பெற்றிருப்பதால் அக்காலத்தில் அவ்வகை நூல்தான் தோன்றியது என எண்ணுவதும், அவற்றினின்று விலகியமைந்த

நூல்களை அவ்வகையில் அடக்க முயல்வதும் வரலாற்று முறைமைக்கு முரண்பட்டதாகத் தோன்றுகிறது.

எனவே **நெடுநல்வாடை** பொருள்வழி நோக்கின் அகப்பாடலாகவும், துறைவழி நோக்கின் புறப்பாடலாகவும் அமைகிறது எனலாம்.

**திருக்குறள்**

**திருக்குறள்** காமத்துப்பால் அகப்பொருள் இலக்கிய வகைக்குரியதா? இல்லையா? என்ற வினா பல்வேறு அறிஞர்களின் கருத்துக்களை நோக்கும் போது எழுகின்றது. காரணம் சங்ககாலத்துக்குப் பின்வந்த வள்ளுவர் மரபு காரணமாக இருபத்தைந்து அதிகாரங்களில் ஒரு அதிகாரத்துக்குப் பத்துக்குறள் வீதம் இருநூற்றைம்பது குறள் பாடியிருப்பதால் அவற்றை அகப்பொருளுக்குரியது எனச் சொல்லலாமா? எனக் காண்போம்.

> திருக்குறளில் உள்ள முப்பாலில் ஒரு பாலாகிய
> காமத்துப்பால் முழுமையும் அகப்பொருள் இலக்கியம்[29]
>
> இவ்வகப்பொருள் இலக்கியங்கள்
> (பதினெண்கீழ்க்கணக்கு)
> மாற்றருஞ் சிறப்பின் மரபுக்கு அடிமையாகாமல்,
> புதுமைப் போக்குகளைக் கைக்கொண்டுள்ளன.
> இவற்றுள் திணை வரையறை மட்டும் சிறப்பாகப்
> போற்றப்படுகின்றது; களவு கற்பு எனும் கைகோள்
> முறை இப்புலவர்களைக் கட்டுப்படுத்தவில்லை.
> காமத்துப்பாலைக் கூட ஆண்பாற்கூற்று, பெண்பாற்
> கூற்று, இருபாலார் கூற்று என வகைப்படுத்தி
> விடலாம். எனவே ஒவ்வொரு திணையிலும்
> உட்கோளாகக் கூற்றுக்களும் கூற்றுக்குரியாரும்
> இடம்பெற்றுள்ளனர்.[30]

மேற்காணும் அறிஞர்கள் கருத்துப்படி நோக்கின் திருக்குறள் அகப்பொருள் என்ற இலக்கிய வகைக்குரியதாகும்.

**காமத்துப்பால் அகப்பொருளா?**

**திருக்குறள்** காமத்துப்பால் அகனைந்திணைப் பாகுபாட்டைச் சுட்டவில்லை; கைகோள் பாகுபாடும் பரிமேலழகர் போன்ற உரையாசிரியர்களால் தான் போற்றப்படுகிறது; அவர்கள் உரைவழி நோக்கின் தலைவன், தலைவி, தோழி, பாங்கன் போன்ற அகமாந்

தர்கள் கூற்றுகள் மட்டுமே காணப்படுகின்றன. மேலும் இந்நூல் அறநூல் கால இலக்கியங்களின் வடிவத்தைப் (வெண்பா) பெற்றது. சுருங்கக் கூறின் காமத்துப்பால் திணைத்தலைமை உடையது அன்று: துறைத் தலைமை உடையது.

திருக்குறளின் அகப்பொருள் மரபை ஆய்ந்த அறிஞர் மு. சண் முகம்பிள்ளை,

> பழைய அகப்பொருள் மரபுகளை உளத்தில் கொண்ட
> பண்டை உரைகாரர்கள் ஐந்திணை அடிப்படையிலும்,
> களவு, கற்பு என்னும் கைகோள் வகைகளிலும்,
> ஆண், பெண் இருபாலார் கூற்றுகளாகக் கூற்று
> வகைப்படுத்தும் காமத்துப்பால் அதிகாரங்களை
> அடக்க முயன்றுள்ளனர்... *ஆகவே காமத்துப்பால்*
> *பகுதியில் இன்ப உணர்வு வெளிப்பாடுகளையே*
> *நாம் விஞ்சக் காண்கிறோம்*[31]

என்று சுட்டுகிறார். அகப்பொருளிலக்கியத்தின் மறுமலர்ச்சிக் காலத்தை ஆய்வு செய்த அ. அ. மணவாளன்:

> (திருக்குறளின்) அதிகாரத் தலைப்புகள் திணைபற்றி
> அமையவில்லை. அகப்பொருள் கிளவித் தொகைகளின்/
> கூற்றுகளின் பெயரால் அமைந்திருக்கக் காண்கிறோம்.
> இது சங்க மரபினின்று சரிந்த மரூஉ[32]

என்றும்,

> சங்க அகமரபினின்று திருக்குறள் மரபு வேறுபட்டது[33]

என்றும் முடிவு செய்கிறார். திருக்குறள்,

> ......முப்பாலாகக் குறைந்திருந்த போதிலும்
> ஏனையவற்றை அறத்துப்பால், பொருட்பால்
> எனப் பெயரிட்டவர் மூன்றாம் பகுதியை அகத்துப்பால்
> என்று அழைக்காது இன்பத்துப்பால் (அ) காமத்துப்
> பால் என்று கூறியிருப்பதும் அகப்பொருள் மரபு
> மாற்றம் நிகழ்ந்தமையைக் காட்டுகிறது[34]

எனப் பெயரளவில் காணும் மாற்றத்தையும்,

> ......அகம், புறம் என்னும் இலக்கியப்
> பாகுபாடும், அறம், பொருள், இன்பம்
> என்னும் பாகுபாடும் அடிப்படைக் கவிதை மரபு
> மாற்றத்தின் புறவடிவங்களாக நமக்குத் தென்படு-
> கின்றது[35]

என்று நூலமைப்பில் காணும் மாற்றத்தையும் மரபு மாற்றத்திற்குச் சான்றாகக் காட்டுவர் அ. அ, மணவாளன்.

அகமாந்தர் கூற்றில் காமத்துப்பால் அமைந்திருப்பினும் இடத்தாலும் காலத்தாலும் அகப்பொருளினின்றும் வேறுபடுகின்றது.

**பக்தி இலக்கியம்**

அகப்பொருள் துறைகளை ஊடகமாகப் பயன்படுத்திப் பக்தி இலக்கியங்கள் சைவம் வைணவம் ஆகிய இரு சமயங்களிலும் தோன்றின. இவற்றை அகப்பொருள் என்றே சுட்டுவர் அறிஞர். அவர் தம் கூற்று கீழ்க்காணுமாறு :

> நம்மாழ்வார் அருளிய *திருவிருத்தம் அகப்பொருட் பிரபந்தம்*. இதன் பின்னர் எழுந்த கல்லாடர் இயற்றிய *கல்லாடம்*. நூறு அகவற்பாக்களைக் கொண்ட *அகப்பொருள் நூல்*. இதனால் பக்தி இயக்கக் காலத்தில் பதிகமாக மட்டுமன்று சதகமாகவும் அகப்பொருள் இலக்கியம் உருவாகிய நிலையைக் காணலாம்.[86]

இவர் **திருவிருத்தம், திருக்கோவையார், கல்லாடம்** ஆகிய மூன்று நூல்களையும் அகப்பொருள் என்றே குறிப்பிட்டுவிடுகின்றார். இவ்வாசிரியரின் கருத்து ஆராயத்தக்கது. அகப்பொருள் மானுடம் பற்றியது; இரு உள்ளங்களின்-இரு உடல்களின் கூட்டுறவைப் பாடுவது; ஆண் பெண் இருவரிடையே நிகழ்வது. பக்தி இலக்கியம் ஆன்மாவுக்கும் பரமான்மாவுக்கும் இடையேயுள்ள உறவைப் பற்றியது. அகத்திணைக்காதல் அனைத்து மானுட உயிர்களும் அனுபவிக்கும் தன்மையது; பக்திக்காதல் அனைத்து மானுட உயிர்களும் அனுபவிக்கும் தன்மையது அன்று. எனவே மேற்காணும் நூல்கள் அகப்பொருள் என்று எண்ணத்தக்கன அல்ல.

**ஆண்டாள் காதல் அகப்பாடலாகுமா?**

பக்திப் பாடல்களை அகப்பாடலாகக் கொள்ளலாம் என்ற கருத்துடைய அ. ச. ஞானசம்பந்தன்,

> தமிழ் இலக்கண முறைப்படி இவற்றை அகப்பாடல் என்ற தொகுப்பில் சேர்த்தல் இயலாது என்பர். ஆயினும், இவையும் அகப்பாடல்களென்றே கொள்வதற்குரியன. *அகமனத்தில் தோன்றும் இன்பம்*: அதாவது தனக்குத் தானே அனுபவிக்கும் இன்பம் *காரணமாகத் தோன்றுவது அகப்பாடல் எனின் இவையும் அகப்பாடல்கள் தாமே!*[87]

என்பர். 'அகம்' என்பது பிறர்க்குப் புலப்படுத்த இயலாது எனினும் அவ்வின்பம் ஆண் பெண் உறவால் ஏற்படுவதாகும்; அந்த அடிப் படையில் நோக்கும்போது பக்திப் பாடல்கள் அகப்பாடல்களாகா.

அ. ச. ஞா. வின் கருத்தை மனத்திற் கொண்ட தாமோதரன் ஆண்டாள் பாசுரங்கள் அகப்பொருள் என்று கொள்ளத்தக்கன. என்பர்.[38]

ஓர் இலக்கிய வகையில் மற்றோர் இலக்கிய வகையைக் காண விழைவதால் இந்தச் சிக்கல் ஏற்படுகிறது.

சங்க அக இலக்கியத்தை மணமிகு மலர்த்தோட்டம் என்று கொண்டால், அதற்குப் பின்வந்த காலகட்டத்தில் தோன்றிய இலக்கியங்களை மாலைகளாகக் கொள்ளலாம். பின்வந்த கவிஞர்கள் தான் விரும்பும் இலக்கிய வகை என்னும் மாலையைப் புனையச் சங்க அக இலக்கிய மலர்த்தோட்டத்திலிருந்தும் தமக்குத் தேவையான மலர்களைக் கொய்து கொண்டனர் எனலாம். அதாவது பின்வந்த கவிஞர்கள் அத்தோட்டத்திலிருந்துதான் தமது இலக்கிய மாலைக்கு அனைத்துப் பூக்களையும் கொய்து கொண்டனர் என எண்ணும் போது-வற்புறுத்தும் போது மேற்கண்டவாறு எண்ண வாய்ப்பு ஏற்படுகிறது.

ஆண்டாள் பாடல்களில் அகப்பொருள் கூறுகள் உள்ளன. எனினும் அவை அகப்பாடல்கள் அல்ல.

உள்ளம் இயைந்த உடலுறவும், உடல் இயைந்த
உள்ள உறவும், சுருங்கக்கூறின் உயிர்மெய்ப்
புணர்ச்சியே அதன்பாடுபொருளாம். ஆண்டாள்
காதல் அகத்திணையாகாது மெய்யுறல் இன்மையின்[39]

என விளக்கும் தமிழ்க்காதல் ஆசிரியரின் கூற்று எண்ணத்தக்கது.

'கண்ணனை இணக்கு' எனக் காமனைத் தொழும்
ஆண்டாள்

மானிட வர்க்கென்று பேச்சுப்படில்
வாழகில் லேன்கண்டாய், மன்மதனே![40]

எனப் பாடுவதிலிருந்து ஆண்டாள் காதல் அகப்பொருள் காதல் அல்ல; அது மானுடம் பற்றியதல்ல என்பது புலனாகின்றது.

மேலும் ஆண்டாள் பாசுரம் தற்சார்புக் கவிதையைச் சார்ந் தது; எனவே அது அகப்பொருள் வகைக்குரியதன்று எனத் தெளிய லாம். அகப்பொருள் என்பது தற்சாராக் கவிதையைச் சார்ந்தது; அகமாந்தர் கூற்றில் அமைவது; கவிக்கூற்றில் பாடப்பெறுவது அன்று என்பதும் நினைவுகூரத்தக்கது.

**திருவருட்பா**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்து தமிழ் இலக்கிய உலகுக்கு மிகுதியான பாடல்களை அருளிச்செய்த வள்ளலாரின் பாடல்களை மிகமிகப் பழங்காலத்தில் பயின்ற அகப்பொருள் வகையில் அடக்க நினைப்பது ஆராயத்தக்கதாகும்.

> அடிகளாரின் அகப்பாடல்களை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். ஒன்று புணரா நிலை, மற்றொன்று புணர்ந்த நிலை ... அடிகளாரின் அருட்பாக்களில் காணப்படும் அகப்பாக்களின் எண்ணிக்கை
> 939 ஆகும்[41]

எனத் திருவருட்பா பாடல்களை அகப்பாடல் என்றே சுட்டுவர். மேலும் அவர் இறைவனைத் தலைவனாகவும், ஆன்மாவைத் தலைவியாகவும், மனத்தைத் தோழி யாகவும் காட்டுகின்றார்.[42] இவற்றை நோக்கும்போது வள்ளலாரின் பாடல்கள் அகப்பாடல்கள் என்ற எண்ணம் தோன்றுகின்றது. எனினும் இவை மானுடம் பற்றியவை அல்ல. அகப்பொருட்டுறையைப் பயன்படுத்தி பக்தி யுணர்வை வெளியிட்டுள்ளார் அவ்வளவே.

இரண்டு கண்கள், இரண்டு கால்கள், இரண்டு காதுகள், ஒரு மூக்கு இருப்பதால் மட்டும் மனிதனாகி விடமுடியுமா? மனிதனுக் கென்று சிறப்புக்கூறுகள் சில உள்ளன. அதுபோல அகப்பொருள் கூறுகள் சில பெற்றிருப்பதால் மட்டும் அவை அகப்பொருள் என்று கொள்ளத்தக்கன அல்ல. அதற்கென்று சில தனித்தன்மைகள் உண்டு.

**நூற்பெயர்**

**'காதா சப்த சதி'**யின் மொழி பெயர்ப்பை ஒருவர் அப்படியே தமிழில் பெயரிட்டு நூல் வெளியிட, மற்றொருவர்

> *ஆந்திர நாட்டு அகநானூறு*

எனப் பெயரிட்டு வெளியிட்டுள்ளார். இந்நூலைப் பின்வரும் அறிஞர்கள் நோக்கின் காலம் தெரியாத நிலையில் தமிழ் அகநானூறு போல ஆந்திராவில் ஒரு அகநானூறு தோன்றியது போலும் என முடிவு செய்ய வாய்ப்புண்டு. எனவே விற்பனை கருதியோ-பிற காரணங்களாலோ பெயரிட்டாலும்கூட முரண் படாத வகையில் செய்வது நலம்.

இத்தன்மைத்தான பெயரீட்டு முறை இலக்கிய வரலாறு காண் பதில் மிகுந்த குழப்பத்தை விளைவிக்கும்.

பிற

சொல்லளவிலும், பொருள் நிலையிலும் கூட ஓர் இலக்கிய வகையின் பெயர் எல்லா நூலுக்கும் ஆளப்படுவது ஈண்டு நோக்கத் தக்கது.

அகப்பொருள் பாசுரங்கள்[43]

சிலப்பதிகாரத்தில் அகம்

நந்திக்கலம்பகம் - அகப்பொருள் ஆய்வு

ஆழ்வார்கள் பாடல்களில் அகம்[44]

சாலமோனின் உன்னதப்பாட்டு ஆன்மீக இலக்கியமே - அகப்பொருள் இலக்கியமே[45]

ஆய்வு நோக்கில் இத்தகு தொடர்கள் ஆளப்படுவதால் இலக்கியத் தன்மையும், வரலாறும் பிறழ உணர வாய்ப்பளிக்கின்றது. ஏற்கனவே கால ஆராய்ச்சியில் தத்தளிக்கும் அறிஞர்கள் நிலை கண்டும், தெளிவான தமிழ் இலக்கிய வரலாறு காணாது நிற்கும் நிலை கண்டும் இங்ஙனம் வரும் தொடர்கள் தவிர்க்கப்பட வேண்டியவை.

## சான்றெண் விளக்கம்

### இயல் ஐந்து

### அகப்பொருள் இலக்கிய வகை ஆய்வில் சில சிக்கல்கள்

1 தொல். பொருள். 384.

2 ந. வீ. செயராமன், சிற்றிலக்கியச் செல்வம், 27.

3 Indeed genre criticism may embody response not only to aesthetic problems but also to many social issues; concepts of genetic evolution, for instance, often reflect attitudes about social and political change.
-Heather Dubrow, Genre, 46.

4 வ. சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், 320.

5 பரிபாடல், 6, 7, 10-12, 14, 16, 20.

6 ,, 20.

7 ,, 20:48-58.

8 ,, 20:76-78.

9 ,, 20:79-80.

10 நா. செயராமன், "பரிபாடலில் அகப்பொருள் மரபு" **தமிழ் இலக்கிய நெறிகள்**, *33*.

நா. செயராமன், "பரிபாடலில் அகப்பொருள் மரபு", **ஆ. கோ.** *11-1, 359*.

11 பரிபாடல், *9:14-15*.

12 ,, *11:41-44*.

13 நா. செயராமன், "பரிபாடலில் அகப்பொருள் மரபு", **ஆ. கோ.** *11-1, 359*.

14 ,, *354-355*.

15 பரிபாடல், *14:8-9*.

16 ,, *20:96-97*.

17 ,, *20:108-111*.

18 ,, *12:100-102*.

19 நா. செயராமன், பரிபாடலில் அகப்பொருள் மரபு, **தமிழ் இலக்கிய நெறிகள்**, *37-38*.

நா. செயராமன், 'பரிபாடலில் அகப்பொருள் மரபு' **ஆ. கோ.** *11-1, 359*.

20 க. ப. அறவாணன், **அற்றைநாட் காதலும் வீரமும்** *175*.

21 "அகப்பொருளுக்குரிய பெயர் சுட்டா மரபும் இதில் அமைந்துள்ளது. சோழனைக் குறிப்பாகவோ அல்லது வெளிப்படையாகவோ இப்பாடல் சுட்டிக் காட்டவில்லை என்பதும் அறியத்தக்கது. ஆகவே நக்கண்ணையார் பாடலாக வரும் இவை அகத்தைச் சார்ந்தவை என்றே கொள்ள வேண்டும்."

ச. கணபதிராமன், "புறத்தில் அகம்", **ஆ. கோ.** *11-1, 138*.

22 RM. Periakaruppan, **Tradition and Talent in Sangam Poetry**, *132-133*.

23 நச்சினார்க்கினியம், **பத்துப்பாட்டு**, உ. வே. சாமிநாதையர் (ப. ஆ.), ஐந்தாம் பதிப்பு (*1956*), *444-445*.

24 ,,

25 எஸ். வையாபுரிப் பிள்ளை, **இலக்கிய தீபம்**, *50*.

26 வ. சுப. மாணிக்கம், **தமிழ்க்காதல்**, *395*.

27 RM. Periakaruppan, **Tradition and Talent in Sangam Poetry**, *153*.

28 **தொல். பொருள்.** 7.

29 ந. வீ. செயராமன், **சிற்றிலக்கியச் செல்வம்**, 61.

30 க. த. திருநாவுக்கரசு, 'பதினெண்கீழ்க்கணக்கு', **இலக்கியக் கொள்கை-1**, 78-79.

31 மு. சண்முகம் பிள்ளை, **அகப்பொருள் மரபும் திருக்குறளும்**, 246.

32 அ. அ. மணவாளன், 'அகப்பொருளிலக்கியத்தின் மறுமலர்ச்சிக் காலம்' **ஆ.கோ. 17-1**. 424.

33 ,, 425,

34 அ. அ. மணவாளன், "திருக்குறள் காமத்துப்பால் அகப்பொருள் இலக்கியமா?" **ஆ. கோ. 16-1**, 409.

35 ,,

36\. மு. சண்முகம் பிள்ளை, 'சிறுபிரபந்தங்கள்', **இலக்கியக் கொள்கை-2**, 82.

37 அ. ச. ஞானசம்பந்தன், **இலக்கியக்கலை**, 206.

38 As there could be no harm if this rule is relaxed in respect of these hymns; this need not be strictly insisted upon and these could be classed as Akapporul.

-G. Damodaran, **The Literary Value of Thiriuvaymoli**, 62.

39 வ. சுப. மாணிக்கம், **தமிழ்க்காதல்**, 455.

40 **நாலாயிர திவ்வியப் பிரபந்தம்**, 508:5.

41 இரா. மாணிக்கவாசகம், **திருவருட்பா ஆராய்ச்சி**, 182.

42 ,, ,, 184.

44 நாராயணவேலுப்பிள்ளை, 'பிரிவாற்றாமை' **பிரபந்தக் காட்சிகள்**, 145.

44 எம். ஃபில்., டாக்டர் பட்ட ஆய்வேடுகள்.

45 பட்டி மன்றப் பொருள், உலகக் கிறித்தவ மூன்றாவது தமிழ் மாநாடு, சென்னை: பெயின் மேல்நிலைப் பள்ளி, 27-29 டிசம்பர் 1986.

# முடிவுரை

# முடிவுரை

## 1. இலக்கண நூல்களில் அகப்பொருள் மரபுகள்

இலக்கண நூல்களில் அகப்பொருள் இலக்கியக் கோட்பாடுகள் சென்று தேய்ந்திறுதல் என்ற நிலையில் இடம் பெற்றிருக்கின்றன; தொல்காப்பியத்தைத் தவிர ஏனையவை அகப்பொருள் தொடர்பான இலக்கண நூல்களே தவிர அகப்பொருள் இலக்கணத்தை விளக்குவனவல்ல; இறையனாரகப் பொருள், நம்பியகப்பொருள், மாறனகப்பொருள் ஆகியவை கோவை பற்றிய இலக்கண நூல்களாகும். அவை அகப்பொருள் மரபுகளைப் போற்றுவன போல் தோன்றினும் அவற்றில் துறைக்கு முதன்மை கொடுக்கப்பட்ட நிலையைக் காணலாம். முத்துவீரியம், இலக்கண விளக்கம் போன்றவற்றில் புதிய செய்தி இல்லை; களவியற்காரிகை, இறையனாரகப் பொருள் உரையைப் பின்பற்றி எழுந்துள்ளது.

வீரசோழியம், தொன்னூல் விளக்கம், அறுவகை இலக்கணம் ஆகியனவற்றில் பொருள் இலக்கணம் தொடர்பான செய்திகள் மிகக் குறைவு.

புறப்பொருள் வெண்பாமாலை பிற்காலத்துத் தோன்றிய அகப்பொருள் தொடர்புடைய பல சிற்றிலக்கியங்களுக்கான வளமான இலக்கணச் செய்திகளைப் பெற்றிருக்கின்றது எனலாம். அந்நூல் பற்றிய ஆழ்வாய்வு இன்றியமையாதது.

## 2. திணை

அகம் ஏழு புறம் ஏழு என்பது தொல்காப்பியரின் திணை பற்றிய கோட்பாடு ஆகும். அவற்றுள் அகப்பொருளில் திணை என்பது முதல், கரு, உரி ஆகிய மூன்று பொருள்களையும் உள்ளடக்கியது; சிறப்பாக உரிப்பொருளைக் குறிக்கும் எனில் தவறாகாது. கைக்கிளை பெருந்திணை ஆகிய இரண்டுக்கும் உரிய முதற் பொருளையும் கருப்பொருளையும் தொல்காப்பியர் விதந்து கூறவில்லை.

சங்க அக இலக்கியம் அகப்பொருளைப் பொறுத்தவரை தொல்காப்பியர் சுட்டிய திணை மரபைப் பின்பற்றியுள்ளது; தொல்காப்

பியர் குறித்த கைக்கிளை பெருந்திணைக்குரிய செய்யுட்கள் சில கலித்தொகையில் மட்டும் காணப்படுகின்றன.

காப்பியங்கள், புராணங்கள், சிற்றிலக்கியங்கள் போன்றவை திணை என்பதை நிலம் என்ற பொருளில் சுருக்கி நில வருணனையில் அச்சொல்லை ஆளுகின்றன; திருக்குறளின் காமத்துப்பாலிலும், கோவை போன்ற நூல்களிலும் துறை முதன்மைப்படுத்தப்பட்ட நிலையைக் காண்கிறோம்.

## 3. துறை

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட துறைகளுள் மாற்றம் பெறாதவை, தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படாமல் இடையில் தோன்றியவை (புதிதாகத் தோன்றியவை), பல்வேறு திரிபுக்கு உள்ளானவை எனப் பாகுபாடு செய்யப் பெற்று எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

அகப்பொருள் நூல்களில் இடம் பெற்ற துறைகள் தவிர ஏனையவை (பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம்) அகப்பொருள் துறையைப் போல் தோன்றினும் அவற்றின் அமைப்பு, நோக்கம், பயன், காலம் ஆகிய அனைத்திலும் அகப்பொருள் என்ற இலக்கிய வகையிலிருந்து வேறுபடுகின்றன.

அகப்பொருள் துறைகள் பல புதிய இலக்கிய வகைகள் தோன்ற வழி வகுத்துள்ளன. பக்தி இலக்கியம் அகப்பொருள் துறைகள் பலவற்றைப் பயன்படுத்திக் கொண்டுள்ளது.

முத்தொள்ளாயிரம், திருக்குறள், சிலப்பதிகாரம், பக்தி இலக்கியம், கோவை, கல்லாடம் தணிகைப் புராணம் போன்றவை அகத்துறைகளையும் அவற்றின் மரபுகளையும் போற்றுவதில் பெரும்பங்கு வகித்துள்ளன.

## 4. கூற்று

### (அ) கூற்றுக்குரியர்

சங்க அகப்பொருள் தவிர்ந்த ஏனைய நூல்களில் (கலம்பகம், குறவஞ்சி) அகப்பொருளில் இடம்பெற்ற கூற்றுக்குரியோர் இடம் பெற்றிருப்பினும் கூற்றுக்கான சூழல் நோக்கம் போன்றவற்றில் மாற்றம் நிகழ்ந்துள்ளது. எனவே அவர்களை அகப்பொருள் கூற்றுக்குரியராகக் கருத இயலவில்லை. பாடுபொருள், நோக்கம், காலம், இடம் ஆகியவை கூற்றுக்குரியோரையும் அவர் மரபையும் கட்டுப் படுத்தியுள்ளன என்பதற்கு நாயக நாயகி பாவனைப் பாடல்களுள் இடம் பெறாத தலைவன் கூற்று சிறந்த சான்றாகும்.

காலந்தோறும் தோன்றிய இலக்கியங்கள் அகமரபைப் போற்றி வந்தன எனினும் அகப்பொருள் தலைவனின் கூற்று மரபு முத்தொள்

யிரத்தில் இல்லை; பக்தி இலக்கியத்துள் குறிப்பாக நாயகன் நாயகி பாவப் பாடல்களில் இடம் பெறவில்லை. இம்மரபின் வீழ்ச்சியைக் காலத்தின் தேவையைப் போற்றுவதாகக் கொள்ளலாம்.

இவ்வாறு வீழ்ச்சியுற்ற தலைவன் கூற்று மரபு மீண்டும் பாரதியாரின் 'கண்ணம்மா-என் காதலி'யில் இடம் பெற்றிருக்கக் காண்கிறோம். கண்ணனைத் தாய், தந்தை, சகோதரன், வேலைக்காரன், காதலன், சீடன் ஆகியோராகப் பாவித்த பாரதியார் கண்ணனைக் கண்ணம்மாவாக்கி, தலைவன் கூற்றாகப் பாடியதில் வியப்பில்லை. எனவே, இதனைத் தலைவன் கூற்று மரபின் மறுமலர்ச்சியாகக் கொள்ள இயலவில்லை. ஏனெனில் வழக்கு வீழ்ந்த ஓர் இலக்கிய வகை மீண்டும் ஒரு காலத்தே உயிர்ப்பிக்கப் படினும், அது முன்னதிலிருந்து வேறுபட்டே இருக்கும் என்பது வகைமையாராய்ச்சியாளர் கண்ட முடிவு.*

(ஆ) கேட்போர்

சங்க அக இலக்கியம், சங்கம் மருவிய கால ஆறு அகப்பொருள் நூல்கள், திருக்குறள், கோவை ஆகியவற்றிலும் பிற அகத்துறைப் பாடல்களிலும் தொல்காப்பியர் காட்டிய கேட்போர் இடம் பெற்றுள்ளனர். முத்தொள்ளாயிரம், காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள் ஆகியவற்றில் இடம் பெறும் கேட்போர் அகப்பொருள் மரபிற்குரியவர் அல்லர்.

## 5. அகப்பொருள் இலக்கியவகை ஆய்வில் சில சிக்கல்கள்

அகப்பொருள் என்பது ஓர் இலக்கிய வகை. பிற இலக்கியங்களில் அவ்விலக்கியத்தின் கூறு அல்லது தாக்கம் இருக்கலாம். அதனால் மட்டும் அகப்பொருளாகி விடாது. ஆண் பெண் இருவருடைய காதலைப் பற்றிப் பாடும் அனைத்து இலக்கியங்களையும் அல்லது காதல் உறவு உடையதாகக் கற்பித்துப் பாடப்பெறும் பக்தி இலக்கியங்களையும் அகப்பொருள் என்று சுட்டுவது பிழையான முடிவாகும்.

இரண்டு கால், இரண்டு காது, ஒரு மூக்கு உடைய அனைத்தும் மனிதனாகி விடா: மனிதனுக்கென்று சில தனித் தன்மைகளிருப்பது

* A genre revied is different from its first avator, and different also from what it would be if works of its type just were not written for a while.

— Alastair Fowler, "The Life and Death of Literary forms", **New Directions in Literary History**, 94.

போல, அகப்பொருளுக்கென்று சில தனிப் பண்புகள் உண்டு. அவற்றைப் பெற்றிருப்பவை மட்டும் அகப்பொருள் என்று கொள்ளத் தக்கன; அல்லாதவை அகப்பொருளின் திரிபு அல்லது மரூஉ அல்லது புதியன என்று எண்ணத்தக்கன.

அறிவியல் உலகில் புதிய புதிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதைப் போல இலக்கிய உலகிலும் இலக்கியத்தின் சிறப்பை எடுத்துக்கூறும் வகை ஆய்வுகள் தோன்ற வேண்டும். குறிப்பாகத் தெளிவான இலக்கிய வகை பற்றிய ஆய்வு தமிழ் இலக்கியத்திற்கு இன்றைய நிலையில் மிகுதியும் வேண்டப்படுவதாகும்.

இதுகாறும் கண்ட வரலாற்றுப் பார்வையால் தெளிவாக்கப் பட்டுள்ள உண்மைகளாகக் கீழ்க்கண்டவற்றைக் குறிக்கலாம்.

1. தொல்காப்பியம், சங்க அக இலக்கியம் ஆகிய இரண்டும் முறையே அகப்பொருள் இலக்கிய வகைமைக்குரிய இலக்கணமாகவும், இலக்கியமாகவும் திகழ்கின்றன.

2. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் காலத்தே பாடன்முறைமையில் சில மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. எனினும் உரிப்பொருள் மாறாது நிற்றலின் இலக்கிய வகைமையின் தனித்தன்மைதொடரக் காண்கிறோம்.

3. பக்தி இலக்கியத்தில் அகப்பொருள் மரபுகள் பல உத்தி வகைகளாகப் பின்பற்றப்பட்டிருப்பினும், உரிப்பொருள் மாற்றம் பெற்றுவிட்டதால் அகப்பொருள் என்னும் இலக்கிய வகை இக்கால கட்டத்தில் வழக்கிழந்து விட்டது எனலாம்.

4. இடைக்காலத்தே தோன்றிய கோவை நூல்கள் மானுடக் காதலாகிய உரிப்பொருளை உயிர்ப்பித்துப் பாடியிருப்பினும், பாடன்முறைமை மாற்றம் பெற்றுத் திரிந்துவிட்டதால் தனி இலக்கிய வகையாகக் கொள்ளத்தக்கன எனலாம்.

5. இதன் பின்னர்க் காணப்படுவனவெல்லாம் அகப்பொருட் கூறுகளின் மரபெச்சங்களே தவிர அகப்பொருள் என்னும் இலக்கிய வகையைச் சார்ந்தனவல்ல.

# துணைநூற் பட்டியல்

## துணைநூற் பட்டியல் அமைப்பு

1. துணைநூற் பட்டியல் எம். எல். ஏ. ஸ்டைல் சீட் (The MLA STYLE SHEET) என்ற நூலைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளது.

2. துணைநூற் பட்டியல் மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு :

   1. முதன்மை நூல்கள்

   2. முதன்மை நூல்கள் பற்றிய திறனாய்வு நூல்கள்

   3. ஆய்வேட்டில் எடுத்தாளப்படாத, ஆனால் ஆய்வுக்குப் பயன்பட்ட நூல்கள்

# துணைநூற் பட்டியல்

## 1. முதன்மை நூல்கள்


அப்துல் ரகுமான், (பதிப்பும் குறிப்பும்), குணங்குடியார் பாடற்கோவை, சிவகங்கை, அகரம், 1980.

அரங்கநாத முதலியார், கச்சிக் கலம்பகம், ஐந்தாம் பதிப்பு, சென்னை: கழகம், 1950.

அருணாசல சுவாமி, குற்றாலக் கோவை, ஏ.எஸ். முத்தையா முதலியார் (ப.ஆ.), திருவிதாங்கூர், சர்வகலாசாலை, 1949.

அருணாசலம், மு. (ப.ஆ.), பிரபந்த மரபியல், ?: தமிழ்நாடு அரசு, 1976.

அழகிய சொக்கநாத பிள்ளை, முத்துசுவாமியா பிள்ளையவர்கள் பேரிற் காதற் பிரபந்தம், ?: முத்தமிழாகர அச்சுக்கூடம், விபவ வருடம்.

அன்னி தாமசு, (ப.ஆ.), பிரபந்தத் திரட்டு, சென்னை: உ.த.ஆ.நி., 1980.

அனந்தராமையர், இ. வை. (ஆராய்ச்சிக் குறிப்புரை), கலித்தொகை, (நெய்கற்கலி): நச்சினார்க்கினியருரையுடன், சென்னை: நோபில் அச்சுக்கூடம், 1931.

இராகவையங்கார், ரா., இராசராச சேதுபதி ஒரு துறைக் கோவை, சிதம்பரம்: மணிவாசகர் நூலகம், 1984.

இராமசாமிப் புலவர், சு.அ., தனிப்பாடல் திரட்டு.
பகுதி 1 — 1963
பகுதி 2 — 1964
பகுதி 2 — 1964
பகுதி 4 — 1964
பகுதி 5 — 1972
சென்னை: கழகம்.

இராமநாத பிள்ளை, ப., பொ.வே.சோமசுந்தரனார் (உ.ஆ.), பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடல்கள் (இரண்டு பகுதிகள்) சென்னை: கழகம், 1973.

இராமநாதன் செட்டியார், மீ. பொன். (உ.ஆ.), அம்பிகாபதி கோவை, சென்னை; கழகம், 1952.

இராமலிங்க அடிகள் (அருட்பிரகாச வள்ளலார்), திருஅருட்பா, முதல் ஐந்து திருமுறைகள், இரண்டாம் பதிப்பு, சென்னை: இராமலிங்கர் பணி மன்றம், 1981.

.................................. திருஅருட்பா, ஆறாம் திருமுறை, இரண்டாம் பதிப்பு, சென்னை: இராமலிங்கர் பணி மன்றம், 1981.

இலக்குவன், அரு. (ப.ஆ.), அப்பர் பெருமான் வாழ்வும் வாக்கும், மேலையூர்: பூம்புகார் பேரவைக் கல்லூரி, 1980.

இளங்குமரன், இரா. (ப.ஆ.), களவியற் காரிகை, சென்னை: கழகம், 1973.

இளங்கோவடிகள், சிலப்பதிகார மூலம், அடியார்க்கு நல்லாருரையுடன், பத்தாம் பதிப்பு, தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம், 1985.

கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள், கந்தபுராணம்: பகுதி 2, சென்னை: பிரஸிடென்ஸி அச்சியந்திரசாலை, 1908.

கச்சியப்ப சுவாமிகள், திருவானைக்காப் புராணம், ?: ஏஷியாடிக் அச்சுக்கூடம், 1869.

கச்சியப்ப முனிவர், தணிகைப்புராணம், கா. நமச்சிவாய முதலியார் (ப.ஆ.), சென்னை: ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ், 1927.

கடிகை முத்துப்புலவர், **மதன வித்தாரமாலை,** சென்னை: கழகம், 1958.

கந்தசாமிப் புலவர், **திருப்பூவண நாதருலா,** உ.வே. சாமிநாதையர் (ப.ஆ.), நான்காம் பதிப்பு, சென்னை: தியாகராச விலாச வெளியீடு, 1956.

கம்பன் கழகம், **கம்பராமாயணம்.** இரண்டாம் பதிப்பு, சென்னை: 1977.

கல்லாடர், **கல்லாடம்,** பொ.வே. சோமசுந்தரனார்(உ.ஆ.). சென்னை: கழகம், 1963.

கல்யாணசுந்தரையர், எஸ். (ப.ஆ.), **தமிழ்நெறி விளக்கம்,** சென்னை: கபீர் அச்சுக்கூடம், ?.

காளமேகப்புலவர், **சித்திரமடல்,** சென்னை: கழகம், 1978.

கிருட்டினமூர்த்தி, க. (ப.ஆ.), ''கன்னிவாடி நரசிங்கப்ப நாயக்கன் வளமடல்'', பதிப்பாய்வேடு, சென்னை: உ.த.ஆ.நி., 1982.

கிருஷ்ணப் பிள்ளை, எச்.ஏ., **இரட்சணிய யாத்திரிகம்,** சென்னை: இந்திய கல்வி அபிவிருத்தி சங்கம், 1984.

குமரகுருபரர், **மதுரைக் கலம்பகம்,** சென்னை: கழகம், 1969.

குமரகுருபரன் பிள்ளை, டி.எம். (ப.ஆ.), **பதினோராந்திருமுறை,** ஸ்ரீவைகுண்டம்: ஸ்ரீகுமரகுருபரன் சங்கம், 1963.

குழந்தை, புலவர், **இராவண காவியம்,** இரண்டாம் பதிப்பு, சென்னை: வேலா வெளியீடு, 1971.

கொங்குவேளிர், **பெருங்கதை,** நான்காம் பதிப்பு, சென்னை: உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், 1968.

கோவிந்தராச முதலியார், கா. ர. (விளக்கவுரை), பன்னிரு பாட்டியல், சென்னை : கழகம், 1978.

சண்முகம், செ. வை. (பதிப்பும் உரையும்), சுவாமிநாதம், அண்ணாமலைநகர் : அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1975.

சண்முகம் பிள்ளை, மு. (ப. ஆ.), குறுந்தொகை, தஞ்சாவூர் : தமிழ்ப் பல்கலைக் கழகம், 1985.

சண்முகம்பிள்ளை, மு., அப்பாண்டைநாதர் உலா, சென்னை : சென்னைப் பல்கலைக் கழகம், 1974.

சத்தியமூர்த்தி, அ. ம., ''கோவை இலக்கியம் - கரந்தைக் கோவை'' பதிப்பாய்வேடு, சென்னை : உ. த. ஆ, நி., 1980.

சரவணப் பெருமாளையர், (ப. ஆ.), நாகம கூளப்ப நாயகன் விறலி விடு தூது, சென்னை : லக்ஷ்மி விலாச புத்தகசாலை, 1927.

சாமிநாதையர், உ. வே. (ப. ஆ.), குறுந்தொகை, நான்காம் பதிப்பு, சென்னை : ?, 1962.

......................................., கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள் : கோடீசுரக்கோவை - தஞ்சைப் பெருவுடையார் உலா-ஸ்ரீ சரபேந்திர பூபால குறவஞ்சி, சென்னை : கேசரி அச்சுக்கூடம், 1932.

—......................................, சீவகசிந்தாமணி : நச்சினார்க்கினியர் உரையுடன், ஆறாம் பதிப்பு, சென்னை : கபீர் அச்சுக்கூடம் 1957.

......................................., பிரபந்தத்திரட்டு : சீகாழிக்கோவை-வாட்போக்கிக் கலம்பகம் - வியாசக் கோவை - குளத்தூர்க்கோவை, ? : ?, 1926.

........................................., **புறநானூறு,** நான்காம் பதிப்பு, சென்னை : ஜோதி அச்சுக்கூடம், 1950.

........................................., **புறப்பொருள் வெண்பாமாலை,** எட்டாம் பதிப்பு, சென்னை : கபீர் அச்சுக்கூடம், 1953.

........................................., **திருமலையாண்டவர் குறவஞ்சி,** சென்னை : லா ஜர்னல் அச்சுக்கூடம், 1938.

சிற்றம்பலக் கவிராயர், மிதிலைப்பட்டி. **மூவரையன் விறலிவிடுதூது,** இரா. நாகசாமி (ப. ஆ.), சென்னை : உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், 1982.

சின்னக் குட்டிப்புலவர், மா. வை., **தண்டிகைக் கனகராயன் பள்ளு,** சென்னை:சாது அச்சுக்கூடம், 1932.

சின்னத்தம்பி நாவலர், மி. கு., **ஓதாளர் குறவஞ்சி எனும் அலகுமலைக் குறவஞ்சி,** க. பழனிச்சாமிப் புலவர் (ப. ஆ.), கோவை : காந்திதாசன் அச்சகம், 1969.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், **தேவாரப் பதிகங்கள்,** சென்னை : கழகம், 1929.

சுப்பராய முதலியார், சிங்கார முதலியார், (ப. ஆ.), **நாகம கூளப்ப நாயகன் விறலிவிடுதூது,** ? : , ? , 1936.

சுப்பிரமணிய முதலியார், **தனிக்கவித் திரட்டு,** கு. அருணாசலக் கவுண்டர் (ப. ஆ.), சென்னை : கழகம், 1939.

சுப்ரமணிய பாரதி, சி., **பாரதியார் கவிதைகள்,** ஒன்பதாம் பதிப்பு, சென்னை: பாரதி பதிப்பகம், 1981.

சூடிக் கொடுத்த நாச்சியார், **நாச்சியார் திருமொழி** : அண்ணங்கராசாரியார் உரையுடன், நான்காம் பதிப்பு, காஞ்சீபுரம் : ஸ்ரீ வெங்கடேசுவரா பிரஸ், 1956.

சேக்கிழார், **பெரியபுராணம்**, சென்னை : சைவ சித்தாந்த மகா சமாஜம், 1934.

சேது ரகுநாதன், ந. (உ. ஆ.), **முக்கூடற்பள்ளு**, சென்னை : கழகம், 1957.

சேரமான் பெருமானாயனார், **பொன் வண்ணத்தந்தாதி**, கா. பொன்னுசாமி நாட்டார் (உ. ஆ.), சென்னை : கேசரி அச்சியந்திரசாலை, 1935.

சொக்கநாதப்பிள்ளை, பலபட்டடை, **அழகர் கிள்ளை விடு தூது**, ஏழாம் பதிப்பு, சென்னை : உ. வே. சாமி நாதையர் நூல் நிலையம், 1979.

சொக்கநாதர், மதுரை, **தமிழ்விடு தூது**, உ.வே. சாமிநாதையர் (ப.ஆ.), ஆறாம் பதிப்பு, சென்னை : உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், 1981.

சோமசுந்தரனார், பொ. வே. (உ.ஆ.), **வளையாபதி, குண்டலகேசி**, சென்னை : கழகம், 1964.

தண்டபாணி சுவாமிகள், **ஆறுவகை இலக்கணம்**, சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியின் 25ஆவது ஆண்டு வெள்ளி விழா வெளியீடு, 1978.

திரிகூடராசப்பக் கவிராயர், **திருக்குற்றாலக் குறவஞ்சி**, சென்னை: கழகம், 1980.

திருக்குருகைப் பெருமாள் கவிராயர், **மாறனகப்பொருள், திருப்பதிக்கோவை**, ?:, ?, ?.

திருஞான சம்பந்த சுவாமிகள், **தேவாரப் பதிகங்கள்**, சென்னை: கழகம், 1927.

திருமங்கையாழ்வார், சிறிய திருமடல், அண்ணங்கராசாரியார் (உ.ஆ), இரண்டாம் பதிப்பு, சென்னை: மாடல் அச்சுக்கூடம், 1927.

……………………………, பெரிய திருமடல், அண்ணங்கராசாரியார் (உ.ஆ.), இரண்டாம் பதிப்பு, சென்னை: மாடல் அச்சுக்கூடம், 1928.

……………………………, பெரிய திருமொழி (1,2,3பத்துக்கள்), பெரியவாச்சான் பிள்ளை உரையுடன், காஞ்சீபுரம்: ஸ்ரீகீதா சார்ய அச்சுக்கூடம், 1908.

……………………………, பெரிய திருமொழி (4,5,6,7, பத்துக் கள்), பெரியவாச்சான் பிள்ளை உரையுடன், காஞ்சீபுரம்: ஸ்ரீகீதா சார்ய அச்சுக்கூடம், 1909.

திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி (8, 9, 10, 11 பத்துக்கள்), பெரியவாச்சான் பிள்ளை உரையுடன், காஞ்சீபுரம் : ஸ்ரீநிவாஸ அச்சுக்கூடம், 1911.

திருவரங்கத்தமுதனார், இராமாநுச நூற்றந்தாதி, இரண்டாம் பதிப்பு, சென்னை : மாடல் அச்சுக்கூடம், 1929.

திருவள்ளுவர், திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், ? : ?, 1965.

திவாகரர், சேந்தன் திவாகரம், சென்னை : கழகம், 1958.

துரைசாமி, வே. (ப. ஆ.), பாண்டிக்கோவை, மூன்றாம் பதிப்பு, சென்னை : ஸ்டார் பிரசுரம், 1985.

துரைசாமிப் பிள்ளை, ஔவை, சு., ஐங்குறுநூறு : முதல் தொகுதி (மருதம், நெய்தல்), அண்ணா மலைநகர் : அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1957.

......................................, **ஐங்குறுநூறு :** இரண்டாம் தொகுதி (குறிஞ்சி, பாலை), அண்ணாமலைநகர் : அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1957.

......................................, **ஐங்குறுநூறு :** மூன்றாவது தொகுதி (முல்லை), அண்ணாமலைநகர் : அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1958.

தேவராசப் பிள்ளை, வல்லூர், **குசேலோபாக்கியானம்,** வேணுகோபாலப்பிள்ளை (ப. ஆ.), சென்னை : பாரி நிலையம், 1957.

தொல்காப்பியர், **தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்,** சென்னை : கழகம், 1923.

......................................, **தொல்காப்பியம் - சொல்லதிகாரம்,** கு. சுந்தரமூர்த்தி (விளக்கவுரை), சென்னை: கழகம், 1974.

......................................, **தொல்காப்பியம் - பொருளதிகாரம்:** இளம்பூரணர் உரையுடன், ஏழாம் பதிப்பு, சென்னை : கழகம், 1977.

......................................, **தொல்காப்பியம் - பொருளதிகாரம்:** நச்சினார்க்கினியர் உரையுடன், மறுபதிப்பு, சென்னை: கழகம், 1983.

......................................, **தொல்காப்பியம் - பொருளதிகாரம்,** (களவியல், கற்பியல், பொருளியல்): நச்சினார்க்கினியர் உரையுடன், மறுபதிப்பு,சென்னை: கழகம், 1958.

......................................, **தொல்காப்பியம் - பொருளதிகாரம்:** பேராசிரியர் உரையுடன், சென்னை: லாங்மென்ஸ் க்ரீன் அண்ட் கம்பெனியார், 1917.

தோலாமொழித்தேவர், **சூளாமணி,** சென்னை: உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், 1954.

நக்கீரனார், **களவியல் என்ற இறையனார் அகப்பொருள்,** மறுமதிப்பு, சென்னை: கழகம், 1958.

நச்சினார்க்கினியர், (உ.ஆ.) **கலித்தொகை,** ஐந்தாம் பதிப்பு, சென்னை: கழகம், 1958.

நவநீத நாடனார், **நவநீதப் பாட்டியல்,** சென்னை: உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், 1961.

நாற்கவிராச நம்பி, **நம்பியகப்பொருள்,** கா.ர. கோவிந்தராச முதலியார் (குறிப்புரை), மறுபதிப்பு, சென்னை: கழகம், 1973.

பண்டாரக் கவிராயர், **திரு இலஞ்சி முருகன் உலா.** உ.வே. சாமிநாதையர் (ப.ஆ.), இரண்டாம் பதிப்பு, சென்னை: கபீர் அச்சுக்கூடம், 1956.

பழநி, ஆ., **அனிச்ச அடி,** மறுபதிப்பு, சென்னை: கழகம், 1974.

பாபநாச முதலியார், **கும்பேசர் குறவஞ்சி நாடகம்,** எஸ். கல்யாணசுந்தரையர் (ப. ஆ.), சென்னை : உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், 1961.

பாரதிதாசன், **காதல் பாடல்கள்,** சென்னை : பூம்புகார் பிரசுரம், 1977.

.........................................., **தேனருவி,** சென்னை. பூம்புகார் பிரசுரம், 1978.

பாலபாரதி முத்துசாமி ஐயர், **மோரூர்க் கண்ணன் பாம்பண காங்கேயன் குறவஞ்சி,** கு. அருணாசலக் கவுண்டர், கே. பி. முத்துசாமி (ப. ஆ.), மறுபதிப்பு, சென்னை : மக்கள் வெளியீடு, 1978.

பிங்கல முனிவர், பிங்கலந்தை என்னும் பிங்கல நிகண்டு. சென்னை : கழகம், 1968.

பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், அஷ்டப் பிரபந்தம் : (திருவரங்கக் கலம்பகம், திருவரங்கத்து மாலை, திருவரங்கத்தந்தாதி, சீரங்க நாயகர் ஊசல் திருநாமம், திருவேங்கட மாலை, திருவேங்கடத்தந்தாதி, அழகர் அந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி), மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை (ப. ஆ.), சென்னை : ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், 1955.

புத்தமித்திரனார், வீரசோழியம் : பெருந்தேவனார் உரையுடன், கா. ர. கோவிந்தராச முதலியார் (ப. ஆ.), இரண்டாம் பதிப்பு, சென்னை : கழகம், 1970.

................................., வீரசோழியம் - ஒரு திறனாய்வு : மூலமும் கருத்தும், சென்னை, தமிழ்ப்புத்தகாலயம், 1977.

பெரும்பற்றப்புலியூர் நம்பி, திருவாலவாயுடையார் திருவிளை யாடற்புராணம், இரண்டாம் பதிப்பு, சென்னை, கேசரி அச்சுக்கூடம், 1927.

பொய்யாமொழிப்புலவர், தஞ்சைவாணன் கோவை, சொக்கப்ப நாவலர் உரை, மறுபதிப்பு, சென்னை : கழகம், 1955.

மணியன், இரா., அண்ணா கோவை, சென்னை: பாரி நிலையம், 1978.

மதிவாணன், இரா., (மொ.ஆ.), ஆந்திரநாட்டு அகநானூறு, (Translation of GATA SAPTA SATI) சென்னை: தாய்நாடு பதிப்பகம், 1978.

மாணிக்கவாசகர், திருக்கோவையார் என்னும் திருச்சிற்றம்பலக் கோவையார் (பழைய உரையுடன்), டி. சந்திரசேகரன், (ப.ஆ.), தஞ்சாவூர்: சரஸ்வதி மஹால், 1951.

| | |
|---|---|
| மீனாட்சி சுந்தரம் பிள்ளை, | **திருவாரூர்த் தியாகராச லீலை,** உ.வே. சாமிநாதையர் (ப.ஆ.), இரண்டாம் பதிப்பு, சென்னை: கேசரி அச்சுக்கூடம், 1928. |
| முத்துக் கணேசன், (உ. ஆ,) | **முத்தொள்ளாயிரம்,** மூன்றாம் பதிப்பு, சென்னை: பாரி நிலையம், 1965. |
| முத்துவீர உபாத்தியாயர், | **முத்துவீரியம்,** கு. சுந்தரமூர்த்தி (ப.ஆ.), சென்னை: கழகம், 1965. |
| முத்துவீரக் கவிராயர், | **சங்கர நாராயணசாமி கோயிற்புராணம்,** இரண்டாம் பதிப்பு, மதுரை: விவேகபாநு அச்சியந்திரசாலை, 1909. |
| முத்துவேங்கட சுப்பைய நாவலர், | **பிரபந்த தீபிகை,** ச.வே. சுப்பிரமணியன், அன்னிதாமசு (பதிப்பும் உரையும்), சென்னை: உ.த.ஆ.நி., 1982. |
| வீரமா முனிவர், | **தொன்னூல் விளக்கம்,** சென்னை: தமிழ்ப் பதிப்பகம், 1978. |
| ......................................, | **ஐந்திலக்கணத் தொன்னூல் விளக்கம்.** ஜி. மெக்கன்ஜி காமன் அய்யர், இரண்டாம் பதிப்பு, ?: ?, 1891. |
| வேங்கடசாமி நாட்டார், ந.மு., ர. வேங்கடாசலம் பிள்ளை, (உ.ஆ.), | **அகநானூறு** (நித்திலக்கோவை), சென்னை: கழகம், 1944. |
| ......................................, | **அகநானூறு** (மணிமிடைப்பவளம்), சென்னை: கழகம், 1944. |
| ......................................, | **அகநானூறு** (களிற்றியானைநிரை), மறுபதிப்பு, சென்னை: கழகம், 1962. |
| வேங்கடசாமி ரெட்டியார், கி. (ப.ஆ.), | **நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்,** இரண்டாம் பதிப்பு, சென்னை: திருவேங்கடத்தான் திருமன்றம், 1981. |

வேலச்சின்னோவையன், **வையாபுரிப் பள்ளு,** உடுமலை: கோபால் எலக்டிரிக் அச்சியந்திரசாலை, 1943.

வைத்தியநாத தேசிகர், திருவாரூர், **கப்பற்கோவை,** சென்னை: உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், 1958.

வையாபுரிப் பிள்ளை, எஸ்., **புறத்திரட்டு,** சென்னை: சர்வகலாசாலை, 1939.

................................., (தொகுப்பும் பதிப்பும்), **சங்க இலக்கியம்:** பாட்டும் தொகையும், இரண்டாம் பதிப்பு, சென்னை: பாரி நிலையம், 1967.

ஜகந்நாத ராஜா, மு.க., (மொ.ஆ.), **காதா சப்த சதி,** இராஜபாளையம், விசுவசாந்தி பதிப்பகம், 1981.

ஜகந்நாதன், ம., ''முத்துப் பாண்டித்தேவர் பேரில் திருமுருக விலாசம்'', பதிப்பாய்வேடு, சென்னை: உ.த.ஆ.நி., 1982.

? **அந்தாதி உரை நூற்கோவை,** சென்னை: கழகம், 1965.

? **சங்க இலக்கியங்கள்,** இரண்டாம் பதிப்பு, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1981.

? **நந்திக் கலம்பகம்,** இரண்டாம் பதிப்பு, சென்னை: அருணோதயம், 1968.

## 2. துணை நூல்கள்

அகத்தியலிங்கம், ச., **சங்கத்தமிழ்,** அண்ணாமலைநகர் : அனைத்திந்திய தமிழ் மொழியியற் கழகம், 1983.

................................., ''மடல்'', **கலைக்களஞ்சியம், தொகுதி 8,** சென்னை : தமிழ் வளர்ச்சிக் கழகம், 1961, பக். 48-49.

அழகப்பன், வெ. சு., ''வள்ளுவரும் அகத்துறையும்'', ஆ. கோ. 5, 1973, பக். 14-19.

அறவாணன், க. ப., **அற்றைநாள் காதலும் வீரமும்,** சென்னை : பாரி நிலையம், 1978.

இராசா, கி., **ஒப்பிலக்கிய நோக்கு,** மதுரை : பார்த்திபன் பதிப்பகம், 1986.

இராமகிருட்டிணன், அ., **அகத்திணை மாந்தர் - ஓர் ஆய்வு,** மதுரை : சர்வோதய இலக்கியப் பண்ணை, 1982.

இளவரசு, சோம., **இலக்கண வரலாறு,** ? : தொல்காப்பியர் நூலகம், 1963.

ஈஸ்வரபிள்ளை, தா., ''தமிழில் தூது இலக்கியங்கள்'', பிஎச். டி. ஆய்வேடு, கேரளப் பல்கலைக்கழகம், 1983.

கங்காதேவி, சி., ''சிலப்பதிகாரத்தில் அகம்'', எம்ஃபில். ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், 1983.

கைலாசபதி, க., **ஒப்பியல் இலக்கியம்,** மூன்றாம் பதிப்பு, சென்னை : சென்னை புக் ஹவுஸ், 1982.

கொழந்தைசாமி, ப., ''தமிழ்ப் புதுக்கவிதைகளில் அகப்பொருள் மரபுக் கூறுகள்'', எம். ஃபில். ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், 1985.

கோதண்டராமன், பொன்., ''தமிழிலக்கணக் கோட்பாடுகள்'' **உயராய்வு நூற்றாண்டு விழா சிறப்பு மலர்,** ந. சஞ்சீவி (ப.ஆ.). சென்னை: சென்னைப் பல்கலைக்கழகம், 1983. பக். 95-126.

சண்முகம் பிள்ளை, மு., **அகப்பொருள் மரபும் திறக்குறளும்,** சென்னை: சென்னைப் பல்கலைக் கழகம், 1980.

.........................................., **சிற்றிலக்கிய வளர்ச்சி,**
சென்னை: மணிவாசகர் நூலகம்,
1981.

.........................................., ''சிறு பிரபந்தங்கள்''
**தமிழ் இலக்கியக் கொள்கை-2,**
ச.வே. சுப்பிரமணியன்,
க.த. திருநாவுக்கரசு, (ப,ஆ.).
சென்னை: உ.த.ஆ.நி., 1976.
பக். 67-137.

சதாசிவ பண்டாரத்தார், தி.வை. **தமிழ் இலக்கிய வரலாறு: கி.பி. 250-கி.பி. 600,** நான்காம் பதிப்பு.
அண்ணாமலை நகர்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1977.

சிந்திகெயாள், ஜா., ''சூளாமணி - ஒரு பொருட்பகுப்பாய்வு'', எம். ஃபில். ஆய்வேடு,
கேரளப் பல்கலைக்கழகம், 1979.

சிவஞான சுவாமிகள், **தொல்காப்பியச் சூத்திர விருத்தி,**
**இலக்கண விளக்கச் சூறாவளி,**
ஆறுமுக நாவலர் (ப.ஆ.),
மூன்றாம் பதிப்பு, சென்னை: ?.
விரோதிகிருது.

சுந்தரமூர்த்தி, இ., ''கூடலிழைத்தல்'' ஆ.கோ. 4.
1972, பக். 124-129.

செயபாலன், சு., ''கண்ணதாசனின் கவிதைகளில்
அகப்பொருள் மரபுகள்'', எம்.ஃபில்.
ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்
கழகம், 1984.

செயராமன், நா., ''பரிபாடலில் அகப்பொருள் மரபு'',
ஆ.கோ. 11-1, 1979, பக். 354-359.

.........................................., ''காமத்துப்பாலும் அகப்பொருள்
மரபும்'', ஆ. கோ. 12-1, 1980,
பக். 322-327.

.........................................., **தமிழ் இலக்கிய நெறிகள்,**
மதுரை : குமரன் பதிப்பகம், 1979.

செயராமன், ந. வீ., **சிற்றிலக்கியச் செல்வம்,** இரண்டாம் பதிப்பு, சென்னை: மணிவாசகர் நூலகம், 1979,

ஞானசம்பந்தன், அ. ச., **இலக்கியக் கலை,** மறுபதிப்பு, சென்னை : கழகம், 1976.

திருநாவுக்கரசு, க. த., ''கல்லாடம்'', **தமிழ் இலக்கியக் கொள்கை-4,** சென்னை: உ.த.ஆ.நி., 1979, பக். பக். 41-80.

.................................., ''பதினெண்கீழ்க்கணக்கு'', **தமிழ் இலக்கியக்கொள்கை-1,** சென்னை : உ.த.ஆ.நி., 1975, பக். 3-22.

நலங்கிள்ளி, அரங்க., ''பாட்டியல்கள் - ஓர் ஒப்பாய்வு'', பிஎச். டி. ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், 1983.

நவநீதகிருட்டிணன், மா., ''ஆழ்வார்கள் பாடல்களில் அகம்'', பிஎச். டி. ஆய்வேடு, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், 1984.

நாராயணவேலுப்பிள்ளை, எம்., **பிரபந்தக் காட்சிகள்,** சென்னை : கவிதா பப்ளிகேஷன், 1982.

பாஸ்கரதாஸ், ஈ. கோ., **அகப்பொருள் பாடல்களில் தலைவி,** சென்னை : தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், 1982.

பிரபாவதி பிரின்ஸில்லா சினேகபாய், ஆர்., ''பெரியபுராணத்தில் இயற்கை வருணனைக் கூறுகள்'', எம். ஃபில். ஆய்வேடு, கேரளப் பல்கலைக் கழகம், 1980.

பெல்லாபிலாமின், ஜே., ''நந்திக் கலம்பகம் - அகப்பொருள் ஆய்வு'', எம்.ஃபில். ஆய்வேடு, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், 1980.

மணவாளன், அ.அ., ''சங்க இலக்கியம்'' **தமிழ் இலக்கியக் கொள்கை 1,** சென்னை: உ.த.ஆ.நி., 1975, பக். 3-22.

……………………………………, ''திருக்குறள் காமத்துப்பால் அகப்பொருள் இலக்கியமா?'', **ஆ. கோ. 16-1,** 1984, பக். 405-410.

……………………………………, ''அகப்பொருளிலக்கியத்தின் மறுமலர்ச்சிக் காலம்'', **ஆ. கோ. 17-1,** 1985, பக். 422-427.

மாணிக்கம், வ.சுப., **தமிழ்க்காதல்,** சென்னை: பாரி நிலையம், 1962.

மாணிக்கவாசகம், இரா., **திரு அருட்பா ஆராய்ச்சி,** சென்னை: அன்னை அபிராமி அருள், 1985.

முத்தரசு, ந., ''திருக்குறளில் அகப்பாட்டு மரபு'', முதுகலைப் பொருட் கட்டுரை, கேரளப் பல்கலைக்கழகம், 1976.

மோகனராசு, கு., **தொல்காப்பியமும் திருக்குறளும் : ஓர் ஒப்பாய்வு,** சென்னை: சென்னைப் பல்கலைக் கழகம், 1986.

ரத்தினம், க., ''சங்க அகப்பாடல்களில் கூற்று'', பிஎச். டி. ஆய்வேடு, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், 1976.

வரதராசன், மு., ''தமிழிலக்கியத் திறனாய்வு'', உலகத் தமிழ் மாநாடு விழா மலர்: இலக்கியப் பகுதி, 1968.

வேலுப்பிள்ளை, ஆ., **தமிழர் சமய வரலாறு,** சென்னை: பாரி நிலையம், 1980.

வையாபுரிப்பிள்ளை, எஸ்., **இலக்கியதீபம்,** சென்னை: பாரி நிலையம், 1952.

……………………………………, **இலக்கிய உதயம் :** இரண்டாம் பகுதி, சென்னை: தமிழ்ப்புத்தகாலயம், 1952.

?, சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள், நான்காவது மாநாடு, சென்னை: கழகம், 1961.

Damodaran, G., THE LITERARY VALUE OF TIRUVAYMOLI, rpt. : Tirupati : Sri Vanketeswarar University, 1979.

Gloria Sundaramuthy, L., "Kovai", LITERARY HERITAGE OF THE TAMILS, ed. S. V. Subramanian & N .Ghadigachalam, Adaiyar :I.I.T.S. 1981.

Heather Dubrow, GENRE London : Mathuen & Co., Ltd., 1982.

Manavalan, A. A., "The life, Influence and death of a Tamil Genre" U. G. C. Seminar on Comparative Literature, Madurai Kamaraj University, May 15, 1986.

Narasimhachary, M., "The Bhakta (Consort) - Bhagavan Relationship according to Sri Ramaunja's Sampradaya" Bhakta - Bhagavan relationship Conference, Nov. 23-25, 1985.

Periyakaruppan, RM., (Tamillannal) TRADITION AND TALENT IN CANKAM POETRY, Madurai, Madurai Publishing house, 1976.

Rajam Ramamurti, "On the poetic convention of identifying people by name in Cankam Literature", proceeding of the fifth International conference - Seminar of Tamil Studies, Madurai, Jan. 1981.

Ralph Cohen, ed., NEW DIRECTIONS IN LITERARY HISTORY, London : Routledge & Kegan Paul, 1974.

Zvelebil, Kamil, "The Term 'Tamil', INTERNATIONAL JOURNAL OF DRAVIDIAN LINGUISTICS, Vol. XV, No. 1, Tiruvandrum : Dravidian Linguistics Association, Jan. 1986.

## 3. ஆய்வுக்குப் பயன்பட்ட நூல்கள்

அமிர்தகௌரி, ஆ., "சங்க இலக்கியத்தில் உரையாடல்" பிஎச்.டி. ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், 1986.

அரவிந்தன், மு.வை., **உரையாசிரியர்கள்,** இரண்டாம் பதிப்பு, சிதம்பரம்: மணிவாசகர் நூலகம், 1977.

அருணாசலம், மு., **தமிழ் இலக்கிய வரலாறு,**
9ஆம் நூற்றாண்டு 1975
10ஆம் நூற்றாண்டு 1972
11ஆம் நூற்றாண்டு 1973
14ஆம் நூற்றாண்டு 1969
15ஆம் நூற்றாண்டு 1969
16ஆம் நூற்றாண்டு 1976
திருச்சிற்றம்பலம்: காந்தி வித்தியாலயம்.

அருணாசலம், ப., **பக்தி இலக்கியம்,** சென்னை: தமிழ்ப்புத்தகாலயம், 1973.

அருள்மொழி, பா., "திருக்கோவையாரில் மடலேற்றம்", ஆ.கோ. 18-1, 1986. பக். 19-24.

அழகப்பன், வெ.சு., "பதினோராந் திருமுறைத்திறன்", பிஎச்.டி. ஆய்வேடு, மதுரை காமராசர் பல்கலைக்கழகம். 1981.

அறவாளன், சு.ப., "உடன்போக்கு", ஆ. கோ. 9-1, மதுரை : மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைச் சார்பு வெளியீடு, 1977, பக். 30-32.

ஆறுமுகம், நா., **கலித்தொகை – ஓர் ஆழ்வாய்வு,** சென்னை ; பாரி நிலையம், 1985.

இந்திரபவாநி, வ.., ''ஆந்திரநாட்டு அகநானூற்றில் முல்லை'', **ஆ. கோ. 12-1,** 1980, பக். 52-57.

இந்திராமனுவேல், ''பக்தி இலக்கியங்களில் அகக் கோட்பாடு'', **ஆ. கோ. 11-4,** ஹைதராபாத் : உஸ்மானியா பல்கலைக்கழகம், 1979, பக். 84-89.

................................., ''அக இலக்கண வரலாற்றில் வீரசோழிய உரைச் சூத்திரங்கள் பெரும் பங்கு'', **ஆ. கோ. 10-2.** கோயமுத்தூர் : தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், 1978, பக். 39-43.

இராசமாணிக்கனார், மா., **பத்துப்பாட்டு ஆராய்ச்சி,** சென்னை : சென்னைப் பல்கலைக் கழகம், 1970.

................................., **பெரியபுராண ஆராய்ச்சி,** மூன்றாம் பதிப்பு, சென்னை : பாரி நிலையம், 1978.

இலக்குவனார், சி., **தொல்காப்பிய ஆராய்ச்சி,** புதுக்கோட்டை : வள்ளுவர் பதிப்பகம், 1961.

இளஞ்சேரன், கோவை., **முத்துக்கோவை,** திருச்சி : தமிழகப் புலவர் குழு, 1981.

கந்தசாமி, சோ.நா., **குறுந்தொகைத் திறனாய்வு,** அண்ணாமலைநகர் : அபிராமி பதிப்பகம், 1972.

கந்தையா பிள்ளை, ந.சி., **தமிழ் இலக்கிய அகராதி,** சென்னை : கழகம், 1952.

................................., **தமிழ் புலவர் அகராதி,** சென்னை: ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், 1960.

கனகரத்தினம், அ., ''பத்துப்பாட்டில் அகப்பொருள்'', எம்.ஃபில். ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், 1983.

காளிமுத்து, கா., **தொல்காப்பிய இலக்கியக் கொள்கைகளும் குறுந்தொகையும்**, சென்னை: பூம்புகார் பிரதர்ஸ், 1983.

குப்புசாமி, த. சு., ''சங்க அகப்பாடல்களும் இந்தி ரீதிப் பாடல்களும் சில துறை விளக்க மரபுகள்'', **புலமை**, தொகுதி 7 - பகுதி 1, 1981, பக். 1-23.

குருசாமி, ம. ரா. போ., **தமிழ் நூல்களில் குறிப்புப் பொருள்**, சென்னை : தமிழ்ப் புத்தகாலயம், 1980.

குளோறியா சுந்தரமதி, இலா. (மொ. ஆ.), **இலக்கியக் கொள்கை**, ரெனி வெல்லாக் ஆஸ்டின் வாரன், சென்னை : பாரி நிலையம், 1960.

.................................., **சங்க இலக்கியம் மருதம்**, திருவனந்தபுரம் : கேரளப் பல்கலைக் கழகம், 1973.

.................................., ''அகப்பாடல்களில் உட்கூற்று அல்லது கொண்டுரைக்கும் முறை'', **ஆ. கோ. 15-1**, 1983, பக். 244-248.

.................................., ''சங்க அகப்பாடல்களில் பொருந்தும் சில வெளியீட்டு மரபுகள்'', **ஆ. கோ. 7-1**, 1975, பக். 101-106.

கேசவமூர்த்தி, அ., ''தொல்காப்பியமும் வள்ளுவர் காமத்துப்பாலும்'', **ஆ. கோ. 17-1**, 1985, பக். 185-190.

கோதண்டபாணி பிள்ளை, கே., **நெடுநல்வாடை**, (திறன் ஆய்ந்து தெளிதல்), இரண்டாம் பதிப்பு, சென்னை : சென்னைத் தமிழ்ச் சங்கம், 1946.

கோவிந்தராசன், சி., ''தணிகைப்புராணமும் பொருளதிகாரமும்'', **ஆ. கோ. 3-17,** *1985, பக். 230-235.*

சச்சிதானந்தம், வை., **ஒப்பிலக்கியம் (ஓர் அறிமுகம்),** டெல்லி ; ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம், *1985.*

சஞ்சீவி, ந. (ப. ஆ.), **தெய்வத்தமிழ்,** சென்னை: சென்னைப் பல்கலைக் கழகம், *1975.*

……………………………………, **சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள்,** சென்னை: சென்னைப் பல்கலைக் கழகம், *1973.*

சத்யவதி, சு., ''பாரதிதாசன் பாடல்களில் அகம்'' எம்.ஃபில். ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், *1983.*

சதாசிவப் பண்டாரத்தார், தி.வை., **தமிழ் இலக்கிய வரலாறு:** *13, 14,* *15*ஆம் நூற்றாண்டுகள், நான்காம் பதிப்பு, அண்ணாமலை நகர்; அண்ணாமலைப் பல்கலைக் கழகம், *1977.*

சந்தியா, கோ., ''பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அகம்'', எம்.ஃபில். ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், *1983.*

சபாபதி நாவலர், **திராவிடப் பிரகாசிகை என்னும் தமிழ் வரலாறு,** சென்னை: கழகம், *1960*

சற்குணம், மா., ''திருக்குறளில் உள்ளுறையும் இறைச்சியும்'', **ஆ. கோ. 18-2,** *1986, பக். 91-94.*

சிங்காரவேலு, மு., ''இறையனார் அகப்பொருளின் அகத்திணை மரபுகள்'', எம்.ஃபில். ஆய்வேடு, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், *1978.*

சிவலிங்கனார், ஆ., தொல்காப்பியம் கூறும் உள்ளுறையும் இறைச்சியும், சென்னை: உலகத் தமிழ்க்கல்வி இயக்கம், 1985.

சுசீலா, எம்.ஏ., ''மடல் இலக்கியத்தில் மரபு மாற்றம்'', ஆ. கோ. 12-1, 1980, பக். 304-309.

................................., ''சங்க அக இலக்கியத்தில் வெறியாட்டு'', ஆ. கோ. 10-1, 1978, பக். 297-302.

சுப்பிரமணியன், ச.வே., இலக்கியக் கனவுகள், இரண்டாம் பதிப்பு, சென்னை: தமிழ்ப் பதிப்பகம், 1979.

................................. தமிழ் இலக்கிய வகையும் வடிவும், சென்னை: தமிழ்ப் பதிப்பகம், 1984.

சுப்பிரமணியன், ச.வே., தா.வே. வீராசாமி,(ப.ஆ.), தமிழ் இலக்கியக் கொள்கை-1, சென்னை: உ.த.ஆ.நி., 1975.

சுப்பிரமணியன், ச.வே., க.த. திருநாவுக்கரசு, (ப.ஆ.), தமிழ் இலக்கியக் கொள்கை-2, சென்னை: உ.த.ஆ.நி., 1976.

சுப்பிரமணியன், ச.வே., ? (ப.ஆ.), தமிழ் இலக்கியக் கொள்கை-4, சென்னை: உ.த.ஆ.நி., 1979.

சுப்பிரமணியன், ச.வே., ந. கடிகாசலம், தமிழ் இலக்கியக் கொள்கை-6, சென்னை: உ.த.ஆ.நி., 1981.

சுப்பிரமணியன், ச.வே., ர. விஜயலட்சுமி (ப.ஆ.), தமிழ் இலக்கியக் கொள்கை-7, சென்னை: உ.த,ஆ.நி., 1982.

சுப்பிரமணியன், ச.வே., கே. பகவதி (ப.ஆ.), தமிழ் இலக்கியக் கொள்கை-8, சென்னை: உ.த.ஆ.நி., 1983.

சுப்புரெட்டியார், ந., அகத்திணைக் கொள்கைகள், சென்னை: பாரி நிலையம், 1981.

.............................................., **சில நோக்கில் நாலாயிரம்,**
*சென்னை: பாரி நிலையம், 1983.*

*செயராமன், ந.வீ.,* **சிற்றிலக்கிய அகராதி,**
*சென்னை: பாரி நிலையம், 1983.*

.............................................., **சிற்றிலக்கியப் புலவர் அகராதி,**
*சென்னை: பாரி நிலையம், 1983.*

*செயராமன், நா.,* *''கானல் வரியும் அகப்பொருள் மரபும்'',* **ஆ:கோ. 15-1,**
*1983, பக். 371-376.*

*செல்லப்பன், சிலம்பொலி,* **பெருங்கதை ஆராய்ச்சி,**
*சென்னை: அருணோதயம், 1976.*

*சோமசுந்தர பாரதியார், சி.,* **தொல்காப்பியர் பொருட்படலப் புத்துரை :**
*அகத்திணையியல்,*
*திருத்திய பதிப்பு, மதுரை: நாவலர் புத்தக நிலையம், 1972.*

.............................................., **தொல்காப்பியர் பொருட்படலம் புத்துறை:**
*மெய்ப்பாட்டியல்,*
*இரண்டாம் பதிப்பு, மதுரை :*
*நாவலர் புத்தக நிலையம், 1975.*

*தமிழ்த்துறை ஆசிரியர்கள்,* **தொல்காப்பியச் சிந்தனைகள்.**
*அண்ணாமலைநகர்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1978.*

.............................................., **இலக்கணச் சிந்தனைகள்,**
*அண்ணாமலைநகர்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1979.*

*தமிழ்ப் பல்கலைக்கழகம்,* **சங்க இலக்கியக் கட்டுரைகள்,**
*தஞ்சாவூர் : தமிழ்ப் பல்கலைக் கழகம், 1984.*

*தமிழண்ணல், (இராம. பெரியகருப்பன்),* **இலக்கியத்தின் இன்பச்சுவை,**
*காரைக்குடி : செல்வி பதிப்பகம், 1956.*

................................., **ஒப்பிலக்கிய அறிமுகம்,** *மதுரை : மீனாட்சி புத்தக நிலையம், 1973.*

................................., **குறிஞ்சிப்பாட்டு - இலக்கியத் திறனாய்வு விளக்கம்,** *சென்னை : பாரி நிலையம், 1961.*

................................., **சங்க இலக்கிய ஒப்பீட்டு இலக்கியக் கொள்கைகள்,** *மதுரை : மீனாட்சி புத்தக நிலையம், 1979.*

................................., **பிறை தொழும் பெண்கள்: இராவாண்டைப் பாட்டு,** *மதுரை : மீனாட்சி புத்தக நிலையம், 1975.*

................................., **புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு,** *மதுரை: மீனாட்சி புத்தக நிலையம், 1984.*

**நலங்கிள்ளி, அ.,** *''பக்தி இலக்கியத்தில் அகப்பொருள் மரபுகள்'',* **ஆ.கோ. 14-1,** *1982, பக். 380-384.*

*நாராயணவேலுப் பிள்ளை, எம்.,* **அகப்பொருளும் புறப்பொருளும்,** *சென்னை; வள்ளுவர் பிரசுரம், 1981.*

*பாரதிதாசன்,* **பாரதிதாசன் கவிதைகள்,** *21-ஆம் பதிப்பு, சென்னை: பாரி நிலையம், 1975.*

**பாலசுப்பிரமணியன், சி.,** **தமிழ் இலக்கிய வரலாறு,** *18-ஆம் பதிப்பு, சென்னை: நறுமலர்ப் பதிப்பகம், 1985.*

................................., **நெஞ்சின் நினைவுகள்,** *சென்னை: நறுமலர்ப் பதிப்பகம், 1980.*

*பாஸ்கரதாஸ், ஈ.கோ.,* **அகப்பொருள் பாடல்களில் தோழி,** *கோவை: திருமனை, 1979.*

பிரேமா, மா., "பட்டினத்தார் பாடல்கள் —ஓர் ஆய்வு", எம்.ஃபில். ஆய்வேடு, கேரளப் பல்கலைக்கழகம், 1978.

மகாதேவன், கதிர்., **ஒப்பிலக்கிய நோக்கில் சங்ககாலம்,** மதுரை: சர்வோதய இலக்கியப் பண்ணை, 1975.

மணிவேல், மு., "சிற்றிலக்கியங்களில் அகப்பொருள் கலப்பும் வளர்ச்சியும்", **ஆ. கோ. 14-1**, 1982, பக். 482-488.

.................................... "கலம்பக இலக்கியத்தில் அகப்பொருள்", **ஆ. கோ. 16-1**, 1984, பக். 411-416.

.................................... "தொல்காப்பியர் கருதும் கைக்கிளை மாந்தர்", **ஆ. கோ. 9-1**, 1977, பக். 400-404.

மலைச்சாமி, சி., "இறையனார் அகப்பொருளுரை திருக்கோவையார் ஒப்புநோக்கு", **ஆ.கோ, 19-1**, 1987, பக். 868-872.

மறைமலை, இ., **இலக்கியக் கொள்கைகள்,** சென்னை: நீலமலர் வெளியீட்டகம், 1976.

மறைமலையடிகள், **பட்டினத்துப் பாலை ஆராய்ச்சியுரை,** மூன்றாம் பதிப்பு, ? : ? , 1906.

...................................., **முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை,** ஐந்தாம் பதிப்பு, சென்னை : கழகம், 1958.

மாரியப்பன், எஸ்., "தணிகைப் புராணம் களவுப்படலத்தில் அகப்பொருள் மரபுகள்", எம்.ஃபில். ஆய்வேடு, மதுரை: காமராசர் பல்கலைக்கழகம், 1985.

மீனாட்சிசுந்தரனார், தெ. பொ., **கானல் வரி,** இரண்டாம் பதிப்பு, மதுரை : சர்வோதய இலக்கியப் பண்ணை, 1978.

முத்தப்பன், பழ., **திருமுறைகளில் அகக் கோட்பாடு,** மயிலம் : மீனாட்சி நூலகம், 1986.

முத்துசாமி ஐயர், வே., **அகத்துறை எழுபது,** அரங்கநாதபுரம் : பாலகவிமுத்து, கோ. இராமன் வெளியீடு, 1961.

முத்துராசன், கு., ''திருமங்கையாழ்வாரின் சிறிய திருமடல்'', **ஆ. கோ. 13-1,** 1981, பக். 484-488.

முத்து வீரப்பன், பழ., **தொல்காப்பியரும் பாரதிதாசனும்,** அண்ணாமலைநகர் : உமையாள் பதிப்பகம், 1981.

முத்தையா, சொ., ''83, 84, 85ஆம் புறப்பாடல்கள் அகத்திணையா, புறத்திணையா? பகுப்பாய்வு பற்றி ஓராய்வு'' **ஆ. கோ. 13-1,** 1981, பக். 495-500.

................................., ''நந்திக் கலம்பகம் - ஓர் அவைப் பாடல்'', **ஆ. கோ. 18-1,** 1986, பக். 566-570.

................................., ''பாண்டிக்கோவை - ஓர் அவைப் பாடல்'', **ஆ. கோ. 17-1,** 1985, பக். 474-479.

மோகனராசு, கு., **திருக்குறளில் மரபுகள்,** சென்னை : சென்னைப் பல்கலைக் கழகம், 1981.

ராகுல சாங்கிருத்தியாயன், **இஸ்லாமிய தத்துவ இயல்,** ஏ. ஜி. எத்திரர்ஜுலு (மொழி.), சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 1985.

வசந்தாள், த., ''காதா சப்த சதி - அகப்பொருள் இலக்கியமா?'', **ஆ. கோ. 17-1,** 1985, பக். 504-510.

.................................................., ''அகப்பொருள் மரபும் முத்தொள்ளாயிரமும்'', **ஆ. கோ. 18-1,** *1986, பக். 614-619.*

.................................................., ''பெரிய திருமடலில் திருமங்கை யாழ்வார் சுட்டும் 'மன்னும் வடநெறி' எது''? **ஆ. கோ. 19-4,** *1987, பக். 316-321.*

வண்ணமுத்து, மா., **அம்மூவனார் பாடல்கள் ஓர் ஆய்வு,** மதுரை : சோலை நூலக வெளியீடு, *1976.*

வரதராசன், மு., **தமிழ் இலக்கிய வரலாறு,** மூன்றாம் பதிப்பு, புதுதில்லி: சாகித்திய அக்காதெமி, *1978,*

.................................................., **இலக்கிய மரபு,** இரண்டாம் பதிப்பு, சென்னை : பாரி நிலையம், *1968.*

விநாயகம் பெருமாள், வ., ''அனிச்ச அடி நாடகத்தில் சங்க இலக்கியக் கூறுபாடுகள்'' **ஆ. கோ. 9-1,** *1977, பக். 461-466.*

வேங்கடசாமி, மயிலை சீனி., **மறைந்து போன தமிழ் நூல்கள்,** இரண்டாம் பதிப்பு, சென்னை : தமிழ்ப் புத்தகாலயம், *1967.*

வேலுப்பிள்ளை, ஆ., **தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்,** சென்னை : தமிழ்ப் புத்தகாலயம், *1969.*

? . **சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள்,**
முதலாவது மாநாடு, *1958*
மூன்றாவது மாநாடு, *1960*
ஐந்தாவது மாநாடு, *1962*
ஆறாவது மாநாடு, *1964*
சென்னை : கழகம்.

American Studies Research Centre, THE MLA STYLE SHEET Second ed., Hyderabad: American Studies Research Centre, 1970.

Bateson, F.W., THE SCHOLAR-CRITIC : AN INTRODUCTION TO LITERARY RESEARCH London : Routledge Kegan Paul, 1972.

Bradley, A.C., OXFORD LECTURES ON POETRY 12th ed., London : Macmillan and Co., 1950.

Fowler, Roger., THE LANGUAGE OF LITERATURE, London : Routledge and Kegan Paul, 1971.

Gloria Sundamathy, L., "Evaluation and Evolution of Sangam Literature" Ph. D. Thesis, Kerala University, 1978.

Hudson, W.H., AN INTRODUCTION TO THE STUDY OF LITERATURE, 7th Indian ed , Delhi : Kalyani Publishers, 1976.

Indra Manuel, "Literary Theories in Tamil with special reference to Tolkappiyam" Ph.D. Thesis, Kerala University, 1984.

James Thrope, ed., THE AIMS AND METHODS OF SCHOLARSHIP IN MODERN LANGUAGES AND LITERATURES, Second ed., Hyderabad : American Studies Research Centre, 1979.

Kailasapathy, K., TAMIL HEROIC POETRY, Oxford : Clarendon Press, 1968.

Kothari, C.R., RESEARCH METHODOLOGY (Methods and Techniques), Madras : Willey Eastern Limited, 1985.

Krishnaswamy Iyer, P.S. trans., SRIMAD VALMIKI RAMAYANA YUDDHA KANDAM, VOL. VI, PART V, M.N. Ramaswami Iyer, ed., Second ed., Madras : Ramayana Publishing House, 1961.

Manavalan, A.A., MUTUAL FLAMES, Madras: Tamil Puthakalayam, 1977.

Manickam, V.Sp., COLLECTED PAPERS, Madras : Paari Nilayam, 1978.

Manickam. V.T., MARUTAM : AN ASPECT OF LOVE IN TAMIL LITERATURE, Karaikkudi : Tema Pbulishers, 1982.

Meenakshisundaram, T.P., TAMIL - A BIRD'S EYE VIEW, Madurai : Makkal Nalvaalvu Manram, 1976.

Mohamed Sahabdeen, A.M., THE SUFI DOCTORINE IN TAMIL LITERATURE, Srilanka : Abdul Majeed Mohamed Sahabdeen Foundation, 1986.

Nagu, R.K., PALAI THINAI IN SANGAM LITERATURE, Madras : Aniyakam, 1981.

Prabakara Variar, INTRODUCTION TO RESEARCH THEORY, Madras : Pulamai Publications, 1982.

Purnalingampillai, M.S., — TAMIL LITERATURE, Thanjavur : Tamil University, 1985.

Richards, I.A., — PRINCIPLES OF LITERARY CRITICISM, London : Routledge And Kegan Paul, 1976.

Sarangapani, R., — A CRITICAL STUDY OF PARIPATAL, Madurai : Madurai Kamaraj University, 1984.

Scott, Wilber, S., — SKILLS OF POET, London : Harber & Row Publishers, 1977.

Siegfried Lienhard, — "Akapporul and Sanskrit Muktaka Poetry," Proceedings of the III International Conference Seminar, Paris, 1970, pp. 111-118.

Srinivasa Iyengar, P., — HISTORY OF THE TAMILS, (From the earlier times to 600 A.D.), New Delhi : Asia Educational Services, 1982.

Srinivasa Aiyankar, M., — TAMIL STUDIES, New Delhi : Asian Educational Services, 1982.

Subramanian, S.V., et.al.. — PAPERS ON TAMIL STUDIES, Madras : I.I·T.S., 1980.

Subramanian, N., — HISTORICAL RESEARCH METHODOLOGY, Madras : Ennes Publications, 1980.

Subramanian, S. V., Ghadigachalam, N., eds., — LITERARY HERITAGE OF THE TAMILS, Madras : I.I.T.S., 1981.

Sundaramoorthy, G., EARLY LITERARY THEORIES IN TAMIL : IN COMPARISION WITH SANSKRIT THEORIES, Madurai : Sarvodaya Ilakkiyapannai, 1974.

Thani Nayagam, xaviers, NATURE IN ANCIENT TAMIL POETRY, Tuticorin : Tamil Literature Society, 1953.

.........................................., NATURE POETRY IN TAMIL : THE CLASSICAL POETRY, Singapore : Dewan Bahasadan Kebudayeen Kebargsaan, 1963.

Varadarajan, M., THE TREATMENT OF NATURE IN SANGAM LITERATURE, Madras: Kazhagam, 1957.

Zvelebil, V. Kamil., LITERARY CONVENTIONS IN AKAM POETRY, Madras : Institute of Asian Studies, 1986.

Ales Preminger, ed , PRINCETON ENCYCLOPEDIA OF POETRY AND POETICS, London : The Macmillan Press Ltd., 1975.

Bergan Evans, DICTIONARY OF QUOTATIONS, New York : Avenel Books, 1978.

Joseph T. Shipley, ed., DICTIONARY OF WORLD LITERARY TERMS, London : George Allen & Unwin Ltd., 1970.

# பொருட்குறிப்பு அகராதி


அ

அகத்திணை 11, 12, 14, 15, 26, 42, 55, 110, 111, 122, 129, 144, 149
அகத்திணைக் கோட்பாடுகள் 2, 58
அகத்திற்குரிய மெய்ப்பாடு 25
அகநானூறு 58, 113, 159, 184, 275, 295
அகப்புறக் கைக்கிளை 40, 55 143, 164
அகப்புறப் பெருந்திணை 39, 40, 55, 217
அகப்புறம் 31, 33, 38, 55
அகப்பொருட் பெருந்திணை 39 40, 55, 217
அகப்பொருள் 1-3, 7, 8, 11, 12, 33, 35, 37, 38, 58, 118, 129, 149, 225, 345, 346, 351, 355, 366, 367
அகம் 55, 119, 120, 129, 141, 190
அகமாந்தர்கள் 27, 36, 42
அசுரம் 54, 110
அண்ணா கோவை 186
அம்பலவாணர் தேசிகர் கலம்பகம் 158, 189
அம்பிகாபதிக் கோவை 145, 151, 182, 197, 232
அரிச்சந்திர புராணம் 127, 259
அல்ல குறிப்படுதல் 21
அல்ல கூற்றுமொழி 21
அழகரந்தாதி 174, 221, 287
அறத்தொடு நிற்றல் 2, 142 170-176
அறுவகை இலக்கணம் 2, 7 52-53, 56, 365
அன்பு தலைப்பிரிந்த கிளவி 23
அனிச்ச அடி 158, 166, 176, 186, 233, 294, 300

ஆ

ஆண்பாற் கூற்றுக் கைக்கிளை 31
ஆந்திர நாட்டு அகநானூறு 358
ஆரிடம் 54, 110
ஆரிய மணம் 110, 111
ஆளுடைய பிள்ளையார் திருக் கலம்பகம் 173, 182, 266, 272 287, 291, 293
ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை 258, 266 272, 287, 291, 293
ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி 173, 182, 193, 266, 272, 277, 287, 291, 293, 295, 300

இ

இசையமுது 162, 180, 181, 269
இரங்கல் 107
இரட்சணிய யாத்திரிகம் 223, 227
இரண்டு தலைவன் 44
இராக்கதம் 54 110
இராசராசசேதுபதி ஒரு துறைக் கோவை 152

இராவணகாவியம் 129, 132, 181, 233
இருத்தல் 107
இருபாற்பெருந்திணை 32
இலக்கண விளக்கம் 2, 7, 49-50, 56, 365
இலக்கியவகை 1-3, 34, 54, 122, 165, 343-347
இற்செறித்தல் 2, 142, 163-166
இறைச்சி 13, 58
இறையனாரகப்பொருள் 2, 7, 26-30, 35, 37, 46, 47, 55-57, 225, 365

உ

உடன்போக்கு 2, 142, 176-181
உரிப்பொருள் (உரி) 13, 14, 108, 109, 116, 122, 129, 155, 158, 365
உள்ளுறை 12, 58

ஊ

ஊடல் 107

எ

எண்வகை மணம் 54
எழுதிணை 11, 108

ஏ

ஏறுதழுவுதல் 2, 142, 181-182

ஐ

ஐங்குறுநூறு 58, 112, 130, 131, 150, 151, 153, 154, 156, 275
ஐந்திணை 2, 26, 37, 39, 108 110
ஐந்திணை எழுபது 120
ஐந்திணை ஐம்பது 118, 120, 275, 299
ஐயக்கிளவி 19
ஐயம் 2, 142, 146-148
ஐவகைத் திணை 54

ஒ

ஒப்பு 18
ஒன்பதாம் திருமுறை 214, 226

க

கச்சிக் கலம்பகம் 180, 185, 189, 233
கண்ணதாசன் கவிதைகள் 130, 260, 274
கந்தபுராணம் 161, 175, 179, 180, 219, 227, 233, 294-296, 300
கம்ப இராமாயணம் 144, 197
கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி 193, 277
கருப்பொருள்(கரு) 13, 14, 55 58, 108, 109, 115, 119
கல்லாடம் 122, 258, 356, 366
கல்வளையந்தாதி 155, 189 235, 259, 266, 272, 287, 295, 297, 298
கலிங்கத்துப்பரணி 197
கலித்தொகை 113, 121, 150, 154, 156, 159, 171, 182, 198, 203, 233, 284, 290, 297, 345
களஞ்சுட்டுக்கிளவி 22
களவழி நாற்பது 344
களவியல் 42
களவியற்காரிகை 2, 7, 46-47 218, 219, 226, 365

களவிற்குரியன 51
கற்பியல் 41
கற்பிற்குரியன 51
கன்னிவாடி நரசிங்கப்ப நாயக்கன் வளமடல் 222, 227

கா

காஞ்சி 111
காட்சி 2, 142-146
காதல் 145, 147
காதல் பாடல்கள் 130, 274
காதா சப்தசதி 211, 358
காந்தருவம் 54, 110
காமத்துப்பால் 354
காமமிக்க கழிபடர்கிளவி 2, 142, 182-187
கார் நாற்பது 120, 121, 131, 298

கி

கிழத்திக்கு இல்லாதன 29
கிழவோர்க்கு இல்லாதன 29
கிழவோற்குரியன 28
கிழவோன் சேர்தல் இன்மை 22

கு

குருவாயூரப்பன் இருதுறைக் கோவை 152
குற்றிசை 33 40
குறவஞ்சி 145 147
குறிஞ்சி 12, 51, 52, 108, 109, 119, 122, 124, 125, 128, 204,
குறிஞ்சிப்பாட்டு 113, 171, 256
குறிப்பறிதல் 2, 142, 149-150
குறியிடங் கூறல் 2, 142, 158-163
குறுங்கலி 33, 40
குறுந்தொகை 58, 112, 154, 156, 159, 184, 202, 224, 275, 285

கூ

கூடலிழைத்தல் 2, 142, 196-198
கூற்று 2, 16, 34, 57, 255,
கூற்றுக்குரிமையற்றோர் 17, 256
கூற்றுக்குரிய மாந்தர்கள் 48
கூற்றுக்குரியர் 2, 3, 36, 255
கூற்று நிகழ்த்துவோர் 255
தோழி 256-260
தலைவி 256, 261-270
தலைவன் 256, 270-274
நற்றாய் 256, 274-284
செவிலி 256, 284-288
கண்டோர் 256, 288-291

கே

கேட்போர் 291
தலைவன் 293-294
தலைவி 294-296
தோழி 296-297
பாங்கன் 297-298
பாகன் 298-299
பாணன் 299
செவிலி 299-300
தாய் 300-301
கண்டோர் 301-302

கை

கைக்கிளை 31, 33, 35, 38, 39, 43, 55, 58, 109, 110-115, 121, 204, 206, 366

கைகோள் 14, 27, 35, 41, 47, 56 57, 255
கைந்நிலை 120, 131, 299
கையறுகிளவி 24
கையுறை 2, 142, 156-158

கோ

கோடீசுரக் கோவை 175
கோயில்நான்மணிமாலை 173, 193, 259, 266, 272, 277, 287, 297

சி

சித்திரமடல் 146, 219, 234, 273
சிலப்பதிகாரம் 125, 155, 167, 172, 184, 233, 258, 263, 296, 297, 366
சிறியதிருமடல் 209, 225

சீ

சீவக சிந்தாமணி 123, 147, 174, 184, 197, 213, 225, 344

சு

சுவாமிநாதம் 27, 52, 56

சூ

சூளாமணி 124, 125, 132, 134

செ

செண்பகராமன் பள்ளு 279
செய்யுளுறுப்புக்கள் 10

த

தஞ்சைவாணன் கோவை 145, 197
தண்டிகைக் கனகராயன் பள்ளு 129
தணிகைக் கலம்பகம் 158, 185, 185, 189
தணிகைப் புராணம் 128, 176, 219, 227, 232, 366
தந்திவனப் புராணம் 193
தமிழ் நெறி விளக்கம் 2, 7, 34-36, 46, 47, 55, 57, 212, 225
தலைமக்கட்கு ஆகாதன 18
தலைவனுக்குரியன 18
தலைவிக்குரியன 21
தற்புகழ் கிளவி 19 22
தனிக்கவித்திரட்டு 190
தனிச் செய்யுட் சிந்தாமணி 169
தனிப்பாடல் திரட்டு 152, 169, 170, 180, 234, 267, 280, 281, 284, 288

தி

திணை 2, 13, 14. 26, 34, 37, 46, 48, 51, 52, 55, 107, 112, 119, 121
திணைக் கோட்பாடு 111, 115, 130
திணைமயக்கம் 14, 126
திணைமாலை நூற்றைம்பது 120, 121, 149, 157, 178, 188, 206, 224, 275, 285, 290, 297, 299, 300
திணைமொழி ஐம்பது 120, 178, 197, 275, 298, 299
திரு அருட்பா 267, 281, 358

திரு ஏகம்பமுடையார் திருவந்தாதி 126, 156, 161, 173, 178, 182, 259, 272, 277, 291, 295, 296
திருக்கழுமல மும்மணிக்கோவை 173, 189
திருக்குற்றாலக் குறவஞ்சி 198, 267
திருக்குறள் 119, 120, 121, 141, 204, 235, 271, 354, 355, 366, 367
திருக்கோவையார் 51, 122, 145, 151, 155, 156, 161, 182, 184, 197, 208, 213, 225, 231, 232, 258, 263, 271, 276, 287, 356
திருமலையாண்டவர் குறவஞ்சி 194
திருவரங்கக் கலம்பகம் 161, 185, 189
திருவலஞ்சுழி மும்மணிக்கோவை 155, 259, 272, 291, 297
திருவள்ளுவர் ஒரு துறைக் கோவை 51
திருவாய்மொழி 167, 188, 189, 214, 226, 258
திருவாரூர் ஒரு துறைக் கோவை 169
திருவாரூர் மும்மணிக்கோவை 259, 266, 272, 287, 293, 295, 296
திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் 127
திருவானைக்காப் புராணம் 128
திருவிடைமருதூர் மும்மணிக் கோவை 173
திருவிருத்தம் 155, 167, 172, 182, 185, 197, 258, 356
திருவேங்கடத்தந்தாதி 174, 259, 266, 287, 300
திவாகரம் 53

து

துணைச் சுட்டுக்கிளவி 22
துறந்த ஒழுக்கமின்மை 19
துறை 2, 15, 27, 34, 41, 43, 47, 57, 119, 141

தூ

தூது 2, 142, 187-191

தெ

தெய்வம் 54, 110
தெளிவு 2, 142, 148-149

தே

தேவாரம் 144, 197, 263, (அப்பர்) 172, 184, 188 (சம்பந்தர்) 264 (சுந்தரர்)
தேனருவி 260, 269, 274. 294-296, 300

தொ

தொல்காப்பியம் 1, 7-26, 28, 30, 35, 37, 38, 42, 43, 45-47, 54-57, 107, 109, 110, 119, 120, 121, 130, 141, 142, 146, 148, 149, 153, 156, 163, 166, 176, 183, 188, 196, 200, 208, 217, 224, 227, 232, 235, 256, 288, 295, 297, 300, 301, 368
தொன்னூல் விளக்கம் 2, 7, 50, 52, 365

ந

நடுவண் ஐந்திணை 107

நடுவு நிலைத்திணை 108
நந்திக்கலம்பகம் 175, 180, 185, 189, 194, 215, 226, 233, 259, 266, 293, 296, 297, 299-301
நம்பியகப்பொருள் 2, 7, 38-46, 48-50, 52, 55-58, 156, 165, 217, 220, 365
நலம் பாராட்டல் 19
நளவெண்பா 145, 259
நற்றிணை 58, 112, 130, 131 159, 184, 224, 275, 285

நா

நாச்சியார் திருமொழி 197
நாணிக்கண் புதைத்தல் 2,142, 150-153
நாலாயிர திவ்வியப்பிரபந்தம் 276
நான்முகத் திருவந்தாதி 197

நி

நிகண்டுகள் 53

நீ

நீலகேசி 125, 132

நெ

நெடுநல்வாடை 351
நெய்தல் 12, 51, 52, 108, 109, 119, 122, 124, 125, 204

ப

பட்டினப்பாலை 113
பணிந்தகிளவி 19
பயனிலாக்கிளவி 23
பரத்தையிற் பிரிவு 2, 44, 142, 228-232
பரிபாடல் 347
பழமலையந்தாதி 193, 259, 266, 272, 279, 289, 294, 296, 298
பன்னிருபடலம் 34
பன்னிருபாட்டியல் 216, 226, 343

பா

பாங்கற் கூட்டம் 2, 142 153-156
பாசறைப் பிரிவு 20
பாட்டியல்கள் 54
பாடாண் 111, 112
பாடுபொருள் 344
பாண்டிக் கோவை 207, 208
பாரதியார் கவிதைகள் 130
பால் கெழுகிளவி 22
பாலை 12, 51, 52, 56, 108, 109, 119, 122, 124, 126

பி

பிரசாபத்தியம் 54, 110
பிரபந்தத்திரட்டு 54, 165, 169, 187, 198
பிரபந்ததீபிகை 219
பிரமம் 54, 110
பிரிதல் 107
பிரிவு 20, 21, 28

பு

புணர்தல் 107
புதுக்கவிதை 130
புலத்தல் 28
புறத்திணை 26, 34
புறநானூறு 190, 344, 351
புறப்புறப் பெருந்திணை 217

புறப்புறம் 31, 37
புறப்பொருள் 52
புறப்பொருள் வெண்பாமாலை 2, 7, 30-34, 35, 37, 38, 40, 46, 55, 56, 195, 208, 217, 325, 365
புறம் 31, 37, 55, 119, 120

பெ

பெண்பாற் கூற்றுப் பெருந்திணை 32
பெயர் சுட்டாத மரபு 115
பெரிய திருமடல் 209, 225
பெரிய திருமொழி 188
பெரிய புராணம் 126, 127, 132, 147, 344
பெருங்கதை 123, 132
பெருந்திணை 31-33, 35, 39, 55, 58, 110-115, 204, 206, 218, 366
பெருந்திணை 123 (பரந்தநிலம்)

பை

பைசாசம் 54, 110

பொ

பொன்வண்ணத்தந்தாதி 277, 291

ம

மடல் 2, 142, 198-228
மதன வித்தாரமாலை 221, 227, 266
மதுரைக்கலம்பகம் 155, 158, 185, 189, 221, 259
மருதம் 12, 51, 52, 108, 109, 119, 122, 124, 125
மருதூரந்தாதி 155, 158, 161, 259, 272, 287, 298

மா

மாலை வேண்டல் 2, 142, 191-195
மாறனகப்பொருள் 2, 7, 48, 49, 55, 56, 220, 365

மு

முக்கூடற்பள்ளு 128, 129, 162, 190, 294
முத்துசுவாமியா பிள்ளையவர்கள் பேரிற் காதற் பிரபந்தம் 146, 149
முத்துவீரியம் 2, 7, 50, 51, 56, 365
முத்தொள்ளாயிரம் 143, 146-148, 150, 167, 172 188, 207, 224, 232, 234, 258, 262, 263, 288, 290, 291, 294, 295, 299-300, 366, 367
முதற்பொருள் (முதல்) 13, 14, 55, 58, 108, 115, 119, 129, 365
முல்லை 12, 33, 51, 52, 108, 109, 119, 122, 124, 125
முல்லைப்பாட்டு 113
முன்னிலைப்புறமொழி 24

மெ

மெய்ப்பாடு 40

வ

வடிவம் 344
வழக்கு 11

வளையாபதி 213, 225, 234

வா

வாயில்கள் 18, 23, 29, 44, 45

வி

விக்கிரம சோழனுலா 194

வீ

வீரசோழியம் 2,7, 36-38, 43, 55, 56, 365

வெ

வெறிவிலக்கல் 2, 142, 166-170

வே

வேட்கை கிளத்தல் இன்மை 23
வேற்றுமைக் கிளவி 22

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 29 | அகத்தினை | அகத்திணை |
| 2 | 6 | ஆய்வேடு | ஆய்வு |
| 8 | 7 | இலக்கனத்தை | இலக்கணத்தை |
| 8 | 8 | இலக்கனம் | இலக்கணம் |
| 9 | 14 | புகுந்தர்ர்க்கு | புகுந்தார்க்கு |
| 9 | 20 | ஆராய்ச்சிக்குப் | ஆராய்ச்சிக்கு |
| 10 | 20 | பெறப்படுகின்றன | பெறப்படுகின்றது |
| 11 | 20 | பெருந்தினை | பெருந்திணை |
| 13 | 12 | தொல்காப்யியர் | தொல்காப்பியர் |
| 16 | 17 | போன்றவற்றைக் | போன்றவற்றைத் |
| 16 | 24 | கிளவிக்குரியா | கிளவிக்குரியர் |
| 18 | 27 | முயற்சின்மை | முயற்சியின்மை |
| 19 | 19 | கற்று | கூற்று |
| 20 | 21 | மாற்றாரைப் | மாற்றாரை |
| 24 | 11 | இதணைப் | இதனைப் |
| 24 | 12 | யினைவி | மனைவி |
| 24 | 17 | செய்யுள்ள | செய்யுள் |
| 28 | 32 | தோரைப் | இழிந்தோரைப் |
| 35 | 10 | கைகோள் | கைகோளை |
| 35 | 18 | சேயிடைப் பிரிவி | சேயிடைப் பிரிவு |
| 35 | 35 | பற்றியக் | பற்றிய |
| 36 | 7 | துறையின் | துறைகள் |
| 38 | 12 | கைக்கோள் | கைகோள் |
| 39 | 10 | எள்று | என்று |
| 39 | 12 | சாணப்படுகின்றது | காணப்படுகின்றது |
| 39 | 26 | பெருந்தினை | பெருந்திணை |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 45 | 11 | பொருத்த | பொறுத்த |
| 48 | 31 | பாங்கியோடு காவல் | பாங்கியோடு சாவல் |
| 52 | 24 | விளக்கப் | விளக்கம் |
| 57 | 3 | குறிப்பிடதக்க | குறிப்பிடத்தக்க |
| 68 | 27 | 170 | 174 |
| 69 | 16 | உல்கம் | உலகம் |
| 74 | 20 | முன்பின் | முன்பனி |
| 75 | 13 | எருமை | எருவை |
| 82 | 31 | புறநேகர்ப் பாக்கிற்கு | புறநகர்ப் போக்கிற்கு |
| 95 | 10 | குடிச்சி | குறிச்சி |
| 100 | 14 | திரைைக்கடல் | திரைக்கடல் |
| 111 | 3 | நச்சினார்ச்கினியரை | நச்சினார்க்கினியரை |
| 111 | 11 | அதனைத் | அதனைக் |
| 111 | 20 | கீழ்க்கானுமாறு | கீழ்க்காணுமாறு |
| 113 | 13-14 | பாடல்கன் | பாடல்கள் |
| 114 | 8 | கலிக்தொகை | கலித்தொகை |
| 116 | 26 | முதலின | முதலியன |
| 120 | 31 | காரணகாகி | காரணமாகி |
| 120 | 35 | திணைமாலை | திணைமொழி |
| 127 | 24 | இந்நூலிலுள் | இந்நூலுள் |
| 137 | 23 | பாவை வளம் | பாலை வளம் |
| 141 | 4 | உலகியல் | உலகில் |
| 145 | 1 | எனச் | எனக் |
| 146 | 3-4 | பதினொன்று | பதினொன்று கண்ணிகள் |
| 148 | 11 | தலைமைக்களல்லர் | தலைமக்களல்லர் |
| 152 | 5 | முடிப் | மூடிப் |
| 155 | 36 | என்ற | என்ற துறையிலமைந்த பாடல் |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 158 | 28 | குறையிடங்கூறல் | குறியிடங்கூறல் |
| 160 | 11 | அவர் மிகுதி | அலர் மிகுதி |
| 160 | 17 | இடையூறுகளைக் | இடையூறுகளைத் |
| 163 | 32 | இற்செநிப்பு | இற்செறிப்பு |
| 176 | 11 | அழகப்பரக | அழகப்பராசு |
| 180 | 17 | (ப. 603) | (V. 603) |
| 184 | 15 | பழியை | வழியை |
| 187 | 4 | இங்ஙணம் | இங்ஙனம் |
| 192 | 22 | அரும்பிபுள்ளது | அரும்பியுள்ளது |
| 195 | 28 | காதலை | காதலைப் |
| 197 | 7 | கடற் | கூடற் |
| 198 | 14 | 142-ல் | 142-இன் |
| 201 | 2 | புலானறி | புலனெறி |
| 202 | 13 | புலப்படுத்துகிறது | புலப்படுத்துதல் |
| 212 | 24 | தமுழ்நெறி | தமிழ்நெறி |
| 213 | 30 | பற்றி | பற்றிக் |
| 215 | 24 | மீட்குலாம் | மீட்கலாம் |
| 224 | 36 | உள்ள்து | உள்ளது |
| 225 | 25 | புரியா தபுதிராக | புரியாத புதிராக |
| 258 | 7 | மனக்குமுறல்கள் | மனக்குமுறல்களை |
| 258 | 14 | வரை | வரைவு |
| 258 | 28 | பிள்ளைய | பிள்ளையார் |
| 259 | 4 | கே்ாவை | கோவை |
| 259 | 7 | போன்று போன்று | போன்று |
| 263 | 8 | நோக்க | நோக்கி |
| 264 | 3 | என்று | என்ற |
| 269 | — | துறை (பக்க மேற் தலைப்பு) | கூற்று |
| 269 | 15 | தொலையும் | தொலையும் |
| 272 | 9 | கோவை | கோவையில் |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 275 | — | துறை (பக்க மேற் தலைப்பு) | கூற்று |
| 275 | 27 | பதினென் | பதினெண் |
| 275 | 31 | விடுத்து விடத்து | விடுத்த விடுத்து |
| 275 | 32 | தமையன் மார்க்கம் | தமையன் மார்க்கும் |
| 279 | — | துறை (பக்க மேற் தலைப்பு) | கூற்று |
| 283 | 21 | புணர்ந்தணன் | புணர்ந்தனன் |
| 283 | 23 | அந்ணிதனன் | அணிந்தனன் |
| 284 | 8 | பாடி | பாடிப் |
| 291 | 26 | நிகழிடங்கள | நிகழிடங்கள் |
| 291 | 33 | கூற்றிற்க்கு | கூற்றிற்கு |
| 294 | 27 | போது | போதும் |
| 296 | 28 | கேட்போளாகத் | கேட்போளாகக் |
| 301 | — | துறை (பக்க மேற் தலைப்பு) | கூற்று |
| 302 | 36 | தவைவி | தலைவி |
| 305 | 12 | விக்ாம | விக்ரம |
| 317 | 10 | ததைவன் | தலைவன் |
| 338 | 3 | தோழி | தலைவி |
| 340 | 1 | கீழ்க்க்ணக்கில் | கீழ்க்கணக்கில் |
| 345 | 32 | பெறுவதை | பெறுவதைப் |
| 351 | 36 | தவைனையும் | தலைவனையும் |
| 378 | 25 | ஆறுவகை | அறுவகை |
| 390 | 30 | அறவாளன் சு.ப. | அறவாணன், க.ப. |



இந்நூலாசிரியராகிய திருமதி த. வசந்தாள் எம்.ஏ., எம்ஃபில்., பி.எச்.டி., அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் முதுகலையை முதல் நிலையில் முடித்து வாணி தாசனின் 'தமிழச்சி' 'கொடிமுல்லை' பற்றி ஆய்வு நிகழ்த்தி எம்ஃபில் பட்டம் பெற்றார்.

“தமிழிலக்கியத்தில் அகப் பொருள் மரபுகள்-ஒரு வரலாற்றுப் பார்வை” என்னும் தலைப்பில் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றார்.

மொழியியல் பெருஞ் சான்றிதழுக்காக, தமிழ்-இந்தி ஆகிய இருமொழிகளிலும் சொல்லுருபுகள் பற்றிய ஒப்பாய்வு (Post Positions in Hindi and Tamil - A Comparative Study) செய்துள்ளார்.

சமஸ்கிருதம், இந்தி, மலையாளம் ஆகியவற்றில் சான்றிதழ் பெற்றவர்.

கல்விக்காக அரசின் நிதியுதவியும் (National Merit Scholarship) பரிசும் (The Queen Mary's College Golden Jubilee Prize 1980) பெற்ற இவர் கலைக்களஞ்சியம், உலகத்தமிழ் மாநாடு விழாமலர், ஆய்வுக்கோவை, புலமை ஆகியவற்றில் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

தற்பொழுது எத்திராஜ் பெண்கள் கல்லூரியில் பகுதிநேர விரிவுரையாளராகப் பணியாற்றி வருகின்றார்.